இந்திய இசுலாமியர் சட்டம்

எச். எம். அபுல்கலாம்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.) வரிசை எண்—547

இந்திய இசுலாமியர் சட்டம்

ஆசிரியர்

எச். எம். அபுல்கலாம், பி.ஏ., பி.எல்.,

வழக்குரைஞர், உயர்நீதி மன்றம்,

விரிவுரையாளர்,

சட்டக் கல்லூரி, சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—December, 1973 4442

T.N.T.B.S. (C.P.) No. 547

© Tamil Nadu Text Book Society

MUSLIM LAW IN INDIA

H. M. ABULKALAM

Price Rs. 6·00

Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

Printed by
Kabeer Printing Works,
Madras-600005.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதின்மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப்படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்றுவருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டம் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுவருகிறது.

இவற்றுள் ஒன்றான 'இந்திய இசுலாமியர் சட்டம்' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 547ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 582 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருள் அடக்கம்

பாகம் I

			பக்கம்
1.	இசுலாமியர் சட்டம் தோன்றி வளர்ந்த வரலாறு	...	1
2.	திருமணம் அல்லது நிக்காஹ்	...	35
3.	'மஹர்'	...	66
4.	திருமண இழப்பு	...	78
5.	பெற்றோராதல்	...	99
6.	காப்பாளர் நிலை	...	109
7.	வாழ்க்கைப் படி	...	121

பாகம் II

8.	கொடை அல்லது 'ஹிபா'	...	129
9.	'உயில்'	...	160
10.	'வக்பு'	...	171
11.	சொத்து நிர்வாகம்	...	192
12.	பரம்பரைச் சொத்துரிமை	...	196
13.	அண்டைச் சொத்தில் முற்படு விலை கொள் உரிமை அல்லது ஷுஃபா	...	268
	மேற்கோள் நூற்பட்டியல்	...	271
	கலைச்சொற்கள்	...	272
	பொருட்குறிப்பு அகரவரிசை	...	282

பயன்படுத்தப்பட்ட வழக்குகளின் பட்டியல்

		பக்கம்
1.	Abdul Fata *vs* Rasamaya ...	180
2.	Abdul Ghani *vs* Azizul Haq ...	93
3.	Abdul Kadir *vs* Salima ...	72
4.	Abdul Kasam *vs* Jamila Khatun ...	39
5.	Abdul Lathif *vs* Niaz Ahmed ...	46
6.	Abdul Rahiman *vs* Avooma ...	22
7.	Abdul Rahmankutty *vs* Aisha Beevi ...	105
8.	Abdul Razak *vs* Aga Md. Jaffer ...	53
9.	Aga Mahomed *vs* Koolsom Bibi ...	61, 141
10.	Amina Bibi *vs* Khatija Bibi ...	135
11.	Amjad Ali Khan *vs* Ashraf Khan ...	147
12.	Asha Bibi *vs* Kader Ibrahim Rawther ...	82
13.	Aziz Banu *vs* Md. Ibrahim ...	42
14.	Baqar Ali Khan *vs* Anjuman Ara Begum ...	185
15.	Beebee Bachun *vs* Sheik Hameed ...	73
16.	Beeju Bee *vs* Syed Moorthiza ...	75
17.	Bhikaji *vs* Ajgarally ...	119
18.	Fathe Md. *vs* Abdul Rahman ...	62
19.	Gulam Hussain *vs* Fakir Md. ...	143
20.	Hamira Bibi *vs* Zubaida Bibi ...	74, 96
21.	Hassan Kutti *vs* Jainabha ...	45
22.	Hayathunnisa *vs* Mohomed ...	33
23.	Imambandi *vs* Mutsadi ...	118
24.	In *re* Md. Alam ...	28
25.	In *re* Mir Anwarudhin or Rex *vs* Hammer Smith ...	31
26.	In *re* Ramkumari ...	32
27.	John Jiban Chandra *vs* Abinash ...	95

		பக்கம்
28.	Khambatta *vs* Khambatta ...	32
29.	Kulsum Bibi *vs* Abdul Kadir ...	46
30.	Kulsum Bibi *vs* Basheer Ahmed ...	156
31.	Maina Bibi *vs* Chowdri Vakil ...	76
32.	Ma-mi *vs* Kalandar Ammal ...	82, 136
33.	Mastan Sahib *vs* Asan Bibi Ammal ...	69
34.	Mitter Sen Singh *vs* Maqbul Hasan Khan ...	30
35.	Md. Alladad *vs* Md. Ismail ...	105
36.	Md. Amin *vs* Vakil Ahmed ...	62
37.	Md. Ibrahim *vs* Gulam Ahmed ...	34
38.	Md. Sandukhan *vs* Ratnam ...	23
39.	Mohsiddin *vs* K. Ahmed ...	119
40.	Mohuiddin *vs* Khatija Bibi ...	45
41.	Moonshee Bazloor Rahman *vs* Shamsunnisa Begam ...	57
42.	Munshee Bazl-ul-Rahim *vs* Lathifutunnisa ...	88
43.	Musa Mirza *vs* Kadar Bux ...	137
44.	Narantha Avull *vs* Parakkal Mammu ...	27
45.	Nawaziah Alikhan *vs* Ali Razakhan ...	148
46.	Nawab Umjad Ally *vs* Mohumdee Begum ...	145
47.	Noorjehan *vs* Eugene Tischenoe ...	95
48.	Rajah Deedar Hussain *vs* Rani Zoohurunisa ...	33
49.	Rajarathna Chettiar *vs* Shaik Mahboob ...	117
50.	Rashid Ahmad *vs* Anisa Khatoon ...	104
51.	Robassa Khanum *vs* Khodadad Bomanji ...	97
52.	Sadik Hussain *vs* Hashim Ali ...	107
53.	Sara Bai *vs* Rabiabai ...	83
54.	Sayad Khatoon *vs* Obadiah ...	96
55.	Sibt Mahomed *vs* Mohomed ...	103
56.	Skinner *vs* Orde ...	29
57.	Skinner *vs* Skinner ...	29
58.	Syed Mohamed *vs* Kairum Bibi ...	159
59.	Zubeda Begam *vs* Vazir Mahomed ...	42

பாகம் I

1. இசுலாமியர் சட்டம் தோன்றி வளர்ந்த வரலாறு

இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு. இந்தியாவில் இயற்றப்படும் சட்டங்கள் எல்லாம் சாதி மத வேறுபாடு இன்றி, எல்லோரையும் கட்டுப் படுத்தும். நாட்டு நலனுக்கும் நல்வாழ்வுக்கும் ஆக்கப்படுகின்ற சட்டங்கள் இந்து, முசுலிம், கிறித்தவர், ஜைனர் என்ற மத வேறு பாடின்றியும், சாதி வேறுபாடு இன்றியும் எல்லோரையும் கட்டுப் படுத்தும். சான்றியல் சட்டம் (Evidence Act), சொத்துரிமை மாற்றுச் சட்டம் (Transfer of Property Act), குற்ற இயல் நடைமுறைச் சட்டம் (Code of Criminal Procedure) முதலியன நாட்டு மக்கள் ஒவ்வொருவரையும் கட்டுப்படுத்தும் சட்டங்களாகும். இவற்றை நில வரைச் சட்டம் (Territorial Law) என்று கூறுகின்றனர்.

இந்தியா ஒரு மதச்சார்பற்ற கொள்கையைப் பின்பற்றி வருவதால், தனிப்பட்ட மதங்களின் சட்டதிட்டங்களிலும் பழக்க வழக்கங்களிலும் கூடுமான வரை தலையிடாமல், அந்தஅந்த மதத்தவரிடையே ஒழுங் கையும் ஒருமைப்பாட்டையும் வளர்ப்பதற்காகவும், ஒத்த நீதி கிடைப் பதற்காகவும்; அந்தஅந்த மதங்களின் முக்கிய சட்டங்களையும் மரபு களையும் தொகுத்து வரையறுத்துச் சட்ட உருவாக்கி, அவ்வம் மதத்தைச் சார்ந்தோர் பின்பற்றத் தக்கவகையில் வழிவகை செய்துவிட்டிருக் கிறது. இப்படி உருவாக்கப்பட்ட சட்டங்கள் இனச்சட்டம் (Personal Law) என்று அழைக்கப்படும். நாட்டுச்சட்டம் சாதிமத வேறுபாடின்றி எவ்விதம் எல்லோரையும் கட்டுப்படுத்துகின்றதோ, அவ்விதம் இனச் சட்டம் நாட்டில் வாழும் எல்லோரையும் கட்டுப்படுத்தாது. ஆனால், அது அந்தஅந்த இனத்தில் வாழும் மக்களை மட்டுமேதான் கட்டுப் படுத்தும். இந்துத் திருமணச் சட்டம் (The Hindu Marriage Act of 1955), இந்து மகவேற்புச் சட்டம் (The Hindu Adoption Act of 1956), இந்து இறங்குரிமைச் சட்டம் (The Hindu Succession Act, 1956) முதலியன இந்து மதத்தினரையே கட்டுப்படுத்தும். இது

போல், இசுலாமியர் ஷரீயத் சட்டம் [The Muslim Personal Law (Shariat) Application Act, 1937], இசுலாமியர் திருமண இழப்புச் சட்டம் (Dissolution of Muslim Marriages Act, 1939) முதலியன இசுலாமியர்களையே கட்டுப்படுத்தும்.

இந்திய நீதிமன்றங்களில் மேற்கூறிய மதச் சட்டங்களின் அடிப்படையில், அவ்வம் மதத்தவரிடையே நீதி வழங்கப்படுகிறது என்ருலும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் (Constitution of India) 44 ஆவது பிரிவின்படி, இவற்றின் வளர்ச்சி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் அரசியல் அமைப்புச் சட்டம், 44 ஆவது பிரிவின்படி, சாதி மத வேறுபாடின்றி நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒத்த உரிமையியல் சட்டத் தொகுப்பு வழங்கப்பட வேண்டும் என்பதே அதன் நோக்கமாகும்.

மேற்கூறிய மதச் சட்டங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமாளுல், முதலில் அந்தஅந்த மதத்தின் தோற்றம், வளர்ச்சி, வரலாறு, அடிப்படைத் தத்துவம் முதலியவற்றைச் சிறிதளவு தெரிந்துகொள்வது அவசியம் ஆகும். இந்திய இசுலாமியர் சட்டத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமாளுல், இசுலாம் தோன்றிய வரலாற்றையும், வளர்ந்த வரலாற்றையும், அதன் அடிப்படைக் கொள்கையையும்-மூலாதாரத் தத்துவத்தையும், அதை முழுமையாக்கித் தந்த முஹம்மது நபியையும், அவரைப் பின்பற்றி அதை வளர்த்த கலீபாக்களையும் இமாம்களையும், அதன் சட்ட வளர்ச்சிக்கு ஆதாரமாய் நிற்கும் நூல்களையும், அவற்றில் முக்கியமாகப் பயன்படுத்தப்பட்டுள்ள சில அராபியச் சொற்களையும் சொற்ருெடர்களையும் தெரிந்துகொள்வது இன்றியமையாததாகும்.

முஹம்மது நபியும் இசுலாமியர் கொள்கையும்

'ஆண்டவன் ஒருவனே—அவன் உருவமற்றவன்; அவனுடைய திருத் தூதர் முஹம்மது நபி அவர்களே' என்பது இசுலாமியர்தம் மூல தத்துவம் ஆகும்.

இசுலாம் தொன்றுதொட்டே உள்ள ஒரு மதம் என்ருலும், அதைப் பூர்த்தி செய்து, முழுமையாக்கித் தந்தவர் முஹம்மது நபி (Prophet Muhammad) அவர்களே ஆவர். முஹம்மது நபி அவர்கள், அரேபியாவில் உள்ள மக்க (Mecca) மாநகரில் கி.பி. 570-ல் பிறந்தார்கள். அவர்கள் தமது 40 ஆவது வயதில், மேற்குறிப்பிடப்பட்ட மூலதத்துவத்தையும், புதிய கொள்கையையும் பழமையில் மூழ்கிக்கிடந்த மக்காவில் உள்ள அராபி மக்களின் முன்னிலையில் வைத்தார். உருவ வழிபாட்டிலும், மூடநம்பிக்கையிலும், பழைமைக் கொள்கையிலும் கோட்பாட்டிலும் அழுந்தியிருந்த அன்றைய அராபிய மக்களுக்கு, 'ஆண்

டவன் ஒருவனே, அவன் உருவமற்றவன்—அவனுடைய திருத்தூதர் முஹம்மது நபி அவர்களே' என்ற புதிய இசுலாமிய கொள்கை எட்டிக் காயாக இருந்ததே அன்றி, ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லாமையால் சினம் கொண்டனர்; பகை மூட்டினர். முஹம்மது நபி அவர்களைத் தீர்த்துக் கட்டிவிட்டால் அவர்களுடைய கொள்கையும் அவர்களோடு அழிந்து விடும், பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்று நினைத்து, அவர்கள் பல சூழ்ச்சிகள் செய்தனர். பகைமை உணர்ச்சி மேலோங்கி வளர்ந்து, உயிருக்கு ஆபத்து ஏற்பட்ட நிலையில் நபியவர்கள் தாம் பிறந்த தாயகமாம் மக்க மாநகரை விட்டு, தூரத்திலுள்ள மதீனு நகருக்கு இரவோடு இரவாகப் புறப்பட்டார்கள். அன்றிலிருந்துதான் 'ஹிஜிரி' என்ற இசுலாமிய புத்தாண்டு தொடங்குகின்றது. இது கி.பி. 622-ல் ஆரம்பமாகியது. 354 நாட்களைக் கொண்டது ஓர் இசுலாமியு ஆண்டு ஆகும். சந்திரனின் தோற்றத்தையும் மறைவையும் வைத்து நாட்களும், திங்கள்களும் கணிக்கப்படுகின்றன. மதீனு நகர மக்கள் முஹம்மது நபி அவர்களின் புதிய கொள்கையினையும் தத்துவத்தையும் பெரிதும் வரவேற்றனர். பெரும்பகுதி மக்கள் அவருடைய கொள்கைகளை ஏற்று, அவரைப் பின்பற்றினர். பின்னர் மக்க மாநகரிலும் அவருடைய கொள்கைகள் பரவலாயின. அண்டை அயல் நாடுகளிலும் அவருடைய கொள்கையைப் பின்பற்றுவோர் நாளும் பெருகி வரலாயினர். இந்தப் புதிய மதக் கொள்கையைப் பின்பற்றி நடப்பவர்கள் இசுலாமியர்கள் அல்லது முசுலிம்கள் (Muslims) ஆவார்கள்.

கி.பி. 632ல், முஹம்மது நபி அவர்கள் இயற்கை எய்திஞர்கள். அவர் இறக்கும் பொழுது அராபியாவிலும், அண்டை நாடுகளிலும் மட்டுமன்றி, அயல்நாடுகளிலும் இசுலாம் பரவி இருந்ததால், இதைப் பின்பற்றி நடப்பவர்கள் பெரும்பான்மையினராக இருந்தனர். முஹம்மது நபி இறக்கும்பொழுது, அவருக்கு ஆண் வாரிசு எவரும் கிடையாது; பாத்திமா நாயகி என்ற ஒரே ஒரு மகள் மட்டுமே எஞ்சி இருந்தார். எனவே, முஹம்மது நபிக்குப் பின் முதல் கலீபா (Caliph) எவர்? என்ற கேள்வி எழுந்தது. இசுலாத்தைப் பின்பற்றி வாழ்ந்த பெரும்பான்மை முசுலிம்களால் அபூபக்கர் (Abubaker) என்னும் முஹம்மது நபி அவர்களுடைய தோழர் முதல் கலீபாவாகத் தேர்தல் மூலம் தேர்ந்து எடுக்கப் பட்டார்.

முஹம்மது நபி அவர்களுக்குப் பின், அவர் வழி நின்று ஆட்சி நடத்தியவர்களைக் 'கலீபா'க்கள் என்று கூறுவர். அவர்களுள், முஹம்மது நபி அவர்களுக்குப் பின் வந்த கலீபாக்களில் அபூபக்கர் அவர்கள் கி.பி. 632 முதல் 634 வரை ஆட்சி செய்தார்கள். அவரை அடுத்து 'உமர்' (Omar) அவர்கள் கலீபாவாகத் தேர்ந்து எடுக்கப்பட்டார்கள். அவர்கள் கி.பி. 635 முதல் 644 வரை ஆட்சி நடத்திஞர்கள். அவரை அடுத்து உதுமான் (Othman) அவர்கள் கலீபாவாகத் தேர்ந்

தெடுக்கப்பட்டார்கள். அவர்கள் கி.பி. 645 முதல் 656 வரை ஆட்சி நடத்தினார்கள். அதன் பின்னர் 'அலீ' (Ali) அவர்கள் நான்காவது கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, கி.பி. 657 முதல் கி.பி. 661 வரை ஆட்சி நடத்தினார்கள்.

'சுன்னீ'—'ஷீயா' பிரிவு

மேலே சொல்லப்பட்ட நான்கு கலீபாக்களில் முஹம்மது நபி அவர்களுக்குப் பின் வந்த முறையான முதல் 'கலீபா' எவர் என்று ஒப்புக் கொள்வதில் இசுலாமியரிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அபூபக்கர், உமர், உதுமான், அலீ ஆகிய நான்கு கலீபாக்களும் தேர்தல் மூலம் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சி செய்த கலீபாக்கள்—அவர்கள் நால்வரும் வரிசைக்கிரமமான கலீபாக்கள்—இதில் மாற்றம் எதுவும் தேவையில்லை என்கிற கொள்கையைப் பின்பற்றுபவர்கள் 'சுன்னீ' (Sunni) முசுலிம்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் 'சுன்னத் ஜமாஅத்'தவர்கள் (Sunnite) என்றும் அழைக்கப்படுவர்.

அபூபக்கர், உமர், உதுமான், அலீ ஆகிய நான்கு கலீபாக்களும் வரிசையாகத் தேர்ந்து எடுக்கப்பட்டவர்களே என்றாலும், அந்தத் தேர்தல்களில் போட்டியின்றித் தேர்ந்து எடுக்கப்பட்ட காரணத்தாலும், நான்காவது கலீபா ஆகிய அலீ அவர்கள் முஹம்மது நபி அவர்களின் செல்வப் புதல்வியான பாத்திமா நாயகி அவர்களைத் திருமணம் செய்து கொண்டதன் மூலம் நபி அவர்களின் மருகராக இருப்பதாலும், நபி அவர்களின் குடும்பத்தில் பிறந்து அவருடைய நேர் வழித் தோன்றலாக இருப்பதாலும், நபி அவர்களை அடுத்து முறையாக வந்த அபூபக்கர், உமர், உதுமான் ஆகிய மூவரும் 'கலீபாப்' பதவியை அபகரித்துக்கொண்டவர்களே தவிர, அவர்கள் உண்மையான கலீபாக்கள் அல்லர் என்றும், அலீ அவர்கள்தாம் நபி அவர்களுக்குப் பின்வந்த முறையான முதல் வாரிசு—முதல் 'கலீபா'—முதல் 'இமாம்' என்றும், 'சுன்னீ' கொள்கையில் நின்றும் வேறுபட்ட கொள்கையைப் பின்பற்றுபவர்களான 'ஷீயா' (Shia) முசுலிம்கள் கருதுகின்றனர்.

மேற்கூறப்பட்ட நான்கு கலீபாக்களும் இசுலாமிய ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து அரசியல் பரிபாலனம் செய்து வந்ததோடுமட்டுமின்றி, இசுலாத்தின் தலைவர்களாக நின்று மத அறிவுரைகளையும், இசுலாமிய கொள்கை கோட்பாடுகளையும் விளக்கும் அறநிலை மன்னர்களாகவும் திகழ்ந்தார்கள். எனவே, அவர்கள் நால்வருமே இசுலாமியர்களால் கலீபாக்களாகவும், இமாம்களாகவும் கருதப்படுகின்றனர்.

மேலே கண்ட கொள்கை அடிப்படையில், இசுலாமியப் பெருங்குடி மக்களை 'சுன்னீ' முசுலிம்கள் என்றும் 'ஷீயா' முசுலிம்கள் என்றும்

இருபெரும் பிரிவாகக் கொள்ளலாம். இரு பிரிவினரிடமும் இசுலாத்தின் மூல மந்திரமாகிய 'ஆண்டவன் ஒருவனே—அவனுடைய திருத்தூதர் முஹம்மதுநபி அவர்களே' என்பதில் எள்ளளவும் வேறுபாடு கிடையாது. இரு சாராராகப் பிரிந்து இசுலாமிய கொள்கைகளைப் பின் பற்றியதால் கொள்கையிலும் அடிப்படைத் தத்துவத்திலும் வேறு பாடில்லை என்றாலும், இவர்களது கொள்கை விளக்கத்தில் வேறுபாடு வளரலாயிற்று. ஆதலால், இரு சாராரிடையேயும் பெரும் பெரும் தலைவர்களும் தத்துவ ஞானிகளும் பின்னர்த்தோன்றி, இசுலாமிய கொள்கைகளுக்குத் தத்தம் தத்துவங்களுக்கு ஏற்ப விளக்கம் தந்து, அவற்றை விளக்கலாயினர்.

இவ்விதம் வளர்ந்துவரும்காலையில் 'சுன்னி' முசுலிம்களிடையில் நான்கு முக்கிய தத்துவ ஞானிகளான நல்வழிகாட்டும் தலைவர்கள் அல்லது இமாம்கள் தோன்றி, சுன்னி முசுலிம்களின் கொள்கை கோட்பாடுகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும் விளக்கம் தந்தனர். இந்த நால்வரின் கொள்கை விளக்கத்தில் ஈடுபாடு கொண்ட இசுலாமியர்கள் இவர்களின்பால் அன்பு கொண்டு நான்கு சிறு பிரிவினர்களாகப் பிரிந்து, இசுலாமிய தத்துவ விளக்கங்களைப் பின்பற்றலாயினர். இமாம் அபூ ஹனீபா (Imam Abu Haneefa), இமாம் ஷாபி (Imam Shafi), இமாம் ஹன்பல் (Imam Hanbal), இமாம் மாலிக் (Imam Malik) ஆகிய நால்வரையும் பின்பற்றி நிற்பவர்களைப் பிரித்துக் காட்டுதற் பொருட்டு, அந்தஅந்த இமாம்களின் பெயரைக்கொண்டு அந் நான்கு சிறுசாராரும் முறையே ஹனபி, ஷாபி, ஹன்பலி, மாலிகி என்று அழைக்கப்படுகின்றனர்.

'ஷீயா' முசுலிம்களிடையேயும் சில சிறு பிரிவுகள் காணப்படுகின்றன. அவற்றில் 'ஜைதி' (Zaidis), இஸ்மாயிலீ (Ismaili), 'இதுனா-அஷரி' (Ithna Asharis) என்ற மூன்று பிரிவினரும் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

இதில் 'இதுன-அஷரி' அல்லது பன்னிரு கூட்டத்தவர் என்று அழைக்கப்படுகின்றவர்கள், பன்னிரண்டாவது இமாமாக முஹம்மது-அபுல்காசிம் என்பாரை ஒப்புக்கொள்கின்றனர். பதினோராவது இமாமாக ஹசன்-அல்-அஷ்ஹரி என்பவரை ஒப்புக்கொள்கின்றனர். பதினோராவது இமாமை அப்பாஸ் பரம்பரையினர் சிறை வைத்தனர். அவர் இறந்ததும், அவருடைய ஐந்து வயது சிறு மைந்தனுயிருந்த அபுல்காசிம் (12 ஆவது இமாம்) தம் தந்தையைத் தேடிச் செல்வதாய், வீட்டுக்கு அருகிலிருந்த ஒரு குகையினுள் நுழைந்தார். நுழைந்தவர் திரும்ப வரவில்லை. ஆனால் பன்னிரு கூட்டத்தினர், 12 ஆவது இமாம் இன்றும் உயிரோடு இருக்கிறார், உலகுக்குத் திரும்பி வருவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இக் கூட்டத்தினர்

பத்து, ஒன்பது, எட்டு, ஏழாவது இமாம்களாக முறையே அலீ-அல்-மஹ்தி; முஹம்மது-அல்-ஜவாது; அலீ-அர்-ரிலா; மூஸல் காஸிம் ஆகியோரை ஒப்புக்கொள்கின்றனர்.

ஏழாவது இமாம் எவரென்பதை ஒப்புக்கொள்வதில் இதுன-அஷரிகளுக்கும் (Ithna Ashari) இஸ்மாயிலீகளுக்கும் (Ismaili) இடையே கருத்து வேறுபாடு எழுந்தது. இரு கூட்டத்தினருக்கும் ஒன்று முதல் ஆறு வரையுள்ள இமாம்கள் யார் என்பதை ஒப்புக்கொள்வதில் கருத்து வேறுபாடு கிடையாது. இருவரும் ஒருங்கே ஒப்பும் ஆருவது இமாம் ஆகிய ஜஃபர் ஸாதிக் அவர்களுக்கு இரு ஆண்மக்கள் இருந்தனர். மூத்தவர் இஸ்மாயீல், இளையவர் மூஸல் காசிம் ஆவார். இளைய மைந்தரான மூஸல் காசிமுக்குத்தான் இமாம் பதவி சேரத்தக்கது; எனவே, அவர்தாம் தங்கள் ஏழாவது இமாம் என்று ஒப்புக்கொள்கின்றவர்கள் 'இதுன-அஷரி' கூட்டத்தினராவர். ஆனல், மூத்த மைந்தரான இஸ்மாயீல் அவர்களே ஜஃபர் ஸாதிக்கின் வாரிசான ஏழாவது இமாம் என்று ஒப்புக்கொள்கின்றவர்கள் இஸ்மாயிலீ கூட்டத்தினர் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள், ஏழாவது இமாம் எவர் என்று ஒப்புக்கொள்வதில் இதுன-அஷரிக் கூட்டத்தவரில் நின்றும் பிரிந்து செல்வதோடு, அவருக்குப் பின்னுள்ள இமாம்களேயும் வெவ்வேருய் ஒப்புக்கொள்கின்றனர். இக் கூட்டத்தினர் முக்கியமாக இருபத்திரண்டு இமாம்களே ஒப்புக்கொள்கின்றனர். இவர்களின் 22 ஆவது இமாம் அப்துல்-காசிம்-அல்-தையிப் என்பவராவார்.

ஷீயாக்களின் கொள்கைப்படி முதல் இமாம் அலீ அவர்கள் ஆவார்கள். அவருடைய மைந்தர்களான ஹசன், ஹுசைன் என்பவர்கள் இரண்டாவது, மூன்ருவது இமாம்களாக ஒப்புக்கொள்ளப்படுகிருர்கள். ஹசன் அவர்களது மைந்தர் ஜைனுல் ஆபிதீன் என்பவர் நான்காவது இமாமாக ஒப்புக்கொள்ளப்படுகிருர். இவருக்கு ஜைது (Zaid), முஹம்மது அல் பாக்கிர் (Mahomed Al-Baquir) என்று இரு மக்கள் இருந்தனர். இதில் முஹம்மது அல் பாக்கிர் அவர்களே இதுன-அஷரிக் கூட்டத்தினரும், இஸ்மாயிலீக் கூட்டத்தினரும் தங்கள் ஐந்தாவது இமாமாக ஒப்புக்கொள்கின்றனர். ஆனல் ஐந்தாவது இமாமாக ஜைது (Zaid) அவர்களே ஒப்புக்கொள்கின்றவர்கள், தங்களே 'ஜைது' கூட்டத்தினர் (Zaidis) என்று அழைத்துக் கொள்கின்றனர்.

மேலே கூறியவற்றை வைத்துப் பார்க்கும் பொழுது, முதல் இமாம் அலீ அவர்கள்தாம் என்று ஒப்புக்கொள்ளும் கூட்டத்தினர் 'ஷீயா' (Shia) என்ற பெரும் பிரிவாகப் பிரிந்து, அதன் கிளேகளாக ஐந்தாவது இமாம் ஜைது (Zaid) என்று ஒப்புக்கொள்வதன்மூலம் ஜைதுக்கூட்டத்தினராகவும் (Zaidis), ஏழாவது இமாம் இஸ்மாயீல் (Ismail) என்று

ஒப்புக்கொள்வதன் மூலம் இஸ்மாயிலீ கூட்டத்தினர் (Ismaily) ஆகவும், அலீ முதற்கொண்டு பன்னிரண்டாவது இமாம் முஹம்மது-அபுல்காசிம் (Mahomed-Abul-Kasim) என்று ஒப்புக்கொள்வதன் மூலம் 'இதுன-அஷரி' கூட்டத்தினர் (Ithna Ashari) அல்லது பன்னிரு கூட்டத்தினர் என்றும் சிறுகிளைகளாகப் பிரிந்து நிற்கின்றனர்.

'சுன்னீ' (Sunni) முசுலிம்களிடையே நான்கு சிறுகிளையினர் உண்டு என்று கண்டோம். இவர்களுள் அபூ ஹனீபா (Hanifa) என்ற இமாமைப் பின்பற்றி நிற்பவர்கள் ஹனபி கூட்டத்தினர் என்று அழைக்கப்படுகின்றனர். ஹனபி இமாம் அவர்கள் கி.பி. 699 முதல் கி.பி. 767 வரை வாழ்ந்து, தம்மைப் பின்பற்றுவோருக்கான கொள்கை, கோட்பாடுகளை வரையறுத்துக் கொடுத்துள்ளார். இவரைப் பின்பற்றுபவர்கள் ஹனபி கூட்டத்தினர் (Hanafis) அல்லது 'கூபா' கூட்டத்தினர் என்று அழைக்கப்படுகின்றனர். இவர் ஷியா பிரிவைச் சேர்ந்த ஆறுவது இமாமான ஜஃபர் ஸாதிக்கின் (Ja'far-as-Sadiq) சீரிய மாணுக்கராயினும், ஆசிரியரின் வழியினின்றும் பிரிந்து நின்று, தமக்கெனக் கொள்கை வகுத்து அதன் அடிப்படையில் இசுலாமிய தத்துவங்களைப் போதிக்கலானர். இவருடைய தனிச் சிறப்பு என்ன வென்றல், இலட்சக்கணக்கான இசுலாமிய வழிமுறைத் தத்துவங்களில் (Tradition) நின்றும், தமக்கெனப் பதினேழு வழிமுறைத் தத்துவங் களைத் தேர்ந்து எடுத்து, அவற்றின் அடிப்படையில் கொள்கை விளக்கம் கூறலானர். இவரது தத்துவ விளக்கங்கள் அப்பாஸ் பரம்பரையினரால் போற்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதன் காரணமாகப் பெரும்பகுதி மக்கள் இவரை 'இமாமா'க ஒப்புக்கொண்டு இவரது கொள்கைகளைப் பின்பற்றலாயினர். பொதுவாக, எல்லாத் தரப்பின ரும் இவர் சிறந்த 'இமாம்' என்று போற்றப்பட்டார். இசுலாமிய சட்ட வளர்ச்சிக்குச் சில வேறுபட்ட அடிப்படை முறைகளை இவர் வகுத் துக் கொண்டார். உலகின் பல்வேறு பகுதிகளிலும் இவரைப் பின்பற்று வோரின் எண்ணிக்கை நாளும் பெருகக் காரணமாக இருந்தவர்கள், இவருடைய மாணுக்கர்களில் முக்கியமானவர்களாகக் கருதப்படும் இமாம் முஹம்மதும் (Imam Muhammad), அபூ யூசுபும் (Abu Yusuf) ஆவர். இவ்விரு மாணுக்கர்களும் இசுலாமிய கல்வி கேள்வி களில் தலைசிறந்து விளங்கினர்கள்.

ஹனபி சட்டப்படி, ஒரு விதிக்கோ அல்லது ஒரு சட்டத்துறைப் பிரிவுக்கோ பொருள் காணும்பொழுது, முதலில் இமாம் அபூ ஹனீபா அவர்களின் கருத்து என்ன என்று பார்க்கவேண்டும். பின்னர் மாணுக்கர்களாகிய இமாம் முஹம்மது, அபூ யூசுபு ஆகிய இருவரின் கருத்தையும் பார்க்கவேண்டும். இரண்டு மாணுக்கர்களின் கருத்தும் ஒத்திசைய, ஆசிரியரின் கருத்து மாறுபட்டுச் சென்றல், ஒத்திசைந்து

செல்லும் மாணுக்கர்களின் கருத்தை முடிவானதாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இரு மாணுக்கரிடையேயும் கருத்து வேறுபாடு காணப் பட்டால், எவருடைய கருத்து ஆசிரியரின் கருத்தோடு ஒத்திசைந்து செல்கிறதோ அதை முடிவானதாக ஏற்றுக் கொள்ளவேண்டும். மூவர் கருத்தும் வெவ்வேருகச் சென்ருல், பொதுவாக அபூ யூசுபின் கருத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். இது ஹனபி சட்டப்படி, ஹனபி முசுலிம் களிடையே எழும் பிரச்சினைக்குப் பொருள்காணும் ஒரு முறையாகும். ஆனுல் இதையே முடிவான முறை என்று சொல்லுதற்கில்லை. சற்று முன் பின்ருகவும் முடிவுகளை எடுக்கலாம்.

இமாம் மாலிக் அவர்களைப் பின்பற்றி நிற்பவர்கள் மாலிக் கூட்டத் தினர் என்று அழைக்கப்படுகின்றனர். மதீனுவிலும், எகிப்து, மேற்கு ஆப்ரிக்கா முதலிய நாடுகளிலும் இவர்கள் பெரும் பகுதியினராகக் காணப்படுகின்றனர். இமாம் மாலிக் அவர்கள் மதீனுவில் தோன்றி ஞர்கள்; இசுலாமிய கொள்கைகளை விளக்கிச் சொல்வதன் பொருட்டு அங்கே ஒரு பள்ளிக்கூடத்தை நடத்திவந்தார்கள். அந்தப் பள்ளியில் பல வெளிநாட்டு மாணவர்களும்கூட அவரிடம் பாடம் கற்று வந்தனர்.

ஒரு சமயம் பெருத்த மணி யோசையுடனும் ஆரவாரத்துடனும், இவரது பள்ளியை அடுத்திருந்த ஊருக்கு, யானை ஒன்று வந்திருந்தது. இமாமிடம் பயின்று வந்த பெரும்பாலான மாணவர்கள் அதைப் பார்ப்பதற்காகச் சென்றுவிட்டார்கள். ஆனுல், ஸ்பெயின் தேசத்தி லிருந்து வந்திருந்த மாணவர் ஒருவர் மிக்க விருப்போடு இமாம் அவர் களிடம் பாடம் கேட்டுக்கொண்டே இருந்தார். இறுதியில் இமாம் அவர்கள் 'உங்கள் ஊரிலும் யானை கிடையாதே. நீங்கள் ஏன் அதைப் பார்க்கச் செல்லவில்லை?' என்று கேட்டார்கள். 'நான் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து வந்திருப்பது யானையைப் பார்ப்ப தற்காக அன்று; தங்கள் கல்வி மூலம் பயன்பெறவே' என்ருர் மாணவர். இவரது பள்ளியில் பல வெளிநாட்டு மாணவர்கள் மிகவும் விருப்போடு கல்வி பயின்று வந்தனர் என்பதற்கு இது நல்லதொரு சான்ருகும்.

இமாம் மாலிக் அவர்களின் கொள்கை விளக்கங்களும் விரிவுரை களும் முஹம்மது நபி அவர்களின் வழிமுறைத் தத்துவங்களை (Tradition) அடிப்படையாகக் கொண்டவை. இவருடைய சட்ட விளக்கங்கள் 'குர்ஆன்' அடிப்படையிலும் 'ஹதீது' அடிப்படையிலும் வளர்ந்தவை. இவர் தம்முடைய விளக்கங்களுக்கு அடிப்படையாக முஹம்மது நபி அவர்கள் பின்பற்றி நடந்த முறையையே பெரிதும் எடுத்துக்கொண்டார். இவரது முன்னிலையில் எழுப்பப்பட்ட சட்ட, சமுதாயப் பிரச்சினைகளுக்கு வழிமுறைத் தத்துவங்களைப் பின்பற்றியே இவர் விடைபகர்ந்தார் எனினும், அதில் வேறுபாடு காணப்பட்டால்

இசுலாமிய கல்வி கேள்விகளில் மிளிர்ந்து விளங்கியவர்களிடையே ஒருமித்த கருத்துக் கண்டால் (Ijma) அதை ஆதாரமாக எடுத்துக் கொள்வார்.

இமாம் ஷாபி (Shafi) கி.பி. 767-ல் பிறந்து கி.பி. 820-ல் உயிர் நீத்தார். இவர் தலைசிறந்த சட்ட நிபுணராகத் திகழ்ந்தார். இவரைப் பின்பற்றுபவர்கள் ஷாபி கூட்டத்தினர் (Shafis) ஆவர். இவர்கள் எகிப்து, இந்தோனேஷியா, இராக், கிழக்கு ஆப்ரிக்கா ஆகிய நாடுகளிலும், கடற்கரையோரப் பகுதிகளிலும் பெரும்பாலும் காணப்படுகிறார்கள். இமாம் ஷாபி அவர்கள் இசுலாமிய சட்ட வளர்ச்சிக்கு 'இஜ்மா' (Ijma) என்னும் தத்துவ முறையைப் பெரிதும் பின்பற்றினார். இவர் இமாம் மாலிக்கின் சீரிய மாணாக்கராவார். இவர் மாணாக்கராயிருந்த பொழுதே சமயக் கேள்வி ஞானம் நிரம்பப் பெற்றவராய்த் திகழ்ந்தார் என்பதற்குக் கீழ்வரும் சம்பவம் நல்லதோர் எடுத்துக் காட்டாகும்:

ஒரு புரு வியாபாரி புருக்களை நன்கு கூவுவதற்குப் பழக்கி, அவற்றை விற்று வந்தார். அவரிடம் புரு ஒன்று வாங்கிச் சென்ற ஒருவர் திரும்ப வந்து, 'நீ கூறியபடி புரு சப்தமிட்டுக் கூவவில்லை' என்று சண்டையிட்டார். புரு வியாபாரி கோபம் கொண்டவராய், 'அப்படியாயின், நான் என் மனைவியைத் திருமண முறித்தவனாவேன்' என்று சபதம் ஏற்றார்.

புரு வியாபாரி அவசரப்பட்டுச் சொல்லிவிட்டார் எனினும், இசுலாமிய சட்டப்படி அவர் 'தலாக்' (Talaq) எனும் திருமண முறிவு செய்தவராகி விடுகிறார். எனவே, யாது செய்வது என்று தெரியாத நிலையில், இமாம் மாலிக் அவர்கள் நடத்தி வந்த பள்ளிக்கூடத்துக்குச் சென்று அவர் நடந்ததைக் கூறி, தாம் செய்யவேண்டியது யாது என வினவி நின்றார்.

'நீ அவசரப்பட்டுத் திருமண முறிவு செய்துவிட்டாய். திருமண முறிவு முறிவுதான். நீ மனைவியை விட்டுப் பிரிய வேண்டியதுதான் அடுத்துச் செய்யவேண்டியது' என்று இமாம் மாலிக் அவர்கள் கூறி விட்டார்கள்.

மாணவராய் வீற்றிருந்த ஷாபி, அந்த வியாபாரியிடம் 'நீர் விற்கும் புருக்களில், கூவும் புருக்கள் அதிகமா, கூவாத புருக்கள் அதிகமா?' என்று கேட்டார்.

'கூவும் புருக்களே அதிகம்' என்று விடை பகர்ந்தார் புரு வியாபாரி.

'அப்படியாயின், நீர் கூறிய திருமண முறிவு செல்லாது; நீர் உம் மனைவியோடு தொடர்ந்து வாழவழி இருக்கிறது' என்றார் மாணக்கர்.

'நீர் எதை ஆதாரமாக வைத்து இந்த முடிவைச் சொல்கிறீர்?' என்று ஆசிரியர் கேட்டார்.

'முஹம்மது நபி அவர்கள் கூறியதை அடிப்படையான ஆதாரமாக வைத்துச் சொல்கிறேன்' என்றார் மாணவர்.

'அது என்ன ஆதாரம்?' என்று கேட்டார் ஆசிரியர்.

'ஒரு சமயம் முஹம்மது நபி அவர்களிடம் பெண் ஒருத்தி வந்து தன்னை மணமுடிக்கப் போட்டியிடும் இருவரில் யாரை மணமுடிப்பது என்று கேட்டபொழுது, அதில் ஒருவரைக் குறிப்பிட்டுச் சொல்வதற்காக, "தண்டாயுதத்தைத் தன் தோளில் இருந்து இறக்கி யறியாத வீரனை மணமுடித்துக்கொள்" என்று கூறினார்கள். இது எதைக் குறிக்கிறது என்றால், தண்டாயுதத்தைத் தாங்கி நிற்பது வீரருடைய பொதுப் பழக்கம் என்பதைக் குறிக்கிறதே அன்றி, அவர் உண்ணும் பொழுதும் உடுத்தும் பொழுதும்கூடத் தண்டாயுதத்தைத் தாங்கி நின்றார் என்று ஆகாது. இதை ஆதாரமாகக் கொண்டு பார்க்கும் பொழுது, இந்தப் புறு வியாபாரியும் தம்முடைய புறுக்கள் பொதுவாகக் கூவும் என்று கூறி இருக்கிறார். ஏதோ ஒருசில கூவாதிருப்பின், அதனால் இவர் கூற்றுப் பொய்யாகி விடாது. பெரும்பாலான புறுக்களும் கூவுமாதலால், அதை நம்பியே இப்படிக் கூறி இருக்கிறார். எனவே, இவரது கூற்றுப் பொய்யாகாது. திருமண முறிவு சரியானதன்று' என்று ஆணித்தரமாகக் கூறினார். ஆசிரியரும் இதை ஏற்று, திருமண முறிவு செல்லாது என்று புறு வியாபாரியிடம் கூறியனுப்பினார்.

பிரச்சினை எழும்போது, முஹம்மது நபி அவர்கள் சொன்னதை அடிப்படையாகக்கொண்டு எப்படி முடிவு காணுவது என்பதற்கு இது ஒரு நல்ல ஆதாரம். இதுபோன்று, ஆதாரங்களை அடிப்படையாக வைத்துப் பிரச்சினைகளுக்குத் தக்கபடி ஊகித்து முடிவு காணுவதைக் 'கியாஸ்' (Qiyas) என்று கூறலாம். கியாஸ் கொள்கைஅடிப்படையில் பிரச்சினைகளுக்கு முடிவு காண வழிவகுத்துத் தந்தவர் இமாம் 'ஷாபி' அவர்களே ஆவர்.

இமாம் ஹன்பல் (Imam Hanbal) கி.பி. 780-ல் பிறந்தார்; கி.பி. 858-ல் உயிர் நீத்தார். இவர் இமாம் ஷாபியின் சீரிய மாணக்கராவார். இவரைப் பின்பற்றுபவர்கள் 'ஹன்பலி' கூட்டத்தினராவர். இவர்கள் சிரியா, பாலஸ்தீனம் முதலிய நாடுகளில் அதிகமாகக் காணப்படுகின்றனர். இமாம் ஹன்பல், முஹம்மது நபி அவர்களின்

வழிமுறைத் தத்துவங்களை (Tradition) அடிப்படையாகக் கொண்டு தமது கொள்கைகளை விளக்கலானார். அன்றைய ஆட்சிப் பொறுப்பில் வீற்றிருந்த அப்பாஸ் மன்னர்களால் இவர் சிறை வைக்கப்பட்டுத் துன் புறுத்தப்பட்டார் எனினும், 'நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே' என்று வாதாடிய நக்கீரனைப்போல், தமது கொள்கைக்காக வாதாடி வெற்றி கண்டவர் ஆவர்.

சட்ட வளர்ச்சிக்கு மூலாதாரமான கருவூலங்கள்

இசுலாமிய சட்ட வளர்ச்சிக்கு மூலாதாரமான கருவூலங்களாக நான்கைக் குறிப்பிடலாம். அவற்றில் முதலில் வைத்து எண்ணப்பட வேண்டியது 'திருக் குர்ஆன்' ஆகும். அதற்கடுத்து சுன்னு, இஜ்மா, கியாஸ் என்பவற்றையே முறையே எடுத்துக்கொள்ள வேண்டும்.

1. 'திருக் குர்ஆன்' (Holy Quran)

இசுலாமியர்தம் வேதமாக ஏற்கப்படும் 'திருக் குர்ஆன்' நீதிக் கருத்துக்களையும் அறவுரைகளையும் தன்னகத்தே கொண்டதோடன்றி, முசுலிம்களின் சட்ட வளர்ச்சிக்கு வேண்டிய மூலாதாரங்களையும் உடன் கொண்டு திகழ்கின்றது. இது 6350 சொற்றொடர்களைக் கொண்டது; அராபியில் எழுதப்பட்டிருக்கிறது. இச் சொற்றொடர்கள் ஆண்டவனால், 'ஜிப்ரீல்' என்னும் தூதர் வழியாக முஹம்மது நபி அவர்களுக்கு அருளப் பட்டவை. இவை அனைத்தும் ஒரே நேரத்திலோ, ஒரே சந்தர்ப் பத்திலோ அருளப்பட்டவையல்ல; அவ்வப்போது இசுலாமிய சமுதா யத்தில் எழுந்த கேள்விகளுக்கும் பிரச்சினைகளுக்கும் விடையாக, முஹம்மது நபி அவர்களுக்கு அருளப் பெற்றவையாகும். திருக் குர்ஆன் பல்வேறுபட்ட பொருள்களையும், கருத்துக்களையும், இசுலாமியருக்கான சட்டதிட்டத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. வாரிசுகளுக்குரிய அவரவர் பங்கைத் திட்டவட்டமாக அறுதியிட்டுச் சொல்லும் ஒரு சட்டப் புத்தகமாகவும் இது விளங்குகின்றது. கிட்டத்தட்ட எல்லா மொழி களிலும் இது மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. மேற்கோள்களும், குறிப்புகளும், வரலாற்றுச் சம்பவங்களும், ஆதாரங்களும் அங்கங்கே குறிப்பிடப்பட்டிருப்பதால், இவற்றை விளக்க உரை இன்றிப் புரிந்து கொள்வது எளிதன்று. தமிழிலும் இது மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

2. 'சுன்னு' அல்லது வழிமுறைத் தத்துவம் (Sunna or Tradition)

திருக் குர்ஆனில் பொதுவாக இசுலாமிய சமுதாயத்திற்கு வேண்டிய மூலாதாரக் கொள்கைகளும், அவற்றின் விளக்கங்களும் காணக்கிடக் கின்றன. புதிதாக எழுந்த கேள்விகளுக்கும் பிரச்சினைகளுக்கும்

அதில் விடை காணமுடியாத பொழுது, முஹம்மது நபி வாழ்ந்து காட்டிய முறையையோ, அல்லது தமது வாழ்நாளில் அதுபற்றி அவர் என்ன சொல்லி இருக்கிருர் என்பதையோ, அல்லது முஹம்மது நபி அவர்கள் முன்னிலையில் அவரைப் பின்பற்றி வாழ்ந்தோர் சொன்னதையோ செயல்பட்டிருப்பதையோ, அல்லது அது தகாதது என்று அறுதியிட்டுக் கூறப்படாமல் விடுபட்டிருப்பதையோ ஆதாரங்களாக வைத்து இசுலாமிய சமுதாயத்தில் எழும் கேள்விகளுக்கும் பிரச்சினைகளுக்கும் விடை காணவேண்டும். இதுவே 'சுன்னு' என்று அழைக்கப் படுகிறது.

முஹம்மது நபி அவர்கள் திருக் குர்ஆனில் சொல்லப்பட்டவைகளைத் தமது வாழ்நாளில் கடைப்பிடித்து — வாழ்ந்துகாட்டி, மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். இவ்வாறு அவர்கள் வாழ்ந்து காட்டிய வழிமுறைகள், பின்னர்த் தொகுக்கப்பட்டு '*ஹதீது*' (Hadith) என்று அழைக்கப்படுகின்றன. திருக் குர்ஆனுக்கு அடுத்தபடியாக, இசுலாமிய சட்டப் பிரச்சினைகளுக்கு விடைகாண '*ஹதீது*' பெரிதும் பயன்படுகிறது. பின்னர், சட்ட நிபுணர்களான இமாம்கள் புகாரீ, முஸ்லிம், இபுனுமாஜா, நஸயீ போன்றவர்களின் ஹதீதுத் தொகுப்புக்கள் மிகவும் குறிப்பிடத் தக்கவை ஆகும். '*ஹதீது*'களில் உட்கிடையாகக் கிடக்கும் நியதி 'சுன்னு' ஆகும்.

முஹம்மது நபி அவர்கள் தமது வாழ்நாளில் கடைப்பிடித்துச் செய்து காட்டியவற்றை, சுன்னத்துல் பிஃல் (Sunnatul-fia'l) என்றும் முஹம்மது நபி அவர்கள் வாழ்ந்த நாளில் இதைச் 'செய்—செய்யாதே' என்று சொன்னதை அடிப்படையாகக் கொண்டு 'சுன்னத்துல் கால்' (Sunnatul-qual) என்றும், முஹம்மது நபி அவர்கள் வாழ்நாளில் அவர்கள் முன்னிலையில், அவர்களின் மறுப்பின்றி அவர்களைப் பின்பற்றியோர் சொல்லியோ செய்தோ காட்டியவற்றை அடிப்படையாகக் கொண்டு 'சுன்னத்துல் தக்ரீரு' (Sunnatul-taqrir) என்றும் சுன்னுவை மூன்ருகப் பிரித்து விளக்கலாம்.

3. இஜ்மா (Ijmaa)

இசுலாமிய சட்டத்திலும் தத்துவங்களிலும் ஊறித்திளைத்தவர் என்று ஒருவரைச் சொல்லவேண்டுமானுல், அவர் திருக் குர்ஆன், ஹதீது' ஆகியவற்றைக் கற்றுணர்ந்த நுண்ணறிவாளராய் இருக்க வேண்டும். அப்படிக் கற்றுணர்ந்த நுண்ணறிவாளர்கள்தாம் 'திருக் குர்ஆன்', 'சுன்னு' ஆகியவற்றிற்கு விளக்கமும் விரிவுரையும் வழங்கத் தகுதியுடையோர் ஆவர். இந்த நுண்ணறிவாளர்களிடையே ஒரு குறிப்பிட்ட கேள்வியிலோ, பிரச்சினையிலோ ஒருமித்த கருத்து நிலவுமானுல் அதை 'இஜ்மா' என்று அழைக்கின்றனர். 'திருக் குர்ஆனையும்'

'ஹதீது'களையும் அடிப்படையாகக்கொண்டு, இசுலாமிய நுண்ணறிவாளர்களிடையே ஒரு குறிப்பிட்ட பிரச்சினையில் ஒருமித்த கருத்து நிலவின் அதை 'இஜ்மா' எனக் கொள்ளலாம். ஹனபீ கூட்டத்தினர் இதைச் சட்ட வளர்ச்சிக்கு நல்லதோர் அடிப்படையெனக் கருதுகின்றனர்; இசுலாமிய சமுதாயத்தில் தோன்றிய புதுப்புதுப் பிரச்சினைகளுக்கும் கேள்விகளுக்கும் முடிவுகாணும் பொருட்டு, நுண்ணறிவாளர்களின் ஒருமித்த கருத்தை (இஜ்மா) அடிப்படை ஆதாரமாகக் கொண்டனர். எனவே இது திருக் குர்ஆனுக்கும், சுன்னாவுக்கும் அடுத்தபடியாக இசுலாமிய சட்ட வளர்ச்சிக்கு வழிகோலி நிற்கிறது.

4. 'கியாஸ்' (Qiyas)

முன்னர்க் கூறப்பட்ட மூன்று அடிப்படைகளையும் ஆதாரமாகக் கொண்டு, பெருகி வளர்ந்த இசுலாமிய சமுதாயத்தில் எழுந்த பிரச்சினைகளுக்குத் தீர்ப்பளிக்க முடியாமற் போனபொழுது, 'கியாஸ்' என்னும் முறையைப் பின்பற்றித் தீர்ப்பு வழங்கலாயினர். முன்னைய மூன்று அடிப்படை ஆதாரங்களில் நின்றும் ஒத்த தன்மையுடைய கருத்துக்களை ஊகித்துணர்ந்து பிரச்சினைகளுக்கு முடிவு காணும் தன்மை 'கியாஸ்' என்று அழைக்கப்படுகிறது. இந்த ஊகித்துணரும் முறையை 'ஷீயா' கூட்டத்தினரும், ஹன்பலி கூட்டத்தினரும், இசுலாமிய சட்ட வளர்ச்சிக்கு நல்ல அடிப்படை என்று ஏற்றுக்கொள்வதில்லை. காரணம், இது பெரும்பாலும் ஒத்த தன்மையுடைய கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு ஊகத்தின் மூலம் ஒரு பிரச்சினைக்கு முடிவுகட்டப்பட்ட விதி ஆதலால், சட்டத்திற்கு மூலாதாரம் ஆகாது என்பதாகும். இமாம் அபூ ஹனீபா அவர்கள் இம் முறையைப் பெரிதும் பின்பற்றியுள்ளார்.

5. இஸ்திஹ்சான் (Istihsan)

ஒரு சமயம் எமன் நாட்டிற்குப் புதிய நீதிபதியாக ஒருவர் நியமிக்கப்பட்டார். அந்த நீதிபதியிடம் முஹம்மது நபியவர்கள் கீழ்வரும் கேள்விகளைக் கேட்டார்கள்.

முஹம்மது நபி : நீர் எதை அடிப்படையாகக் கொண்டு நீதி வழங்குவீர் ?

நீதிபதி : திருக் குர்ஆனைக் கொண்டு.

மு. ந. : அதில் அப்பொருள் குறித்து எதுவும் காணப்படவில்லையானால் ?

நீ. : உங்கள் சொல்லையும் செயலையும் ஆதாரமாகக் கொண்டு முடிவு எடுப்பேன்.

மு. ந. : அவற்றிலும் காணக்கிடைக்காவிட்டால்?

நீ. : என்னுடைய பகுத்தறிவைப் பயன்படுத்தி மனச்சாட்சிக்கு ஒப்ப நீதி வழங்குவேன்.

நீதிபதியாக நியமனம் பெற்றவரின் பதில் முஹம்மது நபி அவர்களுக்குத் திருப்தி அளித்ததாகச் சரித்திரம் கூறுகிறது. இசுலாமிய சட்ட அடிப்படையில் நீதி வழங்கும்பொழுது எந்த முறையில் பொருள் காணவேண்டும் என்பதை இவ் வரலாற்றுக் குறிப்பு விளக்கிநிற்கிறது. மேலும் நீதி, நியாய, நேர்மை, மனச்சாட்சி அடிப்படையில் நீதி வழங்குவது இஸ்லாமிய சட்டத்திற்கு அப்பாற்பட்டதன்று.

6. 'பத்வா' (Fatwas)

மொகலாய மன்னரான அவுரங்கஜீபின் ஆட்சிக் காலத்தில் இசுலாமிய நீதிபதிகளால், 'குர்ஆன்' 'சுன்னு', 'இஜ்மா', 'கியாஸ்' ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்ட நீதித் தீர்ப்புகள் நூலாகத் தொகுக்கப்பட்டு, 'பத்வா ஆலம்கீரி' என்ற பெயரில் வழங்கிவருகிறது. இது சட்ட அடிப்படைக்கு மூலாதாரமாகக் கொள்ளப்படாவிட்டாலும், இசுலாமிய சமுதாயத்தில் எழும் கேள்விகளுக்கும் பிரச்சினைகளுக்கும் விடைகாணவல்ல ஒரு தொகுப்பாக இருக்கின்றது.

7. வழக்கம் (Custom)

வழிவழி வந்துகொண்டு இருக்கும் வழக்கம் இசுலாமிய சட்ட வளர்ச்சிக்கு மூலாதாரமாக எடுத்துக்கொள்ளப்படுகிறதா என்பதைப் பார்த்தால், இந்துமதச் சட்டம் எந்த அளவுக்கு வழக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துவருகிறதோ அந்த அளவுக்கு இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இந்து சட்டப்படி, வழிவழி வழக்கம் (Custom) வேத நூல்களையும் பாடநூல்களையும் வென்று நிற்கும் தன்மையுடையது. இதற்கு நல்ல எடுத்துக்காட்டு, பெயர்பெற்ற இராமநாதபுர வழக்கு (Ramnad case) ஆகும்.

முஹம்மது நபி அவர்கள் வாழ்ந்த காலத்தில், முன்னரே இருந்த வழக்கங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தால், அது சட்டத்திற்கு மூலாதாரமே தவிர, பின்னர் வளர்ந்து வந்த சமுதாயத்தில் எழுந்த வழக்கங்கள் சட்டத்திற்கு மூலாதாரமாகா. இவ் வழக்கங்கள் திருக் குர்ஆனின் கருத்துக்களுக்கோ, ஹதீதுகளின் முடிவுக்கோ மாறுபட்டுச் சென்று இசுலாமிய சட்டத்தில் இடம்பெற வழி இல்லை. எனவே, பின்னர் வந்த வழக்கங்கள் சட்டத்திற்கு மூலாதாரமாக நிற்கின்றன என்று சொல்லமுடியாது. ஆயினும், வழக்கம் இசுலாமிய சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

இசுலாமியர் சட்டம்
இந்தியாவில் வளர்ந்த வரலாறு

முதன் முதலாக மொகலாயரின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் இசுலாமியர் சட்டம் நுழையலாயிற்று. அவர்களது ஆட்சியில் இசுலாமியர்களுக்கு முசுலிம் சட்டமும், இந்துக்களுக்கு இந்துமதச் சட்டமும், வழக்கமும், வழக்காறுகளும் பயன்படுத்தப்பட்டு நீதிவழங்கப்பட்டது. உரிமை இயலைப் (Civil field) பொறுத்த வரையில் இருமதத்தவருக்கும் அவரவர் சட்டம் பயன்படுத்த வழிசெய்யப்பட்டிருந்தது. ஆனால், குற்ற இயலைப் (Criminal Law) பொறுத்த வரையில், அது அரசாங்கத்திற்கும் தனிப்பட்டோருக்கும் இடையே நடக்கும் வழக்கு ஆகையால், இசுலாமிய குற்றஇயல் சட்டமே வேறுபாடின்றி எல்லோருக்கும் பயன்படுத்தப்பட்டு வந்தது.

கிழக்கிந்திய கம்பெனியின் (East India Company) நுழைவு காரணமாக, ஆங்கிலேயர்களுக்கு அவர்களது திவானி உரிமையின் மீது அவர்களுடைய சட்டத்தைப் பயன்படுத்தி நீதிபெற அனுமதி அளிக்கப்பட்டது. காலம் செல்லச் செல்ல மொகலாயர் கைவசம் இருந்த ஆட்சிப் பொறுப்பு ஆங்கிலேயரின் கைக்கு மாறியது. ஆனால், அவர்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்றார்கள் எனினும், அவர்களுடைய சட்டங்களை அமல்படுத்தப் போதிய நிர்வகிப்போர் இல்லாது இருந்த காரணத்தால் அன்றைய நடைமுறையில் இருந்து வந்த மொகலாயர் சட்டங்களைப் பெருமாற்றம் எதுவும் இன்றி அமல் படுத்தி வந்தனர். எனவேதான், இசுலாமிய குற்ற இயல் சட்டம் நெடுங்காலம் நடைமுறையில் இருந்து வந்தது.

முதன்முதலில் வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு (Lord Warren Hastings) காலத்தில் பொதுவாகச் சட்டத்துறையில் சிறுமாறுதல் ஏற்படலாயிற்று. 1772-ல் தனிஇனத்தவர் சட்டம் (Personal Law) சட்ட உருவெடுத்து நிற்க வழிகோலப்பட்டது.

(i) உரிமை இறக்கம் (Succession), (ii) வமிச வழிச் சொத்து (Inheritance), (iii) திருமணம் (Marriage), (iv) சாதி (Caste), மற்றும் (v) நிலவிவரும் சமய வழக்காறுகளும் நிலையங்களும் (Usages and Institutions) ஆகியவற்றைப் பொறுத்த வரையில், இந்து மதத்தவருக்கு இந்துமத சாஸ்திர அடிப்படையிலும், இசுலாமியர்களுக்குக் குர்ஆனின் சட்ட அடிப்படையிலும் நீதிவழங்க 1772 ஆம் ஆண்டுச் சட்டத்தின் மூலம் வகை செய்யப்பட்டது.

பின்னர்க் கல்கத்தா, சென்னை, பம்பாய் ஆகிய மாநிலங்களில் உயர் நீதிமன்றங்கள் நிறுவப்பட்டு, அதனதன் அதிகார வரம்பும் வரையறுக்

கப்பட்டது. 1882-ல் இயற்றப்பட்ட மாநிலச் சிறுவழக்கு நீதிமன்றச் சட்டத்தின் (Presidency Small Causes Court Act, 1882) மூலம், (i) வமிசவழிச் சொத்துரிமை (Inheritance), (ii) நிலம் வாடகை வருமானம், பொருள் ஆகியவற்றின் உரிமை இறக்கம் (Succession to lands, rents and goods), (iii) ஒப்பந்தம் (Contracts), (iv) கொடுக்கல் வாங்கல் (Dealing between Parties) ஆகிய பொருள்களைப் பொறுத்தவரையில், வழக்காடுவோர் இருவரும் ஒரே இனத்தவரா யிருந்தால், அந்த மதச்சட்ட அடிப்படையிலும், வழக்காடுவோர் வெவ் வேறு மதத்தவராயிருந்தால், பிரதிவாதியின் மதச்சட்ட அடிப்படை யிலும் நீதி வழங்க வகைசெய்யப்பட்டது.

1772 ஆம் ஆண்டுச் சட்டத்திற்கும், 1882 ஆம் ஆண்டுச் சட்டத் திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை காண்பின் முன்னதில் (iii), (iv) பிரிவுகளில் கூறப்பட்ட திருமணமும் சாதியும் பின்னதில் சேர்த்துக் கொள்ளப்பட வில்லை. ஆனால், பிந்தியதில் கூடுதலாகச் சேர்க்கப் பட்டிருப்பது ஒப்பந்தமும் (Contract) கொடுக்கல் வாங்கலும் ஆகும். இன்னும் இந்தியாவில் உள்ள நீதிமன்றங்கள் மேற்கூறிய சட்டங்களின் அடிப்படையிலேயே நீதிவழங்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளன.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் (Constitution of India) பிரிவு 225 நம் நாட்டு எல்லைக்குட்பட்ட பகுதிகளின் சட்ட அதிகார வரம்பு பற்றிக் கூறுகிறது. அதன்படி பார்த்தால், 1947 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்தியா விடுதலை பெறுமுன் நடைமுறையிலிருந்த அதிகாரங் களே வழங்கப்பட்டிருப்பதைக் காணலாம். சுதந்திரத்திற்கு முன்னர் இருந்த அதிகாரங்கள் என்னவென்று தெரியவேண்டு மெனில், அதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த 1935 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தைப் (Govt. of India Act, 1935) பார்க்கவேண்டும். அதில் பிரிவு 223-ல், அதற்கு முன்னர் நடைமுறையிலிருந்த அதிகாரங்கள் நிலைபெற வழி செய்யப்பட் டிருப்பதைப் பார்க்கலாம். அதற்கு முன்னுள்ள அதிகாரங்கள் என்ன என்று காண, 1915 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தின் மூலம் கூறப்பட்ட அதிகாரம் என்ன வென்று பார்க்கவேண்டும். அதில் அதற்கு முன்னர் நிலவியிருந்த சட்ட அதி காரங்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அதற்கு முன்னர் நடைமுறையில் உள்ள அதிகாரம் 1882 ஆம் ஆண்டு சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களே. மேற்குறிப்பிட்ட சட்ட அதிகாரங்களைப் பெற்று இந்தியாவில் உள்ள நீதி மன்றங்கள், தனி இனத்தவரிடையே ஏற்படும் வழக்குகளை அந்த அந்த மதச்சட்ட (Personal Law) அடிப்படையிலும், அந்த அந்த மதங்களின் வழக்கம் (Customs) வழக்காறு (Usages) அடிப்படையிலும், நீதி, நியாய, நேர்மை மனச்சாட்சி (Justice equity and good conscience) அடிப்படையிலும் தீர்ப்பு வழங்குகின்றன.

1873ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சென்னை உரிமையியல் சட்டம் பிரிவு 16ல், (Madras Civil Courts Act 1873, S-16) சென்னை மாநிலத்தில் இயங்கும் நீதிமன்றங்கள் தனி இனத்தவர் சட்டத்தைப் பயன்படுத்தி அந்த அந்த இனத்தவருக்கு நீதி வழங்கவும், அந்த அந்த இனத்தவர் வழக்கங்களையும் வழக்காறுகளையும் பயன்படுத்தி நீதி வழங்கவும், இவை எதுவும் பயன் தராது போயின், நீதி, நியாய நேர்மை, மனச்சாட்சி அடிப்படையில் நீதி வழங்கவும் அதிகாரம் பெற்றுள்ளன. 1877ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டங்களிலிருந்து வங்காளம், அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களில் இயங்கும் நீதி மன்றங்கள் இதே உரிமையைப் பெற்றுள்ளன. 1827-ல் இயற்றப்பட்ட பம்பாய் ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் (Bombay Regulation Act, 1827) மூலம் குஜராத், மஹாராஷ்டிரா மாநிலங்களில் இயங்கும் நீதி மன்றங்கள் இதுபோன்ற உரிமையைப் பெற்றிருக்கின்றன.

கிழக்கிந்திய கம்பெனி ஆட்சி புரிந்து வந்த காலத்தில் பம்பாய் நகரின் சுற்றுப் புறங்களை ஆட்சி செய்து வந்தவர்கள் மராட்டியர் ஆவர். அவர்களுடைய சட்டம் இசுலாமியர் சட்டத்திற்கு நேர் முரண் பட்டதாகும். 1827-ல் கொண்டுவரப்பட்ட ஒழுங்கு படுத்தும் சட்டத்தில் தனிப்பட்ட மதத்தவருக்கு என்று குறிப்பிடப்படாமலும், எப்பொருள் குறித்து இச் சட்டத்தின் அடிப்படையில் நீதி வழங்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்படாமலும், பொதுவாகப் பிரதிவாதியின் சட்டத்தின் அடிப்படையிலும், வழக்கம், வழக்காறுகளின் அடிப்படையிலும் நீதி வழங்க வழிவகுக்கப்பட்டிருந்தது. இசுலாமியர்கள் தங்கள் மதச் சட்டத்தின் அடிப்படையில் நீதி வேண்டும் என்று கோரிய போதிலும், மேற்கூறிய ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் அதற்கு வழி இல்லாது போயிற்று. இந்த ஒழுங்குபடுத்தும் சட்டம் பிரதிவாதியின் சட்டம், வழக்கம், வழக்காறு ஆகியவற்றிற்கே முக்கியத்துவம் கொடுத்திருந்ததால், இது இரு மதத்தினரையும் பெரிதும் பாதித்தது.

கிழக்கிந்திய கம்பெனியர் ஆட்சிக்கு முன்னர், பஞ்சாபில் ஆட்சி நடத்தியவர்கள் சீக்கியர்கள் ஆவர். இந்துமத சட்டத்தையோ, முசுலிம் சட்டத்தையோ பயன்படுத்தி இவர்கள் நீதி வழங்கவில்லை. வெறும் வட்டார வழக்கங்களை (Local Customs) அடிப்படையாக வைத்து நீதி வழங்கப்பட்டு வந்தது. பின்னர் வந்த ஒழுங்குபடுத்தும் சட்டங்கள் வழக்கங்களுக்கும் வழக்காறுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்திருந்ததால், இசுலாமியர்கள் தங்களுடைய சட்டத்திற்கு எதிரான சில வழக்கங்களையும் நெடுங்காலம் கடைப்பிடித்து வந்தனர். மகவேற்பு (Adoption) என்பது இசுலாமிய சட்டத்தால் அங்கீகரிக்கப்படவில்லை என்றாலும், பஞ்சாப் முசுலிம்கள் வட்டார வழக்கம் காரணமாக, மகவேற்பு எடுத்து வந்தனர். இறுதியில் 1937ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட

இசுலாமிய ஷரீயத் சட்டத்தின் மூலம், அதில் கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு எதிராகச் செல்லும் எல்லா வழக்கங்களும் வழக்காறுகளும் ஒழிக்கப்பட்டு, முக்கியமான விஷயங்களில் இசுலாமியருக்கு இசுலாமியர் சட்டம் பயன்படுத்தப்பட்டு நீதிவழங்க வகைசெய்யப்பட்டிருக்கிறது.

(1) உயிலிலா உரிமை இறக்கம் (Intestate succession) (2) பெண்கள் சிறப்புச் சொத்து (Special property of females) (3) திருமணம் (Marriage) (4) திருமண இழப்பு (Dissolution of Marriage) (5) வாழ்க்கைப் படி (Maintenance) (6) மஹர் (Mahr or Dower) (7) காப்பாளராதல் (Guardianship) (8) கொடை (Gift) (9) பொறுப்புரிமை அமைப்பும் அதன் சொத்தும் (Trust and Trust Property) (10) வக்பு (Wakf) ஆகிய பத்துப் பொருள் குறித்தும் இசுலாமியர்களுக்கு இசுலாமியர் சட்ட அடிப்படையில் நீதி வழங்கப் பெறவேண்டும் என்பது 1937-ல் இயற்றப்பட்ட முசுலிம் இனத்தவர் சட்டத்தைப் பயன்படுத்தும் சட்டம் அல்லது ஷரீயத் சட்டம் [Muslim Personal Law (Shariat) Application Act, 1937] பிரிவு 2-ல் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது.

அண்டைச் சொத்தில் முற்படு விலைகொள் உரிமை (Pre-emption) இசுலாமிய சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றுயினும், இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் உள்ள உயர்நீதி மன்றங்களும் இந்த உரிமையினை, நீதி நியாய நேர்மை மனச்சாட்சி அடிப்படையில் ஏற்று, நீதி வழங்குவதில்லை. நீதி நியாய நேர்மை மனச்சாட்சி அடிப்படையில், குஜராத் உயர் நீதிமன்றம் இந்த உரிமையினைப் பயன்படுத்தி, முசுலிம்களுக்கும் இந்துக்களுக்கும் ஒருசேர நீதி வழங்கியிருக்கிறது. தமிழ்நாட்டு உயர் நீதிமன்றத்தால் இது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பொது நோக்கிற்கு ஒவ்வாததாயும், அடுத்தவர் உரிமையைப் பறிப்பதாயும் இருப்பதால், தமிழ்நாட்டு உயர் நீதி மன்றமும், மற்றும் உள்ள மாநில உயர்நீதி மன்றங்களும் அண்டைச் சொத்தில் முற்படு விலைகொள் உரிமை (Pre-emption) யைப் பயன்படுத்தி நீதி வழங்குவதில்லை.

அவ்வப்போது இயற்றப்பட்ட சட்டங்களின்மூலம் இசுலாமிய சட்டத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றங்களாகக் கீழ்வருவனவற்றைக் கூறலாம் :

(1) இந்திய குற்ற இயல் சட்டத்தொகுப்பின் (Indian Penal Code) மூலம் முசுலிம் குற்ற இயல் சட்டம் (Muslim Criminal Law) முழுமையாக மாற்றப்பட்டுள்ளது.

(2) இந்திய சான்றியல் சட்டத்தின் (Indian Evidence Act) விதித் துறைகளுக்கோ (Provisions) இந்திய ஒப்பந்தச் சட்டத்தின்

(Indian Contract Act) விதித் துறைகளுக்கோ முரண்பட்டுச் செல்லும் இசுலாமிய சட்டம் மாற்றப்பட்டுள்ளது.

(3) 1843ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட அடிமை ஒழிப்புச் சட்டத்தின் மூலம், அடிமைகளைப் பொறுத்த இசுலாமியர் சட்ட விதிகள் மாற்றப்பட்டன.

(4) 1850ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சாதித் தகவின்மை ஒழிப்புச் சட்டத்தின் (The Caste Disabilities Removal Act, 1850) மூலம், மத மாற்றத்தால் இசுலாமிய சட்டம் ஏற்படுத்தும் உரிமையியல் இழப்பு அகற்றப்பட்டது.

(5) 1875ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்திய உரிமை வயது வந்தோர் சட்டத்தின் (Indian Majority Act of 1875) மூலம் திருமணம், திருமண முறிவு, மஹர் (Mahr) நீங்கலாக மற்ற எல்லா வற்றிற்கும் இசுலாமிய உரிமை வயது வந்தோர் சட்டம் செல்லா தாயிற்று.

(6) 1929ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சிறுவர் திருமணக் கட்டுப் பாட்டுச் சட்டம் (The Child Marriage Restraint Act, 1929) அதில் குறிப்பிடப்பட்ட வயது வருமுன் திருமணம் செய்துகொள்ளும் இசுலாமியர்களையும் தண்டனைக்குள்ளாக்கும்.

(7) வடமேற்கு எல்லைப்புற மாகாணம், அயோத்தி, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் இயற்றப்பட்ட அண்டைச் சொத்தில் முற்படு விலைகொள் உரிமைச் சட்ட விதித்துறைகள், (Statutory Provisions about pre-emption) இப் பொருள் குறித்த தூய இசுலாமிய சட்டத்தினின்றும் பெரிதும் மாறுபட்டனவாகும்.

காலப்போக்கில், இயற்றப்பட்ட சட்டங்களின்மூலம் இசுலாமியர் சட்டத்தில் மாற்றமும் திருத்தமும் ஏற்படுத்தப்பட்டிருப்பதுபோல், நீதித்தீர்ப்புகளின்மூலமும் முசுலிம் சட்டத்தில் மாறுபாடுகளும் திருத்தமும் செய்யப்பட்டுள்ளன. இந்திய நீதிமன்றங்கள், வழக்காடு வோர் முசுலிம்களா யிருந்தாலும், தூய்மையான இசுலாமிய சட்டத்தை எல்லா விஷயங்களிலும் முழுமையாகப் பயன்படுத்தி நீதி வழங்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. எனவே, நீதிமன்றங்களில் வழங்கப்பட்டிருக்கும் தீர்ப்புகள், சில சமயங்களில் முசுலிம்களின் மதக் கோட்பாடுகளுக்கும் தத்துவங்களுக்கும் ஒவ்வாதனவாகக்கூட இருக்கலாம். ஆயினும், நீதி நியாய நேர்மை மனச்சாட்சி அடிப் படையில் வழங்கப்பட்ட தீர்ப்புகளாக இருப்பதால், சில சமயங்களில் அவை இசுலாமிய தத்துவங்களுக்கு ஒத்துவராதனவாயும் மதத்

தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப் பெருதனவாயும் இருப்பினும், இந்திய முசுலிம்களுக்கு அவைதாம் முடிவான தீர்ப்புகளாகும்.

1937ஆம் ஆண்டு ஷரீயத் சட்டம் இந்திய இசுலாமியர்களுக்கு வழங்கப்பட்டது. இது வடமேற்கு எல்லையிலும் ஜம்மு காஷ்மீரிலும் வாழும் முசுலிம்கள் நீங்கலாக, இந்தியாவில் வாழும் எல்லா முசுலிம்களை யும் கட்டுப்படுத்தும். பிரிவு 2-ல் கூறப்பட்ட பத்துப் பொருள்களான, உயிலிலா உரிமை இறக்கம், பெண்கள் சிறப்புச் சொத்து, திருமணம், திருமண இழப்பு, வாழ்க்கைப் படி, மஹர், காப்பாளராதல், கொடை, பொறுப்புரிமை அமைப்பும் அதன் சொத்தும், வக்பு ஆகியவற்றைப் பொறுத்த வரையில், இந்திய முசுலிம்களுக்கு ஷரீயத் சட்டத்தின் அடிப்படையில்தான் நீதி வழங்கப்படும். இதில் குறிப்பிடப்பட்ட பத்துப் பொருள்களைப் பொறுத்தமட்டில், மாறுபட்டுச் செல்லும் வழக்கங் களும் கருத்தில் கொள்ளப்பெருது, ஷரீயத் சட்ட அடிப்படையிலேயே நீதி வழங்கப்படும். எனவே, இந்தப் பத்துப் பொருள்களையும் பொறுத்த வரையில் ஷரீயத் சட்டத்திற்கு முரண்பட்டுச் செல்லும் நடைமுறையிலிருந்த வழக்கங்களும் வழக்காறுகளும் ஒழிக்கப்பட்டன என்று சொல்லலாம். விவசாய நிலங்களுக்கும், தருமச் சொத்திற்கும், தரும ஆதீனங்களுக்கும் (Agricultural Land, Charities and Charitable Endowments) இச் சட்டத்திலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்த இரு பொருள்களும், இந்திய அரசிய லமைப்புச் சட்டத்தில் (Constitution of India) மாநிலப் பட்டியலில் (State List) ஒதுக்கப்பட்டிருப்பதால், மாநில அரசே இப் பொருள்கள் குறித்துச் சட்டம் இயற்ற வல்லமை பெற்றிருக்கின்றது. எனவேதான், மத்திய அரசு இப் பொருள் குறித்துச் சட்டம் இயற்ருது விலக்களித்து நிற்கிறது.

1949ஆம் ஆண்டில் சென்னை ஷரீயத் சட்டம் இயற்றப்பட்டது. இதன் நோக்கம், விவசாய நிலங்களையும் இதில் உட்படுத்துவதாகும். வழக்கங்களும், வழக்காறுகளும் வேறுபட்டவையா யிருப்பினும், மேற் கூறிய பத்துப் பொருள்களைப் பொறுத்தவரையில், இசுலாமியர்களுக்கு ஷரீயத் சட்ட அடிப்படையில்தான் நீதி வழங்கப்படும். உயில்வழி உரிமை இறக்கம் (Testementary succession) பற்றி ஷரீயத் சட்டத் தில், 2ஆவது பிரிவில் கூறப்படவில்லை. ஆனல், ஷரீயத் சட்டத்தின் 3ஆவது பிரிவில் (1) உயில் (Wills) (2) உயில் வழிக்கொடை (Legacies) (3) மகவேற்பு (Adoption) ஆகிய மூன்று பொருள்களைப் பொறுத்த வரையில், விரும்பினல் இசுலாமிய சட்டத்தையோ, இல்லையென்ருல் குடும்ப வழக்கத்தையோ வழக்காறுகளையோ பின்பற்ற உரிமை வழங்கப் பட்டிருக்கிறது. பிரிவு 3-ல் கூறப்பட்டுள்ள மூன்று பொருள்களைப் பொறுத்தமட்டில், ஒரு முசுலிம், பிரமாணப் பத்திரத்தின் மூலம்

இம் மூன்று பொருள் குறித்தும் இசுலாமிய சட்டத்தையே பின்பற்றி நடப்பதாக வெளிப்படுத்தினால், அது அவரையும் அவருடைய சந்ததியினரையும் கட்டுப்படுத்தும். அதன் பின்னர், அவரும் அவருடைய வழித்தோன்றல்களும், தாம் பின்பற்றி வந்த வழக்கங்களையும் வழக்காறுகளையும் ஒழித்து, இசுலாமிய சட்டத்தையே பின்பற்ற வேண்டும். அப்படி வெளிப்படுத்தாத வரையில், இம் மூன்று பொருள்களைப் பொறுத்தவரை குடும்ப வழக்கம், வழக்காறுகளைப் பின்பற்றிக் கொள்ளலாம். பிரிவு 3-ல் கூறப்பட்ட பொருள்களைப் பொறுத்தமட்டில், ஒரு முசுலிம் தன்னுடைய விருப்பத்தை வெளிப்படுத்துவதன் மூலம்தான், இசுலாமிய சட்டம் அவனைக் கட்டுப்படுத்தும். ஆனால், பிரிவு 2-ல் கூறப்பட்ட பொருள்களைப் பொறுத்தமட்டில், ஒரு முசுலிம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், இசுலாமிய சட்டத்திற்கு உட்பட்டுத்தான் நடந்து கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில்தான் நீதிமன்றங்கள் நீதி வழங்கும். எனவே, 1937ஆம் ஆண்டின் ஷரீயத் சட்டம் இசுலாமிய சட்டத்திற்கு முரண்பட்டுச் செல்லும் எல்லா வழக்கங்களையும் வழக்காறுகளையும் முழுமையாக ஒழித்துவிட்டது என்று சொல்ல முடியாது. பிரிவு 2-ல் கூறப்பட்ட பத்துப் பொருள்களைப் பொறுத்த வரையிலும், இசுலாமிய சட்டத்திற்கு முரண்பட்ட வழக்கங்களும் வழக்காறுகளும் ஒழிக்கப்பட்டுள்ளன. பிரிவு 3-ல் கூறப்பட்ட மூன்று பொருள்களைப் பொறுத்த வரையில், ஒரு முசுலிம் விரும்பினால் இசுலாமிய சட்டத்தைப் பின்பற்றி நடக்கவும், விரும்பாவிட்டால் வழக்கங்களையும் வழக்காறுகளையும் பின்பற்றவும் உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. பிரிவு 2-ல் உள்ள பத்துப் பொருள்களும், பிரிவு 3-ல் உள்ள மூன்று பொருள்களும் நீங்கலாக மற்ற எல்லாவற்றையும் பொறுத்தவரையில் நீதி மன்றங்கள் இசுலாமிய சட்ட அடிப்படையில் நீதி வழங்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வழக்கங்களையும் வழக்காறுகளையும் அடிப்படையாக வைத்தும் நீதி வழங்கலாம்; நீதி, நியாய, நேர்மை மனச்சாட்சி அடிப்படையிலும் நீதி வழங்கலாம்.

மலபாரில் மாப்பிள்ளை (Mappillai) என்ற ஒரு வகுப்பார் இருக்கின்றனர். இவ் வகுப்பினர் இசுலாமியர் என்றாலும், இந்துமத வழக்கங்களையும் வழக்காறுகளையும் கடைப்பிடித்து வந்தனர். இவர்கள் இந்துக்களைப் போல், ஒருவிதக் கூட்டுக் குடும்ப முறையைப் (Joint Family) பின்பற்றி வந்தனர். இதன்படி, தாய் வழிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். இந்தக் குடும்பங்களில், குடும்பத் தலைவன் (தர்வாடு) இறந்துபோனால், அவனுடைய சொத்து மனைவிக்கோ குழந்தைகளுக்கோ வந்து சேராது. மாறாகச் சகோதரர்களுக்கும் தந்தைக்கும் போய்ச் சேரும். இது இசுலாமிய சட்டத்திற்கு மாறுபட்ட ஒன்று. மாப்பிள்ளை (Mappillai) வகுப்பாருக்கு என்று 1918-ல் மாப்பிள்ளை இறங்குரிமைச் சட்டம் (Mappilla Succession Act of

1918) என்றும், 1928-ல் மாப்பிள்ளை உயில் சட்டம் (Mappilla Wills Act, 1928) என்றும் இரு சட்டங்கள் இயற்றப்பட்டன. 1939-ல் மாப்பிள்ளை மருமக்கள் வழிச்சட்டம் (Mappilla Marumakkattayam Act of 1939) என்று ஒன்றும் இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் மூலம், வாரிசுகள் இசுலாமியச் சட்டப்படி தமது பங்கைக் கேட்டு அடைய வழி செய்யப்பட்டிருக்கிறது.

Abdul Rahiman *vs* Avooma.

(AIR 1956 Mad. 244)

ஒரு 'தர்வாடு' குடும்பத்தில் உள்ள மூன்று தர்வாடுகள் சேர்ந்து ஓர் உடன்படிக்கை எழுதி வைத்தனர். அதன்படி, ஒரு தர்வாடு இறந்தால், மற்ற இருவரும் அவரது பங்குக்கு உரிமையானவராவர். ஒரு தர்வாடு இறந்ததும், அவருடைய விதவையும் குழந்தைகளும் இசுலாமிய சட்டப்படி இறந்தவர் பங்கு தங்களுக்குச் சேர வேண்டும் என்று வழக்குத் தொடுத்தனர். மாப்பிள்ளை வகுப்பினர் வழக்கப்படியும், உடன்படிக்கைப்படியும் எஞ்சி இருக்கின்ற இரண்டு குடும்பத் தலைவர்களுக்கே இறந்தவரின் சொத்துச் சேருமே தவிர, இசுலாமிய சட்டப்படியுள்ள உயிலிலா உரிமை இறக்கத்தை (Intestate succession) அனுசரித்து விதவைக்கும் மக்களுக்கும் பங்கு கோரி, உரிமை கோர முடியாது என்று எதிர்வாதம் செய்யப்பட்டது.

மாப்பிள்ளை வகுப்பினர் வழக்கப்படி (Custom) சொத்து, கூட்டுக் குடும்பச் சொத்தாக இருப்பதால் (Joint family property) குடும்பத்தில் வாரிசுகள் பிறப்பதன் காரணமாகவும், இறப்பதன் காரணமாகவும் வாரிசுகளின் பங்கு கூடவோ குறையவோ வழி இருக்கிறது. இறந்தவர் தமது பங்கைத் தம்முடைய வாழ்நாளில் பிரித்து வாங்கி இருந்தால் அவருடைய குழந்தைகளும், விதவையும் இசுலாமிய சட்டத்தில் உள்ள உயிலிலா உரிமை இறக்கத்தை அனுசரித்துத் தங்கள் பங்கைப் பெற முடியும். ஆனால் இந்த வழக்கில் இறந்தவர் தம் பங்கைப் பிரித்து வாங்காததாலும், கூட்டுக் குடும்பச் சொத்தாக இருப்பதாலும், 1937ஆம் ஆண்டு ஷரீயத் சட்டம் பயன்படுத்தப்பட முடியாதிருப்பதாலும், சொத்துக்கு வாரிசுகள் யார் என்று நிர்ணயிப்பதிலும், அவர்களுடைய பங்குரிமையை நிர்ணயிப்பதிலும் வழக்கத்தை (Custom) அடிப்படையாக வைத்தும், மாப்பிள்ளை இறங்குரிமைச் சட்ட விதித் துறைகளுக்கு ஏற்பவும், மாப்பிள்ளை உயில் சட்டம், மாப்பிள்ளை மருமக்கள் வழிச் சட்டம் ஆகிய சட்டங்களின் விதித்துறைக்கேற்பவும் நீதி வழங்குவதே பொருத்தமானது என்று இந்த வழக்கில் முடிவு கூறப்பட்டது. ஆகவே விதவையும் மக்களும் இசுலாமிய ஷரீயத் சட்ட அடிப்படையில் பங்குபெற உரிமையுடையவராயினும், அவர்களுக்குப் பங்கு கிடைக்காமலே போயிற்று.

எனவே, மாப்பிள்ளை வகுப்பினர் 1939-ஆம் ஆண்டு மாப்பிள்ளை மருமக்கள் வழிச் சட்டம் கூறுவதுபோல், வழக்கத்தை விட்டுப் பிரிந்து, இசுலாமிய சட்ட அடிப்படையில் தங்களுடைய பங்குகளைப் பிரித்துப் பெற்றுலன்றி, இசுலாமிய சட்ட முறைப்படி உள்ள வாரிசுகளுக்கு அவருடைய பங்கில் உரிமை கோரமுடியாது.

Mohamed Sandhukhan vs Ratnam
(AIR 1958 Mad-144)

1937இல் இயற்றப்பட்ட முசுலிம் இனத்தவர் சட்டத்தைப் பயன் படுத்தும் சட்டம், அதில் கூறப்பட்ட பொருள்களைத் தவிர மற்ற விஷயங்களைப் பொறுத்தவரையில், முசுலிம்களுக்கு முசுலிம் சட்டமே பயன் படுத்தப்படவேண்டும் என்று கூறுவதாகக் கருத முடியாது. பிரிவு 2லும், 3லும் கூறப்பட்ட பொருள்களைத் தவிர மற்ற விஷயங்களில் நடைமுறையில் இருக்கும் வழக்கங்களையும் (Custom) வழக்காறுகளையும் (Usages) இச் சட்டம் ஒழித்துவிடவில்லை. இந்தச் சட்டம் உயில் எழுதாது விட்டுச் சென்றவர் சொத்துரிமையையும் அதிகாரத்தையும் மிகுதிப்படுத்தவில்லை. உயிலிலாச் சொத்தில் இசுலாமிய பரம்பரைச் சொத்துரிமைச் சட்டப்படி (Law of Inheritance) வாரிசுகளுக்குச் சொத்துரிமை இறக்கம் இருந்தால் ஷரீயச் சட்டத்தின் விதித்துறைகளுக்கு இணங்க வாரிசுகளுக்குப் பங்கு அளிக்கமுடியும். அப்படிப் பட்ட சந்தர்ப்பத்தில்மட்டும், இச் சட்டத்தின் விதித்துறைகளுக்கு மாறுபட்டுச் செல்லும் வழக்கங்களும் வழக்காறுகளும் எடுத்துக்கொள்ளப் படக் கூடாது. ஆனால், இந்துக்களின் கூட்டுக் குடும்ப முறையைப் பின்பற்றி வருவது குடும்ப வழக்கம் என்று முறையிட்டால், கூட்டுக் குடும்பச் சொத்தில் இறந்தவர் பங்கு பிரிக்கப்படாத பங்கு ஆகையால், இறந்தவர் பங்கு, வழக்கத்தை (Customs) அனுசரித்து, இருப்பவர் சொத்தில் இணைந்துவிடுவதால், அப்படிப்பட்ட வழக்கத்தை மெய்ப்பிக்க இடமளித்து அதன்படி நீதி வழங்கவேண்டும் என்று தீர்ப்பு அளிக்கப் பட்டது.

வடமேற்கு எல்லைப் புறத்திற்குத் தனியான ஷரீயத் சட்டம் 1935-ல் இருந்தே நடைமுறையில் இருப்பதால், 1937ஆம் ஆண்டு ஷரீயத் சட்டம் அங்குச் செல்லாது. அந்தச் சட்டத்தில் வேளாண்மை நிலம், தருமச் சொத்து ஆகியவற்றிற்கு விலக்கு அளிக்கப்படவில்லை என்பது மட்டுமன்றி உயில், உயில் வழிக்கொடை, மகவேற்பு ஆகிய பொருள்பற்றி அவரவர் விருப்புக்கும் அது விட்டுவிட வில்லை. 1935ஆம் ஆண்டின் சட்டம் 1937ஆம் ஆண்டின் சட்டத்தைவிடச் சிறப் பானது என்று கூறலாம். ஏனெனில், பிந்தியதில் இசுலாமியர்களுக்கு இல்லாத முக்கியமான பொருள்களைப்பற்றிய சட்டங்களும் முந்தியதில் வரையறுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

கோஜாக்கள் (Khojas)

கோஜா முசுலிம்கள் வணிகப் பரம்பரையினராவர். இவர்கள் 'ஷீயா' பிரிவைச் சேர்ந்தவர்கள். கோஜா முசுலிம்களும், கீழை இசுமாயிலீகளும் பெரும்பாலும் இந்து வழக்கத்தைப் (Custom) பின்பற்றி வந்தனர். எனவே, அவர்கள் வழக்கப்படி, உயில் மூலம் எல்லாச் சொத்தையும் விரும்பியவருக்குக் கொடுக்கமுடியும். அவர்களுடைய தலைவரான ஆகாகானுக்குக் கொடுக்கப்பட்ட சொத்துக்கள் அவருக்கே விரும்பிக் கொடுக்கப்பட்டவையே தவிர, அவர் கொடுத்தவர்களுடைய பொறுப்பாளராக (Trustee) அவற்றை நிர்வகித்து வரவில்லை. 1937 ஆம் ஆண்டின் ஷரீயத் சட்டம், பிரிவு 2-ல் கூறப்பட்ட பொருள்களைப் பொறுத்தமட்டில், இவர்களும் இசுலாமிய சட்டத்தையே பின்பற்ற வேண்டும். பிரிவு 3-ல் கூறப்பட்ட பொருள்களைப் பொறுத்தமட்டில், அவரவர் விருப்பம்போல் வழக்கத்தையோ, இசுலாமிய சட்டத்தையோ பின்பற்றலாம். வழக்கத்தை அனுசரித்து உயில்வழிச் சொத்து அளிக்கும் பொழுது, இந்துக்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கூட்டுக் குடும்பச் சொத்துப்பற்றிய கட்டு இல்லாதவராயும், முசுலிம்களுக்கு விதிக்கப்பட்டுள்ள முழுச் சொத்தில் மூன்றில் ஒரு பகுதியையே உயில் எழுதிவைக்க முடியும் என்ற கட்டும், வாரிசுகளுக்கு உயில் வழிக்கொடை அளிக்க முடியாது என்ற கட்டும் நீக்கப்பட்டவராகவும், தமது முழுச் சொத்தையும் யாருக்கு வேண்டுமானாலும் உயில் எழுதிவைக்க உரிமை பெற்றவராகவும் ஒரு கோஜா முசுலிம் இருக்கிறார். ஒரு கோஜா முசுலிம் உயிருடன் இருக்கும்பொழுதே, பிரிவு 3-ன் கீழ்த் தம்மை முசுலிம் என்று பிரகடனப் படுத்துவதன் மூலம், அவருக்கும் அவருடைய வாரிசுகளுக்கும், அதில் கூறப்பட்ட மூன்று பொருள்களான உயில், உயில்வழிக் கொடை, மகவேற்பு ஆகியவற்றிற்கு இசுலாமிய சட்டம் பயன்படுத்தப்பட வழி ஏற்படுகிறது. அவர் அவ்விதம் பிரகடனப் படுத்தவில்லை என்றால், அவருடைய சொத்து, வழக்கத்தை அனுசரித்து, இந்துக்களின் கூட்டுக் குடும்ப முறைப்படி, வாரிசுகளுக்குச் சொத்துரிமை இறக்கமாக வந்தடையும். எனவேதான் நீதிபதி ரஸ்ஸல் அவர்கள் (Russel J.) 'கோஜா ஒரு வாழும் முசுலிமாகவும் இறந்தபின் ஓர் இந்துவாகவும் இருக்கிறார்' என்று Rashid Karmali *vs* Sherban (29-Bom-85) என்ற வழக்கில் கூறியுள்ளார்.

போராக்கள் (Bohras)

போராக்களில் தாவூதி போராக்கள் (Dawoodi Bohras) இசுமாயிலீ போராக்கள் (Ismaili Bohras) என்ற இரு பிரிவினர் இருக்கின்றனர். இவர்கள் 'ஷீயா' பிரிவினரைச் சேர்ந்தவர்களாவர்; இந்துக்களாயிருந்து இவர்கள் மிகச் சமீப காலத்தில் இசுலாத்தைத் தழுவியவர்கள் ஆதலால், இந்து பழக்க வழக்கங்களையே பெரும்பாலும்

பின்பற்றி வந்தனர். உயிலிலா உரிமை இறக்கம் (Intestate succession) உயில்வழிச் சொத்துரிமை இறக்கம் (Testamentary succession) ஆகியவற்றில் இவர்கள் இந்து வழக்கங்களையே பின்பற்றி வந்தனர். 1937ஆம் ஆண்டின் ஷரீயத் சட்டம், பிரிவு 2-இல் கூறப்பட்ட பொருள்களைப் பொறுத்த வரையில் இவர்களும் இசுலாமிய சட்டத்தையே பின்பற்றவேண்டும். மற்ற விஷயங்களில் அவரவர் விருப்பத்தைப் பொறுத்து, இசுலாமிய சட்டத்தையோ வழக்கத்தையோ பின்பற்ற இவர்கள் உரிமை பெற்றவராவர்.

மேமன்கள் (Memons)

கச்சி மேமன், அலாய் மேமன் என்று இரு பிரிவினர் இருக்கின்றனர். இவர்கள் இசுலாமியர்களாயிருப்பினும் இந்து வழக்கத்தையே பின்பற்றி வந்தனர். வமிச வழிச் சொத்து (Inheritance), உரிமை இறக்கம் (Succession) ஆகியவற்றில் இவர்களும் இந்து வழக்கத்தையே பின்பற்றி வந்தனர். 1938-ல் இயற்றப்பட்ட கச்சி மேமன்கள் சட்டத்தில் (Cutchi Memons Act, 1938) பிரிவு 2-ல், வமிச வழிச் சொத்து (Inheritance), உரிமை இறக்கம் (Succession) ஆகியவற்றைப் பொறுத்த வரையில் எல்லாக் கச்சி மேமன்களுக்கும் இசுலாமிய சட்டத்தைப் பயன்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது. எனவே, இவர்களும் மற்ற முசுலிம்களைப்போல், ஷரீயத் சட்டத்திற்கு உட்பட்டவராவர்.

பொதுவாக முசுலிம் சட்டம், ஷரீயத் சட்டத்தில் கூறப்பட்ட பத்துப் பொருள்களைப் பொறுத்த சட்டத்தை முசுலிம்களுக்கு வழங்கியிருப்பதோடு, மற்ற விஷயங்களில் வழக்கங்களும் வழக்காறுகளும் பின்பற்றப்பட வகை செய்திருக்கின்றது. இந்த அடிப்படையில்தான் இந்திய நீதிமன்றங்கள் ஷரீயத் சட்டத்தையும், வழக்கங்களையும், வழக்காறுகளையும் பயன்படுத்தி நீதி வழங்கி வருகின்றன.

‘ஷரீயத்’ (Shariat) அல்லது பூர்ணத்துவத்திற்கு வழி

‘ஷரீயத்’ என்னும் சொல்லுக்குப் பூர்ணத்துவத்திற்கு வழி என்று பொருள் கொள்ளலாம். இது இந்து சட்டத்தில் உள்ள ‘தர்மம்’ என்ற சொல்லின் பொருளுக்குக் கிட்டத்தட்ட ஒத்து வருகிறது. இசுலாமிய சட்டப்படி, ‘ஷரீயத்’ என்னும் சொல் ஐந்து கட்டளைச் சொற்களைத் தன்னகத்தே அடக்கி நிற்கிறது. அவையாவன :

(1) பர்ழு (Farl) கட்டாயமாக்கப்பட்ட கடமைகள்.

(2) மந்தூப் (Mandub) ஆகும் என்று பணித்த கடமைகள்.

(3) ஜாயிஸ் (Jaiz) விரும்பினால் செய்வதற்கும், விரும்பாவிட்டால் செய்யாதிருப்பதற்குமான காரியங்கள்.

(4) மக்ருஹ் (Makruh) அருவருப்புள்ளவைகள்.

(5) ஹராம் (Haram) ஆகாதென்று விலக்கப்பட்டவைகள்.

இசுலாம் செயலை, இப்படி ஐந்து வகைகளாகப் பிரித்துக் கூறு கிறது. அவற்றைப் பின்பற்றி முசுலிம்கள் நடந்துகொள்ள வேண்டும். ஆனால் இந்திய ஷரீயத் சட்டப்படி மேற்கூறிய ஐந்தும் சட்டங்கள் என்று ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இந்தியாவில் ஷரீயத் சட்டம், 1937ஆம் ஆண்டு ஷரீயத் சட்டத்தில் கூறப்பட்ட பொருள்களையும், வழக்கங்களால் அங்கீகரிக்கப்பட்டவைகளையும், நீதி நியாய நேர்மை மனச்சாட்சி அடிப்படையில் தீர்ப்பு அளிக்கப்படுபவைகளையும் குறிக்கிறது.

இசுலாமியர் யார்?

இசுலாமிய ஷரீயத் சட்டம் இசுலாமியர்களுக்குப் பயன்படுத்தப் படவேண்டும் என்றால் இசுலாமியர் யார்? என்பது தெரிந்தால்தான் அவர்களுக்கு இச் சட்டத்தைப் பயன்படுத்தி நீதி வழங்க முடியும்.

பிறப்பால் முசுலிம்கள்

தாய் தந்தையர் இருவரும் இசுலாமியராயிருப்பின், அவர்களுடைய குழந்தைகளும் பிறப்பால் இசுலாமியர் ஆவர். பிறப்பால் இசுலாமியரா யிருப்போர், வெளிப்படையாகப் பிறமதம் எதையும் தழுவாத வரையில் இசுலாமியர்களாகவே கருதப்படுவர். பிறப்பால் இசுலாமியராயிருப்பவர் களுக்கு இசுலாமிய சட்டமே பயன்படுத்தப்பட வேண்டும். அப்படிப் பிறப்பால் முசுலிமாக இருப்பவரை, அவர் முசுலிம் அல்லர் என்று மறுத்துரைத்தால், அதை மெய்ப்பிக்க வேண்டிய பொறுப்பு முறையிடு வோரையே சார்ந்தது. பிறப்பால் முசுலிமாக இருப்பவர், பிற மதத் தைத் தாம் தழுவிவிட்டதாக வெளிப்படுத்தினால், அவர் முசுலிம் இல்லை என்பதற்கு அவருடைய உறுதிமொழி ஒன்றே போதுமானது. பிறவி முசுலிம் ஒருவர் வேறு மதத்தைத் தழுவினால், அவர் எந்த நோக்கத் திற்காக மாறினர், நல்ல எண்ணத்தோடு மாறினரா? உண்மையிலேயே மாறிவிட்டாரா? என்பதை யெல்லாம் சோதித்துப் பார்த்து முடிவுகட்ட வேண்டியதில்லை. அவருடைய கூற்றே சான்று பயப்பதாகும்.

பிறப்பால் முசுலிமாக இருந்த பெண், வழக்குரையிலும் (Plaint), மொழிகூறும் போதும் ஆண்டவனையும், முஹம்மது நபி அவர்களை யும், திருக் குர்ஆனையும் தான் ஒப்புக்கொள்ளவில்லை என்று கூறியதன் மூலம் அவள் இசுலாத்தைத் துறந்துவிட்டதாக நாம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஒரு வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது.

ஒருவரை முசுலிம் என்று ஏற்றுக்கொண்டால், அவருக்கு 'சுன்னீ' பிரிவினரின் சட்டம் பொருந்துமா, அல்லது 'ஷீயா' பிரிவினரின் சட்டம்

பயன்படுத்தப்படவேண்டுமா என்ற கேள்வி எழுகிறது. 'ஷீயா' முசுலிம் என்று தம்மை வெளிப்படுத்தி முறையிடாத வரையில், இந்திய முசுலிம்கள் 'சுன்னீ' முசுலிம்களாகக் கருதப்பட்டு, அவர்களுக்கு 'சுன்னீ' சட்ட அடிப்படையிலேயே நீதி வழங்கப்படுகிறது.

வழக்காடுவோர் இருவரும் 'சுன்னீ' பிரிவினராகவோ, அல்லது 'ஷீயா' பிரிவினராகவோ இருந்தால், அந்த அந்தப் பிரிவின் சட்ட அடிப்படையில் நீதி வழங்கப்படவேண்டும். வழக்காடுவோர் இருவரும் வெவ்வேறு பிரிவைச் சார்ந்தவராயிருப்பின், உயர்நீதி மன்றங்கள் பிரதிவாதி (Defendent) சார்ந்துள்ள பிரிவின் சட்ட அடிப்படையில் நீதி வழங்கும். மற்ற விஷயங்களில் நீதிமன்றங்கள் நீதி, நியாய நேர்மை மனச்சாட்சி அடிப்படையில் நீதி வழங்கும்.

'சுன்னீ' பிரிவினரிடையே உள்ள சிறு பிரிவினரான, ஹனபி, ஷாபி, ஹன்பலி, மாலிக் ஆகிய நான்கு பிரிவிலுள்ளவர்களும் விரும்பிஞல் ஒன்றிலிருந்து மற்றென்றுக்குத் தம்முடைய எண்ணத்தை வெளிப்படுத்துவதன் மூலம் மாறிக்கொள்ளலாம். இதில் தடையோ, கட்டுப்பாடோ கிடையாது. 'ஷீயா' பிரிவிலுள்ள சிறு பிரிவினரும் விரும்பிஞல் மாறிக்கொள்ளலாம் என்ருலும், இது சுன்னீ பிரிவிலுள்ளதைப் போல் எளிது என்று கூறுதற்கில்லை.

Narantha Avull *vs* Prakkal Mammu (1922)
(45 Mad 986)

திருமணத்திற்குப் பிறகு கணவர் 'அஹ்மதி' யாக மாறிவிட்டார். (காதியான் என்னும் ஊரில் பிறந்த அஹ்மது என்பவரை நபியாக ஒப்புக்கொள்ளும் ஒரு கூட்டத்தினர்.) அவரை முசுலிம் மதத்திலிருந்து மாறிவிட்டவராகக் கருதி, அவருடைய மனைவி வேறு ஒரு முசுலிமை மணந்து கொண்டாள். அஹ்மதியாக மாறிவிட்ட கணவர், 'எங்கள் இருவர் திருமணமும் இன்றும் நீடித்திருப்பதால், இவள் இரண்டாம் திருமணம் செய்துகொண்ட குற்றத்திற்கு ஆளாகிருள்' என்று வழக்குத் தொடர்ந்தார்.

இசுலாமிய சட்டப்படி ஒருவர் மதம் மாறிஞல், திருமணம் முறிந்துவிடுகிறது. 'அஹ்மதியாக' மாறியதன் மூலம் இசுலாத்தைத் துறந்தவராகிருர். எனவே, மனைவி இரண்டாம் திருமணம் (Bigamy) செய்த குற்றத்திற்கு ஆளாகாள் என்றும், கணவன் இசுலாத்தைத் துறந்ததன் மூலம் திருமணம் முறிந்துவிட்டது என்ற நன்னம்பிக்கையில் வேறு ஒருவரை மணந்து கொண்டதால் இ. பி. கோ. 79-ஆவது பிரிவின்கீழ் இதற்கு விலக்கு அளிக்கப்படவேண்டும் என்றும் எதிர்வாதம் செய்தனர். மாவட்ட நீதிபதி (District Judge) எதிர்த் தரப்பு வாதத்தை ஏற்று,

அவள் குற்றமற்றவள் என்று தீர்ப்பு அளித்தார். மேல் வழக்காகச் சென்னை உயர்நீதி மன்றத்திற்கு அது எடுத்துச் செல்லப்பட்டது.

ஒருவன் தன்னை இசுலாமியன் என்று வெளிப்படுத்தி, 'ஆண்டவன் ஒருவனே, அவன் திருத்தூதர் முஹம்மது நபி அவர்கள்' என்று நம்பிக்கை கொண்டால் அவன் முசுலிம் என்றும், 'அஹ்மதியாக' மாறியதன்மூலம் இசுலாத்தைத் துறந்தவன் ஆகமாட்டான் என்றும், எனவே திருமணம் முறிவு பெறவில்லை என்றும் சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது.

பாட்னு உயர்நீதி மன்றமும், ஒரு முசுலிம் 'அஹ்மதியாக' மாறுவதன்மூலம் இசுலாத்தைத் துறந்தவனாக அவனைக் கருத முடியாது என்ற முடிவைத் தந்துள்ளது.

சந்தேகம் எழும்போது, 'சுன்னத்' (Circumcision) செய்யப்பட்டதா? இசுலாமிய மூலதத்துவத்தை ஒப்புக்கொள்கிருரா? முசுலிம் மதச் சம்பிரதாயச் சடங்குகளைப் பின்பற்றுகிருரா என்பனவற்றைக் கருத்திற்கொண்டு, முசுலிமா? என்கிற முடிவுக்கு வரலாம்.

பெற்ருேர்கள் முசுலிம் என்ருல் குழந்தைகளும் முசுலிம்களே. தாயோ தந்தையோ மட்டிலும் முசுலிமாக இருந்தாலும், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை முசுலிமாகக் கருதப்படவேண்டும் என்று கூறுகிறது இசுலாமிய சட்டம்.

தழுவல் முசுலிம்கள்

பிற மதத்தவர் இசுலாத்தைத் தழுவிக்கொள்வதன்மூலம், அவர்களும் இசுலாமியர் ஆகின்றனர். இசுலாத்தைத் தழுவிய நேரம் முதற்கொண்டு இசுலாமிய சட்டம் அவர்களுக்குப் பயன்படுத்தப்படவேண்டும். பிற மதத்தவர் இசுலாத்தைத் தழுவிக் கொள்வது, விட்டு வந்த மதத்தின் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ளுதற்கோ, சட்ட வஞ்சனையின் பொருட்டோ இருக்கக்கூடாது. நன்னம்பிக்கையோடு தழுவி வந்திருக்க வேண்டும். பதினைந்து வயதுக்கு மேற்பட்டவர்கள் இசுலாமிய சட்டப்படி உரிமை வயது வந்தவர்களாகக் கருதப்படுவதால், 15 வயதிற்கு மேற்பட்ட பிற மதத்தினர் இசுலாத்தைத் தழுவினுல், வயதுவராதவர் இசைவு சட்டப்படி செல்லாது என்று கூற முடியாது.

In *re* Mahommad Alam
(Air 1939 Sind 310)

பதினேழு வயதான ஒரு இந்துப் பெண், இசுலாத்தின் மூலதத்துவங்களைப் புரிந்து தானுகவே விரும்பி இசுலாத்தைத் தழுவினுள். அவள்

பதினெட்டு வயது எய்தப் பெருதவள் என்பதால், இசுலாத்தைத் தழுவியது செல்லாது என்ற வாதம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

Skinner *vs* Orde (1871)
(14 MIA-309)

ஸ்கின்னர் கிறித்தவ முறைப்படி ஹெலனைத் திருமணம் செய்தார். இருவருக்கும் விக்டோரியா என்ற குழந்தை பிறந்தது. ஸ்கின்னர் இறந்ததும், விதவையான ஹெலன் தாமஸ்ஜான் என்பவரோடு உறவு கொண்டாள். தாமஸ்ஜானுக்கு ஏற்கெனவே ஒரு மனைவி இருந்தாள். கிறித்தவ மதச்சட்டப்படி தாமஸ்ஜான் இரண்டாந்திருமணம் செய்து கொள்ளமுடியாது. இசுலாமிய சட்டம், பல் மனைவியருடைமையை (Polygamy) அனுமதிக்கிறது. கிறித்தவ மதச் சட்டப்பிடிப்பிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, ஜானும் விதவை ஹெலனும் இசுலாத்தைத் தழுவினர். இசுலாமிய சட்டமுறைப்படி திருமணம் செய்துகொண்டனர்.

சட்ட வஞ்சனைக்காக இருவரும் மதம் மாறிக் கொண்டதால், இரண்டாவது நடைபெற்ற இசுலாமிய சட்டப்படி உள்ள திருமணம் செல்லாது என்று பிரிவி கவுன்சில் (Privy Council) தீர்ப்பு வழங்கியது.

விதவை ஹெலன் இசுலாத்தைத் தழுவியதை அடுத்து, மகள் விக்டோரியாவும் இசுலாத்தைத் தழுவினுள். இசுலாமிய கொள்கைப் படி விக்டோரியா வளர்க்கப்படவேண்டும் என்று தாய் விரும்பினுள். ஆனுல், தந்தையின் (ஸ்கின்னரின்) உறவினர்கள் விக்டோரியாவைக் கிறித்துவ முறைப்படி வளர்க்கும் பொருட்டு, கிறித்தவப் பள்ளி ஒன்றில் சேர்த்தனர்.

தந்தை தாய் இடையே மதமாற்றம் ஏற்படின், குழந்தையைத் தந்தையின் மதச்சட்ட அடிப்படையில் வளர்க்க அனுமதிப்பதே சரியானது என்று பிரிவி கவுன்சில் தீர்ப்பு அளித்தது.

கணவன் இருக்க, மனைவி மட்டிலும் இசுலாத்தைத் தழுவி வந்து, விட்டு வந்த கணவன் உயிருடன் இருப்பது வரையில், இசுலாமிய சட்ட அடிப்படையில் அப் பெண் வேருெருவரை மணந்து கொள்ள முடியாது. (26 Mad LJ. 260)

Skinner *vs* Skinner (1897)
(25 Cal 538)

ஸ்டுவர்டுஸ்கின்னர், சார்லட்பிளேக் என்பவரின் மகளை மணந்தார். பின்னர் இருவரும் இயல்பாகவும், தன்னிச்சையாகவும் இசுலாத்தைத் தழுவினர். இருவரும் மனவேறுபாடு காரணமாகப் பிரிந்துவாழ்ந்தனர்.

கணவன் திருமண முறிவு செய்து விட்டதாக பிளேக் சொன்னாள். ஆனால், கணவன் இதை ஒப்புக்கொள்ளவில்லை. இது இவ்வாறிருக்க, கணவன் சோபியா என்ற பெண்ணைத் திருமணம் செய்து, ஆறு குழந்தைகளைப் பெற்றெடுத்தான். பிளேக்கிற்கு எந்தப் பங்கும் கொடுக்காமல், குழந்தைகளுக்குச் சொத்துக்களை 'உயில்' எழுதிவைத்தான்.

'என்னை ஸ்டுவர்டின் மனைவியாகக் கருதி இசுலாமிய சட்டப்படியுள்ள $\frac{1}{8}$ பங்கையோ, அல்லது கிறித்தவ சட்டப்படி $\frac{1}{3}$ பங்கையோ, எனக்குக் கொடுக்கவேண்டும்—உயில் செல்லாது' என்று முறையிட்டாள்.

இருவரும் மனமொத்து, சட்ட வஞ்சனையின்றி, திருமணத்திற்குப் பின்னர் மதம் மாறினால் முன்னைய திருமணத்தால் ஏற்பட்ட விளைவுகளையும் உரிமைகளையும் அது மாற்ற வல்லதா என்பது ஒரு முக்கிய கேள்வியே என்று பிரீவி கவுன்சில் கருத்துத் தெரிவித்துள்ளது. எனவே இந்தக் கேள்விக்கு இந்த வழக்கில் விடை கிடைக்காமற் போயிற்று. தம்பதிகள் மனமொத்து மதம் மாறினால், மாறிவந்த மதத்தின் சட்ட முறைப்படி திருமணம் செய்து கொள்வது செல்லுமா செல்லாதா என்பதற்கும் விடை கிடைக்கவில்லை.

சொத்துரிமை இறக்கத்தைப் பொறுத்த வரையில், சொத்தை விட்டுச்சென்றவர் இறக்கும் பொழுது எந்த மதத்தவராய் இறந்தார் என்று பார்த்து அந்த மத அடிப்படையில் சொத்துக்களை வாரிசுகளுக்குப் பங்கிட்டுத்தரவேண்டும். உயில் செல்லாது; கிறித்துவ சட்ட முறைப்படி பிளேக்கிற்கு பங்கு கொடுக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

Mitter Sen Singh *vs* Maqbul Hasan Khan (1930)
(57 IA 313)

இந்து கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த ஜகதீவ் சிங் இசுலாத்தைத் தழுவினார். அவருக்கு ஆகா ஹசன்கான் என்ற ஒரு மகன் இருந்தார். அவருக்குக் குழந்தைகளும், குழந்தைகளின் வழித் தோன்றல்களும் இருந்தனர். மித்தர் சென், ஜகதீவ் சிங்கின் சகோதரர் ஆவார்.

சாதித் தகவின்மை ஒழிப்புச் சட்டத்தின் (Caste Disabilities Removal Act) விதிகளுக்கிணங்கத் தமக்குச் சொத்து வந்து சேர வேண்டும் என்பது மித்தரின் வாதமாகும்.

சாதித் தகவின்மை ஒழிப்புச் சட்டத்தில் சாதி மாறியவருக்கு மட்டுமே பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. பிறர் அதைக் காரணம் காட்டி அதன் நிழலில் வந்து ஒதுங்கமுடியாது. வழக்கம் (custom) எதுவும் மெய்ப்பிக்கப்படவில்லையென்றால், பிற மதத்திலிருந்து இசுலாத்

தைத் தழுவி இசுலாமியராக இறந்தால், அவருடைய வாரிசுகளுக்கு இசுலாமிய சட்ட அடிப்படையிலேயே பங்கிட்டுக் கொடுக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

பிற மதத்திலிருந்து இசுலாத்தைத் தழுவி, இசுலாமியராக இறந்தால், இசுலாமிய சட்டப்படி உள்ள வாரிசுகளுக்கே சொத்துச் சேரும்.

எடுத்துக்காட்டாக, ஓர் இந்து இசுலாத்தைத் தழுவும்பொழுது, சகோதரர்களையும், தமக்குப் பிறந்த குழந்தைகளையும் விட்டுவிட்டு, முசுலிம் பெண்ணை மணந்து அதன்மூலம் குழந்தைகளை விட்டுச்சென்று, இறக்கும்பொழுது முசுலிமாக மரித்திருந்தால், முசுலிம் பெண்ணுக்குப் பிறந்த குழந்தைகளுக்கும் விதவைக்குமே சொத்துச் சேரும். இந்து மதத்தில் விட்டுவந்த வாரிசுகள் சொத்துரிமை பெறமுடியாது.

Rex *vs* Hammersmith
(I. K. B. 634)
In *re* Mir Anwarudhin

இங்கிலாந்து சென்றிருந்த டாக்டர் மீர் அன்வாருத்தீன் ஓர் ஆங்கில மாதைக் கிறித்தவச் சட்டப்படி மணந்துகொண்டார். மனைவி டாக்டரைக் கைவிட்டு விட்டாள். டாக்டர் இந்தியா திரும்பினார். தம்முடைய ஆங்கிலேய மனைவியைத் தம்முடன் வந்து வாழ்க்கை நடத்துமாறு ஆணையிடக் கோரி வழக்குத் தொடர்ந்தார். நீதிமன்றம், கணவனும் மனைவியும் மீண்டும் முன்போலத் தாம்பத்திய உறவுடன் வாழுமாறு ஆணையிட்டது. டாக்டர், மனைவிக்கு இந்த ஆணையைத் தெரிவித்தார். பதில் எதுவும் வரவில்லை. பின்னர், இசுலாமிய சட்டப்படி அவளைத் திருமண முறிவு செய்துவிட்டதாக அவளுக்கு அவர் அறிவித்தார்.

டாக்டர் திரும்பவும் இங்கிலாந்து சென்றார்; வயலெட் என்ற வேறொரு பெண்ணை மணந்தார். அங்குள்ள சட்டமுறைப்படி, திருமணச் சான்றிதழ் பெற, திருமண அதிகாரிக்கு மனுப் போட்டார். அதிகாரி சான்றிதழ் கொடுக்க மறுத்துவிட்டார்.

ஆங்கிலச் சட்டப்படி, தம்பதிகளில் ஒருவர் தன்னிச்சையாகத் திருமண முறிவு செய்துகொள்ள முடியாது. ஆனால், இசுலாமிய சட்டப்படி கணவன் தன்னிச்சையாகத் திருமண முறிவு செய்யமுடியும். திருமணம் இங்கிலாந்து சட்டமுறைப்படி நடந்ததால், இசுலாமிய சட்டமுறைப்படி திருமண முறிவு செய்தது செல்லாது. கணவன் இந்திய நீதிமன்றத்திலோ, இங்கிலாந்து நீதிமன்றத்திலோ, வழக்குத் தொடர்ந்து நீதிமன்ற ஆணை பெற்று, திருமண முறிவு செய்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாததால், டாக்டர் அன்வாருத்தீனுக்குத் திருமணச் சான்றிதழ் கொடுக்க மறுத்தது சரியானதே என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

Khambatta *vs* Khambatta (1935)

(59 Bom 278)

கிரேண்ட் என்ற பெண்ணை, குலாம் முஹம்மது இப்ருஹீம் என்ற இந்தியர், ஸ்காட்லாந்து சட்ட முறைப்படி திருமணம் செய்தார். தம்பதிகள் ஸ்காட்லாந்திலிருந்து இந்தியா திரும்பினர். மனைவி சுயமாகவும், தன்னிச்சையாகவும் இசுலாத்தைத் தழுவினாள். சிறிது காலம் கழித்து இப்ருஹீம் இசுலாமிய சட்டப்படி அவளைத் திருமண முறிவு செய்தார். அவளும் குறித்தவகை மாற்றீடு சட்டத்தின் 42ஆவது பிரிவின்படி (S 42 of Specific Relief Act) நீதிமன்றத்தில் மனுப் போட்டு, நீதிமன்ற ஆணை (Decree) வாங்கிக்கொண்டாள்.

பின்னர், கிரேண்ட், சிறப்புத் திருமணச் சட்டத்தின் கீழ் (Special Marriage Act) கம்பட்டா என்பவரை மணம் செய்துகொண்டாள். இக் கணவனுடன் வாழப் பிடிக்காததால், பிறன்மனை புணர்தல் (adultery), கொடுமை (cruelty) ஆகிய காரணங்களின் அடிப் படையில், நீதிமன்றத்தில் இவனிடத்திருந்து திருமண முறிவு கோரினாள். கம்பட்டா தரப்பு வாதம் என்னவென்றால், முந்திய கணவன் இசுலாமிய சட்டப்படி இவளுக்குச் செய்த திருமண முறிவு செல்லாது என்பதாகும். இக்கூற்றுக்கு ஆதாரமாக 'டாக்டர் மீர் அன்வாருத்தீன்' வழக்கு எடுத்துக்காட்டப்பட்டது.

இவ் வழக்கில் மனைவி தன்னிச்சையாக இசுலாத்தைத் தழுவிக் கொண்டதாலும், கிறித்தவச் சட்ட சம்பிரதாயங்களை அவள் முன்னமே துறந்துவிட்டதாலும், இப்ருஹீம் இவளுக்கு இசுலாமிய சட்ட முறைப் படி செய்த திருமண முறிவை நீதிமன்ற ஆணை பெற்று ஊர்ஜிதம் செய்திருப்பதாலும், இசுலாமிய சட்டப்படி செய்த திருமண முறிவு செல்லும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

In *re* Ramkumari (1891)

(18 Cal 264)

தம்பதிகள் இந்து மத முறைப்படி திருமணம் செய்துகொண்ட பின்னர், மனைவிமட்டும் இசுலாத்தைத் தழுவுவதால், முந்திய திருமணம் முறிந்துவிடாது. தன்னுடைய இந்துக் கணவன் உயிரோடிருக்கும் பொழுது, வேறு ஒரு இசுலாமியரைத் திருமணம் செய்தால், முதல் திரு மணம் நீடித்து இருப்பதால், இது இரண்டாம் மறுமணம் ஆகும். எனவே இ.பி.கோ. பிரிவு 494ன்படி, இரண்டாம் மறுமணம் (Bigamy) செய்த குற்றத்திற்கு இவள் ஆளாவாள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

கல்கத்தா, பம்பாய், சென்னை உயர்நீதிமன்றங்களின் தீர்ப்பும், தம்பதிகளில் 'ஒருவர் மதம் மாறுவதால்மட்டும் முதல் திருமணம்

முறிந்துவிடாது என்றும், எந்த மதச் சட்டப்படி முதல் திருமணம் நடந்ததோ அந்த மதச் சட்டப்படியே திருமண முறிவும் செய்துகொள்ளப்பட வேண்டும் என்றும், இந்து, முசுலிம் சட்டப்படி முதல் திருமணம் நிலையாக இருக்கும் பொழுது, மனைவி இரண்டாம் மறுமணம் புரிந்தால் தண்டனைக்குள்ளாக்கப்படுவாள் என்றும் கூறுகிறது.

Raja Deedar Hussain *vs* Rani Zoohoorunisa (1841) (2 MIA 411)

ஒரு ஷியா ஜமீன்தார் இரண்டு ஆண் மக்களை வாரிசாக விட்டுச் சென்றார். மூத்த மைந்தன் தன்னுடைய பகுதிச் சொத்தைத் தன் மனைவிக்கு அறுதி ஆவணத்தின் (settlement) மூலம் கொடுத்து விட்டான். இவன் இறந்ததும், இளையவன் அந்தச் சொத்து முழுதும் தனக்கே சேரவேண்டும் என்று உரிமை கோரினான்.

ஷியாப் பிரிவினரின் வழக்கப்படி (custom) அறுதி ஆவணம் செல்லும் என்று முடிவு கட்டப்பட்டது. இந்த வழக்கில் வாரிசுகளுக்கு 'சுன்னி' சட்ட அடிப்படையில் சொத்தைப் பங்கிட்டால், சகோதரனுக்கு ஒரு பங்கு சேரும். ஆனால், ஷியாப் பிரிவினரின் சட்டப்படி பங்கிட்டால், சகோதரனுக்குப் பங்கு கிடைக்காது.

இந்தியாவில் வாழும் முசுலிம்களில் பெரும் பகுதியினர் சுன்னி பிரிவைச் சார்ந்தவர்கள். ஷியாப் பிரிவினர் மிகக் குறைவே. ஆதலால், இந்திய முசுலிம்கள் அனைவருக்கும் சுன்னி சட்ட அடிப்படையிலேயே நீதி வழங்கப்படவேண்டும் என்று கோரப்பட்டது.

பிரிவிகவுன்சில் இந்த வாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. சுன்னி பிரிவினருக்கு 'சுன்னி' சட்டப்படியும், ஷியாப் பிரிவினருக்கு 'ஷியா' சட்டப்படியும் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று அது முடிவு கூறிற்று.

Hayathunnisa *vs* Mohomed (1890) (12 All-290)

இவ் வழக்கில், இறந்தவர் சொத்துக்குத் தாய்மாமன் வழித்தோன்றல்களும் தந்தையின் சகோதரனின் வழித்தோன்றல்களும் சொத்துரிமை கோரினர். ஷியா சட்டப்படி பின்னுள்ளவருக்குப் பங்கு கிடைக்காது; சுன்னி சட்டப்படி முன்னுள்ளவருக்குப் பங்கு கிடைக்காது.

இறந்தவர் முதலில் சுன்னி பிரிவினராக இருந்து, பின்னர் ஷியா ஒருவரை மணமுடித்துத் தாமும் ஷியா பிரிவினராகி, அவர் இறந்த

பின்னர்த் திரும்பவும் சுன்னீ பிரிவினராய் மாறி இறந்தார். இறுதியாக அவர் சுன்னீ பிரிவினராக இறந்ததால், சுன்னீ பிரிவினரின் சட்ட அடிப்படையிலேயே வாரிசுகளும் அவரவருக்குரிய பங்குகளும் நிர்ணயிக்கப்படவேண்டும் என்று முடிவு கூறப்பட்டது. ஒரு முசுலிம் தம் விருப்பம்போல் ஒரு பிரிவிலிருந்து மற்றொரு பிரிவுக்கு மாறிக் கொள்ளலாம் என்பதற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டு.

Md. Ibrahim *vs* Gulam Ahmed (1864)
(1 Bom H.C.R.)

'ஷாபி' பிரிவைச் சேர்ந்த பெண், 'ஹனபி' பிரிவுக்கு மாறியதை எழுத்து மூலம் பம்பாயிலுள்ள 'காஜி' (Kazhi)க்குத் தெரியப்படுத்தி விட்டுத் தன் தந்தையின் விருப்பத்திற்கு மாறாக வாதியைத் திருமணம் செய்துகொண்டாள். பின்னர்த் தந்தையின் தூண்டுதலால், மனைவி கணவனை விட்டுப் பிரிந்து வாழ நேரிட்டது. மனைவியைப் பிரிந்து வாழத் தூண்டியதாக மாமனார்மீது நட்டஈடு கோரி, அந்தக் கணவர் வழக்குத் தொடர்ந்தார்.

'ஷாபி' சட்டப்படி, ஒரு பெண் உரிமை வயது எய்தப் பெற்றவளாயிருப்பினும், அவளுடைய திருமணத்திற்குத் தந்தையின் இசைவு அவசியம் தேவையாகும். ஹனபி சட்டப்படி, வயது வந்த பெண்களுக்குத் தந்தையின் இசைவு தேவையில்லை. தாங்கள் 'ஷாபி' பிரிவினரைச் சார்ந்தவர்கள் என்றும், தந்தையின் இசைவின்றி நடந்த அத் திருமணம் செல்லாது என்றும் தந்தையின் தரப்பில் வாதாடப்பட்டது. அவள் 'ஹனபி' பிரிவுக்கு வந்ததற்கு அடையாளமாகக் காஜிக்கு அனுப்பப்பட்ட கடிதம் நல்ல ஆதாரமாக இருப்பதால், ஹனபி சட்டப்படி திருமணம் நடத்தப்பட்டது மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது; அதற்குத் தந்தையின் இசைவு தேவையில்லை; எனவே, திருமணம் செல்லும்; தந்தை நட்டஈடு கொடுக்கவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

2. திருமணம் அல்லது நிக்காஹ் (Marriage)

இசுலாமியர் சட்டப்படி திருமணம் என்பது காலவரையறையற்ற ஆண்-பெண் வாழ்க்கை ஒப்பந்தமாகும். ஒப்பந்த அமைப்புகளையும் தன்மைகளையும் இசுலாமியத் திருமணத்தில் காணலாம். ஆயினும், அது வெறும் ஒப்பந்தமாக மட்டும் நின்றுவிடாது, மணமக்களுக்குச் சில அந்தஸ்துகளையும் கொடுத்து நிற்கிறது. இந்த அந்தஸ்து இவர்களுக்கு மட்டுமன்றி, இவர்களுடைய வழித்தோன்றல்களுக்கும் கிடைக்கப் பெறுகின்றது. ஆகவே, இசுலாமிய சட்டப்படி திருமணம் என்பது ஆண்-பெண் ஆகிய இரு பாலாரிடையேயும் ஏற்படுத்திக்கொள்ளப்படும் வாழ்க்கை ஒப்பந்தம் என்றாலும், ஒப்பந்தம் செய்துகொள்வோருக்கும் அவர்களுடைய வழித்தோன்றல்களுக்கும் அது சமுதாயத்தில் ஓர் அந்தஸ்தை ஏற்படுத்துகிறது. இதன் காரணமாகத் தாய் வயிற்றுக் குழந்தைகள்கூடச் சில உரிமைகளைப் பெற முடிகிறது.

இசுலாமியக் கொள்கை மற்றும் கோட்பாட்டின்படி, ஒவ்வொரு முசுலிமும் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்று வற்புறுத்திக் கூறப்படுகிறது. திருமணம் இந்த உலக ஆசாபாசங்களுக்குப் பயன் தருவதோடு, மறு உலக வாழ்விற்கும் பயன்தரும் என்று இசுலாம் போதிக்கிறது. துறவறத்தை இசுலாம் விரும்பவில்லை. திருமணமாகிக் குடும்பம் நடத்துவதே ஒவ்வொரு முசுலிமுக்கும் இன்றியமையாக் கடனென்பது இசுலாத்தின் அறிவுறுத்தலாகும்.

மேல்நாட்டு ஆங்கிலேயரின் கொள்கைப்படி, திருமணத்தின்மூலம் ஆண் பெண் இருவரின் உரிமைகளும் ஒன்றுகலந்து விடுவதால், இருவரும் சட்டத்தின் முன்னால் ஒருவராகக் கருதப்பட்டனர். முசுலிம்களின் கருத்து இதற்கு முரணானது ஆகும். இசுலாத்தின் கொள்கைப்படி, கணவன் மனைவியின் சொத்தைத் தனக்கு உரிமையாக்கிக் கொள்ள முடியாது. வாழ்க்கையில் இருவரும் ஒருவரே யாயினும், சட்டத்தின் முன்னால் இருவரும் இருவரே. அவரவர் உரிமைகளும் சட்டத்தால் பேணப்படவேண்டும் என்பதே இசுலாமியச் சட்டம்.

மனைவியின் கடமைகளும், கணவன் மனைவிமீது செலுத்தத்தக்க அதிகாரங்களுங்கூட வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன.

பேராசிரியர் பெய்லி (Baillie) அவர்கள் இசுலாமியத் திருமணத்தைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது, அதன் நோக்கம் என்னவென்றால், 'உரிமைகளை அனுபவிப்பதும், மகப்பேற்றைப் பெறுவதும் ஆகும்' என்று எழுதுகிறார்.

'நிக்காஹ்' என்பது இருபாலாரின் (ஆண், பெண்) பால்சேர்க்கையைக் குறிக்கிறது. சட்டத்தில் அதுதான் திருமணம் என்று 'ஹிதாயா' கூறுகிறது.

எனவே, இசுலாமியர் சட்டப்படி திருமணம் என்பது காலவரையறையற்ற இருபாலாரின் வாழ்க்கை ஒப்பந்தம் ஆகும். அதன் நோக்கம், ஆண் பெண் சேர்க்கையைச் சட்டப்படி உரித்தாக்குவதும், மகப்பேற்றைப் பெறுவதும், வழித்தோன்றல்களுக்குச் சட்டப்படி உரிமை வழங்குவதும், சமுதாயத்தில் ஆண் – பெண் வாழ்க்கை முறையில் ஒழுங்கினை ஏற்படுத்துவதும், கணவன் – மனைவிக்கும், அவர்தம் மக்களுக்கும் உரிமை என்ன, கடமை என்ன என்று வரையறுப்பதுமாகும்.

இசுலாமியர் சட்டப்படி திருமணம் ஓர் ஒப்பந்தமாகக் கருதப்படுவதால், மதச்சடங்குகள் சம்பிரதாயங்கள் எதுவும் இல்லாமலே திருமணம் நடைபெற முடியும். இந்தியாவில் உள்ள இசுலாமியர் திருமணங்களில் சில சமயச் சம்பிரதாயங்களும் சடங்குகளும் இடம்பெறுவதைக் காணலாம். சுற்றுவட்டாரப் பழக்க வழக்கங்கள் பின்பற்றப்பட்டு, அங்கங்கு வழக்கிலுள்ள சடங்குகள் தொடர இன்றைய இசுலாமியத் திருமணங்கள் நடைபெறுகின்றன. இந்தியாவில் இசுலாமியத் திருமணங்கள் எப்படி நடைபெறுகின்றன என்று முதலில் பார்ப்போம்.

இசுலாமியச் சட்டப்படி மணமகளோ, அவளது ஏஜெண்டோ, மணமகனோ, அவரது ஏஜெண்டோ, இரு சாட்சிகள் முன்னிலையில் இசைவு தெரிவிக்கவேண்டும். இந்தியாவில் 'பர்தா' முறை நடைமுறையில் இருப்பதால், பெண்கள் வெளியே வந்து தம் இசைவினை வெளிப்படுத்துவது இல்லை. மணவிழாவின்போது, மணமகளின் தந்தையோ அல்லது அவரை ஒத்த நெருங்கிய உறவினரோ இரு சாட்சிகளைத் தம்முடன் அழைத்துக்கொண்டு, மணமகள் இருக்கும் இடம் சென்று, 'மணமகன் உன்பொருட்டாக மஹர்த் தொகை (இவ்வளவு) தந்து, உன்னைத் திருமணம் முடிப்பதாகச் சொல்கிறார். உனக்குச் சம்மதமா?' என்று உடன் வந்த இரு சாட்சிகளின் காதிலும் விழுமாறு கேட்பார். அவள் சம்மதம் என்று வாயால் சொல்லவோ, அல்லது அதற்கு

அறிகுறியாகச் சம்மதித்துத் தலை அசைக்கவோ செய்தால், உள்ளே சென்ற மூவரும் வெளியே வந்து 'முல்லா' முன்னிலையில் அமர்வர். பின்னர் 'முல்லா' அவர்கள் 'இந்தப் பெண்ணை (இவ்வளவு) மஹருக்குத் திருமணம் செய்துகொள்ளச் சம்மதமா?' என்று மாப்பிள்ளையிடம் கேட்பார். சம்மதம் என்று அந்த மாப்பிள்ளை சொன்னால், உள்ளே சென்றுவந்த உறவினரிடம் பெண்ணின் விருப்பம் என்ன என்று கேட்பார். இரண்டு சாட்சிகள் முன்னிலையிலும் அவர் பெண்ணின் சம்மதத்தைத் தெரிவிப்பார். முல்லாவினிடம் வந்து பெண்ணின் சம்மதத்தைத் தெரிவிப்பவர் மணமகளின் இசைவுபெற்ற ஏஜெண்டுதானா என்று சந்தேகம் எழுந்தால், சாட்சிகள் முன்னிலையில் கேள்விகள் கேட்டு, ஐயம் நீங்க உறுதிப்படுத்தி, மணமகன் தரப்பிலும் மணமகள் தரப்பிலும் முழுச் சம்மதம் கிடைத்த பின்னர், அவர் வாழ்த்துக்கூற, திருமணம் முற்றுப் பெறுகிறது. திருமணத்தின்போது சாட்சிகள் இருவர் இருந்தனர் என்பது மட்டும் போதாது, மேற்கூறிய நிகழ்ச்சிகள் அனைத்தும் நடைபெற்றன என்று மெய்ப்பிக்கப்பட்டால் தான் திருமணம் நடந்ததற்குத் தக்க சான்று அமையும் என்று ஒரு வழக்கில் பெஷாவர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது (AIR 1940 Peshawar-2).

பெரும்பாலான ஊர்களிலும் 'நிக்காஹ்' பதிவுப்புத்தகம் ஒன்று வைத்திருக்கின்றனர். அதில் திருமணம் நடைபெறும் நாள், கிழமை, மணமக்களின் பெயர், அவர்களுடைய தந்தையின் பெயர்கள் முதலியவற்றை எழுதி, இரண்டு சாட்சிகள் முன்னிலையில் மணமக்களின் கையெழுத்தையும் சாட்சிகளின் கையெழுத்தையும் வாங்கிக்கொள்கின்றனர். இது திருமணம் நடைபெற்றதை மெய்ப்பிக்கும் சான்றாக நிற்கிறது.

மணமக்களின் தகுதி

இசுலாமியர் சட்டப்படி திருமணம் ஓர் ஒப்பந்தம் ஆதலால், திருமணம் செய்துகொள்பவர்கள் உரிமை வயது எய்தப்பெற்றவராகவும், சித்தம் தெளிந்தவராகவும் (sound mind) இருக்கவேண்டும். பழைய இசுலாமியச்சட்டப்படி ஆண்கள் 12 வயதும், பெண்கள் 9 வயதும் நிரம்பியவராயிருந்தால், திருமணத்திற்கு உரிமை வயது எய்தப் பெற்றவராய்க் கருதப்பட்டனர். ஆனால், தற்போதைய இந்திய இசுலாமியர் சட்டப்படி, ஆணும் பெண்ணும் 15 வயதைப் பூர்த்தி செய்திருந்தால், உரிமை வயது வந்தவராகக் கருதப்படுவர். குறிப்பிடத் தக்க எதிர்புறச் சான்று எதுவும் இல்லை என்றால், 15 வயது பூர்த்தியானவர்கள் திருமணம் செய்துகொள்ளத் தகுதியுடையவரெனக் கருதலாம். மேற்குறிப்பிட்டபடி, உரிமை வயது எய்தப்பெற்றவர்களும் சித்தம் தெளிந்தவர்களும் திருமணத்திற்குத் தாமே இசைவு தெரிவிக்கத் தகுதி

யுடையவராவர். உரிமை வயது எய்தப்பெறுதவர்களுக்கும், சித்தம் கலங்கியவர்களுக்கும் (persons of unsound mind) காப்பாளர் (guardian) நியமிக்கப்பெறுவார். இவர் திருமணத்தை நடத்தி வைக்கலாம்; மணமக்கள் சார்பாக இசைவும் தெரிவிக்கலாம்.

திருமணக் காப்பாளர்கள் (Guardians in Marriage) அல்லது 'ஜபர்' (Jabr)

இசுலாமியச் சட்டப்படி, கீழே குறிப்பிடப்பட்டவர் வரிசைக் கிரமமாக, உரிமை வயது எய்தப் பெறுதவர்களுக்கும் சித்தம் கலங்கியவர்களுக்கும் திருமணக் காப்பாளராகச் செயல்படத் தகுதி படைத்தவர்கள் ஆவர். இப்படித் திருமணக் காப்பாளராக இயங்கும் செயல் 'ஜபர்' (Jabr) என்று அழைக்கப்படுகிறது.

(1) தந்தை (Father).

(2) தந்தையின் தந்தை (எத்தனை தலைமுறை முன் சென்றாலும்) (Father's Father h.h.s.)

(3) சகோதரனும், தந்தையின் உறவினரான எச்சதாரர்களும் ஒருவர் பின் ஒருவராக (Brother and other paternal relations in the order in which they come in as residuary heirs) (அத்தியாயம் 12-ல் காண்க).

(4) தாய் (Mother).

(5) தாயின் உடன் பிறந்தவர்களும் (Maternal uncle or aunt) திருமண உறவுகொள்ளத் தடையாயிருக்கும் தாய்வழி உறவினர்களும்.

(6) அரசாங்கம் (Government).

மேற்குறிப்பிட்ட பட்டியலில், தந்தைக்கும் தந்தைவழித் தொடர்புடையோருக்கும் முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. காரணம், இசுலாமியரின் கொள்கைப்படி, திருமணம் தந்தைவழியை நிலை நிறுத்துவதாகும். பட்டியலில் குறிப்பிடப்பட்டவர்கள் ஒருவர்பின் ஒருவராய், காப்பாளர்ப் பொறுப்பை ஏற்க உரிமை பெற்றவராவர். முதல் இடம் தந்தைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் இல்லாவிடில் மூதாதையர்களுக்கும், அவர்களும் இல்லாவிடில் கிளைவழித் தோன்றல்களுக்கும் காப்பாளராய்ச் செயல்பட உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. தந்தைவழியினர் இல்லாது அற்றுப்போன நிலையில், தாய்க்கும் தாய்வழியினருக்கும் காப்பாளராய் இயங்குகின்ற உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

பட்டியலில் உள்ளவருக்கும் வரிசைக் கிரமமாக இயங்கவே உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. தந்தை உயிருடன் இருந்தால், தந்தையே

முன்னின்று நடத்திவைக்க வேண்டும். தந்தை இருக்கும்பொழுது, அவரது இசைவு பெருது, தந்தையின் தந்தையோ, பட்டியலில் கூறப் பட்ட மற்ற அடுத்தவர்களோ காப்பாளராக இயங்க உரிமை அற்றவ ராவர். தந்தையின் இசைவு பெற்று வேருெருவர் காப்பாளராகச் செயல்படலாம். அதைத் தந்தை அங்கீகரிக்க வேண்டும். தந்தை தொடர்புகொள்ள முடியாத அளவு தூர தேசங்களில் வாழ்ந்து வந்தால், பட்டியலில் உள்ள அடுத்தவர் காப்பாளராய்ச் செயல்பட உரிமை பெறுகிருர். பட்டியலில் கூறப்பட்டவர்களில், முன்னவர் இருக்கப் பின்னவர் காப்பாளராய்ச் செயல்பட்டால், அதற்கு முன்னவரின் அங்கீ காரம் இருந்தாலன்றி, அது செல்லாது. பட்டியலில் உள்ளவர் இருக்க, இல்லாதவர் காப்பாளராய் நின்று திருமணம் நடத்திவைத்தால் அது இல்லாத் (void) திருமணமாகக் கருதப்படும். அதுபோல், பட்டிய லில் கூறப்பட்டவரில், முன்னவரின் அங்கீகாரமும் இசைவும் பெருமல், பின்னவர் நடத்திவைக்கும் திருமணங்களும் இல்லாத் திருமணங் களாகக் கருதப்படும்.

Abdul Kasam *vs* Jamila Khatun
(I.L.R. 1940—1 Cal. 401)

உரிமை வயது எய்தப் பெருத சிறுமியின் தாய்மாமன், அவளுக்குத் திருமணம் முடித்துவைத்தார். அவளுடைய தந்தையின் சகோதரனும், அவளுடைய தாயும் இதற்கு இசைவு தெரிவிக்கவில்லை. இதில் முறைப் படி காப்பாளராய் இருக்க வேண்டியவர்களில் முதலில் தந்தையின் சகோதரனும் (சிற்றப்பாவும்) இரண்டாவது தாயும், மூன்ருவதாகத்தான் தாய்மாமனும் செயல்பட முடியும். முன்னிருவரும் இசைவும் அங்கீ காரமும் அளிக்காததால், தாய்மாமன் காப்பாளராய் இருந்து நடத்தி வைத்த திருமணம் செல்லாத் திருமணமோ (invalid marriage), தவிர்தகு திருமணமோ (voidable marriage) ஆகாது, அது இல்லாத் திருமணம் (void marriage) ஆகிவிடுகிறது என்று தீர்ப்பு அளிக்கப் பட்டது.

ஷியா சட்டப்படி, தந்தையும் தந்தையின் தந்தையுமே முறைப்படி காப்பாளராகத் தகுதியுடையவராவர். இவர்களின் இசைவும் அங்கீ காரமும் பெற்று, வேறு எவரேனும் திருமணக் காப்பாளராகச் செயல் படலாம். இவர்கள் இருவரும் இல்லாமற்போய், வேறு எவராவது திருமணக் காப்பாளராகச் செயல்பட்டால், இச் சிறுவர் உரிமை வயது எய்தப்பெற்றதும் அந்தத் திருமணத்தை அங்கீகரிக்க வேண்டும். இல்லையென்ருல், அது இல்லாத் திருமணமே.

முசுலிம்களுக்குத் திருமணம், திருமண முறிவு, மஹர் ஆகிய மூன்றிலும், இசுலாமியச் சட்டப்படியுள்ள உரிமை வயது ஏற்றுக்

கொள்ளப்படவேண்டும். இந்த மூன்று விஷயங்களிலும் இசுலாமியர் களுக்கு இந்திய உரிமை வயது வந்தோர் சட்டத்தில் (Indian Majority Act — 1875) விலக்களிக்கப்பட்டுள்ளது. எனவே, இசுலாமியர்கள் 15 வயதைப் பூர்த்தி செய்தால், தகுதி பெற்றவராகக் கருதப்படவேண்டும். 18 வயது பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை.

1929-ல் இயற்றப்பட்ட சிறுவர் திருமணத் தடைச் சட்டம், (Child Marriage Restraint Act—1929) 18 வயதிற்குக் கீழுள்ள ஆணை, 14 வயது பூர்த்தியாகாத பெண்ணை திருமணம் செய்துகொள்ளத் தடை செய்யப்பட்டவராவர் என்று கூறுகிறது. இந்தச் சட்டத்தை மீறி இசுலாமியர்களிடையே திருமண ஒப்பந்தம் நடைபெற்றால், அந்தத் திருமணம் செல்லும்; ஆனால், இச் சட்டத்தின்கீழ் அவர்கள் தண்டனைக் குள்ளாக்கப்படுவர்.

இசுலாம் ஆரம்ப முதற்கொண்டே விதவைத் திருமணத்தை அனு மதிக்கிறது. சகோதரர்களின் தாய் ஒருவரா யிருந்து, தந்தை வெவ் வேறு யிருப்பின், அவர்கள் தாய்வழிச் சகோதரர்கள் (uterine brothers) என்று அழைக்கப்படுவர். தந்தை ஒருவராயிருந்து, தாய் வெவ்வேறுயிருப்பின், அவர்கள் தந்தைவழிச் சகோதரர்கள் அல்லது இரத்தத் தொடர்புடைய சகோதரர்கள் (consanguine brothers) என்று அழைக்கப்படுவர். சகோதரர்களின் தாயும் தந்தையும் ஒருவரா யிருந்தால், உடன்பிறந்த சகோதரர்கள் (full brothers) என்று அழைக்கப்படுவர்.

புரிவுரையும் ஏற்பும் (Proposal and Acceptance)

இசுலாமியத் திருமணம் ஓர் ஒப்பந்தம் ஆதலால், அதில் ஒப்பந்தக் கூறுகளும் அமைப்புகளும் இருப்பதைக் காணலாம். மணமக்களில் ஒருவரோ அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஏஜெண்டோ, திருமணம் செய்துகொள்ள விரும்பும் புரிவுரையை (proposal) முன்வைக்க, மற்ற வரோ, அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஏஜெண்டோ தம்முடைய இசைவைத் தெரிவித்து, அதை ஏற்றுக்கொண்டால், திருமணம் நிறை வுறுகிறது. இந்த நிகழ்ச்சி இரண்டு சாட்சிகளின் முன்னிலையில் நடை பெற வேண்டும். சாட்சிகள் ஆண்களாகவோ, பெண்களாகவோ இருக் கலாம். ‘சுன்னீ’ சட்டப்படி, சாட்சிகள் இருவரும் ஆண்களாகவோ, அல்லது ஓர் ஆணும் இரு பெண்களுமாகவோ இருக்கலாம். இந்த நிகழ்ச்சி, அதாவது சாட்சிகள் முன்னிலையில் புரிவுரை முன்வைப்பும், அதன் ஏற்பும் ஒரே சமயத்தில் ஒரே சந்திப்பில் நிகழவேண்டும். ஒரு சந்திப்பில் புரிவுரை முன்வைக்கப்பட்டு, அதே சந்திப்பில் இன்றி, வேறொரு சந்திப்பில் அதை ஏற்றுக்கொண்டு மற்றவர் இசைவு தெரிவித்

தால், ஒப்பந்தம் நிறைவேறுது. புரிவுரை முன்வைக்கப்படும்போதும் அதை ஏற்கும்போதும் பயன்படுத்தப்படும் சொற்கள், இருவரிடையே நிலையான திருமணத்தைக் குறிப்பதாயும், உடனடி நிகழப்போவதைக் குறிப்பதாயும் இருப்பது அவசியமாகும்; தாற்காலிகத் திருமணத்தைக் குறிப்பதாகவோ, நாட்கள் கடந்து நிகழ்வுறுவதாகவோ இருக்கக் கூடாது. ஒரே சந்திப்பில் திருமண ஒப்பந்தம் முடிவுபெற வேண்டும்.

'சுன்னி' பெரும் பிரிவினரில் உட்பிரிவினரான 'ஷாபி'களின் சட்டப்படி, சாட்சிகள் இருவரும் ஆண்களாக இருக்கவேண்டும். 'ஷியா' பெரும் பிரிவினரின் சட்டப்படி, சாட்சிகள் முன்னிருக்க வேண்டிய அவசியம் இல்லை.

மணமக்களில் ஒருவர் புரிவுரையை முன்வைக்க, மற்றவர் அதை ஏற்றுக்கொண்டால், அக்கணமே திருமணம் நிறைவேறிவிடுகிறது; மணமக்கள் இருவரும் கணவன் மனைவி ஆகிவிடுவர். இருவரின் இசைவும் (consent) தன்னிச்சையானதாக இருக்கவேண்டும். தூண்டுதலோ, கட்டாயமோ, இம்மியளவும் இருக்கக்கூடாது. இசைவு தெரிவிக்க வேண்டியவர் உரிமை வயது எய்தப் பெறுதவராகவோ, சித்தம் கலங்கியவராகவோ இருந்தால், திருமணக் காப்பாளர் இசைவு தெரிவிக்க வேண்டும்.

உரிமை வயது எய்தப் பெறுத பெண்கள் விஷயத்தில் திருமணக் காப்பாளர்கள் இசைவு தந்திருந்தால், அவர்கள் பருவம் எய்தப் பெற்றதும், காப்பாளர் கொடுத்த இசைவினை அங்கீகரித்து ஒப்பந்தத்தை நிலைபெறச் செய்து தொடர்ந்து வாழ்க்கைத் தம்பதிகளாக வாழவோ, இல்லை, காப்பாளர் கொடுத்த இசைவினை அங்கீகரிக்காது மறுத்து, நடைபெற்ற திருமணம் இல்லாத் திருமணம் என்று முறித்துக்கொள்ளவோ உரிமை பெற்றவராவர். இதைப் பருவம் எய்தியோர் விருப்பம் அல்லது 'கியாருல் புலூக்' (option of puberty or Khyar-ul-bulugh) என்று சட்டவல்லுநர் அழைப்பர்.

இசைவு தெரிவித்த திருமணக் காப்பாளர்கள், தந்தையோ, தந்தையின் தந்தையோ அல்லாமல், பட்டியலில் கூறப்பட்ட மற்றவர்களாயிருப்பின், உரிமை வயது எய்தப் பெற்றவர் காரணம் எதுவும் காட்டாமல், நடத்தி வைக்கப்பட்ட திருமணத்தை இல்லாத் திருமணம் என்று முறித்துக்கொள்ள முடியும். ஆனால், தந்தையோ, தந்தையின் தந்தையோ இசைவு தந்திருந்தால், ஒப்பந்தம் இல்லையென்று முறித்துக்கொள்ளத் தக்க காரணம் காட்டப்பட வேண்டும்.

காப்பாளர் (1) தீங்கிழைக்கும் கவனக் குறைவுடன் (negligently) நடந்திருந்தாலோ, (2) வஞ்சனையோடு (fraudulently) செயல்பட்

டிருந்தாலோ, (3) சிறுவருக்கு வெளிப்படையான அனுகூல மின்மையை விளைந்திருந்தாலோ, அதைக் காரணமாகக் காட்டி, பருவம் எய்தியோர் விருப்ப (option of puberty) உரிமையைப் பயன்படுத்தி, நடத்தி வைக்கப்பட்ட திருமணத்தை முறித்துக்கொள்ளலாம்.

Aziz Banu *vs* Mohammed Ibrahim
(47-All. 823)

'ஷியா' பிரிவைச் சேர்ந்த சிறுமியை அவளுடைய தந்தை 'சுன்னி' பிரிவிலுள்ள ஒருவனுக்குத் திருமணம் செய்துகொடுத்தார். சிறுமி உரிமை வயது எய்தப் பெற்றதும், முன்பு தனக்கு நடத்தி வைக்கப்பட்ட திருமணம் அவள் சார்ந்திருக்கும் மதக்கோட்பாட்டிற்கு ஊறு விளைவிப்பதாகவும், கண்கூடான அனுகூலமின்மையைப் பயப்ப தாகவும் கருதினள். அது தக்க காரணமாக ஏற்கப்பட்டு, அவள் பருவம் எய்தியோர் விருப்ப (option of puberty) உரிமையைப் பயன் படுத்தித் திருமண முறிவு செய்தது சரியானது என்று தீர்ப்பளிக்கப் பட்டது.

Zubeda Begam *vs* Vazir Mahomed (1940)
(Sind. 145)

சிறுமியின் திருமண ஒப்பந்தத்திற்கு அவளுடைய தந்தை காப்பா ளராயிருந்து இசைவு தெரிவித்தார். அக் கணவனே, திருட்டு வழக்கில் முன்பு தண்டனை அனுபவித்திருந்ததாலும், வேலை எதுவும் இன்றி ஊர் சுற்றித் திரிந்ததாலும், இ.பி.கோ. பிரிவு 498-ன்படி திருமணமான வேறொரு பெண்ணைக் கெடுக்க முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு அவன்மீது கிரிமினல் வழக்கு நடந்துகொண்டிருந்ததாலும், குற்றம் இழைத்தவனுகவும் கறைபடிந்தவனுகவும் இருப்பதால், அச் சிறுமியின் வாழ்க்கைக்கு இக் கணவனுல் எள்ளளவும் அனுகூலம் இருப்பதாகக் கருத முடியாது. எனவே, அவள் பருவம் எய்தியோர் விருப்ப உரிமை யைப் பயன்படுத்தித் திருமணத்தை முறித்துக்கொள்ளலாம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

தந்தையோ, தந்தையின் தந்தையோ இசைவு தரும் ஒப்பந்தம் தவிர்தகு திருமண ஒப்பந்தம் (voidable marriage) ஆகும். ஏனெனில், சிறுவர் உரிமை வயது எய்தப்பெற்றதும், தாம் சிறுவரா யிருந்த காலத்தில் நடத்திவைக்கப்பட்ட திருமணம் இல்லாத் திருமணம் என்று தவிர்த்துக்கொள்ளலாம். சிறுமிக்குக் காப்பாளர் இசைவு தந்து திருமணம் நடத்தி வைத்தால், அவள் பருவம் (puberty) எய்திய பின்னர்த் தகுந்த காலத்திற்குள்ளாகவோ, அல்லது பருவம் எய்திய

பின்னர்த் தனக்கும் இன்னொருக்கும் திருமணம் நடத்திவைக்கப்பட்டிருக் கிறது என்று தெரிந்ததும் தக்க காலத்திற்குள்ளாகவோ (reasonable time), நடத்திவைக்கப்பட்ட அத் திருமணத்தை முறித்துக்கொள்ள வேண்டும். தக்க காலம் என்பதை நியாயத்தின் அடிப்படையில் கொள்ள வேண்டும். நடத்திவைக்கப்பட்ட திருமணத்தைத் தக்க காலத்திற் குள்ளாக முறித்துக்கொள்ளாது வெறுமனே காலம் தாழ்த்திவிட்டால், அவள் இசைவு தெரிவித்ததாகக் கருதப்படும். அப்பொழுது அவள் பருவம் வந்தவர் விருப்ப உரிமையை இழந்துவிடுவாள். பருவம் எய்திய பின்னர், அவள் கணவனுடன் உடலுறவு கொண்டு திருமணத்தைப் பூர்த்தி செய்துகொண்டால் (consummation of marriage), பருவம் வந்தவர் விருப்ப உரிமையை இழந்தவளாவாள். ஆனால், உடலுறவு இயல்பானதாகவும், இசைவுடன் கூடியதாகவும் இருக்க வேண்டும். வலுக்கட்டாயமாக உடலுறவு கொள்ளப்பட்டிருந்தால், அவள் இவ் வுரிமையை இழந்தவளென்று கருதமுடியாது.

சிறுவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் இசுலாமிய சட்டப்படி உரிமை வயது எய்தப்பெற்ற பின்னர், முன்பு நடத்தி வைக்கப்பட்ட திருமணத்தை வெளிப்படையாகவோ, உட்கிடையாகவோ அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளாத வரையில், பருவம் வந்தவர் விருப்ப உரிமை உடைய வராகக் கருதப்படுவர். மனைவிக்கு மஹர்த் (dower) தொகையைக் கொடுத்தல், அவளோடு உடலுறவு கொள்ளல் போன்ற காரியங்களின் மூலம், நடத்திவைக்கப்பட்ட திருமணத்தை அக் கணவன் உட்கிடை யாக அங்கீகரித்ததாகக் கருதப்படும்.

பருவம் எய்தியோர் விருப்ப உரிமையைப் பயன்படுத்திக் கணவன் திருமண முறிவு செய்தால், நடத்திவைக்கப்பட்ட திருமணம் இல்லாத் திருமணம் (void marriage) ஆகக் கருதப்படும். ஆனால், நடத்தி வைக்கப்பட்ட திருமணத்திற்குப் பிறகு, திருமண முறிவு செய்வதற்கு முன்னர் இருவரில் ஒருவர் இறந்து போனால், மற்றவர் சொத்தில், கண வனாகவோ மனைவியாகவோ அவர் உரிமைபெறத் தக்கவராவர். எனவே, நடத்திவைக்கப்பட்ட திருமணமாயிருப்பினும், திருமண முறிவு செய்யப் படவில்லையானால், அவர்கள் தம்பதிகளாகவே கருதப்படுவர்.

சிறுமியர் தம்முடைய பருவம் எய்தியோர் விருப்ப உரிமையைப் பயன்படுத்தித் திருமண முறிவு செய்தாராயினும், நீதிமன்றத்தின் அங்கீகாரமும் ஆணையும் பெற்றால் அன்றித் திருமண முறிவு முற்றுப் பெறாது.

பருவம் எய்தியோர் விருப்ப உரிமையைப் பயன்படுத்தித் திருமண முறிவுபெற, 1939ஆம் ஆண்டு முசுலிம் திருமண இழப்புச் சட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது. இசுலாமியர் சட்ட முறைப்படி நடத்தி

வைக்கப்பட்ட திருமணமாயிருந்தால், முசுலிம் பெண்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட மூன்று காரணங்களின் அடிப்படையில், 1939ஆம் ஆண்டு முசுலிம் திருமண இழப்புச் சட்டம், பிரிவு 2-ன் கீழ் முறையிட்டு, நீதி மன்றத்தின் ஆணையைப் பெற்று, நடத்திவைக்கப்பட்ட திருமணத்தை முறித்துக்கொள்ள முடியும் :

1. பதினைந்து வயது பூர்த்தியாவதற்கு முன்னர்த் திருமணம் நடத்தி வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

2. பதினெட்டு வயது பூர்த்தியாவதற்குள்ளாக நடத்திவைக்கப்பட்ட திருமணத்தை அவள் முறித்திருக்கவேண்டும்.

3. திருமணம் உடலுறவால் பூர்த்தியாக்கப்படாதிருக்க வேண்டும்.

திருமண முறிவுபற்றிய தூய இசுலாமிய சட்டத்துக்கும் 1939ஆம் ஆண்டு முசுலிம் திருமண இழப்புச் சட்டத்துக்கும் உள்ள சில முக்கிய வேறுபாடுகளைக் கீழே காணலாம் :—

(அ) தூய இசுலாமிய சட்டம், பருவம் எய்துவதற்கு முன்னர் நடத்திவைக்கப்பட்ட திருமணத்தை முறித்துக் கொள்ளலாம் என்று கூறுகிறது. 1939ஆம் ஆண்டுச் சட்டம் 15 வயது பூர்த்தியாவதற்கு முன்னர் நடத்தி வைக்கப்பட்ட திருமணத்தை மட்டுமே முறித்துக் கொள்ள உரிமை அளிக்கிறது.

(ஆ) தூய இசுலாமிய சட்டப்படி, நடத்தி வைக்கப்பட்ட திருமணத்தை நியாயமான காலத்திற்குள்ளாக முறித்துக்கொள்ள வேண்டும். 1939ஆம் ஆண்டுச் சட்டப்படி, 18 வயது பூர்த்தியாவதற்குள்ளாக முறித்துக்கொள்ள வேண்டும்.

(இ) 1939ஆம் ஆண்டுச் சட்டத்தில் எவரெவர் திருமணக் காப்பாளராகச் செயல்படலாம் என்று வரையறுத்துக் கூறப்படாததால், எவர் வேண்டுமானாலும் (பட்டியலில் குறிப்பிடப் படாதவர்களும்) காப்பாளராகச் செயல்படலாம்.

(ஈ) தூய இசுலாமிய சட்டத்தில் உடலுறவு மூலம் திருமணம் பூர்த்தியாகாதிருக்க வேண்டும் என்று சொல்லப்படவில்லை. ஆனால், 1939ஆம் ஆண்டுச் சட்டத்தில், உடலுறவால் திருமணம் பூர்த்தியாக்கப் படாதிருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

(உ) தூய இசுலாமிய சட்டத்தில் தீர்ப்பாணை (decree) பற்றி எதுவும் குறிப்பிடப் படவில்லை. 1939ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் தீர்ப்பாணையைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் ஆகும்.

ஆண்கள் உரிமை வயது எய்தப் பெற்றவராயின், எந்த ஒப்பந்தத்தையும் தாமே முன்னின்று முடித்துக்கொள்ளத் தகுதிபெற்றவராவர்.

'சுன்னி', 'ஷியா' பிரிவினரிடையே இதில் கருத்து வேறுபாடு கிடையாது. 'ஹனபி' சட்டப்படி உரிமை வயது வந்த பெண்கள் ஆண்களைப் போல் எந்த ஒப்பந்தத்தையும் தாமே முன்னின்று முடித்துக்கொள்ளத் தகுதி பெற்றவராவர்.

'ஷாபி', 'மாலிகி' சட்டப்படி, உரிமை வயது எய்தப் பெற்றவராயினும், கன்னிப் பெண்கள் (virgins) திருமண ஒப்பந்தத்தைத் தாமாகப் பூர்த்திசெய்துகொள்ளக் கூடாது. கன்னிப் பெண்களின் திருமணத்திற்குப் பெற்றோர்களோ காப்பாளர்களோ இசைவு தெரிவிக்க வேண்டும். கன்னிப் பெண்களல்லாதோர் (non-virgin) (தையிபா) காப்பாளர் இசைவு இல்லாமல் தாங்களே திருமணத்திற்கு இசைவு தந்து ஒப்பந்தத்தைப் பூர்த்திசெய்து கொள்ளலாம்.

Hassan Kutti *vs* Jainabha (1929)
(52 Mad. 39)

ஒரு கன்னிப் பெண்ணின் திருமண ஒப்பந்தத்திற்குப் பெற்றோரின் இசைவு தேவை என்றால், பெண்ணின் இசைவு தேவையற்றதா? என்ற கேள்வி எழுந்தது. காப்பாளர் தெரிவிக்கும் இசைவு பெண்ணின் இசைவினை உறுதிப் படுத்துவதற்கே அன்றி, வேறுபட்டு முரணைகச் செல்வதற்கன்று. எதற்கும், பெண்ணின் இசைவே முக்கியம். அதை உறுதிப்படுத்தவே காப்பாளரின் இசைவு துணை நிற்கிறது. பெற்றோரின் இசைவும் வேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பதன் கருத்து என்ன வென்றால், திருமணத்தைப் பொறுத்தவரையில் கன்னிப் பெண்ணின் இசைவை வெளிப்படையாகப் பலர் முன்னிலையில் கேட்டுத் தெரிவது என்பது, அவளது நாணமிக்க பெண்மைக்கு ஊறு விளைவிப்பதற்கு ஒப்பாகும். எனவே, காப்பாளர் அல்லது பெற்றோர், அவளுடைய இசைவைப்பெற்று, அவள் சார்பாகத் தாமே இசைவை வெளிப்படுத்தி நிற்கிறார்; அவ்வளவே. எனவே, கன்னிப் பெண்ணின் இசைவு அவசியம் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

கன்னிப் பெண்ணின் இசைவு சுதந்திரமானதாகவும், தன்னிச்சையானதாகவும் இருக்கவேண்டும். வஞ்சக வழியிலோ, பலாத்காரத்தின் மூலமோ இசைவு பெற்றிருந்தால், அதைக் காரணம்காட்டி, நடைபெற்ற திருமணத்தை அவள் இல்லாத் திருமணம் ஆக்கிவிட முடியும்.

Mohuiddin *vs* Khatijabibi
(41 Bom L. R. 1020)

ஒரு 'ஷாபி' குடும்பத்தைச் சேர்ந்த கன்னிப் பெண், தன்னுடைய தாய் வீட்டில் வளர்ந்து வந்தாள். அவளுடைய தாயும் தந்தையும்

பிணக்குக் காரணமாகப் பிரிந்து வாழ்ந்து வந்தனர். கன்னிப் பெண் பருவம் எய்திய பின்னர், தந்தை ஒரு 'ஷாபி' மணமகனைத் திருமணத் திற்கு ஏற்பாடு செய்தார். கன்னிப் பெண், இந்தத் திருமணத்தை வேண்டாம் என்று மறுத்ததோடு, காவல் நிலையத்தில் ஒரு குற்றப் பத்திரத்தையும் சமர்ப்பித்தாள். ஆனால், தந்தை அவள் விருப்பத்திற்கு எதிராகத் திருமணத்தை நடத்தி முடித்தார்.

அவளுடைய விருப்பத்திற்கு மாறாகத் தந்தையால் நடத்திவைக்கப் பட்ட இத் திருமணம், அவளுடைய இசைவின்றி நடைபெற்றிருப்ப தாலும், அவளுடைய விருப்பத்திற்கு எதிராக வலுக்கட்டாயமாக நடத்தி வைக்கப்பட்டிருப்பதாலும் செல்லாது என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

Abdul Lathif *vs* Niaz Ahmed (1909)

(31 All-343)

திருமணத்தின் போது, மணமகள் தீராத நோய்வாய்ப் பட்டிருந் தாள். இதை வெளிப்படுத்தாமல், வஞ்சகமாகத் திருமணத்தை அவளுடைய பெற்றோர் நடத்தி வைத்தனர். நோய் காரணமாக, கணவனுடன் அவளது உடலுறவு பூர்த்தியாகாமல் போனதோடு, அவளும் இறந்து போனாள். அவளுடைய தந்தையும் சகோதரனும் வாரிசாக நின்று, அவளுக்குச் சேரவேண்டிய 'மஹர்'ப் பணத்தைக் கேட்டு முறையிட்டனர்.

அவள் நோய்வாய்ப்பட் டிருப்பதை அந்தக் கணவனிடம் வெளிப் படுத்தாது, வஞ்சகமாகத் திருமணத்தைப் பெற்றோர்கள் நடத்தி வைத்ததால், அது இல்லாத் திருமணம் (void marriage) ஆகும். எனவே, கணவன் 'மஹர்'ப் பணம் கொடுக்கவேண்டிய கடமையில்லை என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

Kulsumbi *vs* Abdul Kadir (1921)

(45 Bom 151)

மணப்பெண் ஒரு 'சுன்னி' முசுலிம். திருமணத்தின்போது அவள் கருவுற்றிருந்தாள். மணமகனுக்கு அவள் கருவுற்றிருந்தது தெரியாது. இருவரிடையேயும் உடலுறவு பூர்த்தியாக்கப்பட்டது. மணமாகி ஐந்து மாதத்திற்குள்ளாக அவள் முழு வளர்ச்சி பெற்ற ஒரு குழந்தையைப் பெற்றாள். எனவே, கணவன் அவளை விட்டுப் பிரிந்தான். மனைவி தனக்குக் கிடைக்கவேண்டிய 'மஹர்'த் தொகைக்காக வழக்குத் தொடர்ந்தாள்.

அவள் ஏற்கெனவே கருவுற்றிருந்ததைத் தன் கணவனுக்குத் தெரிவிக்காது மறைத்துவைத்த போதிலும், இருவரிடையேயும்

உடலுறவு பூர்த்தியாக்கப்பட்டிருப்பதால், நடைபெற்ற திருமணம் செல்லாதாகிவிடாது. ஆகையால், கணவன் மஹர்த் தொகை கொடுக்கக் கடமைப்பட்டவன் என்று பம்பாய் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

ஆனால், கேரளா உயர்நீதிமன்றமோ, தான் ஏற்கெனவே கருவுற்றிருந்ததைத் தன் கணவனிடம் தெரிவிக்காதது வஞ்சகச் செயலுக்கு ஒப்பாகும்; ஆதலால், இவளுக்கு நிகழ்த்திவைக்கப்பட்ட திருமணம் செல்லத்தக்கதன்று என்று தீர்ப்பளித்துள்ளது.

திருமணத்திற்குத் தடையாயிருப்பன

திருமணம் இருபாலாரின் வாழ்க்கை ஒப்பந்தம் என்றால், எந்த ஆணும் எந்தப் பெண்ணையும் மணந்துகொள்ள முடியுமா? அல்லது இதுபற்றிய கட்டுப்பாடுகளும் தடைகளும் விதிக்கப்பட்டிருக்கின்றனவா என்று காணவேண்டும். எந்தச் சட்டத்தை எடுத்துக்கொண்டாலும், மனிதாபிமான அடிப்படையில் ஒழுக்கத்தைப் பேணுவதற்குத் திருமணம் செய்துகொள்வோரிடையே சில கட்டுப்பாடுகளும் தடைகளும் இருப்பதைக் காணலாம். இசுலாமியச் சட்டமும் யார், யாரை மணந்துகொள்ளலாம், — மணந்துகொள்ளக்கூடாது என்று திட்டவட்டமாக வரையறுத்துக் கூறுகிறது. இச் சட்டத்தை மீறித் திருமணம் நடைபெற்றால், அது இல்லாத் திருமணமாகவும், செல்லாத் திருமணமாகவும் ஆகிவிடுகிறது. இசுலாமிய சட்டப்படி திருமணத்திற்குத் தடையாயிருப்பனவற்றை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதற் பிரிவு திருமணத்தை இல்லாதாக்கிவிடுகிறது; இரண்டாவது பிரிவு நடைபெற்ற திருமணத்தை ஒழுங்கற்றதாக்கிவிடுகிறது.

I. இல்லாத் திருமணமாக்கும் தடைகள்

1. இரத்த சம்பந்தம் அல்லது குருதித் தொடர்பு (Consanguinity): ஒரு முசுலிம் தன்னுடைய குருதித் தொடர்புடையவர்களைத் திருமணம் செய்துகொள்வதில் நின்றும் தடைசெய்யப்பட்டிருக்கிறான். இத் தடையை மீறிய திருமணம் இல்லாத் திருமணமாகும். எனவே, ஒரு முசுலிம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள குருதித் தொடர்புடையவர்களைத் திருமணம் செய்துகொள்ளக்கூடாது.

(a) தன்னுடைய மூதாதையர்கள் (Ascendants)

(b) வழித்தோன்றல்கள் (Descendants)

(c) (i) உடன் பிறந்த சகோதரிகள் (Full sisters)

(ii) தந்தைவழிச் சகோதரிகள் (Consanguine sisters).

(iii) தாய்வழிச் சகோதரிகள் (Uterine sisters)

(d) (i) தந்தையுடன் பிறந்த சகோதரி (எ.த.மு.செ) (Paternal aunt)

(ii) தாயுடன் பிறந்த சகோதரி (எ.த.மு.செ) (Maternal aunt)

(iii) சகோதரியின் மகள் (மருமகள்) (niece)

(iv) மருமகளின் மகள் (எ.த.பி.செ) (grand-niece)

(v) சகோதரனின் மகள்; அம் மகளின் மகள் (எ.த.பி.செ.).

2. கொள்ளுறவு (Affinity): பிறப்பால் ஏற்படுவது குருதித் தொடர்பு. திருமணத்தின் மூலம் ஏற்படுவது கொள்ளுறவு ஆகும். ஒரு முசுலிம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கொள்ளுறவு முறையினரைத் திருமணம் செய்துகொள்ளக் கூடாது. மீறிய திருமணம் இல்லாத் திருமணம் ஆகும்.

(a) தந்தையின் மனைவி—மாற்றுந்தாய் (wife of his father)

(b) தந்தையின் தந்தையின் மனைவி (எ.த.மு.செ.) (wife of his father's father)

(c) பேரனின் (மகன்வழி—மகள்வழி) மனைவி (எ.த.பி.செ) (wife of his son's son or daughter's son)

(d) மகனின் மனைவியின் தாய் (Son's wife's mother)

(e) மகனின் மனைவியின் பாட்டி (எ.த.மு.செ) (Son's wife's grand-mother)

(f) மனைவியின் மகள் (வேறு கணவன் வழிப்பிறப்பு) (Own wife's daughter)

(g) மனைவியின் பேர்த்தி (எ.த.பி.செ) (Own wife's grand-daughter).

3. ஊட்டி வளர்த்த செவிலித் தாய் முறை (Fosterage): இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தையாயிருக்கும்பொழுது, பெற்ற தாயல்லாது வேறு ஒருத்தியிடம் பாலுண்டு வளர்ந்தால், அவள் அக் குழந்தைக்கு ஊட்டி வளர்த்த செவிலித்தாய் ஆவாள். செவிலித் தாயிடம் பாலுண்டு வளர்ந்த குழந்தைக்கு அச் செவிலித்தாய் பெற்றெடுத்த தாய்க்கு ஒப்பாகக் கருதப்படுகிறாள். குழந்தையாயிருந்த காலத்தில் அவளிடம் பாலுண்டு வளர்ந்த காரணத்தால், அவள் உறவினர் சிலரும் குழந்தைக்குத் திருமணத் தடைக்குட்பட்டவராகக் கருதப்படுகின்றனர். எனவே, ஒரு முசுலிம் பெற்ற தாயின் உறவினர் எவரெவரை மணந்துகொள்ளக் கூடாதோ, அதேபோன்ற செவிலித்தாயின் அந்த அந்த உறவினர்களையும் மணந்துகொள்ளக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தப் பொதுவிதிக்கு விலக்காக,

(அ) சகோதரியின் செவிலித் தாயையோ,

(ஆ) வளர்ப்புச் சகோதரியின் தாயையோ,

(இ) வளர்ப்புச் சகோதரனின் சகோதரியையோ

ஒருவன் மணந்து கொள்வதில் தடையில்லை.

4. பல்கணவருடைமை (Polyandry): திருமணமான ஒரு முசுலிம் பெண் தனது முதல் திருமணம் நீடித்திருக்கும்பொழுது, அதாவது, முதல் கணவன் உயிரோடு இருக்க, வேறொருவரை மணந்து கொள்வதில் நின்றும் தடை செய்யப்பட்டிருக்கிறாள். ஒரு முசுலிம் பெண்ணுக்கு ஏககாலத்தில் ஒரே கணவன்தான் இருக்கவேண்டும் என்பது இசுலாமிய சட்டம். ஏனெனில், இசுலாமிய சட்டப்படி, திருமணம் தந்தைவழியை நிலைநிறுத்துவதாகும். ஆதலால், ஒரே நேரத்தில் ஒரு மனைவிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கணவன் இருந்தால், பிறக்கும் குழந்தைக்குத் தந்தை எவன்? என்று நிச்சயிக்க முடியாமற் போய்விடுகிறது. எனவேதான், பல்மனைவியருடைமையை அனுமதிக்கும் இசுலாமிய சட்டம், பல்கணவருடைமையைத் தடுத்து நிறுத்துகிறது. முதல் திருமணம் நீடித்து இருக்க, மனைவி மற்றொருவனைத் திருமணம் செய்து கொண்டால், இது இல்லாத் திருமணமாகும்.

மேற்கூறிய நான்கு காரணங்களின் அடிப்படையிலும் திருமணம் செல்லாதது மட்டுமின்றி, இல்லாத் திருமணமாகவும் ஆகிவிடுகிறது.

II. செல்லாத் திருமணம் அல்லது ஒழுங்கற்ற திருமணம்

கீழே குறிப்பிடப்படும் வரம்புகளை மீறி ஒரு முசுலிம் திருமணம் செய்தால், அது செல்லாத் திருமணமாகவோ, ஒழுங்கற்ற திருமணமாகவோ (irregular marriage) கருதப்படும். தாற்காலிகத் தடையாக இவை கருதப்படுகின்றன.

1. ஐந்தாவது மனைவியைக் கொள்ளுதல்: பல்மனைவியருடைமையைச் (Polygamy) சில வரம்புகளுக்குட்பட்டு இசுலாமிய சட்டம் அனுமதிக்கிறது. அவசியப்படும்பொழுது, ஒரு முசுலிம் ஏககாலத்தில் நான்கு மனைவி வரை சட்டப்படி திருமணம் செய்து கொள்ளலாம். அவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரைத் திருமணம் செய்துகொள்ளும்பொழுது, கணவன் அவர்களிடையே ஏற்றத்தாழ்வு சிறிதும் இல்லாமல் எல்லா மனைவியரையும் சமமாகவும், நேர்மையாகவும், நேசமாகவும் நடத்துகின்ற அளவுக்குச் சக்தியும், திறமையும், மனோபாவமும் பெற்றிருத்தல் வேண்டும். அரபு நாட்டில் அன்றைய சூழ்நிலையில், ஆண்கள் மூர்க்கமான போரிலும் துணிச்சலான செயல்

களிலும் ஈடுபட்டு உயிரிழக்க நேர்ந்ததால், ஆண்களின் எண்ணிக்கை குறையவும், பெண்களின் எண்ணிக்கை பெருகவும் நேர்ந்தது. இதைச் சமன்செய்து சமுதாயத்தில் ஒழுங்கினை நிலைநாட்டும் பொருட்டு, சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட பல்மனை மணம் (Polygamy) இசுலாமிய சட்டத்தால் அனுமதிக்கப்பட்டது. ஓர் ஆண் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் மணந்து கொள்ளலாம் என்றிருந்த பழைய வழக்கத்தை ஒழித்து, ஒரு மனைவியைத் திருமணத்தின் மூலம் கொள்வதற்கும், அவசியப்படும்பொழுது, மேற்சொன்ன கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு நான்கு மனைவியர்வரை திருமணம் செய்துகொள்வதற்கும் சட்டத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டது. மேலும், விபசாரமும் வைப்பாட்டி முறையும் (concubinage) பெண்களுக்குத் திருமண அந்தஸ்தை அளிக்கமாட்டா. அவை சமுதாயத்தைச் சீர்குலைப்பதோடு, பெண்மைக்கும் ஊறுவிளைவிக்கின்றன என்று இசுலாம் கருதுவதும், பல்மனை மணம் அனுமதிக்கப்பட்டதற்கு மற்றொரு காரணம் ஆகும். சமுதாய அந்தஸ்தும், சொத்துரிமையும், சட்ட உரிமைகளும் திருமணமான மனைவிக்கும் அவளுடைய வழித்தோன்றல்களுக்கும் சட்டத்தால் அளிக்கப்படுகின்றனவேயன்றி, கேவலம் வெறும் உடலுறவை மட்டும் ஏற்படுத்திக்கொள்ளும் மற்றப் பெண்களுக்கோ அவர்தம் வழித்தோன்றல்களுக்கோ இசுலாமிய சட்டத்தில் எந்த உரிமையும் அளிக்கப்படவில்லை. இதனைக் கருத்திற்கொண்டும் இசுலாம் பல்மனை மணத்தை அனுமதித்திருக்கிறது. திருமணம் ஓர் ஒப்பந்தமாகக் கருதப்படுவதால், முதல் மனைவி தன் திருமணத்தின்போது, முதல் மணம் நீடித்திருக்க, (அதாவது, தன்னுடனே தன் கணவன் வாழ்க்கை நடத்துகிற காலம் முழுதும்) கணவன் வேறொருத்தியை மணமுடித்துக்கொள்ளக் கூடாது என்று அக் கணவனுடன் உடன்படிக்கை செய்துகொண்டால், அது செல்லுடைமையாகும். அப்பொழுது அவன் அவளது ஆயுள் உள்ளளவும் இன்னொருத்தியை மணமுடிக்க முடியாது.

மேற்கூறியவற்றை அடிப்படையாகக்கொண்டு பார்க்கும்பொழுது, பல்மனைவியருடைமையைச் சில நிபந்தனைகளுடன் இசுலாம் அனுமதிக்கிறது என்பதும், பல்மனை மணம் கட்டாயமாக்கப்படவில்லை என்பதும் தெளிவாகின்றன.

ஒரு முசுலிமுக்குச் சட்ட அங்கீகாரம்பெற்ற நான்கு மனைவிகள் இருக்க, அதேகாலத்தில் ஐந்தாவது ஒரு திருமணம் நடைபெறுமேயானால், அது ஒழுங்கற்ற திருமணம் என்று கருதப்படும். ஆனால், முன்னுள்ள நான்கு மனைவிகளுள் ஒருத்தி இறந்து போகவோ, கணவனால் திருமணம் முறிக்கப்படவோ நேரிட்டால், ஐந்தாவதாக நடந்த ஒழுங்கற்ற திருமணம் நான்காவதாகக் கருதப்பட்டு, செல்லத்தக்கதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

2. **தக்க சாட்சிகள் இல்லாதிருத்தல் :** திருமணம் தக்க சாட்சிகளின் முன்னிலையில் நடைபெறவில்லையானால், அது ஒழுங்கற்ற திருமணமாகக் கருதப்படும்.

3. **சட்ட முரண்பட்ட நெருக்கடி (Unlawful conjunction) :** ஒரு முசுலிம் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை மணக்கும்பொழுது, அவர்கள் ஒருவருக்கொருவர் இரத்தத் தொடர்புடையவராகவோ, கொள்ளுறவு கொண்டவராகவோ, ஊட்டி வளர்த்த முறையினராகவோ இருத்தல் கூடாது.[1] காரணம், இவர்களுடைய வழித்தோன்றல் களிடையே திருமணம் கூடாதாகையால், சட்ட முரண்பட்ட நெருக்கடி ஏற்பட இடம் ஏற்பட்டுவிடும். எனவே, அத்தகைய உறவினரைத் திருமணம் செய்வது ஆகாதென்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக, ஒரு முசுலிம், தன்னுடைய மனைவி உயிருடனிருக்க, அவளுடைய சகோதரியையோ, அல்லது அவளுடைய சகோதரி மகளையோ திருமணம் செய்துகொண்டால், அது ஒழுங்கற்ற திருமண மாகும். சட்ட முரண்பட்ட நெருக்கடியை மீறித் திருமணம் செய்து, அதில் குழந்தைகள் பிறந்தால், அவை முறைமணப் பிறப்பினடியாகப் பிறந்த குழந்தைகள் (legitimate) ஆகக் கொள்ளப்படும். மனைவி இறந்தாலோ அல்லது திருமண முறிவு செய்யப்பட்டாலோ, சட்ட முரண்பட்ட நெருக்கடியை மீறிய பிந்திய திருமணம் ஒழுங்குத் திருமணமாகக் கருதப்படும்.

4. **தனிமையில் துயர் எண்ணிக் கழித்தல் அல்லது 'இத்தா' இருத்தல் (woman under-going 'Iddat') :** 'இத்தா' (Iddat) என்ற சொல்லுக்கு 'நாள் எண்ணுதல்' அல்லது காத்திருத்தல் என்று பொருள் கூறப்படும். இசுலாமிய சட்ட முறைப்படி மனைவி விதவை யான உடன் (கணவன் இறப்பதன்மூலமும் திருமண முறிவு செய்வதன் மூலமும் விதவையாக்கப்படலாம்) மறுகணமே வேறொருவரைத் திரு மணம் செய்துகொள்ளக் கூடாது. குறிப்பிட்ட காலம்வரை பொறுத் திருந்த பின்னரே அவள் வேறொருவரைத் திருமணம் செய்துகொள்ளச் சட்டம் இடம் தருகிறது. குறிப்பிட்ட காலம் என்பது, மூன்று மாத

---

[1] ஒருவர் இரு பெண்களை மணமுடிக்க விரும்பும்பொழுது, இருவரில் ஒருவர் ஆணாக இருந்திருந்தால்? என்று ஒரு கேள்வியை எழுப்பி, அவ்விருவரிடையேயும் திருமணத் தடை ஏற்படும் என்ற விடை கிடைப்பின், அவ்விரு பெண்களையும் அவர் ஒருசேர மனைவியாகக் கொள்ளலாகாது. எடுத்துக்காட்டாக, இரு சகோதரிகளில் ஒருவரை ஆணாகப் பாவித்தால், அவர்கள் இருவரிடையேயும் திருமணத் தடை ஏற்படும். அதேபோல், மனைவியுடைய தந்தையின் சகோதரிகளை ஆணாகப் பாவித் தால், அவளுக்கு அவர்கள் சிறிய தந்தை அல்லது பெரிய தந்தை முறையேற்படுவ தால், அவ்விருவரிடையேயும் திருமணத் தடை ஏற்படும் அதேபோல், மனைவியின் தாயின் சகோதரியை ஆணாகப் பாவித்தால் அவ்விருவரிடையேயும் தாய்மாமன்–மருமகள் முறை ஏற்படுவதால், இங்கும் திருமணத் தடை ஏற்படும்.

விடாய்த் தீட்டு வெளியாகி நிற்கும்வரை, அல்லது நான்கு மாதம் 10 நாள், அல்லது அவள் கருவுற்றிருந்தால், குழந்தை பிறக்கின்றவரை காத்திருப்பது ஆகும். இந்தக் குறிப்பிட்ட நாட்களில் விதவை தனிமையில் ஒதுங்கியிருப்பதே ' இத்தா இருத்தல் ' என்று சொல்லப்படுகிறது. உடலுறவு பூர்த்தியாயிருந்தாலும் இல்லாவிட்டாலும், கணவன் மீது வைத்திருக்கும் அன்பையும் மதிப்பையும் வெளிப்படுத்த அந்தக் குறிப்பிட்ட காலம்வரை விதவைக்குத் துயர் எண்ணிக் கழித்தல் கடமையாக்கப்பட்டிருக்கிறது.

கணவன் இறந்த பின்னர் விதவையானால்

(1) விதவை கணவன் இறந்த நாளில் இருந்து 4 மாதம் 10 நாள் முடிய ' இத்தா ' இருக்க வேண்டும்.

(2) மேற்குறிப்பிட்ட நாட்களுக்குள்ளாக அவள் கருவுற்றிருப்பது தெரிந்தால், குழந்தை பிறக்கின்றவரை தொடர்ந்து ' இத்தா ' இருக்க வேண்டும்.

கணவன் ' தலாக் ' என்னும் திருமண முறிவு செய்வதன் மூலம் விதவையானால்

(1) மாதவிடாய் ஏற்படுகிறவர்கள், கணவன் திருமணம் முறித்த நாளில் இருந்து மூன்று மாதவிடாய்க் காலம் முடிவடையும் வரை ' இத்தா ' இருக்க வேண்டும்.

(2) மாதவிடாய் நின்றுவிட்டவர்கள், மூன்று மாதம் முடிய ' இத்தா ' இருக்க வேண்டும்.

கணவன் வெளியூரில் இருக்கும்பொழுது இறந்துபோகவோ, திருமண முறிக்கவோ நேர்ந்தால், இறந்த நாளிலிருந்தோ, திருமணம் முறித்த நாளில் இருந்தோ ' இத்தா ' இருக்க வேண்டிய நாளைக் கணக்கிட வேண்டுமே அன்றி, இறந்ததாகவோ, திருமணம் முறித்ததாகவோ செய்தி கிடைத்த நாளில் இருந்து நாட்களைக் கணக்கிடக் கூடாது.

இசுலாமிய திருமணத்தின் நோக்கம் தந்தைவழியை நிலைநிறுத்துவதாகையால், முந்திய திருமணத்தின்மூலம் அவள் கருவுற்றிருக்கிறாளா ? இல்லையா ? என்பதை ' இத்தா ' இருத்தல்மூலம் தெரிந்து கொள்ள முடியும். ' இத்தா இருக்கும் நாளில் ' பெண்ணைத் திருமணம் செய்தால், அது ஒழுங்கற்ற திருமணமாகும். ஒழுங்கற்ற திருமணத்தின்மூலம் பிறக்கும் குழந்தைகள், முறைமணப் பிறப்பினடியாகப் பிறந்த குழந்தைகளாகக் (legitimate) கருதப்படும். ஆனால் மனைவி, மறுபடி தாம்பத்திய உறவு கோரும் கணவனின் உரிமையை

(restitution of conjugal rights), ஒழுங்கற்ற திருமணத்தைக் காட்டி எதிர்த்து வெற்றிபெற முடியும்.

5. மத வேறுபாடு (Difference of Religion) : இசுலாம் வேதம் அருளப்பெற்ற மதம், வேதம் அருளப்பெறாத மதம் என்று மதங்களை இரண்டாகப் பிரிக்கின்றது. கிறித்தவர்களுக்கு இன்ஜீல் என்னும் சுவிசேஷங்களும், முசுலிம்களுக்குத் 'திருக் குர்ஆனும்', யூதர் களுக்குத் தவ்ராத்தும் வேதங்களாகும். இவ்வாறு 'வேதம்' ஒன்றினை யுடைய மதங்களை வேதம் அருளப்பெற்ற மதங்கள் என்று கூறலாம். வேத நூலை அருளப்பெற்ற மதங்களைப் பின்பற்றுவோர் 'கித்தாபி'— 'வேத நூலுடையோர்' என்று அழைக்கப்படுகின்றனர்.

ஒரு முசுலிம் ஆண் ஒரு முசுலிம் பெண்ணையோ, வேதமுடைய வளையோ (கித்தாபி) திருமணம் செய்துகொள்ளலாம். ஆனால், ஒரு முசுலிம் பெண் ஒரு முசுலிமையே திருமணம் செய்துகொள்ள வேண்டும். ஒரு வேதமுடையவனைக் (கித்தாபி)கூட அவள் திருமணம் செய்து கொள்ளலாகாது. வேதம் அருளப்பெறாத பிற மதத்தாரை அவள் திருமணம் செய்துகொள்ளவே கூடாது. பார்சிகளும் (Parsis) சௌராஷ்டிரர்களும் (Sowrashtras) வேதம் உடையவர்களாக'ஷீயா'ப் பிரிவினரால் கருதப்படுகின்றனர். எனவே, இந்த விதிவிலக்குக்கு மாறு பட்டுத் திருமணம் செய்துகொண்டால், அஃது ஒழுங்கற்ற திருமண மாகக் கருதப்படும்.

ஒரு முசுலிம், ஓர் இந்துப் பெண்ணைத் திருமணம் முடித்தால், அஃது ஒழுங்கற்ற திருமணமாகும். ஆகையால், அதன் மூலம் பிறக்கும் குழந்தைகள் முறைமணப் பிறப்புக் குழந்தைகளாகக் (legitimate) கருதப்படுவர். ஆனால், இருவரில் ஒருவர் கிறித்தவராக இருந்தால், 1872ஆம் ஆண்டு கிறித்தவத் திருமணச் சட்டத்தின்படி திருமணம் பூர்த்தியாக்கப்படவில்லையானால், அச் சட்டத்தில் உள்ள பிரிவு 4-ன்படி, அத் திருமணம் இல்லாத் திருமணம் ஆகும். ஆகையால், அதன் அடியாகப் பிறக்கும் குழந்தைகள் முறையிலா மணப்பிறப்புக் குழந்தைகள் (illegitimate) ஆகின்றனர்.

Abdul Razak *vs* Aga Md. Jaffer (1894)

(21 I.A. 56)

கல்கத்தாவில் இருந்த இரு சகோதரர்களில் ஒருவர் பர்மாவில் குடியேறினர். அவர் பர்மாவில் ஒரு புத்தமதப் பெண்ணைத் திருமணம் செய்தார்.

பர்மாவில் திருமணம் நடைபெற்றதற்கோ, மணந்துகொண்ட புத்தமதப் பெண் இசுலாத்தைத் தழுவியதற்கோ சான்றுகள் இல்லை

என்று தீர்ப்புக் கூறப்பட்டதால், ஒரு முசுலிமுக்கும் புத்தமதப் பெண்ணுக்கும் நடந்த திருமணம் செல்லுமா? என்ற கேள்விக்கு விடை கிடைக்காமல் போயிற்று.

இந்து மதக் கொள்கைப்படி, இந்துக்கள் உருவ வழிபாட்டை உடையவராயிருப்பதாலும், தனிப்பட்ட வேதம் இல்லாதவராயிருப்பதாலும், இந்து-முசுலிம் திருமணம் இசுலாமிய சட்டப்படி செல்லும் திருமணம் (valid marriage) ஆகாது. ஆனால், சிறப்புத் திருமணச் சட்டத்தின்கீழ் (Special marriage Act) இந்துவுக்கும் முசுலிமுக்கும் இடையே நடைபெறும் திருமணம் செல்லுடையதாகும் (valid).

6. **இடைப்பட்ட நிகழ்ச்சியால் முறைகேடாதல் (Supervening Illegality):** திருமணம் செல்லுடையதாக (valid) இருக்கும் பொழுது திடீரென எதிர்பாராது ஏற்படும் நிகழ்ச்சிகளால், நடைபெற்ற திருமணம் முறைகெட்ட திருமணமாகக் கருதப்படும். எடுத்துக்காட்டாக, இருவரில் ஒருவர் மதம் மாறினால், உடன்தானே திருமணம் செல்லுடைமையை இழந்துவிடுகிறது.

7. **வேறு காரணங்கள்:**

(அ) மக்காவிற்குப் புனித யாத்திரையை மேற்கொண்டிருக்கும் ஒரு முசுலிம், பயணம் முடிவது வரையில் திருமணம் செய்துகொள்ளக் கூடாது.

(ஆ) திருமண முறிவு செய்துகொண்ட பழைய தம்பதிகள் மீண்டும் தாங்கள் திருமணம் செய்துகொள்ள விரும்பினால், இசுலாமிய சட்ட விதிகளைப் பூர்த்தி செய்த பின்னரே இருவரும் செல்லத்தக்க (valid) திருமணம் செய்துகொள்ள முடியும்.

திருமண வகைகள்

'சுன்னி' சட்டப்படி திருமணத்தை மூன்றுகப் பிரிக்கலாம்:

(1) செல்லும் திருமணம்—ஸஹீஹ் (Valid marriage).

(2) ஒழுங்கற்ற திருமணம்—ஃபாஸித் (Irregular marriage).

(3) இல்லாத் திருமணம்—பாத்தில் (Void marriage).

மேலே குறிப்பிடப்பட்ட எல்லா விதிகளுக்கும் உட்பட்டு நடைபெற்ற திருமணமாயிருந்தால், அது செல்லும் திருமணம் (valid marriage) ஆகும். இதில் எந்தக் குறைபாடுகளையும் காண முடியாது.

ஒழுங்கற்ற திருமணம், மேலே கூறப்பட்ட குறைபாடுகள் உடையதாக இருக்கும். இதில், நிலையான தடைகளுக்கு உட்பட்ட திருமணம்,

இல்லாத் திருமணம் (void marriage) என்றும், தாற்காலிகத் தடையாக இருக்குமானால், அது நீக்கப்படுவது வரையில் செல்லாத் திருமணம் (invalid) என்றும் பிரித்துக் கூறப்படுகிறது. இல்லாத் திருமணமாக்கும் தடையான குருதித் தொடர்பு, கொள்ளுறவு, ஊட்டி வளர்த்த செவிலித்தாய் முறை, பல்கணவருடைமை ஆகிய நான்கும் நிலையான, நீக்கப்பட முடியாத தடைகளாதலால், இவற்றை மீறி நடக்கும் திருமணங்கள் இல்லாத் திருமணமாகக் (void marriage) கருதப்படும். சட்ட முரண்பட்ட நெருக்கடி காரணமாகவும், திருமணங்கள் இல்லாத் திருமணமாகச் சில நீதிமன்றங்களால் கருதப்படுகின்றன. தாற்காலிகத் தடைக்குட்பட்ட திருமணங்கள் தடை நீக்கப்படும் வரையில் செல்லாத் திருமணமாகக் (invalid marriage) கருதப்படுகின்றன. தடை நீக்கப்பட்டதும் அவை செல்லும் திருமணம் (valid marriage) ஆகிவிடுகின்றன. 'ஷீயா' சட்டம் திருமணங்களைச் செல்லும் திருமணம் (valid) என்றும், இல்லாத் திருமணம் (void) என்றும் இரண்டு வகையாகவே பிரித்துள்ளது.

திருமணத்தால் ஏற்படும் பயன்கள்

ஒழுங்கற்ற திருமணத்தைப்பற்றிச் சட்டம் அதிக அக்கறை காட்டுவதில்லை. ஒழுங்குக்குத்தான் சட்டமே தவிர, ஒழுங்கின்மைக்கு அன்று. ஒழுங்கான திருமணம் நடைபெற்று, அது செல்லுடைமை பெற்றதாய் இருந்தால், தம்பதிகளும் அவர் வழித்தோன்றல்களும் சட்டத்தின்மூலம் சில உரிமைகளையும் கடமைகளையும் பெறுகின்றனர்.

இல்லாத் திருமணத்தின்மூலம் பிறக்கும் குழந்தைகள், முறையிலா மணப்பிறப்பில் பிறந்த குழந்தைகளாகக் (illegitimate) கருதப்படுகின்றன. இல்லாத் திருமணம் தம்பதிகளிடையே எந்தவித உரிமைகளையும் கடமைகளையும் ஏற்படுத்துவதில்லை. திருமணமே இல்லாததாகையால், திருமண முறிவுக்கே இங்கு இடமில்லை. இல்லாத் திருமணத் தம்பதிகள், அவரவர் உரிமைகளையும் உதறிவிட முடியும்.

சட்டம் அங்கீகரிக்கும் திருமணம் நடந்து, உடலுறவு பூர்த்தி செய்யப்பட்டிருந்தால், கணவன் மனைவிக்கு 'மஹர்'த் தொகை கொடுக்கக் கடமைப்பட்டவனாவான். மனைவி விதவையாக்கப்பட்டால், 'இத்தா' (தனிமையில் துயர் எண்ணிக் கழித்தல்) இருக்கவேண்டியது அவளுடைய கடமையாகும். இருவருக்கும் பிறக்கும் குழந்தைகள், முறை மணப்பிறப்புக் குழந்தைகளாகக் கருதப்படுவர். செல்லாத் திருமணமாயிருந்து (invalid) உடலுறவு பூர்த்தியாகாமல் இருந்தால், கணவன் மனைவியரிடையே எந்த உரிமையும் எழுவதில்லை. செல்லுடைமைத் திருமணத்தால் வரும் மனைவி, தகுதி மஹர் (Proper Mahr) அல்லது சிறப்பு மஹர் (Specified Dower) இதில் எது

அதிகமோ அதைப் பெற உரிமை பெற்றவளாவாள். செல்லாத் திருமணமாயிருந்தால் (invalid), மனைவி தகுதி மஹர் அல்லது சிறப்பு மஹர், இதில் எது குறைவோ அதையே பெறத் தகுதி உடையவளாவாள். முன்னது தரத்தில் உயர்ந்தது என்பதைக் காட்டும்பொருட்டு, இது வரையறுக்கப்பட்டிருக்கிறது.

செல்லும் திருமணம், தம்பதிகளிடையே உடலுறவு கொள்ளு வதைச் சட்ட உரிமையாக்குகிறது; அதனால் பிறக்கும் குழந்தைகளை முறை மணப் பிறப்பாக்குகின்றது; கணவன் மனைவியரிடையே சொத் துரிமையை ஏற்படுத்துகின்றது, மற்ற உரிமைகளையும் கடமைகளையும் ஏற்படுத்துகிறது; 'மஹர்'த் தொகை கொடுப்பதைக் கணவனுக்குக் கடமையாக்குகின்றது; மனைவியை வைத்துக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பைக் கொடுக்கிறது; மனைவி கற்புடையவளாகவும், கீழ்ப்படிபவ ளாகவும் நடந்துகொள்ளுமாறு பணிக்கிறது; மனைவி விதவையாக்கப் பட்டால், 'இத்தா' இருத்தலைக் கடமையாக்குகிறது; மனைவியின் 'மஹர்'த் தொகைக்கு உரிமை அளிக்கிறது. இருவரின் உறவின ரிடையேயும் சிலர் திருமணத்தடை வரம்புக்கு உள்ளாகின்றனர்.

மணமக்கள் தாம் வாழும் நாட்டின் நடைமுறைக்கும் சட்டத்திற்கும் உட்பட்டுச் சில உரிமைகளையும் கடமைகளையும் ஒப்பந்தத்தின் மூலம் ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

மனைவி எந்த இடத்தில் வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதற்கு ஒப்பந்தம் செய்துகொள்ளலாம். தான் இருக்கின்ற வரையில், வேறு எவளையும் தன் கணவன் மறுதாரமாகத் திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்று ஒப்பந்தம் செய்துகொண்டால் அது செல்லும். இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 26ஆவது பிரிவு இதைக் கட்டுப்படுத்தாது. ஒப்பந்தத்தைக் கணவன் மீறினால், மனைவி திருமண முறிவு செய்து கொள்ளும் உரிமையைப் பெறுகிறாள். தூய இசுலாமியச் சட்டப்படி மனைவி திருமண முறிவு செய்ய முடியாது. ஆனால், ஒப்பந்தத்தைக் கணவன் மீறும்பொழுது, அவள் கணவனின் ஏஜெண்டாக இருந்து திருமணத்தை முறிவு செய்வதாகக் கொள்ளவேண்டும்.

மனைவியின் வாழ்க்கைச் செலவுகளுக்கு அவன் எவ்வளவு தொகை கொடுக்கவேண்டும் என்பது குறித்தும் ஒப்பந்தம் செய்துகொள்ளலாம். உரிமை மஹர் (Prompt dower) எவ்வளவு, தாமத மஹர் (Deferred dower) எவ்வளவு என்று குறிப்பிட்டும் ஒப்பந்தம் செய்துகொள்ளலாம். மனைவிக்கு முந்திய கணவனின் மூலம் குழந்தைகள் இருந்தால், அவர் களைப் பராமரிக்கும் செலவு குறித்தும், குழந்தைகளின் கல்வியைப் பற்றியும் மனைவியின் சொத்துக்களை எந்த முறையில் கணவன் பரா மரிக்க வேண்டும் என்பது குறித்தும், கணவனின் கொடுமையில்

(illtreatment) இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்.

பொதுவாக, மனைவி கணவனுடனேயே வாழவேண்டும். மனைவி தாய் வீட்டிலேயே வாழவேண்டும் என்று விரும்பினால், அதற்குக் கணவன் இணங்க வேண்டும் என்னும் அவசியம் இல்லை.

திருமணத்தை முறிக்கும் எந்தவித ஒப்பந்தமும் கணவன் மனைவியரிடையே செல்லாது. திருமணம் நீடிக்கவேண்டிய காலவரையறையைக் குறிக்கும் ஒப்பந்தமும் செல்லாது.

திருமணத்தின் வாயிலாகக் கணவனுக்கு அளிக்கப்பட்டிருக்கும் சிறப்பு உரிமைகளில் கீழ்வருவனவற்றைக் குறிப்பிடலாம் :

(1) இசுலாமிய சட்டமுறைப்படி அவன் தன் மனைவியிடம் திருமண முறிவு (divorce) செய்து கொள்ளமுடியும்.

(2) மனைவி தன்னுடைய நியாயமான வேண்டுகோளுக்குக் கட்டுப்பட மறுத்தால், அவளைத் தான் பராமரிப்பதில் நின்றும் நீக்கிக் கொள்ளமுடியும்.

(3) தான் மறுபடி தாம்பத்திய உறவுகோரும் உரிமை (restitution of conjugal rights) கேட்கமுடியும்.

(4) அவளுடைய சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தி, அவள் திருந்துவதற்குத் தக்க முறையில் அவளைக் கண்டிக்கலாம்; அதற்கான சிறு தண்டனைகளை அவளுக்கு அளிக்கலாம்.

Moonshee Bazloor Rahman *vs* Shamsunnisa Begam (1867)

(II MIA. 551)

முன்ஷீ என்பவன் ஒரு விதவையைத் திருமணம் செய்தான். திருமணத்திற்குப் பின்னர் அவளுடைய சொத்துக்களை அவன் அபகரித்துக்கொண்டதோடு, அவளைக் கொடுமையும் படுத்தினான். சில சமயங்களில் அவன் அவளைத் தனிமையில் அறைக்குள் அடைத்தும் போட்டான். எனவே, அவள் தன்னுடைய சொத்துக்களைத் திரும்பப் பெறவும், தனக்கு வாழ்க்கைப் படி கோரியும் முறையிட்டாள். இதற்கு எதிராகக் கணவன், அவள் தன்னுடன் மறுபடி தாம்பத்திய உறவுடன் வாழ வரவேண்டும் என்று கோரி எதிர்வழக்காடினான்.

இசுலாமிய சட்டத்தில் மறுபடி தாம்பத்திய உறவு கோரும் உரிமை (restitution of conjugal rights) என்று ஒன்று கிடையாது. இது

இங்கிலாந்து நாட்டுச் சட்ட அடிப்படையில் இங்கு வளர்ந்த ஒன்றாகும். இசுலாமிய சட்டத்தில் இதற்கு இடமில்லை. கணவனுக்குச் சில தனிப் பட்ட உரிமைகளை இசுலாமிய சட்டம் வழங்கியிருக்கிறது. அவற்றோடு ஒத்ததாகக்கூட இதைக் கருத முடியாது. அப்படியே இசுலாமிய சட்டம் இதை அனுமதிப்பதாகக் கருதினாலும், அவள் கொடுமைக் குள்ளாக்கப்பட்டிருப்பதால் (cruelty) மறுபடி தாம்பத்திய உறவு கோரும் உரிமை கணவனுக்கில்லை என்று வாதாடப்பட்டது.

இசுலாமியத் திருமணம் ஓர் ஒப்பந்தம் ஆகையால், மனைவி கணவ னுடன் சேர்ந்து வாழ மறுத்துச்சென்றால், அவன் மறுபடி அவளிடம் தாம்பத்திய உறவு உரிமை கோருதலை, ஏற்றதை ஆற்றுதல் (Specific performance) என்ற கொள்கைக்கு உட்பட்டதாகக் கருதவேண்டும். ஆனால், நீதிமன்றம் ஆணைபிறப்பித்தாலும், அவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதைக் கண்காணித்துவர முடியாது. எனவே, மேற் கூறிய கொள்கையின் அடிப்படையில் தீர்வழி (remedy) கிடைக்கப் பெறாத ஒன்றாகும். நீதிமன்றத்தின் பொறுப்பு, இதுபோன்ற சந்தர்ப் பங்களில், தம்பதிகளிருவரும் வீட்டுப்படி ஏறியதும் முடிந்துவிடுகிறது. அதற்கு மேலும் சென்று, அவ்விருவரும் எப்படி நடந்துகொள்கிறார்கள் என்று கண்காணிப்பது முடியாது. எனவே, இதற்கு ஒரு தீர்வழியாக (remedy) மறுபடி தாம்பத்திய உறவு உரிமை (restitution of conjugal rights) கோருவதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தீர்ப்பளித்தது.

தம்பதிகளில் ஒருவர், தக்க சட்ட ரீதியான காரணம் எதுவும் இன்றி மற்றவரைவிட்டுப் பிரிந்து வாழ்ந்தால், பிரிவுத்துயர் பெற்றவர் மறுபடி தாம்பத்திய உறவு உரிமையைக் கோர உரிமை பெற்றவராவார். ஆனால், இந்த உரிமையைக் கணவன் கேட்டு முறையிடும்பொழுது, மனைவி கீழ்வரும் காரணங்களைக் காட்டி அதற்கு மறுத்தால், அம் மறுப்பு ஏற்றுக்கொள்ளப்படும் :

1. துன்புறுத்தல் அல்லது கொடுமைப்படுத்தல் (Cruelty) : இயல்பாகத் துன்புறுத்தலுக்கும் (actual cruelty), சட்டக் கொடுமைக்கும் ஆங்கிலேயர் சட்டப்படி வேறுபாட்டைக் காணலாம். ஆனால் இசுலாமிய சட்டம், சட்டப்படி துன்புறுத்தல் என்பதை நேரடி யாக ஒப்பவில்லையாயினும், மறைமுகமாக ஏற்றுக்கொள்கிறது. சட்டப்படி கொடுமையை நிலைநாட்ட, உண்மையாகவோ, அல்லது உண்மை என்று கருதத்தக்க முறையிலோ, கொடுமையின் அவதியால் அவன் மனம் அலைக்கழிக்கப்பட்டு, அதன் விளைவாக அவளது உடைமை, பாதுகாப்பு ஆகியவை ஆபத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளன என்பனவற்றை மெய்ப்பித்துக் காட்டல் வேண்டும்.

2. அபாண்டமாகப் பிறன்மனை புணர்ந்ததாகக் குற்றம் சாட்டல் (False charge of Adultery): கணவன் அபாண்டமாக மனைவிமீது பிறன்மனை புணர்ந்த குற்றத்திற்கு ஆளானவள் என்று பழிசாட்டினால், அந்தக் காரணத்தைக் கொண்டும், கணவன் மறுபடி உடன்வாழக் கோரும் உரிமையை இழந்தவனாவான்.

3. திருமணம் உடலுறவால் பூர்த்தியாகாமல் இருந்து, உரிமை மஹர் (prompt dower) கணவனால் கொடுக்கப்படாதிருந்தால், அதைக் காரணமாகக் காட்ட முடியும். ஆனால், இதுபோன்ற சந்தர்ப்பங்களில் நீதிமன்றங்கள் நிபந்தனை ஆணை (conditional order) விதித்து விடும். எனவே 'உரிமை மஹரை'க் கணவன் கொடுத்தால், அந்த உரிமையை இழக்காதவனாவான்.

4. வழக்கம் (Custom) காரணமாக: கணவன் முசுலிம் 'கார்வா' (Kharwa) சமுதாயத்திலிருந்து வெளியேற்றப்பட்ட காரணத்தால், அவன் தன்னுடைய உரிமையை இழந்தவனாவான் என்று ஒரு வழக்கில் பம்பாய் உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது.

கணவன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமைகள்

(1) மனைவி தன்னுடைய நியாயமான விருப்பத்திற்கு இணங்கியும், வேண்டுகோளை ஏற்றும் நடக்கிற காலமட்டில், கணவன் தன்னுடைய இயல்புக்கும் வருமானத்திற்கும் தக்க நிலையில் அவளை வைத்துப் பாதுகாக்க வேண்டும்.

(2) ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் இருந்தால், ஒவ்வொருத்திக்கும் தனித்தனி இருக்கை வசதி அளிப்பதும், எல்லோரையும் வேற்றுமையின்றி நடத்துவதும், எல்லோருக்கும் சம அந்தஸ்து அளிப்பதும் கணவனின் கடமையாகும்.

(3) மனைவி தன்னுடைய பெற்றோர்களையும் உறவினர்களையும் போய்ப் பார்த்துவர விரும்பினால், கணவன் அதற்கு அனுமதி அளிக்க வேண்டும்.

மேலே கூறப்பட்ட கடமைகளைக் கணவன் செய்யத் தவறினால், மனைவி வாழ்க்கைப் படி கேட்பதற்கு உரிமையுடையவளாவாள். ஹனபி சட்டப்படி, கழிந்துபோன நாட்களுக்கு வாழ்க்கைப் படி (maintenance) கேட்க மனைவிக்கு உரிமை கிடையாது. கணவன்-மனைவியர் இடையே இது குறித்து உடன்படிக்கை இருந்தால், அந்த அடிப்படையில்தான் அவள் கேட்டு அதை அடைய முடியும். 'ஷாபி' பிரிவினரின் சட்டப்படி, உடன்படிக்கை (agreement) இருந்தாலும் இல்லாவிட்டாலும், கழிந்துபோன நாட்களுக்கு வாழ்க்கைப் படி கேட்க

மனைவிக்கு உரிமை உண்டு. இவை இசுலாமிய சட்ட அடிப்படையில் கொடுக்கப்பட்ட உரிமைகள்.

ஆனால், இன்று வாழ்க்கைப் படி கோரும் உரிமை, குற்றஇயல் நடைமுறைச் சட்டத் தொகுப்பு — பிரிவு 488-ல் (S-488 of Code of Criminal Procedure) வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. அதன்படி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, வாழ்க்கைப் படி பெறமுடியும்.

வருமானமுள்ளவர்களோ, அதற்கு வழி இருப்பவர்களோ, மனைவியையும் குழந்தைகளையும் வைத்துக் காப்பாற்றத் தவறினாலோ, அல்லது காப்பாற்ற மறுத்தாலோ, நீதிமன்றஆணை பெற்று, அவர்களிடத்திருந்து இவர்கள் வாழ்க்கைப் படி பெற்றுக்கொள்ள முடியும். 1955-க்கு முன்னர், உச்சமான வாழ்க்கைப் படியாக ரூபாய் 100 பெற முடியும். அதன் பின்னர், கூடுதல் வரம்பு ரூபாய் 500 ஆக உயர்த்தப் பட்டுள்ளது. இதைக் கணவன் கொடுக்கத் தவறினால், தண்டத்தொகை (fine amount) போல் வசூலிக்க முடியும்.

ஆனால், மனைவி விபசாரம் நடத்தி வருவதாகவோ, தக்க காரணம் இன்றித் தன்னோடு வாழ மறுப்பதாகவோ, உடன்படிக்கைக்கு மாறாகப் பிரிந்து வாழ்வதாகவோ கணவன் மெய்ப்பித்தால், அவளுக்கு வாழ்க்கைப் படி மறுக்கப்படும். மற்றொரு மனைவியோ, தகாத பெண்களோ தன் கணவனுடன் வீட்டில் இருத்தலைத் தக்க காரணமாகக் காட்டியும் மனைவி வாழ்க்கைப் படி கோர முடியும்.

இசுலாமிய சட்டம் வருமானத்தின் அடிப்படையில் வாழ்க்கைப் படி கோரவேண்டும் என்று கூறவில்லை.

குற்றஇயல் நடைமுறைச் சட்டத்தின்படி கூடுதல் வரம்பு ரூ. 500 ஆகும். ஆனால், இசுலாமிய சட்டப்படி, வாழ்க்கைப் படிக்கு எல்லை குறிப்பிடப்பட வில்லை.

இசுலாமிய சட்டப்படி, மனைவி ஏழையாயினும் செல்வச் சீமாட்டியாயினும், தன் கணவனிடம் வாழ்க்கைப் படி கோர உரிமை பெற்றவளாவாள்.

இசுலாமிய சட்டப்படி கணவனால் திருமணம் முறிக்கப்பட்டால், மனைவி 'இத்தா' இருக்கும் காலம் முடிய வாழ்க்கைப் படி பெற உரிமையுடையவள் ஆவாள். ஆனால், அதேபோல், கணவன் இறந்ததன் மூலம் கைம்பெண்ணாகிவிட்டவள்தான், இத்தா இருக்கும் நாட்களில் வாழ்க்கைப் படி கோரும் உரிமை பெறமாட்டாள் என்று ஆகா முஹம்மது வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது.

Aga Mahomed *vs* Kulsom Bibi
(25 Cal-9)

கணவன் இறந்து போனால், விதவைக்கு ஓராண்டு காலம் வரை வாழ்க்கைப் படி கோர உரிமையுண்டு என்று திருக் குர்ஆனிலிருந்து ஆதாரம் காட்டப்பட்டது. ஆனால், பிரிவி கவுன்சில், ஹிதாயா என்னும் இசுலாமிய சட்ட நூலில் இது குறித்து ஒன்றும் கூறப்படவில்லை யாதலால், ஏற்றுக்கொள்ளப் படுவதற்கில்லை என்று தீர்ப்புக் கூறியது. இதனால், கணவன் மரித்தால் விதவையான இசுலாமியப் பெண்ணுக்கு வாழ்க்கைப் படி கிடைக்காமல் போகிறது. ஆனால், கணவனால் திருமணம் முறிக்கப்பட்டு விதவையான பெண்ணுக்கு வாழ்க்கைப் படி தரப் படுகிறது.

இந்த முடிவின் மூலம், கணவன் இறந்ததால் கைம்பெண்ணானவள், திருமணம் முறித்ததனால் விதவையானவளைவிட அந்தஸ்தில் குறைந்தவளாக்கப் பட்டுவிடுகிறாள். மேலும், திருக் குர்ஆனிலும் சிறந்த ஆதாரம் 'ஹிதாயா' என்றாகிவிடுகிறது. எனவே, பிரிவி கவுன்சில் இந்தத் துரதிருஷ்டவசமான முடிவைத் திரும்பப் பரிசீலிக்க வேண்டும் என்று பேராசிரியர் வில்சன் கூறுகிறார்.

திருமணத்தை மெய்ப்பித்தலும் திருமணத் துணிபும்

திருமணத்தின் போது சாட்சிகளாக இருந்தவர்கள் இப்போதும் உயிர் வாழ்ந்திருந்தால், இவர்களின் மூலம் திருமணம் நடந்ததை மெய்ப்பிக்கலாம். அல்லது, தக்க சான்றிதழோ, பதிவேடோ இருந்தால் அவற்றின் மூலமும் மெய்ப்பிக்கலாம். இவ்விதம் நேரடியாக மெய்ப்பிக்க முடியாது போகும்பொழுது, சிற்சில காரணங்களையும் சூழ்நிலைகளையும் அடிப்படையாக வைத்து, திருமணம் குறிப்பிடப்பட்ட அவ்விருவரிடையே நடைபெற்றதாகத் துணியலாம். இதைத் திருமணத் துணிபு **(presumption of marriage)** என்று அழைக்கலாம்.

1. கணவன் மனைவியராக வாழ்ந்தவரில் ஒருவர், மற்றவரோடு தமக்குத் திருமணம் நடந்ததாக ஒப்புக்கொண்டால், இருவர் இடையேயும் இல்லாத் திருமணமாக்கும் தடை எதுவும் இல்லாதிருந்தால், இருவரிடையேயும் செல்லத்தக்க திருமணம் நடைபெற்றதாகத் துணிபு கொள்ளலாம் (45 Cal 578).

2. ஒரு குழந்தையைத் தன்னுடைய முறைமணப் பிறப்புக் குழந்தை **(legitimate child)** என்று ஒரு மனிதன் ஏற்றுக்கொண்டால், ஏற்றுக்கொண்டவரிடையேயும், அக் குழந்தையைப் பெற்ற தாயிடையேயும் செல்லத்தக்க திருமணம் நடந்ததாகச் சில சந்தர்ப்பங்களில் துணிபு

கொள்ளலாம். இருவரிடையேயும் இல்லாத் திருமணமாக்கும் தடை எதுவும் இருக்கக்கூடாது.

3. திருமணம் நடந்ததை மெய்ப்பிக்க நேரடிச் சான்று எதுவும் இல்லாதபொழுது சில சந்தர்ப்பங்களையும் சூழ்நிலைகளையும் அடிப்படையாக வைத்து, இருவரிடையேயும் திருமணம் நடைபெற்றதை ஊகிக்கலாம். இருவரும் உடலுறவு கொண்டிருந்தனர் என்பதைமட்டும் மெய்ப்பித்தால் போதாது. இருவரும் கணவன் மனைவியராகவே உடலுறவு கொண்டு வாழ்ந்து வந்தனர் என்று மெய்ப்பிக்கப்பட வேண்டும். ஒருவர் மற்றவரைத் தம்முடைய மனைவியாக அங்கீகரித்தார் என்றும், அதுவும் அவளுக்கு மனைவியினுடைய அந்தஸ்தை உண்மையிலேயே கொடுத்து, அவளை மனைவியாக அங்கீகரித்திருந்தார் என்றும் மெய்ப்பித்துக் காட்டுவதன் மூலம், இருவரிடையேயும் செல்லத்தக்க திருமணம் நடைபெற்றதாகத் துணியலாம்.

Fathe Mahomed *vs* Abdul Rahman (1931)

(12 Lah—396)

கணவனை இழந்த ஒரு முசுலிம் பெண், கணவன் வீட்டிலேயே இருந்து வந்தாள். அப்பொழுது அவள் வேறொரு முசுலிமோடு தொடர்பு கொண்டாள். இவனுடன் சேர்ந்து வாழ்ந்து வந்தாள். இவ்விருவரிடையேயும் திருமணம் நடைபெற்றதற்கான சான்று எதுவும் மெய்ப்பிக்கப்படவில்லை.

இவர்கள் இருவரும் ஒரே இடத்தில் சேர்ந்து வாழ்ந்து வந்தார்கள் என்பதை மட்டும் தடயமாகக்கொண்டு இருவரிடையேயும் திருமணம் நடைபெற்றதாகத் துணியமுடியாது. இவர்கள் ஒரே இடத்தில் வாழ்ந்ததோடு, கணவன்-மனைவியராகத்தாம் வாழ்ந்தார்கள் என்பது மெய்ப்பிக்கப்படவில்லை யாதலாலும், மனைவியின் அந்தஸ்தை அவளுக்கு இவன் கொடுத்திருந்தான் என்பதற்குச் சான்றுகள் இல்லையாதலாலும் இருவரிடையேயும் திருமணம் நடைபெற்றதற்கான துணிபு கொள்ள முடியாது என்று லாஹூர் உயர்நீதிமன்றம் இந்த வழக்கில் தீர்ப்புக் கூறியது.

Mohamed Amin *vs* Vakil Ahmed

('52 ASC 358)

உத்தரப்பிரதேசத்தில் ஒரு முசுலிம் தம்முடைய மனைவியோடும், நான்கு குழந்தைகளோடும் வாழ்ந்துவந்தார். அவர் இறந்ததும், அவருடைய மருமக்களும், சகோதரரும் அந்த நான்கு குழந்தைகளின் தாயை அவர் திருமணம் முடிக்கவில்லை என்றும், குழந்தைகள் முறை

யிலா மணப் பிறப்புக் குழந்தைகள் என்றும் ஒரு வதந்தியைக் கிளப்பினர். ஆகவே, அவள் சில சொத்துக்களைக் கணவனின் மருமக்களுக்கும் சகோதரர்களுக்கும் கொடுத்து, ஒரு சுமுக முடிவை ஏற்படுத்திக்கொண்டாள். வயது வராத குழந்தைகளின் சார்பாக, மூத்த மகன் முச்சலிகாவில் கையொப்பமிட்டான். வயது வராதவர்கள் ஒப்பந்தத் தரப்பினர் (party to contract) ஆகார் ஆதலால், இந்த ஒப்பந்தம் செல்லாது என்று வழக்குத் தொடர்ந்தனர்.

குறிப்பிடத்தக்க நேரடிச் சான்றுகள் திருமணம் நடைபெற்றதற்கு இல்லையாயினும், நெடுங்காலம் இருவரும் கணவன் மனைவியராக வாழ்ந்து, உடலுறவு கொண்டிருந்ததாலும், கணவன் அக் குழந்தைகளைத் தன்னுடைய குழந்தைகள் என்று ஏற்று அவர்கள் பேரில் சொத்துக்களை வாங்கி இருந்ததாலும், இருவரிடையேயும் திருமணம் நடைபெற்றதாகத் துணியலாம் என்று பிரிவி கவுன்சில் தீர்ப்பு அளித்தது.

இல்லாத் திருமணமாக்கும் தடைகள் இருப்போரிடையே, எந்தக் காரணத்தைக் கொண்டும் எந்தக் காலத்திலும் திருமணம் நடைபெற்றதாகத் துணிபுகொள்ள முடியாது.

'A' என்பவன் 'B' என்ற பெண்ணின் குழந்தைகளைத் தன்னுடைய குழந்தைகள் என்று அங்கீகரித்து ஏற்றுக்கொண்டால், இருவரிடையேயும் திருமணம் நடைபெற்றதாகத் துணிபு கொள்ளலாம். 'A' என்பவன் 'B'யை மணந்துகொண்டேன் என்று தெரிவிக்க, அதை 'B' ஏற்று அங்கீகரித்ததற்குச் சான்றுகள் இருப்பினும், இருவர் இடையேயும் திருமணம் நடைபெற்றதாகத் துணிபு கொள்ளலாம்.

திருமண நிச்சய முறிவு

இருவரிடையே திருமணம் நிச்சயிக்கப்பட்டுப் பின்னர் அது நிகழ்வுறாது போனால், அதற்குக் காரணமாயிருந்தவரிடம் இழப்பீடு கேட்கவோ, ஏற்றது ஆற்றல் (specific performance) என்ற கொள்கையின் அடிப்படையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்று வற்புறுத்தவோ மற்றவருக்கு உரிமை கிடையாது. திருமணம் நிச்சயிக்கப்பட்டதன் அடிப்படையில் பொருளோ பணமோ கொடுக்கல் வாங்கல் செய்திருந்தால், அதைத் திரும்பப் பெறமட்டும் இடமிருக்கிறது.

தாற்காலிகத் திருமணம் அல்லது 'முத்ஆ'
(Temporary or 'Muta' marriage)

வெறும் சிற்றின்பம் நுகர்தற்பொருட்டே 'முத்ஆ'த் திருமணம் நடைபெறுகிறது. 'ஷீயா'ப் பிரிவிலுள்ள 'பன்னிரு கூட்டத்தவர்'

இத் திருமணத்தை அங்கீகரிக்கின்றனர். அவர்களில்கூட மிகவும் கீழ் மட்டத்திலுள்ளவரிடையேதான் இத் திருமணம் பெரும்பாலும் நடைபெறுகிறது. அவர்கள் திருமணத்தை ' நிரந்தரத் திருமணம் ' (permanent marriage) என்றும், ' தாற்காலிகத் திருமணம் ' (temporary marriage) என்றும் இரண்டாகப் பிரிக்கின்றனர். தாற்காலிகத் திருமணம் ' முத்ஆ ' த் திருமணம் என்று அழைக்கப்படுகிறது.

' ஷியா ' முசுலிம் ஒருவர், ஒரு முசுலிம் பெண்ணையோ, ' கித்தாபி ' என்னும் வேதம் அருளப்பெற்ற மதத்தவரையோ (கிறித்தவர்கள், யூதர்கள்) தீயை வணங்குவோரைச் சார்ந்த ஒரு பெண்ணையோ, ' முத்ஆ ' த் திருமணம் செய்து கொள்ளலாம். வேறு எந்த மதத்தைப் பின்பற்றும் பெண்ணையும் அவர்கள் முத்ஆத் திருமணம் செய்துகொள்ளக் கூடாது. ஒரு ' ஷியா ' பெண் ஒரு முசுலிமை மட்டுமே ' முத்ஆ ' த் திருமணம் செய்து கொள்ளலாம். வேறு எந்த மதத்தவரையும் ' முத்ஆ ' த் திருமணம் செய்துகொள்ள அவளுக்கு உரிமை கிடையாது. இது தாற்காலிகத் திருமணம் ஆதலால், இதில் நிரந்தரத் தன்மையைக் காண முடியாது. ஆனால், இசுலாமியத் திருமணத்தில் காணப்படும் மற்றக் கூறுபாடுகளையும் அமைப்பையும் இதிலும் காணலாம்.

செல்லுடைமையாக்கும் ' முத்ஆ ' த் திருமணத்திற்கு வேண்டப்படுவன :

1. திருமணத்தின்போது, இணைந்து வாழும் காலம் வரையறுக்கப் பட்டிருக்கவேண்டும். அது ஒருநாள், ஒரு மாதம், அல்லது ஓராண்டு என்று எப்படி வேண்டுமானாலும் குறிப்பிடப்படலாம்.

2. திருமண ஒப்பந்தத்தின் போது, கணவன் மனைவிக்குத் தரவேண்டிய ' மஹர் ' த் தொகை நிச்சயிக்கப்பட்டிருக்கவேண்டும். இருவரும் இணைந்து வாழும் காலம் மட்டும் குறிப்பிடப்பட்டு, ' மஹர் ' த் தொகை நிச்சயிக்கப் படவில்லையானால், அது இல்லாத் திருமணம் (void marriage) ஆகும். ஆனால் ' மஹர் ' குறிப்பிடப்பட்டு, காலம் வரையறுக்கப்படாது இருந்தால், அது இல்லா ' முத்ஆ ' த் திருமணமாக (void Muta marriage) ஆக்கப்பட்டாலும், நிலையான செல்லும் திருமணமாகக் (permanent valid marriage) கருதப்பட இடமிருக்கிறது.

' முத்ஆ ' த் திருமணத்தின் விளைவுகள்

1. முத்ஆத் திருமணம் கணவன் மனைவியரிடையே சொத்துரிமை (inheritance) வழங்காது. ஒப்பந்தம் ஏற்படுத்தியிருந்தால், உரிமை கிடைக்கும்.

2. இருவருக்கும் பிறக்கும் குழந்தைகள், முறைமணப் பிறப்புக் குழந்தைகளாவர் (legitimate children). தாய் தந்தை ஆகிய இருவர் வழியிலும், இவர்கள் சொத்துரிமை பெறத் தகுதியுடையவராவர். (Shaharat Singh *vs* Jafri Bibi) (17. Bomb L. R. 13)

3. குறிப்பிட்ட காலக்கெடு முடிந்த பின்னரும் இருவரும் தொடர்ந்து இல்லறம் நடத்திவந்தால், எதிர்புறச்சான்று எதுவும் இல்லாவிடில், அவர்கள் தொடர்ந்து வாழும் காலம் வரையிலும் காலக்கெடு நீட்டப்பட்டதாகக் கருதவேண்டும். இந்தக் காலத்தில் இருவருக்கும் பிறக்கும் குழந்தைகள், முறைமணப்பிறப்புக் குழந்தைகளாவர். அவர்கள் தாய் தந்தையர் சொத்தில் சொத்துரிமை பெறத் தகுதியுடையவராவர்.

4. குறிப்பிடப்பட்ட காலஎல்லை முடிந்தாலோ, இருவரில் ஒருவர் இறந்தாலோ திருமண ஒப்பந்தம் அக்கணமே முறிந்து விடுகிறது.

5. 'முத்ஆ'த் திருமணத்தில் 'தலாக்' என்னும் திருமண முறிவு அதிகாரம் கணவனுக்கு வழங்கப் பெறவில்லை. ஆனால், கணவன் விரும்பினால், காலக்கெடுவில் எஞ்சியுள்ள காலத்தை மனைவிக்குக் கொடையாக அளிப்பதன் மூலம், அவளினின்றும் பிரிந்து விடலாம்.

6. 'முத்ஆ'த் திருமணத்திற்குப் பின்னர், உடலுறவு இருவரிடையேயும் பூர்த்தியாகா திருந்தால், மனைவி பகுதி 'மஹர்' பெறுவதற்கு உரிமையுடையவளாவாள். உடலுறவு பூர்த்தியாகியிருந்தால், முழு 'மஹர்' பெறுவதற்கு அவள் உரிமையுடையவளாவாள். உடலுறவுக்குப் பின்னர்க் கணவன் பிரிந்து செல்ல நினைத்து, மனைவிக்கு மீதியுள்ள நாட்களைக் கொடையாகக் கொடுத்தாலும், முழு 'மஹரும்' கேட்டடைய அவளுக்கு உரிமை உண்டு. குறிப்பிடப்பட்ட காலம் முடியுமுன்னர், ஒப்பந்தத்தை மீறி மனைவி தன்னிச்சையாகப் பிரிந்து சென்று விட்டால், எஞ்சியுள்ள காலத்திற்கு ஈடாக, மஹர்த் தொகையிலிருந்து கழித்துக் கொள்ளக் கணவனுக்கு உரிமை உண்டு.

7. 'ஷியா' சட்டப்படி, 'முத்ஆ'த் திருமணத்தின்மூலம் வந்த மனைவி, வாழ்க்கைப் படி (maintenance) கேட்க உரிமையற்றவளாயினும், குற்ற இயல் நடைமுறைச் சட்டம் (Criminal Procedure Code), பிரிவு 488-ன் படி, வாழ்க்கைப் படி பெறுவதற்கு உரிமை பெறுகிறாள்.

8. விதவையானதும், 'இத்தா' இருக்கவேண்டியது கடமையாகும்.

9. ஓர் ஆண் எத்தனை பெண்ணை வேண்டுமானாலும் 'முத்ஆ'த் திருமணத்தின் மூலம் மணமுடித்துக் கொள்ளலாம்.

3. 'மஹர்' (Mahr or Dower)

கணவன் திருமணத்தின் பொருட்டுச் சொத்தாகவோ, பண மாகவோ, பண்டமாகவோ, மனைவிக்குத் தருவது 'மஹர்' ஆகும். 'மஹர்' குறிப்பிடப்படாமல் இசுலாமியத் திருமணம் நடைபெற முடியாது. இதைச் 'சீதனம்' (dowry) போன்றது என்று சொல்ல முடியாது. ஏனெனில், பெண்ணின் பெற்றோர் மணமகனுக்குத் தருவதே சீதனம். சுற்றுப்புறச் சூழ்நிலை காரணமாகச் சீதனம் (dowry) கொடுப்பதும், வாங்குவதும் தற்கால இந்திய இசுலாமியரிடையே நடைபெறுகிறது என்றாலும், இது சட்டப்படி (மதக் கட்டளைக்குப்) புறம்பானதே.

கணவனால் மனைவிக்கு உள்ளன்புடன் தரப்படுவது 'மஹர்' ஆகும். தான் ஏற்றுக்கொள்ளும் மனைவிக்குத் தனக்கு நிகரான அந்தஸ்தைக் கொடுப்பதன் பொருட்டுக் கணவனால் மனைவிக்கு இது தரப்படுகிறது. கணவனுக்குத் திருமணமுறிவு செய்வதற்கு எல்லையில்லா அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதற்கு ஒரு வரம்பாகவும் இதைக் கொள்ளலாம். 'மஹர்' என்பது ஒரு பெண்ணை வாங்குவதற்குக் கொடுக்கப்படும் மறுபயன் (consideration) என்று சிலர் கருதுகின்றனர். இது சரியன்று. ஏனெனில் 'மஹர்' பெண்ணுக்கே தரப்படுகிறது; அவளுடைய பெற்றோருக்கன்று. அது எவளிடம் வழங்கப்பட்டதோ அந்த மனைவிக்கே உரிய சொத்தாகும். அதை அவள் தனது விருப்பம்போல் பராதீனம் (alienation) செய்து கொள்ளலாம். மேலும், பெண்ணிடத்திருந்து மஹருக்குப் பிரதியாக மணமகன் எந்த மறுபயனையும் பெறுவதில்லை.

'மஹர்' என்ன வகையில் எந்த அளவில் அவளிடம் வழங்கப்பட வேண்டும் என்பது திருமணம் நடைபெறும்பொழுதோ, அதற்கு முன்னரோ, பின்னரோ, உறுதி செய்யப்படுகிறது. 'மஹர்' திருமணத்தின்போது கொடுக்கப்படவில்லையானால், பின்னர்க் கொடுக்கப்பட வேண்டும். திருமணத்தின்போது தான் ஒப்புக்கொண்டதைவிட அதிகம் தருவதாகக் கணவன் திருமணத்திற்குப் பின்னர் மனைவிக்கு

வாக்குறுதி அளித்தால், அதையும் பெற்றுக்கொள்ள மனைவிக்கு உரிமை யுண்டு. மஹருக்கு என்று தனிப்பட்ட ஒப்பந்தம் எதுவும் தேவை யில்லை. அது திருமண ஒப்பந்தத்தோடு ஒன்றியதும் இணைந்ததும் ஆகும்.

திருமணத்தின்போது 'மஹர்' குறிப்பிடப்படவில்லையானால், சட்ட அடிப்படையிலும், குடும்ப வழக்கம், வட்டார வழக்கம் முதலியவற்றை அனுசரித்தும் 'மஹர்' நிர்ணயிக்கப்படும். சுன்னீ சட்டப்படி, உரிமை வயது எய்தப்பெறுதவர்களின் சார்பாகப் பெற்றோர்கள் ஒப்புதல் அளிக்கலாம். பெற்றோர் ஒப்புதல் அளித்திருந்தாலும், அது கணவனைக் கட்டுப்படுத்தும். பெற்றோர்கள் மஹருக்குப் பிணை நின்றால், அது அவர்களையே கட்டுப்படுத்தும்.

'மஹர்' பணமாகவோ, பொருளாகவோ, சொத்தாகவோ தரப்படலாம். கடையில் கையிருப்பு (stock) இருக்கும் பொருளையும் மஹராகக் கொடுக்கலாம். போதை தரும் எந்தப் பொருளையும் மஹராகக் கொடுக்க முடியாது. சொத்திலிருந்து வரும் வருமானத்தை மஹராகக் கொடுக்கலாம். சில ஆண்டுகளுக்குள்ள வருமானம் என்று குறிப்பிட்டும் அதைக் கொடுக்கலாம். கணவன் மஹருக்கு ஈடாகத் தன்னுடைய உடலுழைப்பின் மூலம் சில வேலையை முடித்துத் தருவதாக வாக்குறுதி கொடுக்கலாம். ஹனபி சட்டப்படி கணவனின் உடலுழைப்புச் சேவையை 'மஹர்'ப் பொருளாக்க முடியாது. 'ஷீயா' பிரிவினரின் சட்டப்படி, கணவன் தனது உடலுழைப்புக்கு ஈடாகத் தரும் வாக்குறுதி மஹராகக் கருதப்படும்.

ஹனபி சட்டப்படி மஹருக்கு எல்லை வரையறுக்கப்படவில்லை. எவ்வளவு வேண்டுமானாலும் ஒருவன் தன் மனைவிக்கு மஹராகக் கொடுக்கலாம். கணவனின் தகுதியைப் பொறுத்து 'மஹர்' தரப்பட வேண்டும். மஹர் சம்பந்தமாக அயோத்தியாவில், அயோத்தி சட்டம் (Oudh Laws Act) என்று ஒன்று நடைமுறையில் இருக்கிறது. அதன்படி அங்குள்ள நீதிமன்றங்கள் 'மஹரை' நிர்ணயிக்கும்பொழுது, கணவனின் தகுதி அடிப்படையில் அதை நிர்ணயிக்கும். கணவனின் தகுதியை மீறி 'மஹர்' ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாக நீதிமன்றம் முடிவுக்கு வந்தால், கணவனின் தகுதிக்குத் தக்கபடி குறைத்து அதை நிர்ணயிக்க உரிமையுண்டு. இது தவிர, மஹரைக் கட்டுப்படுத்தும் சட்டம் வேறு எதுவும் இல்லை. பெரிய அளவு 'மஹர்'த் தொகை ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தால், கணவன் நினைத்த மாத்திரத்தில் ஒருதலைப் பட்சமாகத் திருமண முறிவு செய்வதை அஃது ஓரளவு கட்டுப்படுத்தத் துணைநிற்கிறது.

உரிமை வயது எய்தப்பெறுதவர் சார்பாகப் பெற்றோர்கள் 'மஹருக்கு' ஒப்புக்கொண்டால், அது பெற்றோர்களையே கட்டுப்படுத்தும் என்கிறது

‘ஷீயா’ சட்டம். ‘மஹர்’த் தொகையை மனைவிக்குத் தராது பெற்றோர் இறந்துபோனால், பெற்றோர் சொத்திலிருந்து, அவர் பட்ட கடனாகக் கொண்டு, அதைக் கொடுக்கவேண்டும் என்று பிரிவி கவுன்சில் ஜாபிர் உசேன் vs பார்சந்து (40 Bom L.R.) என்ற வழக்கில் தீர்ப்பு வழங்கி இருக்கிறது.

‘மஹரி’ன் குறைந்த மட்ட அளவாக எவ்வளவு கொடுக்கப்பட வேண்டும் என்பதில் ஒவ்வொரு பிரிவினரிடையேயும் வேறுபாடு காணப் படுகிறது. ஹனபி சட்டப்படி குறைந்தது 10 திர்ஹம் (ரூ. 3 முதல் 4 வரை) மஹராகக் கொடுக்கப்பட வேண்டும். மாலிகி சட்டப்படி குறைந்தது 3 திர்ஹம் கொடுக்கப்பட வேண்டும். ஒரு ‘திர்ஹம்’ என்பது 2·97 கிராம் எடையுள்ள வெள்ளி நாணயம் ஆகும். ‘ஷீயா’ சட்டப்படி கூடுதல் 500 திர்ஹம் மஹராகக் கொடுக்கலாம். இதை ‘ஃபாத்திமா’ மஹர் என்று கூறுவர்.

சிறப்பு மஹர், தகுதி மஹர் (Specified and Proper Dower):

- மஹர்
  - சிறப்பு மஹர் (Specified Mahr)
    - உரிமை மஹர் (Prompt Dower)
    - தாமத மஹர் (Deferred Dower)
  - தகுதி மஹர் (Proper Mahr)

திருமணத்தின்பொழுது கணவனால் ‘மஹர்’ எவ்வளவு என்று குறிப்பிடப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தால், அது சிறப்பு மஹர் (Specified Mahr) என்று அழைக்கப்படுகிறது. அப்படிச் சிறப்பு மஹர் கணவனால் குறிப்பிட்டுச் சொல்லப்படாமற் போகும்பொழுது, கணவனின் குடும்பத்தகுதி, அந்தஸ்துக்கு ஏற்ப நீதிமன்றங்கள் அதை நிர்ணயிக்கும். இப்படி நிர்ணயமாவது தகுதி மஹர் (Proper Mahr) என்று அழைக்கப்படும். மனைவியின் தந்தையின் உறவினர், அவருடைய குடும்பத்தில் எவ்வளவு ‘மஹர்’ வாங்கி இருக்கின்றனர் என்று தேர்ந்தும், மனைவியின் வயது, அழகு, சொத்து, தகுதி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும் நீதிமன்றங்கள் ‘தகுதி மஹரை’ (Proper Dower) நிர்ணயிக்கும்.

சிறப்பு மஹரை (Specified Mahr) இரண்டாகப் பிரிக்கலாம். (1) உரிமை மஹர் (Prompt Mahr). (2) தாமத மஹர் (Deferred Dower).

'உரிமை மஹர்' (Prompt Dower) என்பது திருமணம் ஆன உடனேயே தாமதமின்றிக் கொடுக்கப்படவேண்டும். அவ்விதம் உடனடியாக அவன் கொடுக்கத் தவறினால், அது கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்கும் உரிமை மனைவிக்கு உண்டு. அது கிடைப்பது வரையில் சில உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ளவும், கணவனுக்கு இணங்க மறுக்கவும் அவளால் முடியும்.

தாமத மஹர் (Deferred Dower) உடனடியாகக் கொடுக்கப்பட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. காலம் தாழ்த்தியும் அதைக் கொடுக்கலாம். இல்லையென்றால், சில சம்பவம் நிகழ்ந்த பின்னர்த் தருவதாக உறுதியளிக்கலாம்.

திருமண ஒப்பந்தத்தின்போது, 'உரிமை மஹர்' என்ன, 'தாமத மஹர்' என்ன என்று பிரித்துச் சொல்லப்படவில்லையானால், ஷியா சட்டப்படி சிறப்பு மஹர் (Specified Dower) ஆகக் கருதப்படும். 'சுன்னி' சட்டப்படி, அவ்விதம் பிரித்துக் கூறப்படாமற்போனால், ஒரு பகுதி உரிமை மஹராகவும், மறு பகுதி தாமத மஹராகவும் கருதப்படும். ஆனால், 'சுன்னி' பிரிவினருக்கும், அவ்விதம் பிரித்துக் கூறப்படாத நிலையில், முழுதுமே உரிமை மஹராகக் கருதப்படல் வேண்டும் என்று சென்னை உயர்நீதி மன்றம் ஒரு வழக்கில் தீர்ப்பளித்துள்ளது.

Mastan Sahib *vs* Asan Bibi Ammal (1900)
(25 Mad 371)

சுன்னி பிரிவினரிடையே நடந்த வழக்கு இது. சிறப்பு மஹரில் உரிமை மஹர் எவ்வளவு, தாமத மஹர் எவ்வளவு என்று பிரித்துக் காட்டப்படாதிருந்தால், முழுவதும் உரிமை மஹராகக் கருதப்பட வேண்டும். மனைவி உடனடியாகக் கேட்டுப் பெறுவதற்கு உரிமையுடையவள் ஆவாள். 'சுன்னி' பிரிவினருக்கும் இது பொருந்தும் என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

பம்பாய் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பும் மேற்கூறிய கருத்தையே வலியுறுத்துகிறது. உரிமை மஹர், தாமத மஹர் என்று குறிப்பிட்டுச் சொல்லத்தக்க வழக்கம் (custom) 'சுன்னி' குடும்பத்தினரிடையே இல்லையென்றால், அனைத்தும் 'உரிமை மஹர்' என்று முடிவுகட்ட நீதிமன்றத்திற்கு உரிமை உண்டு என்று தீர்ப்பளிக்கப்பட்டது. (35 Bom. 386).

ஆனால், அலாஹாபாத், பாட்னா உயர்நீதிமன்றங்கள், 'சுன்னி' சட்டப்படி பிரித்துக் கூறப்படாதபொழுது, சிறப்பு மஹரில் பகுதியை

உரிமை மஹராகவும், மறு பகுதியைத் தாமத மஹராகவும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று தீர்ப்பளித்துள்ளன. குடும்ப வழக்கத்தைக் (custom) கருத்தில் கொண்டு, எவ்வளவு உரிமை மஹராகவும், எவ்வளவு தாமத மஹராகவும் கொடுக்கப்படலாம் என்பதை நிர்ணயிக்க வேண்டும்.

திருமணமானதும் 'மஹரில்' மனைவிக்கு முழு உரிமை ஏற்பட்டு விடுவதால், குறிப்பிடத்தக்க குடும்ப வழக்கம் இல்லாதபொழுது, முழுவதையும் உரிமை மஹராகக் கொள்ளுதலே ஏற்றமுடைத்து.

திருமண ஒப்பந்தம் நிறைவேறிய நேரத்திலிருந்து மனைவி 'மஹர்' உரிமையைப் பெறுகிறாள். அது அவளுக்குத் தரப்படுகிற வரையில், கணவன் கடன் பெற்றவர் நிலையிலும், மனைவி கடன் தந்தவர் நிலையிலும் வைத்து எண்ணப்படல் வேண்டும். மனைவி விரும்பினால், 'மஹர்'க் கடனைக் கணவனுக்கே கொடையாகக் கொடுக்க லாம். கணவன் இறந்த பின்னரும்கூட, 'மஹர்'க் கடன் தனக்குத் தேவையில்லை என்று மனைவி கைவிட்டுவிடலாம்; அல்லது அவள் விரும்பினால், அவள் வாரிசுகளுக்கு அந்த உரிமையைக் கொடுக்கலாம். 'மஹர்' பற்றிய முடிவு அவளுடைய விருப்பு வெறுப்பைப் பொறுத்தது. அவள் நிபந்தனை அடிப்படையிலும் 'மஹர்' உரிமையைக் கைவிட லாம். அதுபோன்ற சந்தர்ப்பங்களில் 'நிபந்தனை' பூர்த்தியாக்கப்பட வேண்டும்.

'மஹர்' உரிமையைக் கைவிடும்பொழுது, அவள் கட்டாயத்தின் பொருட்டோ, நிர்ப்பந்தம் காரணமாகவோ, வஞ்சனைத் தூண்டுதலின் அடிப்படையிலோ கைவிட்டால் அது செல்லாது. அவள் தன்னிச்சை யாகவும், இயல்பாகவும், பிறர் தூண்டுதலின்றியும் 'மஹர்' உரிமை யைத் துறக்கவேண்டும்.

இந்திய உரிமைவயதுவந்தோர் சட்டம் (Indian Majority Act) 'மஹர்' விஷயத்தில் இசுலாமியர்களைக் கட்டுப்படுத்தாது. ஆனால், சென்னை உயர்நீதிமன்றம், 'மஹர்' உரிமையைக் கைவிடும் பெண் 18 வயது பூர்த்தியானவளாக இருக்கவேண்டும் என்று ஒரு வழக்கில் தீர்ப்பு அளித்துள்ளது. இந்திய ஒப்பந்தச் சட்ட அடிப்படையில் 'மஹர்' உரிமையைக் கைவிடவேண்டுமே தவிர, இசுலாமியத் திருமணச் சட்ட அடிப்படையிலன்று என்று அது கருத்துத் தெரிவித் துள்ளது. அலாஹாபாது உயர்நீதிமன்றம், இந்த விஷயத்தில் நேர் எதிரிடையான முடிவைத் தந்துள்ளது. மனைவி பருவம் எய்தியவளா யிருந்தால், 'மஹர்' உரிமையைத் துறக்கும் உரிமை அவளுக்கு உண்டு என்று அது கூறுகின்றது.

சிறப்பு மஹர் குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும், மனைவி எல்லாச் சந்தர்ப்பத்திலும் அது முழுவதற்கும் உரிமைகோர முடியாது. உடலுறவுக்குப் பின்னரே முழு மஹருக்கும் அவள் உரிமையுடையவள் ஆவாள். உடலுறவுக்கு முன்னர் விதவையாக்கப்பட்டால், குறிப்பிடப்பட்ட மஹரில் ஒரு பாதிக்கே அவள் உரியவளாவாள். உரிமை மஹரைப் பொறுத்த வரையில், உடலுறவு கொண்டாலும் கொள்ளாவிட்டாலும், அந்தப் பாதியைப் பெறும் உரிமை அவளுக்குண்டு. திருமணம் முடிந்த உடனேயே அதை அடையும் உரிமையை அவள் பெற்றுவிடுகிருள்.

மஹர் கணவனுல் கொடுக்கப்படாதவரை அது கணவன்பட்ட கடனுகவே கருதப்படும். ஆயின், இஃது ஒரு பிணையிலாக் (unsecured) கடனே. கணவனின் சொத்துக்களில், அது எந்தவிதமான பொருட்பிணைப் பொறுப்பையும் (charge) ஏற்படுத்தாது. ஆனுல், கணவன் தன்னுடைய சொத்துக்களின்மீது அக் கடனுக்காகப் பொருட்பிணைப் பொறுப்பை (charge) ஏற்படுத்திக் கொடுக்க முடியும். நீதி மன்றங்களும், இதுபோன்று பொருட்பிணைப் பொறுப்பினை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். கணவனின் வாரிசாக நின்று அவனுடைய சொத்தில் பங்கு பெறுபவர்கள், அவரவர் பங்கிற்கேற்ற விகிதத்தில் மஹர்க் கடனையும் தீர்க்கக் கடமைப்பட்டவராவர். மனைவியும் கணவனின் சொத்தில் பங்கு பெறுவதால், அவளுடைய பங்கை அனுசரித்து விகிதம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிருள்.

மனைவிக்குச் சேரவேண்டிய மஹர்க் கடன் அடைபடாதபொழுது, அதை ஈடுசெய்தற் பொருட்டுக் கீழ்வரும் தீர்வழிகளைப் (remedy) பின்பற்றலாம் :

(1) வழக்குத் தொடர்ந்து, நீதிமன்ற ஆணை பெற்றுக் கடனை ஈடு செய்யலாம்.

(2) வழக்கு மூலமாக அன்றி, கணவனுக்கு இணங்க மறுப்பதன் மூலமும், சில உரிமைகளை மறுப்பதன் மூலமும், மஹர்த் தொகையைக் கேட்டுப் பெறமுடியும் :

(a) 'உரிமை மஹர்' கேட்டும் கொடுக்கப்படவில்லையானுல், கணவனேடு உடலுறவுக்கு இணங்காது, மறுத்துவிட அவளுக்கு உரிமையுண்டு.

(b) கணவன் அவளுடைய நடக்கைகளை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தும் உரிமையை இழந்தவன் ஆவான்.

(c) மனைவி உரிமை வயது எய்தப் பெருதிருந்தால், உரிமை மஹர் கொடுக்கப்படுவது வரையில், காப்பாளர் (guardian) அவளைக் கணவனிடத்திருந்து பிரித்து வைக்க உரிமை பெற்றவராவார். இது

போன்ற சந்தர்ப்பத்தில் கணவன் மறுபடி தாம்பத்திய உறவு உரிமை கோரி (restitution of conjugal rights) வழக்குத் தொடர்ந்தால், 'உரிமை மஹர்' கொடுக்கப்படவில்லை என்பது நல்ல எதிர்வாதமாகும். ஆயினும், வேறு காரணம் இல்லையானால், உரிமை மஹர் கொடுத்ததும், மறுபடி தாம்பத்திய உறவு கொள்ளவேண்டுமென்னும் நிபந்தனையுடன் கூடிய ஆணையை நீதிமன்றம் பிறப்பிக்கலாம்.

Abdul Kadir *vs* Salima (1886)

(8 All 149)

'சுன்னீ' பிரிவினரைச் சார்ந்த வழக்கு இது. மேல் வழக்காடியவர் சலீமாவை மணந்தார். சலீமா தன் கணவனை விட்டுப் பிரிந்து வாழ்ந்து வந்தாள். கணவன் மறுபடி உடன் வாழும் தாம்பத்திய உரிமை கோரி வழக்குத் தொடர்ந்தான். மனைவிக்குச் சேரவேண்டிய உரிமை மஹர் (Prompt dower) தரப்படவில்லை என்பது எதிர் வாதம். கணவன் தரப்பு வாதம் என்ன என்றால், அவள் கேட்கவில்லையாதலால் கொடுக்கப் படவில்லை என்பதாகும். கணவன் முன்னரே கொடுத்திருக்கவேண்டும். இப்பொழுது வழக்கு மன்றத்தில், அத் தொகை கட்டிவைக்கப்பட்ட போதிலும், அதை முன்னமேயே கொடுக்காததால், கணவன் மறுபடி தாம்பத்திய உறவு கோரும் உரிமையை இழந்து விட்டான் என்று கூறி வழக்கைத் தள்ளுபடி செய்தது கீழ்க் கோர்ட்டு. உயர்நீதி மன்றத்திற்கு மேல்வழக்காக இது எடுத்துச் செல்லப்பட்டது.

மனைவி கேட்ட பின்னர் 'உரிமை மஹர்' கொடுக்கப்படவேண்டுமா? அல்லது கேட்காமலேயே அது கொடுக்கப்படவேண்டுமா? என்ற கேள்விக்கு விடை கிடைத்தது. மனைவி கேட்ட பின்னர்க் கொடுக்கா திருந்தால்தான் கொடுக்கத் தவறிய நிலை கணவனைச் சாரும். கேட்கப் படவில்லையானால், கணவன் கொடுக்கத் தவறியதாகச் சொல்லமுடியாது என்று கணவனின் பக்கம் தீர்ப்பளிக்கப்பட்டது.

கணவன் மனைவியரிடையே உடலுறவு பூர்த்தியாகாமல் இருந்தால், மறுபடி தாம்பத்திய உறவு உரிமை கோரும் வழக்கில், உரிமை மஹர் கொடுக்கப்படாதிருப்பதைக் காரணமாகக் காட்ட முடியும். உடலுறவு பூர்த்தியாக்கப்பட்டிருந்தால், இக் காரணம் நீதிமன்றங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், உரிமை மஹர் கொடுக்கப்பட்டதும், மறுபடி உடன் வாழ ஆணை பிறப்பிக்கப்படும். ஆனால், தாமத மஹரைப் (deferred dower) பொறுத்தவரையில், அதை ஒரு காரணமாக ஏற்றுக்கொள்ள முடியாது.

தாமத மஹர்பற்றிய பிரச்சினை, பெரும்பாலும் திருமண முறி வுக்குப் பின்னரோ, கணவன் இறந்த பின்னரோதான் எழுகின்றது.

மனைவி விதவையாகிவிட்ட பின்னர்க் கணவனிடம் இருந்தோ, கணவனின் வாரிசுகளிடம் இருந்தோ இதைப் பெறும் உரிமையைப் பெறுகிறாள். கணவனின் சொத்தின் உடைமை (possession) தன்னிடம் இருந்தால், தாமத மஹர் (deferred dower) அடைபடுவது வரையில், தானே அவ் வுடைமையை வைத்திருக்கும் உரிமை பெற்றவளாவாள். சொத்தின் உடைமை (possession) தன்னிடம் இருந்தால், சொத்தைக் கணவனின் வாரிசுகள் கேட்டாலும் கொடுக்காது, தாமத 'மஹர்' அடைபடுவது வரையில் அதைத் தன்னிடம் நிலைநிறுத்திக் கொள்ளும் உரிமை அவளுக்கு உண்டு. கணவன் விட்டுச்சென்ற சொத்தில் சட்ட உடைமையும் (lawful possession) நேரடி உடைமையும் (actual possession) தன்னிடம் இருந்தால், மஹர்க் கடன் அடைபடுவது வரையிலோ, அல்லது சொத்திலுள்ள வருமானத்திலிருந்து அதை ஈடுசெய்வது வரையிலோ, சொத்தைத் தன்னிடம் நிலைநிறுத்திக்கொள்ள அவளால் முடியும். இதுபோன்ற சந்தர்ப்பங்களில், அவள் கணவனின் ஏஜெண்டாகச் செயல்படுவதாகவே கருதவேண்டும். மேலும், சொத்து நேரடி உடைமையிலும், சட்ட உடைமையிலும் அவளிடம் இருக்க வேண்டும். வஞ்சக முறையாலோ, பலாத்காரத்தாலோ அதை அவள் கவர்ந்திருக்கக் கூடாது. மஹர்க் கடனுக்காகச் சொத்தைத் தன்னிடம் வைத்திருப்பதாக அவள் தெரிவித்திருக்கவேண்டும்.

சட்ட வல்லுநர்கள் சிலர், கணவன் சொத்தை மஹர்க் கடனுக்காகத் தன்னிடம் நிறுத்திவைத்திருக்கும் உரிமையை, அடைமானம் (mortgage) அடகு (pledge) ஆகியவற்றின் தத்துவ அடிப்படையில் மனைவி பெறுவதாக ஒப்பிட்டுக் கூறுகின்றனர். ஆனால், இது சரியன்று. அடகுப் பொருள் சம்பந்தப்பட்ட வரையில், வைத்தோரிடையும் பெறுவோரிடையும் ஏற்படும் உரிமைகள், உடன்பாட்டின் (agreement) அடிப்படையில் எழுவதாகும். மஹரைப் பொறுத்த வரையில், எந்தவித உடன்பாடும் கிடையாது. எனவே, மனைவிக்குக் கிடைத்திருக்கும் நிறுத்திவைக்கும் அதிகாரம், தூய்மையான இசுலாமிய சட்டத்தின் அடியில் எழுந்ததே.

Beebee Bachun *vs* Sheik Hameed (1871)
(14 MIA 377)

விதவையும் மற்றொருவரும் கணவனின் வாரிசுகள். விதவை, முழுச் சொத்தும் தன்னிடம் இருப்பதாகவும், மஹர்க் கடனுக்காக அதைத் தன்னிடம் நிறுத்திவைத்து இருப்பதாகவும், மாவட்ட ஆணையாளருக்குத் (District Collector) தெரியப்படுத்தினாள். மற்ற வாரிசு இதை ஆட்சேபித்தார். மாவட்ட ஆணையாளர் ஆட்சேபணையை ஏற்றுக்கொள்ளாது, சட்டத்தின்மூலம் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளுமாறு பதில் அனுப்பினார். நீதிமன்றத்திற்கு விவகாரம் எடுத்துச்

செல்லப்பட்டது. பிரிவி கவுன்சில், மஹர்க் கடன் அடைபடுவதுவரையில் சொத்தை நிறுத்தி வைத்துக்கொள்ள விதவைக்கு உரிமை இருக்கிறது என்று தீர்ப்பு வழங்கியது. மேலும், இந்த உரிமைக்குத் தூய இசுலாமிய சட்டம் அடிப்படையே தவிர, அடைமானச் சட்டம் அடிப்படையன்று என்றும் அது முடிவு கூறியது.

விதவைக்கு அப்படி நிறுத்திவைக்கும் உரிமை உண்டேதவிர, பிற வாரிசுக்குச் சேரவேண்டிய பங்கை மாற்றவோ (transfer) பராதீனம் செய்யவோ (alienation) எந்தவித உரிமையும் கிடையாது. அப்படிச் செய்தால், அது செல்லுடைமையாகாது.

கணவனின் சொத்துப் பிற வாரிசுகளிடம் இருக்க, அதை அவர்கள் பராதீனம் செய்த (alienation) பின்னர், நன்னம்பிக்கையோடும் மறு பயன் கொடுத்தும் சொத்தை வாங்கியிருப்பவரிடத்திருந்து, 'மஹர்க் கடன்' பாக்கி என்ற காரணத்தைக் காட்டித் திரும்பப் பெற விதவைக்கு உரிமை கிடையாது.

விதவையிடம் கணவனின் சொத்து இருந்தால், பிற வாரிசுகளின் பங்கைத் தன்னிடம் நிறுத்தி வைப்பதற்குக் கணவனின் அனுமதியையோ, அவர் இறந்த பின்னர் வாரிசுகளின் அனுமதியையோ அவள் பெற்றிருக்க வேண்டும் என்று ஒரு கருத்து நிலவுகிறது. இத்தகைய அனுமதி அவசியமா ?

Hamira Bibi *vs* Zubaida Bibi (1916)

(43 I.A. 294)

மனைவியும் மக்களும் சொத்துக்கு வாரிசுகளாவர். மஹர்க் கடன் தீர்க்கப்படவில்லை. சொத்து முழுவதும் விதவையிடம் இருந்தது. மக்கள் வழக்குத் தொடர்ந்தனர்.

நாங்களும் வாரிசுகளாதலால், விதவை கணக்குக் காட்டவேண்டும் என்றும், மஹர்க் கடன் சொத்திலுள்ள வருமானத்திலிருந்து தீர்க்கப் பட்ட பின்னர், சொத்தை விற்று அவரவருக்கும் முறைப்படி பங்கு பிரித்துத் தரப்பட வேண்டும் என்றும் முறையிட்டனர்.

கணவன் இறந்த நாளில் இருந்து, மஹர்க் கடன் மீதுள்ள வட்டித் தொகை தரப்பட வேண்டும். வருமானத்தைவிட 'வட்டி' அதிகமாக வருவதால், முழுச் சொத்தையும் தன்னிடம் வைத்துக்கொள்ள உரிமை இருக்கிறது என்று மனைவியின் தரப்பில் வாதாடப்பட்டது. 'வட்டி' தரவேண்டும் என்பதை மற்ற வாரிசுகள் மறுத்தனர்.

விதவைக்கு மஹர்க் கடன்மீது வட்டித்தொகை சேரவேண்டும் என்றும், வட்டித்தொகையைவிட வருமானம் குறைவாக இருப்பதால், சொத்தைத் தன்னிடம் வைத்துக்கொள்ளவும், 6% வீதம் வட்டி வசூலிக்கவும் விதவைக்கு உரிமை உண்டு என்று அலாஹாபாது உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மேல் வழக்காகப் பிரிவிகவுன்சிலுக்கு இது எடுத்துச் செல்லப்பட்டது. சொத்துக்களைத் தன்னிடம் வைத்துப் பராமரித்து வருவதால், இழப்பீடு (compensation) கோரவும், கணவன் இறந்ததும் மஹர்க் கடன் தீர்க்கப்படாதிருப்பதால் அதற்கும் இழப்பீடு கோரவும் விதவைக்கு உரிமை இருக்கிறது. 6% வட்டி ஆட்சேபிக்கப்படாததால், அதை இழப்பீட்டிற்காக எடுத்துக்கொள்ள முடிவு தெரிவித்ததோடு, கணவனினுடையவோ, வாரிசுகளினுடையவோ, நேரடி இசைவையோ, உட்கிடை இசைவையோ (express or implied consent) விதவை பெற்றிருக்கவேண்டும் என்று தீர்ப்புக் கூறியது.

கணவனின் இசைவையோ, அல்லது மற்ற வாரிசுகளின் இசைவையோ நேரடியாகவோ, மறைமுகமாகவோ பெற்றிருக்கவேண்டும் என்று கூறி, மஹர்க் கடனுக்கான விதவைப் பற்றுரிமை (Widow's Lien) என்ற ஒரு புது விதியைப் பிரிவி கவுன்சில் உண்டுபண்ணியது.

இந்தியாவில் உள்ள உயர்நீதிமன்றங்களிடையே, விதவைப் பற்றுரிமை (Widow's Lien) பற்றிக் கருத்து வேறுபாடு காணப்படுகின்றது. சென்னை உயர்நீதிமன்றத்தின் முடிவு, இசைவு தேவை இல்லை என்பதே.

Beeju Bee *vs* Syed Moorthija (1920)
(43 Mad. 214)

மஹர்க் கடன் தீர்க்கப்படவில்லை. மனைவியிடம் சொத்து இருந்தது; மற்ற வாரிசுகளும் சொத்துக்குரியவராவர். மனைவி அந்தச் சொத்தை விற்று, அந்தத் தொகையைக்கொண்டு மஹர்க் கடனை ஈடு செய்து கொண்டாள்.

விதவைக்கு முழுச் சொத்தையும் தன்னிடம் வைத்திருக்கும் உரிமை கிடையாது. ஏனெனில், அவள் நேரடி இசைவோ, மறைமுக இசைவோ அதற்குப் பெறவில்லை. அவள் சொத்தை விற்றது செல்லாது. அது மற்ற வாரிசுகளின் பங்கை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்று மற்ற வாரிசுகள் முறையிட்டனர்.

நேரடி இசைவோ, மறைமுக இசைவோ தேவை இல்லை என்றும், பிரிவி கவுன்சில் ஆமிராபீபி வழக்கில், இசைவு எப்படிப்பட்டதாயிருக்க

வேண்டும் என்று பொதுவாகக் குறிப்பிட்டுச் சென்றிருக்கிறதே தவிர வேறன்று என்றும் தீர்ப்புக் கூறியது.

மேலும், பராதீனத்தைப் பொறுத்தமட்டில், மஹர்க் கடனைப் பெறுவது விதவையின் தனிப்பட்ட உரிமையாயினும், அதோடு அவளுடைய சொத்துரிமையும் பின்னிக்கிடக்கிறது. சொத்துரிமை மரபுவழிச் (heritable) செல்லுமாகையால், மஹரின் கடனுக்காகச் சொத்தை வைத்திருக்கும் தனது உரிமையை விற்றதும், அவளுக்குச் சேரவேண்டிய பங்கை விற்றதும் செல்லும்; ஆனால், மற்ற வாரிசுகளுக்குச் சேரவேண்டிய பங்கை அவள் விற்றது செல்லாது. எனவே, விலை கொடுத்து வாங்கியவர், மஹர்க் கடன் முழுவதும் தீர்க்கப்பட்டதும், வாரிசுகளின் பங்கைத் திரும்பக் கொடுத்துவிடவேண்டும்; அதைப் பெறுவதற்கு வாரிசுகளுக்கு உரிமையுண்டு என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

விதவை மஹர்க் கடனுக்காகச் சொத்தைத் தன்னிடம் நிறுத்தி வைத்திருக்கும்பொழுது, சட்ட விரோதமான முறையில் அவள் அதை இழக்க நேரிட்டால், வழக்குத் தொடர்ந்து, அந்தச் சொத்தைத் திரும்பப் பெற அவளுக்கு உரிமையுண்டு. சொத்தைத் தன்னிடம் நிறுத்தி வைக்கும் உரிமை, திருமண முறிவோ, இழப்போ நிகழ்ந்தாலன்றித் துவங்குவது இல்லை. அதற்கு முன்னர் அந்த உரிமை ஆரம்பம் ஆகாது. அந்த உரிமை ஆரம்பமாகும்பொழுது சொத்துப் பிறர் கைவசம் இருந்தால், மஹர்க் கடனுக்கும் அவளுடைய பங்கிற்கும் அந்தச் சொத்தில் அவளுக்கு உரிமை உண்டு.

Maina Bibi *vs* Choudri Vakil (1925)

(52 I.A. 145)

விதவை மஹர்க் கடனுக்காகச் சொத்தைத் தன்னிடம் நிறுத்தி வைத்திருந்தாள். மற்ற வாரிசுகள் அவரவர் பங்கைக் கோரி வழக்குத் தொடர்ந்தனர். அவரவரின் பங்கு விகிதத்திற்கேற்ப, கடனைத் தீர்த்துச் சொத்தைப் பெற அவர்கள் உரிமை பெற்றவராவர் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

மற்ற வாரிசுகள் அவரவர் விகிதத்தை அனுசரித்துக் கடனைத் தீர்க்கவில்லை. விதவை நீதிமன்றத் தீர்ப்பைத் தப்பாகப் புரிந்து, சொத்து முழுமைக்கும் தானே உரிமையுள்ளவள் என்று நினைத்துச் சொத்தை விற்றுவிட்டாள்.

மற்ற வாரிசுகள் திரும்பவும் வழக்குத் தொடர்ந்தனர். மறு தீர்ப்புத் தடை (Res-judicata) இருப்பதால், திரும்ப வழக்கிட உரிமை கிடையாது என்று வாதிக்கப்பட்டது. அதாவது இந்த வழக்கில் வழக்கிடுவோரும், எழுந்துள்ள வினவும், பொருளும், கூற்றும் முன்வழக்கில்

முடிவு கட்டப்பட்டிருப்பதால், அதே விஷயத்தில் மறுவழக்காட உரிமை இல்லை என்று வாதாடினர்.

நீதிமன்றம் இந்த வாதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. முதல் வழக்கில் உள்ள விஷயம் வேறு, இந்த வழக்கில் முடிவு கட்டப்பட வேண்டிய விஷயம் வேறு என்று அது தீர்ப்பளித்தது.

மேலும், விதவைப் பற்றுரிமையும் (Widow's Lien) அடைமானப் பற்றுரிமையும் (Mortgagee's Lien) வேறு வேறு அடிப்படையில் எழுந்தனவாகும் என்றும் அது கூறிற்று.

அடைமானம் பெறுவோரின் பற்றுரிமை, உடன்படிக்கை (agreement)யின் அடிப்படையாகக் கிடைத்த உரிமையாகும். ஆனால், விதவைப் பற்றுரிமை, இசுலாமிய சட்டத்தின் அடிப்படையில் கிடைத்த உரிமையாகும். எந்த உடன்படிக்கையும் இருவர் இடையேயும் கிடையாது.

விதவை சொத்தைத் தன்னிடம் வைத்திருக்கும் உரிமையைத் தவிர, வேறெந்த உரிமையையும் அச்சொத்தில் பெற முடியாது. ஆனால், அந்தச் சொத்தின்மீது சில உரிமைகளை, உடன்படிக்கையின் அடிப்படையில் மற்றவர் பெறுகின்றனர்.

எனவே, இரண்டிற்கும் அடிப்படை வெவ்வேறானது ஆகும் என்று கூறப்பட்டது.

4. திருமண இழப்பு (Dissolution of Marriage)

இசுலாமிய சட்டப்படி திருமணம் ஓர் ஒப்பந்தம் ஆகையால், மற்ற ஒப்பந்தங்களைப் போன்று இதையும் முறிக்கமுடியும். இசுலாமிய சட்டம் திருமணமுறிவையும் (Divorce) அனுமதிக்கிறது. தூய்மையான பூர்விக இந்துமதச் சட்டப்படி ஓர் இந்து தன் திருமணத்தை முறிக்க முடியாது. காரணம், திருமணம் அவர்களிடையே ஓர் ஒப்பந்தமாகக் கருதப்படாமையே ஆகும். ஆனால், சமீபகாலத்தில் இயற்றப்பட்ட சட்டங்கள், இந்துக்களுக்கும் திருமண முறிவு செய்ய வழிவகை செய்திருக்கிறது.

இசுலாமியரிடையே, திருமண முறிவுக்கு அங்கீகாரம் அளிப்பது 'திருக் குர்ஆனின்' வசனங்களாகும். 'தம்பதிகளிடையே மன மாற்றமும் பிளவும் ஏற்பட்டால், தம்மில் ஒருவரை நடுவராகத்தேர்ந்து எடுத்து, அவர் முன்னிலையில், இருவரும் பிரிந்து செல்ல ஒப்புக்கொண்டு அதை ஏற்றுச் செயல் புரியுங்கள்' என்பது திருக் குர்ஆனின் வாசகம் ஆகும். கணவன்-மனைவி சேர்ந்து வாழமுடியாத நிலை ஏற்படும்பொழுது அவர்கள் சுமுகமாகப் பிரிந்து செல்லத் திருக் குர்ஆனில் அனுமதிக்கப் பட்டிருக்கிறது. கட்டிய மனைவியோடு இணைந்து வாழமுடியாது என்ற நிர்ப்பந்தம் ஏற்படும் பொழுது, கணவன் திருமண ஒப்பந்தத்தைத் தன்னிச்சையாக முறித்து, அவளினின்றும் பிரிந்து செல்ல வழிசெய்வது 'தலாக்' (Talaq) எனும் திருமணமுறிவு ஆகும். 'அனுமதிக்கப்பட்ட கருமங்களிலேயே மிகவும்-வெறுக்கத்தக்கது திருமண முறிவே' என்று முஹம்மதுநபி அவர்களே கூறியிருக்கிறார்கள். எனவே இந்த அருவருப் பான உரிமையைப் பயன்படுத்தும் முன்னர், ஒவ்வொரு முசுலிமும் நீதியோடும் நேர்மையோடும் நடந்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பெறுகிறார். தூய இசுலாமிய சட்டத்தில், இதுபோன்ற திருமணத்தை முறித்துக்கொள்ளும் உரிமை எதுவும் பெண்களுக்கு வழங்கப்படவில்லை. ஆனால், 1939-ல் இயற்றப்பட்ட 'முசுலிம் திருமண இழப்புச்சட்டம்' (Dissolution of Muslim Marriages Act, 1939) அதில் கூறப்பட்ட காரணங்களின் அடிப்படையில் திருமண முறிவு

கோர இந்திய முசுலிம் பெண்களுக்கு உரிமை அளிக்கிறது. இதன்படி மனைவி நீதிமன்றத்தின் ஆணைபெற்றுத் திருமண முறிவு செய்து கொள்ளலாம்.

இசுலாமிய சட்டத்தில், கீழ்க்குறிப்பிடப்படும் காரணங்களால் திருமண இழப்பும், திருமண ஒப்பந்த முறிவும் ஏற்படுகிறது:

1. தம்பதிகளில் ஒருவர் இறந்து போனதும், அவ்விருவரிடையே இருந்த திருமண ஒப்பந்தம் அழிந்து விடுகிறது.

2. இருவரில் ஒருவர் திருமண ஒப்பந்தத்தை முறிப்பதன்மூலம் (Divorce) திருமண ஒப்பந்தம் அழிந்து விடுகிறது.

கணவன் தன்னிச்சையாகத் திருமணத்தை முறித்தல்

1. 'தலாக்' (Talaq) :—கணவன் தன்னிச்சையாக, நினைத்த மாத்திரத்தில், மனைவியோடு வாழ்வதில் நின்றும் பிரிந்து செல்ல உரிமை அளிக்கிறது.

2. 'ஈலா' (Ila) :—குறிப்பிட்ட காலத்திற்கு (4 மாதத்திற்கு) மனைவியோடு உடலுறவு கொள்ள மறுப்பதன் மூலம், தான் அவளுடன் சேர்ந்து வாழவிரும்பவில்லை என்பதைக் கூறுமல் கூறி, திருமணத்தை முறித்துக்கொள்வது 'ஈலா' எனப்படும்.

3. 'ளிஹார்' 'Lihar'. தன்னுடைய மனைவியை அவன் உடலுறவு கொள்ளத்தகாத (இல்லாத் திருமணமாக்கும் தடையுடைய) உறவினரோடு ஒப்பிட்டுக்கூறி[1], அத்தகு உறவினராக மனைவியைத் தான் கருதுவதன்மூலம், திருமண முறிவை ஏற்படுத்தல்.

'தலாக்' அதிகார ஒப்படைப்பு அல்லது 'தலாக் தப்வீசு' (Talaq by Tafweez)

கணவனின் ஏஜெண்டாக மனைவியோ, அதிகாரம் பெற்றவரோ திருமண முறிவு செய்தல், தலாக் அதிகார ஒப்படைப்பு ஆகும். (எ-டு.) கணவன் மனைவியரிடையே மன வேறுபாடு எழுந்து, இருவரும் இணைந்து வாழ்வதை விரும்பாத சந்தர்ப்பத்தில், 'இன்னும் ஒரு மாதத்திற்குள்ளாக நாம் இருவரும் பிரிந்து செல்லவேண்டும்—பிரிந்து செல்லும் அந்த நாளை நீயே தேர்ந்து எடு' என்று கணவன் மனைவியிடம் தன்னுடைய 'தலாக்' அதிகாரத்தை ஒப்படைப்பதன் மூலம், அவள் திருமணத்தை முறிவுசெய்து கொள்ளலாம். அப்படிச் செய்யும்பொழுது,

---

1 (எடுத்துக்காட்டு) : மனைவியைப் பெற்றெடுத்த தாயோடு ஒப்பிட்டுரைத்தல்.

அவள் கணவனிடத்திருந்து அதிகாரம் பெற்ற 'ஏஜெண்டாக'க் கருதப்படுவாள்.

ஒத்திசைந்த திருமணமுறிவு

கணவன் மனைவியர் இருவரும் திருமண ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளப் பரஸ்பரம் இசைவுதருவதன் மூலம் திருமண முறிவு செய்வதை 'குலா' (Khulaa) என்றும், 'முபாரத்' (Mubarat) என்றும் பிரிக்கலாம்.

(1) 'குலா' (Khulaa) :—மனைவி திருமண முறிவு செய்துகொள்ள விரும்பும் பொழுது, கணவன் அதற்கு இசைந்து, திருமண முறிவுக்கு வழிசெய்வதாகும்.

(2) முபாரத் (Mubarat) கணவன் மனைவி இருவரும், திருமண முறிவுசெய்ய ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு விருப்பத்தை வெளிப் படுத்த, அதற்கேற்பத் திருமணமுறிவு செய்வது 'முபராத்' ஆகும்.

நீதிமன்றத் தீர்ப்பாணை பெற்றுத் திருமணமுறிவு செய்தல்

'லியான்' (Lian): மனைவிமீது அபாண்டமாக, 'பிறன்மனை புணர்ந்த (Adultery) குற்றமுடையவள்' என்று கணவன் குற்றம் சாட்டினால், அந்த வீண்பழியைக் காரணமாகக் காட்டித் திருமண முறிவுக்கு நீதிமன்றத்தின் தீர்ப்பாணை பெற மனைவிக்கு உரிமையுண்டு. அவ்விதம் தீர்ப்பாணை பெற்றுத் திருமண முறித்தல் 'லியான்' எனப்படும்.

ஆகவே, இறப்பின் மூலமும், ஒருதலைப்பட்சமான 'தலாக்' என்னும் திருமணமுறிவின் மூலமும், தீர்ப்பாணையின் மூலமும் இசுலாமிய சட்டத்தில் திருமண இழப்பு ஏற்படுகிறது.

இறப்பு

முன்பே நாம் கூறியபடி, கணவன் மனைவியர் இருவருள் ஒருவர் இறந்ததும் திருமண இழப்புத் தானாகவே ஏற்படுகிறது. கணவன் இறந்தால், மனைவி குறிப்பிட்ட காலம் தனிமையில் துயர் எண்ணிக் கழித்தல் ('இத்தா' இருத்தல்) அவசியமாகும். அந்தக் காலக்கெடு முடிந்த பின்னரே, அவள் வேறு ஒருவரைச் செல்லத்தக்க திருமணம் செய்துகொள்ளமுடியும். மனைவி இறந்தால், கணவன் விருப்பப்படி எப்பொழுது வேண்டுமானாலும் மறு திருமணம் செய்துகொள்ளலாம்.

கணவன் தன்னிச்சையாகத் திருமண முறித்தல்

'தலாக்' (Talaq): மனைவியோடு வாழப்பிடிக்காத கணவன் தன்னிச்சையாகத் திருமண முறித்தலைத் 'தலாக்' என்று அழைக்

கின்றனர். இப்படித் 'தலாக்' சொல்லும் கணவன் இரண்டு தகுதிகளைப் பெற்றிருக்கவேண்டும். அவன் பருவம் எய்தப் பெற்றவனாகவும், சித்தம் தெளிந்தவனாகவும் (sound mind) இருக்கவேண்டும். அவன் காரணம் எதுவும் காட்டாது, நினைத்த மாத்திரத்தில், அவள் நிற்கும் இடத்தில் வைத்தே திருமணமுறிவு செய்ய உரிமை பெற்றவனாகிறான். மனைவியைப் பார்த்து, 'நான் உன்னைத் தலாக் சொல்லி விட்டேன்' என்று அதன் பொருள் தெரிந்து மூன்று முறை மனமாரச் சொன்னால், அந்த நேரத்திலிருந்தே அவ்விருவரிடையேயும் திருமணம் முறிந்துவிடுகிறது. கணவன் பருவம் எய்தப் பெறாதவனாயிருந்தால், காப்பாளர்கள் (guardians) அவன் சார்பாகத் தலாக் சொல்ல முடியாது. வயது வராதவர், உரிமை வயது எய்திய பின்னரே 'தலாக்' சொல்லத் தகுதி பெற்றவர் ஆவர். கணவன் சித்தம் கலங்கியவனாக (unsound mind) இருந்தால், திருமணமுறிவு அவனுக்கு மிகுந்த நன்மை தருவதாயிருந்தால் மட்டும், அவனுடைய காப்பாளர்கள் (guardians) அவன் சார்பாகத் 'தலாக்' சொல்லலாம். 'தலாக்' என்ற சொல்லை மட்டுமே பயன்படுத்தித் திருமணம் முறிக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. மனைவியினின்றும் பிரியவேண்டும் என்ற எண்ணத்தைக் கணவன் தெளிவுபடுத்துவதே வேண்டப்படுவது ஆகும். அவனுடைய எண்ணத்தின் விழைவை அவன் வெளிப்படுத்தும்போது அது அவனுடைய மனைவியை மட்டுமே குறிப்பதாகவும் தெளிவானதாகவும் இருக்கவேண்டும். இதற்கு எந்தவிதச் சான்றும் சாட்சியும் கூடத் தேவையில்லை. திருமண ஒப்பந்தத்தை முறிக்கும் கணவனின் விருப்பம் தெளிவற்றதாகவும் குழப்பமானதாகவும் இருந்தால் மட்டுமே, அதைத் தெளிவுபடுத்தச் சாட்சிகளோ, தக்க சான்றுகளோ தேவைப் படும்.

வாய்ச்சொல்லினாலோ, எழுத்தின் மூலமாகவோ, தான் தலாக் வழங்கும் கருத்தைக் கணவன் வெளிப்படுத்தலாம். வாய்ச்சொல்லால், திருமண முறிக்கும் தன்னுடைய கருத்தைக் கணவன் வெளிப்படுத்தினால், அஃது உச்சரிக்கப்பட்ட சமயத்திலிருந்தே செயல்படத் தொடங்கும். எழுத்து மூலமாயிருந்தால், எழுதி முடிக்கப்பட்ட நேரத்திலிருந்தே அது செயல்படத் தொடங்கும். கணவன் தனது முடிவை மனைவிக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்ற கட்டாயம் கூடக் கிடையாது. திருமணமுறிவு மனைவியைக் குறிப்பதாயும், தெளிவானதாகவும் இருந்தால் அதுவே போதுமானது. ஆயினும், 'மஹர்'க் கடனைத் தீர்ப்பதற்கும், வாழ்க்கைப் படியைத் (alimony) தீர்மானிப்பதற்கும் திருமணமுறிவைத் தெரிவிக்கவேண்டியது அவசிய மாகிறது. மனைவிக்கு நேரடியாகவோ, அல்லது அவளுடைய உறவினர் மூலமாகவோ, தான் முறித்ததைக் கணவன் தெரிவிக்க லாம்.

Asha Bibi *vs* Kadir Ibrahim (1909)

(33 Mad 22)

கணவன் மனைவியைத் தலாக்குச் சொன்னான். அச் செய்தியை அவன் தன் மனைவியின் தந்தைக்குத் தெரியப்படுத்தினான். பின்னர், அந்த மனைவி தன்னோடு வந்து முன்போல் மீண்டும் வாழ்க்கை நடத்த வேண்டும் என்று கணவன் வேண்டினான். மனைவி மறுத்தாள். மறுபடி தாம்பத்திய உறவு உரிமை கோரி அவன் வழக்குத் தொடர்ந்தான்.

மனைவியின் தரப்பில், திருமணமுறிவு தந்தைக்கு அறிவிக்கப்பட்டது ஆதாரமாகக் காட்டப்பட்டது. கணவன் தரப்பு வாதம் என்னவென்றால், திருமணமுறிவு மனைவிக்கு நேரடியாக அறிவிக்கப்படவில்லை; மனைவியின் தந்தைக்கு அறிவிக்கப்பட்ட திருமணமுறிவு செல்லுடைமை ஆகாது என்பதாகும். மாவட்ட நீதிபதி கணவன் தரப்பு வாதத்தை ஏற்று, மறுபடி தாம்பத்திய வாழ்க்கை நடத்த ஆணை பிறப்பித்தார். எனவே, இது மேல் வழக்காகச் சென்னை உயர்நீதி மன்றத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. திருமணமுறிவு மனைவியைக் குறிப்பதாலும், கணவனின் விருப்பம் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டு இருப்பதாலும், மனைவியின் முன்னிலையில்தான் 'தலாக்' சொல்ல வேண்டும் என்ற அவசியம் இல்லாததாலும், கணவன் தன் மனைவிக்கு நேரடியாகத் தெரியப்படுத்த வேண்டும் என்ற கட்டாயமில்லை யாகையாலும், கணவனின் திருமண முறிவு செல்லுடைமையாகும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

Ma-Mi *vs* Kalandar Ammal (1927)

('54-IA-61)

கணவன் பர்மாவில் குடியேறினான். மனைவி இந்தியாவில் இருந்தாள். கணவன், மா-மி என்பவளோடு பர்மாவில் வாழ்க்கை நடத்தினான். கணவன் இறந்ததும், இந்திய மனைவி தன்னுடைய பங்குச் சொத்திற்காக வழக்காடினாள். மா-மியின் தரப்பு வாதம் என்னவென்றால், முன்னமே இந்திய மனைவியைத் திருமணமுறிவு செய்து, கணவன் பர்மாவிலிருந்து ஒரு கடிதம் அனுப்பிவிட்டான் என்பதாகும். இந்திய மனைவி, அதுபோன்ற கடிதம் எதுவும் தனக்கு வரவில்லை என்று கூறி, அதை மறுத்தாள். அப்படி ஒரு கடிதம் இவளுக்கு வந்ததாகவும், அதை இவள் படிக்கும்பொழுது தாங்கள் கேட்டதாகவும் சிலர் சாட்சி சொன்னார்கள்.

திருமணமுறிவு மனைவி முன்னிலையில் சொல்லப்பட வேண்டும் என்றோ, மனைவிக்கு நேரடியாகத் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்றோ அவசியம் இல்லை என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

Sara Bai vs Rabiabai

(30 Bom 537)

கணவன் காஜீ (Kazhi) யிடம் சென்று, அவர் முன்னிலையில் தன்னுடைய மனைவிக்குத் 'தலாக்' சொல்லி, அதற்குரிய ஆவணம் (தலாக் நாமா) ஒன்று எழுதி, அதில் கையெழுத்துப் போட்டான்.

கணவன் 'தலாக்' சொன்ன சமயத்தில் மனைவி அங்கே இல்லாதிருந்தாலும், எவரும் அவளுக்கு அதைத் தெரிவிக்காமலிருந்தாலும், ஆவணம் எழுதப்பட்ட நாளிலிருந்து திருமணமுறிவு செயல்பட ஆரம்பித்து விடுகிறது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

திருமணமுறிவு மனைவிக்குத் தெரியப்படுத்தப்படல் வேண்டும். இல்லை யென்றால், தெரியப்படுத்தப் படுகிற நாள் வரையிலும் அவள் வாழ்க்கைப் படி கோரும் உரிமை பெற்றவள் ஆவாள் என்று ஒரு வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது (59–Cal–833).

ஹனபி சட்டப்படி, சாட்சிகளின் முன்னிலையில் திருமணமுறிவு செய்யவேண்டும் என்ற விதி கிடையாது. ஆயினும், இது காலப் போக்கில் ஏற்படுத்தப்பட்ட ஒன்று ஆகும்.

'ஷியா' சட்டப்படி, திருமண முறிவு சாட்சிகளின் முன்னிலையில் நடைபெற வேண்டும்; 'தலாக்' என்ற சொல் பயன்படுத்தப்பட வேண்டும்; வாய்விட்டுச் சொல்ல முடியாத நிலையில், கணவன் எழுதித் தன் கருத்தை வெளிப்படுத்த அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த இரு விஷயங்களிலும் ஷியா சட்டத்திலிருந்து ஹனபி சட்டம் வேறுபடுகிறது.

ஒருதலைப்பட்சமாக ஆண்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் இந்தத் 'தலாக்' உரிமை எளிதாயும், நொடிப் பொழுதில் நடைபெறத் தக்கதாயும் இருப்பதால், பல சமயங்களில் இது பெரும் சட்டப் பிரச்சினையாகி விடுகிறது.

'தலாக்' மூலம் திருமண முறிவு செய்வதை, (1) தலாக்-சுன்னத் என்றும் (2) தலாக்-பித்அத்து என்றும் இரண்டாகப் பிரிக்கலாம். முன்னது இசுலாமியக் கொள்கைகளால் அங்கீகரிக்கப்பட்ட முறையாகவும், பின்னது அங்கீகரிக்கப்படாத முறையாகவும் இசுலாமியர்களால் கருதப்படுகிறது. ஆனால், பின்னதையும் சட்டம் அங்கீகரிக்கிறது. தலாக்-சுன்னத்தை, (1) தலாக் அஹ்ஸன் என்றும், (2) தலாக் ஹஸன் என்றும் இரண்டாகப் பிரிக்கலாம். இவ்விரண்டும், 'தலாக் சுன்னத்'தில் அடங்கும்.

தலாக்-அஹ்ஸன் அல்லது ஒரு முறை தலாக் (Talaq Ahsan): ஒரே முறை 'தலாக்' என்று சொல்லித் திருமண முறிவு செய்வதைத் 'தலாக் அஹ்ஸன்' அல்லது ஒரு முறை தலாக் என்றழைக்கிறார்கள்.

'நான் உனக்குத் தலாக் கொடுத்துவிட்டேன்' என்று கணவன் தன் மனைவியிடம் சொல்வதோ, அல்லது 'என் மனைவியைத் தலாக் சொல்லிவிட்டேன்' என்று பிறரிடம் சொல்வதோ 'தலாக் அஹ்ஸன்' ஆகும். இப்படி அவன் ஒருமுறை சொன்னால், திருமணமுறிவு உடனடியாகப் பூர்த்தியாகாது. மனைவியின் ஒரு மாதவிடாய்த் தீட்டுக்கும் மறு மாதவிடாய்த் தீட்டுக்கும் இடையே உள்ள நாட்களில் ஒருமுறை தலாக் சொல்லி, அடுத்தடுத்து வருகின்ற இரண்டு மாதவிடாய் கழிவது வரையில் கணவன் அவளுடன் உடலுறவு கொள்ளாது பிரிந்து இருந்து, அவளும் 'இத்தா' இருந்து முடியும் நாளன்று தலாக் முற்றுப்பெறுகிறது. இரண்டு மாதவிடாய்க் காலங்களுக்கு இடையே உள்ள (தீட்டு அல்லாத) துப்புரவான நாட்களில்தான் கணவன் 'தலாக்' சொல்ல வேண்டும் என்பது, மாதவிடாய் அறவே நின்றுவிட்ட பெண்களுக்கும், எழுத்துமூலம் 'தலாக்' வழங்கும்பொழுதும் பொருந்தாது. கணவன் 'தலாக்' என்று ஒருமுறை சொன்னவுடன், அது உடனடியாக முற்றுப் பெறாது, இந்தக் காலக்கெடு முடிந்த பின்னரே முற்றுப்பெறுகிறது. இந்தக் காலக்கெடு முடிவதற்குள்ளாகக் கணவன் விரும்பினால், 'தலாக்'கைப் பின்வலித்து (வாபஸ் பெற்று)க் கொள்ளலாம். அப்படிப் பின்வலித்துக் கொண்டால், இருவரும் கணவன் மனைவியராய் வாழ்வதில் தடை இல்லை. இந்தக் காலக்கெடு முடியு முன்னர் அவர்கள் தங்களுக் கிடையில் உடலுறவு ஏற்படுத்திக் கொண்டாலும், 'தலாக்' உயிரிழந்து விடுகிறது.

கணவன் அவசரப்பட்டுத் திருமண முறிவு செய்துவிட்டால், அவனுக்கு ஒரு நல்ல வாய்ப்பை அளிக்கவே இந்தக் காலக்கெடு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவே திருமணத்தை முறித்துக்கொள்ளச் சிறந்த ஒழுங்கான முறை என்று திருக் குர்ஆனாலும், இசுலாமிய சட்டத்தாலும் கொள்கையாலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒருமுறைத் தலாக்கில்தான், கணவன் ஓர் உயர்ந்த மனிதனாகவும் நிதானம் இழக்காதவனாகவும் செயல்பட முடிகிறது.

தலாக் ஹஸன் அல்லது மும்முறை தலாக் (Talaq Hasan): மனைவியின் மூன்று மாதவிடாய்க் காலத்திற்குட்பட்ட நாட்களில் மூன்று முறை கணவன் தலாக் சொல்லுதல் 'தலாக் ஹஸன்' ஆகும். அதாவது, முதல் மாதவிடாய்க் காலத்திற்கும் இரண்டாவது காலத்திற்கும் இடைப்பட்ட (துஹ்ர்-Tuhr என்னும்)[1] நாட்களில் முதல்முறை

[1] மாதத்தீட்டு நீங்கி, மறுதீட்டுத் தொடங்குவதற்கு இடைப்பட்ட நாட்கள் 'பரிசுத்தமான நாட்கள்' என்று அழைக்கப்படும். அரபு மொழியில் 'துஹ்ர்' என்றால் பரிசுத்தம் என்பது பொருள்.

யாகத் 'தலாக்' சொல்லி, இரண்டாவது மாதவிடாய்க் காலத்திற்கும் மூன்ருவது மாதவிடாய்க் காலத்திற்கும் இடைப்பட்ட நாட்களில் இரண்டாம் முறையாகத் 'தலாக்' சொல்லி, மூன்ருவது மாதவிடாய்க் காலத்திற்கும் நான்காவது காலத்திற்கும் இடைப்பட்ட நாட்களில் மூன்ருவது முறையாகவும் இறுதியாகவும் 'தலாக்' சொல்லி, திருமணமுறிவைக் கணவன் நிலைப்படுத்துவதாகும். இந்தக் காலவரம்பில் தம்பதிகள் உடலுறவு கொள்ளாதிருந்தால், திருமணமுறிவு நிலைத்து விடுகிறது. இதுவும் கணவனுக்கு நல்ல சந்தர்ப்பத்தை அளிக்கிறது. அவன் இருமுறை அவசரப்பட்டுச் சொல்லி யிருந்தாலும், மூன்ருவது முறையாகத் 'தலாக்' சொல்லுவதற்கு முன்னர், பின்வலித்துக் கொள்ளலாம். இதுவும் 'அஹ்ஸன்' முறையைப்போன்று சிறந்ததாகக் கருதப்படுகிறது. 'ஷீயா' பிரிவினரின் கொள்கைப்படி இவ்விரண்டு முறைகள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட முறைகளாகும்.

தலாக்–பித்அத் அல்லது 'முத்தலாக்' (Talaq-ul-biddat): கணவன் மனைவியை நோக்கி, 'நான் உன்னைத் தலாக் செய்துவிட்டேன்' என்று மூன்று முறை தொடர்ந்து உச்சரிக்கவோ அல்லது சுருக்கமாக, 'உன்னை "முத்தலாக்" செய்து விட்டேன்' என்று சொல்லவோ நேரிட்டால், அக்கணமே கணவன் - மனைவியரிடையே நிரந்தரத் திருமணமுறிவு ஏற்பட்டு விடுகிறது. 'மாதவிடாய்' இல்லாத நாட்களில் சொல்லவேண்டும் என்ற விதியும் இதற்குக் கிடையாது. இந்த முறை வன்மையானதாகவும் மிகவும் கொடுமையானதாகவும் கருதப்படுவதால், இசுலாமியரின் கொள்கை கோட்பாடுகள் இதை ஆதரிக்கவில்லையாயினும், முசுலிம் சட்டம் இதை அங்கீகரிக்கின்றது.[1] இப்படித் திருமண முறிவு செய்வது 'தலாக் பித்அத்'[2] என்று அழைக்கப்படுகிறது. சொன்னதைத் திரும்பப் பெறவோ, பின்வலித்துக் கொள்ளவோ இதில் இடம் இல்லை. 'ஒரே முறை நான் தலாக் செய்கிறேன்; இதுவே இறுதி முறையும்கூட. இதை மறுதளிப்பதற்கு (irrevocable) இல்லை' என்று பொருள்தரும், 'தலாக் பாஇன்' (Talaq-ul-Ba'in) என்ற சொல்லைப் பயன்படுத்தி 'நான் உன்னைத் "தலாக் பாஇன்" செய்துவிட்டேன்' என்று கணவன் சொன்னாலும், அதுவும் தலாக்-பித்அத் ஆகும். இதனாலும் உடனடியாகத் திருமண முறிவு ஏற்பட்டுவிடும்.

---

[1] இந்த அங்கீகாரத்தை எதிர்த்து இக்காலத்தில் பல இசுலாமிய நாடுகளில் மாதர்கள் கிளர்ச்சி செய்கிருர்கள்.

[2] 'பித்அத்' என்ருல், வழக்கத்துக்கு முரணான நூதனம் என்பது பொருள். தூய இசுலாமிய சட்டத்தில் இடையில் நூதனமாக நுழைக்கப்பட்ட காரணத்தால், இந்தத் தலாக் இவ்வாறு அழைக்கப் பெறுகிறது.

ஈலா (Ila):

'நான் என் மனைவியைத் தீண்டுவதில்லை' என்று கணவன் உறுதி எடுத்து, அதன்படி அவன் நான்கு மாதங்கள் அவளைத் தீண்டா திருந்தால், ஹனபி சட்டப்படி, நான்கு மாதங்கள் முடிந்ததும் இருவரிடையேயும் இருந்த திருமண ஒப்பந்தம் முறிந்து விடுகிறது. ஆனால், ஷியா சட்டப்படி, கணவன் அப்படி நடந்து கொள்வதன்மூலம் அவனை மறுபடி உடன்வாழக் கோரவோ, அல்லது அவனைத் திருமண முறிவு செய்யுமாறு கோரவோ மனைவி உரிமை பெற்றவளாவாள். மனைவியின் கோரிக்கை இரண்டில் ஒன்று கணவனால் நிறைவேற்றப் படவில்லையானால், நீதிமன்றம் சென்று நியாயம் பெற அவள் உரிமை பெறுகிருள்.

ளிஹார் (Lihar):

கணவன் தன் மனைவியை மனைவியாகக் கருதாது, தன்னுடன் உடலுறவு கொள்ளத்தகாத உறவினளாய்க் கருதி, இவளுடன் உடலுறவு கொள்ள மறுத்துவிட்டால், கணவன்-மனைவியரிடையே திருமண முறிவு ஏற்பட்டு விடுகிறது. அப்படித் திருமணமுறிவு ஏற்பட்ட பின்னர், கணவன் அவளையே தன் மனைவியாக ஏற்றுக்கொள்ள விரும்பினால், மனைவி அவனைக் கழுவாய் தேடுமாறு (expiation) கோருவதோடு, சிற்சில நிபந்தனைகளையும் விதிக்க உரிமை பெற்றவளாவாள். எடுத்துக் காட்டான நிபந்தனைகளாவன:

(1) 2 மாதம் தொடர்ந்து நோன்பிருக்கப் பணித்தல்.

(2) சில அடிமையாட்களை விடுதலை செய்யக் கோருதல்.

(3) அறுபதுக்கு மேற்பட்ட ஏழைகளுக்கு உணவளிக்கக் கேட்டல்.

இந்த நிபந்தனைகள் கணவனால் பூர்த்தி செய்யப்பட்டால், மனைவி அவனுடன் இல்லறம் நடத்த இசையலாம். இந்த நிபந்தனைகளில் ஒன்று நிறைவேற்றப்படாமற் போனாலும், மனைவி நியாயம் வேண்டி, நீதிமன்ற ஆணையேற்றுத் திருமணமுறிவு செய்ய உரிமை பெற்றவள் ஆவாள். ஈலாவும், ளிஹாரும் இந்தியாவில் நடைமுறையில் இருப்பதாகத் தெரியவில்லை.

தலாக் அதிகார ஒப்படைப்பு அல்லது 'தலாக் தப்வீசு' (Talaq by Tafweez):

கணவன் தனக்குச் சட்டத்தின்மூலம் கிடைத்த தலாக் உரிமையைப் பிறரிடம் ஒப்படைத்து விடும்பொழுது, அவர் அதைக் கணவனின் ஏஜெண்டாகச் செயல்படும் அதிகாரம் பெற்றவராவார். அவர் அந்த அதிகாரத்தின் பேரில் செயல்படும்பொழுது, திருமணமுறிவு ஏற்படுகிறது. இவ்விதம் கணவனின் ஏஜெண்டாக நின்று திருமண முறிப்பது

'தலாக் தப்வீசு' என்று அழைக்கப்படுகிறது. இந்த உரிமையைக் கணவன் மனைவிக்குக் கொடுத்தால், மனைவி கணவனின் ஏஜெண்டாக நின்று 'தலாக்' சொல்வதாகக் கொள்ளவேண்டும்.

(எ - டு.) 'உரிமை மஹர் கேட்டதும் நான் அதைக் கொடுக்கத் தவறினால், மனைவி தலாக் சொல்லும் உரிமை பெற்றவளாவாள்' என்று திருமணத்தின்போது கணவன் இசைவு தந்திருந்தால், அவ்வாறு மனைவி உரிமை மஹரை அவனிடம் கோரி அவன் கொடுக்கத் தவறினால், அவள் அவனைத் தலாக் செய்துவிட உரிமை பெற்றவளாவாள். அப்படித் தலாக் சொல்லும் உரிமையைச் சட்டம் அவளுக்கு அளிக்க வில்லையாயினும், கணவன் அளித்த அதிகாரத்தைக்கொண்டு அவள் செயல்படுவதாகக் கருதவேண்டும்.

கணவன் தன்னுடைய தலாக் உரிமையை வேறு ஒருவருக்கும் கொடுக்கலாம். அப்படிக் கொடுக்கும்பொழுது, கணவன் விரும்பினால், நிபந்தனை எதுவும் விதிக்கலாம். (எ - டு.) கணவன் மனைவியரிடையே பிணக்கு ஏற்பட்டிருப்பதாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது கணவன் ஒரு நடுவரைத் தேர்ந்தெடுத்து அவரிடம், 'அவள் எந்த உடன்பாட்டிற்கும் இசையவில்லையானால், அவளை அந்த இடத்தில் வைத்தே தலாக் சொல்லி விடுங்கள்' என்று தன்னுரிமையை ஒப்படைக்க, அவர் அத்தகு அதிகாரம் பெற்றவராகச் செயல்பட உரிமை உண்டு.

'குலா' (Khula):

கணவனின் இசைவு பெற்று மனைவி திருமண ஒப்பந்தத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொள்வது 'குலா' எனப்படும். கணவன் இத் திருமண முறிவிற்கு இசைவு தரும்பொழுது, மனைவியிடத்திருந்து மறுபயன் (consideration) பெறவோ, நிபந்தனை விதிக்கவோ செய்யலாம். (எ - டு.) 'மனைவி தனக்குச் சேரவேண்டிய மஹர்க் கடனை விட்டுவிட்டால், அவள் திருமண முறிவு பெற்றுக்கொள்ளட்டும்' என்று, அவள் மஹர்க் கடனை விட்டுக்கொடுப்பதைக் கணவன் மறுபயனாகக் கேட்கலாம்.

ஒரு சொத்தைக் குறிப்பிட்டு, 'மனைவி இந்தச் சொத்தை எனக்குத் தந்தால், அவள் விரும்பும்பொழுது திருமண முறிவு செய்துகொள்ளட்டும்' என்றும் நிபந்தனை விதிக்கலாம்.

இவற்றை வைத்துப் பார்க்கும்பொழுது 'குலா' எனும் திருமண முறிவு, கணவன் மனைவியரிடையே ஏற்படுத்திக்கொள்ளப்படும் ஓர் உடன்படிக்கை என்று சொல்லலாம். இதில் மிக இன்றியமையாது வேண்டப்படுவது கணவனின் இசைவு ஆகும். நிபந்தனை விதித்தோ,

மறுபயன் (consideration) எதிர்பார்த்தோ கணவன் இசைவு தெரிவிக்க, அதை நிறைவேற்றாமல் மனைவி திருமணமுறிவு செய்தாலும் அது செல்லுடைமையாகும். ஆனால், ஒப்பந்தப்படி கணவன் பிரதிபலனைப் பெற உரிமை உடையவன் ஆதலால், நீதிமன்றத்தின் மூலம் அவன் அதைப் பெற்றுக்கொள்ள முடியும்.

Moonshee Bazul - ul - Raheem *vs* Latheefutoon-Nissa

(3 M.I.A. 379)

மனைவி தனக்கு உரிமையான 'மஹர்'த் தொகையை விட்டு விடுவதோ, அல்லது கணவனுக்கு நன்மை பயக்கத்தக்க எந்த உடன்படிக்கையையும் மனைவி செய்துகொள்வதோ, கணவன் தன்னுடைய 'தலாக்' உரிமையை மனைவிக்குத் தந்ததன் மறுபயன் ஆகும். மனைவி தான் ஒப்புக்கொண்ட மறுபயனை நிறைவேற்றாது, தனக்குக் கிடைத்த திருமணமுறிவு அதிகாரத்தைப் பயன்படுத்தித் திருமண முறிவு செய்துகொண்டாலும், திருமண முறிவு செல்லத்தக்கது ஆகும். கணவன் தனக்குக் கிடைக்க வேண்டிய மறுபயனுக்காக, உடன்படிக்கையை ஆதாரமாகக் கொண்டு, வழக்காடி அதைப் பெற்றுக்கொள்ள உரிமை பெறுகிறான் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

முபாரத் (Mubarat)

குலாவில், மனைவி முனைந்து நின்று கணவனின் இசைவு பெற்றுத் திருமணமுறிவை ஏற்படுத்துகிறாள். ஆனால், 'முபாரத்' என்னும் திருமணமுறிவில், இருவருமே ஒருவரைவிட்டொருவர் வாழ்க்கைப் பிணைப்பிலிருந்து பிரிந்து செல்ல உந்தித் தள்ளப்பட்டு முந்திக்கொள்வதைப் பார்க்கலாம். எனவே, இதில் இருவர் விருப்பமும் கருத்தும் ஒன்றே. அதுவும் திருமணமுறிவே. இதிலும் கணவனின் இசைவு இன்றித் திருமண முறிவு நடைபெற முடியாது. இருவருக்குமே, பிரிந்து விட்டால் போதும் என்ற நிலையில், மறு பயன், நிபந்தனை என்ற பிரச்சினைக்கே இடமில்லாது போய்விடுகிறது.

எனவே, 'தலாக்', 'முபாரத்', 'குலா' ஆகிய திருமண முறிவு வகைகளில், திருமணத்தை முறித்துக்கொள்ளும் உரிமை கணவனுக்கே வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, 'குலா' என்ற திருமணமுறிவைப் பயன்படுத்தி, மனைவி ஏதும் இழப்பீடு (compensation) கொடுப்பதன் மூலம், திருமணமுறிவைச் செய்துகொள்ள அதிகாரம் அளிப்பது காஜீ(Kazhi)யாலோ, நீதி மன்றத்தாலோ முடியாததாகும். ஏனெனில், தலாக் உரிமை கணவனுக்கு மட்டுமே வழங்கப்பட்டதாகும்.

நீதித்தீர்ப்புப் பெற்றுத் திருமணத்தை முறித்தல் (Fask)

லியான் (Lian)

மனைவி பிறன்மனை புணர்ந்தாள் (adultery) என்று குற்றம் சாட்டப்பட்டு அது நிரூபிக்கப்பட்டால், அவளைக் கல் எறிந்து கொல்ல வேண்டும் என்பது தூய இசுலாமிய சட்டம் கூறும் தண்டனையாகும். பிறன்மனை புணர்தல் இம் மதத்தில் மிகக் கொடிய குற்றமாகக் கருதப்படுகிறது. மனைவி இக் குற்றம் புரிந்தவள் என்று கணவன் மனப்பூர்வமாக நம்பினாலும், அதை மெய்ப்பிப்பது மிகவும் கடினமாகும். சட்டப்படி நிரூபிக்க முடியாது போகும்பொழுது, கணவன் இக் குற்றத்தை மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டிருக்க, அதை மனைவி மறுத்துக் கொண்டே இருந்தால், கணவன் நீதிமன்றம் சென்று சத்தியம் செய்து, குற்றத்தை நிரூபிக்க வேண்டும். வழக்கு விசாரணை தொடங்கு முன்னர்க் கணவன் விரும்பினால், மனமுவந்து குற்றச்சாட்டைப் பின் வலிக்க வேண்டும். இசுலாமிய சட்டப்படி கள்ளப்புணர்ச்சிக் குற்றச் சாட்டை நிரூபிக்க நான்கு சாட்சிகள் வேண்டும். அதுவும் நேரடிச் சாட்சிகளாக இருக்கவேண்டும். இது எளிதில் நிரூபிக்க முடியாதது ஆகும்.

எனவே, இசுலாமியசட்ட நிபந்தனைப்படி மெய்ப்பிக்க முடியாத நிலையில், கணவன் அக் குற்றச்சாட்டை நீதிபதியின் முன்னிலையில் சொல்லவேண்டும். அதையும் அவன் நான்கு முறை தொடர்ந்து சொல்லவேண்டும். ஐந்தாவது முறையாகச் சொல்லும்போது, 'நான் சொல்வது பொய்யாக இருந்தால், ஆண்டவனின் சாபக்கேடு என்மீது விழுவதாக!' என்று அவன் ஆணையிட்டுச் சொல்லவேண்டும். பின்னர், மனைவி கணவன் கூறும் குற்றச்சாட்டைப் பொய் என்று நான்கு முறை கூறி, ஐந்தாவதாக, 'ஆண்டவன்மீது ஆணையாக! என்மீது சாட்டப்பட்டுள்ள குற்றம் பொய்யானது' என்று ஆணையிட்டுக் கூறவேண்டும். இதை நீதிபதி ஏற்றுக்கொண்டு, இருவரையும் பிரிந்து வாழ ஆணை பிறப்பிப்பார். இவ்விதம் திருமணமுறிவு ஏற்படுத்திக்கொள்வதை 'லியான்' என்று கூறுவர்.[1]

மேலே கூறிய முறை இசுலாமிய சான்றியல் சட்ட விதிமுறைகளாதலால், இந்திய சான்றியல் சட்டத்தின்மூலம் இது அகற்றப்பட்டு விட்டது. ஆனால், இந்திய ஆணை உறுதிச் சட்டம் பிரிவு 8-ன் கீழ் (S. 8 of Indian Oaths Act, 1872) சிறப்பு ஆணையுறுதி ஏற்று (Administration of Special Oath) மொழி சொல்லும்பொழுது, ஷை சட்டம் பிரிவு 9-ன் கீழ், ஒருவர் ஆணையுறுதியை மற்றவர் ஏற்றுக்

---

[1] 'லியான்' என்றால் சாபம் என்று பொருள்.

கொண்டால் மட்டிலும், குற்றம் சந்தேகமற மெய்ப்பிக்கப்பட்டதாக நீதி மன்றம் ஏற்றுச் செயல்படமுடியும். ஒருவர் மற்றவர் ஆணையை ஏற்றுக் கொள்ளாத வரையில், கசடற மெய்ப்பிக்கப்பட்டதாக ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

பிறன்மனை புணர்ந்த பழியைக் கணவன் அபாண்டமாகச் சுமத்தினால், மனைவி அதைக் காரணமாகக் காட்டி, திருமணமுறிவுக்கு நீதி மன்ற ஆணை கோர உரிமை பெற்றவளாவாள். ஆனால், குற்றச்சாட்டு உண்மையென நிருபிக்கப்பட்டால், இவ்வுரிமையை அவள் இழந்தவளாகக் கருதவேண்டும். எடுத்துக்காட்டாக, மனைவி முறையிலா மணப் பிறப்புக் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்திருந்தால், அவள் திருமண முறிவு கோரும் உரிமையை இழந்தவளாவாள். 1939-ல் இயற்றப்பட்ட முசுலிம் திருமண இழப்புச் சட்டமும், இசுலாமிய சட்ட அடிப்படையில் பெண்களுக்குக் கிடைத்துள்ள இந்த உரிமையைப் பாதுகாக்கிறது.

மலட்டுத்தன்மை (Impotency)

கணவன் பால்குறைவுபாடு உடையவன் என்று மனைவி மெய்ப்பித்தால், நீதிமன்றத்தின்மூலம் திருமணமுறிவு கோர அவளுக்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படி நிரூபிக்கப்பட்டால், இருவருக்கும் ஓராண்டு காலம் தவணை வழங்கப்படும். அந்தக் காலத்திற்குள்ளாக மனைவி. கணவன்மூலம் கருவுற்றிருந்தாலும், மனைவி கன்னி அழியாதவளாக இருந்தாலும், திருமணத்தின் போது கணவனின் பால்குறைவு பாடுபற்றித் தெரியாதவளாக இருந்தாலும், நீதிமன்றம் திருமண முறிவுக்கு ஆணை பிறப்பிக்கும்.

பிறன்மனை புணர்ந்த பழிசுமத்தல் காரணமாகவும், கணவனின் மலட்டுத்தன்மை காரணமாகவும் நீதிமன்றத்தின்மூலம் திருமணமுறிவு பெற மனைவிக்கு இசுலாமிய சட்டம் உரிமை வழங்கியுள்ளது. பின்னர், இந்தியாவில் இயற்றப்பட்ட 1939-ம் ஆண்டு முசுலிம் திருமண இழப்புச் சட்டம், அதில் கூறப்பட்ட காரணங்களின் அடிப்படையில் நீதித் தீர்ப்பாணை பெற்று, திருமண முறிவு செய்ய இசுலாமியப் பெண்களுக்கு உரிமை வழங்கி இருக்கிறது.

முசுலிம் திருமண இழப்புச் சட்டம்
(The Dissolution of Muslim Marriages Act, 1939)

17–3–1939-ல் இந்தச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டது. இந்தச் சட்டத்தில் 2 ஆம் பிரிவில் கூறப்பட்ட காரணங்களைக் காட்டி, இசுலாமியப் பெண்கள் நீதிமன்றத்தில் திருமணமுறிவு கோர உரிமை பெற்றவர் ஆவர். எந்தக் காரணங்களின் அடிப்படையில் இசுலாமியப் பெண்கள் திருமணமுறிவு கோரலாம் என்று மட்டும் கூறப்

பட்டிருக்கிறதேயன்றி, திருமணமுறிவை எப்படிச் செய்துகொள்வது என்பதுபற்றி இதில் கூறப்படவில்லை. இதில் கூறப்பட்ட காரணங்களின் அடிப்படையில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுவிட்டால், இருவரிடையேயும் திருமண முறிவுக்கு நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கும். இந்தச் சட்டத்தில் திருமணமுறிவு செய்ததின் விளைவு என்ன என்றும் வரையறுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

திருமண முறிவைப் பொறுத்தவரையில், ஆணுக்கு எல்லையில்லா அதிகாரத்தை வழங்கிய இசுலாமிய சட்டம், பெண்களுக்கு எந்த அதிகாரத்தையும் கொடுக்கவில்லை. 'மனைவியைக் கனிவுடன் நடத்தமுடியாத பிணக்கு ஏற்படும்பொழுது அன்போடு அவளைப் பிரித்துவிடு' என்று திருக் குர்ஆன் கட்டளை இடுகிறது. எனவே, பிணக்குக் காரணமாக நீதிமன்றத்திற்குப் பெண்கள் இழுக்கப்படுவதைத் தவிர்ப்பதன் பொருட்டே எல்லையில்லாத அதிகாரத்தை ஆணிடம் கொடுத்து, பிணக்கை வளர்த்துக் கொள்ளாது பிரிந்து செல்லவே திருக் குர்ஆன் கட்டளை இடுகிறது. ஆயினும், முசுலிம் ஒருவன் தனக்குக் கிடைத்துள்ள அதிகாரத்தைப் பயன்படுத்த மறுத்து, பிணக்கின் காரணமாக மனைவியைத் துன்புறுத்திக்கொண்டிருந்தால், அவளுக்கு எந்த வழியும் இல்லாதுபோகிறது. ஆகவே, இந்தியாவிலுள்ள இசுலாமியப் பெண்களின் வேண்டுகோளின் பேரில், 'முசுலிம் திருமண இழப்புச் சட்டம்' 1939-ல் இயற்றப்பட்டது.

1937-ம் ஆண்டு இசுலாமிய ஷரீயத் சட்டத்திற்கு உட்பட்டுத் திருமணம் நடைபெற்ற பெண்ணுக்குத்தான் இந்தச் சட்டத்தின் 2 ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ள கீழ்வரும் காரணங்களைக் காட்டி, நீதிமன்றத்தில் திருமண முறிவு கோர உரிமையுண்டு:

1. நான்கு ஆண்டுகளோ அதற்கு மேற்பட்டோ, கணவன் போன இடம் தெரியவில்லை என்றால், அவனுடைய நெருங்கிய உறவினரிடமும் சொத்துக்குரிமை பெற்றோரிடமும் மனைவி தீர விசாரித்து, பின்னர் நீதிமன்றத்தில் திருமணமுறிவு கோரி வழக்குத் தொடர்ந்து தீர்ப்பாணை பெற்றுத் திருமணமுறிவு செய்யலாம். கணவன் நான்கு ஆண்டுகள் காணமற் போய்விட்டதாக நிரூபிக்கப்பட்டால், நீதிமன்றம் திருமண முறிவுக்கு ஆணை பிறப்பிக்கும். இந்த ஆணையின் மூலம் திருமண முறிவுக்கு ஆறுமாதம் காலக்கெடு கொடுக்கப்படும். அதற்குள்ளாகக் காணமற்போன கணவன் திரும்பி வந்து, தான் மனைவியோடு இல்லறம் தொடர விரும்புவதாக அறிவித்தால், முன்பு பிறப்பிக்கப்பட்ட ஆணை தள்ளுபடி செய்யப்படும். இல்லையென்றால், தீர்ப்பாணை நிறைவேறும்.

2. இரண்டு ஆண்டுகள் மனைவிக்கு வாழ்க்கைப் படி (maintenance) கொடுக்கத் தவறவோ, அல்லது வேண்டுமென்றே கொடுக்கா

திருக்கவோ நேரிட்டால், மனைவி திருமணமுறிவு கோர அதைக் காரண மாகக் காட்டலாம்.

3. ஏழு ஆண்டுகளோ, அதற்கு மேலோ, கணவன் சிறைத் தண்டனை அனுபவிக்க, மேல் வழக்குத் தொடர முடியாத அளவு முடிவான தீர்ப்பாக இருந்தால், அதைக் காரணமாகக் காட்டி, திருமண முறிவு கோர மனைவி உரிமை பெறுகிறாள்.

4. தக்க காரணம் எதுவுமின்றி, திருமணமூலம் ஏற்பட்ட கடமை களைக் கணவன் மூன்று ஆண்டுகள்வரை நிறைவேற்றத் தவறினால் அதைக் காரணமாகக் காட்டி, திருமணமுறிவு கோரலாம்.

5. திருமணத்தின்போதும், அதைத் தொடர்ந்தும், கணவன் பால் குறைவுபாடு (ஆண்மையற்றதன்மை) உடையவனாயிருந்தால், அதைக் காரணங்காட்டித் திருமணமுறிவு கோரலாம். கணவன் தன் பால்குறை பாட்டை ஓராண்டு காலத்திற்குள் செப்பனிட்டுக் கொள்வதாக மனு மூலம் எழுதிக் கொடுத்து, இணைந்து வாழக் கோரினால் இதற்கு அனுமதி அளிக்கப்படும். அந்த ஓராண்டு காலத்திற்குள்ளாக வீரியமின்மை குணப்படுத்தப்பட்டுவிட்டதாக நிரூபித்தால், இந்தக் காரணத்தின்மீது நீதிமன்றம் திருமணமுறிவுக்கு ஆணை பிறப்பிக்காது.

6. (அ) ஈராண்டு காலமாகக் கணவனுக்குச் சித்தம் கலங்கியிருந் தாலும், (ஆ) ஈராண்டு காலமாகத் தொழுநோயாலோ, பொல்லாத 'பெண் சீக்கு'-(virulent venereal disease) அல்லது 'மேகநோய்' என்றழைக்கப்படும் பால்நோயாலோ கணவன் அவதிப்பட்டுக்கொண்டு இருந்தாலும், அதைக் காரணமாகக் காட்டித் திருமணமுறிவு கோரலாம்.

7. பதினைந்து வயது பூர்த்தியாகு முன்னர்த் தந்தையாலோ, காப்பாளராலோ திருமணம் நடத்தி வைக்கப்பட்டு, உடலுறவு பூர்த்தி யாகாத நிலையில், பதினெட்டு வயது பூர்த்தியாகுமுன்னர் அவள் அத் திருமணத்தை ஏற்க மறுத்திருந்தால், அதைக் காரணமாகக் காட்டித் திருமணமுறிவு கோர மனைவிக்கு உரிமை உண்டு.

8. கணவனால் கொடுமைக்குள்ளாக்கப்பட்டால், அதைக் காரண மாகக் காட்டலாம்.

(1) வழக்கமாக உதைத்தல்,

(2) கெட்டுப்போன பெண்களோடு தொடர்பு வைத்துக்கொண்டு இல்லறத்திற்குக் களங்கம்தரும் வகையில் நடத்தல்,

(3) முறைகெட்ட வழிகளில் மனைவியை நடத்த முயலுதல்,

(4) மனைவியுடைய சொத்துக்களை அழித்து விரயம் செய்யவோ, அவளைச் சொத்துரிமை அனுபவிக்க முடியாது தடுக்கவோ செய்தல்,

(5) மனைவியின் மத சம்பந்தமான கொள்கை கோட்பாடுகளுக்கு ஊறு விளைவிப்பதன் மூலம் குறுக்கிட்டு நிற்றல்,

(6) கணவனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் இருக்க, அவர்களனைவரையும் திருக் குர்ஆன் விதிக்கும்கட்டளைக்கிணங்க அவன் ஒத்து நடத்தாதிருத்தல்

ஆகியவற்றைக் கணவனின் கொடுமைக்குக் காரணங்களாகக் காட்டலாம்.

9. இசுலாமிய சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட திருமணமுறிவிற்கான வேறு காரணங்களைக் காட்டியும் திருமணமுறிவு கோரலாம். (எ - டு.) லியான் (Lian).

மேற்கூறிய காரணங்களைக் காட்டி மனைவி திருமணமுறிவு கோரலாம். நீதிமன்றத்தில் அது நிரூபிக்கப்பட்டால், நீதிமன்றம் தீர்ப்பாணை (decree) பிறப்பிக்கும். தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து, இருவரிடையேயும் திருமணம் முறிவு பெறுகிறது.

மத மாற்றத்தால் திருமணமுறிவு (Apostasy)

திருமணத்திற்குப் பின்னர், உடலுறவுக்கு முன்னதாயினும் பின்னதாயினும், கணவனோ, மனைவியோ, அன்றி இருவருமோ இசுலாத்தை விட்டு வேறு ஒரு மதத்தைத் தழுவினால், தழுவிய உடனேயே, தூய இசுலாமிய சட்டப்படி அத் திருமண ஒப்பந்தம் முறிந்து விடுகிறது.

Abdul Ghani *vs* Azizul Haq

(39 Cal 409)

கணவன் இசுலாத்தைத் துறந்து விட்டதால், இசுலாமிய சட்டப்படி, இசுலாமிய முறையில் நடந்த திருமணம் முறிந்துவிட்டது என்று கொண்டு, மனைவி வேறு ஒரு முசுலிமைத் திருமணம் செய்தாள். இத் திருமணம் நடைபெற்ற பின்னர், இசுலாத்தைத் துறந்த முந்திய கணவன் திரும்பவும் இசுலாத்தைத் தழுவினான். அப்படித் திரும்ப இசுலாத்தைத் தழுவிய பின்னர், முன்னைய மனைவிமீது, இரண்டாந் திருமணம் செய்த குற்றத்திற்காக (Bigamy) வழக்குத் தொடர்ந்தான்.

கணவன் இசுலாத்தைத் துறந்த உடனேயே கணவன்-மனைவியர் இடையே உள்ள திருமண ஒப்பந்தம் முறிந்து விட்டதால், அவன் திரும்ப இசுலாத்தைத் தழுவியதன்மூலம், முன்னைய மனைவி இரண்டாந் திருமணம் செய்த குற்றமுடையவள் என்று அவள்மீது குற்றம்சாட்ட அவனுக்கு உரிமை இல்லை என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

1939-ல் இயற்றப்பட்ட முசுலிம் திருமண இழப்புச்சட்டம், பிரிவு 4 கணவனின் மத மாற்றம் காரணமாகத் தூய இசுலாமிய சட்டப்படி திருமணம் முறிந்து விடுவதுபற்றி ஏதும் கூறவில்லை. ஆனால், மனைவி இசுலாத்தைத் துறந்து விட்ட ஒரே காரணத்திற்காகத் திருமணம் முறிந்துவிடாது. இந்தக் காரணத்தோடு, பிரிவு 2-ல் கூறப்பட்டிருக்கும் காரணங்களில் எதையாவது ஒன்றை மெய்ப்பிப்பதன்மூலம், நீதிமன்றத்தில் திருமணமுறிவு கோர முடியும்.

மேலும், மனைவி தான் வந்த மதத்தையே திரும்பத் தழுவினால், பிரிவு 4-ன் கீழ்த் திருமணமுறிவு கோரும் உரிமை அவளுக்குக் கிடைக்காது. வேறு மதத்திலிருந்து இசுலாத்தைத் தழுவி, வந்த மதத்திற்கே அவள் திரும்பச் சென்றால், பிரிவு 4-ன் கீழ், உரிமை பெற முடியாது. (எ - டு.) இந்தப் பெண் இசுலாத்தைத் தழுவினாள்; இசுலாமிய முறைப்படி முசுலிமைத் திருமணம் செய்தாள். பின்னர்த் திரும்பவும் அவள் இந்து மதத்தில் சேர்ந்து விட்டாள். அவள், 'நான் மதம் மாறிவிட்டதால், இசுலாமிய முறைப்படி எனக்கு நடந்த திருமணம் முறிந்து விட்டது; எனவே, நீதிமன்றம் திருமணமுறிவுக்கு ஆணை பிறப்பிக்கவேண்டும்' என்று பிரிவு 4-ன் கீழ் உரிமை கோர முடியாது. ஆயின், இம்மத மாற்றமே இசுலாமிய முறைப்படி நடந்த திருமணத்தை முறித்து விடுகிறது. ஆனால், அவள் வந்த மதத்திற்கே செல்லாமல், கிறித்தவ மதத்தில் சேர்ந்து விட்டால், பிரிவு 4-ன் கீழ்த் திருமணமுறிவு கோர உரிமை பெறுகிறாள். பிரிவு 4-ல் உரிமை பெற்றாலும், பிரிவு 2-ல் கூறப்பட்ட காரணங்களில் எந்த ஒன்றையாவது அவள் நிரூபித்தால்தான் நீதிமன்றம் திருமணமுறிவுக்குத் தீர்ப்பாணை பிறப்பிக்கும். எனவே, மனைவி பிறமதத்தைத் தழுவினால், அதைத் திருமண முறிவுக்குரிய காரணங்களில் ஒன்றாகக் கருதலாமேயொழிய, அது தானே திருமண முறிவாகி விடாது.

பிறமதத்தவர் இசுலாத்தைத் தழுவல்

இசுலாமிய சட்டப்படி ஆட்சி நடக்கும் நாடாக இருந்தால், பிறமதத் தம்பதிகளில் ஒருவர் இசுலாத்தைத் தழுவியதும், தழுவியவர் மற்றவரை இசுலாத்திற்கு வருமாறு அழைக்கவேண்டும். அவர் அதை ஏற்று இசுலாத்தைத் தழுவினால், அவர்களிடையேயுள்ள பழைய திருமணம் நீடிக்கும். ஆனால், அவர் இந்த அழைப்பை ஏற்க மறுத்து விட்டால், நீதிமன்றத்துக்குச் சென்று உடன்தானே நீதிமன்ற ஆணை பெற்றுத் திருமணமுறிவு செய்துகொள்ள வேண்டும். இசுலாமிய சட்டப்படி ஆட்சி நடைபெறாத வேறு நாடாயிருந்தால், இசுலாத்தைத் தழுவியவர் மற்றவரை இசுலாத்திற்கு அழைக்கவேண்டும். அவர் வர மறுத்தால், இசுலாத்தைத் தழுவியதிலிருந்து மூன்று மாதங்கள் முற்றுப்பெற்றதும், திருமணம் அவ்விருவர் இடையேயும் முறிந்து விடுகிறது. நீதிமன்ற ஆணை தேவை இல்லை.

தூய இசுலாமிய சட்டப்படி, கணவன் மதம் மாறினால் எப்படி ஒப்பந்தம் முறிந்துவிடுகிறதோ அதேபோல், மனைவி இசுலாத்தைத் துறந்தாலும், கணவனோடுள்ள திருமண ஒப்பந்தம் மதம் மாறிய உடனேயே முறிந்துவிடுகிறது. அவள் வேதமுடைய மதத்தைத் தழுவினால் திருமணம் முறிந்ததாகாது என்பது சட்ட மேதை அமீர் அலீயின் கருத்தாகும். 1939ஆம் ஆண்டு முசுலிம் திருமண இழப்புச் சட்டம் பிரிவு 4-ன்படி, மனைவி இசுலாத்தைத் துறந்துவிட்ட ஒரே காரணத்திற்காகத் திருமணம் முறிந்து விடாது. ஆனால், கணவன் அவளோடு வாழ மறுத்தால், பிரிவு 2-ல் சொல்லப்பட்ட காரணங்களில் ஒன்றைக் காரணமாகக் காட்டி, அதை மெய்ப்பிப்பதன்மூலம், தீர்ப் பாணை பெறமுடியும். இதுவே இந்தியாவில் இன்று நடைமுறையில் இருக்கும் சட்டமாகும்.

John Jiban Chandra *vs* Abinash (1939)

(2-Cal—12)

தம்பதிகள் கிறித்தவர்கள். கணவன் இசுலாத்தைத் தழுவி, ஒரு முசுலிம் பெண்ணை அவன் திருமணமுடித்து, இவள்மூலம் சில குழந்தை களைப் பெற்றெடுத்தான்.

அவன் கிறித்தவனா யிருந்தபொழுது செய்துகொண்ட திருமணம் முறிக்கப்பெறாது நடைமுறையில் இருந்தாலும், இசுலாத்தைத் தழுவி இசுலாமிய சட்டப்படி அவன் செய்த மறு திருமணம் செல்லுடைமை யாகும் என்று இந்த வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது.

Noor Jehan *vs* Eugene Tischence (1941)

(45 CWN. 104)

தம்பதிகள் இரஷிய நாட்டவர்கள். திருமணம் பெர்லினில் நடை பெற்றது. அவர்களிருவரும் இரஷியாவை நிலையகமாய்க் (Russian Domicile) கொண்டவர்கள் ஆவார்கள். மனைவி இந்தியாவுக்கு வந்தாள்; இசுலாத்தைத் தழுவினாள்; இங்கிலாந்திலிருந்த கணவனுக்கு இசுலாமிய சட்டப்படி, இசுலாத்தைத் தழுவுமாறு அவள் தந்திமூலமாக அழைப்பு அனுப்பினாள். கணவன் மறுத்துவிடவே, அவள் கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் திருமணமுறிவு கோரி வழக்குத் தொடர்ந்தாள்.

மனைவி இசுலாத்தைத் தழுவியதால், இசுலாமிய நடைமுறைச் சட்டத்தின் அடிப்படையில் நீதித் தீர்ப்புக் கோரமுடியாது. அதுவும், கிறித்தவமத முறைப்படி நடந்த திருமணத்தை முறிக்க, அவள் மதம் மாறியதைக் காரணமாகக் காட்டி இசுலாமிய நடைமுறைச் சட்டத்தின் அடிப்படையில் கணவனுக்கு அழைப்பு அனுப்ப, அதை அவன் ஏற்க

மறுத்ததால், இதைக் காரணமாகக் காட்டித் திருமணமுறிவு கோரினால், அதை அந்த நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டியது இல்லை என்றும், இசுலாமிய நடைமுறைச் சட்டப்படி பார்த்தாலும், மதம் மாறியவரும் மாறாதவரும் 'காஜி' (Kazhi) முன்னிலையில் வந்து நிற்க, அவர் (i.e., Kazhi) மதம் மாறாதவரிடம், 'நீர் மதம் மாறி இசுலாத்திற்கு வருகிறீரா?' என்று கேட்க, இவர் வர மறுத்தால், காஜீ திருமண முறிவுக்கு ஆணை பிறப்பிக்க வேண்டுமே தவிர, மதம் மாறியவர் மாறாதவரை இசுலாத்துக்கு அழைப்பதை இசுலாமியச் சட்டம் குறிப்பிட வில்லை என்றும், அப்படியே இருந்தாலும் இந்தியாவில் அது வழக்கொழிந்த ஒன்று ஆகையால், இந்த நீதிமன்றம் அதை ஏற்றுத் திருமண முறிவுக்கு ஆணை பிறப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் தீர்ப்பளித்தது. மேலும், வழக்கிடுவோர் இருவரும் இசுலாமிய சட்ட முறைப்படி திருமணம் செய்துகொண்டவராயிருந்தால்தான், 1937ஆம் ஆண்டு இசுலாமிய ஷரீயத் சட்ட அடிப்படையில் நீதி வழங்கப்பட வேண்டும் என்றும், அந்தச் சட்டத்தில் முசுலிமுக்கும்–முசுலிமல்லாதவருக்கும் இடையே நடந்த திருமணத்தை முறிவு செய்ய முசுலிம் ஷரீயத் சட்ட விதிகளைப் பயன்படுத்த வேண்டும் என்று கூறப்பட வில்லை என்றும் தீர்ப்பளித்தது.

Hamira Bibi *vs* Zubaida Bibi (1915)

(43 I.A. 294)

தம்பதிகள் இந்துக்கள். மனைவி கணவனின் கொடுமை தாங்காது இசுலாத்தைத் தழுவினாள். இசுலாத்தை ஏற்றுக்கொள்ளுமாறு இவள் தன் கணவனுக்குக் கடிதம் அனுப்பினாள். பதில் வரவில்லை. குறித்த வகை மாற்றீடு சட்டத்தின்கீழ் (Specific Relief Act) அவள் திருமண முறிவு கோரினாள்.

வழக்காடுவோர் இருவருமே முசுலிம்கள் அல்லர் ஆகையால், 1937ஆம் ஆண்டு இசுலாமிய ஷரீயத் சட்டத்தைப் பயன்படுத்தி நீதி வழங்க முடியாது. பிரதிவாதியின் சட்டத்தின் அடிப்படையிலும் நீதி வழங்க இடமில்லை. நீதி, நியாய, நேர்மை, மனச்சாட்சி அடிப்படையில் நீதி வழங்குவது இசுலாமிய கொள்கைக்குப் புறம்பானதன்று. எனவே, நீதி, நியாய, நேர்மை, மனச்சாட்சி அடிப்படையில் திருமண முறிவு வழங்கப்பட்டிருப்பதாகத் தீர்ப்பளிக்கப்பட்டது.

Sayad Khatoon *vs* M. Obadiah (1945)

(49 CWN 745)

இந்த வழக்கில், மேற்கூறிய சந்தர்ப்பத்தில், நீதி, நியாய, நேர்மை, மனச்சாட்சி அடிப்படையில் இசுலாமிய சட்டத்தைப் பயன்படுத்தித் திருமணமுறிவு வழங்கலாகாது என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

Robassa Khanum *vs* Khodadad Bomanji (1946)

(48 Bom L. R. 864)

தம்பதிகள் பார்ஸீ மதச் சட்ட அடிப்படையில் திருமணம் செய்து கொண்டனர். மனைவி இசுலாத்தைத் தழுவி, கணவனை இசுலாத்தைத் தழுவுமாறு அழைத்தாள். அவன் மறுத்துவிடவே, நீதிமன்றத்தில் அவள் திருமணமுறிவு கோரினாள்.

பிற மதத் தம்பதிகளில் ஒருவர் இசுலாத்தைத் தழுவி, மற்றவரை இசுலாத்திற்கு அழைக்க, அதை அவர் மறுத்துவிட்டால், அதையே காரணமாக வைத்து, வேறு மதச் சட்ட அடிப்படையில் நடந்த திருமணத்தை இசுலாமிய நடைமுறைச் சட்டவிதிப்படி முறித்துக் கொள்ள உரிமை கோருவது இந்திய நாட்டுச் சட்டத்திற்கு ஒத்து வராது என்று கூறி, நூர்ஜஹான் பேகம் வழக்கின் (12–கல்கத்தா) முடிவை ஏற்று, திருமணமுறிவுக்கு ஆணை பிறப்பிக்காது, பம்பாய் உயர்நீதிமன்றம் வழக்கைத் தள்ளிவிட்டது.

பிறமத முறைப்படி திருமணம் செய்துகொண்டு, அவர்களுள் ஒருவர் (வாதி) இசுலாத்தைத் தழுவுவதன் காரணமாக, அவர் பிற மதத்தில் இருந்தபோது அவருக்கும் பிரதிவாதிக்கும் நடந்த திருமணம் முறிந்து விடாது என்பது முடிவான கருத்தாகும்.

திருமணமுறிவால் ஏற்படும் விளைவுகள்

1. திருமண முறித்த பின்னர், இருவரிடையேயும் ஏற்படும் உடலுறவு முறைகெட்டதும், சட்டப் புறம்பானதுமாகும்.

2. உடலுறவு பூர்த்தியாகியிருந்தால், திருமணம் முறித்த நாளிலிருந்து மனைவி ‘இத்தா’ இருக்கவேண்டும். உடலுறவு பூர்த்தியாகாதிருந்தால், ‘இத்தா’ அவசியமில்லை.

3. மஹர்க் கடன் உடனடியாக மனைவிக்குத் தரப்படவேண்டும். நீதித்தீர்ப்பின்மூலம் திருமணமுறிவு செய்யப்பட்டிருந்தாலும், அது அவளுடைய மஹர் பெறும் உரிமையைப் பாதிக்காது.

4. மனைவி ‘இத்தா’ இருக்கும் நாட்களில் கணவன் அவளுக்கு வாழ்க்கைப் படி தரவேண்டும்.

5. திரும்பப் பெறமுடியாத அளவு உடனடி முற்றுப்பெறும் ‘தலாக்’ (Irrevocable Talaq) சொல்லப்பட்டால், இருவரிடையேயும் சொத்துரிமை முடிவடைந்துவிடுகிறது. ஆனால், கணவன் தன்னுடைய மரணநோய் கண்டிருக்கும் (மாஜுல் மௌத்) (Death illness) சமயத்தில் திருமணமுறிவு செய்தால், ‘இத்தா’ முடிவடையும் நாளில்தான்

மனைவியின் சொத்துரிமையும் முடிவடையும். மரணநோய் கண்ட கணவன் உடனடி முற்றுப்பெறும் (irrevocable) 'தலாக்' சொன்னாலும், அவள் 'இத்தா' இருந்து முடிகின்றவரை கணவனின் சொத்தில் பங்குபெறத் தகுதியுடையவளாவாள். எனவே, 'இத்தா' இருந்து முடியுமுன்னர்க் கணவன் இறந்துபோனால், மனைவிக்குக் கணவனின் சொத்தில் பங்குபெற உரிமை உண்டு. ஆனால், அவளுடைய சம்மதம் பெற்ற பின்னர் இத்தகு 'தலாக்' சொன்னால், அவள் உரிமை இழந்தவளாவாள். இதே சந்தர்ப்பத்தில், 'இத்தா' இருந்து முடிய வேண்டிய காலக்கெடு தீருமுன்னர் மனைவி இறந்துவிட்டால், கணவனுக்கு அவளுடைய சொத்தில் பங்கு கேட்க உரிமை கிடையாது.

திருமண முறித்த பின்னர்ப் பழைய தம்பதிகள் மறுபடியும் திருமணம் செய்துகொள்ள வேண்டுமேயானால், கீழ்வரும் விதிகளைக் கண்டிப்பாய்க் கடைப்பிடிக்கவேண்டும் :

(1) முதலில் மனைவி 'இத்தா' இருக்கவேண்டும்.

(2) 'இத்தா' இருந்து முடிந்த பின்னர், வேறு ஒருவனை அவள் மணந்து கொள்ள வேண்டும்.

(3) அப்படி மணந்தவனோடு இவ்விருவருக்கும் உடலுறவு பூர்த்தியாக்கப்படவேண்டும்.

(4) பின்னர், இவன் அவளுக்குத் 'தலாக்' கொடுத்து, இவ்விருவரிடையே திருமண முறிவு ஏற்படவேண்டும். அல்லது இவன் மாண்டு, அவள் கைம்பெண்ணாக வேண்டும்.

(5) திரும்பவும் அவள் 'இத்தா' இருக்கவேண்டும்.

இந்த ஐந்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்த பின்னரே, பழைய தம்பதிகளிடையே செல்லத்தக்க மறு திருமணம் நடைபெற முடியும். இந்த நிபந்தனைகளில் ஏதாவது ஒன்று பூர்த்தி செய்யப்படவில்லையானாலும், அது ஒழுங்கற்ற திருமணமாகும். எனவே, 'தலாக்' சொல்வது மேற்போக்காக மிகச் சுலபமாகத் தெரிந்தாலும், ஒருமுறை ஒருவன் அதை முன்யோசனையின்றிப் பயன்படுத்திவிட்டால், பிறகு அவன் என்னதான் வருந்தி வேதனைப்பட்டாலும், அவளோடு மீண்டும் வாழ்க்கை நடத்துவது முடியாததாகிவிடும்.

5. பெற்றோராதல் (Parentage)

குழந்தையின் பெற்றோர் யார் என்று நிர்ணயிப்பதற்கு இசுலாமிய சட்டம் சில விதி முறைகளை வகுத்துவிட்டிருக்கிறது. தாய் தந்தையர் சட்டமுறைப்படி திருமணம் செய்து கொண்டிருந்து, இல்லறம் நடத்தி, அதன் மூலம் பெற்றெடுக்கும் குழந்தைகள் முறைமணப்பிறப்புக் குழந்தைகளாகக் (legitimate) கருதப்படுகின்றனர். அவர்களை முறைப்படி ஈன்றெடுத்தோரே பெற்றோராவர். பெற்ற குழந்தையை அனாதையாகத் தூக்கி எறிந்து, கேட்பாரற்றதாக ஆக்கிவிடாமல் இருந்தால், குழந்தைக்குத் தாய் எவள்? என்ற கேள்வி எழாது. ஈன்றெடுத்தவள் தாய் என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. ஆனால், அன்னை ஈன்ற அக் குழந்தைக்குத் தந்தை எவர்? என்பதைச் சமுதாயமும் சட்டமும்தாம் தீர்மானிக்கின்றன. தாய் தந்தையர் இடையே ஏற்பட்ட திருமண உறவு எப்படிப்பட்டதாயிருப்பினும், ஈன்றெடுத்தவள் தாய் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், குழந்தையின் தந்தை எவர்? என்பதைச் சட்ட அடிப்படையில்தான் நிர்ணயிக்க வேண்டும். சில சமயங்களில், தந்தைமுறையை நிலைநாட்டுவது ஒரு சிக்கலான பிரச்சினையாகி விடுகிறது. சட்ட முறைப்படி மணந்து, மனைவியோடு வாழ்க்கை நடத்தி, குழந்தைகளைப் பெற்றெடுக்கக் காரணமாயிருக்கும் கணவன் குழந்தையின் தந்தை என்றும், அப்படிப் பெற்றெடுக்கப்பட்ட குழந்தைகள் முறைமணப்பிறப்புக் குழந்தைகள் (legitimate children) என்றும் சட்டம் வரையறுத்துள்ளது. ஆனால், அங்கீகரிக்கப்பட்ட திருமணம் நடைபெறாது, ஆண்-பெண் இடையே உடலுறவு மட்டும் ஏற்பட்டு அதனால் குழந்தைகள் பிறந்தால், அவர்கள் முறையிலா மணப் பிறப்புக் குழந்தைகள் (illegitimate children) என்று சட்டம் கூறுகிறது. குழந்தையின் பிறப்பு முறைமணப் பிறப்பா? இல்லையா? என்பதைக் கண்டுகொள்ள, தந்தையின் தொடர்பு அத் தாயுடனே எப்படி ஏற்பட்டது என்று பார்க்கவேண்டும். அது அங்கீகரிக்கப்பட்ட திருமணம்மூலம் ஏற்படுத்தப்பட்ட தொடர்பா யிருந்தால், குழந்தை முறைமணப்பிறப்புக் குழந்தை என்றும், அதன் பெற்றோர்கள் கணவன் மனைவியராக வாழ்ந்த தாயும் தந்தையும் ஆவர் என்றும் தீர்மானிக்க வேண்டும். இசுலாமிய சட்டத்தின்படி, திருமணம் செய்து கொள்வதன்

நோக்கம், தந்தையின் வழிமுறையை நிலைநிறுத்துவதற்கே என்று கூறப்பட்டுள்ளது. எனவே, இசுலாமிய சட்டம், குழந்தையின் பிறப்பை நிர்ணயிக்க, தந்தை-தாய் உறவு சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட திருமண மூலம் ஏற்பட்ட கணவன்-மனைவி உறவாய் இருக்க வேண்டும் என்று கூறுகிறது.

தாய் (Mother):

குழந்தையின் பிறப்பு முறைமணப் பிறப்பாயினும் இல்லையாயினும், *ன்றெடுத்தவளே தாய் என்கிறது 'சுன்னி' சட்டம். குழந்தை முறையிலாமணப் பிறப்பாயினும், தாய்-சேய் இடையே சொத்துரிமை இறக்கத்திற்கு அக் குழந்தைக்கு அஃது உரிமை அளிக்கிறது. ஆனால், 'ஷீயா' சட்டப்படி செல்லத்தக்க திருமணத்தின்மூலம் தம்பதிகளாய் வாழ்ந்து, மனைவி குழந்தையைப் பெற்றெடுத்தால் தாய்-சேய் உறவும் உரிமையும் ஏற்படுகின்றனவே தவிர, முறையிலா மணப் பிறப்புக் குழந்தைகளைப் பெற்றடுத்த தாயும் சேயும் சட்டத்தின் மூலம் எந்த உரிமைகளையும் பெறுவதில்லை என்றும், அக் குழந்தை தாயிடத்திருந்து சொத்துரிமை இறக்கம் (inheritance) பெறவோ, அல்லது தாய் குழந்தையின் சொத்தில் சொத்துரிமை இறக்கம் பெறவோ உரிமையற்றவர்கள் என்றும் 'ஷீயா' சட்டம் கூறுகிறது. எனவே 'ஷீயா'க் கொள்கைப்படி 'பெற்றெடுத்தவ ரெல்லாம் பெற்றோரல்லர்' என்று கூறலாம்.

தந்தை (Father):

அங்கீகரிக்கப்பட்ட திருமணத்தின் மூலம் கணவன்-மனைவி உடலுறவு கொண்டு, அதன்மூலம் அம் மனைவி குழந்தையைப் பெற்றெடுத்தால், 'தந்தைமுறை' கணவனுக்குச் சேர்கிறது.

குழந்தையின் பிறப்பு முறைமணப் பிறப்பா இல்லையா என்று நிர்ணயிக்க, திருமணமான நாள், திருமணம் முறிக்கப் பட்டிருந்தால், அது முறிக்கப்பட்ட நாள், அல்லது கணவன் இறந்து போயிருந்தால், இறந்த நாள், குழந்தை தாய் வயிற்றில் வளர்ந்த நாட்கள், இவற்றை அடிப்படை ஆதாரங்களாக எடுத்துக்கொள்ள வேண்டும். பின்னர், குழந்தை முறைமணப் பிறப்புடையதாய் இருந்தால், தந்தை-முறையை நிலைநாட்ட வேண்டும்.

தூய இசுலாமிய சட்டப்படி, திருமணமான நாளிலிருந்து, குறைந்தது ஆறுமாதம் தாயின் வயிற்றுக்குள் குழந்தை வளர்ந்திருக்க வேண்டும். திருமணமாகி ஆறு மாதத்திற்குப் பின்னர்ப் பிறக்கும் குழந்தையின் தந்தைமுறை அக் கணவனுக்குச் சேருகிறது. ஆறு மாதத்திற்குள்ளாகப் பிறக்கும் குழந்தை முறையிலாமணப் பிறப்பாய்க் (illegitimate child) கருதப்படும். எனவே, அக் கணவனுக்குத்

தந்தைமுறை சேராது. தாய் வயிற்றுக் குழந்தையாகக் கூடுதல் எத்தனை நாட்கள் வளரலாம் என்பதிலும், அதை அடிப்படையாக வைத்து முறைமணப் பிறப்புக் குழந்தையா அல்லவா என்பதை முடிவு கட்டுவதிலும் 'சுன்னீ' 'ஷீயா' பிரிவினரிடையே வேறுபாடு காணப் படுகிறது. 'ஷீயா' சட்டப்படி குழந்தை தாய் வயிற்றில் பத்துச் சந்திர மாதங்கள் வரை வளரமுடியும் என்றும், 'சுன்னீ' சட்டப்படி இரண்டு சந்திர ஆண்டுகள் வரை குழந்தை தாய் வயிற்றில் வளரமுடியும் என்றும் கருதப்படுகிறது. திருமண முறிந்த பின்னர் மேற்கூறப்பட்ட காலவரையறைக்கு உட்பட்டுக் குழந்தைகள் பிறந்தால், அது முறை மணப் பிறப்பாய்க் கருதப்படுவதால், தந்தைமுறை (விடுபட்ட) கணவனைச் சாரும். கால வரம்பு தாண்டிப் பிறக்கும் குழந்தைகள் முறையிலாமணப் பிறப்பாய்க் கருதப்படும்; எனவே, தந்தைமுறை விடுபட்ட கணவனைச் சாராது. மேற்கூறிய சட்ட வரையறை நிலை முறைச் சட்டத்தில் (Substantive Law) உள்ள சொத்துரிமைச் சட்டத்தின் (Law of Inheritance) ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது. ஆனால், இற்றை நாளில் மேற்கூறிய சட்ட வரையறை, சான்று சட்டத் திற்கு (Law of Evidence) அடிப்படையாக அமைகிறது என்பதைக் காணலாம்.

சான்றியல் சட்டம், 112ஆவது பிரிவில் (S. 112 of Evidence Act) இதுபற்றி விரித்துக் கூறப்படுகிறது. எனவே, சான்றியல் சட்டத் திற்கு உட்பட்டுச் செல்கின்ற இசுலாமிய சட்டவிதித் துறைகள் (Provisions of Law) இந்திய நீதிமன்றங்களில் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன. சான்றியல் சட்டத்திற்கு முரண்பட்டுச் செல்லும் இசுலாமிய சட்டவிதித்துறைகள் எவையும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. ஆயினும், சான்று சட்டத்திற்கு அப்பாற்பட்டு நிற்கும் இசுலாமிய சட்ட விதித் துறைகளைப் பொறுத்தமட்டில், சான்றுகள் மெய்ப்பிக்கப்பட்டால் அவை நீதிமன்றங்களால் ஏற்றுக்கொள்ளப் பெறலாம். இது குறித்துச் சான்றியல் சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் விதித்துறைகளாவன:

1. தம்பதிகளுடைய வாழ்நாளில் பிறக்கும் குழந்தைகளின் தாய் தந்தையர், அத் தம்பதிகளே ஆவர். பிறப்பு, தம்பதிகளின் திருமண நீடிப்பின் போதும், அவர்களின் வாழ்நாளிலும் நிகழவேண்டும்.

2. தம்பதிகளின் திருமண இழப்பிற்குப் பின்னர் 280 நாட்களுக் குள்ளாகப் பிறக்கும் குழந்தை, தாய் மறுதிருமணம் செய்யாதிருந்தால், முறைமணப் பிறப்புக் குழந்தை என்றும், அதன் தந்தை திருமண முறிவு செய்துகொண்டவரே என்றும் கருதலாம்.

ஆனால், குழந்தை கருவில் தோன்றிய நாளில் கணவன் மனைவியோடு உடலுறவுகொள்ள வாய்ப்புப் பெற்றது இல்லை என்று மெய்ப்பிக்கப்பட்டால், திருமணமுறித்தவர் தந்தையாகார்.

3. திருமணமுறிவு ஏற்பட்ட 281 ஆவது நாளிலோ, அல்லது அதன்பின்னரோ பிறக்கும் குழந்தையின் பிறப்பு முறைமணப்பிறப்பு இல்லை. திருமணமுறித்தவர் தந்தையாகக் கருதப்பட மாட்டார்.

'திருமணம் முறிந்து 280 நாட்களுக்குள்ளாகப் பிறக்கும் குழந்தைகளின் பிறப்பு' நற்பிறப்பு என்பதில், இசுலாமிய சட்டமும் சான்றியல் சட்டமும் ஒத்துப்போகின்றன. 'ஷீயா' சட்டப்படி, குழந்தை 280 நாட்களுக்குப் பின்னர்ப் பிறந்தாலும், அது பத்துச் சந்திர மாதங்களுக்கு உட்பட்ட காலமாயிருந்தால், குழந்தையின் பிறப்பு, முறை மணப் பிறப்பு ஆகும். சுன்னீ சட்டப்படி (ஷாபி) 280 நாட்கள் கழிந்த பின்னரும், 2 சந்திர ஆண்டுகளுக்கு உட்பட்ட காலத்தில் குழந்தை பிறந்தால், அது முறைமணப் பிறப்புக் குழந்தையாகும்.

ஆகவே, சான்றியல் சட்டப்படி, 280 நாட்கள் கழித்துப் பிறக்கும் குழந்தைகள் முறைமணப் பிறப்புக் குழந்தைகளாகக் கருதப் படுவதற்கில்லை என்றாலும், தக்க சான்றுகள் கொண்டு மெய்ப்பிக்கப் பட்டால், இசுலாமிய சட்டப்படி, அக் குழந்தைகளை முறைமணப் பிறப்பாய்க் கருத இடமிருக்கிறது. சான்றியல் சட்டத்தில், ஒழுங்கற்ற திருமணத்தின் மூலம் பிறக்கும் குழந்தைகளைப்பற்றியும் 'முத்ஆ'த் திருமணத்தின் மூலம் பிறக்கும் குழந்தைகளைப்பற்றியும் எதுவும் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. இசுலாமிய சட்டப்படி, அத் திருமணங்களின் மூலம் பிறக்கும் குழந்தைகள் முறைமணப் பிறப்புக் குழந்தைகளாவர். எனவே, இந்திய சான்றியல் சட்டம், பெற்றோராதலைப் பொறுத்த இசுலாமிய சட்டத்தை முழுமையாகவும் நீக்கிவிட்டதாகக் கூறமுடியாது.

ஒற்றுமை — வேற்றுமை

	இசுலாமிய சட்டம்	சான்றியல் சட்டம்
1. திருமணமாகி 6 மாதத்திற்குள்ளாகப் பிறக்கும் குழந்தை	முறையிலா மணப் பிறப்பு	முறைமணப் பிறப்பு
2. 6 மாதத்திற்குப் பிறகு பிறக்கும் குழந்தை	முறைமணப் பிறப்பு	முறைமணப் பிறப்பு
3. திருமணம் முறிந்து 280 நாட்களுக்கு உள்ளாகப் பிறக்கும் குழந்தை	முறைமணப் பிறப்பு	முறைமணப் பிறப்பு
4. திருமண முறிந்து 280 நாட்களுக்குப் பின்னர், ஆனால் 10 மாதம் அல்லது 2 வருடங்களுக்கு உள்ளாகப் பிறக்கும் குழந்தை	முறைமணப் பிறப்பு	முறையிலா மணப் பிறப்பு

Sibt Mahomed *vs* Mohomed

(48-All. 625)

இவ் வழக்கில் தம்பதிகள் முசுலிம்கள். திருமணம் நடந்தபின்னர், ஆறு மாதத்திற்குள்ளாக மனைவி குழந்தையைப் பெற்றாள். குழந்தையின் பிறப்பு, முறைமணப் பிறப்பு (legitimate) என்று சான்றியல் சட்ட அடிப்படையில் தீர்ப்பு வழங்கப்பட்டது. எனவே, குழந்தை முறைமணப் பிறப்பா இல்லையா என்பதைச் சான்றியல் சட்டத்தின் (பிரிவு 112) அடிப்படையில்தான் முடிவுகட்டவேண்டுமே தவிர, இசுலாமிய சட்ட அடிப்படையிலன்று என்பது தெளிவு.

திருமண முறிந்து 19 மாதங்கள் கழிந்தபின்னர், விதவை குழந்தையைப் பெற்றெடுத்தாள். இயற்கை நியதிக்கு ஒத்துவராது ஆதலால், குழந்தையின் பிறப்பு முறையிலாமணப் பிறப்பு என்று ஒரு வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது.

குழந்தை ஏற்பும் தந்தை ஆக்கமும்

ஒப்புதல் தத்துவம் (Acknowledgment of Paternity)

இசுலாமிய திருமணம் ஒரு வாழ்க்கை ஒப்பந்த மாதலால், அது சம்பிரதாய, சடங்குகள் எதுவு மின்றியேகூட நடைபெறலாம். எனவே, சில சமயங்களில், தாய்தந்தையர் செல்லத்தக்க திருமணம் செய்து கொண்டவர்தாமா? என்ற கேள்வி எழுகிறது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், நேரடிச் சாட்சிகள் இருந்தால் அவர்களால் நடந்த திருமணத்தை மெய்ப்பிக்க முடியும். அப்படி நேரடிச்சான்று இல்லாமற் போனால், மறைமுகச் சான்றுகள்மூலம் இருவரிடையேயும் திருமணம் நடைபெற்றதாகத் துணியலாம்.

மறைமுகச் சான்றுகளில் ஒன்றாகத் தந்தையின் ஒப்புதலைக் கொள்ள முடிகிறது. 'இது என்னுடைய குழந்தை' என்று தந்தை குழந்தையைத் தன்னுடையதாக ஏற்றுக்கொள்வதன்மூலம், இவருக்கும் குழந்தையின் தாய்க்கும் செல்லத்தக்க திருமணம் நடைபெற்றதாக ஊகித்து உணர முடிகிறது. இந்த விதமாகக் குழந்தையினை ஒப்புதல் அடிப்படையில், குழந்தை முறைமணப் பிறப்புக் குழந்தை என்று துணிபு கொள்ள முடிகிறது. இப்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட அக் குழந்தைக்குத் தந்தை இன்னொருவர் எவரும் இருக்கக்கூடாது. ஏற்றுக்கொண்ட தந்தையும், ஈன்றெடுத்த தாயும் இசுலாமிய சட்ட முறைப்படி திருமண உறவுக்குத் தடைவிதிக்கப்பட்டவர்களாய் இருக்கக்கூடாது. குழந்தையின் பிறப்பு முறையிலாமணப் பிறப்பாய் இருத்தல் கூடாது. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில், அது ஏற்றுக்கொள்ளப்பட்டவரின் குழந்தையாக இருந்தால்,

அவ்வாறு அவர் ஏற்றுக்கொள்வதன் மூலம், அக் குழந்தைக்குச் சட்டப்படி தந்தையாகவும், குழந்தையின் தாய்க்குக் கணவனாகவும் ஆகிவிடுகிறார். எனவே, இத் தாய்-தந்தையரிடையே செல்லத்தக்க திருமணம் நடைபெற்றதாக யூகித்துணர முடிகிறது. இதனடிப் படையில் பார்த்தால், முறையிலாமணப் பிறப்புக் குழந்தையை முறை மணப்பிறப்பாக்க முடியாது என்றும் இல்லமறைகாயாக இருக்கும் முறை மணப்பிறப்புக் குழந்தையை முறையிலாமணப் பிறப்பாவதில் நின்றும் தடுக்கமுடியும் என்றும் கூறலாம். இப்படித் தடுப்பதன்மூலம், அந்தக் குழந்தை சமுதாயத்தில் ஓர் அந்தஸ்தைப் பெறுகிறது. அத்துடன், தாய்தந்தையர் இடையேயும், தன்னிடையேயும் சிற்சில உரிமைகளைப் பெற அக் குழந்தையால் முடிகிறது. ஆனால், குழந்தையின் பிறப்பு முறையிலா மணப்பிறப்பு என்றோ, அல்லது அது வேறொருவரின் குழந்தை என்றோ, அவள் வேறு ஒருவரோடு திருமணம் செய்து கொண் டிருந்து, சட்டப்படி திருமணமுறிவு ஏற்படுத்தப்படவில்லை என்றோ, இருவரும் அங்கீகரிக்கப்பட்ட திருமணம் புரியத் தடையுடையோர் என்றோ, அல்லது தாய் விபசாரி என்றோ மெய்ப்பிக்கப்பட்டால், குழந் தையின் பிறப்பு முறையிலாமணப் பிறப்பாகும். அத்தகு முறையிலா மணப்பிறப்புக் குழந்தைகளை எவர் ஏற்றுக்கொண்டாலும், முறைமணப் பிறப்பு என்று அவர்களைச் சட்டம் ஏற்றுக்கொள்ளாது.

Rashid Ahmad *vs* Anisa Khatoon

(34 Bom L. R. 475 P. C.)

கணவன் மனைவிக்கு 'முத்தலாக்' கொடுத்தார். பின்னர், சட்ட முறைகளைப் பின்பற்றாது, அவரே அவளோடு 15 ஆண்டுகள் கூடி வாழ்ந்து 5 குழந்தைகளைப் பெற்றெடுத்தார். இந்தப் பதினைந்தாண்டு காலமும் அவர் அவளை மனைவியாக ஏற்று, 5 குழந்தைகளையும் தம்முடைய குழந்தைகளாகவே வளர்த்து வந்தார்.

ஒருமுறை 'முத்தலாக்' பெற்ற மனைவி முதலில் 'இத்தா' இருக்க வேண்டும்; அதன் பின்னர் வேறொருவரைத் திருமண முடிக்க வேண்டும்; அவரும் 'தலாக்' கொடுத்து, அல்லது மரணமடைந்து விட்டால், அதன் பின்னர் அவள் 'இத்தா' இருந்து முடிந்த பின்னரே, 'முத்தலாக்'கால் முறிவு செய்த பழைய கணவனை மீண்டும் திருமணம் செய்து கொள்ள முடியும். எனவே, இத் தம்பதி இருவரும் கணவன் மனைவியராய் வாழ்ந்தனர் என்ற சான்று மட்டும் போதாது. அவள் வேறொருவனால் திருமணம் முடிக்கப்பட்டு, அவனால் 'தலாக்' கொடுக்கப் பெற்றிருந்தாள் என்பதற்கும் சான்று வேண்டும். அத்தகு சான்று எதுவும் இல்லாத காரணத்தால், இவ்விருவரும் கணவன் மனைவியராய் வாழ்ந்ததற்குச் சான்று இருந்த போதிலும், குழந்தைகள் முறையிலா மணப் பிறப்புக் குழந்தைகளே என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

Abdul Rahmankutty *vs* Aisha Beevi (1960)

(A. Ker–101)

திருமண முடித்த சில நாட்களில் கணவன் மனைவியைத் துரத்தி விட்டான். அவள் திருமணத்தின்போதே கருவுற்றிருந்தாள் என்ற காரணத்தைக் காட்டித் துரத்தினான். அடுத்த நான்கு மாதங்களில் அவள் குழந்தை யொன்றைப் பெற்று எடுத்தாள். இருவரிடையேயும் செல்லத்தக்க திருமணம் நடைபெறாததால், திருமணத்திற்குப் பின் நான்கு மாதங்களில் பிறந்த குழந்தை முறைமணப் பிறப்புக் குழந்தை என்று சான்றியல் சட்டம் 112-ஆவது பிரிவின் கீழ்த் துணிபு கொள்ள முடியாது என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது.

குழந்தை தன்னுடையது என்று வெளிப்படையாக அறிவிக்கப் படாதிருந்தாலும், மறைமுகமாக ஒப்புதல் இருந்தால், அதை மெய்ப்பிப் பதன்மூலம், தந்தை நிலையை ஏற்றுக்கொள்ள முடியும். அதாவது, குழந்தையை நடத்திய முறை, வளர்த்த முறை, பிற சூழ்நிலை ஆகிய வற்றைக் கொண்டு, தந்தையின் ஒப்புதலைத் துணிய முடியும். அப்படித் தந்தை ஒப்புக்கொண்டதாக நிரூபிக்கப்பட்டால், சட்டம் அக் குழந்தை யின் பிறப்பை முறைமணப் பிறப்பாய் ஏற்றுக்கொள்கிறது. அத்துடன், அக் குழந்தைக்குத் தந்தை, ஒப்புக்கொண்டவரே என்று அங்கீகாரம் அளிக்கிறது. ஒருமுறை ஒருவன் ஒரு குழந்தையைத் தன்னுடையது என்று ஏற்றுக்கொண்டால், பின்னர் அதை எக் காரணத்தைக் கொண்டும் பின்வலித்துக்கொள்ள முடியாது.

Mahomad Alladad *vs* Muhammad Ismail (1888)

(10 All. 2893)

இதில் வழக்காடியவர்கள் சுன்னீ முசுலிம்கள். இதில் வாதிகள், அல்லாதாதுகானும் முஹம்மத் அநீமுன்னிசாவும் ஆவர். பிரதி வாதிகள் முஹம்மது இஸ்மாயீல்கானும், 3 சகோதரர்களும், மற்றும் மூவருமாவர். வழக்குச் சொத்தில் தங்களுடைய உரிமைகளை விளம்பு தற்கும், பிரதிவாதிகளிடத்திலிருந்து உரிமைபெற்ற பங்கை ஒப்படை பெறுவதற்குமாகத் தொடரப்பட்ட வழக்கு இது ஆகும்.

வாதி அல்லாதாதுகான், மூன்று முதல் நான்கு வரையுள்ள பிரதி வாதிகளின் தந்தையான குலாம் கௌசுகானின் முறைமணப் பிறப்பு மகனா? என்ற கேள்வி எழுந்தது. 1—4 பிரதிவாதிகளின் வாதத்தின் சாரம் என்னவென்றால், 'எங்கள் தந்தையான குலாம் கௌசுகான், எங்கள் தாயான மோதி பேகத்தைத் திருமண முடிப்பதற்கு முன்னரே அல்லாதாதுகானை ஒரு வளர்ப்புக் குழந்தையாக எடுத்துக்கொண்டார். எனவே, எங்கள் தந்தைக்கும் தாய்க்கும் திருமணம் ஆகுமுன்னரே

அல்லாதாதுகான் வளர்ப்புக் குழந்தையாக ஏற்றுக்கொள்ளப்பட்டதால், அவர் முறையான மணப்பிறப்புக் குழந்தையில்லை. இசுலாமிய சட்டம் வளர்ப்புக் குழந்தைகளுக்கு எந்த உரிமையையும் அளிக்கவில்லை. இசுலாமிய சட்டத்தில் மகவேற்புக்கு (adoption) இடமில்லை. எனவே, அல்லாதாதுகான் எங்கள் தந்தை தாய்க்கு முறைமணப் பிறப்புக் குழந்தையில்லையாதலால், தந்தையின் சொத்தில் அவர் எங்களோடு சொத்துரிமை பெற உரிமை கிடையாது' என்பதாகும்.

சில கடிதங்களும், ஆவணங்களும் (Documents) வாதி பக்கம் சான்று பகர்ந்தன. அவற்றில், தந்தை குலாம் கௌசுகான் அல்லாதாது கானை மகன் என்று குறிப்பிட்டிருந்தார். இந்தக் குறிப்பை அடிப்படை ஆதாரமாகக்கொண்டு, வாதியின் சார்பாக வாதாடப்பட்டது. 'மகன்' என்று ஆவணங்களிலும் கடிதத்திலும் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றமையால், குலாம் கௌசுகான் அல்லாதாதுகானைத் தம்முடைய முறைமணப் பிறப்பு மகன் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார். இன்னும் பல சந்தர்ப்பங்களில், அல்லாதாதுகானைத் 'தம்முடைய மகன் என்றே ஏற்றுக்கொண்டிருக்கிறார் (Acknowledged). அல்லாதாதுகான் தாய் தந்தை திருமணத்திற்குப் பின்னர்ப் பிறந்தவர் என்று நிரூபிக்கப்படாமற் போனாலும், 'தந்தை இவரைத் தம்முடைய மகனாக ஏற்றுக்கொண்ட ஒப்புதல் தத்துவத்தின் அடிப்படையில், இசுலாமிய சட்டப்படி, முறைமணப் பிறப்புக் குழந்தையாகிவிடுகிறார். எனவே, அல்லாதாதுகான் குலாம் கௌசுகானுக்கும் மோதி பேகத்திற்கும் (பிரதிவாதிகளின் தந்தை - தாய்) முறைமணப் பிறப்பில் பிறந்த குழந்தையாகக் கருதப்பட்டு, அவருக்குத் தந்தையின் சொத்தில் சொத்துரிமை இறக்கம் கிடைக்கப்பெற வேண்டும் என்று வாதாடப்பட்டது.

வாதியின் வாதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தம்பதிகளின் திருமணத்திற்கு 6 மாதத்திற்குப் பின்னர்ப் பிறக்கும் குழந்தைகளே முறைமணப் பிறப்புக் குழந்தைகள் என்று இசுலாமியச் சட்டம் கூறுகிறது. இந்த வழக்கில், தம்பதிகளுக்குத் திருமணமாகி ஆறு மாதத்திற்குப் பிறகே அல்லாதாதுகான் பிறந்தார் என்பது நிரூபிக்கப்படவில்லையாயினும், தந்தை இவரைத் தம்முடைய மகன் என்று ஏற்றுக் கொண்டதாக நிரூபிக்கப்பட்டிருப்பதால், குழந்தையின் பிறப்பில் சந்தேகம் ஏற்படும்பொழுது, தந்தையின் ஒப்புதலுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதை ஏற்று, குழந்தையை முறைமணப் பிறப்புக் குழந்தையாய் ஏற்றுக்கொள்ள வேண்டும். இசுலாமியச் சட்டத்தில் மகவேற்புக்கு இடமில்லையாயினும், இந்த ஒப்புதல் தத்துவம் மகவேற்பை (Adoption) ஒத்து இருக்கிறதென்றும், ஒருமுறை ஒப்புதல் அளித்தால், பின்னர் அதை மாற்றி உரைக்க முடியாது என்றும் அலாஹாபாது உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

ஒப்புதல் தத்துவத்தை அறிய இது நல்லதொரு மாதிரி வழக்காக நிற்கிறது.

Sadik Husain *vs* Hashim Ali (1916)
(43 I.A. 212)

ஒரு ஷியா நவாபின் சொத்தில் பலர் பங்கு கோரினர். அதில் ஓர் அபிசீனிய மனைவிக்குப் பிறந்த மகனும் தந்தையின் சொத்தில் சொத்து உரிமை கேட்டார். அபிசீனிய மனைவியை அவர் முத்ஆத் திருமண மூலம் மணமுடித்தார் என்று நிரூபிக்கப்பட்டது. அவள் திருமணத்தின்போது அடிமை என்று வாதாடப்பட்டது.

இந்த வழக்கில், பிரிவி கவுன்சில் முற்கூறப்பட்ட அல்லாதாது வழக்கில் கூறப்பட்ட, அலாஹாபாது உயர் நீதிமன்ற முடிவை அங்கீகரித்தது. முறையிலாமணப் பிறப்புக் குழந்தை என்று மெய்ப்பிக்கப் பட்ட பின்னர், வேறொருவர் தம்முடைய குழந்தை அது என்று ஏற்று ஒப்புதல் அளிப்பதன் மூலம் அக் குழந்தை முறைமணப் பிறப்புக் குழந்தையாகிவிடாது. ஒருவர் தம்முடைய குழந்தை என்று ஏற்றுக் கொண்டால், அவருக்கும் குழந்தையின் தாய்க்கும் செல்லத்தக்க திருமணத் தடை எதுவும் இல்லாது இருந்து, இருவரும் முறைமணப் பிறப்புக் குழந்தையைப் பெற்றெடுக்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தால், முறையிலாமணப் பிறப்பு என்று நிரூபிக்கப்படுவது வரையில், அவரது ஒப்புதல் நிலைமுறைச் சான்றாக (Substantive Evidence) ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவருடைய முறைமணப் பிறப்புக் குழந்தையாக அதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று பிரிவி கவுன்சில் தீர்ப்பு வழங்கியது.

ஒப்புதல் தத்துவம், வெறும் இசுலாமிய சட்டச் சான்று மட்டும் அன்று. அது இசுலாமிய சொத்துரிமைச் சட்டத்தின் (Law of Inheritance) ஒரு பகுதியுமாகும். எனவே, ஒப்புதல் தத்துவத்தை இசுலாமிய சட்டஇயல் (Muslim Jurisprudence) அடிப்படையில் முடிவுகட்ட வேண்டும் என்று 'ஹிதாயா' கூறுகின்றது.

ஒப்புதல் தத்துவத்தால் ஏற்படும் விளைவுகள்

1. குழந்தை தன்னுடையது என்று ஏற்றுக்கொள்வதன் மூலம், ஏற்றுக்கொண்டவனுக்கிடையேயும், ஏற்றுக்கொள்ளப்பட்ட குழந்தையின் தாய்க்கிடையேயும், சட்டப்படி செல்லத்தக்க திருமணம் நடைபெற்றதாகத் துணிபு கொள்ளப்படுகிறது (Presumption of marriage).

2. ஏற்றுக்கொள்ளப்பட்டவன் பெற்றோரின் சொத்துரிமையைப் பெறவும், அவனுடைய தாய், ஏற்றுக்கொண்டோரின் சொத்துரிமையைப் பெறவும் உரிமை கிடைக்கிறது.

3. ஒருமுறை ஒருவன் ஏற்றுக்கொண்டால், அவன் அதைப் பின்வலித்துக்கொள்ள முடியாது.

4. ஏற்றுக்கொள்ளுதல் வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ இருக்கலாம்.

5. ஏற்றுக்கொள்ளப்பட்ட குழந்தையை, ஒப்புதல் தத்துவத்தின் மூலம், முறைமணப் பிறப்புக் குழந்தையென்று தந்தை மட்டுமன்றி, உலகமே ஏற்றுக்கொள்கின்றது.

இந்துமதச் சட்டத்திலும், ரோமாபுரி நாட்டுச் சட்டத்திலும் அங்கீகாரம் பெற்றிருக்கிற மகவேற்பு (Adoption) இசுலாத்தில் அங்கீகரிக்கப் படவில்லை. ஆனால், ஒப்புதல் தத்துவம் மகவேற்பைப்போன்றிருப் பினும், இது மகவேற்பன்று. காரணம், ஒருவரின் முறைமணப் பிறப்புக் குழந்தையாயிருப்பினும், வேறு ஒருவரால் அதை மகவேற்புச் செய்ய முடியும். ஒப்புதல் தத்துவம் இதற்கு அனுமதி அளிக்கவில்லை.

6. காப்பாளர் நிலை (Guardianship)

இசுலாமிய சட்டம் காப்பாளர்களை மூன்று வகையாகப் பிரிக்கின்றது.

1. திருமணக் காப்பாளர்கள் (ஜபர்)
2. உரிமை வயதடையாதோர்க்கான காப்பாளர்கள் (ஹிஸானத்)
3. உரிமை வயது எய்தப்பெறுதோரின் சொத்துக் காப்பாளர்கள்.

இதில் திருமணக் காப்பாளர்களைப் பொறுத்த பிரச்சினைகளுக்கு, இசுலாமிய சட்ட அடிப்படையிலேயே நீதி வழங்கப்பட வேண்டும். உரிமை வயது எய்தப் பெறுதோர்க்கான காப்பாளர்களையும், அவர்களின் சொத்துக் காப்பாளர்களையும்பற்றி எழும் பிரச்சினைகளுக்கு, இசுலாமிய சட்டத்தோடு, உரிமை வயது எய்தப் பெறுதோர் நலன்பேண இந்திய அரசாங்கத்தால் இயற்றப்பட்ட, 1890ஆம் ஆண்டு காப்பாளர், காப்பிலுள்ளோர் சட்டமும் (Guardians and Wards Act, 1890) பயன்படுத்தப்பட்டு நீதிவழங்கப்பட வேண்டும். இவ்விரண்டையும் பொறுத்தவரை, மேற்கூறிய இரண்டு சட்டங்களின் அடிப்படையிலும் காப்பாளர் நியமனம், அவரது உரிமை, கடமை, அதிகாரம் முதலியன தீர்மானிக்கப்படும்.

இசுலாமிய சட்டப்படி, திருமணக் காப்பாளராய் எவரெவர் செயல்படலாம்; காப்பாளருக்கும் காப்பிலுள்ளோருக்கும் உள்ள தகுதி, தொடர்பு முதலியன யாவை என்பன குறித்து முன்னரே கண்டோம். காப்பாளராய்ச் செயல்படுபவர், (1) உரிமை வயது எய்தப் பெற்றவராயும், (2) சித்தம் தெளிந்தவராயும், (3) ஒரு முசுலிமாகவும் இருக்கவேண்டும். ஆனால், சட்ட மேதை முல்லா (Mulla)வின் கருத்துப்படி, ஜாதித் தகவின்மை ஒழிப்புச் சட்டம் (Caste Disabilities Removal Act) இயற்றப்பட்ட பின்னர், மூன்றுவதாய்க் கூறப்பட்டிருக்கிற, முசுலிமாக இருக்கவேண்டும் என்னும் நிபந்தனை அவசியமில்லை. ஆனால், மாறுபட்ட கருத்தும் நிலவுகிறது. கல்கத்தா உயர்நீதிமன்றம், ஜாதித்

தகவின்மை ஒழிப்புச் சட்டம் மூன்றுவது தகுதியை ஒழித்துவிடவில்லை என்று ஒரு வழக்கில் தீர்ப்பு வழங்கி இருக்கிறது. அதுவே பொருத்த மானதாகவும் தெரிகிறது.

உரிமை வயது அடையாதோர்க்கான காப்பாளர்கள் (ஹிஸா னத்) (Guardianship of the person of a minor)

உரிமை வயது அடையாதோர்க்கான காப்பாளர் நிலை 'ஹிஸானத்' என்று அரபுமொழியில் கூறப்படுகிறது. காப்பாளர் உரிமை பெற்றவர் 'ஹசுரா' என்று அழைக்கப்படுவார். காப்பிலுள்ளவர்கள் உரிமை வயது எய்தப்பெறும் வரையில், காப்பாளரின் பாதுகாப்பிலும் கண்காணிப்பிலும் வளர்க்கப்பட்டுவருவதைக் காப்பாளர் நிலை (guardianship) என்கிறோம்.

தூய இசுலாமிய சட்டப்படி, பருவ மெய்தல் என்பதும், உரிமை வயதடைதல் என்பதும் ஒன்றுடனென்று பின்னிக்கிடக்கின்றன. ஆனால், ஷரீயத் சட்டப்படி, ஒருவர் பதினைந்து வயது பூர்த்தியடைந்த வராயின், அவர் உரிமை வயது எய்தப் பெற்றவராவார். அஃதாவது, அவர் உரிமை வயதுவந்தோர்க்கான உரிமைகள் அனைத்தையும் பெற்றவராவார். ஆயினும், திருமணம் (Marriage), திருமண முறிவு (Divorce), 'மஹர்' (Mahr) ஆகிய மூன்றும் தவிர மற்ற எல்லா விஷயங்களிலும் முசுலிம்களுக்கும் 1875ஆம் ஆண்டு இந்திய உரிமை வயதுவந்தோர் சட்ட (Indian Majority Act, 1875) விதித்துறை களுக்கிணங்கவே இந்திய நீதிமன்றங்களில் நீதி வழங்கப்படும். அப்படியாயின், 18 வயதைப் பூர்த்திசெய்தவர்களே உரிமை வயது எய்தப்பெற்றவராய்க் கருதப்படுவர். 18 வயது பூர்த்தியானவர்களே காப்பாளராகவும், கொடை அளித்தல், உயில் எழுதிவைத்தல் போன்ற மற்றக் காரியங்களிலும் செயல்படத் தகுதியுள்ளவர்களாகவும் ஆகின்றனர். நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட வழக்கில் காப்பாளர் (Guardian *Ad Litem*) பொறுப்பில் வளர்பவர்கள், 21 வயதைப் பூர்த்தி செய்தால் மட்டுமே உரிமை வயது எய்தப்பெற்றவராவர்.

1890ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட காப்பாளர்-காப்பிலுள்ளோர் சட்டத்தின் (Guardians and Wards Act) பிரிவு 8-ன் கீழ், உரிமை வயது எய்தப்பெருதோர்க்கான காப்பாளரை நியமிக்க நீதிமன்றத்தில் மனுப்போட்டால், நீதிமன்றம் வயது வராதோர் நலனைக் கருத்தில் கொண்டு, உரிமை வயது அடையாதோர்க்கான காப்பாளரையோ, அல்லது அவர்களின் சொத்தைப் பராமரிக்கச் சொத்துக் காப்பாள ரையோ, அல்லது இரண்டிற்கும் சேர்த்துக் காப்பாளரையோ நியமிக்க அல்லது நியமனம் பெற்றுச் செயல்படுபவர்களை உறுதிப்படுத்த வழிவகை செய்யும்.

குழந்தையைப் பாதுகாத்து வளர்ப்பதில், முந்தியதும் முதன்மையானதுமான பொறுப்பு ஈன்றெடுத்த தாயையே சாரும். இந்த அடிப்படையில், குழந்தையைப் பாதுகாத்து வளர்க்கும் தாயின் பொறுப்பு, தந்தைக்குள்ளதினும் முந்தியதாகக் கருதப்படுகிறது. தாய் தந்தையர் இடையே திருமணமுறிவு ஏற்பட்டாலும்கூட, குழந்தையிருப்பின், அதைப் பாதுகாத்து வளர்க்கும் பொறுப்பு, ஈன்ற தாய்க்கே தரப்படும். ஒரு முசுலிம் தந்தைக்கும், முசுலிம் அல்லாத தாய்க்கும் பிறந்த குழந்தையை வளர்க்கும் பொறுப்புங்கூடத் தாய்க்கே தரப்பட வேண்டும். ஆனால், தாய் முசுலிமாக இருந்து, பின்னர் மதம் மாறினால், இந்தப் பொறுப்பை இழக்க நேரிடும். தாய் மறு திருமணம் செய்தாலும் குழந்தையை வளர்க்கும் பொறுப்பு அவளுக்கே தரப்படவேண்டும். ஆனால், அவள் மறுமணம் செய்துகொண்டவன் குழந்தையுடன் திருமண உறவுகொள்ளத் தடை இல்லாதவனாயிருந்திருப்பின், அவள் அக் குழந்தையை வளர்க்கும் பொறுப்பை இழக்க நேரிடும். ஏனெனில், அவன் உறவுமுறை யற்ற ஓர் அன்னியனாக இருப்பதால், குழந்தை அன்பிழந்த நிலையில் வளர்க்கப்பெறலாம். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அன்னியனோடு வாழ்க்கை நடத்துகிறவரை குழந்தையை வளர்க்கும் பொறுப்பை அவள் இழக்க நேரிடும். ஆனால், நீதிமன்றம் இந்தச் சந்தர்ப்பத்திலும் குழந்தை தாயின் பொறுப்பில் வளர்வதே நல்லது என்று கருதினால், அவளையே காப்பாளராய் நியமிக்கலாம். தாய் குடும்ப நெறியிலிருந்து மாறி, இழுக்கு ஏற்படுத்தும் வகையில் நடந்தால், காப்பாளராயிருக்கும் உரிமையை இழக்க வேண்டும். திருட்டு, விபசாரம் போன்ற தீய நடக்கைகளால் அவள் தன்மீது களங்கம் ஏற்படுத்திக் கொண்டால், அந்தப் பொறுப்பை இழக்க நேரிடும்.

தாய் சார்ந்திருக்கும் பிரிவையும், குழந்தை ஆணா பெண்ணா என்பதையும் அடிப்படையாகக் கொண்டு, தாய் பொறுப்பாற்ற வேண்டிய காலம் வேறுபடுகிறது. ஹனபி பிரிவினரின் சட்டப்படி, ஆண் குழந்தையாயின், ஏழுவயது பூர்த்தியாவது வரையிலும், பெண் குழந்தையாயிருப்பின், பருவம் எய்தப்பெறுவது வரையிலும் தாயே அதன் பொறுப்பாளராய்ச் செயல்பட உரிமை பெறுகிறாள். தாய் இல்லாதிருந்தால், பின்காணும் வரிசைப்படி, காப்பாளர்ப் பொறுப்பு அளிக்கப்படவேண்டும்.

1. தாயின் தாய் எத்தனை தலைமுறை முன்சென்றாலும் (Mother's Mother how high soever).
2. தந்தையின் தாய் எ. த. மு. செ. (Father's mother h. h. s.).
3. உடன் பிறந்த சகோதரி (Full sister)
4. தாய்வழிச் சகோதரி (Uterine sister)

5. தந்தைவழிச் சகோதரி (Consanguine sister)

6. உடன்பிறந்த சகோதரியின் மகள் (Full sister's daughter)

7. தாய்வழிச் சகோதரியின் மகள் (Uterine sister's daughter)

8. தந்தைவழிச் சகோதரியின் மகள் (Consanguine sister's daughter)

9. தாயின் சகோதரிகள் (Maternal aunts)

(1) தாயின் உடன் பிறந்த சகோதரி (Full maternal aunt)

(2) தாயின் தாய்வழிச் சகோதரி (Uterine maternal aunt)

(3) தாயின் தந்தைவழிச் சகோதரி (Consanguine maternal aunt)

10. தந்தையின் சகோதரிகள் (Paternal aunts)

(1) தந்தையின் உடன் பிறந்த சகோதரி (Full paternal aunt)

(2) தந்தையின் தாய்வழிச் சகோதரி (Uterine paternal aunt)

(3) தந்தையின் தந்தைவழிச் சகோதரி (Consanguine paternal aunt)

பட்டியலில் கூறப்பட்டவர்கள் அனைவரும் பெண்கள். அதிலும், தந்தைவழியைவிடத் தாய்வழிக்கே முதலிடம் கொடுக்கப்பட்டிருப்பதையும் காணலாம். இவர்களில் எவருமே இல்லாதிருப்பின், தந்தைக்கும், அவரை அடுத்து, தந்தையின் தந்தைக்கும், அவரை அடுத்து, தந்தையின் உறவினருக்கும் காப்பாளர்ப் பொறுப்புத் தரப்பட வேண்டும். தந்தை 'உயில்' எழுதிவைப்பதன்மூலம், பட்டியலில் கூறப்பட்டுள்ள வரிசையை மாற்றமுடியாது.

தம்பதிகளில், மனைவி பருவம் எய்தப் பெருதவளாயிருப்பின், காப்பாளராகச் செயல்பட வேண்டிய பொறுப்பு மனைவியின் தாயைச் சேருமே தவிர, திருமண முடித்துவிட்டதால் கணவனைச் சேராது. Nur Kadir *vs* Zuleekha Bibi (11 Cal-64) என்ற வழக்கில் இவ்விதம் தீர்ப்புக் கூறப்பட்டது.

வயது வராத ஒரு பெண்ணுக்குத் திருமணம் முடித்து வைத்தனர். கணவன் வெளிநாடு சென்றதால், தன்னுடைய தாயின் (மாமியார்) பொறுப்பில் மனைவியை விட்டுச் சென்றான். மாமியார்-மருமகள் உறவு சரியில்லாததால், மனைவியின் தாய், மகளைத் தன்னுடைய வீட்டுக்கு அழைத்துவந்து விட்டாள். மாமியாரின் பராமரிப்பில் இருந்துவந்த மணமகளாகிய மருமகளை அவளுடைய தாய் கடத்திச் சென்ற குற்றத்திற்காகத் தண்டனை வேண்டும் என்று இ. பி. கோ. பிரிவு

363-ன் கீழ், மனைவியின் தாய்மீது வழக்குத் தொடரப்பட்டது. மனைவி பருவம் எய்தப் பெறாதவள் ஆதலால், காப்பாளராய்ச் செயல்படும் பொறுப்பு அவளுடைய தாய்க்கே சேரும் என்று கூறி வழக்குத் தள்ளப் பட்டது. எனவே, பெண்கள் திருமணமாயிருந்தாலும் இல்லாவிட்டா லும், காப்பாளராய்ச் செயல்படவேண்டிய பொறுப்பு, தாயையே சாரும். அவளே காப்பாளராய்ச் செயல்பட சுன்னி சட்டப்படி உரிமை பெற்றவள் ஆவாள்.

ஏழு வயதைப் பூர்த்தி செய்த ஆணுக்கும், பருவம் எய்தப் பெற்ற பெண்ணுக்கும் தந்தை காப்பாளராய்ச் செயல்படவேண்டும். தந்தை இல்லாதிருப்பின், அட்டவணையில் கூறப்பட்டுள்ள தாய்வழி முறை யினரைப்போல், தந்தையின் தந்தை முதற்கொண்டு தந்தைவழி முறை யினரைச் சாரும். இவர்கள் எவரும் இல்லாதொழியின், நீதிமன்றம் எவரை வேண்டுமானாலும் காப்பாளராய் நியமிக்கும்.

'சுன்னி' சட்டப்படி, முறையிலாமணப் பிறப்பிலுள்ள குழந்தை தாயின் பொறுப்பில் வளரவேண்டும். மேலுள்ள கருத்துக்கள் அனைத் தும் ஹனபி பிரிவினரின் சட்டத்தில் கூறப்பட்டவைகளாகும். 'சுன்னி' பிரிவில் உள்ள மற்றச் சிறு பிரிவுகளில், சில வேற்றுமைகளைக் காணலாம். 'மாலிக்' பிரிவினரின் சட்டப்படி, ஆண்களும் உரிமை வயது எய்தப் பெறுவது வரையில், அவர்களுக்குத் தாயே காப்பாளராய்ச் செயல்படத் தகுதியுடையவராவார். ஷாபி, ஹன்பலி பிரிவினரின் சட்டப் படி, ஆண் பிள்ளைகளுக்கு ஏழு வயது பூர்த்தியாகும் வரையில் தாய் காப்பாளராய் இருக்கவேண்டும். ஏழு வயது பூர்த்தியான பின்னர், தந்தை காப்பாளராய்ச் செயல்பட உரிமை பெற்றவராவார். ஆனால், சிறுவன் தந்தை காப்பாளராவதை ஏற்க மறுத்து, தாயோடு வாழவே விரும்பினால், அவளே காப்பாளராய்த் தொடர்ந்து செயல்படலாம். பருவம் எய்தப் பெறாத பெண்களை வளர்ப்பதிலும், காப்பாளரை நியமிப்பதிலும் இந்தச் சிறு பிரிவினரிடையே ஒருமித்த கருத்து நிலவு கின்றது.

'ஷியா' சட்டம்:

ஷியாக்களின் சட்டப்படி, ஆண் குழந்தை பால்குடி மாறும் பருவ மான இரண்டு வயதைப் பூர்த்தி செய்வது வரையில் தாயின் பொறுப்பி லும், அதன் பின்னர்த் தந்தையின் பொறுப்பிலும் வளரவேண்டு மாதலால், ஆண் குழந்தைக்கு 2 வயது வரை தாயும், அதன் பின்னர்த் தந்தையும் காப்பாளராவர். பெண் குழந்தையாயிருப்பின், 7 வயது வயது வரை தாயின் பொறுப்பிலும், அதன் பின்னர்த் தந்தையின் பொறுப்பிலும் வளரவேண்டுமாதலால், தாயும் தந்தையும் முறையே காப்பாளராவர். இருவரில் ஒருவர் இறந்துபோனால், மற்றவருக்கு

உரிமை வந்தடையும். இருவரும் இல்லாதிருப்பின், தந்தையின் தந்தை காப்பாளராக உரிமை பெறுகிறார். அவரும் இல்லாது இருப்பின், எவர் காப்பாளராய்ச் செயலாற்ற உரிமை பெற்றவர் என்று திட்டவட்டமாக வரையறுத்துக் கூறப்படவில்லை. முறையிலா மணப் பிறப்பிலுள்ள குழந்தையாயின், தாயின் பொறுப்பிலேயே அது வளரவேண்டுமாதலால், தாயே காப்பாளராவார்.

உரிமை வயது எய்தப் பெருதோரின் சொத்துக் காப்பாளர் ஆதல் (Guardianship of property)

உரிமை வயது எய்தப் பெருதவரின் சொத்துக்குக் காப்பாளராயிருந்து, அதைக் கண்காணித்துப் பராமரித்து வருவோரை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. சட்டநிலைக் காப்பாளர் (Dejure guardian)
2. நிகழ்வுநிலைக் காப்பாளர் (Defacto guardian)
3. நீதிமன்றத்தால் நியமனம்பெற்ற காப்பாளர்கள் (Guardians appointed by the Court).

சட்டநிலைக் காப்பாளர் (Dejure guardian)

(1) தந்தை (2) தந்தையால் நியமிக்கப்பட்ட நிறைவேற்றுளர் (Executor) (3) தந்தையின் தந்தை (4) தந்தையின் தந்தையால் நியமிக்கப்பட்ட நிறைவேற்றுளர் ஆகிய நால்வரும் முறையே, உரிமை வயது எய்தப் பெருதவரின் சொத்துக்குச் சட்டநிலைக் காப்பாளராய்ச் செயலாற்ற உரிமை பெற்றவராவர். தந்தையோ, தந்தையின் தந்தையோ அல்லது அவர்களுடைய நியமனம் பெற்றவர்களோதாம் சட்டநிலைக் காப்பாளராய்ச் செயலாற்ற முடியுமே தவிர, வேறு உறவினர் எவரும் சட்டநிலைக் காப்பாளராய்ச் செயலாற்றத் தகுதியோ உரிமையோ பெற்றவராகார். வேறு எந்த உறவினரும் தந்தையாலோ, தந்தையின் தந்தையாலோ நியமனம் செய்யப்பட்டிருந்தால், சட்டநிலைக் காப்பாளராய்ச் செயல்பட உரிமை பெறுவர். தாயோ, சகோதரனோ, சிற்றப்பனோ, மற்றுமுள்ள நெருங்கிய உறவினரோ, உரிமை வயது எய்தப் பெருத சிறுவனின் தந்தையாலோ, அவருடைய தந்தையாலோ நியமிக்கப் பட்டிருந்தால், சட்டநிலைக் காப்பாளராய்ச் சொத்துக்களைக் கண்காணித்துவர அவர் உரிமை பெற்றவர் ஆவார். அப்படித் தந்தையோ தந்தையின் தந்தையோ எவரையும் சட்டநிலைக் காப்பாளராய் நியமிக்கவில்லை யென்றால், நீதிமன்றம் சட்டநிலைக் காப்பாளர்களை நியமிக்கும். அப்படி நீதிமன்றத்தின் அங்கீகாரம் பெற்ற காப்பாளர்கள், சாதாரண காரியங்களை நீக்கி, மற்றக் காரியங்களுக்கு அவ்வப்போது நீதிமன்ற ஆணைபெற்றுச் செயல்படவேண்டும். நீதிமன்ற ஆணைபெற்றுச் செயல்

பட்டிருந்தால், அதை உரிமை வயது எய்தப் பெற்ற பின்னர்த் தப்பென்றோ தகாது என்றோ மறுத்துரைக்க அச்சிறுவர் உரிமையற்றவராவர். ஆனால், வஞ்சித்தோ, ஏமாற்றியோ, நீதிமன்ற ஆணையைப் பெற்றிருந்தால், சிறுவர் உரிமை வயது எய்தப் பெற்றதும், கேள்வி கணக்குக் கேட்க முடியும்.

மேலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டவர்கள் தவிர, வேறு எவராவது உரிமை வயது எய்தப் பெறாதவரின் சொத்துக்குக் காப்பாளராய் இருக்க நேர்ந்தால், அவர் நிகழ்வுநிலைக் காப்பாளர் (Defacto-guardian) என்று அழைக்கப்படுவார். அத்தகு நிகழ்வுநிலைக் காப்பாளர்கள், சட்டம் அளிக்காத உரிமையைத் தம் வயப்படுத்தி, உண்மையிலேயே நிகழ்வுநிலைக் காப்பாளராய்ச் செயல்படுவதால், இவர்கள் உரிமை வயது எய்தப் பெறாதவருக்காகச் செய்யும் ஒவ்வொரு செயலும், உன்னிப்பாகக் கூர்ந்து கவனிக்கப்பட்டு முடிவு கட்டப்படவேண்டும். இவர்கள் சட்ட அதிகாரம் பெறாதவர்கள் ஆதலால், சட்டநிலைக் காப்பாளர் போன்று, உரிமை வயது எய்தப்பெறாதவர் நலம் கருதி, எல்லாக் காரியங்களையும் செய்யமுடியாது. நிகழ்வுநிலைக் காப்பாளர்கள் (Defacto guardians) உரிமை வயது எய்தப் பெறாதவருடைய சொத்துக்களைக் கண்காணித்து வர உரிமை பெற்றவரேதவிர, நிலையியல் சொத்துக்களின் (Immovable property) உரிமைகளையோ நலனையோ, உரிமை மாற்றம் செய்யவோ (transfer), பராதீனம் செய்யவோ (alienation) உரிமை பெற்றவராகார். அவருக்குக் கிடைக்கப் பெறாத உரிமையின்மீது அவர் செயல்பட்டால், அவருடைய செயல்கள் இல்லா நிலையதாய்க் (void) கருதப்படும்.

உரிமை வயது எய்தப் பெறாதவரின் அசைவியல் சொத்தினையும் (movable property), நிலையியல் சொத்தினையும் (immovable property) பராதீனம் (alienation) செய்யும் உரிமையில், நிகழ்வு நிலைக் காப்பாளர்களுக்கும் (Defacto guardian) மற்ற இரு காப்பாளர்களுக்கும் பெருத்த வேறுபாடு காணப்படுகின்றது.

சட்டநிலைக் காப்பாளர்களின் அதிகார வரம்பு

சட்டநிலைக் காப்பாளர்கள் உரிமை வயது எய்தப் பெறாதவரின் அசைவியல் (movable) சொத்துக்களை விற்கவோ, அடகு வைக்கவோ, பராதீனம் செய்யவோ உரிமை பெற்றவர்களாவர். உரிமை பெற்றிருந்தாலும், காப்பிலுள்ளவரின் உணவு, உடை, வளர்ப்புப் போன்ற இன்றியமையாத் தேவைகளுக்காகப் பராதீனம் செய்து இருக்க வேண்டும். குறித்த சமயத்தில் பராதீனம் செய்யாவிடில், காப்பிலுள்ளவர் வாழ்க்கை சீர்கெடும் என்ற நிலையிலோ, அல்லது அசைவியல் பொருள்கள் அழிந்து நஷ்டம் ஏற்படும் என்ற நிலையிலோ, சட்டநிலைக் காப்பாளர்கள் அவற்றைப் பராதீனம் செய்ய உரிமை பெற்றவராவர்.

காப்பிலுள்ளவர்களின் நிலையியல் சொத்தைப் (immovable property) பொறுத்தமட்டில், சட்டநிலைப் பொறுப்பாளர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட காரியங்களுக்காகமட்டுமே அதைப் பராதீனம் செய்ய உரிமை பெற்றவராவர்.

1. காப்பிலுள்ளவர்க்குச் சொத்தைவிட்டுச் சென்றவர் பட்ட கடனை அடைப்பதற்கோ, அல்லது அவரால் உயில்வழிக் கட்டளை இடப்பட்ட காரியங்களை நிறைவேற்றற் பொருட்டோ, சட்டநிலைக் காப்பாளர் பராதீனம் செய்யலாம்.

2. காப்பிலுள்ளோரின் பராமரிப்புக்கும் இன்றியமையாத் தேவை கட்கும், அவசியப்படும் பொழுது, சட்டநிலைக் காப்பாளர் பராதீனம் செய்யலாம்.

3. பராதீனம் செய்யவில்லையானால், சொத்து அழிந்துவிடும் என்ற நிலையிலோ, அல்லது சொத்துக்குச் சேதம் ஏற்பட்டுப் பெருத்த நஷ்டம் ஏற்படும் என்ற நிலையிலோ, சட்டநிலைக் காப்பாளர் பராதீனம் செய்ய லாம்.

4. நிலையியல் சொத்துப் பிறர் கைக்குப் பறிபோகுந் தறுவாயில், அதை மீட்பிக்கும்பொருட்டு, சட்ட நிலைக் காப்பாளர் பராதீனம் செய்யலாம்.

5. காப்பிலுள்ளவரின் சொத்துக்கு இரட்டிப்பு விலை கிடைக்கும் பொழுது, சட்டநிலைக் காப்பாளர் பராதீனம் செய்யலாம்.

இவ்வைந்து காரணங்களின்பொருட்டும், சட்டநிலைப் பொறுப் பாளர்கள் காப்பிலுள்ளவர் நிலையியல் சொத்தைப் பராதீனம் செய்ய உரிமை பெற்றவராவர். இவை தவிர, வேறு காரணங்களின்பொருட்டு, சட்டநிலைக் காப்பாளரே பராதீனம் செய்தாலும், அது செல்லத் தகாத தோடுமட்டுமன்றிப் பராதீனம் இல்லா நிலையைப் பெற்றதாகியும்விடும்.

துணிச்சலான எதிர்நோக்கு வியாபாரத்தையோ (Speculative Business), நஷ்டம் ஏற்படுத்தும் வியாபாரத்தையோ காப்பாளர் தொடர்ந்து நடத்தவேண்டியது இல்லை. காப்பிலுள்ளவர் நன்மையும் பயனும் அடையத் தக்கவராயினும், அவர்பொருட்டு வாணிபம் நடத்தி, நஷ்டமோ நாசமோ ஏற்படின், அது காப்பிலுள்ளவரைக் கட்டுப் படுத்தாது. காப்பிலுள்ளவர்க்குரிய சொத்தைக் கொண்டு அவரைக் காப்பாற்றமுடியாத நிலையில், காப்பாளர் தம்முடைய வாணிபவருவாய் மூலம் உணவும், உடையும், வசதியும் செய்துகொடுத்துக் காப்பாற்ற நேர்ந்தால், அதற்காகக் காப்பிலுள்ளவர்களைத் தம்முடைய வாணிபத் திலோ, சொத்திலோ பங்குதாரர்கள் ஆக்கவோ, அல்லது அதில் ஏற்பட்ட கடனுக்குப் பொறுப்பாளர்களாக்கவோ அதிகாரம் அற்றவராவார்.

நிகழ்வுநிலைக் காப்பாளர்கள் (Defacto guardian)

காப்பாளரின் அசைவியல் சொத்தைப் (Movable property) பொறுத்தமட்டில், நிகழ்வுநிலைக் காப்பாளர்கள் சட்டநிலைக் காப்பாளர்களை ஒத்த உரிமைபெற்றுச் செயலாற்றமுடியும். இத்துறையில் இருவரின் உரிமையிலும் வேற்றுமை இல்லை.

Rajarathna Chettiar *vs* Shaik Mahboob

(I. L. R. 1940 Mad-27)

வாதி நிகழ்வுநிலைக் காப்பாளரோடு (Defacto guardian) ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். அதன்படி, காப்பிலுள்ளோர் சொத்தை வழக்காடி எடுப்பதற்கும், அவர்களைப் பராமரிப்பதற்கும் முன்பணம் கொடுக்கவேண்டும். அதற்கு மறுபயனாக, வழக்காடிக் கிடைக்கும் சொத்தில் பகுதியை அவர் பெற்றுக் கொள்ளவேண்டும்.

ஒப்பந்தம் ஆரம்ப முதற்கொண்டே இல்லா நிலையது (void). எனவே, இந்திய ஒப்பந்தச் சட்டம், பிரிவு 68-ன்படி (S-68 of Indian Contract Act) காப்பிலுள்ளோரைப் பராமரித்ததற்கான செலவுத் தொகையையும், வழக்காடுதற் பொருட்டுச் செலவழிந்த தொகையையும் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

நிலையியல் சொத்துக்களைப் பொறுத்தமட்டில், நிகழ்வுநிலைக் காப்பாளர்கள் (Defacto guardians) அவற்றை மாற்றவோ, பராதீனம் செய்யவோ உரிமையற்றவராவர். நிகழ்வுநிலைக் காப்பாளர்கள் நீதிமன்ற ஆணைபெருது, நிலையியல் சொத்தைப் பொறுத்தமட்டில், என்ன உரிமைமாற்றம் செய்தாலும், அது செல்லத் தகாததுமட்டுமின்றி, இல்லா நிலையதாகவும் (void) கருதப்படும். இத்தகு செயல்கள் ஆரம்ப முதற்கொண்டே இல்லா நிலையன ஆகையால், காப்பிலுள்ளவர்கள் உரிமை வயது எய்தப்பெற்ற பின்னர், அவற்றை அங்கீகரித்து ஏற்புறுதி (ratification) செய்தாலும் செல்லாது.

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில், காப்பிலுள்ளவரின் இசைவுபெற்ருே அல்லது அவருக்குத் தெரிந்தோ செயல்பட்டிருப்பதாக மெய்ப்பித்து, அதன் காரணமாகப் பின்னர் அவர் அதை மறுக்கவோ, பின்வலிக்கவோ முடியாது என்று முரண்தடை வாதம் (Estoppel) எழுப்பினுலும், அதை ஏற்றுக் கொள்ளுதற்கில்லை.

இந்துமதச் சட்டப்படி, இன்றியமையாத் தேவையின் பொருட்டு, காப்பிலுள்ளவர் சொத்தினைப் பராதீனம் செய்ய உரிமை பெற முடிகிறது. காப்பிலுள்ளவரின் இன்றியமையாத் தேவையையும்,

அவர் அடைந்த பயனையும் சீர்தூக்கிப் பார்த்து, பராதீனம் செல்லத் தக்கதா, தகாததா என்ற முடிவு கட்டப்பட வேண்டும். எனவே, இந்து மதச் சட்டப்படி காப்பாளரின் அந்தஸ்தையும் உறவையும் ஒருபுறம் வைத்து, மறுபுறம், சூழ்நிலையையும் இன்றியமையாத் தேவையையும் கணக்கில் எடுத்து, பராதீனம் செல்லத்தக்கதா தகாததா என்று முடிவு கட்டவேண்டும். ஆனால், இசுலாமிய சட்டப்படி, நிலையான சொத்துக் களைப் பராதீனம் செய்தது செல்லத்தக்கதா, இல்லையா என்பதை, காப்பிலுள்ளோருக்கும் பராதீனம் செய்வோருக்கும் உள்ள உறவினை யும், அந்தஸ்தையும் கொண்டு கணக்கிடவேண்டுமே தவிர, வேறெந்தச் சூழ்நிலை சந்தர்ப்பத்தை வைத்தும் முடிவுகட்டக் கூடாது. எப்படிப் பட்ட இக்கட்டான சூழ்நிலையாயிருப்பினும், சட்டநிலைப் பொறுப் பாளரைத் (Dejure guardian) தவிர வேறு எவர் பராதீனம் செய்தா லும், எவ்வளவு உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர்கள் செய்தாலும், அது ஆரம்ப முதற்கொண்டே இல்லா நிலையதாகக் கருதப்பட வேண்டும்.

Imambandi *vs* Mutsadi

(45 I. A. 73)

இசுமாயீல் அலீகானுடைய சொத்துக்கு வாரிசு உரிமை கோரியவர்கள், 3 விதவைகளும் பல குழந்தைகளுமாவர். அவர்களில் ஒரு விதவையான இனுயத் ஜொஹராவுக்கும் அவளுடைய 2 குழந்தை களுக்கும் சேரவேண்டிய பங்கை, இனுயத் ஜொஹராவிடத்திருந்து வாதி வாங்கினர். இனுயத் ஜொஹரா தன்னுடைய பங்கையும், குழந்தைகளின் காப்பாளராக அவர்களுடைய பங்கையும் வாதிக்கு விற்றுன். வாதி, சொத்தின் உடைமையைத் தன்னிடம் ஒப்படைக்கக் கோரி வழக்குத் தொடர்ந்தார். பிரதிவாதிகளின் தரப்பு வாதம் என்னவென்றால், விதவை விற்றது செல்லாததுமட்டுமன்றி, உரிமை வயதுவராதோரின் காப்பாளராகக் காப்பிலுள்ளவர்களின் பங்கை விற்றது இல்லாநிலையதும் ஆகும் என்பதாகும்.

தாய், காப்பிலுள்ளவர்களுக்கு ஒரு நிகழ்வுநிலைக் காப்பாளர் (defacto guardian) ஆனதால், காப்பிலுள்ளவரின் நிலையியல் சொத்தைப் பராதீனம்செய்ய அவள் உரிமை பெற்றில்லை. நிகழ்வுநிலைக் காப்பாளராகத் தாயோ, அல்லது வேறு எவரோ செயல் பட்டாலும், நிலையியல் சொத்துக்களைப் பராதீனம் செய்யும் உரிமை அவர்களுக்குக் கிடையாது. எனவே, காப்பிலுள்ளவர் நிலையியல் சொத்தைப் பராதீனம் செய்யும் உரிமை, நிகழ்வுநிலைக் காப்பாளருக்குக் கிடையாததால், காப்பிலுள்ளவரின் நிலையியல் சொத்தை வாங்கியவர், அந்த அடிப்படை யில், எந்த உரிமையையும் பெற்றவராகார். எனவே, வாங்கியவரின் கைவசம் சொத்து நிகழ்வுநிலைக் காப்பாளரால் ஒப்படைக்கப்பட்டிருந்

தாலும், காப்பிலுள்ளவர்கள் உரிமை வயது எய்தியதும், அவரை வெளி யேற்ற உரிமை பெற்றவராவர். நிகழ்வுநிலைக் காப்பாளரால், காப்பி லுள்ளவர் பொருட்டுச் செய்யப்படும் நிலையியல் சொத்தைப் பொறுத்த பராதீனம் (alienation) தவிர்தகு ஒப்பந்தமாக மட்டுமன்றி (void-able) ஆரம்ப முதற்கொண்டே இல்லா நிலை ஒப்பந்தமாகவும் (void contract) இருக்கிறது என்று பிரிவி கவுன்சில் தீர்ப்பளித்தது.

Mohsiddin *vs* K. Ahmed

(47 Cal 713)

காப்பிலுள்ளவரின் நிலையியல் சொத்தில் பூசல் ஏற்பட்டு, காப்பி லுள்ளவர்களுக்கு நிகழ்வுநிலைக் காப்பாளராய்ச் செயல்படும் தாய், நடுவர் குழுவின்மூலம் தீர்வுகாணச் சம்மதம் தெரிவித்தால், அதன் அடிப்படையில் எழும் ஒப்பந்தமும் செல்லத்தக்கதன்று. ஏனெனில், தாய் ஒரு நிகழ்வுநிலைக் காப்பாளர். அவர் இசுலாமிய சட்டத்திற்கு எதிராகக் காப்பிலுள்ளவர் பொருட்டு நிலையியல் சொத்துக்களை விவகாரம் செய்வதற்கு அது ஒப்பாகும் என்று இந்த வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது.

Bhikaji *vs* Ajgarally

(47 Bom L. R. 803)

ஒரு முசுலிம் தம்முடைய சொத்தை அடைமானம் (mortgage) வைத்திருந்தார். அவர் இறந்த பின்னர், அவருடைய மனைவியும் உரிமை வயது வராத பெண் குழந்தைகளும் எஞ்சியிருந்தனர். அடை மானம் பெற்றவர் (mortgagee) சொத்தை விற்பனைக்குக் கொண்டு வந்தார். பின்னர், நீதிமன்ற ஆணை பெற்று, தீர்ப்பாணையை நிறை வேற்ற (execution) முனைந்த பொழுது, தாய் தன் சார்பாகவும், காப்பிலுள்ள குழந்தைகளின் சார்பாகவும், உரிமையியல் நடைமுறைச் சட்ட உத்தரவு 32-விதி 7ன் படி, (O. XXXII; R-7 of Code of Civil Procedure) நீதிமன்ற அனுமதி பெற்று, விலைப் பத்திரம் எழுதிக் கொடுத்தாள். தாய் சட்டநிலைக் காப்பாளராகவோ நியமனக் காப்பாளர் ஆகவோ (legal or certified guardian) அனுமதி பெற்று இசுலாமிய சட்டப்படி செயல் படாததால், ஷை உரிமையியல் சட்டத்தின் கீழ் உரிமை பெற்றுச் செயல்பட்டது செல்லாதது மட்டுமின்றி, இல்லா நிலையதும் ஆகும் என்று பம்பாய் உயர்நீதிமன்றம் இந்த வழக்கில் தீர்ப்பளித்தது.

ஆனால், நாக்பூர் உயர்நீதிமன்றம் மேற்கூறிய முடிவிலிருந்து பிரிந்து சென்று, வழக்கில் காப்பாளராய் (Guardian *Ad Litem*)

நியமனம் பெற்றுப் பராதீனம் செய்தால் அது செல்லும் என்று தீர்ப்பளித்துள்ளது.

ஆகவே, மேற்கூறியவற்றை வைத்துப்பார்க்கும் பொழுது, வயது வராதோரின் பால் வேறுபாட்டைப் பொறுத்து, அவர்களைப் பேணிப் பாதுகாக்கும் காப்பாளர்ப் பொறுப்புத் தாய்மாரிடம் சட்டப்படி ஒப்படைக்கப் பட்டிருக்கிறதே தவிர, அவர்கள் காப்பிலுள்ளவர்களின் நிலையியல் சொத்துக்களைப் பராதீனம் செய்ய உரிமை யற்றவர்களாவர். ஆனால், கணவரின் உயில் மூலம் காப்பாளராய் நியமனம் பெற்றோ, அல்லது நீதிமன்றத்தின் ஆணை பெற்றோ, சட்டநிலைக் காப்பாளராய்ச் செயல் படும்பொழுது, காப்பிலுள்ளவரின் சொத்துக்களைப் பராதீனம் செய்யும் உரிமை பெறமுடியும். நீதிமன்றத்தால் நியமனம் பெற்ற காப்பாளர்கள், அசைவியல் சொத்துக்களைப் பொறுத்த மட்டில், சாதாரணமாக ஒரு மனிதன் எவ்வளவு முன்னெச்சரிக்கையோடும், திறமையோடும் தன்னுடைய காரியங்களில் செயல்படுவானோ, அந்த அளவுக்குத் திறமை யோடும், முன்னெச்சரிக்கையோடும் காப்பிலுள்ளவரின் சொத்து விவகாரங்களிலும் நடந்துகொள்ள வேண்டும். நிலையியல் சொத்தைப் பொறுத்த மட்டில், நீதிமன்ற ஆணை பெற்றே செயல்படவேண்டும். நீதிமன்ற ஆணை பெற்றுச் செயல்பட்டால், பின்னால் எந்தப் பிரச்சினை களுக்கும் அவர்கள் உள்ளாக்கப்படமாட்டார்கள். நீதிமன்ற ஆணை அவர்களைப் பாதுகாக்கிறது.

7. வாழ்க்கைப் படி (Maintenance)

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் படி அளப்பவன் ஆண்டவன் தான் என்றாலும், உண்ண, உடுத்த, உறையுள் கொள்ள வருவாய்க்கு வழியில்லாது வாழும் நிலையிலோ, வருவாயைத் தேடிக்கொள்ள வகையற்ற நிலையிலோ, உடல்நலம் இடந்தராத நிலையிலோ ஒருவர் தவிக்கும்பொழுது, வகையுடைய அடுத்தவர்மீது படி அளப்பது கடமையாக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதற்கு ஒரு விதிவிலக்கு மனைவி. அவளுக்கு வருவாய் வரும் வழி இருந்தாலும், வகை இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவளுடைய வாழ்க்கைக்குச் செலவு செய்ய வேண்டியது கணவனின் கடமையாகும்.

ஒவ்வொருவரும் அவரவர் வாழ்க்கைக்கு வழி தேடிக்கொள்ள வேண்டும் என்பதே இசுலாத்தின் கொள்கை. இதற்கு மனைவி மட்டிலும் விதிவிலக்கு. பருவம் எய்தப்பெற்ற மனைவியைப் பாதுகாத்து வரவேண்டிய பொறுப்புக் கணவனையே சாரும். தம்பதிகளின் இடையே திருமண உறவு நீடிக்கும் வரையிலும், அவளைப் பாதுகாக்கும் பொறுப்புக் கணவனையே சாரும். திருமண இழப்பு இருவரிடையேயும் ஏற்பட்டால், அது முற்றுப்பெறும் நாள்வரையிலும், அது திருமண முறிவாக இருந்தால், 'இத்தா' இருந்து முடியும் நாள் வரையிலும் கணவனிடத்திருந்து மனைவி வாழ்க்கைப் படி பெறத் தகுதியும் உரிமையும் பெற்றவளாவாள்.

மனைவி வாழ்க்கைப் படி கோரினால், எந்த அடிப்படையில் அது நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதில் 'சுன்னீ' பிரிவிலுள்ள சிறு பிரிவினரிடையே வேறுபாடு காணப்படுகிறது. 'ஹனபி' பிரிவினரின் சட்டப்படி, கணவன்-மனைவியின் அந்தஸ்துக்குத் தக்கபடி வாழ்க்கைப் படி நிர்ணயிக்கப்படவேண்டும். 'ஷாபி' சட்டப்படி, கணவனின் தகுதிக் கேற்ப வாழ்க்கைப் படி நிர்ணயிக்கப்படவேண்டும். 'ஷியா' சட்டப்படி, மனைவியின் வாழ்க்கைத் தகுதிக் கேற்ப வாழ்க்கைப் படி நிர்ணயிக்கப்படவேண்டும்.

வருவாய்க்குள்ள வசதி இல்லாதவர்களையும், வசதி பெற முடியாத ஊனமுற்ற உறவினர்களையும், அவர்கள் சொத்துரிமை இறக்கம் பெறுவோராயின், அவர்களுக்கு உணவு, உடை, உறையுள் ஆகிய வற்றிற்கான வசதி ஏற்படுத்திக் கொடுத்துப் பாதுகாக்கவேண்டியது தகுதி படைத்த ஒவ்வொரு முசுலிமின் கடமையாகும். கேட்பவர் இல்லாதவராயும், கொடுப்பவர் கொடுக்குமளவிற்குத் தகுதியுடையவரா யும் இருக்கவேண்டும்.

இவ் விஷயத்தைப் பொறுத்த வரையில், இசுலாமிய சட்டத்தின் பொதுநோக்கு என்னவென்றால், மனைவி நீங்கலாகச் சொத்துரிமை கோரத்தக்க உறவினர்களுக்கு, அவரவர் தகுதிக்கும், செல்வத்திற்கும், பொருளாதார வசதிக்கும் ஏற்பச் சொத்துரிமை பெறும் உறவினரின் விகிதத்தை அனுசரித்து, வாழ்க்கைப் படி கொடுத்து, வாழ வழியின்றித் தவிக்கும் உறவினரைப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு முசுலிமின் கடமையாகும்.

பெற்றோரும் குழந்தைகளும்

குழந்தைகளுக்கென்று தனிப்பட்ட வருமானமும் சொத்தும் இருந் தால், அவர்களுக்கு வாழ்க்கைப் படி கொடுக்கவேண்டியது தந்தைக்குக் கட்டாயமில்லை. உரிமை வயது எய்தப்பெறுகிற வரையில், தக்க வருமானமும் சொத்தும் இல்லாது வாழமுடியாத நிலையில் உள்ள சிறுவர்களுக்கு வாழ்க்கைப் படி கொடுத்துவர வேண்டியது தந்தையின் கடமையாகும். இந்திய வயதுவந்தோர் சட்டம் வாழ்க்கைப் படிபற்றி எதுவும் குறிப்பிடவில்லை. சில சட்ட வல்லுநர்களின் கருத்துப்படி, குழந்தைகளுக்கு 18 வயது பூர்த்தியாகிற வரையிலும் வாழ்க்கைக் கான பொருளுதவி செய்து பாதுகாக்க வேண்டியது தந்தையின் கடமையாகும். சட்டமேதை 'முல்லா' அவர்களின் கருத்துப்படி, பருவம் எய்தப் பெறுவதுவரை மக்கட்குப் பொருளுதவி செய்யவேண்டியது தந்தையின் பொறுப்பாகும். ஆனால், தனயனின் வயதை அனுசரித்து, அவனை வேலையில் அமர்த்தி, அதன் மூலமும் அவனுடைய வாழ்க்கைக்கு வழிகாட்டவும், அவனுடைய தேவைகளைத் தீர்த்துவைக்கவும் தந்தை ஏற்பாடுகள் செய்யலாம்.

மகளைத் திருமணமாவதுவரையிலும் தந்தை பாதுகாத்து வர வேண்டும். அவள் வேலை செய்து பிழைப்பதற்குத் தகுதி இருந்தாலும் இல்லாவிட்டாலும், தந்தையே அவளுக்குப் பொருளுதவி புரிந்து அவளைப் பாதுகாத்துவர வேண்டும். விதவையாக்கப்பட்ட மகளையும், அவள் வாழ வழியில்லாது தவிக்கும் நிலையில், பாதுகாக்க வேண்டிய பொறுப்புத் தந்தையையே சாரும். மகளைப் பொறுத்தவரையில், அவ ளுடைய தாய்தான் பராமரிப்பைப் பொறுத்தமட்டில் சட்டநிலைக் காப்

பாளர் என்னும் காரணத்திற்காக, தந்தைமீது விதிக்கப்பட்டிருக்கும் கடமையை இவன் உதறித் தள்ளிவிட முடியாது. தந்தையும் தாயும் பிரிந்து வாழ்ந்தால், மகன் விரும்பியவரிடத்தில் வளரலாம். தந்தை வாழும் இடத்தில், அவருடைய பராமரிப்பில் அவன் வளர்க்கப்பட்டு வந்தால், வாழ்க்கைப் படியென்று தனியாகக் கேட்க அவனுக்கு உரிமை கிடையாது. தந்தையினின்றும் பிரிந்து வேறு இடத்தில் வளர்ந்து வந்தால், அவனுக்குத் தனியாக வாழ்க்கைப் படி கொடுக்க வேண்டும்.

சூழ்நிலை சந்தர்ப்பம் காரணமாக மகன் தனித்து வாழும் நிலை ஏற்பட்டால், தந்தைக்குப் போதிய வசதிகள் இருந்து, மகனுக்கு வாழ்க்கை நடத்த வருமானம் இல்லாத நிலையில், வாழ்க்கைப் படி கொடுக்கவேண்டியது தந்தையின் கடமையாகும்.

மக்களுக்கென்று தனியே சொத்து இருந்தால், அதன் வருமானத்திலிருந்து அவர்களுடைய வாழ்க்கைக்குள்ள செலவுகளைச் சரிசெய்து கொள்வதற்குத் தந்தைக்கு உரிமை உண்டு. அப்படி அவர்களுக்கென்று சொத்தோ வருமானமோ இல்லாது, தனக்கும் சொத்துக்களின் மூலம் வருமானம் இல்லாதுபோனால், திருமணமாகாத பெண் குழந்தைகளையும், உரிமை வயது எய்தப் பெறாத ஆண்களையும், தன்னுடைய உடலுழைப்பு ஊதியத்தால் காப்பாற்ற வேண்டிய பொறுப்புத் தந்தையைச் சாரும். மகள் திருமணத்திற்குப் பின் கணவனின் குடும்பத்தில் ஓர் அங்கம் என்றாலும், அவள் விதவையாக்கப்பட்டால் அவளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு, தந்தையையே சாரும். வயது வராத மக்களைப் பொறுப்பேற்று வளர்க்கவேண்டியது தாயின் கடமையாயினும், அதற்குரிய செலவுகளுக்குக் கொடுக்கவேண்டியவர் தந்தையே ஆவார்.

மகனுடைய 7 வயதுக்குப் பிறகு, தந்தை அவனுடைய சட்டநிலைக் காப்பாளர் ஆனதால், அவனைத் தன்னோடு வைத்து வளர்த்து வருவதன் மூலம் அவனுக்கென்று தனியாக வாழ்க்கைப் படி கொடுக்க வேண்டியதில்லை. மகன் 7 வயதிற்குப் பிறகு, தக்க காரணம் இன்றி, தன்னோடு வந்து தன் பராமரிப்பின்கீழ் வாழ மறுத்தால், அவனுடைய வாழ்க்கைக்குப் பொருளுதவி செய்யவேண்டிய அவசியம் இல்லை. குற்ற இயல் நடைமுறைச் சட்டம் 488-ஆவது பிரிவின்படி (S. 488 of Criminal Procedure Code) 7 வயதுக்குப் பிறகு மகனுக்கு வாழ்க்கைப் படி கொடுக்கக் கோரும் வழக்கில், அவனைத் தன்னோடு வந்து தன் பொறுப்பில் வளருமாறு எதிர் வாதம் செய்வது பொருத்தமானதாக இருக்கும். ஆனால், அப்படித் தன் பொறுப்பில் வரும்படி கோருவது உண்மையிலேயே நல்லெண்ண அடிப்படையில் இருக்கவேண்டும்.

மகன் வயது வராதவனாகவோ, வறியோனாகவோ, ஊனமுற்றவனாகவோ இருந்தால், அவனைப் பராமரித்து வளர்க்கவேண்டிய

பொறுப்புத் தந்தையைச் சாரும். அப்படிப்பட்டவர்களுக்குத் திருமணமாகி, மனைவி இருந்தால், அவர்களையும் பராமரித்துப் பாதுகாக்க வேண்டியவர் தந்தையே ஆவார். ஏனெனில், மனைவியைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு மகனைச் சார்ந்தது ஆதலால், மகனைச் சார்ந்த பொறுப்புத் தந்தையைச் சாருகிறது. ஆனால், மகன் இறந்துபோனால், தந்தை விதவையாக்கப்பட்ட மருமகளைக் (மகனின் மனைவியை) காப்பாற்ற வேண்டும் என்ற பொறுப்பு இல்லை. ஏனெனில், தந்தை-மகனிடையே இருந்த சார்புப் பொறுப்பு அறுந்துவிடுகிறது. மேலும், தந்தைக்கு முன் தனயன் இறந்துவிட்டால், தனயனின் வாரிசுகளுக்குச் சொத்துரிமை இறக்கம் அறுந்துவிடுகிறது. எனவே, விதவை (மருமகள்) தன் மாமனாரிடம் சொத்துரிமை பெற முடியாது. ஆகவே, மாமனாருக்கு, விதவையான மகனின் மனைவியை வைத்துக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் இல்லாது போய்விடுகிறது. வாரிசுரிமை சோரி, சொத்துரிமை இறக்கம் பெறுவோரிடையேதான் வாழ்க்கைப் படி கொடுக்கப்பட வேண்டுமென்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டாய் அமைகிறது.

வயது வந்த மக்கள்

உரிமை வயதுவந்த மக்கள் ஊனமுற்றோ, தீராத நோயுற்றோ தம் வாழ்க்கையை நடத்த முடியாமற்போனால், அவர்களுக்குத் தந்தை பொருளுதவி செய்யவேண்டும். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் தந்தைக்குப் பொருளுதவி செய்யத் தகுதியும் வசதியும் இருக்கவேண்டும். தந்தை தன்னுடைய உடலுழைப்பால் குடும்பத்தைக் கைக்கும் வாய்க்கும் பற்றாக்குறையாக நடத்திக்கொண்டிருந்தால், அவன் பொருளுதவி செய்யவேண்டிய அவசியம் இல்லை.

பொருளுதவி செய்ய வழியும் வசதியும் தந்தைக்கு இல்லாது போனால், தாய் பொருளுதவி செய்யும் வசதி படைத்தவளாயிருந்தால், மக்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அவளைச் சார்கிறது. தந்தையும் தாயும் வறியோராக இருந்து, தந்தையின் தந்தை வகையும் வசதியும் படைத்தவராயிருப்பின், அவர்மீது இச்சுமை விழுகிறது. மக்கள், தந்தை, தாய், தந்தையின் தந்தை போன்றவர்கள் வாரிசுகளாகி, சொத்தில் பங்கு பெறும் உரிமை பெற்றவர் ஆதலால், அவர்கள்மீது இப் பொறுப்புச் சுமத்தப்படுகிறது.

குழந்தைகள் வளர வாய்ப்பும் வசதியும் இல்லாத நிலையில், தந்தையின் வருமான அடிப்படையிலும், அவருடைய சொத்து வசதியைப் பொறுத்தும், குற்ற இயல் நடைமுறைச் சட்டம் 488ஆவது பிரிவின்படி, வாழ்க்கைப் படியாக மாதம் ரூ. 500 வரை கொடுக்கும்படி அவர் கட்டாயப் படுத்தப்படலாம். ஆனால், தூய இசுலாமிய சட்டப்படி

வைப்பாட்டியையோ, முறையிலாமணப் பிறப்புக் குழந்தைகளையோ காப்பாற்றவேண்டிய பொறுப்பு அவருக்கு இல்லை.

பெற்றோர்களும் அவர் மூதாதையர்களும்

வாழ்க்கை நடத்த முடியாது கஷ்டப்படும் பெற்றோரைப் பாதுகாக்க வேண்டியது, வாய்ப்பும் வசதியும் பெற்றிருக்கிற மக்களைச் சாரும். மக்களும், வருமானமும் வசதியும் இன்றிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தால், வருமானம் உள்ள ஆண்மக்கள் தக்க வசதியற்றோராயிருப்பினும், பெற்றோரைப் பாதுகாக்க வேண்டும். இதே அடிப்படையில், பெற்றோரின் பெற்றோர்களையும் பாதுகாக்க வேண்டும்.

தூரத்து உறவினர்

ஒருவர் நல்ல வாய்ப்பும் வசதியும் உள்ள நிலையில், சொத்துரிமை இறக்கம் பெறத்தக்க தூரத்து உறவினர்கள் வாழத் தகுதியற்ற நிலையில் இருந்தால், அவர்களைக் காப்பாற்றவேண்டும்.

ஏழைகள்

வசதியுள்ள ஒவ்வொரு முசுலிமும் தன்னுடைய வருமானத்தில் ஒரு பங்கை ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுக்கவேண்டும். இது 'ஜகாத்' என்று கூறப்படுகிறது. இதனை அவரவரே விரும்பிக் கொடுக்க வேண்டுமேயன்றி, இது கேட்டு வாங்குதற்குரியதன்று. அவரவர் வருமானத்தில் நின்றும் 2½% இதற்கென ஒதுக்கிவிட வேண்டுவது ஒவ்வொருவருக்கும் கடமையாகும்.

பாகம் II

8. கொடை அல்லது 'ஹிபா'
(Gift or Hiba)

இதற்கு முந்திய அத்தியாயங்களில், மானிடர்களிடையே ஏற்பட்ட தொடர்புபற்றிப் பார்த்தோம். அதாவது, கணவன் மனைவி, தாய்-தந்தை, பெற்றோர்-மக்கள், உறவினர் முதலியவர்களிடையே நிலவுகின்ற உறவும் உரிமையும், காப்பும் கடமையும்பற்றிக் கண்டோம். இந்த அத்தியாயம் தொடங்கி இனிவரும் அத்தியாயங்களில், ஒருவன் தன்னுடைய சொத்தையோ பொருளையோ அதன் மீதிருக்கும் உரிமைகளையோ, தான் விரும்பியவண்ணம் பராதீனம் (alienation) செய்யும் முறைகளைப்பற்றியும், அவற்றால் ஏற்படும் உரிமை மாற்றத்தைப் பற்றியும் காணலாம். கொடை என்பதும் ஒருவர் தம் சொத்தையோ பொருளையோ பராதீனம் செய்வதே ஆகும்.

ஒருவர் ஒரு பொருளை மறுபயன் எதிர்பாராது, வேறு ஒருவருக்கு வழங்க, அதை இவர் ஏற்றுக்கொண்டால், அதைக் கொடை (Gift) என்று சொல்லலாம். 1882ஆம் ஆண்டு சொத்து மாற்றுச் சட்டம் (Transfer of Property Act of 1882) அதிகாரம் 7-ல், கொடைபற்றிய சட்டக் கூறுகளையும், அதற்குரிய விதித்துறைகளையும் காணலாம். ஆனால், இதில் கூறப்பட்டுள்ள சட்டவிதித்துறைகள் (Provisions of Law) இசுலாமியர்களைக் கட்டுப்படுத்தாது. இசுலாமிய சட்டவிதித் துறை அடிப்படையிலேயே இசுலாமியர்கள் கொடை வழங்க வேண்டும். அண்டைச் சொத்தில் முற்படுவிலைகொள் உரிமை (Pre-emption) நீங்கலாக, மற்ற இசுலாமிய விற்பனைச் சட்டம் (Muslim Law of Sale) முழுவதும், 1882ஆம் ஆண்டு சொத்துமாற்றச் சட்டத்தின் விதித்துறைகளால் மாற்றப்பட்டிருக்கிறது. அறநிலைக் கட்டளைச் சொத்துக்களைப் பற்றிக் கூறுவது, இசுலாமிய 'வக்பு' (Wakf) சட்டம் ஆகும்.

இசுலாமிய சட்டப்படி, ஒரு பொருளையோ (இதில் சொத்தும் உட்படும்)' அல்லது அப் பொருளின் அனுபவ உரிமையையோ ஒருவர் மற்றொருவருக்குக் கொடையாகக் கொடுக்கலாம். பொருளையோ

சொத்தையோ ஒருவர் கொடையாக அளிப்பது ஹிபா (Hiba) என்றும், அனுபவ உரிமையைமட்டிலும் கொடையாகக் கொடுப்பது 'அரியத்' (Areeat) என்றும் கூறப்படுகின்றன. ஆங்கிலச் சொல்லான 'கிஃப்டும்' (Gift) தமிழ்ச் சொல்லான 'கொடையும்' மிகப் பரந்தபொருளை உள்ளடக்கி நிற்கின்றன. ஆனால், இசுலாமிய சட்டத்தில் குறிப்பிடப் படும் 'ஹிபா' (Hiba) பொருளையோ சொத்தையோ கொடையாகக் கொடுப்பதைமட்டுமே குறிக்கிறது. எனவே, கொடையெல்லாம் 'ஹிபா' ஆகா. ஆனால், 'ஹிபா'வெல்லாம் கொடையிலடங்கும்.

ஹிபாவின் இலக்கணப்படி, ஒருவன் தன்னுடைய சொத்தைப் பிரதிபலன் எதுவும் பெறாமல் அல்லது எதிர்பாராமல் பிறரிடம் ஒப்படைப்பது 'ஹிபா' ஆகும். அதாவது, ஒருவர் சொத்துப் பிறர் கைக்கு மாறுகிறது. ஆகவே, இதைச் சொத்துமாற்றங்களில் ஒருவகை என்று சொல்கிறோம். சொத்துப் பிறரிடம் ஒப்படைக்கப்பட்டதும், அது ஒப்படை பெற்றவரின் சொத்தாகிவிடுகிறது.

1882ஆம் ஆண்டு சொத்துமாற்றச் சட்டம் பிரிவு 122-ல் (S. 122 of Transfer of Property Act-1882) நிலையியல் சொத்திற்கும் (immovable property) அசைவியல் சொத்திற்கும் (movable property) சேர்த்துக் கொடையின் இலக்கணம் வகுக்கப்பட்டிருக்கிறது. பிரிவு 123-ல், கொடைகொடுக்கும் முறைபற்றிக் கூறப்பட்டுள்ளது. அதன்படி, ஒருவர் தம் நிலையியல் சொத்தைப் பிறர்க்குக் கொடை அளித்தால், இதற்கென்று ஆவணம் எழுதப்பட்டு, கொடையளிப்பவர் அதில் இரண்டு சாட்சிகள் முன்னிலையில் கையெழுத்திட்டு, இரண்டு சாட்சிகளும் அதில் சான்றுக் கையெழுத்திட்டு, ஆவணத்தைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். அசைவியல் சொத்தானால், உடனடி அதைக் கொடை பெறுபவரிடம் ஒப்படை (Possession) செய்வதன் மூலம் கொடை அளிக்கலாம். பிரிவு 129-ல் கூறப்பட்டுள்ள சொத்து மாற்றுச் சட்டத்திற்கும் இசுலாமிய சட்டத்திற்கும் கொடையைப் (Gift) பொறுத்தமட்டில் வேறுபாடு காணப்பட்டால், இசுலாமிய சட்டமே இசுலாமியருக்கு வழங்கப்பெற வேண்டும் என்பதைக் காணலாம்.

இசுலாமிய சட்டப்படி 'ஹிபா' (Hiba) என்பது, கொடுப்பவர் பொருள் கொடுத்தலை வெளிப்படுத்தல், பெறுபவர் அதை ஏற்றுக் கொண்டதாக இணக்கம் அல்லது இசைவு தெரிவித்தல், (கொடை ஏற்பவர் வசம்) பொருள் உடனடியாக ஒப்படைக்கப்படல் என்னும் மூன்று நிபந்தனைகளையும் பூர்த்திசெய்வதால் நிறைவேற்றம் பெறுகிறது.

கொடை கொடுப்பவர் தகுதி (Capacity of the Donor)

கொடை கொடுப்பவர் உரிமைவயது எய்தப் பெற்றவராயும் சித்தம் தெளிந்தவராயும் இருக்கவேண்டும். 18 வயதைப் பூர்த்தி செய்தவரே

உரிமைவயதை எய்தப் பெற்றவராகக் கருதப்பட வேண்டும். கொடுப்பவர், கொடுக்கும் பொருளுக்குச் சொத்து உரிமை (ownership) உடையவராக இருக்கவேண்டும்.

கொடை ஏற்பவர் தகுதி (Capacity of the Donee)

கொடை ஏற்பவர் உரிமைவயது எய்தப் பெற்றவரா யிருக்கவேண்டும் என்பதோ, சித்தம் தெளிந்தவரா யிருக்கவேண்டும் என்பதோ அவசியம் இல்லை. கொடை ஏற்பவர் இழப்பெதுவும் இன்றிப் பயனே பெறுதலால், எந்தக் கட்டுப்பாடும் அவர்மீது விதிக்கப்படவில்லை. ஆனால், கொடைஏற்போர், சட்டப்படி சொத்தை ஏற்றுக்கொள்ளத் தகுதியுடைய ஒரு 'நபர்'ஆக இருக்கவேண்டும். எனவே, உண்மை நபரோ (actual person) புனைவு நபரோ (artificial person) ஏற்றுக்கொள்ளத் தகுதியுடையவராவர். ஏற்றுக்கொள்வோர் சார்பாக, பிறிதொருவரும் அதை ஏற்றுக்கொண்டதாக இசைவு தெரிவிக்கலாம்.

ஒருவர் தம்முடைய சொத்தில் சொத்துரிமை பங்கு பெறும் வாரிசுகளுக்கும் கொடை கொடுக்கலாம். ஒரு வாரிசுக்குக் கொடை யளிப்பதால் மற்ற வாரிசுகளின் உரிமை பறிக்கப்படுவது சட்டப்படி செல்லுமாயினும், அப்படிச் செய்வதை இசுலாம் வரவேற்கவில்லை. சொத்து வைத்திருப்பவர் இறந்த பின்னரே அவர் விட்டுச் செல்லும் சொத்தில் அவருடைய வாரிசுகளுக்கு உரிமை ஏற்படுகிறது. சொத்துடையோர் உயிரோடிருக்கின்ற வரையில், அவருடைய வாரிசுகளுக்கு அந்தச் சொத்தில் எந்தவித உரிமையும் ஏற்படாது. எதிர்நோக்கு வாரிசுகள் (Heir expectant) கொடை ஏற்பாளராய் இருக்க முடியும். ஆனால், கொடை கொடுப்பவர் பொருளைக் கொடுக்கும் பொழுது ஏற்பவர் அதை ஏற்று இசைவு தெரிவிக்க வேண்டியிருப்பதால், பிறந்து வாழ்வோரே (person in existence) ஏற்போரா யிருக்கமுடியுமேதவிர, தாய் வயிற்றுக் குழந்தையோ, எதிர்காலத்தில் பிறக்க இருப்பவர்களோ ஏற்பாளராய் இருக்க முடியாது. அப்படிப்பட்டவர்கள் சார்பாக வேறு எவரும் ஏற்றுக்கொண்டதாக இசைவு தெரிவிக்கவும் முடியாது. எனவே, இனிப் பிறக்கவிருக்கும், கருவிலுள்ள குழந்தைக்குக் கொடை அளித்தால் அது செல்லாது.

ஆனால், சொத்தின் அனுபவ உரிமையை உயிரோடு இருக்கும் மகனுக்குக் கொடையாகக் கொடுத்து, அவனுக்குப் பிறக்கப்போகும் குழந்தைக்குச் சொத்துரிமையைக் கொடையாகக் கொடுத்தால், அது செல்லுடைமை (valid) ஆகும் என்றும், இருப்பவர் ஒருவர்மூலம் இல்லாதவருக்குக் கொடை கொடுக்க முடியும் என்றும், ஏனெனில் மகன் உடனேயே அனுபவ உரிமையை ஒப்படை பெறுவதாலும் அவனிடமிருந்து அவன் மகன் (கொடை அளித்தவர் பேரன்) உடனடி ஒப்படை

பெறுவதாலும், (மகன் உயிரோடு இருக்கும்பொழுது, பேரன் பிறந்திருக்க வேண்டும்) கொடை பெறும் பேரன் கொடை கொடுத்த அன்று உலகில் பிறந்திராதவராயிருந்தாலும், அந்தக் கொடை செல்லுடைமை யாகும் என்று 'ஷியா' பிரிவினர் கருதிவந்தனர். இக் கருத்து நவாசிஸ் அலிகான் வழக்கு முடிவிற்குப் பின்னர் ஏற்றுக்கொள்ளத்தக்க தன்று.

கொடைப் பொருள் (Subject matter of the gift)

சட்டத்தின்மூலம் உரிமைப்படுத்தப்படும் பொருள் எதுவாயினும் அது கொடைப் பொருளாக இருக்கலாம். கொடைப் பொருள், சட்டத்தின் மூலம் உரிமை கோரத்தக்க நிலைமையிலுள்ள பொருளாகவோ, சொத்தாகவோ இருக்கவேண்டும். அசைவியல் பொருள்களும் நிலையியல் பொருள்களும் சட்ட உரிமை கோரத்தக்க பொருள்களே. உருவ நிலை பெறாத வாணிக நற்பெயரும் (good-will) வழக்குரிமைப் பொருளும் (chose-in-action) வாணிகக் குறியும் (Trade Mark) கொடைப் பொருள்களாக அமையலாம்.

இந்து மதச் சட்டத்திலுள்ளதைப்போன்று, சொத்துக்களைப் பூர்வீக சொத்து என்றும் தேடிய சொத்து என்றும் இசுலாமிய சட்டம் வேறு படுத்திக் காட்டவில்லை. எனவே, பூர்வீக சொத்து என்றோ, தேடிய சொத்து என்றோ இசுலாத்தில் வேறுபாடு கிடையாது. அசைவியல் பொருளோ, நிலையியல் சொத்தோ, கொடைப் பொருளாக்கப் படுவதில் எந்த வேறுபாடும் கிடையாது. ஒரு முசுலிம் தன்னுடைய வாரிசுகளுக்கு என்று எதுவும் விட்டுச் செல்லாது, சொத்து முழுவதையும் முற்றிலும் ஓர் அன்னியனுக்கே வேண்டுமானாலும் கொடை யளிக்க உரிமை பெற்றவனாவான். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் வாரிசுகள் கொடை அளிப்பதை எதிர்த்து நிற்க முடியாது.

கொடை கொடுப்பவர்வசம், கொடை கொடுக்கும்பொழுது அந்தச் சொத்து இருக்கவேண்டும். எதிர்காலத்தில் தனக்கு வந்தடையப்போகும் சொத்தைக் கொடையாகக் கொடுத்தால் அது செல்லுடைமையாகாது. எடுத்துக்காட்டாக, ஓர் ஆலை முதலாளி தம்முடைய ஆலையில் அடுத்த ஆண்டு உற்பத்தியாக இருக்கும் பொருள்களை வேறு ஒருவருக்குக் கொடை அளித்தால், அது செல்லுடைமை யாகாது. ஏனெனில், உற்பத்தி எதிர்காலத்தில் நிகழப் போவதன்றோ!

சட்டக் கண்ணோட்டத்துடன் பார்க்கும்பொழுது, கொடைப்பொருள் கொடை கொடுக்கும் நேரத்தில், கொடுப்பவரிடம் அவரது அனுபவத்தில் நிலைமையாக இருக்க வேண்டும். கொடைப் பொருள், சட்டத்தால் மதிப்பு உள்ளதாகக் கருதப்பட வேண்டும். அழுத்திக் கூறினால், அது

சட்ட உரிமை கோரத் தக்கபொருளாய் இருத்தல் வேண்டும். எனவே, அன்பும் பாசமும் கொடைப் பொருள்களாக அமையா. ஆயின், இவை கொடை அளிப்பதற்கு முக்கிய காரணங்களாக இருக்கலாம். 'மஹர்' கொடைப் பொருளாக அமையும்.

நல்லெண்ணத்தோடு கொடை கொடுக்கப்பட வேண்டும். கடன் காரர்களை ஏமாற்றுவதற்காகத் தன்னுடைய சொத்துக்களை ஒருவன் மற்றவனுக்குக் கொடையாகக் கொடுத்தால், அது கடன் கொடுத்தவரின் வேண்டுதலின்பேரில், தவிர்தகு (voidable) கொடையாகக் கருதப் படும். ஆனால், கொடை கொடுத்தவர் கடன்பட்டிருக்கிறார் என்கிற ஒரே காரணத்திற்காக அத்தகு வஞ்சக எண்ணத்தை ஊகிக்கமுடியாது.

கீழே குறிப்பிடப்படும் விசேஷப் பொருள்களும்கூடக் கொடைப் பொருளாய் அமையமுடியும் :

(1) அரசாங்கக் கடன் பத்திரங்களைக் (Government securities) கொடைப் பொருளாகக் கொடுக்கலாம். அவற்றில் முடக்கப்பட்ட பணம் மூலப்பொருளாகவும் (Corpus), அதிலிருந்து கிடைக்கும் வட்டி வருவாய் ஆகவும் அமைகிறது.

(2) குடியிருப்போர் அனுபவத்தில் இருக்கும் சொத்தை அதன் சொந்தக்காரர் கொடைப் பொருளாகக் கொடுக்க முடியும்.

(3) காணிக்கைப் பொருள்களில் பங்கு பெறும் உரிமையைக் கொடையாகக் கொடுக்கமுடியும்.

(4) பாகம் பிரிக்காத நிலங்களில் இருந்துவரும் வருமானத்திலுள்ள பங்கைக் (குடிக்கூலி, குத்தகைப் பாட்டம் முதலியவற்றில் பங்கு பெறும் உரிமையைக்) கொடைப் பொருளாகக் கொடுக்கலாம்.

(5) ஆண்டுப் பணமோ (Annuity), அவ்வப்போதைய வருமானமோ பொருட்பிணைப் பொறுப்பாக (charge) நிலையியல் சொத்தின் மீது செலுத்தப்பட்டிருந்தால், அதைக் கொடைப் பொருளாகக் கொடுக்க முடியும்.

(6) அடைமான மீட்புரிமையைக் (Equity of redumption) கொடைப் பொருளாகக் கொடுக்கலாம்.

(7) கொடுத்த கடனைத் திரும்பப் பெறாது, கடன் பெற்றவருக்கே கொடையாகக் கொடுப்பது, ஹனபி சட்டப்படி செல்லுடைமையாகும். 'ஷியா' சட்டப்படி செல்லுடைமையாகாது.

(8) வழக்குரிமைப் பொருள்களும், நுண்ணியல் பொருள் உரிமைகளும் (Incorporal rights) கொடைப் பொருள்களாய் அமையும்.

கொடை கொடுக்கப்படும் பொருள், கொடுப்பவரின் நேரடி உடைமையிலோ (Actual possession), கொள்நிலை உடைமையிலோ (Constructive possession) இருக்க வேண்டும். அத்துமீறிக் கவர் பொருள் வைத்திருப்பவர் (Trespasser) அப் பொருளைக் கொடைப் பொருளாய் வழங்க முடியாது. ஏனெனில், அதில் அவருக்குச் சொத்துரிமை இன்மையே காரணம் ஆகும். கொடைப் பொருளைக் கொடுப்பவர் கொடுக்க, பெறுபவர் அதை ஏற்றுப் பெற்றுக்கொண்டால் அன்றி, கொடை முற்றுப் பெறாது. எனவே, கொடைப் பொருளைக் கொடுப்பது எப்படி, பெறுவது எப்படி என்று கீழே காணலாம் :

அசைவியல் பொருள்கள் கொடைப் பொருள்களாயின், உடனடி கொடுப்பதும் பெறுவதும் நடைபெற்றாலன்றிக் கொடை முற்றுப் பெறாது. கொடைப் பொருள் கொடை பெறுபவர்களுக்கு உடனடியாக வந்து சேரவேண்டும். இல்லையென்றால், கொடை முற்றுப் பெறாது.

காசு, பணம் முதலியவற்றைக் கொடை அளிக்கவேண்டுமாயின், அத் தொகையைக் கொடை ஏற்போரிடம் உடனடியாகக் கொடுத்துவிட வேண்டும். பணத்தை உடனடியாகக் கொடுக்காது, கொடுப்பவர் கணக் கேட்டில் பற்று எழுதிவிடுவதால் மட்டும் கொடை முற்றுப் பெற்றதாகாது.

நிலையியல் பொருளாயின் (immovable property) கொடை கொடுப்பவர் அந்தச் சொத்தில் இருக்கை வசதியோடு இருந்தால், உடன்தானே அதைக் காலிசெய்து வெளியேறி, கொடைபெறுவோனிடம் அதை ஒப்படைப்புச் செய்துவிட வேண்டும். கொடை பெறுவோன், அக் கொடையைப் பெற்றுக் கொண்டதற்கு அறிகுறியாக, உள்ளே நுழைந்து, அன்றுமுதல் அதைத் தன்னுடைய உடைமையில் அனுபவத்தில் (possession) கொண்டுவர வேண்டும். கொடை கொடுப்பவர் தம்முடைய மூட்டை முடிச்சுகளை ஒதுக்கிக்கொண்டு அங்கிருந்து வெளியேறி விடவேண்டும். கொடை ஏற்பவன் அச் சொத்தின் முழுஉடைமையையும் (complete possession) நேரடியாகவோ கொள்நிலையாகவோ (actual or constructive) ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டும். எடுத்துக் காட்டாக, ஒருவர் தாம் வசித்துவரும் ஒரு வீட்டை வேறு ஒருவனுக்குக் கொடையாகக் கொடுக்கிறார் என்றால், முதலில், கொடுப்பவர் அந்த வீட்டைக் காலிசெய்து வெளியேறிவிட வேண்டும். பிறகு கொடை பெறுபவனுக்கு வீட்டை முழுவதும் உடைமை ஒப்படைப்புச் (Delivery of possession) செய்து, அவனது கைவசம் விட்டுவிட வேண்டும். இதுவன்றி, கொடுப்பவர் அதே வீட்டில் தொடர்ந்து தங்கிக்கொண்டிருந்தால், பெறுபவன்வசம் வீட்டை முழுமையாகவும் உடனடி உடைமை ஒப்படைப்புச் செய்ததாக மெய்ப்பித்தாலன்றிக் கொடை செல்லாதாகி விடும். கொடுப்பவர் கொடைப் பொருளில் தங்கிக் கொண்டிருக்க

நேர்ந்தால், சிறிது நேரத்திற்காவது அதைக் காலிசெய்து, பெறுபவன் வசம் முழுமையாக உடைமை ஒப்படைப்புச் செய்வது அவசியம் ஆகும். ஆனால், இந்த விதிக்கு நான்கு விலக்குகள் அளிக்கப்பட்டுள்ளன. அவையாவன :

(1) கணவன் தன் மனைவிக்குக் கொடை அளிக்கும்பொழுது, இந்த விதியைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் இல்லை. சிறிது நேரமாயினும் கொடையளித்த வீட்டைக் காலிசெய்து கணவன் வெளியேற வேண்டிய அவசியம் இல்லை. கணவன் மனைவிக்குக் கொடை அளிக்கும் எண்ணத்தையும் விருப்பத்தையும் திட்டவட்டமாகச் சந்தேகமற வெளிப்படுத்தி இருந்தால், அதுவே போதுமானது.

Amina Bibi vs Khatija Bibi 1927
(1 Bom. H. C. 167)

கொடைப் பொருளில் ஒன்று, கணவன்-மனைவி குடியிருந்த வீடு. கணவன் மனைவிக்கு அதைக் கொடை அளித்து அதற்காகக் கொடைப் பதிவு ஒப்பாவணம் (Deed of gift) ஒன்றும் எழுதிவைத்தான். கணவன் மனைவியிடம் கொடையளித்த வீட்டுப் பூட்டின் சாவியையும் ஒப்படைத்து, தானும் சிறிதுநேரம் தாற்காலிகமாக அவ்வீட்டை விட்டு வெளியேறி, உடைமை ஒப்படைப்புச் செய்தான். ஆனால், கொடை கொடுக்கப்பட்ட அதே வீட்டிலேயே அவன் தன் மனைவியுடன் தொடர்ந்து வாழ்ந்துவந்தான். கொடைப் பொருளின்மூலம் கிடைத்த வருமானங்களையும் அவன் தன் மனைவியின் பேரிலேயே வசூல் செய்து வந்தான்.

முழுமையாக உடைமை ஒப்படைப்புக் கணவனால் மனைவிக்குக் கொடுக்கப்படவில்லை யாதலால், கொடை செல்லாது என்று வாதிடப் பட்டது.

கணவன்-மனைவியரிடையே கொடைநிகழின், கொடுப்பவர் சிறிது நேரமாவது கொடைப் பொருளைக் காலிசெய்து ஒப்படைப்புச் செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை; கொடுத்தவர் வெளியே செல்ல வேண்டும் என்பதோ, ஏற்றவர் உள்ளேவந்து ஒப்படைப்பு ஏற்றுத் தம் உடைமையை நிலைநிறுத்த வேண்டும் என்ற விதி கடைப்பிடிக்கப்படல் வேண்டும் என்பதோ அவசியமும் இல்லை; ஏனெனில், அவர்கள் இருவரும் கணவன்-மனைவியராதலால், ஒரேவீட்டில் சேர்ந்துவாழும் உரிமைபெற்றவராவர்; ஆதலால், மேற்கூறிய விதியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு, அந்தக் கொடை சொல்லுடைமையாகும் என்று பம்பாய் உயர்நீதிமன்றம் இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கியது.

Ma-mi *vs* Kallandar Ammal

(54 G. A. 23)

கணவன் பர்மாவுக்குச் சென்றான். மனைவி இந்தியாவில் வாழ்ந்து வந்தாள். பர்மாவிலிருந்த தன்னுடைய சொத்து ஒன்றை இந்தியாவில் வாழ்ந்துவந்த தன் மனைவிக்கு அவன் கொடையாகக் கொடுத்தான். ஒப்பாவணம் (deed) எழுதி அதையும் பதிவுசெய்தான். மனைவிக்குக் கொடையாகக் கொடுத்த பர்மாவிலிருந்த அந்த வீட்டிலேயே அக் கணவன் வாழ்ந்துவந்தான். அந்தச் சொத்திலுள்ள வருமானங்களையும் அவனே வசூல் செய்துவந்தான். பர்மாவிலுள்ள சொத்து சம்பந்தப் பட்ட அலுவலகப் பதிவேடுகளில் பெயர்மாற்றமும் (mutation) செய்து வைத்தான். மனைவிவசம் முழுமையான ஒப்படைப்பு நிகழவில்லை யாதலால் கொடை செல்லுடைமையாகாது என்று வாதாடப்பட்டது.

கணவன் கொடையளித்த வீட்டிலேயே தொடர்ந்து வாழ்ந்து வந் தான் என்பதாலோ, வருமானங்களைக் கொடைவழங்கியபின்னரும் தானே வசூல் செய்துவந்தான் என்பதாலோ கொடை செல்லுடைமையாகாது என்ற முடிவுக்கு வரமுடியாது. இவ் வழக்கில் கணவன் தன் மனைவியின் சார்பாக அவளுடைய ஏஜெண்டாக இருந்து வருமானங்களை வசூல் செய்துவந்தான் என்றுதான் கருதவேண்டுமே தவிர, அவன் தனக்காக வசூல் செய்ததாகச் சொல்லமுடியாது. நேரடி உடைமை ஒப்படைப்பு (actual delivery of possession) நிகழவில்லை என்றாலும், சம்பந்தப் பட்ட ஆவணங்களிலும் பதிவேடுகளிலும் அவன் தக்க பெயர்மாற்றம் (Mutation of name) செய்திருப்பதால், கொள்நிலை உடைமை ஒப்படைப்பாகக் (Constructive delivery of possession) கருத வேண்டும் என்று பிரிவிகவுன்சில் இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கியது. எனவே, கணவன் மனைவியர் இடையே மேற்கூறிய விதிக்கு விலக்கு அளிக்கப்பட்டிருப்பதை இந்த முடிவும் நன்கு தெளிவுபடுத்துகிறது.

கணவன் மனைவிக்கு நிலையியல் சொத்தைக் கொடை அளிக்கும் பொழுது, அப் பொருள்மீதுள்ள உரிமை முழுவதையும் தான் மாற்றம் செய்திருப்பதாகத் தன்னுடைய எண்ணத்தைத் தெளிவாக வெளிப்படுத் தினல் அதுவே போதுமானது. ஆயினும், அது வெறும் பெயரளவில் அன்றி, முற்றிலும் உண்மையாய் இருக்க வேண்டும்.

கணவன் அறுதியாவணத்தின் (Deed of settlement) மூலம் நிலையியல் சொத்தை மனைவிக்குக் கொடை அளித்தான். அதில், மனைவிக்கு உடனடி உடைமை ஒப்படைப்புக் கொடுக்கப்பட்டுவிட்ட தாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதில், அச்சொத்திலுள்ள வருமானத் தைத் தன்னுடைய வாழ்நாள் முழுதும் தானே பயன்படுத்திக்கொள்ள

வும், அச் சொத்துமீதான வரியைக் கட்டிக்கொள்ளவும் கணவனுக்கு உரிமை அளிக்கப்பட்டிருந்தது.

அறுதி ஆவணத்தில் சொல்லப்பட்ட வாசகங்களைப் பார்க்கும் பொழுது, உண்மையில் உடைமை ஒப்படைப்பு நிகழ்ந்ததாகக் கருத முடியாது. ஏனெனில், கணவன் தன்னிடமிருந்த முழு உரிமைகளையும் துறக்காது, தன்னுடைய சொச்ச வாழ்நாட்களுக்கென்று தன்னுடைய உரிமைகளில் சிலவற்றை ஒதுக்கி வைத்திருப்பதால், இது வெறும் பெயரளவில் வழங்கப்பட்ட உடைமை ஒப்படைப்பே என்றும், உண்மையிலேயே ஒப்படைப்பு முழுமையாக நிகழ்ந்ததாக இங்குக் கருதமுடியாது என்றும் முடிவு கூறப்பட்டு, கொடை செல்லுடைமையாகாது என்று ஒரு வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது. (AIR 1950 Mad-761)

(2) மேற்கூறியதைப்போன்று, மனைவி கணவனுக்குக் கொடை அளிக்கும்போதும், இந்த விதியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

(3) தந்தை அல்லது சொத்துக் காப்பாளர்கள், தம்முடைய காப்பில் வளரும் உரிமை வயது எய்தப் பெறுதவருக்கோ சித்தம் கலங்கியவர்களுக்கோ நிலையியல் சொத்தைக் கொடை அளிக்கும்பொழுது, மேற்கூறிய விதியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

காப்பிலுள்ளவருக்குக் கொடை அளித்து, காப்பாளர் தம்முடைய எண்ணத்தையும் கருத்தையும் தெளிவுற வெளிப்படுத்தி யிருந்தால், அதுவே போதுமானது ஆகும். உடைமை ஒப்படைப்பு மாற்றம் (Change of possession) காப்பாளர்–காப்பிலுள்ளோரிடையே தேவையில்லை. ஏனெனில், கொடை ஏற்போர் உரிமை வயது எய்தப் பெறுதவராகவோ, சித்தம் கலங்கியவராகவோ இருப்பதால், அவர் பொருட்டுக் கொடைப் பொருளை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள் தந்தையோ அல்லது சொத்துக் காப்பாளரோ ஆதலால், அவர்களே அப் பொருளை அவர்களுக்குத் தரவேண்டி யிருப்பதால், இந்த விதியிலிருந்து அது விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

Musa Mirza *vs* Kadar Bux
(ILR 52 Bom 316 PC)

தந்தை உயிரோடு இருக்க, அவருடைய மைந்தன் தந்தையின் தந்தைப் (பாட்டன்) பொறுப்பில் வளரும்போது, இவர் தம் காப்பிலுள்ள பேரனுக்கு நிலையியல் சொத்தைக் கொடை அளித்தால், அது மேற்கூறிய விதியிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதில்லை. எனவே, மகனின் சார்பாகத் தந்தை, அவனுக்கு அளிக்கப்பட்ட கொடையை ஏற்றுக்

கொள்ள வேண்டும். உடைமையைத் தந்தையின் தந்தையிடத்திருந்து தந்தை தன் மைந்தனுக்காக ஒப்படைப்புப் பெற்றுக்கொள்ளவேண்டும். இன்றேல், கொடை பூர்த்தியாகாது. தந்தைக்குப் பதிலாக, காப்பிலுள்ளவர்கள் சார்பாகத் தாய் இசைவு தெரிவித்தாலும் கொடை பூர்த்தி பெறுது. ஏனெனில், தந்தை இருந்தால் தந்தைக்கும், அவரின்றேல் தந்தையின் தந்தைக்கும், அவருமின்றேல், காப்பிலுள்ளவர்களின் சொத்துக் காப்பாளராக எவர் செயல்படுகின்ருரோ அவருக்கும்தாம் மேற்கூறிய விதியிலிருந்து விலக்கு அளிப்பது பொருந்தும் என்று இந்த வழக்கில் தீர்ப்புக் கூறப்பட்டது.

வேறு எவராவது உரிமை வயது வராதவர்களுக்குக் கொடை அளித்தால், அதைக் காப்பாளராகத் தந்தையோ, தந்தையின் தந்தையோ, அல்லது சொத்துக் காப்பாளரோ காப்பிலுள்ளவர் பொருட்டு உடைமை ஒப்படைப்பு ஏற்றுக்கொள்வதன்மூலம் கொடை பூர்த்தியடைகிறது. இன்றேல், கொடை செல்லுடைமையாகாது.

(4) கொடை கொடுப்பவரும் பெறுபவரும், கொடை வழங்கப்பட்ட சமயத்தில் அக் கொடைச் சொத்திலேயே சேர்ந்து வாழ்ந்துவந்தால், முற்கூறிய விதியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

ஒரு வழக்கில், சிறிய தந்தையின் காப்பில் வளர்ந்துவந்த மைந்தனுக்கு, அவர் பதிவுக் கொடை ஆவணத்தின்மூலமும் பதிவேடுகளில் பெயர் மாற்றம் செய்ததன்மூலமும் கொடை அளித்தது, பூர்த்தியாக்கப்பட்ட கொடையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடன் பங்காளிகளில் (co-sharer) ஒருவர், மற்றவருக்குத் தன் பங்கைக் கொடையாகக் கொடுக்கும்பொழுது, அதே சொத்தில் குடியிருந்துவரும் ஒரு பங்காளி மற்றப் பங்காளிகளின் சார்பாக அதை ஏற்றுக்கொண்டால், அது கொள்நிலை உடைமை ஒப்படைப்பு (Constructive delivery of possession) ஆகும். இது உடன் பங்காளிகளிடையே செல்லுடைமையாகும்.

உரிமை வயது எய்தப் பெருதோர் கொடை பெறுபவராயிருந்து, கொடை கொடுப்பவர் சொத்துக் காப்பாளராக அல்லாமல் வேறு எவராக இருந்தாலும், தந்தையோ சொத்துக் காப்பாளரோ, உடைமை ஒப்படைப்பை (Delivery of possession) ஏற்றுக்கொள்ளக் கொடை பூர்த்தியாகும்.

பல சொத்துக்களைக் கொடை அளிக்கும்பொழுது, சிலவற்றிற்கு உடைமை ஒப்படைப்புக் கொடுத்து, மீதி உள்ளவற்றிற்கு உண்மை உடைமை ஒப்படைப்புக் கொடுக்க முடியாதுபோனாலும், அப்படி மீதி உள்ளவற்றையும் உடைமை ஒப்படைப்புச் செய்திருப்பதாகவே கருத

வேண்டும். கொடைப் பொருள் அனைத்தையும் முன்னிறுத்தி, முழுமையாக உடைமை ஒப்படைப்பு நிகழ்ந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டுமேயன்றி, ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாகப் பார்க்க வேண்டியதில்லை. எனவே, பல பொருள்களைக் கொடைப் பொருளாக்கி, சிலவற்றிற்குமட்டிலும் உடைமை ஒப்படைப்புச் செய்து, மற்றவற்றிற்கு உடைமை ஒப்படைப்புச் செய்ய முடியாது போயிருப்பின், கொடை கொடுத்தவர் ஏற்பவரிடத்து எல்லாப் பொருள்களையும் ஒப்படைப்புச் செய்ததாகவே கருதவேண்டும். ஆயினும், ஒப்படைப்புக் கொடுக்கப்படாத பொருள்களைப் பொறுத்தமட்டில், கொடுப்பவர் தம்மிடம் இருந்த எல்லா உரிமையையும் துறந்து, அவற்றைப் பெறுபவருக்கு முடிந்த அளவு மாற்றம் செய்து கொடுத்திருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, 5 வீடுகளைக் கொடைப் பொருளாகக் கொடுக்கும்பொழுது, 2 வீடு குடிக்கூலிக்கு விடப்பட்டு வாடகைக்காரர்களின் உடைமையில் அவை இருந்தால், மீதி உள்ள 3 வீடுகளையும் உடனடி ஒப்படைப்புச் செய்திருப்பதால், குடிக்கூலிக்கு விடப்பட்டிருக்கும் 2 வீடுகளையும் பெறுபவருக்கு ஒப்படைப்புச் செய்யாதிருந்தாலும், 5 வீடுகளையும் ஒருசேரக் கொடை அளித்ததாகக் கொள்ள வேண்டும். இப்படிக்கின்றி, 3 வீடுகளைமட்டிலும் அவர் ஒப்படைப்புச் செய்திருக்கிறார் ; மற்ற 2 வீடுகளையும் ஒப்படைப்புச் செய்யவில்லை; ஆகையால், இவ்விரண்டு வீடுகளையும் பொறுத்தமட்டில் கொடை பூர்த்தியாகாது என்று கூற முடியாது.

கொடைப் பொருள் நிலையியல் பொருளாக இருந்து, அது குத்தகைக்காரர்களிடம் இருந்தால், கொடை கொடுப்பவர், தாம் அப் பொருளை இன்னாருக்குக் கொடையாகக் கொடுத்துவிட்டதாகவும், இனிமேல் கொடை பெற்றவரே அதற்கு உரியவர் ஆவார் என்றும் குத்தகைக்காரர்களுக்குத் தெரிவிக்க, அதை அவர்கள் ஏற்றுக்கொள்ள, கொடை முற்றுப் பெற்றதாகும். இதை ஆங்கிலத்தில் அட்டார்ண்மெண்ட் (Attornment) என்று சொல்வார்கள். குத்தகைக்காரர்களிடம் இருக்கும் பொருளை உரிமையாளர் 'அட்டார்ண்மெண்ட்'மூலம் கொடையாகக் கொடுக்க, அது பூர்த்தியாகும்.

ஒப்படை பெற்றவர் வசம் (Bailee) பொருள் இருந்தால், அதை அவருக்கே கொடை அளிக்கச் சொந்தக்காரர் விரும்பினால், ஒப்படை கொடுத்த பொருளின் சொந்தக்காரர் அதைத் தம் வயம் மீட்பித்துத் திரும்ப அவருக்கே அதைக் கொடுத்து ஒப்படைப்பைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்கிற அவசியமில்லை. இதில் கொடை அளிக்கும் கருத்தை வெளிப்படுத்தலே போதுமானது.

கொடைப் பொருள் கொடுப்பவர் கையிலின்றி, அத்துமீறியவர் (Trespassers) கையில் இருந்தால், கொடுப்பவர் அதை மீட்பித்துக்

கொடுக்கவோ, இல்லையேல் அதை அத்து மீறியவர் கையிலிருந்து மீட்பிப்பதற்குள்ள எல்லா வழிவகைகளிலும் கொடை பெறுபவரை ஈடுபடுத்தவோ செய்தாலன்றிக் கொடை பூர்த்தியாகாது. அத்துமீறி வைத்திருப்பவரிடமுள்ள சொத்தைக் கொடை கொடுப்பவர் சட்டப்படி உரிமை கொண்டாடுவதில் குழப்பம் ஏற்பட இடமிருப்பதால், அதைத் தவிர்க்கத் தன்னாலியன்ற எல்லா வழிவகைகளையும் இவர் செய்தாக வேண்டும்.

நேரடியாக உடனடி உடைமை ஒப்படைப்புச் செய்ய முடியாத ஒரு பொருளாக இருப்பின், நேரடி ஒப்படைப்புக் கட்டாயமில்லை. எடுத்துக்காட்டாக, ஜமீன்தாரி நிலத்தை ஒருவர் கொடை அளிக்கிறார் என்றால், பெறுபவர் அதிலுள்ள வருமானத்தைமட்டுமே பெறமுடியுமே தவிர, அந்த நிலத்தை உடனடியாகத் தமது உடைமைக்குக் கொண்டுவர முடியாது. இதுபோன்று நிலத்தை நேரடியாக ஒப்படைக்க முடியாது போனால், உரிய பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதன் (Mutation of name) மூலமோ, அதில் உள்ள வருமானத்தைக் கொடை பெறுபவர் பெற்றுக்கொள்ளும் வழிகளைச் செய்வதன்மூலமோ கொடை பூர்த்தியாகும்.

தொடர்தகு பாத்தியதையையோ (actionable claim), பருப்பொருளல்லாத நுண்பொருளையோ, (incorporeal property) கொடையாகக் கொடுக்கும்பொழுது, கொடுப்பவர் தம்மிடமுள்ள அப் பொருள் பற்றிய அனைத்துரிமைகளையும் பாத்தியதையையும் கொடை பெறுபவருக்கு அந்த அந்தப் பொருளுக்குத் தக்கபடி முழுமையாக மாற்றிக் கொடுப்பதன் மூலம், உடைமை ஒப்படைப்புச் செய்ததாகக் கருத வேண்டும். ஏனெனில், பருப்பொருள் போல் நுண்பொருளை நேரடியாகக் கொடுக்கமுடியாது. எனவே, நுண்பொருளைப் பொறுத்தமட்டில், அந்த அந்தப் பொருளுக்குத் தக்கபடி தன்னிடம் உள்ள உரிமைகளைக் கொடை கொடுப்பவர் துறப்பதன் மூலமும், அப்பொருள்மீது தமக்குள்ள எல்லா உரிமைகளையும் மாற்றித் தருவதன் மூலமும், கொடை பெறுபவருக்கு அவற்றினை உரிமையாக்கித் தருவதன் மூலமும், உடைமை ஒப்படைப்பு நிகழ்ந்ததை நிலைநாட்ட முடியும்.

(அ) அரசாங்கக் கடனுறுதிச் சீட்டை (Govt. promissory note) ஒருவர் கொடை அளிக்கவிரும்பினால், அதில் மேலெழுத்துச் செய்து (endorsement), அதாவது, அதில் செல்லெழுதுவது போல் கொடை பெறுபவர் பெயரை எழுதி, அக் கடனுறுதிச் சீட்டைப் பெறுபவர் வசம் ஒப்படைத்து, அவருக்கே அதில் குறிப்பிடப் பட்டுள்ள தொகை சேருமாறு செய்வதன் மூலம், முழு உடைமை ஒப்படைப்பு நிகழ்ந்திருப்பதாகக் கொள்ளலாம்.

Aga Mahomed *vs* Koolsombeebi
(25 Cal-9)

வங்கி (Bank)யிலிருந்து பெற்றுவந்த பண உறுதிச் சீட்டைக் கணவன் தன் மனைவியிடம் கொடுத்து, 'நான் உனக்குத் தரும் கொடை இது. குளித்து முடிந்ததும், வங்கிக்குச் சென்று, இதை உன் பெயரில் மாற்றிவைக்கிறேன்' என்று சொல்லிக் குளிக்கச் சென்ருன். அந்தச் சீட்டின்மேல் ஒருபுறம் 'மாற்றமுடியாதது' (not transfer-able) என்று எழுதப்பட்டிருந்தது. குளித்துக் கரையேறு முன்னர், கணவன் இறந்துபோனுன். எனவே, வங்கிக்குச் சென்று மனைவி பெயரில் அச்சீட்டை மாற்றமுடியாமற் போயிற்று.

பண உறுதிச் சீட்டை மனைவியிடம் கொடுத்திருப்பதால் மட்டும், உடைமை ஒப்படைப்பு நிகழ்ந்ததாகக் கூறமுடியாது. அதில் 'மாற்ற முடியாதது' என்று தனியாகக் குறிப்பிடப்பட்டிருப்பதால், கணவன் வங்கிக்குச் சென்று, அதை மாற்றிப் பின்னர் மனைவியின் பெயரில் அதை மாற்றிக் கொடுத்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாததால், வெறும் 'மாற்றமுடியாதது' என்று குறிப்பிடப்பட்ட பண உறுதிச் சீட்டைத் தன்னிடம் வைத்திருப்பதைக்கொண்டு மட்டும், முழு உடைமை ஒப்படைப்பு நிகழ்ந்ததாகக் கூறமுடியாது என்று இந்த வழக்கில் தீர்ப்புக் கூறப்பட்டது.

எனவே, நுண்பொருள்களைக் (incorporeal property) கொடையாகக் கொடுக்கும்பொழுது, அந்த அந்தப் பொருளுக்குத் தக்கபடி, என்ன என்ன மாற்றம் தேவையோ, அதை முறைப்படி செய்து, தனக்குள்ள உரிமையையும் பொருளின் உடைமையையும் பெறுபவரிடம் ஒப்படைப்புச் செய்தால், அதை முழு உடைமை ஒப்படைப்பாகக் கருத முடியும். இல்லையேல், அது முழு உடைமை ஒப்படைப்பாகக் கருதப் படாது. கொடை செல்லுடைமை அற்றதாகிவிடும்.

(ஆ) ஜமீன்தாரி உரிமைகளைக் கொடையாகக் கொடுக்கவேண்டுமாளுல், கொடுப்பவர் சம்பந்தப்பட்ட பொதுப் பதிவேடுகளில் தம்முடைய பெயருக்குப் பதிலாகக் கொடை பெறுபவரின் பெயரை எழுதிவைப்பதன் மூலம், முழு உடைமை ஒப்படைப்பு நிகழ்ந்ததை நிலைநிறுத்த முடியும்.

(இ) அடைமான மீட்புரிமை (Equity of redemption): அடைமான மீட்புக் காலாவதியாகிவிட்டபோதிலும், அடைமானம் பெற்றவர் அச் சொத்தை விற்றுவிடு முன்னர், அடைமானப் பணமும், வட்டியும், செலவும் கொடுத்துச் சொத்தை மீட்க அடைமானம் வைத்தவருக்குச் சட்டம் உரிமை வழங்கியிருக்கிறது. இந்த அடைமான மீட்பு

உரிமையை (equity of redemption) அடைமானம் வைத்தவர் பிறிதொருவருக்குக் கொடையாகக் கொடுக்கலாமா? கூடாதா? என்பதில் இந்தியாவில் உள்ள உயர் நீதி மன்றங்களுக்கிடையே கருத்து வேறுபாடு காணப்படுகின்றது.

கல்கத்தா, சென்னை, பாட்னா ஆகிய உயர் நீதி மன்றங்கள், அடைமானப் பொருள் அடைமானம் பெற்றவர் வசம் இருந்தபோதிலும், அடைமானம் வைத்தவர் அவருக்கிருக்கிற மீட்புரிமையைக் கொடை ஏற்போருக்குக் கொடையாகக் கொடுக்க முடியும், கொடுப்பது செல்லுடைமையாகும் என்று தீர்ப்புக் கூறியுள்ளன. ஆனால், இதற்கு நேர் எதிராக, பம்பாய், லாஹூர் உயர் நீதி மன்றங்கள் அடைமானப் பொருள் அடைமானம் பெற்றவரின் கைவசம் இருப்பதால், அடைமானம் வைத்தவர் இப் பொருள்களின்மீது முழு உடைமை ஒப்படைப்பும் கொடை ஏற்பவருக்குக் கொடுக்க முடியாதாகையால், அவருடைய அடைமான மீட்புரிமையைக் கொடையாகக் கொடுப்பது செல்லுடைமை ஆகாது என்று தீர்ப்புக் கூறியுள்ளன.

கொடையைப் பூர்த்தி செய்தற்பொருட்டு, கொடுப்பவரின் பொருளின் முழு உடைமை ஒப்படைப்பையும் கொடை ஏற்பவருக்கு வழங்கிவிட வேண்டும் என்பது உண்மையே என்றாலும், நுண்பொருள் களைப் (Incorporeal property) பொறுத்தமட்டில், நேரடி உடைமை ஒப்படைப்புச் செய்ய முடியாத காரணத்தால், கொடை கொடுப்பவர் தம் மிடம் இருக்கும் அப் பொருள் குறித்த அனைத்து உரிமைகளையும் பெறு பவருக்கு மாற்றித் தருவதன்மூலம் அதன் முழு உடைமை ஒப்படைப்பு நிகழ்ந்ததாகக் கருத வேண்டும் என்ற விதி இருப்பதால், அடைமானம் வைத்தவர் அடைமானம் பெற்றவரிடம் தம்முடைய அடைமானப் பொருள் மீதுள்ள உரிமைகளைக் கொடை அளித்திருப்பதாகவும், கொடை ஏற்றவர் அந்த அடைமானப் பொருளை மீட்க விரும்பும்போது அவரிடமே அடைமானம் பெற்றவர் அப் பொருளைத் திருப்பித் தந்துவிட வேண்டும் என்பதாகவும் தெரியப்படுத்துவதன்மூலம், அப் பொருளில் முழு உடைமை ஒப்படைப்பு நிகழ்ந்திருப்பதாகக் கருதுவதே சிறந்த தாகத் தெரிகிறது. இந்த அடிப்படையில் கல்கத்தா, சென்னை, பாட்னா ஆகிய உயர் நீதி மன்றங்கள் முடிவு செய்திருக்கின்றன.

பொறுப்புரிமை அமைப்புகள் (Trust)மூலமும் ஒரு முசுலிம் பிற ருக்குக் கொடை அளிக்க முடியும். நேரடியாகக் கொடை அளிக்கும் போது இருக்க வேண்டிய மேற்குறித்த எல்லா நியதிகளும், விதிகளும், கட்டுப்பாடுகளும், பொறுப்புரிமை அமைப்புமூலம் அளிக்கும் கொடைக் கும் பொருந்தும். இதில் கொடை பெறுபவருக்குப் பதிலாகப் பொறுப் புரிமையர் (Trustee), பொறுப்புரிமை அமைப்பாளரிடம் (Author of

Trust) இருந்து, பொறுப்புரிமைப் பயனடைவோர் (Beneficiaries) சார்பாக முழு உடைமை ஒப்படைப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

Gulam Husein *vs* Fakir Mahomed (1946)
(48 Bom L R 733)

இந்த வழக்கில் ‘ஷீயா’ சட்டப்படி, உயிருடன் இருப்பவருக்கு ஆயுள் சொத்துரிமை கொடுத்து (Life Estate) அவருக்குப் பின்னல், பிறந்திராத கருவிலுள்ள குழந்தைக்குச் சொத்தைக் கொடையாகக் கொடுத்தால் அது செல்லுடைமையாகும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

கருவிலிருக்கும் குழந்தைக்கு உடைமை ஒப்படைப்புக் கொடுக்க முடியாதாகையால், சுற்றி வளைத்துச் சட்டத்தின் அடிப்படைக்கு எதிர் முரணகச் செல்லும் கருத்தாகத்தான் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனல் நவாசிஸ் அலீ கான் வழக்கின் தீர்ப்புக்குப் பின்னர் இக் கருத்து ஏற்றுக்கொள்ளப் படுவதற்கில்லை. நவாசிஸ் அலீ கான் வழக்கில் ‘சுன்னீ’ முசுலிமாயினும், ‘ஷீயா’ முசுலிமாயினும், பிறந்திராத குழந்தைக்கு அறுதியாவணத்தின்மூலம் கொடை அளிக்க முடியாது என்று திட்டவட்டமாக வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. எனவே, பொறுப்புரிமை அமைப்பு (Trust) மூலமும் பிறந்திராத குழந்தைக்கோ இல்லாத நபருக்கோ கொடை கொடுக்க முடியாது. அப்படியே கொடுத் தாலும், அது செல்லுடைமையாகாது.

இதுகாறும் பருப்பொருள் (Corporeal) நுண்பொருள் ((Incorporeal) அசைவியல் பொருள் (Movable property) நிலையியல் பொருள் (Immovable property) முதலியவற்றைக் கொடையாகக் கொடுக் கலாம் என்றும், அவற்றிற்கு முழு உடைமை ஒப்படைப்பு (Delivery of possession) நிகழ்த்துவது எப்படி என்றும் கண்டோம். அடுத்து, எப்படிப்பட்ட பொருள்களைக் கொடையாகக் கொடுக்க முடியாது, யார் யார் எந்த எந்தச் சந்தர்ப்பங்களில் கொடை பெறத் தகுதியற்றவர் என்பனவற்றைக் காணலாம்.

(1) கொடைப் பொருள், கொடுக்கப்படும் சமயத்தில் அவர் வசம் இருத்தல் வேண்டும். கொடை கொடுக்கும் நேரத்தில், இல்லாத ஒன் றையோ, தோன்ருத பொருளையோ கொடை அளிக்க முடியாது. எடுத் துக்காட்டாக, கொடை கொடுப்பவரிடம் நன்செய் வயல் இருக்கிறது என்ருல், அதில் அடுத்த ஆண்டு விளையவிருக்கும் பொருளை, இந்த ஆண்டில் கொடையாகக் கொடுத்தால், அது செல்லுடைமை யாகாது. அடுத்த ஆண்டு விளையும் பொருள் என்ருல், இந்த ஆண்டில் அது இல்லாப் பொருளன்ருே! அது போன்ற இல்லாப் பொருள்களைக் கொடையாகக் கொடுத்தால், அது செல்லுடைமையாகாது.

கொடுப்பவர், கொடைப் பொருளை உடனடியாக (அக் கணமே) உடைமை ஒப்படைப்புச் செய்து, அதைப் பெறுபவரிடம் தந்துவிட வேண்டும். காலம் தாழ்த்திக் கொடுக்கவோ, கொடுப்பதாக வாக்குறுதி யளிக்கவோ நேர்ந்தாலும், அது செல்லுடைமை ஆகாது.

கொடை கொடுப்பவர், கொடை ஒப்பாவணத்தில் (Deed of Gift) 'நான் வாழும் நாளெல்லாம் இப் பொருளை ஆண்டு அனுபவித்து வருவேன்—ஆனால் அதை விற்கவோ பராதீனம் செய்யவோ எனக்கு உரிமை கிடையாது. நான் இறந்த பின்னர், பெறுபவர் இதைக் கொடையாகக் கொள்ளட்டும்' என்று கூறி இருந்தால், அவர் சொத்தைப் பராதீனம் செய்வதில் தமக்கு உரிமை இல்லை என்று கூறி இருக்கின்ற நிலையிலும், அந்தக் கொடை செல்லுடைமையாகாது. ஏனெனில், பொருளின் உடைமை ஒப்படைப்பு உடனடி நிகழாமல் இருப்பதே காரணமாகும்.[1] இதேபோல், கொடை கொடுப்பவர் பொறுப்புரிமை அமைப்பு (Trust) ஒன்று ஏற்படுத்தி, அதில் தம்மையே முதல் பொறுப்புரிமையர் (trustee) ஆக ஏற்படுத்தி, தாமே முதல் பொறுப்புரிமையராக அச் சொத்தை வைத்திருந்தாலும், அதில் எந்தவித உடைமை ஒப்படைப்பும் உடனடி நிகழாத காரணத்தால், கொடை செல்லுடைமையாகாது.

ஆனால் கொடை கொடுப்பவர் பொருளைக் கொடுத்து ஒப்படைப்பு நிகழ்த்திய பின்னர், மூலப் பொருளில் (Corpus) எந்த உரிமையையும் கோராமல் அதன் பயனடை உரிமையையோ, அதன் பயனையோ (Usufruct) முழுமையாகவோ, பகுதியாகவோ தம்முடைய வாழ்நாளில் பயன்படுத்திக்கொள்ள உரிமை ஏற்படுத்திக்கொண்டால், அது செல்லுடைமை யாகும். அதாவது, மூலப் பொருளின் பயனையோ, வருமானத்தையோ, தம்முடைய வாழ்நாள் முழுவதும் தமக்கே கொடுக்க வேண்டும் என்று கொடை அளிப்பவர் நிபந்தனை விதித்தால், அது செல்லுடைமையாகும். ஆனால், மூலப் பொருளின்மீது (Corpus) எந்த உரிமையையும் கோரக்கூடாது. மூலப் பொருளின் அனைத்துரிமையையும் கொடை பெறுபவருக்கு அவர் நிபந்தனை இன்றிக் கொடுத்து விட வேண்டும்.

---

[1] இசுலாத்தின் பரந்த கோட்பாடு என்னவென்றால், ஒரு மனிதனுக்கு எந்த நேரத்திலும் மரணம் நிகழ்ந்துவிடக் கூடுமாகையால், ஒவ்வொரு முசுலிமும் தன் தன் எண்ணத்தை அவ்வப்போதே நிறைவேற்றிவிட வேண்டும்; தள்ளிப் போடக் கூடாது. அப்படி உடனடியாக நிறைவேற்றாமல் ஒருவன் தள்ளிப் போடுவானானால், அதற்குள் அவன் இறக்க நேர்ந்தால், அவன் செத்த பின்னர் விட்டுச் செல்லும் சொத்துக்கள் எப்படி வாரிசுகளிடையே பங்கிடப்பட வேண்டும் என்று இறைவன் குர் ஆனில் கட்டளை யிட்டிருக்கிறானோ அப்படியேதான் அவை பங்கிடப்படுமன்றி, அவன் இறப்பதற்கு முன் நினைத்திருந்தபடி பங்கிடப்பட முடியாது.

Nawab Umjad Ally *vs* Mohumdee Begum
(11 MIA 517)

அரசாங்கப் பண உறுதிச் சீட்டை, முறைப்படி உடைமை ஒப்படைப்பு மாற்றிக் கொடையாக மைந்தனுக்குத் தந்தை கொடுத்தார். ஆனால், அதிலிருந்து வரும் வருமானத்தை (வட்டித் தொகையை)த் தம்முடைய வாழ்நாள் முழுவதும் தமக்கே கொடுத்துவிட வேண்டும் என்று அவர் நிபந்தனை விதித்திருந்தார். மூலப் பொருளைக் கொடையாகக் கொடுத்து வருமானத்தில் மட்டுமே நிபந்தனை விதித்திருப்பதால், கொடையும், இணைந்துள்ள நிபந்தனையும் செல்லுடைமையாகும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

(2) உறுதியற்ற வருநிகழ்ச்சியை முன்னிறுத்தி, அதை நிபந்தனையாக்கிக் கொடுக்கும் கொடையை வருநிகழ்வு சார்ந்த கொடை என்று சொல்லலாம். அத்தகு வருநிகழ்வு சார்ந்த கொடை (Contingent gift) செல்லுடைமை யாகாது. வருநிகழ்வு சார்ந்த நிபந்தனையோடு கூடிய கொடை செல்லாது. ஆனால், உரிமை மாற்றம் செய்யப்பட்ட இன்சூரன்சு (Insurance) இசுலாமிய சட்டப்படி செல்லுடைமை ஆகாதெனினும், இன்சூரன்சு சட்டத்தின்கீழ் அத்தகு உரிமை மாற்றம் செல்லும் என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டு இருப்பதால், முசுலிம் கணவன் தன்னுடைய மரணத்திற்குப் பிறகு மனைவிக்குத் தொகை சேர வேண்டும் என்று உரிமை மாற்றம் செய்து கொடுக்கும் கொடையானது செல்லுடைமையாகும் என்று ஒரு வழக்கில் தீர்ப்புக் கூறப்பட்டது.

(3) இல்லாதவர்களுக்கோ, தாயின் கருவில் வளரும் குழந்தைக்கோ அளிக்கும் கொடை செல்லுடைமை யாகாது. பொறுப்புரிமை அமைப்பு (Trust) மூலமும் இவர்களுக்குக் கொடை அளிக்க முடியாது. இசுலாமிய சட்டத்தில் தாய்ச் சூலில் உள்ள குழந்தைக்கோ, பிறந்திராதவருக்கோ ‘வக்பு’ செய்வதன்மூலம் மட்டுமே, அவர்களுக்குச் சொத்தைக் கொடுக்கமுடியும்.[1]

(4) கொடை கொடுத்தவர் கொடையையும் கொடுத்து, அது பூர்த்தியாகாவண்ணம் தடையையும் விதித்திருந்தால், கொடை பூர்த்தியடையத் தடையாக நிற்கும் நிபந்தனை மட்டும் செல்லத் தகாததாகி, கொடை

1. இசுலாம் சுவிகாரம் (மகவேற்பு) என்னும் கோட்பாட்டை அங்கீகரிக்கவில்லை. எனவே, ஒரு முசுலிம் தனக்கென்று ஒரு வளர்ப்பு மகன் உண்டென்று சொல்லி, அவ் வளர்ப்பு மகனுக்குத் தனது சொத்தை விட்டுச் செல்லமுடியாது. மாறாக, எந்த நேரத்திலும் ஒரு முசுலிம் எந்தப் பையனையும் தன் ‘செல்லப் பிள்ளை’ என்று அழைத்தோ அழைக்காமலோ, அவனுக்குத் தன் முழுச் சொத்தையும் ஹிபாவாக அளித்துவிட முடியும்.

செல்லுடைமையாகும். கொடை பூர்த்தியாவதைத் தடுத்து நிறுத்தும் நிபந்தனை ஏதேனும் கொடை அளிப்பவரால் விதிக்கப்பட்டிருந்தால், நிபந்தனை தொடராத அல்லது நீக்கப்பட்ட கொடையாக அதைக் கருத வேண்டும். கொடை ஏற்றவரின் மூலப் பொருளின் உரிமையைப் பறிக்கும் நிபந்தனையோ, கட்டுப்படுத்தும் தடையோ விதிக்கப்பட்டிருந் தால், அவை நீக்கப்பட்டவையாகக் கருதப்பட்டு, கொடை முற்றுப் பெற் றதாகவும், செல்லுடைமை பெற்றதாகவும் கருதப்படல்வேண்டும்.

ஆயுள் சொத்துரிமைக் கொடை (Life Estate)

அம்ரீ அல்லது உம்ரீ (Amree or Umree)

இசுலாமிய சட்டப்படி, மூலப்பொருளையோ, அதனின்று பெறும் பயனையோ கொடையாகக் கொடுக்கலாம். மூலப்பொருள் கொடை யாகக் கொடுக்கப்படும் பொழுது, அது நிபந்தனை அற்றதாக இருக்க வேண்டும். இதைத் தூய இசுலாமிய சட்ட அடிப்படையில் நோக்கும் போது, எந்தவிதக் குழப்பமும் ஏற்படுவதில்லை. ஆனால், ஆங்கிலச் சட்ட அடிப்படையில் உள்ள ஆயுள் சொத்துரிமையோடு (Life Estate) இதை இணைத்துப் பார்க்கும்பொழுது, சிறிது குழப்பமாகத் தோன்றும். ஆயினும், நீதித் தீர்ப்புகள் ஆங்கிலச் சட்ட அடிப்படைத் தத்துவத் தைப் பின்னணியாக வைத்து வழங்கப்பட்டு வந்தனவாதலின், இப் பொருள் குறித்து முடிவு செய்யப்பட்டு நீதி வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு களைத் தெரிந்துகொள்வது அவசியமாகும். ஆங்கிலச் சட்டத் தத்துவ அடிப்படையில் உள்ள ஆயுள் சொத்துரிமையை (Life Estate) இசுலாமிய சட்டத்தில் கூறப்பட்ட அம்ரீ அல்லது உம்ரீ (Amree or umree)உடன் ஒத்துநோக்கி, அதன் அடிப்படையில் இப் பொருள் குறித்து நீதி வழங்கப்பட்டு வந்ததால், நவாசிஸ் அலீகான் வழக்குத் தீர்ப்பிற்கு முன்னர், பெருத்த கருத்துவேறுபாடு இருந்தது.

'ஹனபி' கோட்பாட்டின்படி, கொடை கொடுப்பவர் மூலப் பொருளில் வெறும் ஆயுள் சொத்துரிமையை மட்டிலும் வழங்கி யிருந்தால், அது கொடை பெறுபவரின் உரிமைகளைக் கட்டுப்படுத்து வதாக அமைகிறது. எனவே, கட்டுப்படுத்தப்பட்ட உரிமையான ஆயுள் சொத்துரிமை, கட்டு நீக்கப்பட்டு முழுச் சொத்துரிமையாகக் கொடை பெற்றவரைச் சாரும். மூலப் பொருளில், ஆயுள் சொத்துரிமைக்குப் பின்னர், கொடை ஏற்றவர் இறந்தபின்னர், வேறு எவருக்காவது முழுச் சொத்துரிமையும் போய்ச் சேரும் என்று நிபந்தனை விதிக்கப்பட் டிருந்தால், அப்படிப்பட்ட நிபந்தனை செல்லாததாகி, ஆயுள் சொத்துரிமை பெற்றவராகிவிடுவார். 'வேறு எவருக்காவது' என்பது இல்லாமற் போய்விடும். இக் கருத்தை ஆங்கிலச் சட்ட அடிப்படையில்

உள்ள ஆயுள் சொத்துரிமை (Life Estate) தத்துவத்தோடு இணைத்து, ஆயுள் சொத்துரிமையைக் கொடை அளிப்பது என்பது, கொடையும் நிபந்தனையும் ஆகும் என்ற கருத்தினைக் கொண்டு, பின்னர் அதில் சில திருத்தங்களும் மாற்றங்களும் செய்யப்பட்டன.

கொடையாக முதலில் ஒருவருக்கு ஆயுள் சொத்துரிமையைக் கொடுத்து, அவருக்குப் பின்னர் எஞ்சுரிமையாக (vested remainder) முழுச் சொத்துரிமையையும் வேறு ஒருவருக்குக் கொடுத்துவிட்டால், ஆயுள் சொத்துரிமை பெற்றவரே தமது ஆயுட்காலம் முழுவதும் மூலச் சொத்துரிமையையும் ஆண்டு அனுபவிக்கும் உரிமையையும் பெற்றவராகி விடுவார். அவர் இறந்தபின்னர், மூலச் சொத்துரிமையும் அதன் அனுபவ உரிமையும் சேர்ந்து முழுச் சொத்துரிமையும் எஞ்சுரிமை பெற்றவருக்கோ, அவருடைய வாரிசுகளுக்கோ போய்ச் சேரும். இதுவே ஆங்கிலச் சட்ட அடிப்படையில் வளர்ந்த ஆயுள் சொத்துரிமைத் தத்துவமும் முழுச் சொத்துரிமைத் தத்துவமுமாகும். இதுபோன்ற ஆங்கிலச் சட்ட அடிப்படையில் உருவாக்கப்பட்ட இசுலாமியர்களின் கொடை ஆவணங்களை மிகவும் எச்சரிக்கையோடு பொருள் காணவேண்டும். ஏனெனில், அத்தகு ஆங்கில அடிப்படைத் தத்துவ ஆயுள் சொத்துரிமையும், முழுச் சொத்துரிமையும் இசுலாமிய சட்டத் தத்துவங்களுக்கு ஒத்துவராதனவாகும்.

Amjad Ali Khan *vs* Ashraf Khan

(31. Bom. L. R. 809)

ஹனபி முசுலிம் ஒருவர் முழுச் சொத்தையும் தம்முடைய மனைவிக்குக் கொடையாகக் கொடுத்து, அதை $\frac{1}{3}$ என்றும் $\frac{2}{3}$ என்றும் இரு கூறுகளாகப் பிரித்து, அவற்றுடன் ஒரு நிபந்தனையையும் விதித்தார். அதன்படி, $\frac{1}{3}$ பாகத்தைப் பொறுத்தமட்டில் அவள் விரும்பியபடி பராதீனம் செய்யும் உரிமை வழங்கப்பட்டிருந்தது. ஆனால் $\frac{2}{3}$ பாகத்தைப் பொறுத்தமட்டில், அவள் அதைப் பராதீனம் செய்யக்கூடாது என்று நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. அவளுடைய வாழ்நாளுக்குப் பிறகு, எஞ்சியிருக்கும் சொத்து, கொடை அளித்தவரின் சகோதரருக்கு எஞ்சுரிமையாக முழுச் சொத்துரிமையுடன் போய்ச் சேரவேண்டும் என்று ஆவணத்தில் கூறப்பட்டிருந்தது.

மேற்கூறிய ஆவணத்தின் சொற்றொடரிலிருந்து இருவிதமாகப் பொருள்கொள்ள முடியும். கொடையளித்த முழுச் சொத்திலும் ஆயுள் சொத்துரிமை கொடுத்து, $\frac{1}{3}$ பாகத்தைப் பொறுத்தமட்டில், அதைப் பராதீனம் செய்யும் உரிமையைக் கூடுதலாக வழங்கி இருக்கிறார் என்பது ஒரு பொருள். இன்னொருவகையில் பார்த்தால், கொடை

அளிக்கப்பட்ட முழுச் சொத்திலும் அவர் மனைவிக்கு முழுச் சொத்துரிமை கொடுத்து, அதில் ⅔ பாகத்தைப் பொறுத்தமட்டில் பராதீனம் செய்யும் உரிமையைப் பறித்துவிட்டார் என்று பொருள் கொள்ளலாம்.

இரண்டாவது கருத்துப்படி பார்க்கும்பொழுது, கொடை அளித்தவர் முழுச் சொத்துரிமையையும் கொடுத்துக் கொடை பூர்த்தி பெரு வண்ணம் நிபந்தனை விதித்திருப்பதால், அதை நிபந்தனை விதிக்கப் படாத கொடையாகக் கருதி மனைவி முழுச் சொத்தையும் எடுத்துக் கொள்ள வேண்டும். எஞ்சுரிமை பெற்ற சகோதரருக்கு எதுவும் கிடைக்காது.

ஆனால், முதல் கருத்துப்படி பார்த்தால், கணவன் மனைவிக்குக் கொடுத்த முழுச் சொத்தில் ஆயுள் சொத்துரிமையையும், அதில் ⅓ பாகத்தைப் பொறுத்தமட்டில், கூடுதலாகப் பராதீனம் செய்யும் உரிமையையும் வழங்கி யிருப்பதாகக் கொள்ள வேண்டும். இப்படிப் பொருள் கொள்வதையே பிரிவி கவுன்சில் ஏற்றுக்கொண்டது. எனவே, நிபந்தனை ஆயுள் சொத்துரிமை சம்பந்தப்பட்டதே தவிர, முழுச் சொத்துரிமை சம்பந்தப்பட்டதாகாது. ஆயுள் சொத்துரிமையைக் (Life Estate) கொடையாகக் கொடுத்து, அதில் நிபந்தனை விதித்திருந்தால், நிபந்தனையும் செல்லும், கொடையும் செல்லும். மாறாக, முழுச் சொத்துரிமையை வழங்கி, அதனுடன் முரணான நிபந்தனை விதித்திருந்தால், நிபந்தனை செல்லாது, கொடை செல்லும் என்றும் பிரிவி கவுன்சில் தீர்ப்பு வழங்கியது.

ஆகவே, ஆங்கிலச் சட்ட அடிப்படையிலுள்ள ஆயுள் சொத்துரிமையை ஒருவருக்குக் கொடையாகக் கொடுத்து, அவருக்குப் பின்னர் முழுச் சொத்துரிமையையும் வேறு ஒருவருக்குக் கொடுத்தால், அது செல்லுடைமையாகும் என்றாயிற்று.

Nawaziah Alikhan *vs* Ali Razakhan

(50 Bom LR 507 PC)

வழக்காடியவர்கள் 'ஷீயா' பிரிவினராவார்கள். இது 'ஷீயா'க் கோட்பாட்டினரிடையே நடந்த வழக்கானாலும், 'சுன்னீ' பிரிவினருக்கும் இந்த வழக்கின் தீர்ப்புப் பொருந்தும்.

A, B, C என்னும் மூன்று சகோதரர்கள் இருந்தார்கள். Aயும், Cயும் இறந்துவிட்டதால், B முழுச் சொத்தையும் உயில் எழுதி வைத்தார். மூவருக்கும் முறையே, ஹிதாயத் அலீகான், முஹம்மது அலீகான், ஃபதே அலீகான் என்று ஒவ்வொரு மைந்தர் இருந்தனர். உயிலில் மூன்று கான்களுக்கும் ஆயுள் சொத்துரிமை (Life Estate) வழங்கப்பட்

டிருந்தது. எஞ்சி நிற்போர் தம்முடைய வாரிசை நியமனம் செய்யும் உரிமையும் உயிலில் வழங்கப்பட்டிருந்தது. 'உயில்' கூற்றுப்படி, ஃபதே அலீகான் தமது ஆயுள் முழுவதும் முதலில் சொத்தை அனுபவித்தார். அவர் இறந்த பின்னர், முஹம்மது அலீகானுக்கு ஆயுள் சொத்துரிமை கிடைத்தது. முஹம்மது அலீகான் உயிருடன் இருக்கும் போதே ஹிதாயத் அலீகான் இறந்துபோனுர். அவருக்கு நவாசிஸ் அலீகான் என்ற ஒரு மைந்தனும், முஹம்மது அலீகானுக்கு அலீ ரஜா கான் என்ற ஒரு மைந்தனும் இருந்தனர். முஹம்மது அலீகான் இறந்ததும் ஆயுள் சொத்துரிமையும் முடிவுக்கு வந்துவிடுகிறது.

ஆங்கிலச் சட்ட அடிப்படையில் கண்ணுற்ருல், எஞ்சுரிமை (Vested remainder) இறுதியாக ஹிதாயத் அலீகானுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதால், அவர் இறந்துபோன பின்னரும், அவருடைய வாரிசுகளுக்கே முழுச் சொத்துரிமையும் வந்து சேரும். ஆனுல், இசுலாமிய சட்ட அடிப்படைக்கும் ஆங்கிலச் சட்ட அடிப்படைக்கும் இந்த விஷயத்தில் எந்தச் சம்பந்தமும் தொடர்பும் இல்லாதிருப்பதாலும், இசுலாமிய சட்டத்தில், சொத்து வைத்திருப்பவர் இறந்த பின்னரே அவருடைய வாரிசுகளுக்குச் சொத்துரிமை எழுகிறது என்பதாலும், நவாசிஸ் அலீ கானின் தந்தை சொத்துரிமை பெறும் முன்னரே இறந்துவிட்டதால், நவாசிஸ் அலீகானுக்குத் தந்தையின் சொத்தில் பிரதிநிதியாக நின்று அவருடைய பங்கைக் கோர முடியாது என்பதாலும், முழுச் சொத்துரிமையும் இறுதியில் சொத்துரிமையை வைத்திருந்த முஹம்மது அலீ கானின் மைந்தர் அலீ ரஜாகானுக்கே போய்ச்சேரும் என்றும் பிரிவிகவுன்சில் தீர்ப்பு வழங்கியதுடன், கீழ்வரும் கருத்து விளக்கத்தையும் தந்துள்ளது :

முசுலிம்களில் 'சுன்னீ', 'ஷீயா' பிரிவினரிடையே சொத்தையும் சொத்துரிமையையும் பொறுத்தமட்டில் அடிப்படைத் தத்துவத்தில் வேறுபாடு கிடையாது. இசுலாமிய சட்டம் எதை விரித்துக் கூறி அனுமதித்து அங்கீகரித்து இருக்கிறதோ அதை மூலச் சொத்து (அய்ன்) (Corpus) என்றும், சொத்தின் பயன் (மனுபி) (Usufruct) என்றும் இரண்டாகப் பிரித்துவிட்டிருக்கிறது. மூலச் சொத்தைப் பொறுத்த மட்டில், இசுலாமிய சட்டம் கூறுவதும் அங்கீகரிப்பதும் முழுச் சொத்துரிமையையே—அதாவது, பெறுபவரின் பராதீன உரிமையை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தவோ மட்டுப்படுத்தவோ செய்யாத முழுச் சொத்துரிமையையேயாகும். எனவே, மூலப்பொருளேயே ஒருவன் கொடையாகக் கொடுக்கும்பொழுது, பெறுபவரின் பராதீன உரிமையைக் கட்டுப்படுத்தும் எந்த உரிமையும் நிலைபெற முடியாது. அப்படிப்பட்ட நிபந்தனை எதுவும் விதிக்கப்பட்டிருந்தால், நிபந்தனை மறுக்கப்பட்டு, கொடை பெறுபவருக்கு முழுச் சொத்துரிமையும் வழங்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும். ஆனுல், மூலப் பொருளன்றி, வெறும் பயன்

(Usufruct) மட்டுமே கொடுக்கப்பட்டிருந்தால், மற்றும் அதனுடன் நிபந்தனையும் இணைந்திருப்பின், நிபந்தனை நிறைவேறிய பின்னர், நிகழும் முழுச் சொத்துரிமையும் செல்லத்தக்கதாகும் என்று கூறப் பட்டது. அதாவது, நிபந்தனையும் கொடையும் செல்லும் என்றுகின்றன. நீதிமன்றங்கள் கொடை ஒப்பாவணங்களை ஆராயும்பொழுது, முதற் கடமையாக, கொடை மூலப்பொருள் சம்பந்தப்பட்டதா, அல்லது அதன் பயன் சம்பந்தப்பட்டதா என்று முதலில் முடிவு எடுத்துக் கொண்டு மேல் தொடரவேண்டும். கொடையாக மூலப்பொருளையே கொடுத்திருந்தால், பெறுபவரின் பராதீன உரிமைகளைக் கட்டுப் படுத்தும் எந்த நிபந்தனையும் ஒவ்வாதது என்று ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும். ஆனால், ஊன்றிப் பார்க்கும்பொழுது, சொத்தின் பயனை மட்டிலும் கொடைப் பொருளாகக் கொடுத்திருந்தால், ஆயுள் சொத் துரிமை போன்ற காலக் கட்டுப்பாடுகள், நிபந்தனைகள் செல்லத்தக்கன வாகி, நிபந்தனைகள் நிறைவேறிய பின்னர், முழுச் சொத்துரிமையும் முழுச் சொத்துரிமை அளிக்கப்பட்டவர்களுக்குப் போய்ச் சேரும். பயனை அனுபவிப்பதன் காலம், முழுச் சொத்துரிமை எழும் காலம்வரை நீட்டப்பட்டிருப்பதாகக் கொள்ள வேண்டும். ஆயுள் சொத்துரிமை (Life Estate) எஞ்சுரிமை (Vested remainder) ஆகியவை இசுலா மிய சட்டத்தில் இல்லாதவை. ஆயினும், சொத்தில் பயனுரிமையை ஆயுள் சொத்துரிமையாகக் கொள்ள முடியும்.

சொத்தில் பாகம் பிரிக்கப்படாத பங்கு (Undivided share) அல்லது 'முஷாஅ' (Mushaa)

சொத்தில் பாகம் பிரிக்கப்படாத பங்கு 'முஷாஅ' (Mushaa) என்று சொல்லப்படுகிறது. பாகம் பிரியாத பங்கு அல்லது 'முஷாஅ' (Undivided share) அசைவியல் சொத்திலும், நிலையியல் சொத்திலும் இருக்கலாம். பாகம் பிரிக்க இயலக்கூடிய பொருளில், பாகம் பிரியாத தன்னுடைய பங்கை ஒரு முசுலிம் கொடை அளித்தால், அது செல் லுடைமையாகாது. காரணம் என்னவெனில், பிரிக்கப்படாது கொடுக் கும் பங்கு எது என்பதில் சச்சரவும், பிணக்கும், குழப்பமும், தெளி வின்மையும் ஏற்பட இடமிருப்பதே ஆகும். எடுத்துக்காட்டாக, ஓர் ஏக்கர் நிலத்தில் ⅓ பாகம் Aஐச் சேரவேண்டும். அவர் அந்தப் பங்கைப் பிரித்து எடுக்காது, Bக்கு அதைக் கொடை அளிக்கிறுர். அவர் இறந்து போனால், ஓர் ஏக்கரில் உள்ள எந்தப் பங்கை அல்லது பகுதியை அவர் கொடை அளித்தார்? என்பது எவருக்குமே தெரியாமல் போகிறது. அது மட்டுமன்று; கொடைபெற்றவருக்கும், இறந்தவரின் சொத்துரிமை பெற்றவர்களுக்கும் இடையே பிணக்கு ஏற்படவும் காரணமாக இருக் கிறது. கொடுத்தவருக்கு ஓர் ஏக்கரில் மூன்றில் ஒரு பங்கு என்பது வடக்கில் விழுகிறதா, தெற்கில் விழுகிறதா, அல்லது நடுவில் வருமா

என்பனபோன்ற ஐயப்பாடுகளும் கிளம்பிவிடுகின்றன. எனவேதான், பிரிவுபடக்கூடிய சொத்தா யிருந்தால், முதலில் அதைப் பிரித்து, கொடை பெற்றவருக்கு உடைமை ஒப்படைப்புச் செய்துவிடு என்கிறது சட்டம். மேலும், கொடை முற்றுப் பெறவேண்டுமானால் உடைமை ஒப்படைப்பு உடனடியாக நிகழவேண்டுமல்லவா? பாகம் பிரிக்கப்படாத பங்கைக் கொடையாக அளித்து, அதனை உடைமை ஒப்படைப்புச் செய்வது என்பது ஒத்துவராதாகையாலும், கொடை பெற்றவருக்குத் தாம் பெற்ற கொடைப்பொருள் எது என்று தெரியாமற்போவதாலும், மேலும் மேலும் குழப்பம் விளையக் காரணமாயிருக்கிறது. இந்தக் காரணங்களைக் கருத்திற் கொண்டே, பாகம் பிரிக்கப்படாத பங்கை ஒருவன் கொடையாக அளிப்பதைச் சட்டம் அனுமதிக்கவில்லை.

ஆயினும், இன்றைய முற்போக்கில் வளர்ந்துகொண்டிருக்கும் புதிய சமுதாயத்தில், 'பாகம் பிரியாத பங்கைக் கொடை அளிக்காதே' என்று உபதேசிக்கும் தத்துவம் எல்லா விஷயங்களிலும் மெத்தவும் பொறுத்த முடையது என்று ஏற்றுக்கொள்வதற்கில்லை. எனவே, இந்தத் தத்துவம் ஓரளவு தளர்த்தப்பட்டு, சொத்துப் பிரிவுபடக்கூடியதாக மட்டிலும் இருந்தால் போதாது; அதைப் பிரிப்பதன் மூலம் சேதமோ நஷ்டமோ ஏற்படாது, குழப்பம் ஒன்றும் விளையாது என்று இருந்தால், அங்கே 'முஷாஅ' தத்துவத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

(1) A என்பவர் தமது சொத்தில் $\frac{1}{3}$ பாகத்தை B என்பவருக்குக் கொடையாகக் கொடுத்தால், Aயின் $\frac{2}{3}$ பாகமும், Bயின் $\frac{1}{3}$ பாகமும் பாகப் பிரிவினையாகாதவரையில் எவை என்று தெரியாது குழப்பமே விளையும். எனவே, 'முஷாஅ' தத்துவத்தின் அடிப்படையில் பாகப் பிரிவினையாகாத வரையில் கொடை செல்லுடைமையாகாது.

(2) A என்பவர் தமது சொத்தில் பாதியை B-க்கும், மறுபாதியை C-க்கும் கொடுக்கிறார் என்றால், A இழக்கும் முழுச் சொத்தும் தெளிவாக இருப்பதாலும், B-க்கும் C-க்கும் இடையே எந்தப்பகுதி என்ற குழப்பம் இருந்தபோதிலும் A தமது முழுச் சொத்தையும் B, C இருவருக்கும் உடைமை ஒப்படைப்புச் செய்திருப்பதாலும், 'முஷாஅ' தத்துவத்தால் இக் கொடை பாதிக்கப்படாது.

(3) A-யும் B-யும் சேர்ந்து C-க்கு ஒரு சொத்தைக் கொடையாகக் கொடுக்கிறார்கள் என்றால், அதில் கொடை கொடுக்கப்பட்ட பின்னர்க் குழப்பமில்லையாதலால், இதுவும் 'முஷாஅ' தத்துவத்தால் பாதிக்கப் படாது.

பாகப்பிரிவினையாகாத பங்கைக் கொடையாகக் கொடுத்தால், அதை ஆதி முதற்கொண்டே இல்லாக் கொடை என்று கூறமுடியாது.

மாருக, அதைச் செல்லாக் கொடை என்று கூறலாம். ஆயினும், கொடைபெற்ற பின்னர்ப் பிரித்துக்கொண்டுவிட்டால், அது செல்லத்தக்க தாகும்.

ஒரு சொத்தை இரண்டுக்கு மேற்பட்டவர்களுக்குக் கொடை அளிக்கும் பொழுது, சொத்துப் பிரிக்கப்படக்கூடியதேயாயினும், அவரவர் பங்கைப் பிரித்துக் கொடுக்காமல் எல்லோருக்கும் சேர்த்து முழுமையாகக் கொடுத்தாலும், கொடை கொடுத்தவர் முழுமையாக உடைமை ஒப்படைப்புச் செய்திருந்தால், பாகம் பிரிக்கப்படாத பங்குகளாயிருப்பினும், அது செல்லுடைமையாகும். முன்னர் இதில் மாறுபட்ட கருத்து நிலவியபோதிலும், கொடை பெற்றவர்கள் அவரவர் பங்கைப் பிரித்து எடுத்துக்கொண்டால், அது செல்லுடைமையாகும் என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது.

கீழே குறிப்பிடப்பட்டவைகளுக்கு 'முஷாஅ' தத்துவத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதால், பாகம் பிரிக்கப்படாத நிலையில் அவை கொடையளிக்கப் பட்டிருப்பினும், அக் கொடை செல்லுடைமை யாகும். அவையாவன :

(அ) பிரிக்கமுடியாத சொத்தில் பாகம் பிரியாத பங்காயிருப்பினும் அது முஷாஅ தத்துவத்திலிருந்து விலக்குப் பெறுகிறது. (எ - டு) கொடைச் சொத்தையும் அண்டைச் சொத்தையும் பிரிக்கும் ஒரே மாடிப் படி.

(ஆ) வாரிசுகளிடையே, ஒருவர் மற்றொருவருக்குப் பாகம் பிரியாத பங்கைக் கொடை அளித்தால் 'முஷாஅ' தத்துவம் பொருந்தாது. (எ - டு) பெண் ஒருத்தி, தன்னுடைய தாய் மகன் மகள் ஆகிய மூவரை வாரிசுகளாய் விட்டுச் சென்ருல், அவள் தனக்குச் சேரவேண்டிய பங்கைப் பேரனுக்கோ, பேர்த்திக்கோ அல்லது இருவருக்கும் சேர்த்தோ கொடையாகக் கொடுக்கலாம்.

(இ) கம்பெனியில் உள்ள பங்குகளையோ, பெரிய நகரங்களிலுள்ள மாடிக் கட்டிடங்களில் இருந்துவரும் வருமானத்தின் பங்கையோ பாகப் பிரிவினையுருத பங்குகளாகக் கொடை அளித்தால், அது செல்லுடைமை யாகும்.

(ஈ) பெரிய 'எஸ்டேட்', அல்லது ஜமீன்தாரி, தாலுகா ஆகிய வற்றின் பாகம் பிரிவுருத பங்கைக் கொடையாகக் கொடுத்தால், அது 'முஷாஅ' தத்துவத்தால் பாதிக்கப்படாது. காரணம், இதில் கொடை என்பது அந்த நிலங்களின் வருமானத்தினின்றுள்ள உரிமையில் பங்கு பெறுவதைத் தவிர, வேறன்று.

கொடை அழிவு (Revocation of gift)

கொடை கொடுத்தவருக்கு அதை ரத்துசெய்யும் உரிமை இசுலாமிய சட்டப்படி உண்டு. இதுவும் இயல்பானது. உடைமை ஒப்படைப்பு நிகழாத கொடையாயின், அது முற்றுப்பெறாத கொடையே ஆதலால், கொடுத்தவருக்கு அதை அழிக்கும் (Revocation) உரிமை உண்டு. உடைமை ஒப்படைப்பு நிகழ்வுற்ற கொடையாயிருப்பினும், சில விதி முறைகளுக்கு உட்பட்டு அதை அழித்துவிட அவருக்கு உரிமையுண்டு. ஆயினும், சில முற்றுப்பெற்ற கொடைகளை அழித்துவிடும் உரிமை கொடுத்தவருக்கே கிடையாது. அவையாவன :

(1) கொடை அளித்தவர் இறந்துபோனால், அதை அழிக்கும் உரிமை அவருடைய வாரிசுகளுக்குக் கிடையாது. கொடுத்தவருக்கே அழிக்கும் உரிமையுண்டு ஆதலால், அவர் இறந்தபின்னர் அதை மற்றவரால் அழிக்க முடியாது.

(2) கொடை பெற்றவர் இறந்துபோனாலும் கொடையை அழிக்க முடியாது. பெற்றவர் இறந்ததும், கொடைப் பொருள் அவருடைய வாரிசுகளுக்கு உரிமையாகிவிடுவதால், கொடை அழிக்க முடியாததாகி விடுகிறது.

(3) கொடை பெற்றவருக்கும் கொடுத்தவருக்கும் இடையே திருமண உறவுகொள்ளத் தடையான இரத்தத் தொடர்பு இருந்தால், கொடையை அழிக்க முடியாது.

(4) கணவன் மனைவியரிடையே நிகழ்வுற்ற கொடையை, அது முற்றுப்பெற்ற பின்னர் அழிக்க முடியாது.

(5) கொடை பெற்றவர், கொடை பெற்ற பொருளைப் பராதீனம் செய்தபிறகு கொடையை அழிக்க முடியாது.

(6) கொடுக்கப்பட்ட கொடைப் பொருள் தொலைந்து போகவோ, அல்லது அழிந்துபடவோ, அல்லது அடையாளம் கண்டு கொள்ள முடியாத அளவு உருமாற்றம் செய்யப்படவோ நேர்ந்திருந்தால், கொடுத்தவர் அழிக்கும் உரிமையை இழந்தவராவார். (எ - டு) ஒருவர் 4 லிட்டர் அரிசியைக் கொடுக்க, பெற்றவர் அதை மாவாகத் திரித்து விட்டால், கொடுத்தவர் கொடையை அழிக்கும் உரிமையை இழந்து விடுகிறார்.

(7) எந்தக் காரணத்தை முன்னிட்டும், கொடுக்கப்பட்ட கொடைப் பொருளின் விலைமதிப்பு அதிகரித்திருந்தால், அதை அழிக்க முடியாது.

(8) இசுலாமிய சட்டத்தில் ‘ சதக்கா ’ என்று சொல்லப்படுகின்ற இன்னொருவகைக் கொடையைக் கொடுத்திருந்தால், அதை மறுத்தழிக்க முடியாது.

(9) 'ஹிபாபில்–இவாசு' என்று இசுலாமிய சட்டத்தில் சொல்லப் பட்டிருக்கிற கொடையை ஒருவர் கொடுத்தால், அவரால் அதை மறுத்தழிக்க முடியாது.

மேற்கூறிய ஒன்பது காரணங்களின் அடிப்படையிலும் முற்றுப் பெற்ற கொடையை அழிக்க முடியாது. இந்த ஒன்பது காரணங் களுக்கும் உட்படாத முற்றுப்பெற்ற கொடையைக் கொடுத்தவர் மறுத்தழிக்க முடியும். அப்படி மறுத்தழித்தால், நீதிமன்ற ஆணை பெற்று, மறுத்தழித்தலை உறுதி செய்துகொள்ள வேண்டும். நீதிமன்றம் மேற்கூறிய ஒன்பது காரணங்களின் அடிப்படையிலும் மறுத்தழித்தலுக் கான தீர்ப்பாணை பிறப்பிக்காது.

'ஷீயா' சட்டம்

1. திருமண உறவுக்குத் தடை உடையவராயினும், தடை இல்லாதவ ராயினும், இரத்தத் தொடர்புடையவருக்குக் (Prohibited degrees of consanguinity) கொடுத்த கொடையை மறுத்தழிப்புச் செய்ய முடியாது.

2. திருந்திய கருத்திற்கிணங்க, கணவன்-மனைவியரிடையே நிகழும் கொடையை அழிக்கமுடியும்.

3. நீதிமன்றம் சென்று உறுதி செய்யாமலே, கொடுத்தவர் கொடையை அழித்துவிடும் உரிமையைப் பெற்றிருக்கிறார்.

பல்வேறுபட்ட 'கொடைகள்'

இசுலாமிய சட்டம், மேற்கூறப்பட்ட 'ஹிபா' என்னும் இலக்கண வரம்பிற்குட்படாத வேறு சிலவகைக் கொடைகளையும் கொடை என்று அங்கீகரித்துள்ளது. அவையாவன :

(1) 'சதக்கா' அல்லது ஈகை.

(2) 'ஹிபாபில் இவாசு' அல்லது பயன்பெறு கொடை.

(3) 'ஹிபாபெ-ஷர்த்துல் இவாசு' அல்லது பயன்வேண்டிக் கொடை.

(4) 'அரீஅத்' அல்லது 'கொடை உரிமம்'.

சதக்கா அல்லது ஈகை (Sadakha) : அன்பின் அடிப்படையில் கைம்மாறு கருதாது ஒருவன் பிறிதொருவனுக்குக் கொடை அளிப்பது 'ஹிபா' என்று கண்டோம். தனக்கு ஆண்டவன் அருள் கிடைக்கும் என்று எதிர்நோக்கி, ஏழை எளியவர்பால் இரக்கம்கொண்டு, ஒருவன் தன் பொருளை அவர்களுக்கு ஈவது 'சதக்கா' எனப்படும். எனவே, 'சதக்கா'வும் கொடைவகைகளுள் ஒன்று என்று கருதப்படுகிறது.

'ஹிபா' என்னும் கொடையை அளிக்கும்போது, கொடுப்பவருக்கு எந்த நோக்கமும் கிடையாது. ஆனால் 'சதக்கா' என்னும் கொடையை அளிப்பவர், பெறுபவரிடத்திலிருந்து எதையும் எதிர்பார்க்கவில்லை என்றாலும், அவருடைய நோக்கம் ஆண்டவனது அருளைப் பெறுவதாகும். எனவே, 'சதக்கா' கொடுப்பவருக்கு அந்தரங்கத்தில் ஒரு நோக்கம் இருக்கிறது. 'சதக்கா' என்னும் கொடையைக் கொடுப்பதிலும் (1) உடைமை ஒப்படைப்பு உடன் நிகழ வேண்டும். (2) மறுபயன் எதிர்பாராது கொடுக்கப்படவேண்டும். இவை இரண்டும் 'ஹிபா'வின் இலக்கணங்களை ஒத்து இருக்கின்றன. ஆனால், ஹிபாவின் இலக்கணத்திற்கு எதிராக:

(1) 'சதக்கா' ஒரு நோக்கம் கருதிக் கொடுக்கப்படுகிறது.

(2) 'சதக்கா' என்னும் கொடை முற்றுப் பெற்றுவிட்டால், அதை எக்காரணத்தைக் கொண்டும் அழிக்க முடியாது.

ஹிபாபில் இவாசு (Hiba-bil-iwaz) அல்லது பயன் பெறு கொடை: கொடை பெற்றவர் தாம் பெற்ற கொடைக்குப் பதிலாகக் கொடை கொடுத்தவருக்குக் கொடை கொடுத்தால், அதை 'ஹிபாபில் இவாசு' என்னும் கொடைக்குக் கொடை, அல்லது பயன் பெறு கொடை என்று சொல்லலாம். இசுலாமிய சட்டப்படி இதுவும் ஒரு வகைக் கொடையே. இதில், ஒரே கொடையில் இரு கொடைகள் உள்ளடங்கி இருக்கின்றன. கொடை கொடுத்தவரும் ஏற்றவரும், மாறி மாறிக் கொடை ஏற்றவரும் கொடுத்தவருமாகச் செயல்படுவர். 'ஹிபா'வின் அடிப்படைத் தத்துவமான உடைமை ஒப்படைப்பு இரு கொடைகளிலும் முறையே நிகழ வேண்டும். இல்லையென்றால், அவை செல்லுடைமை ஆகா. ஹிபாவிற்கும் ஹிபாபில் இவாசுக்கும் உள்ள ஒரே வேற்றுமை என்னவென்றால், பதில் கொடை நிகழ்வுற்றபின், இரண்டு கொடைகளையும் மறுத்தழிக்க இருவராலும் முடியாது.

கொடை கொடுப்பவர் எந்த நிபந்தனையும் இன்றி ஒரு புத்தகத்தைக் கொடுக்க, எந்த வாக்குறுதியும் இன்றி இதை ஏற்றுக்கொண்டவர் உடனேயோ, காலம் தாழ்த்தியோ, ஓர் எழுதுகோலைக் கொடை தந்தவரிடம் கொடுத்து, இது என்னுடைய பதில் கொடை (இவாசு) என்று சொல்ல, இதை அவர் ஏற்றுக்கொண்டால், ஹிபாபில் இவாசு என்னும் கொடை முற்றுப் பெறுகிறது. பதில் கொடையாகத் தக்க மதிப்புடைய பொருளையே கொடுக்கவேண்டும் என்ற நியதி இல்லை. குறைவான மதிப்புள்ள பொருளையோ, கூடுதலான விலை மதிப்புள்ள பொருளையோ பதில் கொடையாகக் கொடுக்கலாம். அசைவியல் பொருள்களைப்போல் நிலையியல் பொருள்களையும் கொடையாகக் கொடுக்கலாம்; அல்லது பணத்தையும் கொடுக்கலாம். 'ஹிபா'விற்குரிய முக்கிய இலக்கணங்

களான உடைமை ஒப்படைப்பு, பாகம் பிரித்த பங்கு முதலியன சரிவரக் கடைப்பிடிக்கப்பட்டு, பதில் கொடையும் வழங்கப் பெற்று, ‘ ஹிபாபில் இவாசு ’ முற்றுப்பெற்ற பின்னர், இருவரில் ஒருவர், இது வெறும் சொத்துப் பரிமாற்றம் என்றோ, சொத்து விற்பனை என்றோ சர்ச்சையைக் கிளப்பி, அதற்குப் பதிவு ஆவணம் தேவை என்றும், அது இல்லாததால் பதில் கொடையும் செல்லாது என்றும் இசுலாமிய சட்டப்படி கூற முடியாது.

இந்தியாவில் ‘ ஹிபாபில் இவாசு ’ : தூய இசுலாமிய சட்ட அடிப்படையிலுள்ள ‘ ஹிபாபில் இவாசு ’ இந்தியாவில் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. இந்தியாவில் ஹிபாபில் இவாசு என்பது, இரு கொடையன்று ; ஆனால், ஒரே கொடையில் உள்ள தொடர்செயல் என்று கருதப் படுகின்றது. அதாவது, முதற் கொடையும் பதில் கொடையும் ஒரே நிகழ்ச்சியின் அங்கங்களென்றே கருதப்படுகின்றன. எனவே, இதைச் சொத்துப் பரிமாற்றம் (Exchange) என்றோ, சொத்து விற்பனை என்றோ தான் கருத வேண்டும். கொடை என்றழைப்பது பிறழ் பெயராகும் என்று கருதப்படுகிறது.

மேற்கூறியபடி அதை ஒரே நிகழ்ச்சியாகக் கருதினால், இசுலாமிய சட்டப்படி கொடையை முற்றுப்பெறச் செய்யும் ‘உடைமை ஒப்படைப்பு’ தேவையற்றதாகிவிடுகிறது. மாறாகச் சொத்துப் பரிமாற்றத்திற்கும், சொத்து விற்பனைக்கும் தேவையான பதிவு செய்தல் (Registration) முதலிய இலக்கணக்கூறுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

Kulsum Bibi *vs* Bashir Ahmed

(ILR 1939 All 285)

ஒரு முசுலிம் தன்னுடைய முழுச் சொத்தையும் வாய்மொழிமூலம் கொடை கொடுக்க, அதை ஏற்றுக்கொண்ட மனைவி பதில் கொடையாகக் கணவனிடமிருந்து தனக்குச் சேர வேண்டிய மஹர்க் கடனை ரூ. 21,000த்தையும் விடுவித்துக் (Discharge) கொடுத்தாள். இது கொடையும் பதில் கொடையும் ஆகும். கணவன் கொடுத்த கொடைக்குப் பதில் கொடையாக மனைவி தனக்குச் சேரவேண்டிய மஹர்க் கடனை விட்டுக் கொடுத்தாள். எனவே, இசுலாமிய சட்டப்படி, இச் செயல் ஹிபாபில் இவாசு என்னும் கொடை இலக்கணத்திற்கு உட்பட்டிருப்பதால், கணவன் நிலையியல் சொத்தை வாய்மொழிக் கொடையாகக் கொடுத்தது செல்லுடைமை யாகும் என்று அலாஹாபாது உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது.

ஆனால், இதற்கு நேர் எதிரிடையாக, கணவன் தான் கொடுத்த சொத்துக்கு மறு பயனாக (Consideration) மனைவியிடத்திலிருந்து

அவளுக்குச் சேரவேண்டிய பணத்தைப் பெற்றிருப்பதால், இது சொத்து விற்பனையேதவிர கொடைக்குக் கொடை அன்று என்று கல்கத்தா, லாஹூர் உயர்நீதி மன்றங்கள் தீர்ப்புக் கூறியுள்ளன. இதில் சொத்து விற்பனைக்கு (sale) உள்ள எல்லா இலக்கணக்கூறுகளும் காணப்படுவதாலும், பதிவு செய்யப்படாததாலும் (Registration) இக் கொடை செல்லுடைமை ஆகாது என்று அவை கூறின.

இசுலாமிய சட்ட அடிப்படையில் பார்க்கும்பொழுது, அலாஹாபாது உயர்நீதி மன்றத்தின் முடிவே சிறப்பானதாகத் தெரிகிறது.

'ஹிபாபெ-ஷர்த்துல்-இவாசு' அல்லது பயனை விரும்பும் கொடை (Hıba-ba-Shart-ul-iwaz)

கொடை கொடுப்பவர் எதிர் கொடை வேண்டி நின்றால், அதை ஹிபாபெ-ஷர்த்துல்-இவாசு அல்லது பயனை விரும்பும் கொடை என்று சொல்லலாம். இதிலும் உடைமை ஒப்படைப்பு உடனடி நிகழ வேண்டும். கொடை கொடுத்தவர் தாம் விரும்பி வேண்டி நிற்கும் எதிர்கொடை வழங்கப்பெற்று முற்றுப் பெறுவதுவரையில், இதைக் கொடுத்தவர் மறுத்தழிக்க முடியும். விரும்பி எதிர்பார்க்கப்பட்ட எதிர்க் கொடை கொடுக்கப்பட்ட பின்னர், இரண்டு கொடைகளையும் மறுத்தழிக்க முடியாது.

ஹிபாபெ-ஷர்த்துல்-இவாசுக்கும் இந்தியாவில் உள்ள ஹிபாபில் இவாசுக்கும் உள்ள வேற்றுமை என்னவென்றால், உடைமை ஒப்படைப்புக் கொடுத்தாலன்றி, முன்னது முற்றுப்பெறாது ; ஆனால், பின்னதில் உடைமை ஒப்படைப்புத் தேவை இல்லை.

தூய இசுலாமிய சட்டப்படி உள்ள ஹிபாபில் இவாசுக்கும், ஹிபாபெ-ஷர்த்துல்-இவாசுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், முன்னதில் கொடை பெற்றவர் தாமாகவே விரும்பி எதிர்க் கொடை கொடுக்கிறார். பின்னதில், முதற் கொடை கொடுப்பவரே எதிர்க் கொடையை எதிர்நோக்கி நிபந்தனை விதித்துவிடுகிறார். முன்னது முதலிலும் முடிவிலும் கொடையாகவே இருக்கிறது. ஆனால் பின்னது பதில் கொடை கொடுக்கப் படுவதுவரையில் கொடையாகவும், பதில் கொடை கொடுக்கப் பெற்றுப் பூர்த்தியானதும் விற்பனையாகவும் கருதப் படுகிறது. ஹிபாபெ-ஷர்த்துல்-இவாசு பெரும்பாலும் இந்தியாவில் வழக்கில் இல்லை என்று கூறலாம்.

அரீஅத் அல்லது கொடை உரிமம் (Areeat)

சொத்தின் மூலப் பொருளைக் கொடையாகக் கொடுக்காமல், அதன் பயனைமட்டிலும் கொடையாகக் கொடுப்பதை 'அரீஅத்' அல்லது

கொடை உரிமம் என்று அழைக்கலாம். கொடை அளிப்பவர் மூலப் பொருளின் பயனைமட்டிலும் கொடை அளிப்பதால், பயன்படுத்தும் காலவரையறையைக் குறிப்பிடவோ, நீட்டிக்கொடுக்கவோ அவர் உரிமை உடையவராயிருக்கிறார். மூலப்பொருளின் சொத்துரிமை கொடுத்தவரிடமே இருக்க, அதனுடைய பயன் உரிமைமட்டிலும், குறிப்பிடப் பட்ட காலத்திற்கு, பெற்றவரிடம் இருக்கும். கொடை பெற்றவர் இறந்த பின்னர் அவருடைய வாரிசுகளுக்கு அதைக் கோரும் உரிமை கிடையாது. குறிப்பிடப்பட்ட காலத்திற்குப் பயனை அனுபவிக்க 'உரிமம்' வழங்கப் பெற்றிருப்பதே 'அரீஅத்' (Licence) என்னும் கொடையாகும். இதுவும் இசுலாமிய சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொடை வகைகளில் ஒன்றாகும்.

இசுலாமிய சட்டப்படி கொடை என்பது என்ன என்று தெரிந்த தமிழறிந்தோருக்குச் சட்டென எழும் கேள்வி, 'செத்தும் கொடை கொடுத்த சீதக்காதியின் கொடை' இசுலாமிய சட்டப்படி கொடை தானா? என்பதாகும். மேற்போக்காக நோக்கின், சீதக்காதியின் கொடை மேற்கூறப்பட்ட இசுலாமிய கொடை இலக்கணத்திற்கு உட் படாது காணப்பட்டாலும், தமிழினிமையாலும், வள்ளல் சீதக்காதியின் கொடைச் சிறப்பாலும், அச் சொற்றொடரைச் சரியே என்று கொள்ளலாம்.

ஒருவர் செத்தபின் கொடுப்பது கொடை அன்று என்று தெளிவு படுத்துகின்றது இங்குள்ள சொற்றொடர். 'செத்தும்' என்பதில் உள்ள 'உம்மை' சிறப்பு 'உம்மை' ஆதலால், வள்ளல் உயிரோடு இருக்கும்பொழுது கொடுத்த கொடைகளைச் சிறப்பித்தற்பொருட்டும், செத்த பின் கொடை அளிப்பது இலக்கணப்படி ஆகாது என்பதைக் குறிப்பிடவும், 'செத்தும்' என்ற உயர்வு சிறப்பு உம்மை உபயோகப் படுத்தப்பட்டுள்ளது.

அறுதியாவணம் (Settlement Deed)

ஒரு முசுலிம் அறுதியாவணம் எழுதும்பொழுது மூலச் சொத்தின் (corpus) முழுச் சொத்துரிமையையும் அறுதியாவணம் பெறுபவருக்குக் கொடுத்து, அச் சொத்தின் வருமானத்தை அல்லது பயனடை உரிமையை (usufruct) மட்டிலும் தன் வாழ்நாளில் அனுபவித்துக் கொள்ள அதில் வழிவகை செய்திருந்தால், அத்தகு அறுதியாவணம் செல்லுடைமையாகும். ஒரு முசுலிம் எழுதிவைக்கும் அறுதியாவணம் இசுலாமிய சட்டத்தின் கொடை இலக்கணத்திற்கு உட்பட்டிருந்தாலோ, முரண்படாது இருந்தாலோ அது செல்லுடையதாகும்.

Syed Mohamed *vs* Kairum Bibi (1954)
(I M. L. J–673)

முழுச் சொத்துரிமையையும் அறுதியாவணம் பெறுபவருக்குக் கொடுத்து அச் சொத்தின் வருமானத்தை அல்லது பயனடை உரிமையை ஆவணம் எழுதிவைத்தவர் தம் வாழ்நாள் முழுவதும் தாமே பயன் படுத்திக்கொள்ள வழிவகுத்திருந்தார். இசுலாமிய சட்டப்படி இது செல்லுடைமையாகும் என்றும், அறுதியாவணம் எழுதிவைத்தவரின் வாழ்நாளிற்குப் பிறகு பயனடை உரிமையும் கூட ஆவணம் பெற்றவருக்குப் போய்ச் சேரும் என்றும் இவ் வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

9. 'உயில்' (Wills)

'உயில்' என்பது இசுலாமிய சட்டத்தில் 'வசிய்யத்' (Vassiyath) என்று அழைக்கப்படுகிறது. கொடையின் இலக்கணப்படி, கொடைப் பொருளை உடனடியாகப் பெறுபவருக்கு ஒப்படைப்புச் செய்யவேண்டும். ஆனால், உயில் அளிப்பவர் தம்முடைய சொத்தைப் பராதீனம் செய்யும் எண்ணத்தை உயில் மூலம் உடனடி வெளிப்படுத்தினாலும், அவர் இறந்த பின்னரே பராதீனம் நடைபெற வழிவகுக்கப்படுகிறது. உயில் அளித்தவர் இறந்த பின்னரே, சொத்தோ பொருளோ, கைம்மாறுகிறது. உயில்வழிக் கொடை பெறுபவர் (Legatee) சொத்தைப் பெறுவது என்பது, உயில் எழுதி வைத்தவரின் மரணத்தில் தொங்கிக்கொண்டிருக் கிறது. உயில் அளித்தவர் இறந்ததும், உயில்வழிச் சொத்து அதனைப் பெறுபவருக்கு வந்து சேருகிறது; அவர் இறப்பது வரை, உயில்வழிக் கொடை பெற்றவருக்குச் சொத்தில் எந்த உரிமையும் எழுவதில்லை.

ஒரு முறை ஆவணத்தின் (Instrument) மூலம், ஒருவன் தான் இறந்த பிறகு தன்னுடைய சொத்தைப் பராதீனம் செய்யும் முறையை வெளிப்படுத்துவது 'உயில்' ஆகும். அது, இயல்பாக, மாற்றக் கூடியதும், கூட்டிக் குறைக்க வல்லதும், அழிக்கக்கூடியதும் ஆகும். 'ஃபத்வா-ஆலம்கீரி' (Fatwa Alamgiri) என்ற தொகுப்பில், ஒரு பொருளையோ, அல்லது சொத்தையோ, அல்லது அதன் பயனையோ ஒருவன் தன்னுடைய வாழ்நாளுக்குப் பின்னர் வேறு ஒருவனுக்கு உரிமை மாற்றம் செய்து தருவது 'வசிய்யத்' என்று கூறப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்டிருப்பது உயிலின் இலக்கணமாகும். இதை அலசிப் பார்க்கும்பொழுது, இரு கருத்துக்கள் தெளிவாகின்றன.

(1) உயில்வழிக் கொடுப்பவர் தமது கொடுக்கும் எண்ணத்தையும் கருத்தையும் தெள்ளத்தெளிய வெளிப்படுத்தி இருக்கவேண்டும்.

(2) கொடுக்கும் நிகழ்ச்சி, தன்னுடைய வாழ்நாளிற்குப் பிறகு நடைபெறவேண்டும் என்றும் உயில்வழிக் கொடுப்பவர் வெளிப்படுத்தி இருக்கவேண்டும்.

கொடுப்பவர் கொடுத்தது கொடையா? உயில்வழிச் சொத்தா? என்ற ஐயம் எழும்பொழுது, கொடுத்தவரால் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் எண்ணத்தையும் கருத்தையும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். அவருடைய எண்ணம் சொத்துக்களை உடனடி உடைமை ஒப்படைப்புச் செய்வதே என்று கண்டால், அது கொடையாகும். மாருக, உடைமை ஒப்படைப்பு எதிர்காலத்தில் நிகழ்வுறவேண்டிய ஒன்று என்று கண்டால், அஃது உயிலாகும். எனவே, உயிலைப் பொறுத்தமட்டில் உடைமை ஒப்படைப்பு (Delivery of possession) உயில் அளித்தவர் இறந்த பின்னரே நிகழ்வுறும்.

இசுலாமிய சட்டப்படி, உயில் எழுத்து மூலமாகவோ, வாய்மொழியாகவோ இருக்கலாம். குறிப்பிட்டுச் சொல்லத்தக்க சம்பிரதாயம் எதுவும் இன்றி ஒரு முசுலிம் உயில் எழுதிவைக்க முடியும். இந்தியாவில் உள்ள இசுலாமியர்கள் எழுதிவைக்கும் உயில் இந்திய இறங்குரிமைச் சட்டத்தின் விதித்துறைகளுக்கு (Provisions of Indian Succession Act) உட்பட்டிருக்கவேண்டிய அவசியம் இல்லை. இசுலாமிய சட்ட அடிப்படையில் உயில் எழுதிவைக்க இசுலாமியர்களுக்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. எனினும், இந்திய இறங்குரிமைச் சட்டத்தில், பிரிவு 316 முதல் 331 முடிய, நிறைவேற்ருளர் (Executor) உடையவும், நிர்வகிப்போர் (Administrator) உடையவும் உரிமை, கடமை, அதிகாரம்பற்றிய விதித்துறைகள் மட்டும் இசுலாமியர்களையும் கட்டுப்படுத்தும். ஆயின், 1951-ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டத்தின்கீழ் (Special Marriages Act 1951) திருமணம் செய்துகொண்ட முசுலிம்களையும் அவர்களுடைய வாரிசுகளையும் இந்திய இறங்குரிமைச் சட்டத்தின் விதித்துறைகள் கட்டுப்படுத்தும்.

இசுலாமிய சட்டப்படி, உயில் அளிப்பவர் தம்முடைய எண்ணத்தைத் திட்டவட்டமாக வெளிப்படுத்தி இருந்தால், அதை ‘உயில்’ எனக் கொள்ளலாம். உயில் எழுதி வைக்கப்பட்டிருந்தால், அந்த ஆவணத்தில் உயிலளித்தோரின் கையொப்பம் இருக்க வேண்டும் என்கின்ற அவசியம் இல்லை. அவர் கையெழுத்து இட்டு இருந்தாலும், அதைச் சாட்சிகள் சான்றுக் கையெழுத்திட்டு உறுதி செய்யவேண்டும் என்ற அவசியம் இல்லை.

ஒரு முசுலிம் தம்முடைய ஏஜெண்டிற்கு, தம்முடைய வாழ்நாளிற்குப் பிறகு தம்முடைய சொத்துக்களை எப்படிப் பராதீனம் செய்யவேண்டும் என்று ஒரு கடிதம் அனுப்பி இருந்தார். அந்தக் கடிதம் அவருடைய உயிலாக ஒரு வழக்கில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒரு முசுலிம் தம்முடைய வழக்கறிஞரிடம் ஓர் உயில் எழுதுமாறு வேண்டினர். அதற்கொப்ப, வழக்கறிஞர் உயிலை எழுதி அஞ்சல்மூலம்

அனுப்பி வைத்தார். அதைக் கண்ணுற்ற கர்த்தா அதில் சில திருத்தங்களைச் செய்யவேண்டும் என்று விரும்பி, 'தந்தி மூலமாகத் தமது விருப்பத்தைத் தெரிவித்தார்; தந்தியைத் தொடர்ந்து ஒரு விளக்க அஞ்சலும் அனுப்பினார். தந்தியும், விளக்க அஞ்சலும் உயிலின் ஒரு பகுதியாகவும், உயிலிணைப்பாகவும் (Codicil) கருதப்பட்டன.

உயில் எழுதிவைப்பவர் தம் கருத்தை ஐயமறத் தெளிவாக்கி இருக்கவேண்டும். 'எனக்குக் குழந்தைகள் இல்லாததால், என்னுடைய சொத்துக்களுக்கும் உரிமைகளுக்கும் என்னுடைய வளர்ப்பு மகன் உரியவனாவான்' என்று ஒருவர் ஆவணம் எழுதிவைத்திருந்தார். வளர்ப்புமகன் இன்னவன் என்று அது சுட்டிக் காட்டாததாலும், தெளிவாக இல்லாததாலும், அந்த ஆவணம் அவருடைய உறுதி மொழியே தவிர, அதை ஓர் உயிலாகக் கருதமுடியாது என்று ஒரு வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

உயில் அளிப்பவரின் தகுதி

கீழ்க் குறிப்பிடப்படும் வரம்புக்கு (limitation) உட்பட்டு, உரிமை வயது எய்தப்பெற்ற, சித்தம்தெளிந்த எந்த முசுலிமும் தம்முடைய சொத்தையோ பொருளையோ, உயில்வழிக் கொடுக்கத் தகுதியுடையவராவார். இந்திய வயது வந்தோர் சட்டப்படி, அவர் 18 வயது நிரம்பப் பெற்றவரா யிருக்கவேண்டும். சொத்து உயிலளிப்பவருக்கு உரிமை உடையதா யிருக்கவேண்டும்.

'ஷியா' சட்டப்படி, தற்கொலை எண்ணம் மேற்கொண்டிருக்கும் ஒருவர் தற்கொலை முயற்சியைத் தொடங்கிய பின்னர் 'உயில்' எழுதி வைத்தால், அது செல்லுடைமை ஆகாது. ஆனால், ஒருவர் தற்கொலை முயற்சியை மேற்கொள்ளுமுன் எழுதிவைக்கும் உயில் செல்லுடைமை யாகும். அதாவது, ஒருவர் தற்கொலை செய்துகொள்வதற்காக விஷத்தை வாங்கிவந்த பின்னர் உயில் எழுதிவைத்தால், அந்த உயில் செல்லுடைமை யாகாது என்றும், உயில் எழுதிவைத்த பின்னர் விஷம் வாங்கி வந்திருந்தால், அது செல்லுடைமையாகும் என்றும் கொள்ளலாம்.

உயில் அளிப்பவர் தம்முடைய முறையான சொத்துரிமை பெற்ற வாரிசுகளுக்கு உயில்வழிக் கொடை அளிக்கக் கூடாது. உயில் அளிப்பவர் தமது முழுச்சொத்தில் மூன்றில் ஒரு பங்கை மட்டிலுமே உயில்வழிக் கொடை கொடுக்க உரிமை பெற்றவர் ஆவார். ஒரு முசுலிம் உயில்வழிக் கொடை அளிப்பதில்,. இவ்விரண்டு வரம்புகளுக்கும் உட்பட்டே செயல்பட வேண்டும். இவ்விரு வரம்புகளும் விதிக்கப்பட்டிருப்பதன் தத்துவம் என்ன என்று காணலாம் :

' ஹிபா ' என்னும் கொடையைக் கொடுப்பவர், அவர் விரும்பினால் தமது முழுச் சொத்தையும் அன்னியர் ஒருவரிடம் கொடுக்கலாம்; விரும்பினால் வாரிசுகளுக்கும் கொடுக்கலாம். ஆனால், உயில்வழிக் கொடை அளிப்பவருக்கு இவ்விரு வரம்புகளும் விதிக்கப்பட்டிருக்கின்றனவே, ஏன்? என்ற கேள்விக்கு விடை உடைமை ஒப்படைப்பில் தான் (delivery of possession) அடங்கியிருக்கிறது. ஹிபாவில் உடமை ஒப்படைப்பு உடனடி நிகழ்கிறது. உயில்வழிக் கொடையில் (legacy) உடைமை ஒப்படைப்பு உயில் அளித்தவர் இறந்தபின்னரே நிகழ்கிறது. எனவே, ஹிபா மூலம் கொடை அளிப்பவர் சொத்தின் உரிமைகளை உடனடியாகத் துறக்கிறார். அதன்மூலம் இழப்பை உடனடி அனுபவிக்கிறார். இசுலாமிய சட்டப்படி, ஒருவர் இறந்ததும், அக் கணமே அவருடைய சொத்தில் வாரிசுகள் உரிமை பெற்றுவிடுகின்றனர். இறந்தபின்னர் அவருடைய வாரிசுகளுக்குச் சொத்து உரிமை யாகிவிடுகிறது. உயில்வழிச் சொத்தினை அளிக்கும்பொழுது, அது உயில் அளிப்பவரின் சொத்தாயிருப்பினும், அவர் இறந்த பின்னரே அதன் உரிமை மாறுகிற காரணத்தால், அது வாரிசுகளுக்குள்ள உரிமையில் கைவைப்பதாகக் கருதப்படவேண்டும். எனவே, உயில் வழிக் கொடை அளிப்பவர், வாரிசுகளின் உரிமையை உயில் மூலம் அபகரித்துவிடுவதால், அதில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கிறது. உயில்வழிக் கொடை அளிப்பவருக்குத் தமது சொத்தை இழப்பதில் அச்சம் எதுவும் இருக்காது. ஆனால், ' ஹிபா ' என்னும் கொடை அளிப்பவர் உடனடி உடைமை ஒப்படைப்புச் செய்வதால், தமக்கு விளைந்திடும் இழப்பை உணர்ந்து சொத்தைத் துறக்கிறார். எனவே, முழுச் சொத்தையும் கொடை அளிப்பதில் அவருக்குச் சிறிது தயக்கம் ஏற்படலாம். காரணம், ஒருவேளை தாம் முழுச் சொத்தையும் கொடை அளித்தபின்னர், தற்சமயம் எதிர்பார்க்கும் காலத்தைவிட நெடுங்காலம் வாழநேர்ந்தால், என்ன என்ன நடக்கும் என்று எவராலும் சொல்ல முடியாது. எனவே, ' ஹிபா ' என்னும் கொடை அளிப்பதில், கொடுப்பவர் இழப்பும் உடன் இருப்பதால், ஆறஅமர ஆலோசியாமல் அவர் அதைச் செய்யத் துணியார். ஆனால், உயில்வழிக் கொடுப்பவர் உரிமையெல்லாம் அவர் இறந்தபின்னரே கைம் மாறுவதால், அவருக்குத் தம்மைப்பற்றிய கவலை இருக்கவேண்டிய அவசியம் இல்லை. ஆனால், அவருக்குத் தம்முடைய வாரிசுகளைப்பற்றிய பொறுப்பு அவசியம் இருக்க வேண்டும். ஒருகால் அஃது இல்லாமல் போய்விடக் கூடுமோ என்பதற்காகவே சட்டம் இப்படியொரு வரம்பினை ஏற்படுத்தித் தந்திருக்கிறது போலும்! எனவே, ஒரு முசுலிம் தம்முடைய சொத்தில் மூன்றில் ஒரு பங்கினைமட்டுமே உயில்வழிக் கொடையாகக் கொடுக்க முடியும். சொத்தில் மூன்றில் ஒரு பகுதிக்குமேல் உயில்வழிக் கொடுத்தால், சொத்துரிமை பெற்ற வாரிசுகள் அதற்கு இசைவு தந்தாலன்றி, மிஞ்சிக் கொடுத்தது செல்லுடைமை ஆகாது. வாரிசுகளே இல்லையென்றால்,

முழுச் சொத்தையும் ஒரு முசுலிம் உயில் எழுதிவைக்க உரிமை பெற்றவராவார்.

உயில் அளிப்பவர் இறந்தபின்னரே உயில்வழிக் கொடை பெறுபவர் சொத்தில் உரிமை பெறுவதால், வாரிசுகளில் ஒருவருக்குக் கொடுத்து வேறுள்ளவர்களுக்குக் கொடுக்காமல் இருந்தால், வாரிசுகளுக்கிடையே மனவேறுபாடும் பிணக்கும் தோன்ற வழி ஏற்படுகிறது. எனவே, வாரிசுகளுக்கு உயில்வழிக் கொடை அளித்தால், அதற்கு மற்ற வாரிசுகளின் இசைவு இன்றியமையாத தேவையாகிறது. மற்ற வாரிசுகள் இசைவு தராவிடில், வாரிசுகளுள் ஒருவருக்குக் கொடுத்த உயில்வழிக் கொடை செல்லுடைமையாகாது. இந்தக் கட்டுப்பாடுகள் வாரிசுகளின் நன்மை கருதியே விதிக்கப் பட்டிருக்கின்றன.

உயில்வழிக் கொடை பெறுபவரைப் பொறுத்த கட்டுப்பாடுகள்

(1) உயில்வழிக் கொடையைப் பெறுபவர் வாரிசாக இருந்தால், உயில்வழிக் கொடை கொடுத்தவரின் மறைவுக்குப் பின், மற்ற வாரிசுகள் இசைவு தெரிவித்தாலன்றி, வசிய்யத் என்னும் உயில் செல்லுடைமையாகாது. உயில் பெறுபவர் கொடுத்தவரின் வாரிசா இல்லையா என்பதை, உயில் அளித்தவர் இறக்கும் நேரத்தில் பெறுபவர் அவருடைய சொத்துக்கு வாரிசாக அமைகிறாரா என்றுதான் பார்த்து முடிவு கட்டவேண்டுமே தவிர, உயில் எழுதப்பட்ட சமயத்தில் வாரிசாக இருந்தாரா இல்லையா என்று பார்த்து முடிவுகட்டக் கூடாது.

உயில்வழிச் சொத்தைப் பெறுபவர், கொடுத்தவரின் சகோதரர் என்று வைத்துக்கொள்வோம். கொடுத்தவருக்கு உயில் எழுதும் சமயத்தில் ஒரே பிள்ளை வாரிசாக இருந்தால், அந்தச் சகோதரர் உயில் எழுதப்பட்ட சமயத்தில் வாரிசு ஆகமாட்டார்; எனவே, உயில்வழிக் கொடை செல்லுடைமையாகும் என்ற முடிவுக்கு வரக்கூடாது. உயில் வழிக் கொடை கொடுத்தவரின் வாழ்நாளில் பிள்ளை இறந்துபோனால், உயில்வழிக் கொடை கொடுப்பவர் இறக்கும்பொழுது அவருடைய சகோதரர் வாரிசாகிவிடுகிறார். எனவே, உயில் செல்லாதாகிவிட வழி இருக்கிறது. ஆகவேதான், உயில்வழிக் கொடை பெறுபவர் வாரிசா இல்லையா என்பது, உயில் அளித்தவர் இறக்கும்பொழுது இவர் வாரிசாகி விடுகிறாரா என்பதைப் பொறுத்திருக்கிறது என்று கூறப்பட்டுள்ளது.

(2) பிறந்திராத நபருக்கு உயில்வழிக் கொடை அளித்தால், அது செல்லுடைமையாகாது. ஆனால், கருவில் உள்ள குழந்தைக்கு உயில் வழிச் சொத்து எழுதி வைக்கலாம். உயில் எழுதி வைத்த ஆறுமாத காலத்திற்குள்ளாகக் குழந்தை பிறந்தால், உயில்வழிக் கொடை செல்லுடைமையாகும்.

(3) தெரிந்தோ தெரியாமலோ உயில்வழிக் கொடை அளிப்பவரின் சாவிற்குக் காரணமாயிருப்பவருக்கு உயில்வழிச் சொத்து செல்லுடைமையாகாது.

உயில்வழிச் சொத்தைப் பொறுத்த கட்டுப்பாடுகள்

(1) ஒரு முசுலிம் தம்முடைய சொத்தில் மூன்றில் ஒரு பங்கை மட்டுமே உயில்வழிக் கொடையாகக் கொடுத்தால் அது செல்லுடைமையாகும். இதற்கு வாரிசுகளின் இசைவு தேவையில்லை. சொந்தச் சொத்திலிருந்து அவருடைய இறுதிச் சடங்குக்கான செலவையும், அவர் பட்டிருந்த கடனையும் நீக்கி, மீதி உள்ளதில் மூன்றில் ஒன்று என்று கணக்கிட்டுப் பார்க்கவேண்டும். மூன்றில் ஒரு பங்குக்கு அதிகமாக உயில்வழிச் சொத்து வழங்கப்பட்டிருந்து, அதற்கு வாரிசுகள் இசைவு தெரிவித்தால், உபரியாக உயில்வழிக் கொடையளித்திருப்பது செல்லும். வாரிசுகள் அதற்கு இசைவு தராவிடில், வாரிசுகளின் பங்குக்கு உள்ளன நீக்கி, மீதியில் உயில்வழிக் கொடை பெற்றவர்கள் தங்கள் விகித முறைப்படி பங்கு எடுத்துக்கொள்ள உரிமை உடையவராவர்.

(2) உயில்வழிச் சொத்தின் உடைமை ஒப்படைப்பு, கொடுத்தவர் இறந்த பிறகும் சிலகாலம் கடந்த பின்னர்த்தான் நிகழுமென்பதாகவோ, அல்லது அது வருநிகழ்வைச் சார்ந்ததாகவோ (Contingent) இருப்பின் அந்த 'உயில்' செல்லுடைமையாகாது. எடுத்துக்காட்டாக, தந்தை உயில் எழுதி வைத்திருக்கிறார் என்றால், அதில் தம்முடைய பிள்ளையின் வாழ்நாட்களுக்குப் பின் சொத்தில் மூன்றில் ஒரு பங்கை வேறு ஒருவருக்கு உயில்வழிக் கொடை அளித்திருந்தால், அது செல்லுடைமையாகாது. ஆனால், இருவழிச் சுட்டும் உயில் வழிக் கொடை (alternative bequest) செல்லுடைமையாகும். (எ-டு) செய்யிதுக்கோ அல்லது வாஹிதுக்கோ என்று உயில் எழுதப்பட்டிருந்தால், உயில் எழுதிச் சென்றவர் இறக்கும்பொழுது செய்யிது உயிரோடிருந்தால் இவர் எடுத்துக்கொள்வார். செய்யிது என்பவர் உயில் எழுதியவருக்கு முன்னரே இறந்துவிட்டிருந்தால், வாஹிது எடுத்துக்கொள்வார்.

(3) உயில் அளித்தவர் இறக்கும்பொழுது அந்த உயில்வழிச் சொத்துக்கு அவர் முழு உரிமை உடையவராயிருக்க வேண்டும். எதிர்காலத்தில் கிடைக்கவேண்டியிருக்கிற ஒரு சொத்தை அவர் உயில் எழுதிவைக்க முடியாது.

வாரிசுகளின் இசைவு

(1) உயில்வழிக் கொடையளிப்பவர் சொத்தில் மூன்றில் ஒரு பங்கு என்னும் வரம்பை மீறி உயில்வழிக் கொடை அளித்திருந்தால், அவருக்குப் பல வாரிசுகள் இருந்து, அவர்களுள் சிலர் மட்டுமே அதற்கு

இசைவு தெரிவிப்பார்களானால், இந்தச் சிலருடைய பங்கிலிருந்து மட்டுமே மூன்றில் ஒரு பங்குக்கு உபரியாக உள்ளதைப் பூர்த்தி செய்து கொடுக்கவேண்டும். சிலர் மட்டும் தந்த இசைவு, இசைவு தராத வாரிசுகளைக் கட்டுப்படுத்தாது. இவர்களுக்குச் சேரவேண்டிய முழுப் பங்கினையும் இவர்கள் பெறுவார்கள்.

(2) சுன்னி சட்டப்படி, உயில்வழிக் கொடை அளித்தோர் இறந்த பின்னர் வாரிசுகள் அதற்கு இசைவு தெரிவிக்க வேண்டும். அவர் இறக்கு முன்னர் வாரிசுகளுக்குச் சொத்துரிமை எழாததால், அவர்கள் முற்கூட்டித் தரும் இசைவு பயன் தராது.

(3) இசைவு வெளிப்படையானதாகவோ (express) உட்கிடையான தாகவோ (implied) இருக்கலாம். வாரிசுகளின் செயல்களிலிருந்து உட்கிடையான இசைவை ஊகித்துக்கொள்ள முடியும். உயிலைப் பற்றியும், உயிலில் கூறப்பட்டிருக்கும் பொருளைப்பற்றியும் வாரிசு களுக்குத் தெரியும் என்றும், அவர்கள் அதை மறுக்கவில்லை என்றும் மெய்ப்பிப்பதன் மூலம் அவர்களுடைய இசைவினை ஊகித்துக்கொள்ள லாம். (எ-டு) வாரிசு உயிலில் சான்றுக் கையெழுத்திட்டவராக இருந்து, உயில் கொடுத்தவர் இறந்த பின்னர் உயில்வழிக் கொடை பெற்றோர் அனுபவித்து வருவதைத் தடை எதுவும் இன்றி அனுமதித்தவராகவோ, அல்லது உயில்வழிச் சொத்தின் வருமானம், குடிக்கூலி முதலியவற்றை வசூலித்து வருவதைத் தடையின்றி அனுமதித்தவராகவோ இருப்பின், அவர் இசைவு தெரிவித்தார் என்பதை ஊகிக்க முடியும்.

(4) ஒருமுறை இசைவு தந்த பின்னர், அதை மாற்றவோ மறுத் தழிக்கவோ முடியாது.

உயில்வழிச் சொத்தில் கண்ட வரம்பு மீறிய பகுதிக்கு வாரிசுகள் தங்களுடைய பங்கிலிருந்து ஈடு செய்துகொள்ள இசைவு தெரிவித் தாலும், அது வாரிசுகள் உயில் வழிக்கொடை பெறுபவருக்குத் தரும் கொடையாகக் கருதப்படாது; ஆனால், உயில்வழிக் கொடுத்தவரின் கொடையாகவே கருதப்படும்.

உயில் அழிவு

உயில்வழிக் கொடை அளித்தவர், தமது வாழ்நாளில் எந்த நேரத் திலும் அதை மறுத்தழிக்க உரிமை பெற்றவராவார். உயில் அழிவு, வெளிப்படையாகவோ, உட்கிடையானதாகவோ இருக்கலாம். உயில் வழிக்கொடை அளித்தவர், சொத்தை முழுமையாக அழித்துவிடவோ, அல்லது அதனை உருத்தெரியாதபடி மாற்றி விடவோ, அல்லது வேறு ஒருவருக்கு அதை உரிமையாக்கித் தரவோ நேர்ந்தால், உயிலழிவை ஊகித்து உணர்ந்து கொள்ளலாம். ஆனால், உயில்வழிக் கொடை

அளித்தவர் வேறு திருமணம் செய்து கொண்டார் என்ற காரணத்தால் மட்டும், உயிலை மாற்றிவிட்டார் என்று ஊகித்துவிட முடியாது. உயில் வழிக்கொடை அடைந்தவர் கொடுத்தவருக்கும் முன்னரே இறந்து போனால், உயில்வழிக் கொடை அழிவு பெற்று, கொடுத்தவரின் சொத் தோடு சேர்ந்துவிடுகிறது. கொடை பெற்றவரின் வாரிசுகள் அதில் உரிமை கோர முடியாது.

‘ஷியா’ சட்டத்தில் உள்ள வேறுபாடுகள்

(1) கருவிலிருக்கும் குழந்தைக்கு உயில்வழிச் சொத்துக் கொடுக்கப் பட்டால், தாய் வயிற்றுக் குழந்தையாய் வளரும் காலமான பத்துச் சந்திர மாதங்களுக்கு உள்ளாகக் குழந்தை பிறந்தால், ‘ஷியா’ சட்டப்படி உயில் செல்லுடைமையாகும். ‘சுன்னீ’ சட்டப்படி, உயில் எழுதிய ஆறு மாதத்திற்குள்ளாகக் குழந்தை பிறக்கவேண்டும்.

(2) ஷியா சட்டப்படி, உயில்வழிச் சொத்தைப் பெறுபவர் கொடுத்த வரைக் கொல்லவோ, கொல்லுதற்குக் காரணமாயிருக்கவோ நேர்ந்தால், அவர் உயில்வழிச் சொத்துக்குத் தகுதியுடையவராகார். தம்மையும் அறியாமல் தற்செயலாக அப்படிப்பட்ட மரணத்துக்கு அவர் காரணமா யிருந்திருந்தால், உயில்வழிச் சொத்துப் பெறும் உரிமையை இழக்க மாட்டார். ஆனால், ‘சுன்னீ’ சட்டப்படி, உயில்வழிக் கொடை பெறுபவர், தெரிந்தோ தெரியாமலோ உயில்வழிக் கொடை அளிப்ப வரின் மரணத்துக்குக் காரணமாயிருந்தாலும், அவர் தகுதி இழந் தவராவார்.

(3) ஷியா சட்டப்படி, மூன்றில் ஒரு பங்கு என்னும் வரம்புக்கு உட்பட்டு, உயில்வழிக் கொடை அளிப்பவர் தம் வாரிசுகளுக்கும் அதைக் கொடுக்கலாம். உயில்வழிக் கொடை மூன்றில் ஒரு பங்குக்கு உட்பட்டிருந்தால், மற்ற வாரிசுகளின் இசைவு அவசியமில்லை.

(4) ஷியா சட்டப்படி, வாரிசுகள் தங்கள் இசைவை உயில்வழிக் கொடுத்தவர் இறப்பதற்கு முன்னரோ அல்லது பின்னரோ தெரி விக்கலாம்.

(5) ஷியா சட்டப்படி, உயில்வழி பெற்றவர் கொடுத்தவருக்கு முன்னரே இறந்துவிட்டால், உயில்வழிச் சொத்து அழியாமல், கொடை பெற்றவரின் வாரிசுகளுக்கே போய்ச் சேரும். ஆனால், உயில்வழி பெற்றவருக்கு ‘வாரிசு’ இல்லாமற்போயின், உயில்வழிச் சொத்து அழிவு பெற்றதாகி, உயில் கொடுத்தவரையே வந்து சேரும்.

(6) ஷியா சட்டப்படி, மூன்றில் ஒரு பங்குக்கு மேல் உயில்வழிச் சொத்து வழங்கப்பட்டிருந்தால், பெறுபவர்கள் வரிசைக் கிரமமாக

எடுத்த மூன்றில் ஒரு பங்கைப் பூர்த்தி செய்வர். ஆனால், சுன்னி சட்டப்படி உயில்வழிக் கொடை பெறுபவர்கள் தங்களுடைய விகிதத்தை அனுசரித்து மூன்றில் ஒன்றைப் பங்கிட்டுக்கொள்ளவேண்டும். (எ-டு) உயில்வழிக் கொடுத்தோர் அவருடைய சொத்தில் $\frac{1}{4}$ பங்கை A-க்கும், $\frac{1}{12}$ பங்கை B-க்கும், $\frac{1}{24}$ பங்கை C-க்கும் உயில் மூலம் விட்டுச் செல்கிறார் ஷியா சட்டப்படி, Aயும், Bயும் தத்தமக்குரிய $\frac{1}{4}+\frac{1}{12}$ பங்கை எடுத்துக். கொண்டால் அதனுடைய மொத்தம் $\frac{1}{3}$ ஆகிவிடுகிறது. எனவே, C தனக்குக் கிடைக்கவேண்டிய பங்கைப் பெற முடியாது.

'மரலுல் மௌத்' அல்லது மரணப் படுக்கையில் (Death illness) கொடை

மரணப் பிணியால் ஆட்கொள்ளப்பட்ட மனிதன், 'சாவின் வயப் பட்டுவிட்டோம்; இனி இதிலிருந்து மீளமாட்டோம்' என்று எண்ணி எண்ணி, எதிலும் ஈடுபாடின்றி, தன் மரணத்தையே எதிர்பார்த்த வண்ணம் இருப்பான். இறந்துவிடுவோம் என்பதைத் தானே உணர்தல் ஒன்று. அதைப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் உணர்வது மற்றொன்று. 'மரலுல் மௌத்' அல்லது மரண நோய் என்பது, அந்த மரணப் பிணியின் வயப்பட்டவர் உணர்வதையே குறிக்கும்.

மரண நோய் வயப்பட்ட ஒரு முசுலிம் வேறொருவருக்குத் தன்னுடைய சொத்தையோ பொருளையோ கொடை அளிக்கிறான் என்றால், அது இசுலாமிய சட்டப்படியுள்ள கொடை இலக்கணங்களுக்குக் கட்டுப்பட்டதாகவும், இசுலாமிய சட்டப்படி உயில்வழிக் கொடை அளிப்பதில் சுமத்தப்பட்ட இரு வரம்புகளுக்கும் உட்பட்டதாகவும் இருக்க வேண்டும். அதாவது, கொடையின் இலக்கணப்படி, உடனடியாக உடைமை ஒப்படைப்புப் பெறுபவருக்குக் கொடுக்கப்பட வேண்டும்; உயில்வழிச் சொத்தளிப்பதில் விதிக்கப்பட்ட வரம்புகளான மூன்றில் ஒரு பங்குக்கு மேற்பட்டதைக் கொடுக்கவோ, சொத்துரிமை பெற்ற வாரிசுகளுக்குக் கொடுக்கவோ கூடாது. எனவே, மரணப் பிணியின் வயப்பட்டவர் அளிக்கும் ஹிபா என்னும் கொடை, இசுலாமிய கொடை இலக்கணத்திற்கும் 'உயில்' இலக்கணத்திற்கும் கட்டுப்பட்டதாகி விடுகிறது.

மரண நோயை மெய்ப்பிப்பதற்குக் கீழ்வரும் அறிகுறிகளைச் சான்றுகளாக எடுத்துக்கொள்ளலாம் :

(1) மரணப் பிணியின் வயப்பட்டுவிட்டோம்; இனிச் சாவிலிருந்து மீட்சி இல்லை என்று நினைத்துச் செயலற்றிருத்தல்.

(2) மரணப் பிணியின் கூறுகள் அதன் வயப்பட்டவரைச் செயலற்றிருக்கச் செய்தல்.

(3) மரணப் பிணி வயப்பட்டவரின் செயல்களும்கூட அதற்குச் சான்றாக அமையும். (எ - டு) தன்னிச்சையாகச் செய்யும் காரியங்களை இயல்பாகச் செய்யமுடியாது தவித்தல்.

மற்றப் பொருண்மைகளை (facts) மெய்ப்பிப்பதுபோல், மரணப் பிணி நோயையும் மெய்ப்பிப்பது அவசியமாகும்.

மரணப் பிணியின் வயப்பட்டவரின் சொல்லும் செயலும் தக்க சான்றுகளாக அமையுமென்றாலும், வேறு கொடிய நோய்வாய்ப்பட்டிருந்தால், அந்த நோயின் தன்மையையும், அந்த நேரத்தில் அவருக்கிருக்கும் உடல் நிலைமையையும், அவருடைய புறச் செயல்களையும் சான்றாகக் காட்டலாம். மரணப் பிணியின் வயப்பட்டதாக நினைத்துக் கொடை அளித்தபின்னர், எதிர்பார்த்தபடி அவர் இறக்கவில்லையானால், அதை அவர் இசுலாமிய சட்டப்படி அளித்த ‘ ஹிபா ’ என்னும் கொடையாகக் கொள்ள வேண்டும். அதை மரஜுல் மௌத்துக் கொடையாகக் கருதக்கூடாது.

ஏதோ ஒரு கொடிய நோய்வாய்ப்பட்டுக் கொடை அளித்தவர் சட்டென்று இறந்துவிடுகிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் மரணப் பிணியின் வயப்பட்டுக் கொடை அளிக்கவில்லை என்று மெய்ப்பிக்க வேண்டுமானால், அவர் கொடையளித்த சமயத்தில் அவருக்கு மரண அச்சத்தை விளைவிக்காத கொடிய நோயால் பாதிக்கப் பட்டிருந்தார் என்றும், அந்த நோயின் காரணமாகவே அவர் இறக்க நேர்ந்தது என்றும், இயல்பாய்ச் செய்யும் காரியங்களை அந்தக் கொடிய நோயின் காரணமாக அவரால் அந் நாட்களில் செய்யமுடியாமல் போயிற்று என்றும் நிரூபிக்கவேண்டும். ஆனால், அந்தக் கொடிய நோய்தான் அவர் இறந்ததற்குக் காரணம் என்று மெய்ப்பிக்கவேண்டிய அவசியம் இல்லை.

தாய் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்த பின்னர், ஒருகால் தான் இறந்துவிடலாமோ என்று மனத்தில் அச்சங் கொண்டவளாய் (உடனடி இறந்துவிடுவோம் என்ற எண்ணத்தால் ஆட்கொள்ளப்படாமல்) சில நாட்களுக்குள்ளாக இருதய நோயால் இறந்துவிட்டால், அவள் மரணப் பிணி (மரஜுல் மௌத்) வயப்பட்டு இறந்தாள் என்று கொள்ளமுடியாது. வாதநோயோ, அல்லது நாட்பட நீடிக்கும் வேறு நோயோ மரணப் பிணி ஆகாது. ஏனெனில், அந்த நோய்களின் தன்மைகளோடு நோயாளி ஊறிப் போய்விடுவதால், அவை மரணப்பிணிகளாகக் கருதப் படுவதற்கில்லை. சுன்னீ சட்டக் கருவூலங்களில் ஒன்றான ‘ ஹிதாயா ’ மரணப்பிணியின் காலக்கெடு ஓராண்டு காலம் என்று வரையறுக்கிறது. ஆயினும், இது உத்தேச கால வரையறையே யன்றி, உறுதிப் படுத்தப்பட்டதன்று.

மரணப்பிணியின் வயப்பட்டவர், தாம் பட்ட கடன் (debt) என்று ஒரு கடனை ஏற்றுக்கொள்ள, அதற்கு வேறு எவ்விதச் சான்றும் இல்லாதிருந்தால், அவர் ஏற்றுக்கொண்டதே முடிவானது. அவர் வாரிசுகளும், உயில்வழிக் கொடை பெறுவோரும் அதற்குக் கட்டுப்பட்டவராவர். ஆயினும், இவ்விதம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடன், அவருடைய வாழ் நாளில் பட்ட நிரூபிக்கத்தக்க மற்ற எல்லாக் கடன்களையும் அடைத்த பின்னர், எஞ்சிய சொத்திலிருந்துமட்டுமே தீர்க்கப்பட வேண்டும். காரணம் என்னவென்றால், இப்படிக் கடைசி நேரத்தில் ஏற்றுக்கொள்ளப் படும் கடன் சந்தேகத்திற்கு இடமளிக்கிறது.

வேறு எந்தச் சான்றும் இன்றி, வாரிசுகளிடம் தாம் கடன் பெற்ற தாக மரணப்பிணியின் வயப்பட்டவர் ஏற்றுக்கொண்டால், அது அவருடைய கடனாகக் கொள்ளப்படமாட்டாது. ஆயினும், அவர் தம் மனைவிக்குத் தரவேண்டிய 'மஹர்'க் கடனை ஏற்றுக்கொண்டால், அது அவரது வாழ்நாளில்பட்ட மற்றக் கடன்களோடு சேர்த்து எண்ணத்தக்க தாகும்.

மரணப்பிணியின் வயப்பட்டு, மறுபயன் எதிர்பாராது அளிக்கும் கொடைக்கே, மரணப்பிணியின் வயப்பட்டு அளிக்கும் கொடைக்குள்ள கட்டுப்பாடுகளும் வரையறைகளும் பொருந்தும். மரணப் பிணியின் வயப்பட்டவர், மனைவி 'மஹர்'க் கடனை விட்டுவிட்டதற்கு மறுபயனாகத் தமது சொத்தை அவளுக்கு உரிமை மாற்றம் செய்து கொடுத்தால், அதற்கு விற்பனைக்குரிய இலக்கணம் பொருந்திவருவதால், 'மரனுல் மௌத்'துக்குரிய வரம்புகளுக்கு அது உட்பட்டிருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை.

10. 'வக்பு' (Wakf)

'வக்பு' என்ற சொல்லுக்குப் பொருள், நிறுத்துவது, தடைசெய்வது, நிலைக்குக் கொண்டுவருவது என்பதாகும். பொதுவாக, சொத்துக்கள் கைம்மாறும் இயல்புடையன. சொத்துக்களைப் பொறுத்தமட்டில், 'வக்பு' என்பது, அப்படிக் கைம்மாறுவதைத் தடுத்து நிறுத்துவது, தடைசெய்வது என்பதாகும். கைம்மாறும் தன்மையுடைய சொத்தை, ஒரு நிலைக்குக் கொண்டுவருவதை 'வக்பு' என்று இசுலாமிய சட்டம் கூறுகிறது.

மனிதனிடம் சொத்துரிமை (ownership) இருப்பதுவரையில் அது கைம்மாறும் தன்மையுடையதாய் இருக்கிறது. மனிதனிடம் உள்ள சொத்துரிமை அழிக்கப்பட்டாலன்றி, அந்தச் சொத்துக், கைம்மாறும் தன்மையை இழக்காது. எனவே, 'வக்பு' செய்யப்படும் சொத்தின் சொத்துரிமை (ownership) இறைவனுக்கு அளிக்கப்படுவதன் மூலம், மனிதனின் சொத்துரிமை அழிக்கப்பட்டு, சொத்துக் கைம்மாறுவதி னின்றும் தடுக்கப்படுகிறது. அவ்விதம் செய்வதன்மூலம் சொத்து ஒரு நிலைக்குக் கொண்டுவரப் படுகிறது. சொத்தின் சொத்துரிமையை ஆண்டவனுக்கு அர்ப்பணிப்பதை 'வக்பு' சுட்டிக் காட்டுகிறது என்றாலும், அதன் உட்பொருள், மனிதனின் சொத்துரிமை அந்தச் சொத்தினின்று அழிக்கப்பட்டு, கைக்குக் கை மாறுவது தடுக்கப்பட்டு, ஒரு நிலைக்குக் கொண்டுவரப் படுவது (immobilisation of property) ஆகும். எனவே, ஒரு சொத்தை 'வக்பு' செய்வதன்மூலம், சொத்தின் உரிமையை ஆண்டவனுக்கு அளித்து, அதன் வருவாயையும் பயனையும் மட்டிலும் மக்களின் நலன் கருதிச் செலவுசெய்ய வழிவகுக்கப் படுகிறது.

இமாம் அபூஹனீபாவின் சீரிய மாணுக்கர்களான இமாம் அபூ யூசுபும் இமாம் முஹம்மதும் 'வக்பு' ஏற்படுத்துவதன்மூலம் 'வக்பு' அளிப்பவரின் சொத்துரிமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது என்று கருத்துத் தெரிவிக்கின்றனர். எனவே, ஒரு சொத்தை ஒருமுறை வக்பு செய்தால், அளித்தவர் சொத்துரிமை இழந்துவிடுவதால், அதை

மறுத்தழிக்க அவர் உரிமையற்றவராகிறார் என்பது இரு மாணாக்கர்களுடையவும் கருத்தாகும். ஆனால், அபூஹனீபாவின் கருத்து, 'வக்பு' அளித்தவருக்கு (வாகிப்—Wakif) அதை மறுத்தழிக்கும் உரிமை உண்டு என்பதாகும். ஏனெனில், இக்கருத்துப்படி, சொத்துரிமை வக்பு அளித்தவரிடமே இருக்கிறது; அவர் அளித்தது வருவாயையும், அதன் பயனை அனுபவிக்கும் உரிமையையுமே அல்லாமல் வேறன்று. எனினும், ஹனபி கோட்பாட்டின்படி, இந்த இரு மாணாக்கர்களின் கருத்து மட்டுமே முடிவானது.

'ஷியா' கோட்பாட்டின்படி, 'வக்பு' அளித்தவருக்கு 'வக்பை' மறுத்தழிக்கும் உரிமை கிடையாது. ஏனெனில், சொத்துரிமை (ownership) அறுதியாவணம் (settlement) பெற்றவருக்கு மாற்றப் படுகிறது.

1913-ல் இயற்றப்பட்ட 'வக்பு' செல்லுடைமையாக்கும் சட்டம் (Wakf Validating Act 1913) பிரிவு 2-ல், 'வக்பு' என்பது இசுலாம் இசைவு தருகின்ற மதம், திருப்பணி, தருமம் ஆகிய காரியங்களுக்காக முசுலிம் ஒருவரால் அவருடைய எந்தச் சொத்தையும் நிலையாக அர்ப்பணிப்பது ஆகும் என்று வக்பின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. இந்த இலக்கணம் பூரணமானது என்று கூறமுடியாதாயினும், மேற் கூறிய சட்டத்தைத் தெளிவுபடுத்தும் இலக்கணம் என்று கூறலாம்.

ஆங்கிலச் சட்டப்படி உள்ள பொறுப்புரிமை அமைப்புக்கும் (trust) இசுலாமிய சட்டப்படியுள்ள வக்புக்கும் பெருத்த வேறுபாடு உண்டு. பொறுப்புரிமை அமைப்பில் (trust) சொத்துரிமை மனிதனுக்கே தரப் படுகிறது. அச்சொத்துரிமையோடு, சில கடமைப்பாடுகளும் இணைக்கப் பட்டிருக்கும். அக் கடமைப்பாட்டோடு சேர்த்து, அந்தச் சொத்தின் உரிமையை வேறு ஒருவருக்கு மாற்றம் செய்துவிட முடியும். ஆனால், 'வக்பு' சொத்தில் சொத்துரிமை ஆண்டவனுக்கே தரப்படுவதால், சொத்துக் கைம்மாறுவது தடுக்கப்பட்டு ஒரு நிலைக்குக் கொண்டுவரப் படுகிறது. எனவே, சொத்துரிமை (ownership) மாற்றம் நடைபெற முடியாத ஒன்றாகும். 'முத்தவல்லி' என்பவர் வக்பு சொத்தைப் பராமரித்து வருபவரே ஆவார். அவருக்குச் சொத்தில் எந்தப் பங்கும் உரிமையும் கிடையாது. எனவே, 'வக்பு' என்பது பொறுப்புரிமை அமைப்பினின்றும் வேறுபட்டதாகும்.

'வக்பு' முற்றுப் பெறுவதற்கு இன்றியமையாது வேண்டப்படுவன

(1) நிலையான அர்ப்பணம்: இசுலாம் அனுமதிக்கும் மதம், தருமம், திருப்பணி ஆகியவற்றிற்குச் சொத்தை நிலையாக அர்ப்பணிப்பது முதன் முதலில் வேண்டப்படுவதாகும். 'வக்பு'

அளிப்பவரின் சொத்துரிமை முற்றுப் பெறவேண்டும். ‘வக்பு’ அளிக்கப்படும் சொத்து உடனடியாக வரையறுத்து ஒதுக்கப்படல் (appropriation) வேண்டும். இமாம் அபூயூசுபின் கருத்துப்படி, வாழ்பவரிடையே வக்பு (Wakf Intervivos) ஏற்படுத்துவதென்பது, நிலைக்கட்டளையை உறுதிப்படுத்தி வெளிப்படுத்துவதன்மூலம் (Declaration of Endowment) பூர்த்தியாகிறது. பம்பாய், கல்கத்தா, பாட்னு உயர்நீதிமன்றங்கள் இக் கருத்தை ஏற்று நீதி வழங்கியிருக்கின்றன.

ஆனுல், இமாம் முஹம்மது அவர்களின் கருத்துப்படி, நிலைக் கட்டளையை உறுதிப்படுத்தி வெளிப்படுத்துவதோடு, அதைப் பராமரிக்கும் ‘முத்தவல்லியும்’ (Mutawalli) உடனடியாக நியமிக்கப்பட்டு, அவரிடம் சொத்தை உடைமை ஒப்படைப்புச் செய்த உடன், வாழ்வோரிடையே ‘வக்பு’ (Wakf Intervivos) பூர்த்தியாகிறது. அலாஹாபாது உயர்நீதிமன்றம் இக் கருத்தை ஏற்று நீதி வழங்கி இருக்கின்றது.

‘வக்பு’ அளிப்பவர், தம்மையே முதல் ‘முத்தவல்லி’யாக நியமித்துக்கொண்டிருந்தால், சம்பந்தப்பட்ட பதிவேடுகளில் பெயர் மாற்றம் செய்து உடைமை ஒப்படைப்பு நிகழ்ந்ததாகக் காண்பிக்க வேண்டிய அவசியமில்லை. ‘வக்பு ஆவணம்’ (Wakf Deed) எழுதி அதைப் பதிவு செய்வதன்மூலம் ‘வக்பு’ ஏற்படுத்தப்பட்டிருப்பதை அவர் வெளிப்படுத்தலாம்.

‘வக்பு’ பூர்த்தி பெறுவதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது நிலையான அர்ப்பணம் ஆகும். ஒரு ‘வக்பு ஆவணத்தில்’ (Wakf Deed or Wakf Nama) நிலைக்கட்டளையை உறுதிப்படுத்தி வெளிப்படுத்திய பின்னர், அதில் ‘வக்பு’ அளித்தவர் தம்மையே முதல் முத்தவல்லியாக நியமித்துக்கொண்டிருப்பின், அவர் அவருடைய சொத்துரிமையையும், உடைமையையும் அந்த ‘வக்பு’ சொத்தில் துறந்தவராவார். அவர் முதல் முத்தவல்லியாகத் தம்மையே நியமித்திருப்பதால், உடைமை ஒப்படைப்பையும் தாமே பெற்றவராகிருர்.

(2) நிலைக்கட்டளையை அறிவித்தல் (Declaration of Endowment): ‘வக்பு’ அளிப்பவர் நிலைக்கட்டளையை உறுதிப்படுத்தித் தம்முடைய எண்ணத்தை அறிவிக்க வேண்டும். நிலையான அர்ப்பணமும் அறிவிப்பும் (Declaration) ஒருமித்து நடைபெற வேண்டும்; சொத்தைத் தருமத்தின் பொருட்டுக் கொடுக்கவேண்டும் என்ற விருப்பம் (Intention) மட்டிலும் அவருக்கு இருந்தால் பற்ருது; அவ் விருப்பத்தை வெளிக்கொணர்ந்து உலகுக்கு அறிவிப்பதன் மூலம், அவர் நிலையான அர்ப்பணமும் செய்தல் வேண்டும். வாய்மூலமாகவோ, எழுத்து மூலமாகவோ, ‘வக்பு’ செய்யும் விருப்பத்தை அவர் அறிவிக்கலாம். சந்தேகமற விருப்பத்தை ஒருவர் வெளிப்படுத்துவதன் மூலம் நிலையான வக்பு

ஏற்படுத்தலாம். குறிப்பிட்ட சொல்லேயோ சொற்றெடரையோ பயன் படுத்தி, இப்படித்தான் அறிவிக்க வேண்டும் என்ற நியதியொன்றும் இல்லை. 'வக்பு' என்ற சொல்தான் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. ஆனல், சந்தேகமற நிலேக்கட்டளே உறுதிப்பாட் டோடு அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும். 'வக்பு' என்ற சொல் பயன் படுத்தப்படாமலும் சொத்தை 'வக்பு' செய்ய முடியும். 'வக்பு' என்ற சொல் பயன் படுத்தப்படாதிருந்தால் 'வக்பு' ஆவணத்தைப் படிக்கும் பொழுது, வக்பு ஏற்படுத்தப்பட்டிருப்பதைச் சந்தேகமறக் கருத இடமிருந்தாலோ, ஆவணத்தின் முழுக் கருத்தும் வக்பு ஏற்படுத்தப் பட்டிருப்பதை ஊகிக்க இடம் தந்தாலோ, ஆவணம் கூறும் நோக்கங் களிலிருந்தும், பொதுவாக அதில் பணித்திருக்கும் பணிகளிலிருந்தும் வக்பு ஏற்படுத்தப்பட்டிருப்பதை ஊகித்துக் கொள்ளலாம். வக்பு ஏற்படுத்தப்பட்ட சொத்திற்கு ஆண்டவனே சொத்துரிமை படைத் தவன் என்று வெளிப்படையாகக் கூறவேண்டும் என்ற நியதியும் இல்லை. காலாகாலமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் முறையிலிருந் தும் 'வக்பு' ஏற்படுத்தப்பட்டிருப்பதை ஊகித்துக்கொள்ளலாம். வக்பு ஏற்படுத்தப்பட்டது எப்பொழுது, யாரால் என்று திட்டவட்ட மாக மெய்ப்பிக்கப்பட்டதற்கான தக்க நேரடிச் சான்றுகள் இல்லாதிருப் பின், அது காலாகாலமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் முறையிலிருந் தும் 'வக்பு' ஏற்படுத்தப்பட்டதை ஊகித்துத் துணிபு கொள்ளமுடியும். (எ - டு) ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்புக் காலாகாலமாகச் சவ அடக்கம் நிகழ்ந்து வரும் மயானக் கொல்லேயாகப் பயன்படுத்தப்படுமானல், அது பொதுவாக மக்கள் எல்லோருக்கும் பயன்படுவதிலிருந்து வக்பு செய்யப்பட்ட சொத்து என்பதை ஊகித்துக்கொள்ள முடியும். ஒரு முறை வக்பு ஏற்படுத்தப்பட்டால், பின்னர் அது வக்பு சொத் தாகப் பயன்படாத காரணத்தைக் காட்டி, அதை இல்லாதாக்கிவிட முடியாது.

(3) **உயில் மூலம் வக்பு:** வாழ்வோரிடையே வக்பு ஏற்படுத்தப்படு வதுபோல், வக்பு அளிப்பவரின் உயில் மூலமாகவும் வக்பு ஏற்படுத் தப்படலாம். 'வக்பு' வாழ்வோரிடையே ஏற்படுத்தப்படும்பொழுது, வக்பு அளிப்பவர் தமது முழுச் சொத்துக்களேயும் விரும்பினல் வக்பு செய்ய முடியும். ஆனல், உயில் மூலம் வக்பு ஏற்படுத்தும்பொழுது, அவர் தமது சொத்தில் மூன்றில் ஒரு பங்கையே வக்பாக வழங்க முடியும். அதேபோல், மரணப்பிணி அல்லது 'மரதுல் மௌத்' வயப்பட் டவரும், தமது சொத்தில் மூன்றில் ஒரு பங்கையே வக்பு ஏற்படுத்த உரிமை பெற்றவர் ஆவார். உயில்மூலம் வக்பு அளிப்பவர் தமது இறப்புக்கு முன்னர், அவர் விரும்பினல் அதை மறுத்தழிக்க உரிமை பெற்றவராவார். ஆனல், வாழ்வோரிடையே ஏற்படுத்தப்படும் வக்பு பூர்த்தியான பின்னர் அதை அவரால் அழிக்க முடியாது. வக்பு,

அளிப்பவர் வக்பு சொத்தில் தமக்கென எந்தச் சொத்துரிமையையும் ஒதுக்கிவைத்துக் கொள்ளமுடியாது. அப்படி ஒதுக்கிவைத்தால், 'வக்பு' செல்லுடைமை ஆகாது. ஆனால், வக்புவழிப் பயன் பெறுவோரை மாற்றுகிற அதிகாரத்தையோ, அல்லது வக்பு சொத்தின் பயனைக் கூட்டவோ குறைக்கவோ செய்யும் அதிகாரத்தையோ அவர் தம்மிடம் வைத்திருக்கலாம்.

வக்பு அளித்தவர் முத்தவல்லியாக அல்லாது, சொத்தின் உரிமையாளராகத் தம் வாழ்நாள் முழுவதும் வக்பு சொத்தின் வருமானத்தில் ஒரு தொகையைத் தமக்கென ஒதுக்கிவைக்கும் உரிமையைத் தம்மோடு வைத்துக்கொண்டு, எஞ்சியதை வக்பு காரியங்களுக்காகச் செலவிட வழி செய்திருந்ததால், 'வக்பு' முழுமையாகச் செல்லுடைமையாகாது என்று ஒரு வழக்கில் தீர்ப்புக் கூறப்பட்டது.

(4) **நிரந்தரமானது (Perpetuity):** அர்ப்பணம் நிலையானதும், நிரந்தரமானதும், கால வரையறை இல்லாததுமாய் இருத்தல் வேண்டும். அர்ப்பணம் செய்வதும், செய்யப்படும் சொத்தும், அதன் நோக்கமும், அதற்கான கால வரையறை இன்மையும் நிரந்தரமான அர்ப்பணத்திற்கான கூறுகளாக அமைகின்றன. எனவே, அர்ப்பணம் நிபந்தனையற்றதாகவும் வரு நிகழ்வைச் (contingent) சாராததாயும் இருத்தல் அவசியமாகும். காலக்கெடுவோடு கூடிய அர்ப்பணம் செல்லத் தக்கதன்று. (எ-டு) 'ஐந்தாண்டு காலத்திற்கு' என்று வக்பின் காலத்தை வரையறுத்துக் கூறின், அது செல்லுடைமையாகாது. எதிர்காலத்தைய முத்தவல்லியின் (Mutawalli) நியமனம் குறித்து எதுவும் கூறப்படவில்லையானாலும், வக்பு செல்லுடைமையாகும். வக்பு அளித்தவர் வக்புக்குரிய சொத்தை வரையறுத்து ஒதுக்கி, அதை வேறு ஒருவருக்கு உரிமையாக்கி, அவருடைய வாழ்நாட்களுக்குப் பின்னர் வக்பு நடைமுறைக்கு வரவேண்டும் என்று நிபந்தனை விதித்திருந்தால், அந்த நிலைக் கட்டளை (Endowment) செல்லுடைமையாகாது. அதில் குறிப்பிடப்பட்டவர் இறந்ததும் 'வக்பு' செயல்படுவது நிச்சயமே என்றாலும், வக்பு சொத்தை உடனடி வரையறுத்து 'ஒதுக்காததால், அது செல்லுடைமை ஆகாது.

(5) **அசைவியல் — நிலையியல் சொத்து:** சொத்திலிருந்து வருமானமும் பயனும் வரவேண்டும் என்று கூறப்பட்டிருப்பதால், வக்பு ஏற்படுத்தப்படும் சொத்து நிலையியல் சொத்தாக இருப்பது அவசியமாகின்றது. வக்பு அளிக்கப்பட்ட சொத்து வில்லங்கங்களுக்கு (encumberance) உட்படுத்தப்பட்டிருந்தால், அதை வக்பு சொத்தாகக் கொடுக்க முடியும்.

'ஹிதா'யாவின் கருத்திற்கிணங்க, பொதுவாக அசைவியல் சொத்துக்களை வக்பு செய்தல் பொருந்தாது. ஆயினும், பழக்க வழக்

கத்தில், அசைவியல் சொத்துக்களையும் வக்பு செய்து கொடுப்பது, ஹிதாயாவிற்கும் முன்னரே நடைமுறையில் இருந்து வருகிறது. எடுத்துக்காட்டாக, திருக் குர்ஆனின் கையெழுத்துப் பிரதி ஒன்று 'வக்பு' செய்யப்பட்டதன் மூலம், எல்லோரும் அதைப் பயன்படுத் தும் உரிமை அளிக்கப்பட்டதற்குச் சான்றுகள் உள்ளன. உழவுக்குப் பயன்படுத்தப்படும் ஏர் கலப்பை முதலான கருவிகளும், தானியங் களும் 'வக்பு' அளிக்கப்பட்டதற்குச் சான்றுகள் உள்ளன.

பணத்தை 'வக்பு' செய்து கொடுக்க முடியாது என்ற ஒரு கருத்து நிலவியது. ஆனால், இற்றை நாளில், கம்பெனிகளில் பணத்தை முதலீடு செய்வதன்மூலம் ஒருவர் தம்முடைய பங்கை 'வக்பு' செய்து கொடுக்க முடியும். பாகப்பிரிவினையாகாத பங்கை 'வக்பு' செய்து வைத்தால் அது செல்லுடைமையாகும். ஆனால், பாகப்பிரிவினை யாகாத பங்கை (Mushaa) ஒருவருக்குக் கொடை அளித்தால், அது செல்லுடைமையாகாது.

பாகம் பிரிக்கப்படாத பங்கை வக்பு செய்வதில் ஒரு கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கிறது. ஐங்காலமும் முசுலிம்களின் தொழுகைக்காக என்று பள்ளிவாசல் (Mosque) கட்டப்படுவதற்கோ, அல்லது புதை குழியாகப் பயன்படுத்துவதற்கோ ஒதுக்கப்படும் நிலத்தை, பாகம் பிரிக்கப்படாத பங்கில் வக்பு செய்து கொடுத்தால், அது செல்லுடைமை யாகாது. ஆயினும், இருக்கின்ற ஒரு பள்ளியின் பராமரிப்பிற்காக ஒதுக்கப்படும் வருமானம், பாகம் பிரிக்கப்படாத பங்கை வக்பு செய்து கொடுக்கப்பட்டதிலிருந்து வருமாயின், அது செல்லுடைமையாகும். நீதிமன்றத் தீர்ப்பாணையோ, மஹர்க்கடனோ, வக்புப் பொருளாக அமை யாது. 1913-ல் இயற்றப்பட்ட வக்பு செல்லுடைமையாக்கும் சட்டம் (Wakf Validating Act, 1913) பிரிவு 2-ல் 'எந்தப் பொருளையும்' அர்ப்பணம் செய்யலாம் என்று கூறப்பட்டிருப்பதால், அது அசைவியல் பொருளையும் உள்ளடக்கியதே என்று, தமிழ்நாடு, பம்பாய் உயர்நீதி மன்றங்கள் தங்கள் நீதித் தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளன. 'எந்தப் பொருளும்' என்பதால், அது முழுப்பொருளாக இருக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஒரு பொருளின் சிறு பாகத்தையோ, பங்கையோ கூட வக்பு செய்து கொடுக்கலாம்.

வக்பு அளிப்பவர் அல்லது 'வாகிப்' (Wakif)

இசுலாமிய சட்டப்படி 'வக்பு' ஏற்படுத்துபவர், உரிமை வயது எய்தப் பெற்ற முசுலிமாக இருக்கவேண்டும். மற்றும், அவர் சித்தம் தெளிந்தவராகவும் இருக்கவேண்டும். உரிமை வயது எய்தப் பெறுதவர் (Minor) வக்பு ஏற்படுத்த முடியாது.

முசுலிம் அல்லாதவர் 'வக்பு' ஏற்படுத்திஞல் அது செல்லுடைமை யாகும் என்று லாஹுர் உயர்நீதிமன்றம் ஒரு வழக்கில் தீர்ப்பளித் துள்ளது. ஆஞல், ஒரு முசுலிமல்லாதவர் சமயச் சார்பான தொழு கைக்குரிய இடமான பள்ளி (Mosque) கட்டுவதற்கு வக்பு ஏற்படுத் திஞல், அது செல்லுடைமை ஆகாதென்றும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

நோக்கம் (Purpose)

'வக்பு' ஏற்படுத்துவதன் நோக்கம், அர்ப்பணிக்கப்பட்ட பொருளின் பயனை இசுலாம் அங்கீகரிக்கும் மதம், தருமம், திருப்பணி ஆகிய காரியங்களின் பொருட்டுப் பயன்படுத்தற்கே ஆகும். 1913-ம் ஆண்டு வக்பு செல்லுடைமை யாக்கும் சட்டம் பிரிவு 3-ல் உள்ள கட்டு வாசகத்தில் (Proviso) கூறப்பட்டு இருக்கும் நோக்கங்கள் இசுலாமிய சட்டப்படி வக்பு ஏற்படுத்துவதன் நோக்கங்கள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளன என்று கூறமுடியாது. கொடை அளிப்பவரின் நெருங்கிய உறவினர்களின் நலனையோ, வாரிசுகளின் நலனையோ கருத் தில் கொண்டும் வக்பு ஏற்படுத்தப்படலாம். இருக்கின்ற உறவினர் களுக்கும், இனி அவர்களுக்குப் பிறக்கப்போகும் குழந்தைகளுக்கும் பயனும் நன்மையும் கிடைக்கும் வண்ணமும் வக்பு ஏற்படுத்தப்படலாம். ஒரு ஹனபி முசுலிம் தாம் 'வக்பு' ஏற்படுத்தும் சொத்துத் தமது வாழ்நாள் முழுவதும் தமக்குப் பயனளிக்க வேண்டும் என்ற நோக்கத் தோடும் வக்பு ஏற்படுத்த முடியும். ஒரு ஹனபி முசுலிம் தமது வாழ்நாளில் பட்ட கடன்களைத் தீர்ப்பதையும் நோக்கமாகக்கொண்டு வக்பு ஏற்படுத்த முடியும். ஆயினும், எதை நோக்கமாகக் கொண்டு வக்பு ஏற்படுத்தப்பட்டாலும், 'வக்பு' ஏற்படுத்தப்பட்டதன் இறுதி நோக்கம் ஏழைகளுக்கும், இசுலாம் அனுமதிக்கும் மதம், தருமம், திருப்பணி ஆகிய காரியங்களுக்குமாய் இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

தரும காரியங்கள்

ஆங்கிலச் சட்ட அடிப்படையில் தரும காரியங்களாகக் கொள்ளத் தக்கன :

(1) கூறப்பட்டிருக்கும் நோக்கங்களால், பொதுவாக மக்கள் குலம் பயன் பெறவோ, அல்லது மக்களில் ஒரு குறிப்பிட்ட பகுதியினர் பய னடையவோ வேண்டும்.

(2) சமயக் கல்வி, விஞ்ஞானம் ஆகியவற்றின் முன்னேற்றத்திற் காகவோ, வறுமையை ஒழிக்கும் பொருட்டாகவோ வருமானம் பயன் படுத்தப்பட வேண்டும்.

இவையே ஆங்கிலச் சட்ட அடிப்படையில் எழும் தரும காரியங்களாகக் கருதப்படுகின்றன. ஆனால், இசுலாமிய சட்டப்படி, தரும காரியம்'என்பது மிகப் பரந்த பொருளை உள்ளடக்கி நிற்கின்றது.

(1) மேலே கூறப்பட்ட ஆங்கிலச் சட்ட அடிப்படையில் உள்ள பொதுக் காரியங்கள்.

(2) இசுலாம் கற்பிக்கும் வணக்கம் (Prayer), அதைப் பேணும் காரியங்கள்.

(3) தம்முடைய உற்றார் உறவினர் பயன்பெறுமாறு ஒரு முசுலிம் செய்யும் கடமையும் காரியங்களும் ஆகியவை இசுலாமிய சட்டப்படி தரும காரியங்களே.

குறிப்பிடப்பட்ட நோக்கம், சமயம் திருப்பணி ஆகிய காரியங்களுக்குரியதுதானா இல்லையா என்பதை அளவிட்டு அறிவதற்கு, ஆங்கிலச் சட்ட அடிப்படையில் கூறப்பட்ட தரும காரியங்களையும் மேல் நாட்டு மனோபாவத்தையும் பொருத்திப் பார்க்கவேண்டும் என்ற நீதி மன்றங்களின் பழைய முடிவு பின்னர் மாற்றப்பட்டுவிட்டது. குறிப்பிடப்பட்ட நோக்கம் இசுலாம் அனுமதிக்கும் சமயத் திருப்பணிகளுக்குப் பொருந்திவருகிறதா என்பதை யூகித்துணர்ந்து முடிவுகட்ட வேண்டும் என்பதே நீதிமன்றங்களின் இன்றைய முடிவாகும்.

'சீப்ரே' கொள்கை அல்லது இயன்ற அளவுக் கோட்பாடு (Doctrine of *Cypres*)

வக்பு அளிப்பவர், வக்பு ஏற்படுத்துவதன் நோக்கத்தைச் சந்தேகமறத் தெளிவுபடக் கூறவேண்டும். நோக்கம் தெளிவற்றதாகவோ, பொருள் விகற்பம் கொள்ளத்தக்கதாகவோ இருப்பின், ஆங்கிலச் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 'சீப்ரே' கொள்கையைப் பயன்படுத்தி, குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்கு இயன்றபடி பொருள் காணவேண்டியது நீதிமன்றங்களின் பொறுப்பாகும். அறுதியாவணம் எழுதிவைத்தவருக்குப் (Settlor) பொதுவாகத் தருமம் அளிக்கும் எண்ணமிருந்தது என்று ஆவணத்திலிருந்து தெரியவந்தால், அவரால் குறிப்பிட்டுச் சொல்லப்பட்ட நோக்கங்களில் ஒன்று இரண்டு ஒவ்வாதனவாயிருக்கக் கண்டாலும், நீதிமன்றம் அவையொத்த சமய காரியங்களுக்கோ தரும காரியங்களுக்கோ வக்பு சொத்தைப் பயன்படுத்தக் கட்டளை யிடலாம். அறுதி ஆவணத்தில் நோக்கம் எதுவும் குறிப்பிட்டுச் சொல்லப்படாமல் இருந்தாலோ, அல்லது குறிப்பிட்டுச் சொல்லப்பட்ட நோக்கம் நடைமுறைக்கு ஒவ்வாததாக அல்லது செயல்படுத்தப்பட முடியாததாக இருந்தாலோ, 'சீப்ரே' கொள்கையைப் பயன்படுத்தி, வக்பு ஏற்படுத்தப்பட்ட சொத்தின் வருமானத்தை, அதனுடன் நெருங்கிய நோக்

கங்களுக்கோ, தொடர்புடைய நோக்கங்களுக்கோ பயன்படுத்த ஆணை யிடலாம். அதேபோல், சொல்லப்பட்ட நோக்கங்களில் ஒன்று செயல் படத் தக்கதாயும், மற்றொன்று செயல்பட முடியாததாயும் கருதப் பட்டால், மொத்த வருமானத்தையும் செயல்படத்தக்க காரியத்திற்கே பயன்படுத்துமாறு ஆணை இடலாம்.

உற்றார் உறவினர் நலன் கருதி 'வக்பு' ஏற்படுத்தல் (வக்பு-அலல்-அவுலாது): உற்றார் உறவினர் நலனை முன்னிறுத்தி வக்பு ஏற்படுத்தப்பட்டால் அதைக் 'குடும்ப வக்பு' என்றும், உடனடி யாகப் பொதுவான காரியங்களுக்காக ஏற்படுத்தப்படும் வக்பைப் 'பொது வக்பு' என்றும் இரண்டாகக் கூறுவர். ஆனால், இது சரியன்று. ஏனெனில், இசுலாமிய சட்டப்படி, சொத்துரிமையை ஆண்டவனுக்கு அர்ப்பணித்து, அதன் பயனையும் வருவாயையும் இசுலாம் இசைவுதரும் மதம், திருப்பணி, தருமம் ஆகியவற்றிற்காக மக்கள் குலத்திற்கே பயன் படுத்துவதுதான் 'வக்பு' ஆகும். ஆனால், ஒரு முசுலிம் வக்பு ஏற்படுத்தி, அதன் பயனை உற்றார் உறவினர் நலனுக்கு உடனடியாகக் கொடுத்து, அவர்கள் இல்லாமற் போகும்பொழுது அதை இசுலாம் அங்கீகரிக்கும் காரியங்களுக்காகப் பயன்படுத்துமாறு அறிவிப்பது சட்டப்படி செல்லுடைமையாகும். இது 'வக்பு-அலல்-அவுலாது' என்று அழைக்கப்படுகிறது. வக்பு ஏற்படுத்தப்படும் பயனும் நோக்க மும் ஒன்றே. வக்பு-அலல்-அவுலாதில் பயன் காலம் கடந்து விளை கிறது. அதாவது, முதலில் வக்பு செய்தவரின் குடும்பத்தவர்கள் பயன் பெற வழி செய்யப்படுகிறது. ஆனால், குடும்பத்தவர்களே வக்பு சொத்தின் பயனை அனுபவிக்க வேண்டும் என்று அறிவித்தால் அது வக்பு ஆகாது. எவ்வளவு காலம் கடந்தாலும், மக்கள் குலத்திற்கு அதன் பயன் வந்துசேர வேண்டும். இல்லையென்றால், அது 'வக்பு' ஆகாது. ஆகவே, குடும்ப வக்பு, பொது வக்பு என்று பிரித்துக் கூறப் படவேண்டியதில்லை. இரண்டும் ஒன்றே. முன்னதில் பயன் காலம் கடந்து விளைகிறது; பின்னதில் உடனடியாக விளைகிறது.

ஒரு முசுலிம் குடும்பத்தவர் சுயநலனை முன்னிறுத்தி 'வக்பு-அலல்-அவுலாது' ஏற்படுத்துவது செல்லுடைமை ஆகுமா? என்ற ஒரு கேள்வி எழுந்தது. இப் பொருள் குறித்து, 1913ஆம் ஆண்டு வக்பு செல் லுடைமையாக்கும் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னுள்ள நிலை என்ன? அதன்பின் உள்ள நிலை என்ன? என்று பார்த்தால், இரண்டும் ஒன்றே என்று கூறலாம். ஆயினும், இரண்டிற்கும் இடையே ஏற்பட்ட மாற்றம் மிகவும் முக்கியமானது.

'வக்பு–அலல்–அவுலாது' என்பது, இசுலாம் அனுமதிக்கும் தரும காரியங்களை இறுதியாக நிறுத்தி, நெருங்கிய வாரிசுகளுக்கோ, உற்றார்

உறவினருக்கோ, அவர்களுடைய சந்ததியினருக்கோ, அவர்களுக்குப் பிறக்கப் போகும் குழந்தைகளுக்கோ தலைமுறை தலைமுறையாக, வக்பு சொத்தின் பயனை அனுபவிக்க உரிமை அளிப்பதே ஆகும். இப்படி வக்பு ஏற்படுத்தப்படுவதை இசுலாம் தருமம் என்று வரவேற்கிறது. ஆனால், 1913ஆம் ஆண்டு வக்பு செல்லுடைமையாக்கும் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர், உற்றார் உறவினர் நலனை முன்னிறுத்தி ஏற்படுத்தப்பட்ட 'வக்பு-அலல்-அவுலாது' செல்லுடைமை ஆகாது என்று நீதிமன்றங்கள் கருதின; இப்படி ஏற்படுத்தப்படுவதை 'வக்பு' என்று ஏற்க மறுத்தன; செல்லுடைமையாகாது என்று தீர்ப்பு அளித்தன. 'முதலில் உங்கள் உறவினரின் துன்பத்தைப் போக்க இயன்ற உதவி செய்யுங்கள்' என்று முஹம்மது நபி அவர்களே கூறி இருப்பதால், 'வக்பு-அலல்-அவுலாது' தூய்மையான இசுலாமிய சட்டப்படி தருமநோக்கு உடையதே ஆகையால், அது செல்லுடைமையாகும் வக்பு என்று கூறலாம்.[1]

Abdul Fata *vs* Rasamaya (1894)

(22 Cal-619)

இரு முசுலிம் சகோதரர்கள் ஒரு வக்பு ஆவணத்தை எழுதி வைத்தனர். அதன்மூலம் அவர்களுடைய நிலையியல் சொத்துக்களை 'வக்பு' செய்துவைத்து, அவற்றிலிருந்து வரும் வருமானத்தை அவர்களுடைய குழந்தைகளுக்கும், அதன்பின்னர் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் தலைமுறை தலைமுறையாக அனுபவித்து வரவும், அப்படித் தலைமுறையினர் சந்ததி அற்றுப்போனால், விதவைகளுக்கும் அனாதைகளுக்கும் ஏழைகளுக்கும் அவைபயன்படுத்தப்படவும் வழிசெய்திருந்தனர். குடும்பத்தவர்களை முன்னிறுத்தி, அவர்கள் பயனடையும்படி செய்து, அவர்கள் சந்ததியற்றுப் போனால் அதன்பிறகே பொதுக் காரியங்களுக்குப் பயன்படுத்த வழிசெய்யப்பட் டிருப்பதால், இந்தச் சொத்தை வக்பு செய்த நோக்கம் இசுலாமிய சட்டம் அங்கீகரிக்கும் மதம், தருமம், திருப்பணி ஆகிய காரியங்களின்பொருட்டு என்று கருதலாமா? தருமம் என்கிற கேள்வியே, குடும்பத்தார் சந்ததியற்றுப் போகும் பொழுதுதான் எழுகிறது; குடும்பத்தாரின் தலைமுறையினர் இருக்கின்றவரையில் தருமம் என்ற பிரச்சினையே எழாது. தருமம் என்பது வெகு தொலைவிலேயே இருக்கிறது. எனவே, இசுலாமிய சட்டப்படி இந்த 'வக்பு' ஏற்படுத்தப்பட்டது செல்லாது என்று வாதிடப்பட்டது.

---

[1] 'அவ்லாது' என்றால் பிற்சந்ததியில் உள்ள குழந்தைகள் உள்ளிட்ட மக்கட்பேறு என்பது பொருள். வக்பு அளித்தவரின் பிள்ளைகளும் அடுத்த அடுத்த சந்ததியினரும் பயனடையும் வக்பு சொத்தே 'வக்பு அலல் அவுலாது' என்று அழைக்கப்படுகிறது.

இசுலாமிய கொள்கைக் கோட்பாட்டின்படி, தனக்கு மிஞ்சித்தான் தருமம் என்பதால், தருமமே வீட்டில்தான் துவங்குகின்றது—(charity begins at home). பிச்சையளிக்கிறேன் என்றும், தருமம் தருகிறேன் என்றும் ஒருவன் பிறருக்கு அள்ளி வழங்குவதை விட, வறுமையில் வாடும் தன் நெருங்கிய உறவினராகிய குடும்பத்தவருக்கு (சதக்காவாக) ஈவதே தருமங்களில் தலைசிறந்தது என்று முஹம்மது நபி அவர்களே நல்லுரை நவின்றுள்ளார்கள். அவர்களுடைய வாழ்க்கையிலும் இக் கொள்கையினையே அன்னார் கடைப்பிடித்திருக்கிறார்கள். எனவே, இந்த 'வக்பு' இசுலாமிய சட்டப்படி தரும சிந்தையோடு ஏற்படுத்தப்பட்டதே என்று எதிர்வாதம் செய்யப்பட்டது.

பிரிவி கவுன்சில் எதிர்வாதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. இது போன்று அங்கொன்றும் இங்கொன்றுமான கருத்துக்களை அடிப்படையாக வைத்து நாம் தீர்ப்பளிக்க முடியாது. தெளிவான விளக்கங்கள் இல்லாது இதை நாம் பயன்படுத்தித் தீர்ப்பளிப்பது ஆபத்தானது என்று கூறிற்று.

பிரிவி கவுன்சில் பிரபுக்களின் எண்ணத்தில், ஆங்கிலேய சட்ட அடிப்படையிலுள்ள தரும காரியங்களே சரியென்று பட்டதால், அவற்றையே பின்பற்றி, மேற்கூறிய 'வக்பு' செல்லுடைமை ஆகாது என்று அம் மன்றம் தீர்ப்பளித்தது.

சொத்தின் பயனைச் சுற்றத்தாருக்கும், அவர்களுடைய குழந்தைகளுக்கும், அன்னாரின் வழித்தோன்றல்களுக்கும் தலைமுறை தலைமுறையாக உரித்தாக்கி, அவர்க இறுதியில் சந்ததியற்றுப் போனால், அதை ஏழைகளுக்கும் அனாதைகளுக்கும் பயன்படுத்த வக்பு ஏற்படுத்துவதன் மூலம் தரும காரியம் என்பது நெடுங்காலத்திற்குத் தள்ளிவைக்கப்பட்டதாகவும், நிகழ்வுபெறாத ஒன்றோ என்று சந்தேகத்திற்குரியதாகவும் இருப்பதால், பிரிவி கவுன்சில் மேற்கூறிய தீர்ப்பை அளித்தது.

இப்படிக் கூறப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பு, தூய இசுலாமிய சட்டத்திற்கு முரண்பட்ட கருத்து ஆகையால், தங்கள் குடும்பத்தவர்களுக்குச் சொத்தின் பயனை முன்னிறுத்தி 'வக்பு' ஏற்படுத்த வழிவகை செய்யுமாறு முசுலிம்கள் அரசாங்கத்தை வேண்டினர். பிரிவிகவுன்சிலின் தீர்ப்பு இசுலாமியர் கொள்கை கோட்பாட்டிற்கு முரணானது என்று சுட்டிக் காட்டி, குடும்பத்தவருக்குச் சொத்தின் பயனை முன்னிறுத்தி 'வக்பு, ஏற்படுத்த உரிமையளிக்கும் சட்டம், ஒன்றை இயற்றுமாறு அவர்கள் குரல் எழுப்பினர். இதன் பயனாக, 1913-ல் முசுலிம் 'வக்பு செல்லுடைமையாக்கும் சட்டம், இயற்றப்பட்டது. குடும்பத்தவருக்குப் பயனை முன்னிறுத்தி, அதன் பின்னர் தரும காரியங்களுக்குப் பயன்படுத்துமாறு ஏற்படுத்தப்பட்ட வக்புகளைச் செல்லுடைமையாக்குவதே இச் சட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

1913-ம் ஆண்டு முசுலிம் வக்பு செல்லுடைமையாக்கும் சட்டத்தின் முக்கிய சட்டக் கூறுகளாவன :

பிரிவு 2-ல், வக்பு என்பது 'இசுலாம் இசைவு தரும் மதம், திருப்பணி, தருமம் ஆகிய காரியங்களுக்காக முசுலிம் ஒருவர், அவருடைய எந்தச் சொத்தையும் நிலையான அர்ப்பணம் செய்வதாகும்' என்று இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது.

3ஆவது பிரிவில் 'கீழே குறிப்பிடப்படும் நோக்கங்களைச் சேர்த்து, இசுலாம் அனுமதிக்கும் அங்கீகரிக்கப்பட்ட மற்ற எல்லா நோக்கங்களுக்கும் ஒரு முசுலிம் வக்பு ஏற்படுத்துவது சட்டத்திற்கு உகந்ததாகும்' என்று கூறப்பட்டிருக்கிறது :

(அ) குடும்பத்தினருடையவும், அவர்தம் குழந்தைகளுடையவும், வருங்காலத் தலைமுறையினருடையவும் பராமரிப்பிற்கும் பாதுகாப்பிற்கும், முழுமையாகவோ, பகுதியாகவோ பயனடையும்படி 'வக்பு' ஏற்படுத்தப்பட்டிருந்தாலும்,

(ஆ) 'வக்பு' ஏற்படுத்துபவர் ஹனபி முசுலிமாக இருந்தால், வாழ்நாள் முழுவதும் அவர் தம்முடைய பராமரிப்பிற்கும், பாதுகாப்பிற்கும், அல்லது அவர் பட்ட கடனைத் தீர்ப்பதற்கும் வக்பில் இடமளித்திருந்தாலும்,

(இ) வக்பின் இறுதிப்பயன் வெளிப்படையாகவோ உட்கிடையாகவோ ஏழைகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்தாலும், அல்லது இசுலாம் அங்கீகரிக்கும் நிலையான மதம், திருப்பணி, தருமம் ஆகிய காரியங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தாலும், ஏற்படுத்தப்பட்ட வக்பு செல்லுடைமையாகும்.

ஏழைகளுக்கும், இசுலாம் அங்கீகரிக்கும் நிலையான மதம், திருப்பணி, தரும காரியங்களுக்குமென்று ஒதுக்கப்பட்டிருக்கும் பயன், குடும்பத்தவரோ, குழந்தைகளோ, வாரிசுகளோ அற்றுப்போகும் வரை நெடுநாள் தள்ளிப்போடப்பட்டிருப்பதைக் காரணமாகக் காட்டி, 'மேற்குறிப்பிட்டபடி ஏற்படுத்தப்பட்ட வக்பு செல்லுடைமையாகாது' என்று கருதுவதற்கில்லை என்று பிரிவு 4-ல் கூறப்பட்டுள்ளது.

1913-ம் ஆண்டு முசுலிம் வக்பு செல்லுடைமையாக்கும் சட்டத்தால் ஏற்பட்ட விளைவுகள்

(1) மேற்கூறப்பட்ட அப்துல்ஃபதா vs ராசாமாயா வழக்கில் குடும்பத்தவர் நலனை முன்னிறுத்தி ஏற்படுத்தப்பட்டது போன்ற 'வக்பு' இப்பொழுது சட்டவரம்பிற்கு உட்பட்டதாகிவிட்டது.

(2) பயனை இறுதியாக ஏழைகளுக்கென்று ஒதுக்குவது வெளிப்படையாகவோ உட்கிடையாகவோ (expressly or impliedly) இருக்கலாம்.

(3) ஹனபி முசுலிமாயின், அவருடைய வாழ்நாளில் தம்மைப் பராமரித்துக்கொள்ளவும், பாதுகாத்துக்கொள்ளவும் பயனை ஏற்படுத்தித் தரும் 'வக்பு' செல்லுடைமையாகும் எனச் சந்தேகமறக் கூறப்பட்டுள்ளது.

(4) வக்பு அளித்தவர் ஹனபி முசுலிமாக இருந்தால், வக்பு சொத்தின் வருமானத்திலிருந்து அவர் பட்ட கடனைத் தீர்க்க வழி செய்யும் 'வக்பு' செல்லுடைமையாகும்.

(5) பிரிவு 2-ல், வக்பின் இலக்கணம் வகுக்கப்பெறும் பொழுது, 'எந்தச் சொத்தாயினும்' (any property) என்று கூறப்பட்டிருப்பதால், அசைவியல் சொத்தையும் (movable property) வக்பு அளிக்கலாம் என்று தெளிவாக்கப்பட்டுள்ளது.

(6) மதம், திருப்பணி, தருமம் என்பன இசுலாமிய சட்டம் அங்கீகரிக்கும் நோக்கங்களுக்கு உட்பட்டு இருக்க வேண்டும் என்பதும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

(7) எதிர்காலத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கும் தலைமுறை தலைமுறையாக வக்பு சொத்தைப் பயனடையச் செய்ய வழிகோலியதன் மூலம், வரையறையிலா நிலையின் எதிர் விதிக்கு (Rule against perpetuity) முரண்பட்ட வக்பு செல்லுடைமையாகும் என்பதும், ஆயுள் சொத்துரிமை காலாகாலத்திற்கு அளிக்கப்படமுடியும் என்பதும் தெளிவாகின்றன.

(8) வக்பு சொத்தில் வாரிசுகள் ஹனபி சட்ட பரம்பரைச் சொத்துரிமைப்படி தலைவிகித இறக்கம் (Succession *per capita*) பெறுது, கிளைவிகித இறக்கம் (Succession *per stirpes*) பெறுவர்.

1930ஆம் ஆண்டு முசுலிம் வக்பு செல்லுடைமையாக்கும் சட்டம் (The Mussalman Wakf Validating Act, 1930)

1913ஆம் ஆண்டு முசுலிம் வக்பு செல்லுடைமையாக்கும் சட்டம் முன்மேவு சட்டம் (Retrospective) இல்லையாதலால், 1913ஆம் ஆண்டிற்கு முன் ஏற்படுத்தப்பட்ட வக்பு குடும்பத்தவர் நலனை முன்னிறுத்தி நின்றால், அது செல்லுடைமை யாகாது என்றும், 1913ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட வக்புகளே இச் சட்டத்தின் மூலம் செல்லுடைமை யாகும் என்றும் நீதிமன்றங்கள் தீர்ப்பளித்தன. இதன் பயனாக, 1930ஆம் ஆண்டில், 'முசுலிம் வக்பு செல்லுடைமை

யாக்கும் சட்டம்' நிறைவேற்றப்பட்டது. அதன்மூலம், 1913ஆம் ஆண்டிற்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட வக்புகளுக்கும், இச் சட்டம் அங்கீகாரம் அளிக்கிறது. எனவே, 1913ஆம் ஆண்டிற்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட வக்பும் பின்னர் ஏற்படுத்தப்பட்ட வக்பும் இச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள விதித் துறைகளுக்கு உட்பட்டிருந்தால், செல்லுடைமையாகும்.

1954ஆம் ஆண்டு வக்பு சட்டம் (The Wakf Act—1954)

நாட்டிலுள்ள வக்புகளை நன்முறையில் நிர்வகிப்பதற்கும் பராமரிப்பதற்கும் 1954ஆம் ஆண்டில் வக்பு சட்டம் ஒன்று இயற்றப்பட்டு, இன்றும் அதுவே நடைமுறையில் இருந்தும்வருகிறது.

ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள எல்லா வக்புகளையும் கணக்கெடுத்து, அவற்றைச் சரிவர நிர்வகித்து வருவதற்கு 'வக்பு வாரியம்' (Wakf Board) ஒன்று ஏற்படுத்துவதற்கும், அது தக்கபடி செயல்படுவதற்கும், ஆலோசனை பெறுவதற்கும் மத்திய அரசு மத்திய 'வக்பு கவுன்சில்' ஒன்று ஏற்படுத்தவும் இதில் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் உள்ள வக்பு வாரியத்துக்கு, மாநிலத்திலுள்ள 'சுன்னீ வக்பு' 'ஷியா வக்பு' இரண்டையும் பிரித்து, வக்பின் குறிக்கோள், தன்மை, மொத்த வருமானம், மொத்தம் செலுத்தப்பட வேண்டிய வரித் தொகை, வருமானத்தை வசூலிப்பதற்கான செலவு, முத்தவல்லியின் ஊதியம், சம்பளம், மற்றும் தேவையான விவரங்களையும் கணக்கெடுத்து, வக்புகளின் அட்டவணையைத் தயாரித்து, அதை அரசிதழில் பிரசுரிக்க உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

மத்திய வக்பு கவுன்சிலில் 21 நபர்கள் இருப்பார்கள். இது மாநிலங்களிலுள்ள வக்பு வாரியத்துக்கு ஆலோசனை வழங்கி வருவதோடு, மத்திய அரசின் வக்பு காரியங்களையும் கவனித்து வரும்.

தமிழ் நாட்டில் பதினொரு உறுப்பினர்களைக் கொண்ட வக்பு வாரியம் ஒன்று 1958-ல் நிறுவப்பட்டது. 1966-ல் அது கலைக்கப்பட்டு, 1971-ல் திரும்பவும் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றது. ஒவ்வொரு வக்பின் முத்தவல்லியும் வக்பின் வரவு-செலவு கணக்கை வக்பு வாரியத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும். வரவு-செலவுகள் சரியாக இருக்கின்றனவா என்று தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்படும். ஒவ்வொரு முத்தவல்லியும் வக்பின் வரவு செலவுகளுக்கு ஒழுங்கான கணக்கு வைத்திருக்க வேண்டும். வக்பு வாரியத்தால் நியமிக்கப்பட்ட மேற்பார்வையாளர்களால் வக்பு சொத்துக்களும் அவற்றின் பராமரிப்பும் அவ்வப்போது மேற்பார்வை செய்யப்பட்டு வரும். ஒவ்வொரு

முத்தவல்லியும் 'வக்பை' வக்பு வாரியத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும். 'வக்பை' மேற்பார்வை செய்துவரும் முத்தவல்லி, 'வக்பை'ப் பதிவு செய்யத் தவறினாலும், இச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளதுபோல் உள்ள கணக்குகளையும் விவரங்களையும் கொடுக்கத் தவறினாலும், வக்பு வாரியத்தின் ஆணையை ஏற்று விவரங்களோ செய்திகளோ கொடுக்கத்தவறினாலும் வக்பு சொத்தையோ, அதன் கணக்கையோ, ஆவணங்களையோ பரிசீலனைக்கு அனுமதிக்க மறுத்தாலும், வக்பு வாரியத்தினுடையவோ நீதிமன்றத்தினுடையவோ ஆணைகளைப் புறக்கணித்தாலும், வரி பாக்கி வைத்திருந்தாலும், இந்தச் சட்டத்தின் விதித் துறைகளுக்கேற்ப விதிக்கப்பட்ட ஆணைகளைக் கடைப்பிடிக்காது மீறி நடந்தாலும் தண்டனைக்குள்ளாக்கப்படுவர். இச் சட்டத்தின் 43ஆவது பிரிவில் கூறப்பட்ட காரணங்களின் அடிப்படையில், முத்தவல்லியை நீக்கும் அதிகாரம் வக்பு வாரியத்துக்கு உண்டு. வக்பு வாரியத்தில் மாநிலச் சட்டசபை உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும், இசுலாமிய சட்டம் அறிந்த சட்ட வல்லுநர்களும், நீதி நிர்வாகம் முதலியவற்றில் தேர்ச்சி பெற்றவர்களும், 'வக்பை'ப் பராமரித்து வரும் முத்தவல்லிகளும் அங்கம் வகிக்கத் தகுதி பெற்றவராவர். மற்றும், அப்படிப்பட்ட அங்கத்தினர் உரிமை வயது எய்தப்பெற்ற முசுலிமாகவும், சித்தம் தெளிந்தவராகவும், 'நொடிப்பு நிலை' (Insolvent)க்குள்ளாகாதவராகவும், குற்ற இயல் சட்டத்தின்மூலம் தண்டனை பெறாதவராகவும், முன்னர் இதில் உறுப்பினராக இருந்து, லஞ்சம் கையாடல் முதலிய காரணங்களுக்காக நீக்கப்படாதவராகவும் இருக்க வேண்டும். வக்பு வாரியமும் ஆண்டாண்டு தோறும் கணக்கினை அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

ஷியா சட்டப்படி வக்பு ஏற்படுத்துவதற்கு இன்றியமையாது வேண்டப்படுவன

(1) நிபந்தனையற்றதாயும் காலவரையறை அற்றதாயும் வக்பு சொத்து இருக்கவேண்டும்.

(2) 'வக்பு பொருளின்' உடைமை ஒப்படைப்பு உடனடி நிகழ வேண்டும்.

(3) வக்பு அளிப்பவர் பொருளின்மீது தாம் வைத்திருக்கும் முழுச் சொத்துரிமையையும் துறந்துவிட வேண்டும்.

Baqar Ali Khan *vs* Anjuman Ara Begum (1902) (25 All 236)

ஒரு ஷியா முசுலிம் 'உயில்' மூலம் வக்பு ஏற்படுத்தினால் அது செல்லுடைமையாகுமா? என்ற கேள்வி எழுந்தது. ஷியா சட்டப்படி 'வக்பு' ஏற்படுத்தினால், 'வக்பு' பொருளின் சொத்துரிமையைப்

பயன் பெறுவோரிடம் (Beneficiaries) உடனடி மாற்றித்தர வேண்டும். உடைமை ஒப்படைப்பும் உடனடி நிகழவேண்டும். 'உயில்' எழுதி வைப்பதன்மூலம், 'வக்பு' சொத்தின் உயிலை ஏற்படுத்தியவர் இறந்த பின்னரே அது கைம்மாறுகிறது. உடைமை ஒப்படைப்பு உடனடி நிகழமுடியாது. மேலும், வக்பு அளித்தவர் இறந்த பின்னர், அவரால் நேரடி உடைமை ஒப்படைப்புச் செய்யமுடியாது. எனவே, ஷியா முசுலிம் 'உயில்' மூலம் 'வக்பு' ஏற்படுத்தினால் அது செல்லுடைமை யாகாது என்று வாதிடப்பட்டது. ஆனால், பிரிவி கவுன்சில் இந்த வாதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஷியா முசுலிம் விரும்பினால் உயில் மூலம் 'வக்பு' ஏற்படுத்துவது செல்லுடைமையாகும் என்று அது தீர்ப்பளித்தது.

'வக்பு' சொத்தைப் பராமரிக்கும் முத்தவல்லியின் பொறுப்பு

வக்பு சொத்தை மேற்பார்வை செய்து வருபவர் 'முத்தவல்லி' என்று அழைக்கப்படுகிறார். பொதுவாக, அறுதியாவணம் வழங்கியவர் (Settlor) முத்தவல்லியை நியமிப்பது வழக்கம். ஆவணத்தில் முத்த வல்லியாக எவர் எவர் தொடர்ந்து வரவேண்டும் என்று கூறப்படாதிருந் தால், வக்பு அளித்தவரோ, அவருடைய குழந்தைகளோ, குடும்பத்தி லுள்ள உறவினர்களோ வக்பு சொத்துக்கு முத்தவல்லியாக நியமிக்கப் படலாம். முசுலிம் அல்லாதவர்களையும் முத்தவல்லியாக நியமிப்பதில் தடை எதுவும் இல்லை.

இசுலாமிய சட்டப்படி 'வக்பு' ஏற்படுத்தப்பட்டவுடன், வாக்கிபின் உரிமை அனைத்தும் ஆண்டவனைச் சேர்ந்தடைகிறது. அதன் பின்னர் எக்காரணத்தைக் கொண்டும் மூலப்பொருளின் சொத்துரிமை மாறுவ தில்லை. அதனால் பயனடையும் உரிமைமட்டும் அவ்வப்போது மாறிக் கொண்டிருக்கும். வக்பு சொத்தைப் பராமரித்து வருபவரை, முத்த வல்லி, ஸஜ்ஜாதாநஷீன், முஜாவர் என்று எந்தப் பெயர் சூட்டி அழைத்தாலும் அவருக்கு வக்பு சொத்தை மேற்பார்வை செய்யும் உரிமையைத் தவிர, வேறெந்த உரிமையும் கிடையாது. முத்தவல்லி ஆங்கிலச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள பொறுப்புரிமையர் (Trustee) ஆகார். இருவர் உரிமைகளும் வேறுபடுகின்றன.

முத்தவல்லிக்கு வக்பு சொத்தைப் பராதீனம் செய்யும் உரிமை கிடையாது. வக்பு ஆவணத்தில் வக்பு சொத்தைப் பராதீனம் செய் யும் உரிமை வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது நீதிமன்ற ஆணை பெற்று இருந்தாலோ அல்லாமல் வக்பு சொத்தைப் பராதீனம் செய்யும் உரிமை முத்தவல்லிக்குக் கிடையாது. ஒருகால் வக்பு சொத்தை உரிமை பெறாது பராதீனம் செய்திருந்தால், பராதீனம் செய்வதைத் தவிர வேறு வழி கிடையாது என்று மெய்ப்பித்து அதை நீதிமன்றம்

ஏற்றுக்கொண்டால், முன்மேவு (Retrospective) அனுமதி வழங்க லாம். வக்பு சொத்தை அடைமானம் வைக்கும் உரிமை முத்தவல்லிக் குக் கிடையாது. வேளாண்மை செய்யும் நிலமாயின் அதை மூன்றுண்டு களுக்கும், தரிசு நிலமாயின் அதை ஓராண்டிற்கும் குத்தகைக்கு (lease) அளிக்க அவர் உரிமை பெற்றவராவார். மேற்குறிப்பிடப்பட்ட கால வரையறையினும் அதிகமாகக் குத்தகைக்குக் கொடுக்க வேண்டுமானல், வக்பு ஆவணத்தில் அதற்குரிய அதிகாரம் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது நீதிமன்ற ஆணை இருந்தாலோ மட்டுமே அவர் அவ்விதம் செயல்பட உரிமை பெற்றவராவார்.

அறுதி ஆவணத்தில் அதிகார மாற்றத்திற்கு உரிமை வழங்கி யிருந்தாலன்றி, முத்தவல்லி தம்முடைய அதிகாரத்தைப் பிறருக்கு மாற்றித் தர உரிமையற்றவ ராவார். முத்தவல்லியின் பொறுப்புப் பரம்பரையாகக் கைம்மாறக் கூடியதன்று. ஆயினும், வக்பு ஆவணத்தில் அதற்கு உரிமை வழங்கப்பட்டிருந்தாலோ, வட்டார வழக்காகக் கடைப் பிடிக்கப்பட்டு வந்தாலோ, முத்தவல்லிப் பதவி பரம்பரையாகக் கைம் மாறலாம்.

முத்தவல்லியின் தகாத செயல்களுக்காக, வக்பு சொத்தின் மூலப் பொருளையோ அதன் பயனையோ நீதிமன்ற ஆணையின்மீது ‘ஜப்தி’ செய்ய முடியாது. ஆனல், அதிலிருந்து கிடைக்கப்பெறும் முத்தவல்லி யின் சம்பளம் ஜப்தி செய்யப்படலாம்.

வக்பு சொத்தின் பாதுகாப்பிற்காக முத்தவல்லி தம்மாலியன்ற எல்லாக் காரியங்களையும் தக்க முறையில் முன் எச்சரிக்கையோடு செய்துகொள்ளலாம்.

முத்தவல்லியின் கைவசமோ, அவருடைய வாரிசுகளின் கை வசமோ இருக்கும் வக்பு சொத்தை மீட்பிப்பதற்குக் காலவரையறை இல்லை.

முத்தவல்லி தாம் புரியும் ஊழியங்களுக்குத் தக்கபடி, ‘வக்பு ஆவண’த்தில் குறிப்பிடப்பட்டபடியோ நீதிமன்ற ஆணையின் பேரிலோ, சம்பளம் பெறத் தகுதியுடையவர் ஆவார்.

முத்தவல்லி தம்முடைய செயல் அதிகாரத்தை வேறு ஒருவருக்கு அளித்திருந்தால், முத்தவல்லியின் மரணத்தாலோ, மாற்றத்தாலோ அவர் அளித்த அதிகாரம் முடிவடைந்துவிடும்.

தம்முடைய கடமைகளைச் சரிவரச் செய்து வருவதன் பொருட்டு, முத்தவல்லி தக்க வேலையாட்களையும் முகவர்களையும் (Agents) நிய மித்துக் கொள்ளலாம்.

வக்பு அளித்தவர் முத்தவல்லியை நியமித்த பின்னர், இவரை மாற்றும் அதிகாரத்தைத் தம்மிடம் வைத்திருப்பதாக ஆவணத்தில் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தாலன்றி, இவரை எவராலும் மாற்ற முடியாது. ஆனால், பண நொடிவு (Insolvency), நம்பிக்கைத் துரோகம், பணம் கையாடல், வக்பு சொத்தின்மீது உரிமை கோரல் முதலிய காரணங்களுக்காக நீதிமன்றம் முத்தவல்லியை அப் பொறுப்பி லிருந்து நீக்கிவிட முடியும்.

முத்தவல்லி வக்பு சொத்தை அதிகாரமின்றிப் பராதீனம் செய்ய நேர்ந்தால், சட்டம் நிர்ணயிக்கும் காலக் கெடுவுக்குள்ளாக அவர்மீது வழக்குத் தொடர்ந்து அதை மீட்பிக்கவேண்டும். அசைவியல் சொத்தா யிருப்பின், மூன்று ஆண்டுகளுக்கு உள்ளாகவும், நிலையியல் சொத்தா யிருப்பின், மாற்றம் செய்யப்பட்டதிலிருந்து பன்னிரண்டு ஆண்டுகளுக் குள்ளாகவும் வழக்குத் தொடரவேண்டும்.

பள்ளியும் (Mosque) இசுலாம் அங்கீகரிக்கும் தரும நிலையங்களும்

(1) **பள்ளி** (Mosque): பள்ளி என்பது ஆண்டவனைத் தொழும் தூய்மையான இடம் ஆகும். பள்ளி கட்டுதற்பொருட்டு நிலத்தை 'வக்பு' செய்தால், வக்பு அளிப்பவர் அந்த இடத்தைத் தனியாய்ப் பிரித்துக் கொடுத்துவிட வேண்டும். பள்ளிக்குச் செல்லும் பாதை ஒன்றும் தனியாக ஒதுக்கப்படவேண்டும். முத்தவல்லியிடம் உடனடி யாக உடைமை ஒப்படைப்புச் செய்துவிட வேண்டும்.

ஒருமுறை பள்ளிக்கென்று இடம் ஒதுக்கப்பட்டு விட்டால், என் றென்றும் அது ஆண்டவனின் திருத்தலமாகக் கருதப்படும். எந்தவித மான கட்டுப்பாடுமின்றி, 'ஷியா', சுன்னி என்ற வேறுபாடின்றி, எல்லோருக்கும் ஆண்டவனைத் தொழுவதற்கு அங்கே உரிமையளிக்கப் படுகிறது. குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டும் சொந்தமானது என்றோ, குறிப்பிட்ட வட்டார மக்களுக்கு மட்டும் சொந்தமானது என்றோ, குறிப் பிட்ட நாட்டினருக்கு மட்டும் சொந்தமானது என்றோ கூறி, தூய மனத் தோடு ஆண்டவனை வணங்குவதற்கு வரும் எந்த ஒரு முசுலிமையும் எவரும் தடைசெய்ய முடியாது. எல்லா முசுலிமுக்கும் ஆண்டவனைத் தொழும் உரிமை அப் பள்ளியில் உண்டு.

(2) **தைக்கா** (Takia): 'தைக்கா' என்பதற்கு உறையுள், கொள்ளுமிடம் என்று பொருள் கூறலாம். ஆயினும், தைக்கா என்பது பொதுவாகச் சமாதியையோ, புதைகுழி இருக்கும் இடத்தையோ குறித்து நிற்கின்றது.

உலக ஆசாபாசங்களுக்கு அப்பாற்பட்டு, ஆண்டவனின் அருளையே நாடித் திரியும் அடியார்களை ‘ பக்கீர் ’ (Fakir) என்று அழைப்பர். அத்தகு அடியார்கள் உறையுள் கொண்டு, தங்களுடைய திருப்பணிகள் மூலமும் நற்போதனையின் மூலமும் பாமர மக்களைக் கவர்ந்து, அவர்கள் திரளாகக்கூடி அடியார்களின் கருத்துக்களைக் கேட்ப தற்காக அமைந்த இடத்தில் எழுப்பப்பட்ட கட்டிடத்தைத் தைக்கா எனலாம். தைக்கா இசுலாம் அங்கீகரிக்கும் ஒரு தரும அமைப்பு (institution) ஆகும். தைக்காவின் பொருட்டு ‘ வக்பு ’ ஏற்படுத்துவது அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும்.

காங்க்காவும் தர்காவும் (Kankha and Dargha)

காங்க்காவும் தர்காவும் இசுலாம் அங்கீகரிக்கும் தரும அமைப்பு களாகும். ‘ காங்க்கா ’ என்பது இந்து தருமப்படி உள்ள ‘ மடம் ’ என்ற சொல்லின் பொருளை ஒத்து நிற்கிறது. அடியார்களின் திருப்பணி களால் ஈர்க்கப்பட்டு, அவர்களின் சமய அறிவுரைகளும் ஞானோப தேசங்களும் அடியார்க்கடியார்களைப் பெருமளவு ஈர்த்து வருங்காலை, அவர்கள் அனைவரும் பயன்பெற்றுச் செல்ல இடம் அளிக்கும் மடம் காங்க்கா என்று அழைக்கப்படுகிறது. ஆண்டவனின் அடியார் ஒருவர் தமது வாழ்நாளுக்குப் பிறகு இந்த இடத்தில் அடக்கம் செய்யப்பட் டால் அந்த இடம் ‘ தர்கா ’ என்று பெயர் பெறுகிறது.

காங்க்காவும் தர்காவும் இசுலாம் அங்கீகரிக்கும் திருப்பணி களாகவும், சமய அமைப்புகளாகவும் கருதப்படுவதால், அவற்றின் பொருட்டு ‘ வக்பு ’ ஏற்படுத்தப்படுவதும் செல்லுடைமையாகும்.

ஸுஜ்ஜாதா நஷீன் (Sujjada-nishin)

பொதுவாக ‘ காங்க்கா ’ ஸுஜ்ஜாதா நஷீனுடைய கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும். ‘ ஸுஜ்ஜாதா நஷீன் ’ என்றால், தொழுகைப் பாயில் இருப்பவர் (the one seated on the prayer mat) என்று பொருள் படும். இவர் சமயத் திருப்பணிகளின் பொருட்டு நியமிக்கப்படுபவர் ஆதலால், அவசியம் தெள்ளிய சமய ஞானம் பெற்றவராயும் இசுலாமிய சட்டம் தெரிந்தவராயும் இருக்கவேண்டும். முத்தவல்லி என்பவர் வக்பு சொத்தைப் பராமரிப்பவர் மட்டிலுமே ஆதலால், அவர் சமய ஞானம் பெற்றவராக இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. ஸுஜ்ஜாதா நஷீனை முத்தவல்லியாகவும் செயல்படலாம். ஆனால், சமயஞானமும் இசுலாமிய சட்டமும் தெரிந்த முத்தவல்லியாக இருந்தால், அவர் ஸுஜ்ஜாதா நஷீனாக நியமிக்கத் தகுதிபடைத்தவராவர்.

ஸுஜ்ஜாதா நஷீன் சமயத்திருப்பணிகளைச் செவ்வனே செய்துவரும் பொருட்டு நியமிக்கப்படுவதால், வக்பு சொத்தைப் பொறுத்தமட்டில்,

முத்தவல்லியைவிடச் சில உரிமைகள் அதிகம் பெற்றவராகக் கருதப் படுகிறார். வக்பு சொத்திலுள்ள வருமானத்தில் மிஞ்சியதை அவர் விருப்பம்போல் சமயத் திருப்பணிகளுக்குச் செலவிடவும், வக்பு ஏற் படுத்தப்பட்டவரின் குடும்பத்தவருக்கே கொடுத்துதவவும் உரிமை பெற் றவராவார். இவ்விரு உரிமைகளும் முத்தவல்லிக்குக் கொடுக்கப்பட வில்லை. ஸுஜ்ஜாதாநஷீன் தூய சமயப் பணிகளைச் செய்யவேண்டி இருப்பதால், பெண்கள் ஸுஜ்ஜாதாநஷீன் ஆக நியமனம் பெறத் தகுதி யற்றவராவர். ஆனால், முத்தவல்லியாகப் பெண்களை நியமிக்கலாம்.

‘முஜாவர்’ (Mujawar)

பள்ளி நிலங்களையும் தர்காவின் இடத்தையும் கவனித்து, அவற் றின் சுற்றுப்புறங்களைத் தூய்மைப்படுத்தி, விளக்கேற்றி வைத்தல், சாம்பிராணி புகையூட்டல் (incense) முதலான பணிகளை அன்றாடம் செய்துவருபவர்கள் ‘முஜாவர்’ என்று அழைக்கப்படுகிறார்கள். முஜா வரின் பணிவிடை, முத்தவல்லி, ஸுஜ்ஜாதாநஷீன் ஆகியவர்களின் பணிகளினின்றும் முற்றிலும் வேறுபட்டதாகும். பெண்கள் இப் பணிக்கு அமர்த்தப்படலாம்.

இமாம் (Imam)

இறைவனைத் தொழும் இடமான பள்ளிகளில் (Mosques) ஒன்றுக்கு மேற்பட்டவர் கூடிநின்று தொழுகை வணக்கத்தை நிறைவேற்றும் பொழுது, ஒரு தலைமையானவர் மற்றவர்களுக்கு முன்னின்று தொழு கையை நடத்திவைப்பார். இவர் ‘இமாம்’ என்று அழைக்கப்படுவார். இவரன்றி, ஒரு குறிப்பிட்ட பிரிவினரின் வழிகாட்டியாக முன்னின்று அப் பிரிவினரின் கொள்கைகளுக்கு விளக்கம் வழங்கி வருபவரையும், இசுலாமிய கல்வி கேள்விகளில் தலைசிறந்து ஒருவர் விளங்கிநிற்க, அவ ருடைய விளக்கங்களைப் பலரும் பின்பற்றிநின்றால் அவரையும் ‘இமாம்’ என்று அழைக்கலாம். அப்படி அழைக்கப்படுபவர்கள்தாம், இமாம் முஹம்மது, இமாம் அபூ யூசுபு போன்றோர் ஆவர்.

முல்லா (Mulla)

பொதுவாகச் சமயத் திருப்பணிகளை முன்னின்று நடத்திவைப்ப வர் ‘முல்லா’ ஆவார். திருமணம், இறப்பு, பிறப்பு முதலியவற்றின் அடிப்படையாக எழும் சடங்குகளைப் பொதுவாக முன்னின்று இவர் நடத்திவைப்பார்.

‘காஜி’ (Kazhi)

முஹம்மது நபி அவர்களுக்கும் கலீபாக்களுக்கும் பின்னர், நீதித் தீர்ப்பு அளித்தற்பொருட்டு உமையாது அரச பரம்பரையினரால் நிய

மிக்கப்பட்டவர்களைக் 'காஜி' என்று அழைத்தனர். இசுலாமிய சமய ஞானமும் சட்ட நுணுக்கமும் பெற்று, தூய்மையான மனத்தினராய், நடுநிலை நின்று நேர்மையாகச் செயல்பட்டு வந்தவர்களைக் 'காஜி' களாக அக் காலத்தில் நியமித்து வந்தனர். இவர்கள் நீதித் தீர்ப்பு வழங்கி வந்தனர். 'காஜி'யின் உரிமைகள் அனைத்தும் இந்திய உரிமையியல் நீதிமன்றத்தின் உரிமைகளோடு பின்னிப் பிணைந்து காணப் படுவதால், இப்பொழுது இந்தியாவில் 'காஜி'கள் என்பதற்கு முன் காலத்திலிருந்த பொருளைக் கொள்ளமுடியாது. ஆயினும், இசுலாமிய சமய சம்பந்தமான துறைகளில் அவர்கள் கருத்துத் தெரிவிக்கத் தக்கவர்கள் என்றே இன்றும் கருதப்படுகின்றனர்.

கப்ருஸ்தான்

கப்ருஸ்தான் என்பது, இறந்தவர்களைப் புதைக்குமிடம் என்று பொருள்படும். முசுலிம்கள் இறந்த பின்னர், அன்னவர்களின் சடலங்களைப் புதைப்பதற்குப் பயன்படுத்தப்படும் இடம் இது. இந்த இடத்தில் 'சமாதி' எதுவும் எழுப்பக்கூடாது என்று சமயக் கட்டளை இருந்தபோதினும், பழக்க வழக்கம் காரணமாக, சமாதிகளும் நினைவுக் கம்பங்களும் அங்கங்கே எழுப்பப்படுகின்றன.

11. சொத்து நிர்வாகம்
(Administration of Estate)

இறந்தவர் விட்டுச் செல்லும் சொத்திலிருந்து அவர் பட்ட கடனைத் தீர்த்து, மீதி இருப்பதைச் சொத்துரிமை இறக்கம் பெற்ற வாரிசு களுக்கு, அவரவர்களுக்குரிய விகிதத்தை அனுசரித்துப் பங்கு வைத்துக் கொடுக்க வேண்டும். இறந்தவர் விட்டுச் சென்ற நாளிலிருந்து, அதை வாரிசுகளுக்குப் பங்கிட்டு அளிக்கும் நாள்வரை நிர்வகித்து வருவதைச் சொத்து நிர்வாகம் (Administration of Estate) என்று அழைக் கிறோம்.

இறந்தவர் விட்டுச் சென்ற சொத்திலிருந்து, அவரால் விட்டுச் செல்லப்பட்ட கடன்கள் முதலில் தீர்க்கப்பட வேண்டும். கீழ்க் குறிப் பிடப்படும் முறைப்படி, இறந்தவர் சொத்தினின்றும் கடன்கள் செலுத் தப்பட வேண்டும்

(1) இறுதிச் சடங்கின்பொருட்டு ஏற்பட்ட செலவுகளும், மரணப் படுக்கையில் அவர் பட்ட கடன்களும் முதலில் கொடுத்துத் தீர்க்கப்பட வேண்டும்.

(2) அடுத்தபடியாக, காலஞ் சென்றவருக்குப் பின்னர் விருப்புறுதி மெய்ப்பிதழ் (Probate), நிர்வாக அதிகாரப் பத்திரம் (Letters of Administration) ஆகியவற்றைப் பெறுவதில் ஏற்பட்ட செலவு களுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

(3) மரணமடைந்தவர் உயிர் வாழ்ந்த இறுதி மூன்று மாதங்களுக்கு உள்ளாக, இறந்தவருக்குப் பணிவிடை செய்தவர்களுடைய கூலி கொடுக்கப்பட வேண்டியிருந்தால் அது கொடுக்கப்பட வேண்டும்.

(4) இறந்தவரால் விட்டுச் செல்லப்பட்ட கடன்கள் அடுத்துத் தீர்க்கப்பட வேண்டும்.

(5) இறந்தவர் உயில்மூலம் தமது சொத்தில் மூன்றில் ஒரு பங்கைக் கொடை அளித்திருந்தால், அது கொடுக்கப்பட வேண்டும்.

இக் கடன்கள் தீர்க்கப்பட்ட பின்னர், மீதி இருக்கும் சொத்தை, சொத்துரிமை இறக்கம் பெற்ற வாரிசுகளுக்கு அவரவர் விகிதத்தை அனுசரித்து, இறந்தவர் சுன்னீ முசுலிமாக இருந்தால் சுன்னீ சட்ட அடிப்படையிலும், ஷீயாவாக இருந்தால் ஷீயா சட்ட அடிப்படையிலும் பங்கு வைத்துக் கொடுக்க வேண்டும்.

இறந்தவர் ஒரு செல்லும்புள்ளியாக (Solvent) இருந்தால், அவருடைய சொத்துரிமை இறக்கம் பெற்ற வாரிசுகளுக்கு அவரவர் விகிதப்படி உள்ள பங்கின் உரிமை அவர் இறந்ததுமே வந்தடைந்துவிடுகிறது. இறந்தவர் பட்ட கடன்களைத் தீர்ப்பதற்கு முன்னதாகவே வாரிசுகள் தங்களுக்கு விகிதப்படி சேரவேண்டிய சொத்திற்கு உரிமையாளராகி விடுகின்றனர். அவர்கள் பங்கு பெறும் விகிதத்தை அனுசரித்து, இறந்தவர் பட்ட கடனையும் தீர்ப்பதற்குக் கடமைப்பட்டவர்களாவர். முசுலிம் சட்டப்படி நிறைவேற்றுளர்கள் (Executors) நியமிக்கப்பட்டு, அவர்களே கடனை அடைத்து, மீதி இருப்பதைச் சொத்துரிமை பெற்ற வாரிசுகளுக்குப் பிரித்துக் கொடுக்கலாம். ஆயினும், ஆங்கிலச் சட்டத்தில் உள்ளதைப்போல், நிர்வாக அதிகாரப் பத்திரம் (Letters of Administration) வழங்குவதற்கு ஒப்பாக எதுவும் இசுலாமிய சட்டத்தில் இல்லை. முசுலிம் சட்டப்படி, நிறைவேற்றுளர் (Executor) என்பவர் சொத்தைப் பராமரிக்கும் அதிகாரம் பெற்றவர். இவரை 'வாசி' (Wasi) என்று இசுலாமிய சட்டம் குறிப்பிடுகிறது. இறந்தவர் விட்டுச் சென்ற சொத்தின் உரிமை எதுவும் இவரை வந்தடையாது. மேலாளர் போன்று இவர் செயல்பட வேண்டும். இறந்தவர் விட்டுச் சென்ற சொத்திலிருந்து அவர் பட்ட கடனைத் தீர்த்துவிட்டு, மீதி இருப்பதை வாரிசுகளின் விகிதமுறையை அனுசரித்து இவர் பங்கு பிரித்துக் கொடுக்க வேண்டும். இறந்தவர் விட்டுச் சென்ற சொத்தை அடைமானம் வைக்கவோ, விற்கவோ தூய இசுலாமிய சட்டப்படி இவருக்கு உரிமை கிடையாது. இறந்தவர் பட்ட கடனைத் தீர்க்கும்பொருட்டு, அவர் விட்டுச் சென்ற சொத்தைப் பராதீனம் செய்ய இவர் உரிமையற்றவராவார். ஆனால், இந்திய இறங்குரிமைச் சட்டம் (Indian Succession Act) பிரிவு 316 முதல் 331 வரை அளிக்கப்பட்டுள்ள உரிமையும் அதிகாரங்களும் இசுலாமிய சட்டப்படி நியமிக்கப்பட்ட நிறைவேற்றுளர்களுக்கும் பொருந்துமாதலால், சொத்தை நிர்வகித்தற்பொருட்டு இவர்கள் கூடுதலான அதிகாரங்களைப் பெற்று இயங்கமுடிகிறது. தூய இசுலாமிய சட்டத்தின்மூலம் கிடைக்கப்பெறாத அதிகாரங்களான விற்பது, அடகுவைப்பது போன்ற பராதீன உரிமைகளைச் சொத்தை நிர்வகித்தற்பொருட்டும், இன்றியமையாத தேவையின்பொருட்டும் இவர்களால் பெற்று இயங்கமுடிகிறது.

இசுலாமியர் எழுதிவைக்கும் உயில் தக்க சான்றுகளுடன் மெய்ப் பிக்கப்பட்டால், அதைச் செல்லுடைமைச் சான்ருக நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளும். உயிலில் எழுதிவைக்கப்பட்ட விருப்புறுதி மெய்ப்பிக்கப் பட்டதென்றும், அதில் குறிப்பிடப்பட்டவருக்குச் சொத்தை நிர் வகிக்கும் அதிகாரம் (administration) அளிக்கப்பட்டுள்ளது என்றும் உரிய நீதிமன்றத்தில் சான்றிதழ் பெறவேண்டிய அவசியம் இல்லை. அதாவது, விருப்புறுதி மெய்ப்பிதழ் (Probate) பெற்ருலன்றி, அந்த உயிலை நீதிமன்றங்கள் சான்ருக ஏற்றுக்கொள்ளக்கூடாது என்ற விதி யில்லை. முசுலிம் ஒருவர் விட்டுச்சென்ற உயிலை நிறைவேற்றும் நிறைவேற்ருளர் அதற்கான உரிமைகளையும் அதிகாரங்களையும் இந்திய இறங்குரிமைச் சட்டத்தின் விதித்துறைகள்மூலம் பெற்றிருப்பதால், அவர் விருப்புறுதி மெய்ப்பிதழ் பெற்றவராயினும் இல்லையாயினும், இறந்தவர் விட்டுச்சென்ற சொத்து நிறைவேற்ருளரிடம் வந்து சேர்ந் தடைகிறது. எனவே, இவர் விருப்புறுதி மெய்ப்பிதழ் பெருமலும், வாரிசுகளின் இசைவு பெருமலும், இன்றியமையாத் தேவையின் பொருட்டு அச் சொத்தைப் பராதீனம் செய்யும் உரிமையை இந்திய இறங்குரிமைச் சட்டத்தின்மூலம் பெற்றவராகிருர்.

இறந்தவர் பட்ட கடனுக்கு, வாரிசுகள் தந்நிலையில் ஆளாகார். ஆயினும், அவர் விட்டுச்சென்ற சொத்தில் இவர்களுக்குக் கிடைக்கும் விகிதத்திற்குத் தக்கவாறு கடனை அடைக்க இவர்கள் கடமைப்பட்டவர் களாவார்கள்.

இறந்தவர் விட்டுச் சென்ற சொத்துக்கு நிர்வகிப்போரோ நிறை வேற்ருளரோ இல்லாதிருக்கும்பொழுது, இறந்தவருக்குக் கடன் கொடுத் தவர்கள் இருந்தால், அவர்கள் அனைத்து வாரிசுகளின்மீதும் வழக்குத் தொடர்ந்து கடனைத் திருப்பிப் பெறமுடியும். ஆனால், வாரிசுகள் தந் நிலையில் ஆளாகார் ஆதலால், கடன் கொடுத்தவர்கள் ஒருசில வாரிசு களின்மீது மட்டிலும் ஒரு வழக்குத் தொடர்ந்து, நீதிமன்ற ஆணை பெற்றனர் எனில், அது மற்ற வாரிசுகளையும் சேர்த்துக் கட்டுப்படுத்த வல்லதா என்பதில் நீதிமன்றங்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது. ஆயினும், பெரும்பாலான நீதிமன்றங்கள், கடன் கொடுத்தவர் சில வாரிசுகள்மீது மட்டுமே வழக்குத் தொடர்ந்து தீர்ப்பாணை பெற்றிருந் தால், அது அந்தச் சிலரைமட்டுமே கட்டுப்படுத்தும் என்றும், அதுவும் தத்தம் பங்கு விகிதத்திற்குத் தக்கபடியே அவர்கள் கடன் விகிதத்தை அடைக்கக் கடமைப்பட்டவர்களாவர் என்றும் தீர்ப்பளித்துள்ளன. அதாவது, தீர்ப்பாணைக்குக் கட்டுப்பட்டவர் எந்த விகிதத்தில் இறந்தவர் சொத்தில் பங்கு பெறுகிருரோ, அதே விகிதத்தில் கடன் தொகையிலும் பங்கு ஏற்கக் கடமைப்பட்டவர் ஆவர்.

ஒரு முசுலிம் இறந்த அந்த நிமிடமே அவருடைய சொத்துரிமை வாரிசுகளுக்கு வந்தடைவதால், சொத்துப் பங்கு வைக்கப்பட்டாலும்

இல்லாவிட்டாலும், அவ்வவ் வாரிசும் தன்தன்னுடைய பங்குக்கு முழுச் சொத்துரிமை பெற்றவனுகி, அப் பங்கைப் பராதீனம் செய்யும் உரிமையையும் உடனடி பெற்றவனுகின்றுன். எனவே, சொத்துரிமை பெற்ற வாரிசு தனக்குரிய பங்கை மூன்ருவது நபருக்கு விற்றிருந்தால், கடன் கொடுத்தவர் அந்த மூன்ருவது நபர்மீது வழக்குத் தொடர முடியாது. ஆனல், சொத்தை விலைக்கு வாங்கியவர் கடன் இருப்பது தெரிந்து வாங்கியிருந்தால், கடன் கொடுத்தவர் அந்தச் சொத்தின்மீது வழக்குத் தொடர உரிமையுடையவராவார். மாருக, நல்லெண்ணத்துடன் அந்தச் சொத்தை விலைக்கு வாங்கிய மூன்ருவது நபரிடத்திலிருந்து அதைத் திரும்பப் பெற முடியாது. நல்லெண்ணத்துடன் மூன்ருவது நபர் அச் சொத்தை வாங்கினுரா இல்லையா என்பதை, அவர் அதை வாங்கிய நேரத்தில் அது கடன்பட்ட சொத்து என்று தெரிந்துதான் வாங்கினுரா என்பதை ஆராய்ந்து முடிவுகட்ட வேண்டும். அப்படி அவர் தெரிந்து தான் வாங்கினுர் என்று புலனுனல், அவர் நல்லெண்ணத்துடன் அதை வாங்கவில்லை என்று முடிவுகட்ட வேண்டும். இப்படியின்றி, சொத்தை விற்ற வாரிசு கடன் கொடுத்தவர்களை வஞ்சித்து ஏமாற்றுவதற்காக அப்படி விற்ருரா என்று பார்த்து முடிவுகட்டக் கூடாது.

இசுலாமிய சட்டத்தில், இந்துமதச் சட்டத்தில் உள்ளதுபோல் பிரதிநிதித்துவம் (Representation) அங்கீகரிக்கப்படவில்லை. எனவே, விட்டுச் சென்றவரின் சொத்துப் பங்கு பிரித்துக் கொடுக்கப்படாதிருந்த போதினும், ஒரு வாரிசின் செயல்கள் மற்றவர்களைக் கட்டுப்படுத்தா. மற்ற வாரிசுகளின் இசைவு பெருது அவர்களுக்குரிய பங்கைப் பராதீனம் செய்ய எந்த வாரிசும் உரிமையற்றவராவார். ஒரு வாரிசு இறந்தவர் விட்டுச்சென்ற கடன்களை அடைப்பதன் பொருட்டுச் சொத்தைப் பராதீனம் செய்திருந்தாலும், அது மற்ற வாரிசுகளின் பங்கு விகிதத்திலும் மேலதிகமாக அவர்களைக் கட்டுப்படுத்தாது.

12. பரம்பரைச் சொத்துரிமை (Inheritance)

பொதுத் தத்துவம்

ஹனபி சொத்துரிமைச் சட்டம்

இறந்தவர் விட்டுச் சென்ற சொத்தை வாரிசுகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும்போது, இறந்தவர் இசுலாத்தின் எந்தப் பிரிவைச் சார்ந்தவர் என்று பார்த்து, அந்தப் பிரிவின் சொத்துரிமைச் சட்ட அடிப்படையில் பங்கு பிரித்துக் கொடுக்கவேண்டும். வாரிசுகள் எந்தப் பிரிவைச் சார்ந்தவர்கள் என்று ஆராயவேண்டிய அவசியம் இல்லே. ஒரு முசுலிம் இறக்கும்பொழுது 'சுன்னி' முசுலிமாக இறந்தால், அவருடைய சொத்தை சுன்னி சொத்துரிமைச் சட்ட அடிப்படையில் பங்கு பிரித்து வாரிசுகளுக்குக் கொடுக்கவேண்டும். சுன்னி பிரிவினரில் உள்ள 'ஹனபி' சிறு பிரிவினரின் சொத்துரிமைச் சட்டம் (Hanafi Law of Inheritance) பொதுவாகப் பின்வரும் பக்கங்களில் கீழே தரப் பட்டுள்ளது.

இறந்தவர் விட்டுச் சென்ற சொத்திலிருந்து அவருடைய இறுதிச் சடங்குகளுக்கு ஏற்பட்ட செலவுகளை முதலில் கொடுத்து, விருப்புறுதி மெய்ப்பிதழ் (Probate), நிர்வாக அதிகாரப் பத்திரம் (Letters of Administration) ஆகியவற்றிற்கான செலவுகளையும் கொடுத்து, இறந்தவர் பட்டிருந்த கடனையும் தீர்த்து, மீதியுள்ள சொத்தில் மூன்றில் ஒரு பங்கு வரை 'உயில்' எழுதப்பட்டிருந்தால் அதையும் கொடுத்து, பின்னர் எஞ்சியிருக்கும் சொத்தில் வாரிசுகள் தத்தம் விகிதத்தை அனுசரித்துப் பங்கு பெற உரிமை பெற்றவராவர்.

இந்துமதச் சட்டத்திலுள்ளதைப்போல், மூதாதையர் சொத்து என்றோ, தான் தேடிய சொத்து என்றோ, அசைவியல்—நிலேயியல் சொத்து என்றோ, பங்கு பிரித்துக் கொடுப்பதில் பாகுபாடு கிடையாது. ஆனால் 'ஷியா' சட்டப்படி, குழந்தை இல்லாத விதவை வாரிசாக இருந்தால், அவளுக்குக் கணவனுடைய நிலேயியல் சொத்துக்களில், குறிப்பாக நிலத்தில் மட்டிலும், பங்கு கிடைக்காது.

குறிப்பிடத்தக்க குடும்ப வழக்கம் மெய்ப்பிக்கப்பட்டாலன்றி, முன்னோர் சொத்தில், கிளேயில் மூத்தோனே தலே வாரிசாக முடியும்

(Rule of Primogeniture) என்ற விதி ஏற்றுக்கொள்ளப்படுவதற்கில்லை.

ஆணுக்கும் பெண்ணுக்கும், அவரவர் விகிதப் பங்கைப் பெறுவதில் சம உரிமை வழங்கப்படல் வேண்டும்.

வாரிசுகள் ஒவ்வொருவரும் இறந்தவரின் சொத்தில் 'சேர்ந்தடை சொத்துரிமை இறக்கம்' (Vested inheritance) பெற்றவர் ஆவார். அதாவது, ஒரு முசுலிம் இறந்த உடனேயே வாரிசுகளுக்கு அவரவர்களுக்குச் சேரவேண்டிய பங்கில் உடனடியான உரிமை கிடைத்துவிடுகிறது. இதையே, சேர்ந்தடை சொத்துரிமை இறக்கம், என்று கூறுகிறோம். இறந்தவர் விட்டுச் சென்ற சொத்தில் உடனடி வாரிசுகளுக்குச் சொத்துரிமை இறக்கம் ஏற்பட்டுவிடுவதால், விகிதத்தை அனுசரித்துப் பாகம் பிரிக்கப்படாது இருப்பினும், தத்தம் பங்கைப் பராதீனம் செய்ய அவரவரும் உரிமை பெற்றவராவர். பாகம் பிரிக்கப்படாதிருந்தாலும், வாரிசுகளுக்கு அவரவர் பங்கில் உரிமை ஏற்பட்டுவிடுவதால், பங்கு பிரித்துப் பெறுவதற்கு முன்னர் ஒரு வாரிசு இறந்துபோனாலும் இவருடைய வாரிசுகள் அந்தப் பங்கிற்கு உரிமை பெற்றவராவர்.



P என்பவர் தம்முடைய வாரிசாக S_1 என்ற மகனையும் D_1 என்ற மகளையும் விட்டுச் சென்றால், P இறந்த உடனேயே S_1 என்பவன் $\frac{2}{3}$ பாகத்திற்கும், D_1 என்பவள் $\frac{1}{3}$ பாகத்திற்கும் உரிமை பெற்றுவிடுகின்றனர். எனவே, பாகம் பிரிக்கப்பட்டு $\frac{2}{3}$ பங்கைப் பெறுவதற்கு முன்னர் S_1 இறந்து போனாலும், இவருடைய மகனான S_2க்கு இவருடைய பங்கான $\frac{2}{3}$ பாகம் வந்து சேரும்.

இசுலாமிய சட்டத்தின்படி, மகனோ அல்லது மற்றவர்களோ தக்க வாரிசாகப் பிறந்தாலும், பிறப்பால் மட்டும் இருப்பவர் சொத்தில் வாரிசுகளுக்கு எந்த உரிமையும் எழுவதில்லை. சொத்தினை விட்டுச் செல்பவர் இறந்த பிறகேதான் தக்க வாரிசுகளுக்குச் சொத்துரிமை அதன் பயனாய் வந்தடைகின்றது. அதுவரையில் இவர்களுக்குச் சொத்தின் உரிமை வந்தடையாது. எனவே, இவர்கள் சொத்தின் உரிமை தம்மை வந்து அடையும் என்று எதிர்நோக்கும் வாரிசுகளேயன்றி (Heir Expectant), இற்றைநிலை வாரிசாக (Heir Presumptive) ஆகிவிட முடியாது. இவர்கள் வெறும் எதிர்நோக்கு இறங்குரிமையர் (*Spes Successionis*) ஆதலால், சொத்து வைத்திருக்

கின்றவர் நாளை இறந்ததும் தமக்கே சொத்தின் உரிமை வந்து சேரும் என்று எதிர்பார்த்து அதைப் பராதீனம் செய்ய உரிமையற்றவர்களாவார்கள். சொத்தின் உரிமை இவர்களை வந்தடையுமுன்னர் இவர்கள் இறக்க நேர்ந்தால், இவர்களுடைய வாரிசுகள் அச் சொத்தில் உரிமை கோர முடியாது. அத்தகைய எதிர்நோக்கு வாரிசுகள், தமக்கு எதிர்காலத்தில் வந்தடையும் சொத்துரிமையைத் துறந்தாலும் அது செல்லாது; இவர்களுடைய வாரிசுகளையும் அது கட்டுப்படுத்தாது. சொத்தை விட்டுச் செல்பவர் இறக்கின்ற வரையில், சொத்தில் எந்த உரிமையும் பெறுது, வெறும் எதிர்நோக்கு இறங்குரிமையராய் இருப்பதால், சொத்துரிமை வரும் என்று எதிர்நோக்கி, இவர்கள் அதைப் பராதீனம் செய்யும் பொருளாக்க முடியாது. ஒரு வாரிசு எதிர்நோக்கு இறங்குரிமையராய்த் தமக்கு வரவிருக்கும் சொத்துரிமையை வேண்டாம் என்று துறந்துவிட்டால், தமக்கு உரிமை வரும் என்று தெரிந்து அவர் துறந்ததால், உரிமை உண்மையிலேயே வந்தடைந்த பின்னர் அதை மறுக்க முடியாதவராகிருர் என்று முரண் தடை விதியை (Estoppel) ஆதாரம் காட்ட முடியாது. இதேபோல், தமக்கு உரிமை வரும் என்று எதிர்நோக்கி, அதற்கு ஈடாக வேறு ஒரு பொருளைப் பெற்றுக்கொண்டார் ஆதலால், தேர்ந்துகொளல் வரைவுக் கோட்பாட்டின் (Doctrine of Election) காரணமாக, இப்பொழுது இவர் அதை மறுத்துரைக்க முடியாது என்றும் வாதாட முடியாது.

Latafat Husain *vs* Hidayat Husain
(58 All 834)

வருநிகழ்வு சார்ந்த உரிமையை ஓர் எதிர்நோக்கு வாரிசு, வெறும் கொடையளிப்பதன் பொருட்டோ, உரிமை மாற்றித் தருவதன் பொருட்டோ துறக்காமல் (Relinquishment), எதிர்நோக்கு வாரிசுகளிடையே ஏற்பட்ட சுமுக முடிவின் காரணமாகவும், குடும்பச் சொத்துக்களை அறுதியாகப் பங்கிடும் முறையாகவும் (Family Settlement) தமக்கு நன்மை பயக்கும் என்று கருதி உரிமையைத் துறந்திருந்தால், அது மறு பயன் பெற்ற ஒப்பந்தம் ஆகும் ஆதலால், ஒப்பந்தச் சட்டம் பிரிவு 6 (a)-ன் கீழ்ப் பாதிக்கப்படாது. எனவே, முரண் தடை விதி (Rule of Estoppel) பொருந்தும் என்று அலாஹாபாது உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது.

Abdul Kafoor *vs* Abdul Razak
(AIR 1959 Mad-131)

வருநிகழ்வு சார்ந்த உரிமையை எதிர்நோக்கு வாரிசு துறப்பது, இசுலாமிய சட்ட விதிகளுக்கு முரண்பட்டுச் செல்வதோடு, சொத்து

மாற்றுச் சட்டம் பிரிவு 6 (a)-ன் கீழ் உள்ள விதிகளால் பாதிக்கப்படும் என்றும், சொத்து மாற்றுச் சட்டம் 23ஆவது பிரிவின்கீழ்க் கூறப்பட்டுள்ள விதித்துறைகளுக்கும் மாறுபட்டுச் செல்லுமாகையால், முரண் தடை விதி பொருந்தாது என்றும் தீர்ப்பளித்து, அலாஹாபாது உயர் நீதிமன்ற முடிவில் நின்றும் சென்னை உயர்நீதிமன்றம் மாறுபட்டுச் செல்கிறது.



P என்பவரின் எதிர்நோக்கு வாரிசாக S-ம் D-ம் இருக்கின்றனர் என்று வைத்துக்கொள்வோம். P உயிருடன் இருக்கும்பொழுது, D தனக்குப் P-யின் இறப்பிற்குப் பின்னர்க் கிடைக்கஇருக்கும் சொத்துரிமை அனைத்திற்கும் சேர்த்து ரூ. 1000 வாங்கிக்கொண்டு, தன்னுடைய வருங்கால உரிமையைத் துறந்து விடுகிறாள் என்றால், அது செல்லாது. எனவே, P இறந்த பின்னர், D-யோ, அல்லது அவளுடைய வாரிசுகளோ, விகிதமனுசரித்துத் தங்களுக்குச் சேரவேண்டிய பங்கைப் P-யின் சொத்தில் கோரினால், D ஏற்கெனவே பெற்றுக்கொண்ட ரூபாய் ஆயிரத்தையும் அவளுடைய பங்கில் கழித்து, மீதி உள்ளதைக் கொடுக்க வேண்டும். இதில் முரண் தடை விதியின் காரணமாகவோ, தேர்ந்து கொளல் கோட்பாட்டின் காரணமாகவோ, D தன்னுடைய உரிமைகளைத் துறந்துவிட்டாள் என்று கூற முடியாது. [Sumsuddin *vs* Abdul Hussein (1906–31 Bom 165); Banoo Begum *vs* Mir Abed Ali (1908–32 Bom 172)]

குடும்பப் பிரதிநிதித்துவம் (Representation) 'சுன்னி' பிரிவினரின் சட்டத்தால் அங்கீகரிக்கப்படவில்லை. எனவே, ஒரு சுன்னி முசுலிம் தனக்குப் பின்னர் ஒரு மகனையும், காலஞ் சென்று போன மற்றொரு மகனின் இரு பேரக் குழந்தைகளையும் விட்டுவிட்டு இறந்தால், உயிருடன் இருக்கும் மகனே தந்தையின் சொத்துக்கு உரியவனாவான். இரு பேரப் பிள்ளைகளுக்கும் பாட்டனின் சொத்தில் எவ்வித உரிமையும் கிடைக்காது. ஏனெனில், பாட்டன் உயிருடன் இருக்கும்பொழுதே இந்த இரு குழந்தைகளின் தந்தை இறந்து போனதால், சொத்துரிமையைப் பெறுமுன்னர், இக் குழந்தைகளின் தந்தை இறந்ததாக ஆகின்றது. எனவே, அவன் உயிருடன் இருந்திருந்தால் அவனுக்கு என்ன பங்கு கிடைக்குமோ அதை அவனுடைய பிரதிநிதிகளாக நின்று இப் பேரக் குழந்தைகள் கேட்க முடியாது. சுன்னி கோட்பாட்டின்படி

பிரதிநிதித்துவம் (Representation) அங்கீகரிக்கப்படாததால், உயிருடன் இருக்கின்ற மற்ற மகனோடு சேர்ந்து, பேரக் குழந்தைகள் தங்கள் தந்தைக்குப் பாட்டனின் சொத்தில் கிடைக்கவேண்டிய பங்கை, அவருடைய (தங்கள் தந்தையுடைய) பிரதிநிதிகளாக நின்று உரிமை பெற முடியாமல் போகிறது. 'சுன்னி' கோட்பாட்டில் பிரதிநிதித்துவம் அங்கீகரிக்கப்படாததால், வாரிசுகள் தலைவிகித (தலா) முறையில் (*Per Capita*) சொத்துரிமை இறக்கம் பெறுவரே தவிர, கிளை விகித முறையில் (*Per Stirpes*) அன்று. இந்துச் சட்ட முறைப்படி வாரிசுகள் கிளை விகித உரிமை இறக்கத்தை அனுசரித்துத் தத்தம் பங்கினைப் பெறுவர். சுன்னீ சட்டத்தால் பிரதிநிதித்துவம் அங்கீகரிக்கப்படவில்லையாயினும், ஷியா சட்டத்தில் ஒரு குறிப்பிட்ட வரம்புக்கு உட்பட்டு (qualified) அதுஅங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஷியா சட்டத்தின்படியும், பேரக் குழந்தைகள் உயிரோடு இருக்கின்ற மற்ற மகனோடு சேர்ந்து தங்கள் பாட்டனின் சொத்தில் சொத்துரிமை பெற முடியாது. ஆனால், பாட்டனுக்கு அந்த இரண்டு மகன்களும் இறந்து போயிருந்தால், இருவரின் குழந்தைகளும் தத்தம் தந்தையின் பங்கில் பிரதிநிதிகளாக நின்று சொத்துரிமை பெறுவர். எனவே, காலஞ்சென்ற இருவரின் குழந்தைகளும் கிளை விகிதப்படி (*Per Stirpes*) இறங்குரிமை பெற்றவராய், தந்தையின்பங்கைப் பிரதிநிதிகளாக நின்று பகிர்ந்து கொள்வர்.

தலைவிகித இறக்கம்

(Succession *Per Capita*)



ஹனபி சட்டப்படி தலைவிகித இறக்கம் (*Per Capita* succession) பெற்று ஒவ்வொருவரும் ⅕ பங்கு பெறுவர்.

P என்பவர் இறப்பதற்கு முன்னர், அவருடைய இரு மக்களான *A*யும், *B*யும் இறந்துவிடுகின்றனர். *A*க்கு *C*, *D*, *E* என்ற 3 மக்களும் *B*க்கு *F*, *G* என்ற இரு மக்களும் எஞ்சி இருந்தனர். பின்னர் *P* இறந்து போகிறார். அவருடைய சொத்தை, ஹனபிசட்டம் அங்கீகரிக்கும் தலைவிகித இறக்கத்தை அனுசரித்து, *C*, *D*, *E*, *F*, *G* என்ற 5 பேரக் குழந்தைகளும், சமமாகப் பங்கு வைத்து ஒவ்வொருவரும் ⅕ பாகம் பெறுவர்.

கிளைவிகித இறக்கம்
(Succession *Per Stirpes*)



ஷியா சட்டப்படி கிளைவிகித இறக்கம் பெற்று, *A*-ன் $\frac{1}{2}$ பங்கை *C*, *D*, *E* என்பவர்கள் சமமாய்ப் பங்கிட்டு ($\frac{1}{2}\times\frac{1}{3}$) ஒவ்வொருவரும் $\frac{1}{6}$ பங்கும், *B*-ன் $\frac{1}{2}$ பங்கை *F*, *G* என்பவர் சமமாய்ப் பங்கிட்டு ($\frac{1}{2}\times\frac{1}{2}$) தலா $\frac{1}{4}$ பங்கும் பெறுவர்.

மேற் கூறப்பட்ட விளக்கத்தில் ஷியா சட்டம் அங்கீகரிக்கும் கிளை விகித இறக்கத்தை அனுசரித்து, *A* என்பவருக்குச் சேரவேண்டிய $\frac{1}{2}$ பங்கை *C*, *D*, *E* என்ற மூவரும் ($\frac{1}{2}\times\frac{1}{3}$) சமமாகப் பங்கிட்டு, ஒவ்வொருவரும் $\frac{1}{6}$ பாகத்தையும், *B* என்பவருக்குச் சேரவேண்டிய $\frac{1}{2}$ பங்கை *F*, *G* என்ற இருவரும் ($\frac{1}{2}\times\frac{1}{2}$) சமமாகப் பங்கிட்டு, ஒவ்வொருவரும் $\frac{1}{4}$ பாகத்தையும் பெறுவர்.

சொத்துரிமை பெறாது தள்ளப்படுபவர்கள் (Exclusion from Inheritance)

ஹனபி சட்டப்படி, ஒருவர் இறந்தவரின் வாரிசாக இருப்பினும், காலமானவரின் சொத்தில் இவர் உரிமை பெறத் தகுதியற்றவரென்று ஒதுக்கித்தள்ளலாம். அப்படித் தள்ளப்படுபவர்களை இரு பிரிவினராகப் பிரிக்கலாம். ஒரு பிரிவினர் சொத்துரிமையே பெறாது முழுமையாகத் தள்ளப்படுபவர்கள். மற்றொரு பிரிவினர், சில பல காரணங்களுக்காக அரை குறைப் பங்கினைப் பெற்று அரைகுறையாகத் தள்ளப்படுபவர்கள். பின்னே கூறப்பட்ட அரைகுறையாகத் தள்ளப்பட்டு (partial exclusion) நிற்பவர்கள், உடன் வாழும் வாரிசுகளின் அதிக உரிமை காரணமாக, தங்கள் உரிமையில் சிறு பங்கை இழந்து நிற்பவர்கள் ஆவர்.

இறந்தவரின் சொத்துரிமை பெறும் வாரிசுகளாக இருந்தாலும், கீழ்க் குறிப்பிடப்படும் காரணங்களைக் கொண்டு, அவர்கள் அத் தகுதியை இழந்தவர்களாகக் கருதப்பட்டு, சொத்துரிமை இறக்கம் பெறாது முழுமையாகத் தள்ளப்படுவர் :

(1) **மரணம் விளைவித்தல்** (Homicide): வாரிசாகச் சொத்துரிமை பெற இருப்பவர், சொத்து வைத்திருப்பவரின் மரணத்தை விளைவிக்கக்

காரணமாயிருந்திருந்தால், இவர் சொத்துரிமை பெறத் தகுதி இழந்தவராவார். ஹனபி சட்டப்படி, தெரிந்தோ தெரியாமலோ, தவறியோ, கவனமின்மையாலோ, எதிர்பாராமலோ, சொத்து வைத்திருப்பவர் இறப்பதற்கு வாரிசு ஒருவர் காரணமா யிருந்திருப்பின், அந்த வாரிசுக்கு இறந்தவர் சொத்தில் சொத்துரிமை இறக்கம் கிடைக்காது. இது சம்பந்தமான நீதிமன்றத்தின் தண்டனைத் தீர்ப்பையோ (conviction) சிறைத்தண்டனைத் தீர்ப்பையோ சான்றாகக் காட்டினால், நீதிமன்றம் அதை ஏற்றுக்கொள்ளும். ஒருவர் மற்றவரின் மரணத்திற்குக் காரணமாயிருந்தவர் என்று தனிப்பட்ட முறையில் மெய்ப்பிக்கப் படவேண்டியதில்லை. ஷியா சட்டப்படி, ஒருவர் தமக்குத் தெரிந்து, சொத்து வைத்திருப்பவரின் மரணத்திற்குக் காரணமா யிருந்திருந்தால், இவர் சொத்துரிமை பெறாது முழுமையாகத் தள்ளப்படுவார்.

(2) முறையிலா மணப்பிறப்பு (Illegitimacy): சுன்னி முசுலிம் சட்டப்படி, முறையிலா மணப்பிறப்புக் குழந்தைகள் தாயின் சொத்தில் மட்டுமே சொத்துரிமை பெறத் தகுதியுடையவராவர். முறையிலா மணப் பிறப்புக் குழந்தை, தன்னுடைய அநுமானத் தந்தையின் (Putative father) சொத்தில் சொத்துரிமை பெறாது முழுமையாகத் தள்ளப்படும். ஆனால் ஷியா சட்டப்படி, முறையிலா மணப்பிறப்புக் குழந்தைகள் தகுதியற்றவராகக் கருதப்படுவதால், தாயின் சொத்திலும் அநுமானத் தந்தையின் சொத்திலும் சொத்துரிமை கிடைக்கப் பெறாது முழுமை யாகத் தள்ளப்படுவர்.

(3) வழக்கம் (Custom): கிளையில் மூத்தோனே தலைவாரிசு (Rule of Primogeniture) என்னும் விதியைக் குடும்ப வழக்கம் (Custom) காரணமாகப் பின்பற்றி வந்தால், இறந்தவரின் முழுச் சொத்துக்கும் மூத்தோனே பூரணமான உரிமையுடையவனாய்க் கொள்ளப்பட்டு, மற்றவர்கள் அனைவரும் முழுமையாகத் தள்ளப்பட்டு விடுவர். அதேபோல், வட்டார வழக்கைப் பின்பற்றி, ஆண்களுக்கு மட்டிலுமே சொத்துரிமை இறக்கம் வந்தடைய, பெண்கள் தகுதி யற்றவர்களென்று கருதப்பட்டு, சொத்துரிமை பெறாது முழுமையாகத் தள்ளவும்படுவர்.

(4) இயற்றிய சட்டங்கள் (Statute): இசுலாமிய சட்டத்தில் சொத்துரிமைக்குத் தடையாகக் கருதப்படும் செயல்கள், இந்தியாவில் இயற்றப்பட்ட சட்டங்களின் மூலம் அங்கீகாரம் பெற்றுத் தடை நீக்கப்பட்டனவாகக் கருதப்படுகின்றன. இசுலாமிய சட்டம் ஏற் படுத்திய தடைகளை, இயற்றிய சட்டங்கள் நீக்கும் வல்லமை உடையன என்றால், அங்ஙனமே புதிய தடைகளை ஏற்படுத்தவும் இயற்றப்பட்ட அந்தச் சட்டங்களுக்கு வல்லமை உண்டு. (எ-டு) பம்பாய் வாட்டன்ஸ் சட்டம் (Watons Act, 1886).

எ-டு. ஒரு முசுலிம் இசுலாத்தைத் துறந்து வேறு ஒரு மதத்தைத் தழுவினால் அவர் இசுலாமியர் சட்டப்படி சொத்துரிமை பெறத் தகுதி இழந்தவராவார். இத் தகுதி இழப்பைச் சாதித் தகவின்மை ஒழிப்புச் சட்டம் (Removal of Caste Disabilities Act) தடுத்து நிறுத்துவதால், இச் சட்டத்தின்மூலம் பிற மதம் தழுவியவர்களின் தகுதி இழப்புத் தடுக்கப்படுகிறது. இந்த முறையில், இயற்றப்பட்ட சட்டங்கள் இசுலாமிய சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட தகுதி இழப்பைத் தடுத்து உரிமை ஏற்படுத்தவல்லனவாயின், தகுதி இழப்பையும் இயற்றப்பட்ட சட்டங்கள் ஏற்படுத்த முடியும். வாட்டன்ஸ் சட்டம், பிரிவு 2-ன்படி, விதவை நீங்கலாக மற்ற எல்லாப் பெண் வாரிசுகளும், ஆண் வாரிசுகள் உயிரோடு இருக்கும்பொழுது சொத்துரிமை இறக்கம் பெற அருகதையற்றவர்களென்று தள்ளப்படுவர். இதன்மூலம், ஆண் வாரிசுகள் உயிருடன் வாழும் காலம்வரை பெண் வாரிசுகள் சொத்துரிமை பெற முடியாமல் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே, தந்தையின் உடன் பிறந்த சகோதரன் சொத்துரிமை பெறும்பொழுது, அவனோடு சேர்ந்து இறந்தவனின் மகள் தன்னுடைய தந்தையின் சொத்தில் பங்கு பெற முடியாது. இத்தகு தடையை, இயற்றிய சட்டங்கள்மூலம் ஏற்படுத்த முடியும் என்று நீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன.

ஹனபி சொத்துரிமை இறக்கச் சட்டம்
(Hanafi Law of Inheritance)

ஹனபி சட்டப்படி, இறந்தவர் சொத்தில் சொத்துரிமை பெறும் வாரிசுகளை மூன்று பிரிவினராகப் பிரிக்கலாம் :

(1) பங்குதாரர்கள் (Sharers) (அஸ்ஹாபுல் பராயிலு)

(2) எச்சதாரர்கள் (Residuaries) (அசபாக்கள்)

(3) தூரத்து உறவினர்கள் (Distant Kindred) (சவுல் அர்ஹாம்)

இறந்தவர் விட்டுச் சென்ற சொத்தில் உரிமை கோர மேலே குறிப்பிடப்பட்ட மூன்று பிரிவினர்களில் ஒருவருமே இல்லையென்றால், கீழே குறிப்பிடப்பட்டபடி சொத்துரிமை இறங்கும் :

(1) ஒப்பந்த வழி இறங்குரிமை ((Successor by Contract): இறந்தவரோடு ஒப்பந்தம் செய்துகொள்வதன்மூலம், இறந்தவர் விட்டுச் சென்ற சொத்தில் சொத்துரிமை கேட்பதை ஒப்பந்தவழி இறங்குரிமை என்று கூறலாம். ஆனால், இதுபோன்ற ஒப்பந்தங்களின்மூலம் சொத்துக்கள் பெரும்பாலும் தண்டனைக்குரிய குற்றச் செயல்களுக்குப் பிரதிபலனாகக் கொடுக்கப்படுவதால், இத்தகு ஒப்பந்தவழி இறங்குரிமை இந்தியாவில் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை. ஏனெனில், அத்தகு ஒப்பந்தங்கள், இல்லா ஒப்பந்தமாகக் (Void Contract) கருதப்படுவதே காரணம் ஆகும்.

(2) வாரிசாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உறவினர்கள் (Acknowledged Kinsmen): இறந்தவர் தம்முடைய சொத்துக்கு வாரிசாக முறைப்படி சொத்துரிமை இறக்கம் பெறமுடியாத உறவினர்களை ஏற்றுக்கொண்டால், அவர்களுக்கு இறந்தவரின் சொத்தில் சொத்துரிமை இறக்கம் வந்தடையும். எடுத்துக்காட்டாக, சொத்தை விட்டுச் செல்பவருக்குச் சொத்துரிமை பெறும் வாரிசுகள் இல்லாமற் போய், அவர் வேறு ஒருவரைத் தம்முடைய சகோதரனாக ஏற்றுக் கொண்டால், இவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட உறவினர் சொத்துரிமை இறக்கம் பெறுவார்.

(3) ஏகபோக உயில் கொடை பெற்றவர் (Universal Legatee): ஒரு ஹனபி முசுலிமுக்குத் தமது சொத்தில் சொத்துரிமை பெறும் வாரிசுகளோ, தம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாரிசுகளோ இல்லாமற் போனால், அவர் தமது சொத்தில் மூன்றில் ஒரு பங்கைமட்டுமே உயில் வழிக் கொடையளிக்க உரிமை பெற்றவர் என்ற கட்டுப்பாடு நீக்கப் பெற்றவராய், முழுச் சொத்தையும் தாம் விரும்பியவருக்கு உயில்வழிக் கொடை அளிக்க உரிமை பெற்றுவிடுவார். இவ்விதம் இறந்தவர் சொத்தை முழுமையாக உயில்வழிக்கொடை பெறுபவர் ஏகபோக உயில் கொடை பெற்றவர் (Universal Legatee) என்று அழைக்கப்படுவார்.

(4) அரசு (The State): மேல் குறிப்பிடப்பட்ட சட்டம் அங்கீகரிக்கும் சொத்துரிமை பெற்ற வாரிசுகளோ, இறந்தவரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வாரிசுகளோ, ஏகபோக உயில் கொடை பெற்றவரோ இல்லாதொழியின், இறந்தவர் விட்டுச் சென்ற சொத்து அரசுறு பொருளாக (Escheat) அரசாங்கத்திற்கு வந்தடையும்.

இந்த அத்தியாயத்தில் பயன்படுத்தப்படும் சில சொற்களுக்கு விளக்கம்

(1) பாட்டன் (True Grand-father): இறந்தவருக்கும், சொத்துரிமை வந்தடையும் ஆண் மூதாதையருக்கும் இடையில் பெண் தலைமுறையினர் குறுக்கிடாமல் இருந்தால், சொத்துரிமை பெறும் ஆண் மூதாதையர் பாட்டன் ஆவார். (எ - டு) தந்தையின் தந்தை (Father's Father).

தந்தையின் தந்தையின் தந்தை என்று எத்தனை தலைமுறை முன் சென்றாலும் (Father's father's father how high soever) அந்தக் கொள்ளுப் பாட்டன்களும் இதில் அடங்குவர்.

(2) தாய்ப் பாட்டன் (False Grand—father): இறந்தவருக்கும், சொத்துரிமை வந்தடையும் ஆண் மூதாதையருக்கும் இடையில் பெண் தலைமுறையினர் குறுக்கிட்டால், சொத்துரிமை பெறும் மூதாதையர் தாய்ப் பாட்டன் ஆவார்.

(எ - டு) தாயின் தந்தை (Mother's Father)
தாயின் தாயின் தந்தை (Mother's Mother's Father)
தந்தையின் தாயின் தந்தை (எ. த. மு. செ.)
(Father's Mother's Father h. h. s.)

(3) பாட்டி (True Grand-mother) : இறந்தவருக்கும் சொத்து வந்தடையும் பெண் மூதாதையருக்கும் இடையில் தாய்ப்பாட்டன் குறுக்கிடாது இருந்தால், சொத்துரிமை பெறும் பெண் மூதாதையர் பாட்டி ஆவார்.

(எ - டு) தாயின் தாய் (Mother's Mother)
தந்தையின் தாய் (Father's Mother)
தாயின் தாயின் தாய் (Mother's Mother's Mother)
தந்தையின் தாயின் தாய் (Father's Mother's Mother)
தந்தையின் தந்தையின் தாய் (எ. த. மு. செ.)
(Father's Father's Mother h. h. s.)

(4) தாய்ப்பாட்டி (False Grand-mother) : இறந்தவருக்கும் சொத்து வந்தடையும் பெண் மூதாதையருக்கும் இடையில் தாய்ப்பாட்டன் குறுக்கிட்டால், சொத்துரிமை பெறும் பெண் மூதாதையரைத் தாய்ப்பாட்டி என்று அழைக்கலாம்.

(எ - டு) தாயின் தந்தையின் தாய்
தாயின் தாயின் தந்தையின் தாய்
தாயின் தந்தையின் தந்தையின் தாய் (எ. த. மு. செ.)

(5) உடன் பிறந்த சகோதரன் (Full Brother)

(6) உடன் பிறந்த சகோதரி (Full Sister)

இருவரின் தாயும் தந்தையும் ஒருவரேயாயின், அவர்களை உடன் பிறந்த சகோதரர்கள் அல்லது சகோதரிகள் என்று கூறலாம்.

(7) தந்தைவழிச் சகோதரர்கள் (Consanguine Brothers)

(8) தந்தைவழிச் சகோதரிகள் (Consanguine Sisters)

இருவரின் தந்தையும் ஒருவராயிருக்க, தாய் வெவ்வேறாயிருந்தால் அவர்களைத் தந்தைவழிச் சகோதரர்கள் அல்லது தந்தைவழிச் சகோதரிகள் என்று அழைக்கலாம்.

(9) தாய்வழிச் சகோதரர்கள் (Uterine Brothers)

(10) தாய்வழிச் சகோதரிகள் (Uterine Sisters)

இருவரின் தாயும் ஒருவராயிருக்க, தந்தை வெவ்வேறு பேர்வழிகளாயிருப்பின், அவர்களைத் தாய்வழிச் சகோதரிகள் என்று அழைக்கலாம்.

அட்டவணை



1—3 = பாட்டன் (True Grandfather)
A—G = தாய்ப்பாட்டன் (False ,,)
a—h = பாட்டி (True Grandmother)
அ, ஆ = தாய்ப்பாட்டி (False ,,)

நேர் வழியினர் (Lineal)

தந்தை, தந்தையின் தந்தை; மகன், மகனின் மகன் என்று கொடி வழியில் இறங்கிச் செல்பவர்களை நேர் வழியினர் என்று அழைக்கிறோம்.

கிளை வழியினர் (Collaterals)

தந்தை, மகன், மகனின் மகன் என்று நேர் வழியினருக்கு மாறாக, அண்ணன், அண்ணனின் மகன், அவருடைய மகன், அல்லது தம்பி, தம்பியின் மகன், தம்பியின் மகனின் மகன் என்று கிளை வழியில் செல்பவர்களைக் கிளை வழியினர் என்று கூறுகிறோம்.

ஏறுமுறை மூதாதையர்கள் (Ascendants)

பெற்றோரையோ பெற்றோர்களின் பெற்றோர்களையோ, அவருடைய பெற்றோர்களையோ, எத்தனை தலைமுறை முன் சென்று சுட்டினும், ஏறு முறை மூதாதையர் என்று கூறலாம்.

வழித்தோன்றல்கள் (Descendants)

பிள்ளைகளையும், பிள்ளைகளின் பிள்ளைகளையும், எத்தனை தலைமுறை பின் சென்று சுட்டினும், அவர்களை இறந்தவரின் வழித்தோன்றல்கள் என்று கூறலாம்.

தந்தை வழியினர் (Agnate)

இறந்தவருக்கும் அவரோடு தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளும் தந்தை வழியிலுள்ளவருக்கும் இடையே பெண் தலைமுறையினர் குறுக்கிடாதிருந்தால், தொடர்பு கொண்டு நிற்பவரைத் தந்தை வழியினர் என்று அழைக்கலாம்.

உறவு வழியினர் (Cognate)

பெண் தலைமுறையினர்மூலம் இறந்தவரோடு தொடர்பு ஏற்படுத்தி நிற்பவரை உறவு வழியினர் என்று அழைக்கலாம். ஆண் தலைமுறையினர் குறுக்கிட்டாலும், குறுக்கிடாவிட்டாலும், பெண் தலைமுறையினர் மூலம் தொடர்பு ஏற்படுத்திக்கொள்பவர் உறவு வழியினர் ஆவர்.

ஒருபடி முந்திய மகனின் மகன் (Higher Son's Son)

ஒருவர் தம்முடைய மகனின் மகனையும், மற்றொரு மகனின் மகனின் மகனையும் விட்டுச் சென்றால், முந்தியவர் பிந்தியவருக்கு ஒருபடி முந்திய மகனின் மகனாவார்.

ஒருபடி பிந்திய மகனின் மகன் (Lower Son's Son)

ஒருவர் தம்முடைய மகனின் மகனின் மகனையும், மற்றொரு மகனின் மகனையும் விட்டுச் சென்றால், முந்தியவர் பிந்தியவருக்கு ஒருபடி பிந்திய மகனின் மகனாவார்.

ஒத்த மகனின் மகன் (Equal Son's Son)

ஒருவர் தம்முடைய மகனின் மகனையும் மற்றொரு மகனின் மகனையுமோ அல்லது மகனின் மகனின் மகனையும் மற்றொரு மகனின் மகனின் மகனையுமோ விட்டுச் சென்றால், முந்தியவர் பிந்தியவருக்கு ஒத்த மகனின் மகனாவார். இருவரும் இறந்தவரில் நின்றும் சமமாக நீக்கப்பட்டிருக்கின்றனர்.

வாரிசுகள்

இறந்தவர் விட்டுச் சென்ற சொத்தில் சொத்துரிமை பெறும் வாரிசுகளைப் பங்குதாரர்கள் (Sharers), எச்சதாரர்கள் (Residuaries), தூரத்து உறவினர்கள் (Distant Kindred) என்று மூன்றாகப் பிரிக்கலாம் என்று முன்னரே கண்டோம். இவர்கள் பங்கு பெறும் முறையினையும், பங்கு பெறாது அரைகுறையாகவோ முழுமையாகவோ தள்ளப்படுவதையும், எஞ்சியதைப் பெறுவதையும், தூரத்து உறவினராகப் பங்கு பெறும் முறையினையும் காண்போம்.

I. பங்குதாரர்கள் (Sharers)

பங்குதாரர்கள் எனப்படுபவர்கள் இறந்தவர் சொத்தில் தமக்குச் சேரவேண்டிய குறிப்பிட்ட பங்கைப் பெறுபவர்கள் ஆவர். இவர்கள் தமக்கென, திருக்குர்ஆன் வரையறுத்துவிட்டிருக்கும் குறிப்பிட்ட பங்கினை, இறந்தவர் சொத்தில் முதன்முதலாகப் பெறுவதற்கு உரிமையுடையவர்கள் ஆவர். இறந்தவர் சொத்தினின்றும், வாரிசுகளுள் பங்குதாரர்களின் பங்கை முதலில் கொடுத்துவிட வேண்டும். பங்குதாரர்களுக்குச் சட்டம் வரையறுத்துக் கூறும் குறிப்பிட்ட பங்கைக் கொடுத்தபின்னர், சொத்து எஞ்சியிருந்தால், அதை எச்சதாரர்கள் (Residuaries) பெறமுடியும். எனவே, பங்குதாரர்களின் பங்கு, குறிப்பிட்ட பங்காகும். எச்சதாரர்களின் பங்கு எஞ்சியிருப்பதைப் பொறுத்துக் கூடினாலும் கூடலாம்; குறைந்தாலும் குறையலாம்.

ஹனபி சொத்துரிமைச் சட்டத்தின்படி, இறந்தவர் விட்டுச்சென்ற சொத்தில் வாரிசுகளாகக் குறிப்பிடப்பட்ட பங்கினைப் பெறும் பங்குதாரர்கள் (Sharers) பன்னிருவராவர். அவர்களில் நான்கு ஆண்களும் எட்டுப் பெண்களும் உள்ளனர்.

ஆண் பங்குதாரர்கள்

(1) கணவன் (Husband)
(2) தந்தை (Father)
(3) பாட்டன் (எ. த. மு. செ.) (True Grand-father h.h.s.)
(4) தாய்வழிச் சகோதரன் (Uterine Brother)

பெண் பங்குதாரர்கள்

(5) மனைவி (Wife)
(6) தாய் (Mother)
(7) பாட்டி (எ. த. மு. செ.) (True Grand-mother h.h.s.)
(8) மகள் (Daughter)
(9) மகனின் மகள் (எ. த. பி. செ.) (Son's Daughter h.h.s.)
(10) தாய்வழிச் சகோதரி (Uterine Sister)
(11) உடன்பிறந்த சகோதரி (Full Sister)
(12) தந்தைவழிச் சகோதரி (Consanguine Sister)

மேற்குறிப்பிடப்பட்டுள்ள உறவுமுறை, இறந்தவருடன் இப்போது இருப்பவருக்குள்ள உறவுமுறை என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது, (1) இறந்தவரின் கணவன், (2) இறந்தவரின் தந்தை, (5) இறந்தவரின் மனைவி, (6) இறந்தவரின் தாய் என்று கொள்ளவேண்டும்.

II. எச்சதாரர்கள் (Residuaries)

இறந்தவர் சொத்தில் பங்குதாரர்களுக்குப் பங்கு பிரித்துக் கொடுத்ததுபோக, மிஞ்சியிருக்கும் சொத்திற்கு எச்சதாரர்கள் உரிமையுடையவர் ஆவர். பங்குதாரர்களே (Sharers) இல்லையென்றால், எச்சதாரர்கள் தம்மிடையே இறந்தவரின் சொத்தைப் பாகம் பிரித்துக்கொள்ள உரிமையுடையவராவர். பங்குதாரர்கள் இருந்தால், அவரவர் பங்கினை அவரவர்களுக்குக் கொடுத்ததுபோக, மீதிச் சொத்து ஏதும் மிஞ்சியிருக்குமாயின், அதை எச்சதாரர்கள் பாகம் பிரித்துக்கொள்ள உரிமை பெற்றவராவர். மேற்கூறப்பட்டுள்ள பன்னிரண்டு ஆண்பெண் பங்குதாரர்களில், (1) தந்தை, (2) தந்தையின் தந்தை (எ. த. மு. செ.), (3) மகள், (4) மகனின் மகள் (எ. த. பி. செ.), (5) உடன்பிறந்த சகோதரி, (6) தந்தைவழிச் சகோதரி ஆகிய ஆறு பங்குதாரர்களும் சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் எச்சதாரர்களாகப் பங்கு பெறுவர்.

1. (a) இறந்தவரின் ஆண்வழித் தோன்றல்கள் (Male descendants). (எ-டு) மகன், மகனின் மகன் (எ.த.பி.செ.). (b) ஆண்வழித் தோன்றலோடு உடன்வாழும் பெண்வழித் தோன்றல்கள் சம அந்தஸ்திலுள்ள (Equal degree) ஆண்வழித் தோன்றலோடும், சில சந்தர்ப்பங்களில் ஒருபடி பிந்திய அந்தஸ்திலுள்ள (Lower degree) ஆண்வழித் தோன்றல்களோடும் எச்சதாரர்களாய், எஞ்சியிருப்பதில் பங்கு பெறுவர்.

2. இறந்தவரின் ஏறுமுறை மூதாதையராய் (Ascendants) இருக்கும் ஆண்கள். (எ-டு) தந்தை, தந்தையின் தந்தை (எ.த.மு.செ.).

3. (a) இறந்தவரின் தந்தையின் வழித்தோன்றல்களான கிளை வழியினர். (எ - டு) சகோதரன், சகோதரனின் மகன் (எ. த. பி. செ.). (b) சில சந்தர்ப்பங்களில் இறந்தவருடைய தந்தையின் வழித்தோன்றல்களோடு உடன்வாழும் உடன் பிறந்த சகோதரிகளும் (Full Sisters) தந்தைவழிச் சகோதரிகளும் (Consanguine Sisters) எச்சதாரர்களாய்ப் பங்கு பெறுவர்.

4. பாட்டனின் வழித்தோன்றல்களான தந்தையின் கிளைவழியினர் (எ. த. மு. செ.). அதாவது, தந்தையுடைய தந்தையின் உடன் பிறந்த சகோதரரும், அவருடைய மகனும், அவருடைய மகனின் மகனும் (எ. த. பி. செ.); தந்தையுடைய தந்தையின் தந்தைவழிச் சகோதரனும், அவருடைய மகனும், அவருடைய மகனின் மகனும் (எ. த. பி. செ.); இவ்விருவரின் ஆண்வழித் தோன்றல்களும் எச்சதாரராய்ப் பங்கு பெறுவர்.

இறந்தவரின் ஆண்வழித் தோன்றலான எச்சதாரர்களில், குறிப்பாக இறந்தவரின் மகன், எவ்விதத்திலும் பங்கு பெற வேண்டும். இவர் எச்சதாரராயிருப்பினும், இறந்தவர் சொத்தில் பங்கு பெருது தள்ளப்பட மாட்டார். இறந்தவரின் ஏறுமுறை (ஆண்) மூதாதையர்கள், சில சந்தர்ப்பங்களில் பங்குதாரராகவும் எச்சதாரராகவும் (இரு வழிகளிலும்) பங்கு பெறுவர்.

III. தூரத்து உறவினர்கள் (Distant Kindred)

பங்குதாரராகவோ, எச்சதாரர்களாகவோ பங்கு பெருது, இறந்தவரோடு குருதித் தொடர்புடையவராய் நிற்பவர்களைத் தூரத்து உறவினர் என்று அழைக்கிறோம். இவர்கள் பங்குதாரர்களோ, எச்சதாரர்களோ அல்லர் என்றுல்தான், ஹனபி சட்டப்படி, இறந்தவர் சொத்தில் சொத்து உரிமை பெறத் தகுதியுடையவராவர். ஆனல், கணவனே மனைவியோ மட்டும் பங்குதாரராக இருந்தால், கணவனுக்கோ மனைவிக்கோ அவருடைய முழுப் பங்கையும் கொடுத்த பின்னர், மிஞ்சியிருப்பதில் தூரத்து உறவினர் சொத்துரிமை பெறுவர். (ஷாபி, மாலிகி பிரிவினரின் சட்டம் 'தூரத்து உறவினர்' என்னும் இம் மூன்றுவது வகுப்பினரை அங்கீகரிக்கவில்லை.) மேற்குறிப்பிடப்பட்ட வாரிசுகள் சொத்துரிமை பெறும் பொழுது கடைப்பிடிக்கப்படவேண்டிய விதிமுறைகள் :—

(1) முதன் முதலில் பங்குதாரர்களுக்கு அவரவர் விகிதப்படி உள்ள பங்கைச் சொத்திலிருந்து கொடுத்துவிட வேண்டும்.

(2) பங்குதாரர்கள் இல்லையென்றுல், அதை எச்சதாரர்களுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டும். பங்குதாரர்கள் இருந்தால், அவர்களுக்குக் கொடுத்தது போக மீதி இருப்பதை எச்சதாரர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

(3) பங்குதாரர்களுக்குக் கொடுத்தது போக எஞ்சியிருக்கும் சொத்தில், ஒரே சமயத்தில் பங்குதாரர்களும் எச்சதாரர்களும் சொத்துரிமை பெற முடியும்.

(4) பங்குதாரர்களோ, எச்சதாரர்களோ இல்லாதிருந்தால், தூரத்து உறவினர்களைக் கணக்கில் எடுத்து, அவர்களுக்குப் பங்கு பிரித்துக் கொடுக்க வேண்டும். பங்குதாரராகக் கணவனோ மனைவியோ மட்டும் இருந்தால், அவர்களோடு தூரத்து உறவினர்களும் பங்கு பெறுவர்.

(5) பங்குதாரர் ஒருவர்மூலம் இறந்தவரோடு தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளுபவர், இந்தப் பங்குதாரர் உயிருடன் இருக்கின்ற காலம் வரையில் சொத்துரிமை பெற முடியாது. (எ - டு) இறந்தவரின் சகோதரனும் சகோதரியும், இறந்தவருடைய தந்தையின்மூலம் அந்த இறந்தவருடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்வதால், அத் தந்தை உயிருடன் இருக்கின்ற வரையில் இச் சகோதரனும் சகோதரியும் இறந்தவருடைய சொத்தில் சொத்துரிமை பெற முடியாது. இந்த விதிக்கு ஒரே ஒரு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, இறந்தவரின் தாய் உயிருடன் இருந்தாலும், அவளோடு சேர்ந்து தாய்வழிச் சகோதரனும் சகோதரியும் இறந்தவருடைய சொத்தில் சொத்துரிமை பெறுவர்.

(6) குருதித் தொடர்பால் நெருங்கி நிற்பவர், அகன்று நிற்பவரைத் தள்ளிச் செல்வர். (Nearer in Blood excludes more Remote.) இந்த விதி ஒத்தஅந்தஸ்திலுள்ள பிரிவினரிடையேதான் பொருந்தும்.

(எ - டு) தந்தை, தந்தையின் தந்தை ஆகிய இருவரும் உயிருடன் இருந்தால், தந்தையின் தந்தை சொத்துரிமை பெறாது தந்தையால் தள்ளப்படுவார். அதேபோல், இறந்தவரின் மகன் இருக்கும்பொழுது, மகனின் மகன் சொத்துரிமை பெறாது தள்ளப்படுவார்.

இந்த விதி ஒத்தஅந்தஸ்திலுள்ள ஒரே பிரிவினருக்கே பொருந்துமாதலால், குருதித் தொடர்பால் நெருங்கி நிற்கும் பங்குதாரர்கள் குருதித் தொடர்பால் அகன்று நிற்கும் பங்குதாரர்களைச் சொத்துரிமை பெறாது தள்ள முடியும்; நெருங்கி நிற்கும் பங்குதாரர் அகன்று நிற்கும் எச்சதாரரைத் தள்ளிவிட முடியாது. நெருங்கி நிற்கும் எச்சதாரர்கள் அகன்று நிற்கும் எச்சதாரர்களையே தள்ள முடியும்.

(எ - டு) இறந்தவரின் மகள் நெருங்கிய பங்குதாரராயினும், இறந்தவரின் சகோதரனையோ அல்லது இவருடைய மகனையோ எஞ்சியதைப் பெறுவதில் நின்றும் தள்ளிவிட முடியாது. இந்த விதிக்கு விலக்காகக் கீழ்வருவனவற்றைக் குறிப்பிடலாம் :

(a) மகனின் குழந்தைகள் எத்தனை தலைமுறை பின் சென்றவராயினும், அவர்களிடையே அகன்று நிற்பவர் நெருங்கி நிற்பவரால்

தள்ளப்படுவரே தவிர, மற்று வேறு எந்த நெருங்கிய உரிமை பெற்ற வாரிசுகளாலும் தள்ளப்படமாட்டார்.

(b) இறந்தவருக்கு ஒரே மகன் மட்டும் இருந்தால், இறந்தவருடைய மகனின் மகள் முழுமையாகப் பங்கு பெருது தள்ளப்படாது, எஞ்சிய குறைந்த பங்கைப் பெறுவாள்.

(c) பாட்டன், இறந்தவரின் தந்தையைத் தவிர வேறு எவராலும் பங்கு பெருது தள்ளப்படமாட்டார்.

(d) தாயின் தாய், இறந்தவரின் தாயால் மட்டுமே பங்கு பெருது தள்ளப்படுவார்.

(e) தந்தையின் தாய், இறந்தவரின் தந்தையாலோ அல்லது தாயாலோ அன்றி, வேறெந்த நெருங்கிய வாரிசுகளாலும் தள்ளப்படமாட்டார்.

முன்னே கூறப்பட்ட பன்னிரண்டு பங்குதாரர்களில் (1) கணவன், (2) மனைவி, (3) தந்தை, (4) தாய், (5) மகள் ஆகிய ஐந்து பங்குதாரர்களும் எக் காரணத்தைக் கொண்டும் முழுமையாகத் தள்ளப்படமாட்டார்கள். இவர்கள் உயிருடன் இருந்தால், இறந்தவர் சொத்தில் நிச்சயம் பங்கு பெறுபவர்கள் ஆவர். இறந்தவருடைய மகன் உயிருடன் இருந்தால், அவர் எச்சதாரராய் இருப்பினும், எக் காரணத்தைக் கொண்டும் பங்கு பெருது தள்ளப்படமாட்டார். மகன் உயிருடன் இருந்தால், இறந்தவர் சொத்தில் எச்சதாரராய் நிச்சயம் பங்கு பெறுவார். கணவன் அல்லது மனைவி, தந்தை அல்லது பாட்டன், தாய் அல்லது பாட்டி, மகள் ஆகிய பங்குதாரர்களைத் தவிர, மீதி உள்ள பங்குதாரர்களை மகன் உயிரோடு இருந்தால், பங்கு பெருது தள்ளிவிடுவான். எனவே, மேற்குறிப்பிடப்பட்ட நிச்சயம் பங்கு பெறும் எல்லாப் பங்குதாரர்களும் உயிருடன் இருந்தாலும், மகனுக்கு ஒரு பங்கு நிச்சயம் கிடைக்கும் என்பதைக் கீழ்வரும் விளக்கத்திலிருந்து அறியலாம் :

இறந்தவர் தம்முடைய வாரிசுகளாக, கணவன், தந்தை, தாய், மகள், மகன் ஆகியோரை விட்டுச் சென்ருல், இவர்களுக்குக் கிடைக்கும் பங்குகளாவன :

கணவன்	$\frac{1}{4}$	(மகனும், மகளும் இருக்கிற காரணத்தால்)
தந்தை	$\frac{1}{6}$	,,
தாய்	$\frac{1}{6}$	,,

$$\left(\frac{1}{4}+\frac{1}{6}+\frac{1}{6} = \frac{6+4+4}{24} = \frac{14}{24} = \frac{7}{12}\right)$$

இம் மூன்று பங்குதாரர்களும் தத்தம் பங்கைப் பெற்றுள்ளனர். மகள், மகன் உடன்வாழும் காரணத்தால், இவர்கள் எச்சதாரராகப் பங்கு பெறுவர். மகனுக்கு 2 பங்கும், மகளுக்கு ஒரு பங்கும் மீதி இருப்பதில்

கிடைத்தாக வேண்டும். கணவன், தந்தை, தாய் ஆகிய மூவரும் சொத்தில் $\frac{7}{12}$ பங்கைப் பங்குதாரராய் எடுத்துக்கொண்ட பின்னர், மீதியுள்ள $\frac{5}{12}$-ல் மகன் $\frac{2}{3}$ பாகமும், மகள் $\frac{1}{3}$ பாகமும் பங்கு பெறுவர்.

மகன் $= \frac{5}{12} \times \frac{2}{3} = \frac{10}{36}$ (எச்சதாரர்)
மகள் $= \frac{5}{12} \times \frac{1}{3} = \frac{5}{36}$ (எச்சதாரர்)

ஆகவே, மேற்கூறப்பட்ட ஐந்து பங்குதாரர்களும் இறந்தவரின் மகனும் எவ்விதத்திலும் பங்குபெறாது தள்ளப்பெறாமல் சிறு பங்காயினும் பெறுவர் ஆதலால், இவர்களை முதல்நிலை வாரிசுகள் (Primary Heirs) என்று கூறுவர். இம் முதல்நிலை வாரிசுகளில், மகன், மகள், தந்தை, தாய் ஆகிய நால்வரும் தக்க மாற்றுப்பேர்வழிகளை (Substitutes) விட்டுச் செல்கின்றனர். மகனின் மகன் (எ. த. பி. செ.), மகனின் மகள் (எ. த. பி. செ.), பாட்டன், பாட்டி ஆகியவர்கள், முறையே மகன், மகள், தந்தை, தாய் ஆகிய நால்வருக்கும் மாற்றுப் பேர்வழிகளாவர். முதல்நிலை வாரிசுகள் இல்லாமற் போய், அவர்களுடைய மாற்றுப் பேர்வழிகள் இருந்தால், இவர்கள் வாரிசுரிமை பெறுவர். ஆனால், விதிவிலக்காக, மகனின் மகள், இறந்தவரின் ஒரே மகளோடு $\frac{1}{6}$ பாகம் மட்டிலும் பெறுவதைக் குறிப்பிடலாம்.

(7) பங்குபெறாது தள்ளப்பட்டவர், பிறரை முழுமையாகவோ அரை குறையாகவோ தள்ளிவிடலாம். சில வாரிசுகள் உடன்வாழும் ஒரே காரணத்தால், தள்ளப்பட்ட வாரிசுகள், அடுத்த வாரிசைப் பங்கு பெறுவதில் நின்றும் அரைகுறையாகவோ முழுமையாகவோ தள்ளி விடுகின்றனர்.

எ-டு. (a) தந்தை, தாய், 2 சகோதரர்கள் ஆகிய வாரிசுகளை இறந்தவர் விட்டுச் சென்றால், இந்த இரண்டு சகோதரர்களும், தங்கள் தந்தை இருக்கின்ற காரணத்தால், பங்குபெறாது முழுமையாகத் தள்ளப் பெறுவர். ஆயினும், 2 சகோதரர்களும் வாரிசாக நிற்பதால், இவர்கள் இறந்தவரின் தந்தையால் பங்குபெறாது தள்ளப்பட்ட போதிலும், தாயின் பங்கை $\frac{1}{3}$-லிருந்து $\frac{1}{6}$ ஆகக் குறைத்துவிடுவர். மீதியுள்ள $\frac{5}{6}$ பங்கைத் தந்தை எச்சதாரராய் எடுத்துக் கொள்வார்.

2 சகோதரர்கள்	0	(தந்தையால் தள்ளப்பட்டனர்)
தந்தை	$\frac{5}{6}$	(எச்சதாரராய்)
தாய்	$\frac{1}{6}$	(இறந்தவருக்குக் குழந்தைகள் இல்லையானால், தாய் $\frac{1}{3}$ பங்கு பெற உரிமையுண்டு. ஆனால் 2 சகோதரர்கள் இருப்பதால், அவள் பங்கு $\frac{1}{3}$-லிருந்து $\frac{1}{6}$ ஆகக் குறைந்தது.)

(b) மேற் குறிப்பிட்டுள்ள விளக்கத்தில், இரண்டு சகோதரர்களுக்குப் பதிலாக இரண்டு சகோதரிகள் வாரிசாக நின்றாலும், அல்லது ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் வாரிசாக நின்றாலும், தாயின் பங்கு $\frac{1}{3}$-லிருந்து $\frac{1}{6}$ ஆகக் குறைந்துவிடும்.

(c) தந்தையின் தாயும், தாயினுடைய தாயின் தாயும், தந்தையும் இறந்தவரின் வாரிசாக இருந்தால், தாயினுடைய தாயின் தாய், குருதித் தொடர்பால் நெருங்கி நிற்கின்ற தந்தையின் தாயால் பங்குபெறாது முழுமையாகத் தள்ளப்படுவார். ஆனால், அதே சமயத்தில் தந்தையின் தாய், தந்தையால் முழுமையாகத் தள்ளப்படுகிறார். எனவே, இப்படிப் பட்ட சந்தர்ப்பத்தில் தந்தையே எச்சதாரராக முழுச் சொத்தினையும் பெறுவார்.

தந்தை	= 1 பங்கு (எச்சதாரராய்)
தந்தையின் தாய்	= 0 (தந்தையால் தள்ளப்பட்டவர்)
தாயினுடைய தாயின் தாய்	= 0 (தந்தையின் தாயால் தள்ளப் பட்டவர்)

மேற்கூறிய விளக்கத்தில் தந்தையின் தாய் வாரிசுதாரராக இல்லாதிருந்தால், தாயினுடைய தாயின் தாய் $\frac{1}{6}$ பங்கைப் பெற உரிமை பெற்றவளாவாள்.

தாயினுடைய தாயின் தாய்	= $\frac{1}{6}$ (பங்குதாரராய்)
தந்தை	= $\frac{5}{6}$ (எச்சதாரராய்)

(8) மேற்கூறிய விதிகளின் அடிப்படையில் பங்கு கிடைக்காமல் தள்ளப்படுவதை முழுமையாகத் தள்ளல் (Total exclusion) என்று கூறலாம். அதேபோல், வேறு வாரிசுகள் உடன் வாழும் காரணத்தால், பங்குதாரர்களுக்கு இயல்பாய்க் கிடைக்கவேண்டிய பங்கிலிருந்து குறைவாகக் கிடைக்கும் அளவுக்கு அவர்கள் தள்ளப்பட்டால், அதை அரைகுறைத் தள்ளல் (Partial exclusion) என்று கூறலாம். முழுமையாகத் தள்ளப்பட்டவருக்குப் பங்கு அறவே கிடைக்காது. ஆனால், அரைகுறையாகத் தள்ளப்பட்டவருக்குக் குறைந்த பங்கு கிடைக்கும். அரைகுறையாகத் தள்ளப்படுபவர் என, பன்னிரு பங்கு தாரர்களில் ஐவரைக் குறிப்பிடலாம்.

அவர்கள், (1) கணவன், (2) மனைவி அல்லது மனைவிகள், (3) தாய், (4) மகனின் மகள், (5) தந்தைவழிச் சகோதரி ஆகிய ஐவருமாவர்.

பங்குதாரர்	கூடுதல் பங்கு	குறைந்த பங்கு	காரணம்
(1) கணவன்	½ முதல்	¼ வரை	இறந்தவருக்குக் குழந்தைகளோ, மகனின் குழந்தைகளோ (ஆண், பெண்) உயிருடன் இருந்தால்.
(2) மனைவி	¼ ,,	⅛ ,,	இறந்தவருக்குக் குழந்தைகளோ, மகனின் குழந்தைகளோ உயிருடன் இருந்தால்.
(3) தாய்	⅓ ,,	⅙ ,,	(a) இறந்தவருக்குக் குழந்தைகளோ, மகனின் குழந்தைகளோ (எ. த. பி. செ.) இருந்தாலும்; (b) இரண்டோ இரண்டிற்கு மேற்பட்ட சகோதரர்களோ இறந்தவருக்கு வாரிசாக இருந்தாலும்; (c) இரண்டோ இரண்டிற்கு மேற்பட்ட சகோதரிகளோ இருந்தாலும்; (d) ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் உயிருடன் இருந்தாலும் தாயின் பங்கு குறையும்.
(4) மகனின் மகள்	½ முதல்	⅙ வரை	இறந்தவருக்கு ஒரே மகள் இருந்தால், மகனின் மகளுக்கு ½-லிருந்து ⅙ பங்காகக் குறையும்.
(5) தந்தைவழிச் சகோதரி	½ ,,	⅙ ,,	ஓர் உடன் பிறந்த சகோதரி இருந்தால், பங்கு குறைகிறது.

இறந்தவர் சொத்தினின்று முழுமையாகப் பங்கு பெறாது, முழுமையாகத் தள்ளப்படும் (totally excluded) பங்குதாரர்களைக் கீழே காணலாம்:

தள்ளப்பட்டவர்	தள்ளுபவர்
(1) பாட்டன்	தந்தையாலோ, நெருங்கிய பாட்டனாலோ தள்ளப்படுவார்.
(2) பாட்டி	
(a) தாய்வழிப் பாட்டி :	தாயாலோ, அல்லது நெருங்கிய தந்தைவழிப் பாட்டியாலோ, தாய் வழிப் பாட்டியாலோ முழுமையாகத் தள்ளப்படுவாள்.
(b) தந்தைவழிப் பாட்டி :	தாயாலோ, தந்தையாலோ, நெருங்கிய தந்தைவழிப் பாட்டியாலோ, நெருங்கிய தாய்வழிப் பாட்டியாலோ, இடைப்பட்ட பாட்டியினாலோ முழுமையாகத் தள்ளப்படுவாள்.
(3) உடன் பிறந்த சகோதரி :	மகன், மகனின் மகன் (எ. த. பி. செ.), தந்தை அல்லது பாட்டன் ஆகியவர்களால் முழுமையாகத் தள்ளப்படுவாள்.
(4) தந்தைவழிச் சகோதரி :	மகன், மகனின் மகன் (எ. த. பி. செ.), தந்தை, அல்லது பாட்டன், உடன் பிறந்த சகோதரன், இரண்டோ இரண்டிற்கு மேற்பட்டோ உடன்பிறந்த சகோதரிகள் இருந்தாலும் முழுமையாகத் தள்ளப்படுவாள். ஆனால், ஒரே ஓர் உடன்பிறந்த சகோதரி மட்டும் இருந்தால், தந்தைவழிச் சகோதரி அரைகுறையாகத் தள்ளப்படுவாள்.
(5) தாய்வழிச் சகோதரன் } தாய்வழிச் சகோதரி }	மகன், மகனின் மகன், (எ.த.பி. செ.), தந்தை, அல்லது பாட்டன் ஆகியவர்களால் முழுமையாகத் தள்ளப்படுவாள்.

தள்ளப்பட்டவர்	தள்ளுபவர்
(6) மகனின் மகள் (எ. த. பி. செ.)	உதிரத் தொடர்புடைய நெருங்கிய மகனாலும், இரண்டல்லது, இரண்டிற்கு மேற்பட்ட நெருங்கிய மகள்களாலும் முழுமையாகத் தள்ளப்படுவாள். ஆனால், ஒரு படி உயர்ந்த ஒரே மகளோடு அரைகுறையாகத் தள்ளப்பட்டு, குறைவான பங்கைப் பெறுவாள்.

இவ்விதம் பங்கு பெருது முழுமையாகத் தள்ளப்படுபவர்கள் இந்த அத்தியாயத்தில் முதலில் கூறப்பட்ட மரணம் விளைவித்தல் (Homicide), முறையிலா மணப் பிறப்பு (Illegitimacy), வழக்கம் (Custom), இயற்றிய சட்டம் (Statute) ஆகிய காரணங்களின் அடிப்படையில் பங்கு பெருது தள்ளப்படுகிறவர்களினின்றும் வேறுபட்டவர்களாவார்கள்.

‘சுன்னி’ சட்டப்படி பங்குதாரர்களின் பங்குகள்

(1) கணவன் பெறும் கூடுதல் பங்கு $\frac{1}{2}$; குறைந்த பங்கு $\frac{1}{4}$ ஆகும்.

	பங்கு	கூடவோ, குறையவோ நேரிடும் காரணம்
(a)	$\frac{1}{2}$	இறந்தவருக்குக் குழந்தைகளோ (ஆணும், பெண்ணும்) மகனின் குழந்தைகளோ (எ. த. பி. செ.) இல்லாது இருந்தால், மனைவி விட்டுச்சென்றதில் கணவனுக்கு $\frac{1}{2}$ பங்கு கிடைக்கும்.
(b)	$\frac{1}{4}$	குழந்தைகளோ, மகனின் குழந்தைகளோ (எ. த. பி. செ.) இருந்தால், அந்தக் கணவனுக்கு $\frac{1}{4}$ பங்கே கிடைக்கும்.

விளக்கம் : ஒரு சுன்னி முசுலிம் கீழ்வரும் வாரிசுகளை விட்டுச் சென்ருல், அவரவர்களுக்கும் கிடைக்கும் பங்குகளாவன :

(a) கணவன் : $\frac{1}{2}$ (இறந்தவருக்குக் குழந்தை இல்லாததால்.)
தந்தை : $\frac{1}{2}$ (எச்சதாரராய் மிஞ்சியதைப் பெறுகிருர்.)

(b) கணவன் : $\frac{1}{4}$ (குழந்தையிருப்பதால்).
மகன் : $\frac{3}{4}$ (எச்சதாரராய் மிஞ்சியதைப் பெறுகிருர்.)

(2) மனைவி பெறும் கூடுதல் பங்கு $\frac{1}{4}$; குறைந்த பங்கு $\frac{1}{8}$.

பங்கு		கூடவோ, குறையவோ நேரிடும் காரணம்
(a)	$\frac{1}{4}$	குழந்தைகளோ, மகனின் குழந்தைகளோ (எ. த. பி. செ.) இல்லாது இருந்தால், மனைவி $\frac{1}{4}$ பங்கு பெறுவாள்.
(b)	$\frac{1}{8}$	குழந்தைகளோ, மகனின் குழந்தைகளோ (எ. த. பி. செ.) இருந்தால், $\frac{1}{8}$ பங்கு பெறுவாள். குறிப்பு : ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் இருந்தால், மேற்குறிப்பிடப்பட்ட பங்கையே சம மாகப் பங்கிட்டுக்கொள்ள வேண்டும்.

விளக்கம் : ஒரு சுன்னி முசுலிம் கீழ்வரும் வாரிசுகளை விட்டுச் சென்றால், அவர்களுக்குக் கிடைக்கும் பங்குகளாவன :

(a) மனைவி : $\frac{1}{4}$ (குழந்தைகளோ, மகனின் குழந்தைகளோ இல்லா ததால்.)

தந்தை : $\frac{3}{4}$ (மிஞ்சியதை எச்சதாரராய்ப் பெறுகிறார்.)

(b) மனைவி : $\frac{1}{8}$ (இறந்தவருக்குக் குழந்தை இருப்பதால்.)

மகன் : $\frac{7}{8}$ (எச்சதாரராக மிஞ்சியதைப் பெறுகிறார்.)

(c) 4 மனைவிகள் $= \frac{1}{4} \times \frac{1}{4} = \frac{1}{16}$ } (ஒவ்வொரு மனைவியும் $\frac{1}{16}$ பங்கு பெறுவர். குழந்தைகள் இல்லை.)

தந்தை : $\frac{3}{4}$ (எச்சதாரர்.)

(d) 3 மனைவிகள் $= \frac{1}{8} \times \frac{1}{3} = \frac{1}{24}$ } (ஒவ்வொரு மனைவியும் $\frac{1}{24}$ பங்கு பெறுவர். குழந்தை இருக்கின்றது.)

மகன் : $\frac{7}{8}$ (எச்சதாரர்.)

(3) தந்தை பங்குதாரராய் $\frac{1}{6}$ பங்கு பெறுவார். சில சமயங்களில் எச்சதாரராய் எஞ்சியிருப்பதைப் பெறுவார். இன்னும் சில சமயங் களில் பங்குதாரராயும், எச்சதாரராயும் (இரு வழிகளிலும்) பங்கு பெறுவார்.

பங்கு		
(a)	$\frac{1}{6}$	இறந்தவருக்குக் குழந்தைகளோ, மகனின் குழந் தைகளோ (எ. த. பி. செ.) இருந்தால், பங்கு தாரராய் $\frac{1}{6}$ பங்கு பெறுவார்.

(b) எச்சதாரராய் எஞ்சியிருப்பதைப் பெறுதல் — குழந்தைகளோ, மகனின் குழந்தைகளோ (எ. த. பி. செ.) இல்லாதிருந்து, மற்றப் பங்குதாரர்கள் இருந்தால், அவர்களுக்குரிய பங்கைக் கொடுத்து எஞ்சியிருப்பதை எச்சதாரராய் எடுத்துக்கொள்வார். மேலும், இறந்தவரின் தாயுடன் பங்கு பெறும்பொழுது, எச்சதாரராய் எஞ்சியிருப்பதை எடுத்துக்கொள்வார்.

(c) பங்குதாரராயும் எச்சதாரராயும் (இரு வழிகளில்) பங்கு பெறல் — இறந்தவரின் மகளுடன் தந்தை வாரிசாக நிற்கும் போது, பங்குதாரராயும், எச்சதாரராயும் (இரு வழிகளிலும்) பங்கு பெறுவார். இறந்தவரின் மகளோ, மகனின் மகளோ மட்டும் வாரிசாக நிற்கும்பொழுது, தந்தை இருவழிகளிலும் பங்கு பெறத் தகுதி பெறுகிறார்.

விளக்கம் : ஒரு சுன்னி முசுலிம் கீழ்வரும் வாரிசுகளை விட்டுச் சென்றால், அவர்களுக்குக் கிடைக்கும் பங்குகளாவன :

(a) தந்தை : $\frac{1}{6}$ (குழந்தைகள் இருப்பதால் பங்குதாரராய், பங்கு மட்டிலும் பெறுகிறார்.)

மகன் : $\frac{5}{6} \times \frac{2}{3} = \frac{5}{9}$ (எச்சதாரர்.)

மகள் : $\frac{5}{6} \times \frac{1}{3} = \frac{5}{18}$ (எச்சதாரி.)

குறிப்பு : ஒரே தலைமுறையில் உள்ள ஆண்களும் பெண்களும் பங்கு பெறும்பொழுது, ஆணுக்கு இரண்டு பங்கும் பெண்ணுக்கு ஒரு பங்கும் கிடைக்கும். அதாவது, மொத்தப் பங்கு 3 என்றால், ஆணுக்கு 2 பங்கும் பெண்ணுக்கு ஒரு பங்கும் கொடுக்கப்பெறல் வேண்டும் (2 : 1)

(b) தாய் : $\frac{1}{3}$ (குழந்தைகள் இல்லை.)

தந்தை : $\frac{2}{3}$ (குழந்தைகள் இல்லாததால், மிஞ்சியுள்ள $\frac{2}{3}$ பங்கையும் எச்சதாரராகப் பெறுகிறார்.)

(c) மகள் (பங்குதாரராய்) $\frac{1}{2}$

தந்தை < $\frac{1}{6}$ பங்குதாரராய் / $\frac{1}{3}$ எச்சதாரராய் } $\frac{1}{2}$

குறிப்பு : மகள் இருப்பதால் தந்தை $\frac{1}{6}$ பங்கு பெறுகிறார். மகள் தன்னுடைய பங்கான $\frac{1}{2}$ பங்கை எடுத்துக் கொள்கிறாள். ஆக, முழுப் பங்கில் இருவரும் எடுத்துக்கொண்டது $\frac{2}{3}$ பங்கு ஆகும் ($\frac{1}{6}+\frac{1}{2}=\frac{1+3}{6}=\frac{2}{3}$). எனவே, மிஞ்சி நிற்பது $\frac{1}{3}$ பங்கு ஆகும் ($1-\frac{2}{3}=\frac{3-2}{3}=\frac{1}{3}$). இவ்விதம்

மிஞ்சி நிற்கின்ற $\frac{1}{3}$ பங்கையும் தந்தை எச்சதாரராய் எடுத்துக் கொள்கிறார். ஆக, தந்தைக்குப் பங்குதாரரென்ற முறையில் கிடைக்கும் $\frac{1}{6}$ பங்கும் எச்சதாரரென்ற முறையில் கிடைக்கும் $\frac{1}{3}$ பங்கும் சேர்ந்து ஆக மொத்தம் $\frac{1}{2}$ பங்கு கிடைக்கிறது ($\frac{1}{6}+\frac{1}{3} = \frac{1+2}{6} = \frac{1}{2}$).

(4) **பாட்டன்:** இறந்தவருக்குத் தந்தையோ, மிகவும் நெருங்கிய பாட்டனோ இல்லாதிருந்தால், தந்தை பங்கு பெறுவதைப் போல் இவரும் பங்கு பெறுவார். 3ஆவது பங்குதாரரான தந்தைக்குக் கூறப்பட்ட விதிகள் இவருக்கும் பொருந்தும்.

(a) பங்கு பெறாது முழுமையாகத் தள்ளப்படல்	தந்தையோ, நெருங்கிய பாட்டனோ இறந்தவருக்கு இருந்தால், அகன்ற கொள்ளுப் பாட்டன் பங்கு எதுவும் பெறாது தள்ளப் படுவார்.
(b) பங்கு பெறல்:	தந்தையோ, நெருங்கிய பாட்டனோ இல்லாதிருந்து, குழந்தைகளோ மகனின் குழந்தைகளோ இறந்தவருக்கு இருந்தால், பங்குதாரராய் $\frac{1}{6}$ பங்கு பெறுவார்.
(c) எச்சதாரராய் எஞ்சியிருப்பதைப் பெறல்	தந்தையோ, நெருங்கிய பாட்டனோ இல்லாதிருந்து, குழந்தைகளும், மகனின் குழந்தைகளும் (எ. த. பி. செ) இல்லாதிருந்தால், மற்றப் பங்குதாரர்களோடு எச்சதாரராய் எஞ்சியிருப்பதைப் பெறுவார்.
(d) பங்குதாரராயும் எச்சதாரராயும் இரு வழிகளில் பங்கு பெறல்	தந்தையோ,நெருங்கிய பாட்டனோ இல்லாது இருந்து, இறந்தவருக்குப் பெண் குழந்தைகள் மட்டும் இருந்தால் அவர்களோடு பங்குதாரராயும் எச்சதாரராயும் பங்கு பெறுவார்.

விளக்கம்: ஒரு சுன்னீ முசுலிம் கீழ்வரும் வாரிசுகளை விட்டுச் சென்றால், அவர்களுக்குக் கிடைக்கும் பங்குகளாவன:

(4) (a) (i) தாய்	= $\frac{1}{3}$ (குழந்தைகள் இல்லை)
தந்தை	= $\frac{2}{3}$ (குழந்தைகள் இல்லை—எச்சதாரராய்)
தந்தையின் தந்தை	= 0 (தந்தையால் தள்ளப்பட்டார்)
(ii) தாய்	= $\frac{1}{3}$ (பங்குதாரர்—குழந்தைகள் இல்லை)
தந்தை	= $\frac{2}{3}$ (எச்சதாரர்—குழந்தைகள் இல்லை)

தந்தையின் தந்தை (பாட்டன்) = 0 (தந்தையால் தள்ளப்பட்டவர்)

தந்தையின் தந்தையின் தந்தை (கொள்ளுப்பாட்டன்) = 0 (நெருங்கிய பாட்டனால் தள்ளப்பட்டவர்)

(b) தந்தையின் தந்தை = $\frac{1}{6}$ (பங்குதாரர்—குழந்தைகள் இருப்பதால்)

மகன் : $\frac{5}{6}\times\frac{2}{3}$ = $\frac{5}{9}$ (எச்சதாரர்)

மகள் : $\frac{5}{6}\times\frac{1}{3}$ = $\frac{5}{18}$ (எச்சதாரி)

(c) தாய் = $\frac{1}{3}$ (பங்குதாரர்—குழந்தைகள் இல்லை)

தந்தையின் தந்தை = $\frac{2}{3}$ (எச்சதாரராய்—குழந்தைகள் இல்லை)

(d) மகள் = $\frac{1}{2}$ (பங்குதாரி)

தந்தையின் தந்தை < $\frac{1}{6}$ பங்குதாரர், $\frac{1}{3}$ எச்சதாரர் } $\frac{1}{2}$ பங்கு

(இறந்தவரின் மகள் இருப்பதால், பங்குதாரராயும் எச்சதாரராயும் பங்கு பெறுகிறார்.)

(5) தாய்: பங்குதாரராய் மட்டிலுமே பங்கு பெறுவாள். கூடுதல் அளவில் $\frac{1}{3}$ பங்கையும், குறைந்த அளவில் $\frac{1}{6}$ பங்கையும் இவள் பெறுவாள். சில சந்தர்ப்பங்களில், பங்குதாரருக்குக் கொடுத்தது போக மீதி இருப்பதில் $\frac{1}{3}$ பங்கையும் இவள் பெறுவாள். ஆயினும், ஒரு தாய் எச்சதாரராகப் பங்கு பெறமாட்டாள்.

பங்கு :

(a) $\frac{1}{6}$ — இறந்தவருக்குக் குழந்தைகளோ, மகனின் குழந்தைகளோ இருந்தால், தாய் $\frac{1}{6}$ பங்கு பெறுவாள்.

(b) $\frac{1}{6}$ — இருவர் அல்லது இருவருக்கும் மேற்பட்ட (உடன்பிறந்த அல்லது தந்தைவழி, அல்லது தாய்வழிச்) சகோதரர்களோ, அல்லது சகோதரிகளோ இருந்தாலும் தாய் $\frac{1}{6}$ பங்கு பெறுவாள்.

(c) $\frac{1}{6}$ — (உடன் பிறந்த அல்லது தந்தைவழி அல்லது தாய்வழி) ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் இருந்தாலும், தாயின் பங்கு $\frac{1}{6}$ ஆகும்.

(d)	$\frac{1}{3}$	(5 *a*, *b*, c)ல் குறிப்பிடப்பட்ட வாரிசுகள் எவருமே இல்லாதிருந்தால், தாயின் பங்கு $\frac{1}{3}$ ஆகும்.
(e)	$\frac{1}{3}$	(5 *a*, *b*, c)ல் குறிப்பிடப்பட்டதுபோல் வாரிசுகள் இல்லாது இருந்து, ஒரு சகோதரன் மட்டுமோ அல்லது ஒரு சகோதரி மட்டுமோ இருந்தால், தாய் $\frac{1}{3}$ பங்கு பெறுவாள்.
(f)	மீதி உள்ள $\frac{1}{3}$ பங்கு	இறந்தவரின் கணவனோ, அல்லது மனைவியோ மட்டும் வாரிசாக இருந்து, அவருடன் தந்தையும் தாயும் பங்கு பெறும்பொழுது, கணவனுக்கோ மனைவிக்கோ அவருடைய பங்கைக் கொடுத்து, மீதியிருக்கும் பங்கில் $\frac{1}{3}$ பங்கைத் தாய்க்குக் கொடுக்க வேண்டும். எஞ்சியுள்ளதைத் தந்தை எடுத்துக்கொள்வார். தாயுடன் தந்தை வாழும் பொழுது மட்டிலுமே இந்த விதி பின்பற்றப்பட வேண்டும். தாயுடன் தந்தையின் மூதாதையர் (எ. த. மூ. செ.) வாழ்ந்தால், இந்த விதி பயன் படுத்தப்படல் கூடாது.

விளக்கம் : ஒரு சுன்னி முசுலிம் கீழ்வரும் வாரிசுகளை விட்டுச் சென்றால், அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய பங்குகளாவன :

(5)	(a)	தாய்	= $\frac{1}{6}$ (பங்குதாரர்—குழந்தை இருப்பதால்)
		மகன்	= $\frac{5}{6}$ (எச்சதாரர்)
	(b)	தாய்	= $\frac{1}{6}$ (2 சகோதரிகள் இருப்பதால்)
		தந்தை	= $\frac{5}{6}$ (குழந்தைகள் இல்லை—எச்சதாரர்)
		2 சகோதரிகள்	= 0 (கிளை வழியினர் ஆதலால், தந்தையால் தள்ளப்பட்டனர்)

குறிப்பு : இறந்தவருக்குக் குழந்தைகள் இல்லாதிருப்பின், தாய் $\frac{1}{3}$ பங்கு பெற உரிமையுடையவள் ஆவாள். ஆனால், இறந்தவருக்கு 2 சகோதரிகள் இருக்கின்ற காரணத்தால், தாயின் பங்கு $\frac{1}{3}$-லிருந்து $\frac{1}{6}$ ஆகக் குறைக்கப்படுகிறது. 2 சகோதரிகளும் கிளை வழியினர் ஆதலால், அதாவது தங்களுடைய தந்தையின் மூலம் இறந்தவரோடு தொடர்பு ஏற்படுத்திக்கொள்வதால், தந்தை பங்கு பெறுகிற காரணத் தால், 2 சகோதரிகளும் பங்கு பெறாது முழுமையாகத் தள்ளப்படு கின்றனர். (இதையே முழுமையாகத் தள்ளல் என்று முன்னரே குறிப் பிட்டோம்.) மேலும், 'பங்கு பெறாது தள்ளப்பட்டவர், பிறரை முழுமை யாகவோ அரைகுறையாகவோ தள்ளிவிடலாம்' என்ற விதிக்கிணங்க,

பங்கு பெறாது தள்ளப்பட்ட 2 சகோதரிகளும், தாயின் பங்கை 1/3-லிருந்து 1/6 ஆகக் குறைத்து விடுகின்றனர். எனவே, தாய் அரைகுறையாகத் தள்ளப்பட்டாள்.

(c)	தாய்	= 1/6 (ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் வாழ்வதால்)
	(உடன் பிறந்த அல்லது தந்தைவழி அல்லது தாய் வழி) ஒரு சகோதரன்	= 0 (தந்தையால் தள்ளப் பட்டவன்)
	ஷை ஒரு சகோதரி	= 0 (தந்தையால் தள்ளப் பட்டவள்)
	தந்தை	= 5/6 (எச்சதாரர்)

குறிப்பு : இறந்தவருக்குக் குழந்தைகள் இல்லாதிருந்தால், அவருடைய தாய்க்குக் கிடைக்க வேண்டிய பங்கு 1/3 ஆகும். ஆனால், இறந்தவருடைய ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் வாரிசுகளாக நிற்பதால், அவர்கள் தாயின் பங்கை 1/3-லிருந்து 1/6 ஆகக் குறைத்துவிடுகின்றனர். ஒரு சகோதரனும் சகோதரியும் தந்தையால் பங்கு பெறாது முழுமையாகத் தள்ளப்பட்டபோதிலும், தாயின் பங்கை 1/6 ஆகக் குறைத்துவிடுகின்றனர்.

'பங்கு பெறாது தள்ளப்பட்டவர் பிறரை முழுமையாகவோ அரை குறையாகவோ தள்ளிவிடலாம்' என்ற விதியை ஹனபி இறங்குரிமைச் சட்டப்படி பங்கு பெறாது தள்ளப்பட்டவர்களின் பொருட்டே பயன் படுத்தவேண்டும். எனவே, இயற்றப்பட்ட சட்டங்களின் மூலமாகவோ, வழக்கங்களின் (Custom) மூலமாகவோ, பங்கு பெறாது தள்ளப்பட்ட வர்கள் பிறரை அரை குறையாகவோ முழுமையாகவோ தள்ள முடியாது. (எ - டு) 1886-ஆம் ஆண்டு வாட்டன் சட்டம் (Watan Act, 1886) இறந்தவருடைய மகளுக்குச் சொத்தில் சொத்துரிமை தராது தள்ளிவிடுகிறது. வாட்டன் சட்டத்தால் மகள் தள்ளப்பட்ட போதிலும், அவள் உயிரோடு இருப்பதால், மனைவியின் பங்கை 1/4-லிருந்து 1/8 ஆகக் குறைத்துவிடுவாள் என்று கொள்ளலாகாது. குழந்தைகள் இருந்தால் பங்குதாரர்களின் பங்கு குறைந்துவிடுவதைப் பார்க்கிறோம். இதற்குக் காரணம், இறந்தவர் சொத்தில் குழந்தை களுக்கு அதிகம் பங்கு கிடைக்க வழி செய்வதே ஆகும். எனவே, வாட்டன் சட்டப்படி, மகளுக்குப் பங்கே கிடைக்க முடியாது. மனைவி யின் பங்கு 1/4-லிருந்து 1/8 ஆக, மகள் உடன் வாழும் காரணத்தால் குறைய வேண்டுமென்பது ஹனபி இறங்குரிமைச் சட்டத்திற்கு மாறு பட்ட தத்துவம் ஆகும்.

(d) தாய் $\frac{1}{3}$—(பங்குதாரர்; 5 *a*, *b*, c-ல் குறிப்பிட்ட வாரிசுகள் இல்லாததால்)

தந்தை $\frac{2}{3}$—(எச்சதாரர்; குழந்தையில்லாததால்)

(e) தாய் $\frac{1}{3}$—(பங்குதாரர்; 5 *a*, *b*, c-ல் குறிப்பிடப்பட்ட வாரிசுகள் இல்லாததால்)

தந்தை—$\frac{2}{3}$ (எச்சதாரர்; குழந்தைகள் இல்லாததால்.)
ஒரு சகோதரன்—0 (தந்தையால் தள்ளப்பட்டார்)

(f) (i) கணவன் = $\frac{1}{2}$ (பங்குதாரர்.)

தாய் = $(\frac{1}{2}\times\frac{1}{3}) = \frac{1}{6}$ (பங்குதாரராய், மீதியுள்ள $\frac{1}{2}$ பங்கில் $\frac{1}{3}$ பாகம் பெறுகிறுள்)

தந்தை = $(\frac{1}{2}\times\frac{2}{3}) = \frac{1}{3}$ (எச்சதாரராய் மீதியிருக்கும் $\frac{1}{3}$ பங்கைப் பெறுகிறுர். குழந்தைகள் இல்லை.)

குறிப்பு: இறந்தவளுக்குக் குழந்தைகளும், குறிப்பிட்ட சகோதரர்களும், சகோதரிகளும் இல்லாதிருப்பதால், அவளுடைய தாய் பெற வேண்டிய பங்கு $\frac{1}{3}$ ஆகும். ஆனுல், இறந்தவள் தன் கணவனையும் தந்தையையும், தாயோடு வாரிசாக விட்டுச்சென்றிருப்பதால், அக்கணவனுடைய பங்கான $\frac{1}{2}$ பாகத்தைக் கொடுத்தது போக மீதி இருக்கும் $\frac{1}{2}$ பாகத்தில் $\frac{1}{3}$-க்கே இத் தாய் உரிமை பெறுகிறுள். எனவே, $\frac{1}{6}$ பங்கையே இவளால் பெற முடிகிறது—$(\frac{1}{2}\times\frac{1}{3}=\frac{1}{6})$. இதற்குக் காரணம் என்னவெனில், கணவனுக்குக் கொடுத்த $\frac{1}{2}$ பங்கு போக, தாய்க்கு $\frac{1}{3}$ பங்கு கொடுத்துவிட்டால், எஞ்சியிருப்பது $\frac{1}{6}$ பங்கே ஆகும். அதாவது, $\frac{1}{3}$-ல் நேர்பாதி $\frac{1}{6}$-ஐயே தந்தை பெறவேண்டும். $1-(\frac{1}{2}+\frac{1}{3})=\frac{1}{6}$. ஒரே தலைமுறையில் உள்ள சம அந்தஸ்தில் உள்ளவர்களில் ஆணுக்கு 2 பாகமும், பெண்ணுக்கு 1 பாகமும் என்ற தத்துவத்திற்கு இது நேர்முரணுகி விடுகிறது. எனவேதான், இது போன்ற சந்தர்ப்பத்தில் எஞ்சியிருப்பதில் $\frac{1}{3}$ பங்கைத் தாய்க்குக் கொடுக்க, தந்தை தாயைப்போல் இரு மடங்கு பெறுதற்கு வழிசெய்யப்படுகிறது.

இந்த விதி தந்தை இருக்கும்பொழுது மட்டினுமே பயன்படுத்தப்படல் வேண்டும். தந்தையின் ஸ்தானத்தில் தந்தையின் தந்தையோ, அவர் மூதாதையரோ இருந்தால், இந்த விதி பயன்படுத்தப்படலாகாது. எனவே, தாய் $\frac{1}{3}$ பங்கைப் பெற்றுக்கொள்ள உரிமை பெற்றவளாவாள்.

எ-டு. மனைவி = $\frac{1}{4}$. குழந்தை இல்லை. பங்குதாரர்.

(ii) தாய் = $\frac{1}{3}$. குழந்தை இல்லை. தந்தையின் தந்தையே உடன் இருப்பதால் மீதி இருப்பதில் $\frac{1}{3}$ என்ற விதி பயன்படுத்தப்படவில்லை.

தந்தையின் தந்தை = $\frac{5}{12}$. குழந்தை இல்லை. எச்சதாரர்.
$(\frac{1}{4}+\frac{1}{3}=\frac{4+3}{12}=\frac{7}{12})$ மீதியிருப்பது $\frac{5}{12}$ ஆகும்.

(iii) மனைவி $= \frac{1}{4}$ பங்குதாரர் (மீதியிருப்பது $\frac{3}{4}$)
தாய் $= \frac{3}{4} \times \frac{1}{3} = \frac{4}{12} = \frac{1}{4}$ பங்குதாரர்
தந்தை $= \frac{1}{2}$ (எச்சதாரர்)

(iv) மனைவி $= \frac{1}{4}$ (பங்குதாரர்)
தாய் $= \frac{1}{3}$ (பங்குதாரர்)
தந்தையின் தந்தை $= \frac{5}{12}$ (எச்சதாரர்)

(6) பாட்டி: ஒன்றுக்கு மேற்பட்டவர் இருந்தால், $\frac{1}{6}$ பங்கைச் சமமாக எடுத்துக்கொள்வர். தாய்வழிப் பாட்டி (Maternal Grand Mother), தாயோ, நெருங்கிய தந்தைவழிப் பாட்டியோ தாய்வழிப் பாட்டியோ இல்லாது இருந்தால், $\frac{1}{6}$ பங்கைப் பெறுவாள். தந்தைவழிப் பாட்டி (Paternal Grand Mother) இறந்தவருடைய தாயோ, தந்தையோ, நெருங்கிய தந்தைவழிப் பாட்டியோ, நெருங்கிய தாய் வழிப் பாட்டியோ, இடைப்பட்ட பாட்டனோ இல்லாதிருந்தால், $\frac{1}{6}$ பங்கு பெறுவாள்.

(6) (a) பங்கு $\frac{1}{6}$ பாட்டிகள் ஒன்றுக்கு மேற்பட்டிருந்தால், சமமாய் $\frac{1}{6}$ஐப் பங்கிட்டுக்கொள்வர்.

(b) ,, $\frac{1}{6}$ தாய்வழிப்பாட்டி தாயோ, நெருங்கிய தந்தை வழிப் பாட்டியோ, நெருங்கிய தாய்வழிப் பாட்டியோ இல்லாது இருந்தால், $\frac{1}{6}$ பங்கு பெறுவாள்.

(c) ,, $\frac{1}{6}$ தந்தைவழிப் பாட்டி தாயோ, தந்தையோ, நெருங்கிய தந்தைவழிப் பாட்டியோ, நெருங்கிய தாய்வழிப் பாட்டியோ, இடைப் பட்ட பாட்டனோ இல்லாதிருந்தால், $\frac{1}{6}$ பங்கு பெறுவாள்.

விளக்கம்: ஒரு சுன்னி முசுலிம் கீழ்வரும் வாரிசுகளை விட்டுச் சென்றால், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்குகளாவன:

(6) (a) தந்தையின் தாய் (தந்தைவழிப் பாட்டி) = ; தாயின் தாய் (தாய்வழிப் பாட்டி) = } $\frac{1}{6} \times \frac{1}{2} = \frac{1}{12}$ — $\frac{1}{6}$ பங்கை இருவரும் பங்கிட்டுத் தலா $\frac{1}{12}$ பங்கு பெறுகின்றனர்.

தந்தையின் தந்தை = $\frac{5}{6}$ (எச்சதாரர்)

குறிப்பு: தந்தையின் தந்தை இடைப்பட்ட பாட்டனாக இல்லாமல், தந்தையின் தாயோடு ஒத்த தலைமுறையினராதலால், தந்தைவழிப் பாட்டி பங்கு பெறாது தள்ளப்படவில்லை.

(b) தந்தையின் தாய் = 0 (தந்தைவழிப் பாட்டியாக இருப்பதால், தந்தையால் தள்ளப்பட்டாள்)

தாயின் தாய் = $\frac{1}{6}$ (தாய்வழிப் பாட்டி ஆதலால், தந்தையால் தள்ளப்படவில்லை)

தந்தை = $\frac{5}{6}$ (எச்சதாரர்)

(c) (i) தந்தையின்

தந்தையின் தாய் = 0 (தந்தையின் தந்தையால் தள்ளப்பட்டாள்)

தந்தையின் தந்தை = 1 பங்கு (முழுவதும் எச்சதாரராய்ப் பெறுகிறர்)

குறிப்பு : இறந்தவருக்கும் தந்தைவழிக் கொள்ளுப்பாட்டிக்கும் இடைப்பட்ட பாட்டனுகத் தந்தையின் தந்தை நிற்பதால், தந்தைவழிக் கொள்ளுப்பாட்டி பங்கு பெருது அவரால் தள்ளப்பட்டாள். இறந்தவருடன் கொள்ளுப்பாட்டி தொடர்பு ஏற்படுத்திக் கொள்வது, தந்தையின் தந்தை (பாட்டனின்) மூலமே. எனவே, தந்தையின் தந்தை மூலம் இறந்தவரோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதால், தந்தையின் தந்தை வாரிசாகப் பங்குபெறும் பொழுது, இவளுக்குப் பங்கு கிடையாது.

ஆனுல், தந்தையின் தந்தையின் தாயினுடைய இடத்தில், தந்தையின் தாயின் தாய் இருந்தால், இவள் தந்தையின் தந்தையால் தள்ளப்படமாட்டாள். ஏனெனில், தந்தையின் தந்தையின் மூலம் இவள் இறந்தவரோடு தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளவில்லை. மாருக, தந்தையின் தாய் மூலமாக இறந்தவரோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு நிற்கிருள்.

(ii) தந்தையின் தாயின் தாய் = $\frac{1}{6}$ (பங்குதாரர்)
தந்தையின் தந்தை = $\frac{5}{6}$ (எச்சதாரர்)

(iii) தந்தையின் தாய் = $\frac{1}{6}$ (பங்குதாரர்)
தாயின் தாயின் தாய் = 0 (தந்தையின் தாய் இறந்தவருக்கு நெருங்கிய பாட்டி ஆதலால், அகன்று நிற்கும் கொள்ளுப் பாட்டியைத் தள்ளிவிடுகிருள்)
தந்தையின் தந்தை = $\frac{5}{6}$ (எச்சதாரர்)

(iv) தந்தையின் தாய் = 0 (தந்தையால் தள்ளப் பட்டவர்)

தாயின் தாயின் தாய் = 0 (தந்தையின் தாயால் தள்ளப்பட்டவர்)

தந்தை = 1 (முழுவதையும் எச்ச தாரராய்ப் பெறுவார்)

தந்தையின் தாய் தந்தையால் பங்கு பெருது தள்ளப்பட்ட போதிலும், தாயின் தாயின் தாயைப் பங்கு பெருது முழுமையாகத் தள்ளிவிடுகிருர். தந்தையின் தாய் இல்லாதிருந்தால், தாயின் தாயின் தாய்க்கு $\frac{1}{6}$ பங்கு கிடைக்க வேண்டும்.

(7) மகள் பங்குதாரராகவும் எச்சதாரராகவும் பங்கு பெறுவாள்.

(a) பங்கு $\frac{1}{2}$ இறந்தவருக்கு மகன் இல்லாது, ஒரே ஒரு மகள் மட்டும் இருந்தால், அவள் $\frac{1}{2}$ பங்கு பெறுவாள்.

(b) ,, $\frac{2}{3}$ இறந்தவருக்கு மகன் இல்லாதிருந்து, இரண் டல்லது அதற்கு மேற்பட்ட மகள் மட்டுமே இருந் தால், $\frac{2}{3}$ பங்கை அவர்கள் சமமாய்ப் பிரித்துக் கொள்வர்.

(c) எச்சதாரர் : இறந்தவருக்கு மகன் இருந்தால், எச்சதாரராய் ஆணுக்கு 2 பங்கும் பெண்ணுக்கு ஒரு பங்கும் என்ற விகிதத்தில் பங்கு பெறுவர்.

விளக்கம் : ஒரு சுன்னி முசுலிம் கீழ்வரும் வாரிசுகளை விட்டுச் சென்ருல், இவர்களுக்குக் கிடைக்கும் பங்குகளாவன :

(7) (a) மகள் = $\frac{1}{2}$ (மகன் இல்லை—ஒரே மகள். பங்குதாரர்)

தந்தை = $\frac{1}{2}$ [பங்குதாரராய் $\frac{1}{6}$ பங்கும், எச்சதாரராய் $\frac{1}{3}$ பங்கும் பெறுகிருர். 3(c)-ன் குறிப்பைக் காண்க]

(b) தந்தை = $\frac{1}{6}$ (பங்குதாரர்)

தாய் = $\frac{1}{6}$ (பங்குதாரர்)

2 மகள்கள் = $\frac{2}{3}$ [மகன் இல்லை. ஒவ்வொரு மகளும் பங்கு தாரராய் $\frac{2}{3}$-ல் சம பங்கு ($\frac{1}{3}$) பெறுவர்] ($\frac{2}{3}\times\frac{1}{2} = \frac{1}{3}$).

(c) (i) மகன் = $\frac{2}{3}$ (எச்சதாரர்)

மகள் = $\frac{1}{3}$ (எச்சதாரர்—மகன் இருப்பதால்)

(ii) 2 மகன் = $\frac{4}{7}$ (எச்சதாரர்)

3 மகள் = $\frac{3}{7}$ (எச்சதாரர்—மகன் இருப்பதால்)

குறிப்பு: ஒவ்வொரு மகனுக்கும் 2 பங்கு வீதம் ஈவு செய்து, 2 மகன்களுக்கும் மொத்தம் 4 பங்கும், ஒவ்வொரு மகளுக்கும் 1 பங்கு வீதம் பகிர்ந்து 3 மகள்களுக்கும் 3 பங்கும், ஆக மொத்தம் 7 பங்கு வைத்து, அதில் ஒவ்வொரு மகனுக்கும் $\frac{2}{7}$ பாகமும், ஒவ்வொரு மகளுக்கும் $\frac{1}{7}$ பாகமும் பிரித்துக்கொடுக்க வேண்டும்.

[இதன் சார்பாக, தொன்றுதொட்டு ஒரு வாய்பாடு வழக்கில் உள்ளது. அதாவது, மொத்தமுள்ள மகன்களை இரண்டிரண்டாகப் பெருக்கி, மகள்களை ஒவ்வொன்ருகக் கூட்டி வருகிற தொகை மொத்தப் பங்காகும். அதாவது, 4 மகன்களும் 5 மகள்களும் இருந்தால், மொத்தப் பங்கு $(2\times4)+5=13$ ஆகும். இதில், ஒவ்வோர் ஆணும் $\frac{2}{13}$ வீதமும், ஒவ்வொரு பெண்ணும் $\frac{1}{13}$ வீதமும் பாகம் பெறுவர். இப்படியே எத்தனை மகன் மகள் எண்ணிக்கையையும் பெருக்கிக் கூட்டலாம்.]

(8) மகனின் மகள்: பங்குதாரராகவும் எச்சதாரராகவும் பங்கு பெறுவாள்.

(a) பங்கின்றித் தள்ளப்படல்: இறந்தவரின்

(i) மகன் இருந்தாலும்,

* (ii) மகள் இருந்தாலும்,

[* இக் குறியிடப் பெற்றவர் இருந்தாலும், மகனின் மகள் சில சந்தர்ப்பங்களில் பங்கு பெறுகிறள் என்பதை (8) (e)–யில் காண்க.]

(iii) ஒருபடி முந்திய மகனின் மகன் இருந்தாலும்,

* (iv) ஒருபடி முந்திய மகனின் மகள் இருந்தாலும்,

(v) ஒத்த மகனின் மகன் இருந்தாலும், மகனின் மகள் பங்குதாரராய்ப் பங்கு பெறுது தள்ளப்படுவாள். ஆயினும்,

(b) எச்சதாரர்: ஒத்த மகனின் மகனோடு எச்சதாரராய்ப் பங்கு பெறுவாள்.

(c) பங்கு $\frac{1}{2}$ மேற்குறிப்பிடப்பட்ட a (i) முதல் (v) வரையிலான வாரிசுகளும் இல்லாதிருந்து, ஒரே மகனின் மகள் மட்டும் இருந்தால், $\frac{1}{2}$ பாகத்தைப் பங்குதாரராய்ப் பங்கு பெறுவாள்.

(d) ,, $\frac{2}{3}$ மேற்குறிப்பிடப்பட்ட a (i) முதல் (v) வரையுள்ள வாரிசுகளும் இல்லாதிருந்து, மகனின் மகள்கள் இருவரோ இருவரினும் மேற்பட்டவரோ இருந்தால் இவர்கள் பங்குதாரராய், $\frac{2}{3}$ பாகத்தைச் சமமாய்ப் பங்கு வைத்துக் கொள்வர்.

(e) ,, $\frac{1}{6}$ (ii) இறந்தவருக்கு ஒரே ஒரு மகள் மட்டுமோ ஒரு படி முந்திய மகனின் மகள் மட்டுமோ இருந்து, (i) மகனோ (ii) ஒரு படி முந்திய மகனின் மகனோ (iii) ஒத்த மகனின் மகனோ இல்லாது இருந்தால்: மகளின் மகளோ, ஒரு படி முந்திய மகனின் மகளோ $\frac{1}{2}$ பங்கு எடுத்தது போக, $\frac{2}{3}$ பங்கில் மீதியிருக்கும் $\frac{1}{6}$ பங்கை ($\frac{2}{3}-\frac{1}{2}=\frac{1}{6}$) ஒரு மகனின் மகள் இருந்தால் அவள் எடுத்துக்கொள்வாள். மகனின் மகள் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருந்தாலும் அவர்கள் பங்குதாரராய் $\frac{1}{6}$ பங்கையே சமமாகப் பங்கிட்டுக் கொள்வர்.

விளக்கம்: ஒரு சுன்னீ முசுலிம் கீழ்வரும் வாரிசுகளை விட்டுச் சென்றால், அவர்களுக்குக் கிடைக்கும் பங்குகளாவன:

(8) (a) 2 மகள்கள் = $\frac{2}{3}$ (பங்குதாரர்)
மகனின் மகன் = $\frac{1}{3}$ (எச்சதாரர்)
மகனின் மகனின் மகள் = 0 (2 மகள்களாலும், ஒரு படி முந்திய மகனின் மகனாலும் பங்கு பெறாது தள்ளப் பட்டாள்)

(b) (i) மகனின் மகன் = $\frac{2}{3}$ (எச்சதாரர்)
மகனின் மகள் = $\frac{1}{3}$ (எச்சதாரி)

(ii) மகனின் மகனின் மகன் = $\frac{2}{3}$ (எச்சதாரர்)
மகனின் மகனின் மகள் = $\frac{1}{3}$ (எச்சதாரி)

குறிப்பு: ஒத்த மகனின் மகன் இருந்தால், மகனின் மகள் பங்குதாரராய்ப் பங்கு பெறமுடியாது; ஆனால், எச்சதாரராய்ப் பங்கு பெறுவாள்.

(c) மகனின் மகள் $= \frac{1}{2}$ இறந்தவருக்கு 8 a (i) முதல் (v) வரையுள்ள வாரிசு இல்லை—ஒருத்தியாக இருக்கிறாள்.

தந்தை $= \frac{1}{2}$ { பங்குதாரராய் $\frac{1}{6}$ / எச்சதாரராய் $\frac{1}{3}$ }

(d) தந்தை $= \frac{1}{6}$ (பங்குதாரர், மகனின் மகள் இருப்பதால்)

தாய் $= \frac{1}{6}$ „ „

இருமகன்களின் மூன்று மகள்கள் * } $= \frac{2}{3} \times \frac{1}{3} = \frac{2}{9}$. ஒவ்வொரு மகளும் $\frac{2}{9}$ பங்கைப் பெறுவர். (பங்குதாரர்)

* (*A* என்ற மகனின் மகள் ஒருத்தியும், *B* என்ற மகனின் மகள்கள் இருவரும் ஆக மொத்தம் மூவர்)

குறிப்பு: சுன்னி சட்டத்தில் பிரதிநிதித்துவம் (Representation) அங்கீகரிக்கப்படாததால், தலைவிகித இறங்குரிமையை (Succession *per capita*) *A*, *B* ஆகிய மகன்களின் 3 மகள்களும் பெறுகின்றனர்.

(e) (i) தந்தை $= \frac{1}{6}$ (பங்குதாரர்)
தாய் $= \frac{1}{6}$ (பங்குதாரர்)
மகள் $= \frac{1}{2}$ (பங்குதாரி)
மகனின் 4 மகள்கள் $= \frac{1}{6} \times \frac{1}{4} = \frac{1}{24}$ (பங்குதாரர்)
} ஒவ்வொருவரும் பெறுவர்

குறிப்பு: இறந்தவருக்கு ஒரே ஒரு மகள் மட்டும் இருப்பதால், மகனின் மகள் பங்கு பெறாது தள்ளப்படாமல், $\frac{2}{3}$ பங்கில் மகளுக்கு $\frac{1}{2}$ பங்கு கொடுத்தது போக மீதியிருக்கும் $\frac{1}{6}$ $(\frac{2}{3} - \frac{1}{2} = \frac{1}{6})$ பங்கை, பங்குதாரராய் மகனின் 4 மகள்களும் பங்கிட்டு, ஒவ்வொருவரும் $\frac{1}{24}$ பங்கு பெறுகின்றனர். மகளுடைய பங்கும், மகனின் மகளுடைய பங்கும் சேர்ந்து மொத்தம் $\frac{2}{3}$-க்கு மிகாமல் இருக்கவேண்டும். இதே இடத்தில் ஒரே மகளுக்குப் பதிலாக, இறந்தவருக்கு 2 மகள்கள் இருந்தால், மகனின் மகள் பங்கின்றித் தள்ளப்படுவாள்.

(ii) தந்தை $= \frac{1}{6}$ (பங்குதாரர், பிள்ளைகள் இருப்பதால்)

தாய் $= \frac{1}{6}$ (பங்குதாரர், பிள்ளைகள் இருப்பதால்)

2 மகள்கள் $= \frac{2}{3}$ பங்குதாரர்

மகனின் மகள் $= 0$ (மகள்கள் இருவர் இருப்பதால் அவர்களே $\frac{2}{3}$ பாகத்தையும் தீர்த்துவிடுவதால், மகனின் மகள் தள்ளப்பட்டாள்)

(iii) தந்தை = $\frac{1}{6}$ (பங்குதாரர்)
தாய் = $\frac{1}{6}$ (பங்குதாரர்)
மகனின் மகள் = $\frac{1}{2}$ (பங்குதாரி)
மகனின் மகனின் மகள் = $\frac{1}{6}$ (பங்குதாரி) [மகனின் மகளுக்கும், ஒரே மகள் இருந்தால் பயன் படுத்தப்பட வேண்டிய விதியே பொருந்தும். எனவே, ஒரு படி முந்திய மகனின் மகளுக்கும், ஒரு படி பிந்திய மகனின் மகளுக்கும் அதே விதி பொருந்துகிறது.]

(iv) 2 மகள்கள் = $\frac{2}{3}$ (பங்குதாரர்)
மகனின் மகனின் மகன் = $\frac{1}{3}\times\frac{2}{4} = \frac{1}{6}$ (எச்சதாரர்)
மகனின் மகள் = $\frac{1}{3}\times\frac{1}{4} = \frac{1}{12}$ (எச்சதாரி)
மகனின் மகனின் மகள் = $\frac{1}{3}\times\frac{1}{4} = \frac{1}{12}$ (எச்சதாரி)

குறிப்பு: இறந்தவருக்கு 2 மகள்கள் இருப்பதால், மகனின் மகள் பங்குதாரராய்ப் பங்கு பெருது தள்ளப்படுகிருள். ஆனல், இவள் மகனின் மகனின் மகளுேடு (ஒரு படி பிந்திய மகனின் மகன்) எச்சதாரராய்ப் பங்கு பெறுகிருள். மகனின் மகனின் மகளுக்கு, மகனின் மகனின் மகன், ஒத்த மகனின் மகன் ஆதலால், இவள் எச்சதாரராய்ப் பங்கு பெற உரிமையுடையவளாவாள். எனவே, மகனின் மகளும், மகனின் மகனின் மகளும் (இருவரும்) மகனின் மகனின் மகனேடு எச்சதாரராய், ஒவ்வொருவரும் $\frac{1}{12}$ பங்கு பெறுகின்றனர்.

இந்த விளக்கத்தில் இரண்டு புதுமைகள் உள்ளடங்கி இருக்கின்றன. ஒன்று, மகனின் மகனின் மகள், குருதித் தொடர்பால் மகனின் மகனைவிட அகன்று நிற்பினும், அவனோடு சேர்ந்து சம பங்கு பெறுகிருள். மற்ருென்று, மகனின் மகள், ஒரு படி பிந்திய மகனின் மகனேடு எச்சதாரராய் நிற்கிருள். இவ்விரு புதுமைகளும் உள்ளடங்கியிருக்கின்ற காரணத்தால், சட்டத்தின் அடிப்படைத் தத்துவம் பாதுகாக்கப்படுகிறது. இல்லையேல், மகனின் மகள் பங்கின்றித் தள்ளப்பட்டவளாய், மகனின் மகனின் மகள் மட்டுமே எச்சதாரராய் மகனின் மகனின் மகனேடு பங்கு பெறுவாள். எனவே, குருதித் தொடர்பால் நெருங்கி நிற்பவர் அகன்று நிற்பவரைத் தள்ளிவிடுவர் என்ற விதி, தலைகீழாக மாருமல் பேணப்படுகிறது.

(9) உடன் பிறந்த சகோதரி (Full Sister): பங்குதாரராகவும், சில சந்தர்ப்பங்களில் எச்சதாரராகவும் பங்கு பெறுவாள்.

(a) பங்கின்றித் தள்ளப்படல் : இறந்தவரின்

(i) குழந்தைகளோ,

(ii) மகனின் குழந்தைகளோ, (எ. த. பி. செ.)

(iii) தந்தையோ,

(iv) பாட்டனோ,

* (v) உடன் பிறந்த சகோதரனோ இருந்தால், உடன் பிறந்த சகோதரி பங்குதாரராய்ப் பங்கு பெறாது தள்ளப்படுவாள்.

(b) எச்சதாரராய்ப் பங்கு பெறல்

* (v) உடன் பிறந்த சகோதரனோடு எச்சதாரராய்ப் பங்கு பெறுவாள். சில சமயங்களில் மகளோடும், மகனின் மகளோடும் ; மகள்களோடும் மகனின் மகள்களோடும் எச்சதாரராய்ப் பங்கு பெறுவாள்.

(c) பங்கு $\frac{1}{2}$

மேலே குறிப்பிடப்பட்ட a (i) முதல் (v) வரையுள்ள வாரிசுகள் இல்லாதிருந்து, இவள் ஒரே சகோதரியாக (ஒருத்தியாக) மட்டும் இருந்தால் $\frac{1}{2}$ பங்கைப் பங்குதாரராய்ப் பெறுவாள்.

(d) பங்கு $\frac{2}{3}$

a (i) முதல் (v) வரையுள்ள வாரிசுகள் இல்லாதிருந்து, உடன் பிறந்த சகோதரிகள் இருவரோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களோ இருந்தால் $\frac{2}{3}$ பங்கு பெறுவர்.

விளக்கம் : ஒரு சுன்னி முசுலிம் கீழ்வரும் வாரிசுகளை விட்டுச் சென்றால், அவர்களுக்குக் கிடைக்கும் பங்குகளாவன :

(9) (a) (i) தாய் = $\frac{1}{6}$ [பங்குதாரர்] (இரு சகோதரிகள் இருப்பதால், பங்கு $\frac{1}{6}$)

தந்தை = $\frac{5}{6}$ (எச்சதாரர்)

2 உடன் பிறந்த
சகோதரிகள் = 0 (தந்தையால் பங்கு பெறுது தள்ளப்பட்டனர்)

(ii) தாய் = $\frac{1}{3}$ (பங்குதாரர்)
தந்தை = $\frac{2}{3}$ (எச்சதாரர்)
உடன் பிறந்த
சகோதரி = 0 (தந்தையால் தள்ளப்பட்டாள்)

(b) (i) கணவன் = $\frac{1}{4}$ பங்குதாரர் } $\frac{8+3}{12} = \frac{11}{12}$
2 மகள்கள் = $\frac{2}{3}$ பங்குதாரர் } மீதி இருப்பது $\frac{1}{12}$
உடன் பிறந்த
சகோதரி = $\frac{1}{12}$ (எச்சதாரர்–மீதி இருப்பதைப் பெறுகிறுள்.)

குறிப்பு: 9 *a* (i) முதல் (v) வரையுள்ள வாரிசுகள் இல்லாமற் போய், மகள்களோ, மகனின் மகள்களோ (எ. த. பி. செ.), ஒரு மகளும், ஒரு மகனின் மகளும் இருந்தாலும், உடன் பிறந்த சகோதரி எச்சதாரராகி, எஞ்சியிருப்பதைப் பெறுவாள்.

(ii) மகள் = $\frac{1}{2}$ (பங்குதாரர்) }
மகனின் மகள் = $\frac{1}{6}$ (பங்குதாரர்) }
உடன் பிறந்த
சகோதரி = $\frac{1}{3}$ (எச்சதாரர்—$\frac{2}{3}$ பங்கு போக மீதி இருக்கும் $\frac{1}{3}$ பங்கை எச்சதாரராய்ப் பெறுகிறுள்)

(iii) 2 மகள்கள் (அல்லது 2 மகனின் மகள்கள்) } = $\frac{2}{3}$ (பங்குதாரர்)
உடன்பிறந்த சகோதரி = $\frac{1}{3}$ (எச்சதாரி)

(c) கணவன் = $\frac{1}{2}$ (பங்குதாரர்)
உடன்பிறந்த சகோதரி = $\frac{1}{2}$ (பங்குதாரி)

10. தந்தைவழிச் சகோதரி (Consanguine Sister):

தந்தைவழிச் சகோதரி பங்குதாரராகவும், சில சமயங்களில் எச்சதாரராகவும் பங்கு பெறுவாள்.

(a) பங்கின்றித்
தள்ளப்படல்: இறந்தவரின்
(i) குழந்தைகளோ,
(ii) மகனின் குழந்தைகளோ (எ.த.பி.செ.),

(iii) தந்தையோ,
(iv) தந்தையின் தந்தையோ,
(v) உடன் பிறந்த சகோதரனோ,
(vi) உடன் பிறந்த சகோதரியோ,
(vii) தந்தைவழிச் சகோதரனோ இருந்தால், தந்தைவழிச் சகோதரி பங்குதாரியாய்ப் பங்கு பெறாது தள்ளப்படுவாள்.

(b) எச்சதாரராய்ப் பங்கு பெறல் — (அ) (a) (i) முதல் (vii) வரை உள்ள வாரிசுகள் இல்லாதிருந்து, (a) (vi)-ல் குறிப்பிடப்பட்ட உடன்பிறந்த சகோதரி ஒருத்திமட்டும் இருந்து, அவள் பங்குதாரராய் $\frac{1}{2}$ பங்கு பெற்றால், தந்தை வழிச் சகோதரி (ஒருத்தியோ, ஒருத்திக்கு மேற்பட்டோ இருந்தாலும்) $\frac{1}{6}$ பங்கை ($\frac{2}{3}-\frac{1}{2}=\frac{1}{6}$) எச்சதாரராய்ப் பெறுவாள்.

(ஆ) தந்தை வழிச் சகோதரனோடும் எச்சதாரராய்ப் பங்கு பெறுவாள். சில சமயங்களில் மகளோடும், மகனின் மகளோடும்; மகள்களோடும் மகனின் மகள்களோடும் உடன்பிறந்த சகோதரி எப்படி எச்சதாரராய்ப் பங்கு பெறுவாளோ, அதேபோல் பங்கு பெறுவாள்.

(c) பங்கு $\frac{1}{2}$ — (a) (i) முதல் (vii) வரையுள்ள வாரிசுகள் இல்லாதிருந்து, தந்தைவழிச் சகோதரி ஒரே ஒருத்தியாக இருந்தால், $\frac{1}{2}$ பங்கைப் பங்குதாரராய்ப் பெறுவாள்.

(d) ,, $\frac{2}{3}$ — (a) (i) முதல் (vii) வரை உள்ள வாரிசுகள் இல்லாதிருந்து, தந்தை வழிச் சகோதரிகள் இருவரோ இருவர்க்கு மேற்பட்டவரோ இருந்தால், $\frac{2}{3}$ பாகத்தைப் பங்குதாரராய்ப் பெறுவார்கள்.

விளக்கம் :

(10) (a) தாய்	$=\frac{1}{3}$ (பங்குதாரர்—குழந்தையில்லை, ஒரே சகோதரி)
தந்தை	$=\frac{2}{3}$ (எச்சதாரர்)
தந்தைவழிச் சகோதரி	$=0$ (தந்தையால் தள்ளப்பட்டாள்)

(b) தாய் = $\frac{1}{6}$ (பங்குதாரர்—சகோதரிகளால் $\frac{1}{6}$ பங்கு)

உடன்பிறந்த சகோதரி = $\frac{1}{2}$ (பங்குதாரி)

தந்தைவழிச் சகோதரி = $\frac{1}{6}$ (எச்சதாரி)

தாய்வழிச் சகோதரி (அல்லது தாய்வழிச் சகோதரன்) = $\frac{1}{6}$ (பங்குதாரர்)

(c) கணவன் = $\frac{1}{2}$ (பங்குதாரர்)

தந்தைவழிச் சகோதரி = $\frac{1}{2}$ (பங்குதாரி)

11. தாய்வழிச் சகோதரர்கள் (Uterine Brothers): பங்குதாரராக மட்டிலுமே பங்கு பெறுவர்.

(a) பங்கின்றித் தள்ளப்படல்: இறந்தவரின்
(i) குழந்தைகளோ,
(ii) மகனின் குழந்தைகளோ, (எ.த.பி.செ.)
(iii) தந்தையோ,
(iv) பாட்டனோ இருந்தால், தாய்வழிச் சகோதரன் பங்குதாரராய்ப் பங்கு பெறாது தள்ளப்படுவான்.

(b) பங்கு $\frac{1}{6}$ மேலே குறிப்பிட்டுள்ள a (i) முதல் (iv) வரை உள்ள வாரிசுகள் இல்லாது இருந்து, தாய்வழிச் சகோதரன் ஒருவன் மட்டிலும் இருந்தால், $\frac{1}{6}$ பங்கைப் பங்குதாரனாய்ப் பெறுவான்.

(c) ,, $\frac{1}{3}$ a (i) முதல் (iv) வரை குறிப்பிடப்பட்ட வாரிசுகள் இல்லாது இருந்து, தாய்வழிச் சகோதரர்கள் இருவரோ, இருவர்க்கு அதிகமானவரோ இருந்தால், $\frac{1}{3}$ பங்கைச் சமமாய்த் தம்மிடையே பங்கிட்டுக் கொள்வர்.

12. தாய்வழிச் சகோதரி (Uterine Sister): பங்குதாரராக மட்டிலுமே பங்கு பெறுவாள்.

(a) பங்கின்றித் தள்ளப்படல்: இறந்தவரின்
(i) குழந்தைகளோ,
(ii) மகனின் குழந்தைகளோ (எ.த.பி.செ.),
(iii) தந்தையோ,
(iv) பாட்டனோ இருந்தால், தாய்வழிச் சகோதரி பங்குதாரராய்ப் பங்கு பெறாது தள்ளப்படுவாள்.

(b) பங்கு $\frac{1}{6}$	மேற்குறிப்பிடப்பட்டுள்ள உ (i) முதல் (iv) வரை உள்ள வாரிசுகள் இல்லாது இருந்து, தாய்வழிச் சகோதரி ஒருத்தி மட்டிலும் இருந்தால், $\frac{1}{6}$ பங்கைப் பங்குதாரராய்ப் பெறுவாள்.
(c) ,, $\frac{1}{3}$	மேற் குறிப்பிட்ட உ (i) முதல் (iv) வரையுள்ள வாரிசுகள் இல்லாது இருந்து, தாய்வழிச் சகோதரிகள் இருவரோ இருவர்க்கு அதிகமானவரோ இருந்தால், $\frac{1}{3}$ பங்கைத் தம்மிடையே சமமாய்ப் பங்கிட்டுக் கொள்வர்.

விளக்கம் :

(1) தாய் = $\frac{1}{6}$ (பங்குதாரர்)
2 உடன் பிறந்த சகோதரிகள் = $\frac{2}{3}$ (பங்குதாரர்)
1 தந்தைவழிச் சகோதரி = 0 (2 உடன் பிறந்த சகோதரிகளாலும் தள்ளப்பட்டார்)
1 தாய்வழிச் சகோதரன் அல்லது 1 தாய்வழிச் சகோதரி } = $\frac{1}{6}$ (பங்குதாரர்)

(2) உடன் பிறந்த சகோதரி = $\frac{1}{2}$ (பங்குதாரி)
2 தந்தைவழிச் சகோதரிகள் = $\frac{1}{6}$; தலா $\frac{1}{12}$ (பங்கு பெறுவர்)
1 தாய்வழிச் சகோதரன் } 1 தாய்வழிச் சகோதரி } = $\frac{1}{3}$ ஒவ்வொருவரும் $\frac{1}{6}$ (பங்கு வீதம் இருவரும் சமபங்கு பெறுவர்)

(3) 2 உடன்பிறந்த சகோதரர்கள் = $\frac{2}{3}$ (தலா $\frac{1}{3}$ பங்கு பெறுவர்)
2 தாய்வழிச் சகோதரிகள் = $\frac{1}{3}$ (தலா $\frac{1}{6}$ பங்கு ,,)

(4) 2 தந்தைவழிச் சகோதரிகள் = $\frac{2}{3}$ (தலா $\frac{1}{3}$ பங்கு ,,)
2 தாய்வழிச் சகோதரர்கள் = $\frac{1}{3}$ (தலா $\frac{1}{6}$ பங்கு ,,)

(5) 2 தந்தைவழிச் சகோதரிகள் = $\frac{2}{3}$ (தலா $\frac{1}{3}$ பங்கு ,,)
2 தாய்வழிச் சகோதரிகள் = $\frac{1}{3}$ (தலா $\frac{1}{6}$ பங்கு ,,)

பக்கம் 209-ல் குறிப்பிடப்பட்ட பன்னிரண்டு பங்குதாரர்களில், தந்தை, பாட்டன், மகள், மகனின் மகள், உடன்பிறந்த சகோதரி, தந்தைவழிச் சகோதரி ஆகிய அறுவரும் சில சந்தர்ப்பங்களில் எச்சதாரராய்ப் பங்கு பெறுவதைக் கண்டோம்.

ஏற்றவிதிக் கொள்கை (Doctrine of Increase) அல்லது 'அவுல்' (Aul)

பங்குதாரர்களுக்கு அவரவர் விகிதப்படி உள்ள பங்கைக் கொடுத்ததும், பின்னங்களைக் கூட்டிப் பார்க்கவேண்டும். பின்னங்களின் மேல் இலக்கங்களையும், கீழ் இலக்கங்களையும் கூட்டும்பொழுது, இரண்டிலும் கூட்டுத் தொகை சமமாக வராமற்போனால் என்ன செய்யவேண்டும்? என்ற கேள்வி எழுகிறது. மேலிலக்கக் கூட்டுத் தொகை கீழ் இலக்கக் கூட்டுத் தொகையைவிட அதிகமாயிருந்தால், குறைவாயுள்ள கீழ் இலக்கக் கூட்டுத் தொகையை, மேலிலக்கக் கூட்டுத் தொகையின் அளவிற்கு எண்களைக் கூடுதலாக ஏற்றிச் சமப்படுத்த வேண்டும். கீழ் இலக்க எண்களை இவ்வாறு ஏற்றுவதால், இது ஏற்றவிதிக் கொள்கை என்று அழைக்கப்படுகிறது. பின்னர், சமமாக்கப்பட்ட கீழ் இலக்கக் கூட்டுத் தொகையை ஒவ்வொரு பின்னத்தின் கீழும் கொண்டுவர வேண்டும். பின்னத்தில் கீழ் இலக்கத்தை மேலிலக்கத்திற்குச் சமமாய் ஏற்றியதன்மூலம், பங்குதாரர்களின் பங்கு உண்மையில் ஏற்றம்பெறாது; மாறாக, குறையும். ஆனால், ஏற்றவிதிக் கொள்கையின்மூலம் பின்னங்களின் கூட்டுத்தொகை சமன்படுத்தப் படுகிறது.

விளக்கம் (1)

	பங்கு		கூட்டும் முறை		சமப்படுத்தப் பட்ட பின்னர்
கணவன்	= $\frac{1}{4}$	=	$\frac{3}{12}$	கீழ்இலக்கம் ஏற்றம் பெற்ற பின்னர்	$\frac{3}{13}$
2 மகள்கள்	= $\frac{2}{3}$	=	$\frac{8}{12}$		$\frac{8}{13}$
தாய்	= $\frac{1}{6}$	=	$\frac{2}{12}$		$\frac{2}{13}$
மேல் இலக்கக் கூட்டுத் தொகை / கீழ் இலக்கக் கூட்டுத் தொகை			$\frac{13}{12}$	சமப்படுத்தியதால், கீழ் இலக்கம் 13 ஆகியது.	$\frac{13}{13}$

இதில் 3 பங்குதாரர்களின் அசல் பங்கைக் கூட்டும்பொழுது, மேல் இலக்க எண்களின் கூட்டுத்தொகை 13 என்றும், கீழ் இலக்க எண்களின் கூட்டுத்தொகை 12 என்றும், ஒன்று குறைந்து, சமமில்லாமல் நிற்கின்றது. இதில் ஏற்றவிதிக் கொள்கையைப் பயன்படுத்தி, கீழ் இலக்கத்தை 13 என்று ஏற்றி, மேல் இலக்கத்துடனே சமப்படுத்தவேண்டும். எனவே, கணவனின் பங்கு $\frac{3}{13}$ என்றும், 2 மகள்களின் பங்கு $\frac{8}{13}$ என்றும், தாயின் பங்கு $\frac{2}{13}$ என்றும் வரும். இப்படிச் செய்யும்பொழுது, மேல் இலக்கக் கூட்டுத்தொகையும், கீழ் இலக்கக் கூட்டுத்தொகையும் $\frac{13}{13}$ என்று சமமாகிவிடுகின்றன.

விளக்கம் (2)

			ஏற்றவிதிக் கொள்கையைப் பயன்படுத்திய பின்
கணவன்	$= \frac{1}{2} = \frac{3}{6}$		$\frac{3}{7}$
2 உடன் பிறந்த சகோதரிகள்	$= \frac{2}{3} = \frac{4}{6}$		$\frac{4}{7}$
கூட்டுத்தொகை	$\frac{7}{6}$	கூட்டுத்தொகை	$\frac{7}{7}$

இறக்கவிதிக் கொள்கை (Doctrine of Return) அல்லது 'ரத்து' (Radd)

இறக்கவிதிக் கொள்கை ஏற்றவிதிக் கொள்கைக்கு நேர் மாற்றமானதாகும். ஏற்றவிதிக் கொள்கை பயன்படுத்தப்பட்டால், பங்குதாரர்களின் பங்கு குறையும். ஆனால், இறக்கவிதிக் கொள்கை பயன்படுத்தப் பட்டால், பங்குதாரர்களின் பங்கு கூடும்.

பங்குதாரர்களின் பங்கை அவரவருக்குக் கொடுத்த பின்னர், பங்கு மீதி இருந்தால், அதை எச்சதாரர்கள் இருப்பின், அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். எச்சதாரர் எவரும் இறந்தவரின் சொத்துக்கு வாரிசாக இல்லையென்றால், மீதி இருக்கும் பங்கைத் தூரத்து உறவினர்களுக்குக் கொடுக்கக் கூடாது. மாறாகப் பங்குதாரர்களுக்கே, அவரவர் பங்குபெறும் விகிதத்தை அனுசரித்துக் கூட்டிக் கொடுக்கவேண்டும். எனவே, மிஞ்சியிருக்கும் பங்கு, பங்குதாரர்களின் பங்கில் அவரவர் விகிதப்படி இறங்குவதால், இதை இறக்கவிதிக் கொள்கை என்கின்றோம். இதனால், பங்குதாரர்களின் பங்கு உண்மையிலேயே அதிகமாகும்.

கணவனோ அல்லது மனைவியோ மட்டிலும் பங்குதாரராய் இருந்து, இறந்தவரின் சொத்தில் வேறு பங்குதாரர்களும் பங்கு பெற்றால், இறக்க விதியைப் பயன்படுத்திக் கணவனுக்கோ, மனைவிக்கோ பங்கை அதிகரித்துத் தரக்கூடாது. கணவனோ மனைவியோ நீங்கலாக எஞ்சியிருக்கும் பங்குதாரருக்கே, இறக்க விதிக் கொள்கையைப் பயன்படுத்திப் பங்கை அதிகரித்துத் தரவேண்டும். கணவனோ மனைவியோ பங்குதாரராய் இருந்து, வேறு பங்குதாரர்களோ, எச்சதாரர்களோ இல்லாமற் போனால், மிஞ்சியிருக்கும் பங்கு தூரத்து உறவினர்களை (Distant Kindred) வந்தடையும். ஆனால், வேறு பங்குதாரர்களோ எச்சதாரர்களோ, தூரத்து உறவினர்களோ இறந்தவருக்கு இல்லாவிடின், மிஞ்சியது கணவனுக்கோ மனைவிக்கோ வந்து சேரும்.

இறக்கவிதிக் கொள்கையைப் பயன்படுத்த, கீழ் இலக்கக் கூட்டுத் தொகையை மேல்இலக்கக் கூட்டுத்தொகையின் அளவுக்குக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

விளக்கம் :

			இறக்கவிதி பயன்படுத்திய பின் பங்கு
(1)	தாய்	$= \frac{1}{6} = \frac{1}{6}$	$\frac{1}{4}$
	மகள்	$= \frac{1}{2} = \frac{3}{6}$	$\frac{3}{4}$
	மேலிலக்கக் கூட்டுத்தொகை	4	4
	கீழ் இலக்கக் கூட்டுத்தொகை	6	4

பின்னங்களின் கூட்டுத் தொகை $\frac{4}{6}$; மிஞ்சி நிற்பது $\frac{2}{6}$ பங்கு ஆகும். இதைத் தாய்க்கும் மகளுக்கும் அவரவர்க்குரிய பங்கு விகிதத்தில் (அதாவது, 1 : 3 வீதத்தில்) வழங்க வேண்டும். எனவே, தாய் மிஞ்சியுள்ளதில் $\frac{1}{4}$ பாகத்தையும் ($\frac{2}{6}\times\frac{1}{4} = \frac{1}{12}$), மகள் மிஞ்சியுள்ளதில் $\frac{3}{4}$ பாகத்தையும் ($\frac{2}{6}\times\frac{3}{4} = \frac{1}{4}$) பெறுகிறார்கள். எனவே, தாயின் பங்கு $\frac{1}{4}$ ($\frac{1}{6}+\frac{1}{12} = \frac{1}{4}$) —(பங்குதாரராய் $\frac{1}{6}$ பங்கும் இறக்க விதியால் $\frac{1}{12}$ பங்கும்) ஆகவும், மகளின் பங்கு $\frac{3}{4}$ ($\frac{1}{2}+\frac{1}{4} = \frac{3}{4}$) — (பங்குதாரராய் $\frac{1}{2}$ பங்கும், இறக்க விதியால் $\frac{1}{4}$ பங்கும்) ஆகவும் கூடுகின்றன.

			இறக்கவிதிக் கொள்கையால் பங்கு அதிகரித்தல்
(2)	தாய்	$= \frac{1}{6} = \frac{1}{6}$	$\frac{1}{5}$
	மகள்	$= \frac{1}{2} = \frac{3}{6}$	$\frac{3}{5}$
	மகளின் மகள்	$= \frac{1}{6} = \frac{1}{6}$	$\frac{1}{5}$
		$\frac{5}{6}$	$\frac{5}{5}$

			இறக்கவிதிக் கொள்கையைப் பயன் படுத்திய பின்
(3)	கணவன்	$= \frac{1}{4}$	$= \frac{1}{4}$
	மகள்	$= \frac{1}{2}$. மிஞ்சிய $\frac{1}{4}$ பங்கும் சேர்த்து	$= \frac{3}{4}$

ஒரு பங்குதாரர் கணவனாயிருப்பதால், இறக்கவிதிக் கொள்கையை அவருக்குப் பயன்படுத்தக் கூடாது.

			இறக்கவிதிக் கொள்கையால்
(4)	மனைவி	$= \frac{1}{8}$	$\frac{1}{8}$
	மகள்	$= \frac{1}{2}$ ($\frac{1}{2}+\frac{3}{8}$) =	$\frac{7}{8}$
			$\frac{8}{8}$

ஒரு பங்குதாரர் மனைவியாதலால், இறக்கவிதிக் கொள்கையைப் பயன்படுத்தி அவருக்குப் பங்கு அதிகம் தரக்கூடாது.

		இறக்க விதியால்
(5) தந்தையின் தாய் / தாயின் தாய்	} $= \frac{1}{6} = \frac{1}{6}$	பங்கு அதிகரிப்பு $\frac{1}{5}$
2 மகள்கள்	$= \frac{2}{3} = \frac{4}{6}$	பங்கு அதிகரிப்பு $\frac{4}{5}$
	$\frac{5}{6}$	$\frac{5}{5}$

(6) தாய்	$= \frac{1}{6} = \frac{1}{6}$	பங்கு அதிகரிப்பு $\frac{1}{5}$
மகள்	$= \frac{1}{2} = \frac{3}{6}$	,, $\frac{3}{5}$
மகனின் மகள்	$= \frac{1}{6} = \frac{1}{6}$	,, $\frac{1}{5}$
	$\frac{5}{6}$	$\frac{5}{5}$

(7) கணவன்	$= \frac{1}{4} = \frac{1}{4}$	$(1-\frac{1}{4} = \frac{3}{4})$	$= \frac{4}{16}$
		பங்கு அதிகரிப்பு	
தாய்	$= \frac{1}{6} = \frac{1}{6}$ }	$\frac{1}{4}\times\frac{3}{4}$	$= \frac{3}{16}$
மகள்	$= \frac{1}{2} = \frac{3}{6}$ }	$\frac{3}{4}\times\frac{3}{4}$	$= \frac{9}{16}$
	$\frac{11}{12}$		$\frac{16}{16}$

கணவனோ அல்லது மனைவியோ இறக்கவிதிக் கொள்கையால் பங்கு அதிகம் பெறத் தகுதியற்றவராவர். கணவனின் அல்லது மனைவியின் பங்கு மாற்றம் இன்றி, அப்படியே இருக்கவேண்டும். அவர்கள் நீங்கலாக மீதி இருக்கிற பங்குதாரர்களின் பங்கினை அதிகப்படுத்த, மீதி இருக்கும் பங்குதாரர்களின் மேலிலக்கக் கூட்டுத் தொகையைச் சமப்படுத்தவேண்டும். அதாவது, தாயின் பங்கையும் மகளின் பங்கையும் மட்டிலும் சமப்படுத்தவும் $(\frac{1}{6}+\frac{3}{6} = \frac{4}{6}) = (\frac{1}{4}+\frac{3}{4} = \frac{4}{4})$. எனவே, தாயின் பங்கு $\frac{1}{4}$ என்றும், மகளின் பங்கு $\frac{3}{4}$ என்றும் வரும். மொத்தப் பங்கிலிருந்து கணவனின் பங்கைக் குறைத்து $(1-\frac{1}{4} = \frac{3}{4})$ மீதியிருக்கும் $\frac{3}{4}$ பங்கில், தாய்க்கு $\frac{1}{4}$ பங்கும், மகளுக்கு $\frac{3}{4}$ பங்கும் $(\frac{3}{4}\times\frac{1}{4} = \frac{3}{16})$ $(\frac{3}{4}\times\frac{3}{4} = \frac{9}{16})$ கொடுக்க, முறையே $\frac{3}{16}$-ம் $\frac{9}{16}$-ம் வரும். எனவே, இறக்க விதி பயன்படுத்தப்பட்ட பின்னர், கணவன் $\frac{4}{16}$ பங்கும், தாய் $\frac{3}{16}$ பங்கும், மகள் $\frac{9}{16}$ பங்கும் பெறுவர். கணவனின் பங்கு மிகாமல், மற்ற இருவரின் பங்கும் மிகுந்துள்ளன.

(8) மனைவி	$= \frac{1}{8}$	$(1-\frac{1}{8}=\frac{7}{8})$	
		பங்கு அதிகரிப்பு	
தாய்	$= \frac{1}{6} = \frac{1}{6}$ }	$\frac{1}{4}\times\frac{7}{8}$	$= \frac{7}{32}$
மகள்	$= \frac{1}{2} = \frac{3}{6}$ }	$\frac{3}{4}\times\frac{7}{8}$	$= \frac{21}{32}$
			$\frac{32}{32}$

(9)	கணவன்	$= \frac{1}{2}$	பங்கு அதிகரிப்பு	$= \frac{2}{4}$
	தாய்வழிச் சகோதரன்	$= \frac{1}{6}$	$\frac{1}{2} \times \frac{1}{2}$	$= \frac{1}{4}$
	தாய்வழிச் சகோதரி	$= \frac{1}{6}$	$\frac{1}{2} \times \frac{1}{2}$	$= \frac{1}{4}$
				$\frac{4}{4}$

(10)	மனைவி	$= \frac{1}{4}$	பங்கு அதிகரிப்பு	$= \frac{4}{16}$
	தாய்வழிச் சகோதரி	$= \frac{1}{2} = \frac{3}{6}$	$\frac{3}{4} \times \frac{3}{4}$	$= \frac{9}{16}$
	தந்தைவழிச் சகோதரி	$= \frac{1}{6} = \frac{1}{6}$	$\frac{1}{4} \times \frac{3}{4}$	$= \frac{3}{16}$
				$\frac{16}{16}$

எச்சதாரர்களும் சொத்துரிமை இறக்கமும்

எச்சதாரர்களில் முதன் முதலில் சொத்துரிமையுடையவர்களே இறந்தவரின் நேர்வழித் தோன்றல்கள் (Descendants) ஆவர். எச்சதாரர்களில் இவர்கள்தாம் முதல் வகுப்பினர் (First Class). முதல் வகுப்பினர் எவரும் இல்லாமற் போனால், இரண்டாவது வகுப்பினர்களான (Second Class) இறந்தவரின் மூதாதையர்கள் (Ascendants) சொத்துரிமை பெறத் தகுதியுடையவர்கள் ஆகின்றனர். முதல் வகுப்பாரும் இரண்டாவது வகுப்பாரும் இல்லாமற்போனால், மூன்றாவது வகுப்பினர்களான (Third Class) தந்தையின் வழித்தோன்றல்களான கிளைவழியினர்கள் (Descendants of the Father) சொத்துரிமை பெறத் தகுதி அடைகிறார்கள். மேற்குறிப்பிடப்பட்ட மூன்று வகுப்பார்களும் இல்லாமற்போனால், நான்காவது வகுப்பினர்களான (Fourth Class) தந்தையின் தந்தை (எ. த. மு. செ.) வழித்தோன்றல்களான பாட்டனின் கிளைவழியினர் (Descendants of True Grand-father h. h. s. சொத்துரிமை பெறத் தகுதி பெற்றவராவர். எனவே, ஒவ்வொரு வகுப்பினரிலும் உள்ள பிரிவினர்களைத் தெரிந்து, சட்ட விதிப்படி பங்கு பிரித்துக் கொடுக்கவேண்டும். ஒரு வகுப்பினரில் சொத்துரிமை பெற எவரும் இல்லையென்றால், படிப்படியாக அடுத்த அடுத்த வகுப்பினர்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

I. முதல் வகுப்பினரான நேர்வழித் தோன்றல்கள்

1. (a) மகன்.

(b) மகள் ; மகன் இருந்தால் அவரோடு எச்சதாரராகவே பங்கு பெறுவாள். மகன் 2 பங்கும், மகள் 1 பங்கும் பெற உரிமை பெற்றவர் ஆவர்—(2 : 1).

2. (a) மகனின் மகன் (எ. த. பி. செ.). இறந்தவரோடு நெருங்கி நிற்பவர், அகன்று நிற்பவரைப் பங்கு பெறுது தள்ளி விடுவர். (Nearer in degree excludes the more Remote). இருவரோ அல்லது இருவர்க்கு மேற்பட்டவர்களோ இருந்தால், அவர்கள் சம பங்கு பெறுவர். ஒன்றுக்கு மேற்பட்ட மகனின் மகன்களிடையே தலைவிகித இறக்கத்தை (*Per Capita*) அனுசரித்துப் பங்கு பிரிக்கப்பட வேண்டும்.

(b) மகனின் மகள் (எ. த. பி. செ.) ஒத்த மகனின் மகனோடு (Equal Son's Son) எச்சதாரராகவே பங்கு பெறுவாள்; ஒத்த மகனின் மகன் இல்லாதிருந்து, ஒருபடி பிந்திய மகனின் மகன் (Lower Son's Son) இருந்தாலும், அவனோடு எச்சதாரராகப் பங்கு பெறுவாள். ஆனால், இறந்தவருக்கு 2 மகள்கள் இருந்து, அவர்கள் $\frac{2}{3}$ பங்கைப் பூர்த்தியாக எடுத்து, இவள் பங்குதாரராய்ப் பங்கு பெற முடியாது தள்ளப்பட்டால் அன்றி, ஒருபடி பிந்திய மகனின் மகனோடு எச்சதாரராய்ப் பங்கு பெற முடியாது. மகனின் மகன் (எ. த. பி. செ.) ஒவ்வொருவனும் தலா 2 பங்கும், ஒவ்வொரு மகனின் மகளும் தலா ஒரு பங்கும் (1 பங்கும்) பெறுவர். மகனின் மகள் ஒருபடி பிந்திய மகனின் மகனோடு (Lower Son's Son) எச்சதாரராய்ப் பங்கு பெறும்பொழுது, ஒத்த மகனின் மகள் எவ்வளவு பங்கு பெறுகிருளோ அவ்வளவு பங்கு இவளும் பெறுவாள்.

விளக்கம்: ஒரு சுன்னீ முசுலிம் கீழ்வரும் வாரிசுகளை விட்டுச் சென்ருல், அவர்களுக்குக் கிடைக்கும் பங்குகளாவன:

(அ) 2 மகள்கள் = $\frac{2}{3}$ (பங்குதாரர்)

மகனின் மகனின் மகன் = $\frac{2}{4} \times \frac{1}{3} = \frac{1}{6}$ (எச்சதாரர்)
மகனின் மகள் = $\frac{1}{4} \times \frac{1}{3} = \frac{1}{12}$ (எச்சதாரர்)
மகனின் மகனின் மகள் = $\frac{1}{4} \times \frac{1}{3} = \frac{1}{12}$ (எச்சதாரர்)
} $\frac{1}{3}$

இதில் 2 மகள்களும் $\frac{2}{3}$ பாகத்தை எடுத்துக் கொள்வதால், மகனின் மகள் பங்குதாரராய்ப் பங்கின்றித் தள்ளப்பட்டாள். ஆனல், மகன், ஒரு படி பிந்திய மகனின் மகன் ஆனபடியினுல், அவள் அவனோடு எச்சதாரராகி, ஒத்த நிலையிலுள்ள மகனின் மகளைப் போல் சம பங்கு பெறுகிருள். அதே நேரத்தில் மகனின் மகனின் மகனுக்கு மகனின் மகனின் மகளைப் போல் 2 பங்கும் கிடைக்கிறது.

(ஆ) 2 மகள்கள் = $\frac{2}{3}$ (பங்குதாரர்)

மகனின் மகள் = $\frac{1}{3} \times \frac{1}{3} = \frac{1}{9}$
மகனின் மகனின் மகன் = $\frac{1}{3} \times \frac{2}{3} = \frac{2}{9}$
} (எச்சதாரர்)

(இ) மகள் = $\frac{1}{2}$ பங்குதாரி }
மகனின் மகள் = $\frac{1}{6}$ பங்குதாரி } $\frac{2}{3}$
மகனின் மகனின் மகன் = $\frac{2}{3}\times\frac{1}{3} = \frac{2}{9}$ (எச்சதாரர்) }
மகனின் மகனின் மகள் = $\frac{1}{3}\times\frac{1}{3} = \frac{1}{9}$ (எச்சதாரர்) } $\frac{1}{3}$

$\frac{3}{3}$

(ஈ) மகனின் மகள் = $\frac{1}{2}$ (பங்குதாரர்)
மகனின் மகனின் மகன் = $\frac{2}{3}\times\frac{1}{2} = \frac{1}{3}$ (எச்சதாரர்)
மகனின் மகனின் மகள் = $\frac{1}{3}\times\frac{1}{2} = \frac{1}{6}$ (எச்சதாரர்)

விளக்கம் (இ)-ல், ஒருபடி முந்திய மகள் ஒருத்தியாயிருந்தாலும், விளக்கம் (ஈ)-ல், ஒருபடி முந்திய மகள் எவளும் இல்லாததால், மகனின் மகள் பங்குதாரராகப் பங்கு பெறுகிறாள். இவள் பங்குதாரராய்ப் பங்கு பெறாது தள்ளப்படாத காரணத்தால், ஒருபடி முந்திய மகனின் மகனோடு எச்சதாரராகப் பங்கு பெறவில்லை. விளக்கம் (ஆ)-ல், மகனின் மகள் பங்குதாரராய்ப் பங்கு பெறாது, ஒருபடி முந்திய 2 மகள்களாலும் தள்ளப்பட்டதால், ஒருபடி பிந்திய மகனின் மகனோடு எச்சதாரராய்ப் பங்கு பெறுகிறாள்.

(உ) 2 மகள்கள் = $\frac{2}{3}$
மகனின் மகன் = $\frac{1}{3}$
மகனின் மகனின் மகன் = 0 (மகனின் மகனால் தள்ளப்பட்டார்)
மகனின் மகனின் மகள் = 0 { 2 மகள்களும் தள்ளுகின்றனர்; மகனின் மகனும் தள்ளுகிறார் (இருவராலும் தள்ளப்பட்டாள்).

இதில் மகனின் மகனின் மகள், 2 மகள்களாலும் பங்குதாரராய்ப் பங்கு பெற முடியாது தள்ளப்பட்டாள்; ஒரு படி முந்திய மகனின் மகன் இருப்பதால், எச்சதாரராக முடியாமலும் தள்ளப்பட்டாள். இவள் ஒத்த மகனின் மகனுடனோ, ஒரு படி பிந்திய மகனின் மகனுடனோ மட்டிலுமே எச்சதாரராகப் பங்கு பெறமுடியும் என்பது குறிப்பிடத் தக்கது.

மகனோடு மகள் எச்சதாரராய்ப் பங்கு பெறுவதைப் பங்குதாரர் (7)-ல் (பக்கம் 227) காண்க.

II. இரண்டாவது வகுப்பினரான மூதாதையர்கள்

3. தந்தை.

4. பாட்டன் (எ. த. மு. செ.), இறந்தவரில் நின்றும் அகன்று நிற்பவர் நெருங்கி நிற்பவரால் தள்ளப்படுவார். இறந்தவருக்குத் தந்தை உயிருடன் இருந்தால், அத் தந்தையின் தந்தை பங்கு பெறாது, தந்தையால் தள்ளப்படுவார்.

விளக்கம் :

(அ) தந்தை = $\frac{1}{6}$ (மகன் இருப்பதால் பங்குதாரர்)
மகன் = $\frac{5}{6}$

(ஆ) தாய் = $\frac{1}{6}$ (பங்குதாரர்)
தந்தை = $\frac{5}{6}$ (குழந்தையில்லை ; எச்சதாரர்)
தந்தையின் தந்தை (பாட்டன்) = 0 (தந்தை இருக்கிற காரணத்தால் தள்ளப்பட்டார்)

(இ) மகள் = $\frac{1}{2}$ (பங்குதாரர்)
தந்தை = $\frac{1}{2}$ (பங்குதாரர் $\frac{1}{6}$)+(எச்சதாரர் $\frac{1}{3}$) = $\frac{1}{2}$

(ஈ) மகனின் மகள் = $\frac{1}{2}$
தந்தை = $\frac{1}{2}$ (பங்குதாரர் $\frac{1}{6}$)+(எச்சதாரர் $\frac{1}{3}$) = $\frac{1}{2}$

மகளோடும், மகனின் மகளுடனும் (எ. த. பி. செ.) மட்டிலுமே தந்தை பங்குதாரராகவும் எச்சதாரராகவும் பங்கு பெறுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

III. மூன்றுவது வகுப்பினரான தந்தைவழித் தோன்றல்களான கிளை வழியினர்

5. (a) உடன் பிறந்த சகோதரர்.

(b) உடன் பிறந்த சகோதரி, உடன் பிறந்த சகோதரனோடு எச்சதாரராகப் பங்கு பெறுவாள். ஆணுக்கு இரு பங்கும், பெண்ணுக்கு ஒரு பங்கும் கிடைக்கும்.

6. உடன் பிறந்த சகோதரி.

உடன் பிறந்த சகோதரர் உட்பட, முன் கூறப்பட்ட எச்சதாரர்கள் எவருமே இல்லாதிருந்து, (a) இறந்தவரின் மகளோ, அல்லது மகள்களோ, அல்லது (b) மகனின் மகளோ அல்லது மகனின் மகள்களோ (எ. த. பி. செ.), அல்லது (c) இறந்தவரின் ஒரு மகளும் மகனின் ஒரு மகளுமோ (இருவரும் சேர்ந்து), அல்லது இறந்தவரின் ஒரு மகளும், மகனின் மகள்களுமோ (எ. த. பி. செ.) இருந்தால், உடன் பிறந்த சகோதரி எச்சதாரராய் எஞ்சியிருப்பதைப் பெறுவாள்.

7. (a) தந்தைவழிச் சகோதரன்.

(b) தந்தைவழிச் சகோதரி, தந்தைவழிச் சகோதரனோடு எச்சதாரராகப் பங்கு பெறுவாள். சகோதரனுக்கு இரு பங்கும் சகோதரிக்கு ஒரு பங்கும் கிடைக்கும்.

8. தந்தைவழிச் சகோதரி: தந்தைவழிச் சகோதரன் உட்பட முன்கூறப்பட்ட எச்சதாரர் எவரும் இல்லாதிருந்து, (a) இறந்தவரின் மகளோ அல்லது மகள்களோ, அல்லது (b) மகனின் மகளோ மகள்களோ (எ. த. பி. செ), அல்லது (c) இறந்தவரின் ஒரு மகளும் மகனின் ஒரு மகளோ பல மகள்களுமோ (எ. த. பி. செ.) இருந்தால், தந்தைவழிச் சகோதரி எச்சதாரராய் எஞ்சியிருப்பதைப் பெறுவாள்.

9. உடன் பிறந்த சகோதரனின் மகன் (Full Brother's son).

10. தந்தைவழிச் சகோதரனின் மகன் (Consanguine Brother's Son).

11. உடன்பிறந்த சகோதரனின் மகனின் மகன் (Full Brother's Son's Son).

12. தந்தைவழிச் சகோ்தரனின் மகனின் மகன் (Consanguine Brother's Son's Son).

உடன்பிறந்த சகோதரனின் வழித்தோன்றல்களுக்கும் (எ.த.பி.செ) தந்தைவழிச் சகோதரனின் வழித்தோன்றல்களுக்கும் (எ.த.பி.செ) இதே விதியைப் பின்பற்றவும்.

விளக்கம் :

(அ) மகள் (அல்லது மகனின் மகள், எ.த.பி.செ.)	$= \frac{1}{2}$ (பங்குதாரர்)
உடன் பிறந்த சகோதரி	$= \frac{1}{2}$ (எச்சதாரர்)
உடன் பிறந்த சகோதரனின் மகன்	= 0 (உடன் பிறந்த சகோதரியால் தள்ளப்பட்டான்)

மகள் இருப்பதால், உடன் பிறந்த சகோதரி பங்குதாரராகப் பங்கு பெறமுடியாது. உடன்பிறந்த சகோதரன் இல்லாததால், அவருடன் எச்சதாரராகும் நிலை இல்லாது போய்விடுகிறது. எனவே, மகளுக்குரிய பங்கு நீங்கி, எஞ்சியதைப் பெற வேறு எச்சதாரனும் இல்லாததால், மகளோடு எச்சதாரராகி எஞ்சியதைப் பெறுகிறுள்.

(ஆ) 2 மகனின் மகள்கள்	$= \frac{2}{3}$ (பங்குதாரர்)
உடன் பிறந்த சகோதரி	$= \frac{1}{3}$ (எச்சதாரர்)

(இ) மகள்	$= \frac{1}{2}$ (பங்குதாரர்)
மகனின் மகள்	$= \frac{1}{6}$ (பங்குதாரர்)
கணவன்	$= \frac{1}{4}$ (பங்குதாரர்)
உடன் பிறந்த சகோதரி	$= \frac{1}{12}$ (எச்சதாரர்)

		ஏற்றவிதியால்	பங்கு குறைதல்
(ஈ) மகள்	= $\frac{1}{2}$ (பங்குதாரி)	$\frac{6}{12}$	$\frac{6}{13}$
மகனின் மகள்	= $\frac{1}{6}$,,	$\frac{2}{12}$	$\frac{2}{13}$
கணவன்	= $\frac{1}{4}$ (பங்குதாரர்)	$\frac{3}{12}$	$\frac{3}{13}$
தாய்	= $\frac{1}{6}$ (பங்குதாரர்)	$\frac{2}{12}$	$\frac{2}{13}$
உடன் பிறந்த சகோதரி	= 0 (தள்ளப்பட்டாள்)		
		$\frac{13}{12}$	1

(உ) உடன் பிறந்த சகோதரன் = $\frac{2}{3}$ (எச்சதாரர்)
உடன் பிறந்த சகோதரி = $\frac{1}{3}$ (சகோதரனோடு எச்சதாரர்)
தந்தைவழிச் சகோதரி = 0 (சகோதரனால் தள்ளப்பட்டாள்)

(ஊ) கணவன் = $\frac{1}{2}$ (பங்குதாரர்) } $\frac{2}{3}$
தாய் = $\frac{1}{6}$ (பங்குதாரர்)
உ. பி. சகோதரன் = $\frac{1}{3} \times \frac{2}{3}$ = $\frac{2}{9}$ (எச்சதாரர்) } $\frac{1}{3}$
உ. பி. சகோதரி = $\frac{1}{3} \times \frac{1}{3}$ = $\frac{1}{9}$ (எச்சதாரர்)

1

சகோதரன் இருப்பதால், சகோதரி பங்குதாரராய்ப் பங்குபெற முடியாது. ஆனால், எஞ்சியிருப்பதில் ($\frac{1}{3}$) சகோதரனோடு எச்சதாரராகி, $\frac{1}{3}$ பங்கு பெறுகிறாள்.

நான்காவது வகுப்பினரான பாட்டனின் வழித்தோன்றல்களான தந்தையின் கிளைவழியினர் (எ.த.மு.செ.)

13. தந்தையின் உடன்பிறந்த சகோதரன் (Full Paternal Uncle)
14. தந்தையின் தந்தைவழிச் சகோதரன் (Consanguine Paternal Uncle)
15. தந்தையின் உடன்பிறந்த சகோதரனின் மகன் (Full Paternal Uncle's Son)
16. தந்தையின் தந்தைவழிச் சகோதரனின் மகன் (Consanguine Paternal Uncle's Son)
17. தந்தையின் உடன்பிறந்த சகோதரனின் மகனின் மகன் (Full Paternal Uncle's Son's Son)
18. தந்தையின் தந்தைவழிச் சகோதரனின் மகனின் மகன் (Consanguine Paternal Uncle's Son's Son)

முக்கிய விதிகள்

(a) ஒத்த நிலையிலுள்ள ஆணுடன் ஒரு பெண் எச்சதாரராகும் பொழுது, பெண்ணுக்கு ஒரு பங்கும் ஆணுக்கு இரண்டு பங்கும் கிடைக்கும்.

(எ - டு) வாரிசுகள் ஒரு மகனும், ஒரு மகளுமா யிருந்தால், மொத்தம் 3 பங்கு வைத்து, மகன் $\frac{2}{3}$ பங்கும், மகள் $\frac{1}{3}$ பங்கும் பெறு வார்கள். அல்லது 3 மகனும் 4 மகளும் இருந்தால், மொத்தம் 10 பங்கு வைத்து, [அதாவது, மகன் $(3\times2=6)$ + மகள் $(4\times1=4) = 10$] ஒவ் வொரு மகனும் $\frac{2}{10}$ பாகமும், ஒவ்வொரு மகளும் $\frac{1}{10}$ பாகமும் பெறுவர். (முன் 228-ம் பக்கம் பார்க்க.)

(b) முந்திய வரிசையில் நிற்கும் எச்சதாரர்கள் பிந்திய வரிசை யில் உள்ள எச்சதாரர்களைப் பங்குபெற முடியாதவாறு தள்ளிவிடுவர். ஆனால், ஒத்த நிலையிலுள்ள பெண்கள் ஆண்களுடன் பிந்திய வரிசை யில் நின்றாலும், ஒரே சமயத்தில் அவர்களோடு எச்சதாரராய்ப் பங்கு பெறுகின்றனர். மேலும், 2 மகள்கள் இருக்கிற காரணத்தால், மகனின் மகள் எப்பொழுது பங்குதாரராகப் பங்குபெறாது தள்ளப்படுகிறாளோ, அப்பொழுது ஒருபடி பிந்திய மகனோடு இவள் எச்சதாரராகிப் பங்கு பெறுகிறாள். ஒருபடி பிந்திய மகனின் மகனுக்கு 2 பங்கும் இவளுக்கு (ஒருபடி முந்திய மகனின் மகள்) 1 பங்கும் கிடைக்கவேண்டும்.

எச்சதாரர்களைப் பொறுத்த பொதுவிதிகள்

A. 'ஸிராஜின்' பொது விதிகள்

அரபு மொழியில் எழுதப்பட்டிருக்கும் 'ஸிராஜ்' என்னும் மூல நூலில் எச்சதாரர்கள் எஞ்சியதைப் பெறும் விதி விவரம் கீழ்வருமாறு வகுத்துக் கூறப்பட்டுள்ளது:

எச்சதாரர்கள் அனைவரும் தந்தை வழியினர் (Agnates) ஆவர். அவர்கள் எஞ்சியதைப் பெறும் நிலையினை மூன்றாகப் பிரித்துக் கூறலாம்: (1) தம்முரிமையில் எச்சதாரராய் எஞ்சியதைப் பெறு பவர் என்றும், (2) பிறர் உரிமையில் எச்சதாரராய் எஞ்சியதில் பங்கு பெறுபவர் என்றும், (3) பிறரோடு சேராது, தாமே தனிப்பட்ட முறையில் பங்கு பெறுபவர் என்றும் மூன்றாகப் பிரிக்கலாம்.

(1) தம்முரிமையில் எச்சதாரராய் எஞ்சியதைப் பெறுபவர்களாக, இறந்தவரின் ஆண்வழித் தோன்றல்கள்; ஆண் மூதாதையர்கள்; தந்தையின் ஆண் கிளைவழித் தோன்றல்கள்; பாட்டனின் ஆண் கிளை வழித் தோன்றல்கள் ஆகிய நான்கு உட்பிரிவினரைக் குறிப்பிடலாம். இவர்கள் முறையே, மகன், மகனின் மகன் (எ. த. பி. செ.); தந்தை,

தந்தையின் தந்தை (எ.த.மு.செ.); உடன் பிறந்த சகோதரன், தந்தை வழிச் சகோதரன், இவ்விருவரின் ஆண்வழித் தோன்றல்கள்; தந்தையின் உடன் பிறந்த சகோதரன், தந்தையின் தந்தைவழிச் சகோதரன், இவ்விருவரின் ஆண்வழித் தோன்றல்கள் ஆகிய நான்கு பிரிவினர்களாவர். இந்த நான்கு பிரிவில் உள்ளவர்களும் ஆண்களாவர். இவர்கள் தந்நிலையிலேயே தம்முரிமையில் எச்சதாரராய் எஞ்சியதைப் பெற உரிமை பெற்றவர் ஆவர். இவர்களுள் முந்திய பிரிவுக்குரியவர்கள் இருந்தால், பிந்திய பிரிவில் உள்ளவர்கள் எஞ்சியது பெறாது தள்ளப்படுவர். ஒரே பிரிவில் உள்ளவரிடையே, இறந்தவரோடு நெருங்கி நிற்பவர், அகன்று நிற்பவரைத் தள்ளிவிடுவர்.

(2) பிறர் உரிமையில் எச்சதாரராய் எஞ்சியதில் பங்கு பெறுபவர்களாக, மகளையும், மகனின் மகளையும் (எ. த. பி. செ.), உடன் பிறந்த சகோதரியையும், தந்தைவழிச் சகோதரியையும் குறிப்பிடலாம். இவர்கள் நால்வரும் பெண்கள். இவர்கள், தங்களுடன் உடன்பிறந்த சகோதரன் இருந்தால் குறிப்பான பங்கு பெறாது, அவனோடு சேர்ந்து அவனுடைய உரிமையில் ஆணுக்கு இரண்டு பங்கு: பெண்ணுக்கு ஒரு பங்கு என்ற விகிதத்தில் எச்சதாரராய் எஞ்சியிருப்பதில் பங்கு பெறுவர்.

(3) பிறரோடு சேராது, தாமே தனிப்பட்டமுறையில் பங்கு பெறுபவர்களாக, உடன் பிறந்த சகோதரியையும் தந்தைவழிச் சகோதரியையும் குறிப்பிடலாம். இவ்விருவரும் இரண்டாவது பிரிவில் கூறப்பட்டவர்களே.

இவ்விருவரும் தங்களுடைய உடன் பிறந்த சகோதரர் இல்லாத பொழுது, பங்குதாரராய் (Sharers), குறிப்பிடப்பட்ட பங்கைப் பெறுகின்றனர். ஒருத்தியாயிருந்தால் $\frac{1}{2}$ பங்கும், ஒருத்திக்கு மேற்பட்டிருந்தால் $\frac{2}{3}$ பங்கும் இவர்களுக்குக் கிடைக்கும். இவ்விருவரின் பங்கும், மகளின் பங்கும், மகனின் மகளின் பங்கும் ஒன்று என்பதைக் காணலாம். உடன் பிறந்த சகோதரனோடு சேர்ந்து இவர்கள் எச்சதாரராய்ப் பங்கு பெறுவர் என்று இரண்டாவது பிரிவில் கண்டோம்.

மகளோ, அல்லது மகனின் மகளோ இருந்தால், அவர்கள் பங்குதாரராய்ப் பங்கு பெற்றது போக எஞ்சியிருப்பதைத் தள்ளப்படத் தக்கவர்களால் தள்ளப்படாதிருந்தால், உடன் பிறந்த சகோதரி தனிமையில் எச்சதாரியாகி எஞ்சியதை எடுத்துக்கொள்ள உரிமை பெற்றவளாவாள். உடன் பிறந்த சகோதரி இல்லாவிட்டால், தந்தைவழிச் சகோதரி எஞ்சியிருப்பதைத் தனிமையில் எச்சதாரியாய் எடுத்துக்கொள்ள உரிமையுடையவளாவாள். (இவை 'ஸிராஜ்' என்னும் நூலில் வகுத்துக் கூறப்பட்டுள்ள முறைகளாகும்.)

உடன் பிறந்த சகோதரியும், தந்தைவழிச் சகோதரியும் எச்ச தாரராய் இரு நிலைகளில் எஞ்சியதில் பங்கு பெறுவதைக் கண்டோம். இவ்விருவரும் 'பங்குதார'ராய்ப் பங்கு பெறும் முறையினையும் நினைவு கூர்வது சாலச்சிறந்தது. இறந்தவருக்கு மகளில்லாவிட்டால், உடன் பிறந்த சகோதரி அவளுடைய இடத்தில் நின்று அவளைப்போல் ஒத்த பங்கு பெறுகிறாள். தந்தைவழிச் சகோதரி மகனின் மகளுடைய இடத் தில் நின்று அவளை ஒத்த பங்கு பெறுகிறாள்.

அதாவது, மகள் இல்லாவிட்டால், மகனின் மகள் அந்த மகளுடைய இடத்தில் நின்று, ஒருத்தியாயிருந்தால் $\frac{1}{2}$ பங்கும், ஒருத்திக்கு மேற்பட் டிருந்தால் $\frac{2}{3}$ பங்கும் சகோதரனோடு எச்சதாரராயும் பங்கு பெறுவ தைப்போல், உடன் பிறந்த சகோதரி இல்லாவிட்டால், தந்தைவழிச் சகோதரி உடன் பிறந்த சகோதரியின் இடத்தில் நின்று, ஒருத்தியா யிருந்தால் $\frac{1}{2}$ பங்கும், ஒருத்திக்கு மேற்பட்டிருந்தால் $\frac{2}{3}$ பங்கும் தன் னுடைய உடன் பிறந்த சகோதரனோடு எச்சதாரராயும் பங்கு பெறு கிறாள். மேலும், ஒரு மகள் மட்டிலும் இருந்தால், மகனின் மகள் மொத்தத்தில் $\frac{2}{3}$ பாகத்தில் $\frac{1}{2}$ பங்கு எடுத்தது போக மீதியுள்ள $\frac{1}{6}$ பாகத்தை ($\frac{2}{3}-\frac{1}{2}=\frac{1}{6}$) எடுத்துக்கொள்வதுபோல், இறந்தவருக்கு ஓர் உடன் பிறந்த சகோதரி மட்டிலும் இருந்தால், அவளுக்கு $\frac{1}{2}$ பங்கு கொடுத்தது போக, மீதி இருக்கிற $\frac{1}{6}$ பங்கைத் தந்தைவழிச் சகோதரி பங்குதாரியாக எடுத்துக்கொள்ள உரிமை பெற்றவளாவாள். இறந்தவ ருக்கு இரண்டு மகள்கள் இருக்கும்பொழுது, எப்படி மகனின் மகள் பங்கு பெறாது தள்ளப்படுவாளோ அதேபோல், இறந்தவருக்கு இரண் டல்லது அதற்கு மேற்பட்ட உடன்பிறந்த சகோதரிகள் இருக்கும் பொழுது தந்தைவழிச் சகோதரி, மகனின் மகளைப்போல் பங்கு பெறாது தள்ளப்படுவாள். பங்கு பெறாது தள்ளப்பட்ட மகனின் மகள், தன் னுடைய ஒத்த வரிசையில் இருக்கிற ஆணுடன் எச்சதாரியாகி, எஞ்சியதில் பங்கு பெறுவதைப்போல், உடன்பிறந்த சகோதரிகளால் பங்கு பெறாது தள்ளப்பட்ட தந்தைவழிச் சகோதரி, ஒத்த வரிசையில் இருக்கிற ஆண்களுடன் (சகோதரன்) சேர்ந்து எச்சதாரியாகி, எஞ்சி யதில் பங்கு பெறுவாள். ஆனால், மகனின் மகள், ஒருபடி பிந்திய மகனின் மகனோடு எச்சதாரியாகி எஞ்சியதில் பங்கு பெறுவதுபோல் தந்தைவழிச் சகோதரிகள், ஒருபடி பிந்திய தலைமுறையிலுள்ள ஆணுடன் (உடன் பிறந்த சகோதரனின் மகன்) சேர்ந்து எச்சதாரராக எஞ்சியதில் பங்குபெற முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. உடன் பிறந்த சகோதரியும், அவள் இல்லாவிட்டால் தந்தைவழிச் சகோதரியும், இறந்தவரின் மகளுடனோ அல்லது மகனின் மகளுடனோ எச்சதாரராய்த் தனிமையில் எஞ்சியதை அடைய உரிமை பெற்றவராவர். எடுத்துக் காட்டாக, ஒரு மகளையும், ஓர் உடன் பிறந்த சகோதரியையும், அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மகள்களையும், உடன் பிறந்த சகோதரியையும்

இறந்தவர் விட்டுச்சென்றிருந்தால், மகளுக்கோ அல்லது மகள்களுக்கோ பங்கு கொடுத்தது போக, மிஞ்சியிருப்பதை உடன் பிறந்த சகோதரி எச்சதாரியாய் எடுத்துக்கொள்ள உரிமை பெற்றவளாவாள். இந்த இடத்தில், உடன் பிறந்த சகோதரி இல்லாதிருந்து, தந்தைவழிச் சகோதரி மட்டும் இருந்தால், இவள் எச்சதாரியாகி எஞ்சியதைப் பெற உரிமை பெற்றவளாவாள். இதேபோல், மகனின் மகளுடனும் இருவரும் எச்சதாரராய் எஞ்சியதைப் பெற உரிமை பெற்றவராவர். உடன் பிறந்த சகோதரி எச்சதாரியாகி எஞ்சியதை எடுத்துக்கொண்டால், தந்தைவழிச் சகோதரன் எச்சதாரராய்ப் பங்கு பெறுவதில் நின்றும் அவளால் தள்ளப்படுவான். ஆனால், அவள் எச்சதாரியாக அல்லாமல் பங்குதாரியாக மட்டிலும் பங்கு பெற்றால், தந்தைவழிச் சகோதரன் எச்சதாரனாகப் பங்குபெற முடியும்.

B. 'ஜபரீ'யின் விதி (Rule of Al-Jabari)

எச்சதாரர்கள் எஞ்சியது பெறும் முறையினை ஜபரீயின் விதிப்படி, கீழ்வருமாறு பிரித்துக் கூறலாம் :

(1) ஒழுங்குமுறை (Order)

(2) ஒரேபடி (Degree)

(3) இரத்தத் தொடர்பின் நெருக்கம் (Strength of Blood Tie) என்று எச்சதாரர்களை முறையே மூன்று பிரிவுகளுக்குள் அடக்கி, அவர்கள் பங்கு பெறும் முறையினைக் காணலாம்.

1. ஒழுங்குமுறை (Order)

தந்தைவழியினரை (Agnates) வழித்தோன்றல்கள் (Descendants), மூதாதையர் (Ascendants), கிளை வழியினர் (Collaterals) என்று ஒழுங்குபடுத்தி, முறையே எச்சதாரர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். இறந்தவருடைய மகனும் தந்தையும் ஒருபடி (Degree) சமமாக விலகி நின்றாலும், மகன் தந்தைவழியினரின் வழித்தோன்றல்களில் (Descendants) வருவதால், எச்சதாரராக்குவதில் இறந்தவரின் தந்தையைக் காட்டிலும் மகனுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். எனவே, மகனும் தந்தையும் இருந்தால், மகன் எச்சதாரராகித் தந்தை எச்சதாரராகாமல் மகனால் தள்ளப்படுவார். ஆயினும், தந்தை பங்குதாரராய் $\frac{1}{6}$ பங்கு பெற உரிமை பெற்றவராவார்.

2. ஒரேபடி (Degree)

ஹனாபி சட்டத்தில் பிரதிநிதித்துவம் (Representation) அங்கீகரிக்கப்படாமையால், ஒத்த தலைமுறையிலுள்ள ஒரேபடியில் இருப்பவர்கள் எச்சதாரராய்ப் பங்கு பெறும்பொழுது, ஒருபடி பிந்திய தலைமுறையினரை எச்சதாரராகாமல் தள்ளிவிடுவர். மேலும், நெருங்கி

நிற்பவர் அகன்று நிற்பவரைத் தள்ளிவிடுவர். இறந்தவரின் மகனோடு மற்றொரு மகனின் மகன் (பேரன்) எச்சதாரராகப் பங்கு பெறமுடியாது.

3. இரத்தத் தொடர்பின் நெருக்கம் (Strength of BloodTie)

மேலே கூறப்பட்ட ஒழுங்குமுறையும் ஒரே படியும் ஒத்துச் சமமாயிருப்பவரிடையே, உடன் பிறப்புகள் எச்சதாரராவதில் முதலிடம் பெறுவர். உடன் பிறந்த சகோதரன் இருந்தால், தந்தைவழிச் சகோதரன் எச்சதாரராகாமல் தள்ளப்படுவான். ஆனால், தந்தைவழிச் சகோதரன், உடன் பிறந்த சகோதரனின் மகன் எச்சதாரராவதில் நின்றும் தள்ளிவிடுவான். இவையே எச்சதாரர்களைப் பொறுத்த ‘ஜபரீயின்’ பொது விதிகளாகும்.

எச்சதாரராகும் பெண்கள் நால்வர்

(1) மகள்.
(2) மகனின் மகள்.
(3) உடன் பிறந்த சகோதரி.
(4) தந்தைவழிச் சகோதரி.

தாய்வழிச் சகோதரனோ, தாய்வழிச் சகோதரியோ, எச்சதாரர் ஆகார். ஒத்த நிலையிலுள்ள (Equal Degree) பெண்கள் ஆண்களோடு எச்சதாரராவது என்பது மேல் குறிப்பிடப்பட்டவர்களையே குறிக்கும். ஏனெனில், உடன் பிறந்த சகோதரனின் மகள் எச்சதாரியாக முடியாது. காரணம், இவள் தூரத்து உறவினரில் (Distant Kindred) ஒருத்தியாவாள். ஆகவே, இவள் ஒத்த நிலையிலுள்ள ஆண்களால் (சகோதரனால்) பங்கு பெறாது தள்ளப்படுகிறாள். அதாவது, உடன் பிறந்த சகோதரனின் மகனும் உடன் பிறந்த சகோதரனின் மகளும் இருந்தால், மகன் எச்சதாரராய் எஞ்சிய முழுவதையும் எடுத்துக் கொள்ள, மகள் தள்ளப்படுகிறாள்.

எச்சதாரராகும் முதல்நிலைப் பங்குதாரர்கள் (Primary Sharers)

முக்கியமாக, ஆறு பங்குதாரர்கள் சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக எச்சதாரர் ஆகின்றனரென்பதை முன்பு (பக்கம் 236) பார்த்தோம்.

(1) தந்தை.
(2) பாட்டன் (எ.த.மு.செ.).
(3) மகள்.
(4) மகனின் மகள் (எ.த.பி.செ.).
(5) உடன் பிறந்த சகோதரி.
(6) தந்தைவழிச் சகோதரி.

இவர்களில், தந்தையும் பாட்டனும் சில சந்தர்ப்பங்களில் பங்குதாரராகவோ எச்சதாரராகவோ, சில சந்தர்ப்பங்களில் பங்குதாரராகவும் எச்சதாரராகவும் (இருவழிகளிலும்) பங்கு பெறுவதைக் கண்டோம். மகனோ, மகனின் மகனோ (எ.த.பி.செ.) இருந்தால், இவர்கள் பங்குதாரர்களாக மட்டிலுமே பங்கு பெறுகின்றனர். மகனோ, மகளோ, மகனின் மகளோ (எ.த.பி.செ.) இல்லாதிருந்தால், இவர்கள் எச்சதாரர்களாக மட்டிலும் பங்கு பெறுகின்றனர். ஆனால், மகனோ மகனின் மகனோ (எ.த.பி.செ.) இல்லாதிருந்து, ஒன்றோ ஒன்றுக்கு மேற்பட்ட மகளோ அல்லது ஒன்றோ ஒன்றுக்கு மேற்பட்ட மகனின் மகளோ இருந்தால் பங்குதாரராகவும், எச்சதாரராகவும் (இருவழிகளிலும்) இவர்கள் பங்கு பெறுகின்றனர்.

விளக்கம் :

(1) மகன் $= \frac{5}{6}$

தந்தை $= \frac{1}{6}$ (பங்குதாரராக மட்டிலும்)

(2) தாய் $= \frac{1}{3}$

தந்தை $= \frac{2}{3}$ (எச்சதாரராக மட்டிலும்)

(3) மகள் $= \frac{1}{2}$

தந்தை $= \frac{1}{2} \left\{ \begin{array}{ll} \text{பங்கர்} & \frac{1}{6} \\ \text{எச்சர்} & \frac{1}{3} \end{array} \right\} = \frac{1}{2}$

எனவே, தந்தையும் பாட்டனும் ஒரே சமயத்தில் பங்குதாரராயும் எச்சதாரராயும் பங்குபெற முடியும். மீதி உள்ள நான்கு பெண் பங்குதாரர்களும், ஒன்றில் பங்குதாரராகவோ அல்லது எச்சதாரராகவோ மட்டிலுமே ஒரு சமயத்தில் பங்கு பெறமுடியும். சூழ்நிலையும் சந்தர்ப்பமும் இப் பெண்களை எச்சதாரர்களாக ஆக்கினால், இவர்கள் எச்சதாரர்களாக மட்டிலுமே பங்கு பெறுவர். இல்லையென்றால், பங்குதாரர்களாக மட்டிலுமே பங்கு பெறுவர். ஒரே சமயத்தில் இரு வழிகளிலும் இவர்கள் பங்கு பெறமாட்டார்கள்.

தூரத்து உறவினர்கள் (Distant Kindred)

பங்குதாரர்களோ எச்சதாரர்களோ இல்லாதொழியின், தூரத்து உறவினர்கள் பங்குபெற உரிமை பெற்றவராவர். ஆனால், இதற்கு விதிவிலக்காக, பங்குதாரர் கணவனாகவோ, அல்லது மனைவியாகவோ மட்டிலும் இருந்தால், அவருடைய பங்கு நீங்கலாக மிச்சம் இருப்பதைப் பெற எச்சதாரர்களும், அவர்களும் இல்லையானால், தூரத்து உறவினர்களும் அதைப் பெறுவதற்கு உரிமை பெற்றவர்களாவர்.

பங்குதாரரோ, எச்சதாரரோ ஆக முடியாத இரத்தத் தொடர்புடைய உறவினர்களே 'தூரத்து உறவினர்' (Distant Kindred) ஆவர்.

இவர்களைப் பின்வரும் முறைப்படி நான்கு வகுப்பினராகப் பிரிக்கலாம் : (1) வழித்தோன்றல்கள் (Descendants). (2) மூதாதையர் (Ascendants). (3) தாய், தந்தையர் வழித்தோன்றல்களான கிளை வழியினர் (Descendants of Parents). (4) பாட்டன், பாட்டியின் வழித்தோன்றல்களான தந்தையின் கிளை வழியினர் (Descendants of Grand Parents) ஆகிய நான்கு வகுப்பார் ஆவர்.

I. முதல் வகுப்பினரான வழித்தோன்றல்களும் அவ் வகுப்பிலுள்ள பிரிவுகளும்

பிரிவு :

(a) மகளின் குழந்தைகளும் அவர்களுடைய வழித் தோன்றல்களும்.

(b) மகனின் மகளின் குழந்தைகளும் (எ. த., பி. செ.) அவர்களுடைய குழந்தைகளும்.

II. இரண்டாவது வகுப்பினரான மூதாதையரும் அவ் வகுப்பிலுள்ள பிரிவும்

பிரிவு :

தாய்ப்பாட்டன், தாய்ப்பாட்டி (எ. த. மு. செ.)

III. மூன்றாவது வகுப்பினரான தாய் தந்தையர் வழித்தோன்றல்களான கிளை வழியினரும் அவ் வகுப்பிலுள்ள பிரிவுகளும்

பிரிவு :

(a) உடன் பிறந்த சகோதரனின் மகள்களும், அவர்களுடைய வழித் தோன்றல்களும்.

(b) தந்தைவழிச் சகோதரனின் மகள்களும் அவர்களுடைய வழித்தோன்றல்களும்.

(c) தாய்வழிச் சகோதரனின் குழந்தைகளும் அவர்களுடைய வழித்தோன்றல்களும்.

(d) உடன் பிறந்த சகோதரனின் மகன்களும் (எ. த. பி. செ.) அவர்களுடைய வழித்தோன்றல்களும்.

(e) தந்தைவழிச் சகோதரனின் மகள்களும் (எ. த. பி. செ.) அவர்களுடைய வழித்தோன்றல்களும்.

(f) உடன் பிறந்த அல்லது, தந்தைவழி அல்லது தாய்வழிச் சகோதரியின் குழந்தைகளும் அவர்களுடைய வழித்தோன்றல்களும்.

IV. நான்காவது வகுப்பினரான பாட்டன், பாட்டியரின் வழித்தோன்றல்களான தந்தையின் கிளை வழியினரும்—அவ்வகுப்பிலுள்ள பிரிவுகளும்—தாய்ப் பாட்டன், தாய்ப் பாட்டியரின் வழித்தோன்றல்களான தந்தையின் கிளை வழியினரும்—அவ் வகுப்பிலுள்ள பிரிவுகளும்

பிரிவு :

(a) தந்தையின் உடன் பிறந்த சகோதரனாகிய சிற்றப்பன் அல்லது பெரியப்பனின் மகள்களும், அவர்களுடைய வழித்தோன்றல்களும்.

(b) தந்தையின் தந்தைவழிச் சகோதரனின் மகள்களும், அவர்களுடைய குழந்தைகளும்.

(c) தந்தையின் தாய்வழிச் சகோதரர்களும் அவர்களுடைய குழந்தைகளும்.

(d) தந்தையின் உடன் பிறந்த சகோதரனின் மகனின் மகள்களும் (எ. த. பி. செ.), அவர்களுடைய வழித்தோன்றல்களும்.

(e) தந்தையின் தந்தைவழிச் சகோதரனின் மகனின் மகள்களும் (எ.த. பி. செ.), அவர்களுடைய வழித்தோன்றல்களும்.

(f) தந்தையின் உடன் பிறந்த அல்லது, தந்தைவழி அல்லது தாய் வழிச் சகோதரிகளும், அவர்களுடைய வழித் தோன்றல்களும்.

(g) தாயின் சகோதரர்களும், சகோதரிகளும், அவர்களுடைய வழித் தோன்றல்களும்.

(h) அகன்று நிற்கும் மூதாதையரின் (எ. த. மு. செ.) வழித் தோன்றல்கள்.

தள்ளல் விதி (Rules of Exclusion)

(1) ஒவ்வொரு முந்திய வகுப்பாரும் முறையாக மற்றப் பிந்திய வகுப்பார் பங்கு பெறுவண்ணம், ஒருவர்பின் ஒருவராய்த் தள்ளிக் கொண்டே செல்வர். முதல் வகுப்பார் இருந்தால், மற்ற மூன்று வகுப்பாரும் தள்ளப்படுவர். அதேபோல், இரண்டாவது வகுப்பார் இருந்தால், 3, 4 வகுப்பார் பங்கு பெறுவாறு தள்ளப்படுவார்கள்.

(2) ஒவ்வொரு வகுப்பாரிலும், நெருங்கி நிற்பவர் அகன்று நிற்பவரைத் தள்ளிவிடுவர்.

(3) ஒரே வகுப்பினராயும், ஒத்த நிலையிலுள்ளவர்களாயும் இருப்பவர்களிடையே பங்குதாரர்களின் குழந்தைகளும், எச்சதாரர்களின் குழந்தைகளும், தூரத்து உறவினரின் குழந்தைகளும் இருந்தால், பங்குதாரர் — எச்சதாரர்களுடைய குழந்தைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, முதலில் இவர்களுக்குப் பங்கு வழங்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக, மகனின் மகளின் மகளும், மகளின் மகளின் மகளும் இறந்தவருக்கிருந்தால், அவர்கள் இருவரும் இறந்தவரில் நின்றும் சம அளவு அகன்று நிற்பவர்களே. ஆயினும், முன்னவள் பங்குதாரரின் (மகனின் மகன் பங்குதாரர்) மகளாதலால் அவள் முதலில் பங்கு பெற உரிமை பெற்றவளாவாள். பின்னவள் தூரத்து உறவினரின் (மகளின் மகள்=தூரத்து உறவினர்) மகள் ஆதலால், இவளை விடுத்துப் பங்குதாரரின் மகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

(4) மேற்குறிப்பிடப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு, தந்தைவழி வாரிசுகளைவிட, உடன் பிறந்தவரின் வாரிசுகளுக்கு முக்கியத்துவம் அளித்து, பங்கு வழங்குவதில் இவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். ஆனால், இதற்கு விதிவிலக்காக, உடன் பிறந்த சகோதரிகளின் வழித்தோன்றல்கள், தந்தைவழிச் சகோதரர்களின் வழித்தோன்றல்களையோ, தந்தைவழிச் சகோதரிகளின் வழித்தோன்றல்களையோ பங்கு பெறாது தள்ளிவிட முடியாது. ஏனெனில், பின்னே குறிப்பிடப்பட்டவர்கள், உடன் பிறந்த சகோதரியின் வழித்தோன்றல்களாவர்; பங்கிடப்பட்டது போக, சொத்தில் மிஞ்சியதை எச்சதாரராய் எடுத்துக்கொள்ள இவர்கள் உரிமை பெற்றவர்கள் ஆவர்.

(5) உடன் பிறந்த சகோதரர்களின் வழித்தோன்றல்களோ அல்லது உடன் பிறந்த சகோதரிகளின் வழித்தோன்றல்களோ, அல்லது தந்தைவழிச் சகோதரர்களின் வழித்தோன்றல்களோ அல்லது தந்தைவழிச் சகோதரியின் வழித்தோன்றல்களோ தாய்வழிச் சகோதர—சகோதரிகளின் வழித்தோன்றல்களைப் பங்கு பெறாது தள்ளிவிட முடியாது. ஏனெனில், அவர்கள் முன்னவர்களோடு ஒரே சமயத்தில் சொத்துரிமை இறக்கம் பெறத் தகுதிபடைத்தவர்களாவர். ஆனால், நான்காவது வகுப்பில் கூறப்பட்டுள்ள தாய்வழித் தொடர்புடைய வழித்தோன்றல்கள் அதே வகுப்பில் அடங்கும் உடன்பிறந்தவர்களால் அல்லது தந்தைவழித் தொடர்புடையவர்களால் பங்கு பெறாது தள்ளப்படுவர். எனவே, தந்தையின் தாய்வழிச் சகோதரர்களின் வழித்தோன்றல்களும், தந்தையின் தாய்வழிச் சகோதரிகளின் வழித்தோன்றல்களும் தந்தையின் உடன் பிறந்த சகோதரரின் மகள்களாலோ (எ. த. பி. செ.), தந்தையின் தந்தைவழிச் சகோதரரின் மகள்களாலோ, தந்தையின் உடன் பிறந்த சகோதரிகளின் குழந்தைகளாலோ அல்லது தந்தையின் தந்தைவழிச் சகோதரிகளின் குழந்தைகளாலோ (எ.த.பி.செ.) பங்கு பெறாது தள்ளப் படுவர்.

தூரத்து உறவினரிடையே பங்கிடப்பெறும் முறை

(1) ஓர் ஆணுக்கு இரண்டு பங்கும் ஒரு பெண்ணுக்கு ஒரு பங்கும் தரப்பட வேண்டும். ஆணுக்கு இரண்டு, பெண்ணுக்கு ஒன்று என்ற விதியை, மூதாதையர் எந்த எந்தத் தலைமுறைகளில் ஆண் பெண்ணாய்

வேறுபட்டு நிற்கின்றனரோ அந்த அந்தத் தலைமுறைகளில் பொருத்தி வைத்துப் பங்கைக் கணக்கிட வேண்டும். மூதாதையர் ஆண் பெண்ணாய் வேறுபடாத தலைமுறைகளில் இந்த விதியைப் பயன்படுத்த வேண்டியதில்லை.

(2) எந்தத் தலைமுறையில் ஆண்-பெண் என்று வேறுபடுகின்றனரோ, அந்தத் தலைமுறையில் உள்ள ஆண் மூதாதையரின் மொத்தப் பங்கும் அவர்களுடைய தலைமுறையினருக்கும், அந்தத் தலைமுறையில் உள்ள பெண் மூதாதையரின் மொத்தப் பங்கும் அவர்களுடைய வழித்தோன்றல்களுக்கும் கூட்டாக வந்தடையும். வழித்தோன்றல்கள் இருக்கும்பொழுது, அவர்கள் ஒவ்வொருவருக்கும் இப்படிப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும்.

(3) ஒன்றுக்கு மேற்பட்ட வழித்தோன்றல்கள் மூதாதையருக்கு இருக்கும்பொழுது, மூதாதையரில் ஆண்-பெண் பாகுபாடு எழுகின்ற தலைமுறையில் உள்ள ஆண்களையும் பெண்களையும் அவர்கள் வழியாகப் பங்கு கோரும் வழித்தோன்றல்களின் தலைகளை எண்ணி (ஆண்-பெண் பாகுபாடின்றி) அவர்களின் மொத்த எண்ணிக்கையை மூதாதையருக்குக் கொடுத்து, ஆணுக்கு 2 பங்கு : பெண்ணுக்கு 1 பங்கு என்ற விகிதத்தில் பங்கிட்டு, அந்த மொத்தப் பங்கை வழித்தோன்றல்களிடையே திரும்பவும் ஆணுக்கு 2 : பெண்ணுக்கு 1 என்ற விகிதத்தில் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும்.

விளக்கம் : *இறந்தவர், மகனின் மகளின் ஒரு மகனையும், மகனின் மகனின் ஒரு மகளையும், மகளின் மகளின் ஒரு மகனையும், மகளின் மகளின் ஒரு மகளையும் விட்டுச் சென்றால், அப்பொழுது சொத்துப் பங்கிடப்படும் முறை எதிர்ப் பக்க அட்டவணையில் தரப்பட்டுள்ளது.*

இதில், மூதாதையர்கள் இரண்டாம் தலைமுறையில் 2 மகன் என்றும் 2 மகள் என்றும் வேறுபட ஆரம்பிக்கின்றனர். ஒவ்வொரு மூதாதையரும் ஒவ்வொரு வழித்தோன்றலையே விட்டுச் சென்றிருக்கின்றனர். ஆதலால், ஆண்–பெண் என்கிற வேறுபாடு எழுந்த 2ஆம் தலைமுறையில் உள்ள ஆண்கள் தலைக்கு 2 பாகமும், (2 ஆண்கள் இருப்பதால் மொத்தம் 4 பாகமும்) பெண்கள் தலைக்கு 1 பாகமும் (2 பெண்கள் இருப்பதால் மொத்தம் 2 பாகமும்) ஆகமொத்தம் 6 பாகமாக ஆகின்றன. இதில், 2 ஆண் மூதாதையரின் மொத்தப் பங்காய் $\frac{4}{6}$ பாகத்தையும், 2 பெண் மூதாதையரின் மொத்தப் பங்காய் $\frac{2}{6}$ பாகத்தையும் இரு பிரிவாகப் பிரித்துக் கொடுக்கவேண்டும். இந்த இரண்டிலும் பங்கு பெறுபவர்கள் ஓர் ஆண் ஒரு பெண் என்று இருப்பதால், 2 : 1 என்ற விகிதத்தில் அதைப் பிரித்துக் கொடுத்தால், $\frac{8}{18}$, $\frac{4}{18}$, $\frac{4}{18}$, $\frac{2}{18}$ என்று முறையே இறுதியில் ஒவ்வொருவருக்கும் பங்கு கிடைக்கும்.

அட்டவணை



இறந்தவர்
முதல் தலைமுறை ஆண்-பெண் பாகுபாடில்லை
மகன்
மகன்
மகள்
மகள்
2-ஆம் தலைமுறை ஆண்-பெண் பாகுபாடு
மகன் (2 பங்கு)
மகன் (2 பங்கு)
மகள் (1 பங்கு)
மகள் (1 பங்கு)
மொத்தப் பங்கு = 6
4/6
2/6
பங்குபெறும் வழித்தோன்றல்கள்
மகன் (4/6 × 2/3 = 8/18)
மகள் (4/6 × 1/3 = 4/18)
மகன் (2/6 × 2/3 = 4/18)
மகள் (2/6 × 1/3 = 2/18)

(2) ஒரு முசுலிம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவர்களைப் போன்ற வழித்தோன்றல்களை விட்டுச் சென்றால், அவர்களுக்குக் கிடைக்கும் பங்குகளாவன :

இறந்தவர்

(1ஆம் தலைமுறை) மகள் | மகள்

2ஆம் தலைமுறை ஆண் பெண் வேறுபாடு } மகன் | மகள்

(2 குழந்தைகள் இருப்பதால் அவ்விரண்டையும் 2 மகனாகக் கருத வேண்டும். எனவே, 4 பங்கு) $\frac{4}{9}$

2 மகள்கள்
$\frac{4}{9} \times \frac{1}{2}$ = தலா $\frac{4}{18}$ பங்கு

(5 குழந்தைகள் இருப்பதால் 5 மகளாகக் கருதி 5 பங்கு) $\frac{5}{9}$

3 மகன்கள் 6 (ப) + 2 (ப) 2 மகள்கள்

$\frac{5}{9} \times \frac{2}{8} = \frac{10}{72}$ தலா

$\frac{5}{9} \times \frac{1}{8}$ = தலா $\frac{5}{72}$ பங்கு

முதன் முதலில் இரண்டாம் தலைமுறையில் ஆண் பெண் பாகுபாடு எழுகிறது. அதில் ஓர் ஆணும் ஒரு பெண்ணும் இருக்கின்றனர். மகளின் மகனுக்கு 2 ஆண்களின் பங்கு தரப்பட வேண்டும். ஏனெனில், அவருக்கு 2 வழித் தோன்றல்கள் (ஆண் பெண் என்று பார்க்கத் தேவையில்லை) இருக்கின்றனர். எனவே, அவர் 2 ஆணின் விகிதமான 4 பங்கைப் பெறுகிறார். அதே சமயத்தில், மகளின் மகள் 5 வழித் தோன்றல்களை [(3 ஆணும் 2 பெண்ணும்) ஆண் பெண் என்று பார்க்கத் தேவையில்லை] விட்டுச் சென்றிருக்கிறாள். எனவே, அவளுக்கு 5 பெண் களுக்குரிய பங்கு தரப்பட வேண்டும். (மூதாதையர்கள் ஒன்றுக்கு மேற்பட்டு வழித் தோன்றல்களை விட்டுச் சென்றிருப்பதால் இவ் விதி பயன்படுத்தப்படுகிறது.) ஆகவே, அவர்கள் இருவரின் பங்கும் முறையே $\frac{4}{9}$, $\frac{5}{9}$ ஆகும். அவர்களுடைய வழித் தோன்றல்களுக்கு முறையே பங்கு பிரித்துத் தரப்படவேண்டும். வழித் தோன்றல்களில் ஆண் பெண் பாகுபாடு காணப்பட்டால், 2 : 1 என்ற விகிதத்தில் அவர்க ளுடைய மூதாதையரின் சொத்தில் பங்கு பெறுவர்.

இதைப் போன்றே, சகோதரர்களுடையவும் சகோதரிகளுடையவும் வழித்தோன்றல்களிடையேயும் சொத்தைப் பங்கு பிரித்துக் கொடுக்கும்

பொழுது, ஒவ்வொருவருக்கும் அவரவருடைய பங்குபெறும் வழித் தோன்றல்களைக் கணக்கிட்டு, மொத்த வழித்தோன்றல்களின் எண்ணிக்கைப்படி மூதாதையரைக் கருதிப் பங்கு கொடுத்து, மொத்தப் பங்கைக் கணக்கிட்டு, அதை வழித்தோன்றல்களிடையே விகிதப்படி பிரித்துக் கொடுக்கவேண்டும். ஆனால், ஆணுக்கு 2 பங்கு, பெண்ணுக்கு 1 பங்கு என்ற விகிதம் தாய்வழிச் சகோதரனின் வழித்தோன்றல் களுக்கும், தாய்வழிச் சகோதரியின் வழித்தோன்றல்களுக்கும் பொருந்தாது.

மேற் குறிப்பிட்டபடி தூரத்து உறவினரிடையே பங்கு பிரித்துக் கொடுப்பதென்பது, அபூஹனீபாவின் மாணுக்கரான, இமாம் முஹம்மது அவர்கள் வகுத்த விதிமுறையை அடிப்படையாகக் கொண்டதாகும். தூரத்து உறவினர்களிடையே பங்கு பிரித்துக் கொடுப்பதில், இமாம் முஹம்மது வகுத்த விதிமுறையும், மற்றொரு மாணுக்கரான அபூயூசுபு வகுத்த விதிமுறையும் பெருமளவு வேறுபட்டுச் செல்கின்றன. இமாம் முஹம்மது அவர்களின் விதிமுறைப்படி, இடைப்பட்ட மூதாதையரில் ஆண் பெண் பாகுபாடு எழும்பொழுதும், உடன் பிறந்தவர்கள் தந்தை வழி — தாய்வழிப் பிறந்தவர்கள் என்ற வித்தியாசம் எழும்பொழுதும், வேறுபாறு காட்டப்பட்டுப் பங்கு பிரிக்கப்படுகின்றது. ஆனால், அபூயூசுபின் கருத்துப்படி, இடைப்பட்ட மூதாதையர் ஆண் பெண் என்று வேறுபட்டாலும், உடன் பிறந்தவர், தந்தைவழி தாய்வழித் தொடர்புடையவர் என்று வித்தியாசப்பட்டாலும், வேறுபாடு காட்டப்பட வேண்டியதில்லை; அவ்விதம் வேறுபட்டோ பாகுபட்டோ இடைப்பட்ட மூதாதையர் இருந்தாலும், வேறுபடுத்திப் பங்கு பிரிக்கப்பட வேண்டிய தில்லை. அவருடைய கருத்துப்படி, இறுதியாகப் பங்கு கோரும் வழித் தோன்றல்களின் பாகுபாட்டை அடிப்படையாக வைத்தே பங்கு பிரித்துக் கொடுக்கவேண்டும். சுருங்கச் சொன்னால், பங்கு கோரும் வழித்தோன்றல்களிடையே, தலைவிகித இறக்கத்தை (Succession per *Capita*) அனுசரித்துப் பங்கு பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும். மேலும், உடன்பிறந்த சகோதரனின் வழித்தோன்றல்களும், உடன் பிறந்த சகோதரியின் வழித்தோன்றல்களும் தந்தைவழிச் சகோதரனின் வழித் தோன்றல்களையும், தந்தைவழிச் சகோதரியின் வழித்தோன்றல் களையும் பங்குபெறாது தள்ளி விடுகின்றனர். அதேபோல், தந்தை வழிச் சகோதரனின் வழித்தோன்றல்களும் தந்தைவழிச் சகோதரியின் வழித் தோன்றல்களும், தாய்வழிச் சகோதரனின் வழித் தோன்றல்களையும் தாய்வழிச் சகோதரியின் வழித்தோன்றல்களையும் பங்கு பெறமுடியாது தள்ளிவிடுகின்றனர். எனவே, 3-ஆவது வகுப்பில் கூறப்பட்ட தூரத்து உறவினர்கள் இடைப்பட்ட மூதாதையராய் இரத்தத் தொடர்பில் வித்தி யாசப்பட்டு நிற்கும்பொழுது, வழித் தோன்றல்களின் பங்குகளில் இரு இமாம்களின் கருத்துக்களும் வேறுபடுகின்றன.

இந்த இரு இமாம்களின் விதிமுறைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, இமாம் அபூயூசுபின் விதிமுறை எளிதானதாகவும், குழப்ப மில்லாததாகவும் இருக்கிறது; அதே சமயத்தில், இமாம் முஹம்மதின் விதிமுறை கடினமானதாகவும், சிக்கலில் இறக்கிவிடுவதாகவும் இருக்கிறது. எனினும், இமாம் முஹம்மது வகுத்த கடின முறையையே இந்தியாவில் உள்ள முசுலிம்கள் பின்பற்றி வருகின்றனர். ஏனென்றால், இமாம் அபூயூசுபின் விதிமுறையைவிட, இமாம் முஹம்மதின் விதி முறைக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

'ஷியா' சொத்துரிமை இறக்கச் சட்டம் (Shia Law of Inheritance)

ஷியா சட்டப்படி சொத்துரிமைபெறும் வாரிசுகளைப் பின்வரும் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்: (1) இரத்தத் தொடர்புடைய வாரிசுகள் (Heirs by Consanguinity). (2) சிறப்புக் காரணங்களால் உரிமை பெறும் வாரிசுகள் (Heirs by Special Cause). இவர்களில், சிறப்புக் காரணங்களால் உரிமைபெறும் வாரிசுகளை இரு வகுப்பினராகப் பிரிக் கலாம்: (a) திருமணத்தின் மூலமாய் வாரிசுரிமை பெறுபவர்கள் (கணவன், மனைவி); (b) விசேஷ உறவு ஏற்படுத்திக் கொண்டதன் மூலம் வாரிசுரிமை பெறுபவர்கள். இவருள் (b) வகுப்பினரான, விசேஷ உறவு ஏற்படுத்திக் கொண்டதன் மூலம் வாரிசுரிமை பெறுபவர்கள் இந்தியாவில் வாரிசுகளாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இவர்கள், அடிமையை விடுதலையாக்குவதன் மூலமும், பிணை நிற்பதன் மூலமும் (Emancipation and Suretyship), சமய வழிகாட்டியாய் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் மூலமும் (Spiritual Headship), இறந்தவரோடு வாரிசு உரிமை ஏற்படுத்திக்கொண்டவர்களாவர். இவர்கள் இந்தியாவில் வாரிசுகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர் ஆகார்.

இரத்தத் தொடர்புடைய வாரிசுகளைக் கீழ்வரும் மூன்று வகுப்பினர் களாகப் பிரிக்கலாம்:

I. முதல் வகுப்பினர்

பிரிவு:

(i) தாய், தந்தையர்.

(ii) பெற்றெடுத்த குழந்தைகளும், அவர்களுடைய நேர்வழித் தோன்றல்களும்.

II. இரண்டாவது வகுப்பினர்

பிரிவு:

(i) பாட்டனும் பாட்டியும், அல்லது தாய்ப்பாட்டனும், தாய்ப் பாட்டியும் (எ. த. மு. செ.)

(ii) சகோதரனும், சகோதரியும், அவர்களுடைய வழித்தோன்றல்களும் (எ. த. பி. செ.)

III. மூன்ருவது வகுப்பினர்

பிரிவு :

(i) தந்தையின் சகோதரனும், தந்தையின் சகோதரியும், அவர்களின் பெற்ருேர்களின் பெற்ருேர்களும் (எ. த. மு. செ.), அவர்களின் வழித்தோன்றல்களும் (எ. த. பி. செ.)

(ii) தாயின் சகோதரனும், தாயின் சகோதரியும் அவர்களின் பெற்ருேர்களும், அவர்களின் பெற்ருேர்களின் பெற்ருேர்களும் (எ. த. பி. செ.)

(1) மேலே கூறப்பட்ட இரத்தத் தொடர்புடைய வாரிசுகளில், முதல் வகுப்பினர் பங்கு பெறும்பொழுது இரண்டாவது வகுப்பினரையும், முதல் வகுப்பினர் இல்லாமற்போய் இரண்டாவது வகுப்பினர் பங்கு பெறும்பொழுது மூன்ருவது வகுப்பினரையும் முறையே பங்கு பெருது தள்ளிவிடுவர்.

(2) ஒவ்வொரு வகுப்பினரின் உள்ளடக்கமாகக் கூறப்பட்ட (i) (ii) பிரிவினரும், ஒருசேரப் பங்கு பெறுவர். ஒவ்வொரு பிரிவிலும், இறந்தவருக்கு நெருங்கி நிற்பவர்கள் அகன்று நிற்பவரைப் பங்குபெருது தள்ளிவிடுவர்.

(3) பங்குதாரர்களின் பங்கைத் திட்டவட்டமாகக் கூறுதற் பொருட்டு, 'பங்குதாரர்கள்' என்றும் 'எச்சதாரர்கள்' என்றும் வாரிசுகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். பங்குதாரர்களின் திட்டவட்டமான பங்குகள் என்ன என்பன பின் பக்கங்களின் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. பங்குதாரராய்க் குறிப்பிடப்பட்ட பங்கைப் பெற முடியாதவர்கள் எச்சதாரர்களாவர். ஹனபி சட்டத்தில் உள்ளதைப் போல், 'தூரத்து உறவினர்' (Distant Kindred) என்ற மூன்ருவது பிரிவு ஷீயா சட்டத்தில் கிடையாது.

(4) கணவனே அல்லது மனைவியோ இருந்தால், இவர் இறந்தவரின் சொத்தில் பங்கு பெருது தள்ளப்படமாட்டார். இவர் இறந்தவரின் இரத்தத் தொடர்பால் நெருங்கி நிற்கும் உறவினருடன் சேர்ந்து பங்கு பெறுவார். கணவனின் பங்கு $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$, மனைவியின் பங்கு $\frac{1}{8}$ அல்லது $\frac{1}{4}$ ஆகும். பங்கு பெறும் விதிகளை அட்டவணையில் காண்க.

(5) வாரிசுகள் கிளை விகித இறக்க முறைப்படி (*Per Stirpes*) பங்கு பெறுவர்.

அட்டவணை

ஷியா சட்டப்படி பங்குதாரர்களும் — பங்குகளும்

பங்குதாரர்கள்	ஒருவராய் இருந்தால் பங்கு	இருவராகவோ அதற்கு மேற் பட்டோ இருந் தால் பங்கு	பங்கு பெறுவதற்குள்ள நிபந்தனைகள்	விசேஷ காரணங்களால் பங்கு வேறுபாடு
1. கணவன்	$\frac{1}{4}$	—	இறந்தவரின் நேர்வழித் தோன்றல் இருந்தால்	$\frac{1}{2}$ அவ்வித நேர்வழித் தோன்றல் இல்லாதபோது
2. மனைவி	$\frac{1}{8}$	$\frac{1}{8}$	நேர்வழித் தோன்றல் இருக்கும் பொழுது	$\frac{1}{4}$ அவ்வித நேர்வழித் தோன்றல் இல்லாதபோது
3. மகள்	$\frac{1}{2}$	$\frac{2}{3}$	மகன் இல்லாத போது	R = மகனோடு இவள் எச்சதாரியாய்ப் பங்கு பெறுவாள்.
4. தந்தை	$\frac{1}{6}$	—	நேர்வழித் தோன்றல் இருக்கும் பொழுது	R = நேர்வழித் தோன்றல் இல்லாதபோது எச்சதாரராய் எஞ்சியதைப் பெறுவார்.
5. தாய்	$\frac{1}{6}$	—	(a) நேர்வழித் தோன்றல் இருக்கும்பொழுதோ, அல்லது (b) இரண்டல்லது, இரண்டிற்கு மேற்பட்ட உடன் பிறந்த	

			சகோதரர்களோ அல்லது தந்தைவழிச் சகோதரர்களோ இருந்தாலோ, அல்லது அவ்விதமான ஒரு சகோதரனும் அவ்விதமான இரு சகோதரிகளும் சேர்ந்திருந்தாலோ, அல்லது அவ்விதமான நான்கு சகோதரிகள் இருக்கும் பொழுதோ அதாவது, (i) 2 அல்லது 2க்கு மேற்பட்ட உ. பி. சகோதரன். அல்லது (ii) 2 அல்லது 2க்கு மேற்பட்ட த. வ. சன். அல்லது (iii) 1 உ.பி. சன். + 2 உ.பி.சரி. அல்லது 2 த.வ.சரி. அல்லது (iv) 1 த.வ. சன். + 2 உ.பி.சரி. அல்லது 2 த.வ.சரி. (v) 4 உ.பி.சரி. (vi) 4 த.வ.சரி.	$\frac{1}{3}$ (a), (b)ல் கூறப்படாத மற்றச் சந்தர்ப்பங்களில்
6. தாய்வழிச் சகோதரன்	$\frac{1}{6}$	$\frac{1}{3}$	பெற்றோர்களோ, நேர்வழித் தோன்றல்களோ இல்லாதிருந்தால்.	
7. தாய்வழிச் சகோதரி	$\frac{1}{6}$	$\frac{1}{3}$	பெற்றோர்களோ, நேர்வழித் தோன்றல்களோ இல்லாதிருந்தால்.	

பங்குதாரர்கள்	ஒருவராய் இருந்தால் பங்கு	இருவராகவோ அதற்கு மேற்பட்டோ இருந்தால் பங்கு	பங்கு பெறுவதற்குள்ள நிபந்தனைகள்	விசேஷ காரணங்களால் பங்கு வேறுபாடு
8. உடன் பிறந்த சகோதரி	$\frac{1}{2}$	$\frac{2}{3}$	பெற்ருேர்களோ, நேர்வழித் தோன்றல்களோ, உடன் பிறந்த சகோதரனோ, தந்தையின் தந்தையோ இல்லாதிருந்தால்.	R = உடன் பிறந்த சகோதரனோடும், தந்தையின் தந்தையோடும், எச்சதாரியாய் எஞ்சியதைப் பெறுவாள்.
9. தந்தைவழிச் சகோதரி	$\frac{1}{2}$	$\frac{2}{3}$	பெற்ருேர்களோ, நேர்வழித் தோன்றல்களோ, உடன் பிறந்த சகோதரனோ, உடன் பிறந்த சகோதரியோ, தந்தைவழிச் சகோதரனோ, தந்தையின் தந்தையோ இல்லாதிருந்தால்.	R = தந்தைவழிச் சகோதரனோடும், தந்தையின் தந்தையோடும், எச்சதாரியாய் எஞ்சியதைப் பெறுவாள்.

உ.பி.சன். = உடன் பிறந்த சகோதரன். உ.பி.சரி. = உடன் பிறந்த சகோதரி. த.வ.சன். = தந்தைவழிச் சகோதரன். த.வ. சரி. = தந்தைவழிச் சகோதரி. R = எச்சதாரர் (அல்லது எச்சதாரி)

குறிப்பு : பங்குதாரர்களின் நேர்வழித் தோன்றல்கள் எ.த.பி.செ., பங்குதாரர்களாகப் பங்கு பெறுவர். 9 பங்குதாரர்களில் 4 பேர் எச்சதாரர்களாக, சில சந்தர்ப்பங்களில் பங்கு பெறுகின்றனர். ஆண் 2 பங்கு வீதமும், பெண் ஒரு பங்கு வீதமும் பெறுவர்.

விளக்கம் :

(1) ஒரு ஷீயா முசுலிம் பின்கண்ட வாரிசுகளை விட்டுச் சென்றால், அவர்களுக்குரிய பங்குகளாவன :

கணவன் = $\frac{1}{2}$ (பங்குதாரர்)
தாய் = $\frac{1}{3}$ (பங்குதாரர்)
தந்தை = $\frac{1}{6}$ (எச்சதாரர்)

ஆனால், சுன்னீ சட்டப்படி, பங்கு வேறுபடும். கணவன் $\frac{1}{2}$ பங்கும், தாய் ($\frac{1}{2}$ பங்கில் $\frac{1}{3}$ ஆகிய) $\frac{1}{6}$ம், தந்தை $\frac{1}{3}$ பங்கும் பெறுவர்.

(2) ஒரு ஷீயா முசுலிம் பின்கண்ட வாரிசுகளை விட்டுச் சென்றால், அவர்களுக்குரிய பங்குகளாவன :

மனைவி = $\frac{1}{4}$ (பங்குதாரி)
தாய் = $\frac{1}{3}$ (பங்குதாரர்)
தந்தை = $\frac{5}{12}$ (எச்சதாரர்)

ஆனால், சுன்னீ சட்டப்படி, மனைவி $\frac{1}{4}$ பங்கும், தாய் ($\frac{1}{3}\times\frac{3}{4}=$) $\frac{1}{4}$ பங்கும், தந்தை மீதியான $\frac{1}{2}$ பங்கும் பெறுவார்.

(3) ஒரு ஷீயா முசுலிம் பின்கண்ட பங்குதாரர்களை விட்டுச் சென்றால், அவர்களுக்குரிய பங்குகளாவன :

தந்தை = $\frac{1}{6}$ (பங்குதாரர்)
தாய் = $\frac{1}{6}$ (பங்குதாரர்)
மகன் = $\frac{2}{3}$ (எச்சதாரர்)

(4) தந்தை = $\frac{1}{6}$
தாய் = $\frac{1}{6}$
மகனின் மகன் = $\frac{2}{3}$

(5) தந்தை = $\frac{1}{6}$
தாய் = $\frac{1}{6}$
2 மகள்கள் = $\frac{2}{3}$

(6) தந்தை = $\frac{1}{6}$
தாய் = $\frac{1}{6}$
மகளின் மகன் = $\frac{2}{3}$

சுன்னீ சட்டப்படி, மகளின் மகன் தூரத்து உறவினனாவான்.

(7) தந்தை = $\frac{1}{6}$
தாய் = $\frac{1}{6}$
மகளின் மகள்கள் = $\frac{2}{3}$

சுன்னீ சட்டப்படி, மகளின் மகள்கள் தூரத்து உறவினர் ஆவர்.

ஷியா சட்டத்தில் ஏற்றவிதிக் கொள்கை (Doctrine of Increase Under Shia Law)

ஹனபி சட்டத்தில் கூறப்பட்டுள்ள ஏற்றவிதிக் கொள்கை (அவுல்) ஷியா சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஷியா சட்டப்படி, பின்னத்தின் மேலிலக்கக் கூட்டுத் தொகையும் கீழ் இலக்கக் கூட்டுத் தொகையும் சமமில்லாமல் பங்கு அதிகமாயிருந்தால்,பின்னத்தின் மிஞ்சி யிருக்கும் பங்கைக் கீழ்க் குறிப்பிடப்பட்ட வாரிசுகளின் பங்குகளில் இருந்து குறைத்துவிட வேண்டும் :

(a) மகள் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மகள்களின் பங்குகளி லிருந்து மட்டிலும் குறைத்து விடவேண்டும்.

அல்லது

(b) உடன் பிறந்த சகோதரி அல்லது சகோதரிகளின் பங்கி லிருந்தோ அல்லது தந்தைவழிச் சகோதரி அல்லது சகோதரிகளின் பங்கிலிருந்தோ குறைக்கவேண்டும்.

விளக்கம் : ஒரு ஷியா முசுலிம் பின்வரும் வாரிசுகளை விட்டுச் சென்றால், அவர்களுக்குரிய பங்குகளாவன :

(1)	கணவன்	$\frac{1}{4} = \frac{3}{12}$	$= \frac{3}{12}$
	மகள்	$\frac{1}{2} = \frac{6}{12} - \frac{1}{12}$	$= \frac{5}{12}$
	தந்தை	$\frac{1}{6} = \frac{2}{12}$	$= \frac{2}{12}$
	தாய்	$\frac{1}{6} = \frac{2}{12}$	$= \frac{2}{12}$
		$\frac{13}{12}$	$\frac{12}{12}$

இதில் அதிகமாயிருக்கும் $\frac{1}{12}$ பங்கும் மகளின் மொத்தப் பங்கிலிருந்து கழிக்கப்பட்டிருக்கிறது ($\frac{6}{12} - \frac{1}{12} = \frac{5}{12}$)

ஷியா சட்டத்தில் இறக்கவிதிக் கொள்கை (Doctrine of Return Under Shia Law)

ஒரே வகுப்பாரிடையே, பங்குதாரர்களுக்குப் பங்கு கொடுத்தது போக எஞ்சியதைப் பெற எச்சதாரர்கள் இல்லையென்றால், ஷியா சட்டத்தில், கீழ்வரும் விதிகளுக்குட்பட்டு, இறக்கவிதிக் கொள்கை (ரத்து) பயன்படுத்தப்படும் :

(a) கணவன் – மனைவி

இறந்தவருக்கு வேறு வாரிசுகள் இருந்தால், கணவனோ அல்லது மனைவியோ இறக்கவிதியைப் பயன்படுத்தி, அதிகப் பங்கு பெற முடியாது. ஆனால், இறந்தவருக்குக் கணவன் மட்டிலுமே வாரிசாக இருந்தால், இறக்கவிதி பயன்படுத்தப்பட்டு, இவர் மிஞ்சியிருப்பதை

அடைய உரிமை பெற்றவராவார். மனைவி மட்டுமே இறந்தவருக்கு வாரிசாக இருந்தாலும், இறக்கவிதி பயன்படுத்தப்பட்டு, இவளுடைய கூடுதல் பங்கான $\frac{1}{4}$ பங்கிற்கு மேல் எஞ்சியிருப்பதைப் பெற இவள் உரிமையற்றவளாவாள். $\frac{1}{4}$ பங்கு போக மிஞ்சியிருப்பது அரசுறு பொருளாக அரசாங்கத்தைப் போய்ச் சேரும்.

(b) தாய்

கீழ்க் குறிப்பிடப்படும் வாரிசுகள் இறந்தவருக்கு இருந்தால், இறக்கவிதி பயன்படுத்தப்பட்டு, தாய் கூடுதல் பங்குபெற முடியாது :

தந்தையும் ஒரு மகளும் இறந்தவருக்கு இருந்து, அவர்களோடு (i) இரண்டல்லது இரண்டிற்கு மேற்பட்ட உடன் பிறந்த சகோதரர் களும் அல்லது தந்தைவழிச் சகோதரிகளும், அல்லது (ii) அவ்வித மான ஒரு சகோதரனும் அவ்விதமான இரு சகோதரிகளும், அல்லது (iii) அவ்விதமான நான்கு சகோதரிகளும் இருந்தால், இறக்கவிதி படுத்தப்பட்டு, அதிகம் பங்கு பெறுவதினின்றும் தாய் தள்ளப்படுவாள்.

(c) தாய்வழிச் சகோதரரும் தாய்வழிச் சகோதரிகளும்

உடன் பிறந்த சகோதரிகள் உடன் வாழ்ந்தால், தாய்வழிச் சகோதரனும் தாய்வழிச் சகோதரியும், இறக்கவிதி பயன்படுத்தப்பட்டு, பங்கு அதிகம் பெறுவதினின்றும் தள்ளப்படுவர். ஆனால், உடன் பிறந்த சகோதரிகள் இல்லாது, தந்தைவழிச் சகோதரிகள் மட்டும் இருந்தால், அவர்களோடு, தாய்வழிச் சகோதரர்களும் தாய்வழிச் சகோ தரிகளும் அவரவரின் பங்கு விகிதத்திற்கேற்ப, இறக்கவிதி பயன் படுத்தப்பட்டு, பங்கு அதிகம் பெறுவர்.

விளக்கம்: ஒரு ஷியா முசுலிம் பின்கண்ட வாரிசுகளை விட்டுச் சென்றால், அவர்களுக்குரிய பங்குகளாவன :

(1) கணவன் $= \frac{1}{4}$ $= \frac{4}{16}$

இறக்க விதியால் பங்கு அதிகரிப்பு

தந்தை $= \frac{1}{6}$ } $\frac{1}{4} \times \frac{3}{4}$ $= \frac{3}{16}$
மகள் $\frac{1}{2} = \frac{3}{6}$ } $\frac{3}{4} \times \frac{3}{4}$ $= \frac{9}{16}$

(2) தாய் $= \frac{1}{6}$ தாய், தந்தை, ஒரு மகள் உடன் 2 சகோ தரிகள் இருப்பதால் பங்கு அதிகரிக்காது $= \frac{4}{24}$

தந்தை $= \frac{1}{6}$ } $\frac{1}{4} \times \frac{5}{6}$ $= \frac{5}{24}$
மகள் $\frac{1}{2} = \frac{3}{6}$ } $\frac{3}{4} \times \frac{5}{6}$ $= \frac{15}{24}$

2 உ. பி. சகோதரிகள் $=0$—(பங்கின்றித்தள்ளப்பட்டனர்— 2ஆவது வகுப்பார்)

(3) தந்தைவழிச் சகோதரி $= \frac{1}{6}$
தாய்வழிச் சகோதரி $= \frac{1}{2}$ பங்கர் $+ \frac{1}{3}$ (இறக்க விதியால்) $= \frac{5}{6}$

13. அண்டைச் சொத்தில் முற்படு விலைகொள் உரிமை அல்லது ஷுஃபா

(Pre - emption or Shufaa)

ஒரு சொத்து வேறு ஒரு மூன்றுவது நபருக்கு விற்கப்பட்டால், அதனுடைய அண்டைச் சொத்துக்காரர், அதே சொத்தை அதே விலைக்குத் தனக்குத் தருமாறு கேட்கும் உரிமை பெற்றவராவார். இந்த உரிமை, இசுலாமிய விற்பனைச் சட்டத்தில், 'அண்டைச் சொத்தில் முற்படு விலைகொள் உரிமை' என்றழைக்கப்படுகிறது. இசுலாமிய விற்பனைச் சட்டம் இந்தியாவில் முழுமையாக நீக்கப்பட்டு விட்ட போதிலும், சில மாநிலங்களில் இந்த உரிமை அண்டைச் சொத்துக் காரர்களுக்கு அளிக்கப்படுகிறது. அண்டைச் சொத்தில் சொத்துரிமை பெற்றிருக்கும் காரணத்தால், விற்கப்பட்ட அண்டைச் சொத்தை, விற்கப்பட்ட அதே விலைக்கே தனக்குத் தருமாறு கேட்கும் உரிமையை இசுலாமிய சட்டம் அனுமதிக்கிறது. இந்தியாவில் இந்த உரிமை பொதுச்சட்டமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை யாதலால், சில மாநிலங் களிலுள்ள உயர்நீதிமன்றங்கள், சொத்தை விற்றவரும், அதை வாங்கி யவரும், அண்டைச் சொத்தில் முற்படு விலைகொள் உரிமை கோரு பவரும் முசுலிம்களாக இருந்தாலும், இந்த உரிமையை வழங்குவதில்லை. ஆனால், சில மாநிலங்களிலுள்ள நீதிமன்றங்கள் நீதி, நியாய, நேர்மை மனச்சாட்சி அடிப்படையில் இந்த உரிமையை முசுலிம்களிடையே வழங்கி வருகின்றன. மற்றும் சில மாநில உயர்நீதிமன்றங்கள் இந்தச் சலுகையை முசுலிம்களுக்கு மட்டுமின்றி, எல்லோருக்குமே ஒருசேர வழங்கி வருகின்றன.

தனி நபரிடையே சொத்து மாற்றம் இயல்பாய் நடைபெற முட்டுக் கட்டையாக இருப்பதால், தமிழ்நாட்டு மாநிலத்தில் உள்ள நீதிமன்றங் களில் நீதி, நியாய, நேர்மை, மனச்சாட்சி அடிப்படையில் இந்த உரிமை ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. மஹாராஷ்ட்ர மாநிலத்திலும் இந்த உரிமை அங்கீகரிக்கப்படவில்லை. ஆனால், குஜராத் மாநிலத்தில் இந்துக் களுக்கும் முசுலிம்களுக்கும் இந்த உரிமை ஒருசேர வழங்கப்பட்டு, நீதி

வழங்கப்படுகின்றது. பஞ்சாப் மாநிலத்தில், இயற்றப்பட்ட சட்டத்தின் மூலம் இந்த உரிமைக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் இந்த உரிமை இந்துக்களுக்கும் முசுலிம்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றது.

ஹனபி சட்டப்படி, கீழ்க் குறிப்பிடப்பட்டவர்கள் அண்டைச் சொத்தில் முற்படு விலைகொள் உரிமை பெறத் தகுதியுடையவர்களாவர் :

(1) ஒரே சொத்தில் உடன் பங்குதாரராய் (Co-Sharer) இருப்பவர்கள்.

(2) காலாகாலமாக, அண்டைச் சொத்தில் பயனுரிமை அனுபவித்து வருபவர்கள். எ - டு. அண்டைச் சொத்தில் உள்ள நடைபாதையைப் பயன்படுத்தி வருபவர்கள்.

(3) அண்டைச் சொத்தின் முழுச் சொத்துரிமையாளர்கள்.

இம் மூன்று பிரிவாரும் ஒருவர் பின் ஒருவராய் அடுத்தடுத்து வரிசையாய் உரிமை பெறத் தகுதியுடையவர்களாவர். இதில் ஒரே பிரிவில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருந்தால், அவர்கள் சமமாய்ப் பங்கு பெற உரிமையுடையவர்களாவர்.

மூன்றாவதாகக் கூறப்பட்ட பிரிவு அனைத்துச் சொத்திற்கும் பொருந்தாது. ஜமீன்தாரி நிலம், எஸ்டேட் போன்ற பெருவாரியான நிலங்களுக்கு இதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. நிலையியல் சொத்துக்களின்மீது மட்டுமே இந்த உரிமை கோர முடியுமே தவிர, அசைவியல் சொத்துக்களில் இந்த உரிமையைக் கோர முடியாது. அண்டைச் சொத்து விற்கப்பட்டாலன்றி, இந்த உரிமை (அண்டைச் சொத்து முற்படு விலைகொள் உரிமை) கோருபவருக்கு எழாது. அண்டைச் சொத்து விற்கப்பட்டு, அதை வேறொருவர் வாங்கிய பின்னரே, இந்த உரிமை எழுகின்றது. சொத்தை விற்றவரும், அண்டைச் சொத்தில் முற்படு விலைகொள் உரிமை கோருபவரும் முசுலிமாயிருக்க வேண்டும் என்பதில் நீதிமன்றங்களிடையே கருத்து வேற்றுமை காணப்படுகின்றது.

அண்டைச் சொத்தில் முற்படுவிலைகொள் உரிமை கோருபவர், முதல் தடவையாக உடனடியாக உரிமை கோர வேண்டும். காலதாமதம் சாலவும் தீது. அண்டைச் சொத்தை விலை கொடுத்து வாங்கியிருப்பவர்கள் பலராயிருப்பின், ஒரு முசுலிம் தான் அண்டைச் சொத்து முற்படு விலைகொள் உரிமையின் காரணமாய் விலை தரத் தயார் என்பதை எல்லோருக்கும் தெரிவிக்க வேண்டும். கடிதம் மூலமாகவும் தெரிவிக்கலாம்.

இரண்டு சாட்சிகள் முன்னிலையில், விற்றவரிடமோ, வாங்கிய வரிடமோ அல்லது விற்கப்பட்ட சொத்திலிருந்தோ அவர் இந்த உரிமை யைக் கோரவேண்டும். முதல் தடவையாகக் கேட்டுக் கிடைக்கவில்லை யானால், இரண்டாவது முறையும் கேட்கவேண்டும். இரு முறை கேட்டும் கிடைக்கவில்லையானால், மூன்றாவது முறையாக அவர் வழக்குத் தொடர்ந்து நீதி பெற உரிமை பெற்றவராவார்.

மேற்கோள் நூற்பட்டியல்

1. Principles of Mahomedan Law
—*by Sir D. F. Mulla.*

2. Outlines of Muhammadan Law
—*by Asaf A. A. Fyzee.*

3. Mahomedan Law
—*by Ameer Ali.*

4. Moohummudan Law of Inheritance
—*by Baillie.*

5. Muslim Law
—*by Muhsin Thyyibji.*

6. Moohummudan Law of Inheritance
—*by Runnsey.*

7. Digest of Indian Cases
—*by Morley.*

8. Muslim Personal Law
—*by Mohanlal Dayalji Manek.*

கலைச்சொற்கள்

A

Acknowledgment	—	ஒப்புக்கொளல், ஏற்றுக்கொளல்
Actionable claim	—	தொடர்தகு பாத்தியதை
Actual	—	நேரடி
Administration	—	நிர்வாகம்
Administration of Special Oath	—	சிறப்பு ஆணை உறுதி ஏற்றல்
Administrator	—	நிர்வகிப்போர்
Adoption	—	மகவேற்பு
Adultery	—	பிறன்மனை புணர்தல்
Affinity	—	கொள்ளுறவு
Agent	—	ஏஜெண்ட்
Agnate	—	தந்தை வழியினர்
Agreement	—	உடன்பாடு; உடன்படிக்கை
Alienation	—	பராதீனம்
Annuity	—	ஆண்டுப்பணம்
Appropriation	—	ஒதுக்கப்படல்
Areat	—	அரீயத்; கொடை உரிமம்; அனுபவ உரிமைக்கொடை
Ascendant	—	ஏறுமுறை மூதாதையர்
Aul	—	ஏற்றவிதிக் கொள்கை

B

Bailee	—	ஒப்படை ஏற்பவர்
Bailment	—	ஒப்படைவு
Bailor	—	ஒப்படை செய்பவர்
Beneficiary	—	பயன்பெறுபவர்
Bequest	—	உயில்வழிக்கொடை
Breach of Trust	—	நம்பிக்கைத் துரோகம்
Brother	—	சகோதரன்
— Consanguine	—	தந்தைவழிச் சகோதரன்
— Full	—	உடன்பிறந்த சகோதரன்
— Uterine	—	தாய்வழிச் சகோதரன்

C

Caliph — கலீபா (இசுலாமிய நாடுகளின் தலைவர்)

Capacity — தகுதி

Caste Disabilities Removal Act — சாதித் தகவின்மை ஒழிப்புச் சட்டம்

Change — மாற்றம்

Charge — பொருட்பிணைப் பொறுப்பு

Charity — தருமம்

Chose in Action — வழக்குரிமைப் பொருள்

Cognates — உறவு வழியினர்

Collaterals — கிளை வழியினர்

Compensation — இழப்பீடு

Consanguine — தந்தைவழி

Consanguinity — குருதித் தொடர்பு; இரத்தத் தொடர்பு

Consent — இசைவு தெரிவித்தல்

Constructive — கொள்நிலை

Consummation of Marriage — திருமணத்துக்குப்பின் உடலுறவு பூர்த்தியாதல்

Contract — ஒப்பந்தம்

Conviction — தண்டனைத் தீர்ப்பு

Corporeal Property — பருப்பொருள்

Corpus — மூலப்பொருள்

Co-sharer — உடன்பங்குதாரர்

Criminal Procedure Code — குற்றஇயல் நடைமுறைச் சட்டத் தொகுப்பு

Custom — வழக்கம்

D

Dealings — கொடுக்கல் வாங்கல்

Decree — தீர்ப்பாணை

Deed — ஒப்பாவணம்

Degree — ஒரேபடி; சமபடி

Delivery	—	ஒப்படைப்பு
Descendant	—	வழித்தோன்றல்
Disadvantage	—	அனுகூலமின்மை
Dissolution of Marriage	—	திருமண இழப்பு
Distant Kindred	—	தூரத்து உறவினர்
Divorce	—	திருமண முறிவு (தலாக்)
Doctrine of Election	—	தேர்ந்து கொளல் வரைவுக் கோட்பாடு
— — Increase	—	ஏற்றவிதி
— — Return	—	இறக்கவிதி
Domicile	—	நிலையகமாய்க் கொண்டவர்
Dower	—	மஹர்
Dower Debt	—	மஹர்க் கடன்

E

Encumberance	—	வில்லங்கம்
Endorsement	—	மேலெழுத்துச் செய்தல்; மேலெழுத்து வரைதல்
Endowment	—	நிலைக்கட்டளை
Equity	—	நியாயம்
— of Redemption	—	அடைமான மீட்புரிமை
Exchange	—	பரிமாற்றம்
Exclusion	—	தள்ளல்
— Partial	—	அரைகுறைத் தள்ளல்
— Total	—	முழுமைத் தள்ளல்
Executor	—	நிறைவேற்றுளர்
Express	—	வெளிப்படையான

F

Facts	—	பொருண்மை
Fatwa	—	நீதித் தீர்ப்பு, அல்லது பத்வா
Fosterage	—	ஊட்டிவளர்த்த செவிலித்தாய் முறை
Fraudulent	—	வஞ்சனை

G

Gift	— கொடை; ஹிபா
Good Conscience	— நேர்மை மனச்சாட்சி; நேரிய மனச்சாட்சி
Goodwill	— வாணிக நற்பெயர்
Government of India Act	— இந்திய அரசுச் சட்டம்
Government Securities	— அரசாங்கக் கடன் பத்திரங்கள்
Grand-father, False	— தாய்ப்பாட்டன்
— True	— பாட்டன்
Grand-mother, False	— தாய்ப்பாட்டி
— True	— பாட்டி
Guardian	— காப்பாளர்
— *at Litem*	— வழக்கில் காப்பாளர்
— Certified	— நியமனக் காப்பாளர்
— *defacto*	— நிகழ்வுநிலைக் காப்பாளர்
— *dejure*	— சட்டநிலைக் காப்பாளர்
Guardianship	— காப்பாளராதல்

H

Heir Expectant	— எதிர்நோக்கு வாரிசு
Heritable	— மரபுவழி செல்லல்
Hiba	— ஹிபா எனும் கொடை
Hiba-be-Iwaz	— பயன் கொடை
— *Shartul Iwaz*	— பயன் வேண்டிக் கொடை
Homicide	— மரணம் விளைவித்தல்
How high soever	— எத்தனை தலைமுறை முன்சென்றாலும் (எ. த. மு. செ.)
How low soever	— எத்தனை தலைமுறை பின்சென்றாலும் (எ. த. பி. செ.)

I

Iddat	— இத்தா இருத்தல்; தனிமையில் துயர் எண்ணிக் கழித்தல்
Ijma	— ஒருமித்த கருத்து
Illegitimate	— முறையிலா மணப்பிறப்பு

Immovable — நிலையியல்
Implied — உட்கிடையான
Impotency — மலட்டுத் தன்மை; பால் குறைவு பாடு
Incorporeal — நுண்பொருள்
Indian Constitution — இந்திய அரசியலமைப்புச் சட்டம்
Indian Majority Act — இந்திய உரிமை வயது வந்தோர் சட்டம்
Inheritance — வமிச வழிச் சொத்து; பரம்பரைச் சொத்துரிமை இறக்கம்
— Vested — சேர்ந்தடை சொத்துரிமை இறக்கம்
Insolvency — பண நொடி
Institution — அமைப்பு
Instrument — ஆவணம்
Intercourse — உடலுறவு
Inter Vivos — வாழ்வோரிடையே
Intestate Succession — உயிலிலா உரிமை இறக்கம்
Irregular — ஒழுங்கற்ற

J

Jabar — திருமணக் காப்பாளர்
Joint Family — கூட்டுக் குடும்பம்
Judge — நீதிபதி
Jurisdiction — அதிகார வரம்பு
Jurisprudence — சட்ட இயல்
Jurist — சட்ட மேதை
Justice — நீதி

K

Kidnapping — கவர்ந்து செலல்; ஆட்கடத்தல்
Kindred — உறவினர்

L

Legacy — உயில்வழிக் கொடை
Legitimate — முறைமணப் பிறப்பு

Letters of Administration	—	நிர்வாக அதிகாரப் பத்திரம்
Lien	—	பற்றுரிமை
Life Estate	—	ஆயுள் சொத்துரிமை
Limitation	—	வரையறை
Lineal	—	நேர் வழியினர் ; கொடி வழியினர்

M

Mahr	—	மஹர்
— Deferred	—	தாமத மஹர்
— Prompt	—	உரிமை மஹர்
— Proper	—	தகுதி மஹர்
— Specified	—	குறிப்பிட்ட மஹர்
Maintenance	—	வாழ்க்கைப் படி
Major	—	உரிமை வயது எய்தப் பெற்றவன்(ள்)
Maralul Mowth	—	மரணப் பிணி
Marriage	—	திருமணம்
Marumakka Thayam Act	—	மருமக்கள் வழிச் சட்டம்
Maximum	—	மேலளவு
Menses	—	மாதவிடாய் ; தீட்டு
Minimum	—	குறைந்த மட்டம்
Mother	—	தாய்
— Foster	—	செவிலித்தாய்
Movable	—	அசைவியல்
Mushaa	—	பாகம் பிரிக்காத பங்கு
Muslim by Birth	—	பிறவி முசுலிம்
— by Conversion	—	தழுவல் முசுலிம்
Muta	—	முத்ஆ என்னும் தாற்காலிகத் திருமணம்
Mutation of Name	—	பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்தல் (பட்டா மாற்று)
Muthawalli	—	வக்பு சொத்தை மேற்பார்வையிட்டு நிர்வகிப்பவர் (முத்தவல்லி)

N

Nikah — திருமணம்
Negligence — கவனக் குறைவு; கவனமின்மை

O

Oath, Special — சிறப்பு ஆணை
Offerings — காணிக்கைப் பொருள்
Option of Puberty — பருவம் எய்தியோர் விருப்பம் (கியாருல் புலூக்)
Order — ஒழுங்கு முறை
Ownership — சொத்துரிமை

P

Parentage — பெற்றோராதல்
Per Capita — தலைவிகிதம்
Per Stirpes — கிளை விகிதம்
Perpetual — நிரந்தரமான
Personal Law — இனச் சட்டம்
Polyandry — பல்கணவருடைமை
Polygamy — பல மனைவியருடைமை
Possession — உடைமை
Presumption — துணிவு; ஊகம்
Primogeniture — கிளையில் மூத்தோனே தலைவாரிசு
Probate — விருப்புறுதி மெய்ப்பிதழ்
Promissory Note — கடனுறுதிச் சீட்டு
Property — சொத்து; பொருள்
Provision — விதித்துறை
Proviso — கட்டுவாசகம்
Purpose — நோக்கம்

Q

Qiyas — ஒத்த தன்மையுடைய கருத்துக்களிலிருந்து ஊகித்துணரும் முடிவு
Qualified — வரம்புக்குட்பட்ட

R

Radd — இறக்கவிதிக் கொள்கை
Ratification — ஏற்புறுதி
Reasonable — தக்க ; தகுந்த
Regulating Act — ஒழுங்குபடுத்தும் சட்டம்
Remedy — தீர்வழி
Representation — பிரதிநிதித்துவம்
Residuary — எச்சதாரர் (எச்சதாரி)
Residue — எச்சம் ; மிஞ்சியது
Retrospective — முன்மேவு
Revocation — மறுத்தழிப்பு; அழித்தல்
Rule of Exclusion — தள்ளல் விதி

S

Sadakkah — சதக்கா என்னும் ஈகை
Settlement — அறுதியாவணம்
Sexually Inadequate — பால்குறைவுபாட்டுத்தன்மை
Share — பங்கு
Sharer — பங்குதாரர் (பங்குதாரி)
Shariat — 'ஷரீயத்', தர்மம், பூர்ணத்துவத்துக்கு வழி
Shias — 'ஷியா' முசுலிம்கள்
Sister — சகோதரி
— Consanguine — தந்தைவழிச் சகோதரி
— Full — உடன்பிறந்த சகோதரி
— Uterine — தாய்வழிச் சகோதரி
Son — மகன்
— Equal Son's — ஒத்தமகனின் மகன்
— Higher Son's — ஒருபடி முந்திய மகனின் மகன்
— Lower Son's — ஒருபடி பிந்திய மகனின் மகன்
Sound Mind — சித்தம் தெளிந்த
Sources — கருவூலங்கள்
Specific Performance — ஏற்றதை ஆற்றுதல்
Specific Relief Act — குறித்தவகை மாற்றீடு சட்டம்

Speculative	—	துணிச்சலான
Spes Successionis	—	எதிர்நோக்கு இறங்குரிமையர்
State	—	அரசு
Statute	—	இயற்றப்பட்ட சட்டங்கள்
Strength of Blood	—	இரத்தத் தொடர்பின் நெருக்கம்
Succession	—	உரிமை இறக்கம்
Sunna	—	வழிமுறைத் தத்துவம்
Sunnis	—	சுன்னத் ஜமாஅத்தவர் என்னும் சுன்னீ முசுலிம்கள்

T

Talak	—	தலாக் சொல்லித் திருமண முறித்தல்
— *Ahsan*	—	ஒரு முறை தலாக்
— *Bidat*	—	(ஒரே மூச்சில்) முத்தலாக்
— *Hasan*	—	மும்முறை தலாக்
Territorial Law	—	நிலவரை சட்டம்
Trade-mark	—	வாணிகக் குறி
Tradition	—	வழிமுறைத் தத்துவம்
Transfer	—	மாற்றம்
Trespass	—	அத்துமீறல்
Trust	—	பொறுப்புரிமை அமைப்பு

U

Uncle, Maternal	—	தாயின் சகோதரன் (மாமன்)
— Paternal	—	தந்தையின் சகோதரன்
Universal Legatee	—	ஏகபோக உயில் கொடை பெறுபவர்
Unlawful Conjunction	—	சட்ட முரண்பட்ட நெருக்கம்
Unsound Mind	—	சித்தம் கலங்கிய
Unsecured	—	பிணையிலா
Usage	—	வழக்காறு

V

Valid	—	செல்லுபடியான ; செல்லுடைமையாகும்

Validity	—	செல்லுடைமையாக்கும்
Vested Interest	—	சேர்ந்தடை உரிமை இறக்கம்
Vested Remainder	—	எஞ்சுரிமை
Virgin	—	கன்னிப்பெண்
Void	—	இல்லா
Voidable	—	தவிர்தகு

W

Wakf	—	வக்பு
Wakif	—	வக்பு அளிப்பவர்
Widow	—	கைம்பெண் ; விதவை
Widow's Lien	—	விதவைப் பற்றுரிமை
Will	—	உயில் ; வசிய்யத்

பொருட்குறிப்பு அகரவரிசை

(INDEX)

அ

அசபாக்கள் 203

அடிமை ஒழிப்புச் சட்டம் 19

அண்டைச் சொத்தில் முற்படுவிலை கொள் உரிமை 18, 268

—குஜராத் உயர்நீதிமன்றத் தீர்ப்பு 18, 268

—தமிழ்நாடு ,, ,, 18, 268

—பஞ்சாப் ,, ,, 269

—மற்ற மாநில ,, ,, 18, 19, 268

—ஹனபி சட்டம் 269

அநீமுன்னிசா 105

அப்துல் காசிம் அல்தய்யிப் 6

அப்பாஸ் பரம்பரையினர் 5, 7

அபிசீனிய மனைவி 107

அபூயூசுப் (இமாம்கள் பார்க்க)

அபூஹனீபா ,, ,,

அம்ரீ (உம்ரீ) 146

அமீர் அலீ 95

அரீஅத் 130, 157, 158

அல்லாதாதுகான் 105, 106

அவுரங்கஜீப் 14

அவுல் (ஏற்றவிதிக் கொள்கை பார்க்க)

அறுதியாவணம் 33, 136, 137, 158, 159

—ஷீயா 33

அஸ்ஹாபுல் பராயிலு 203

அஹ்மதி 27

—முசுலிம் 28

ஆ

ஆகாகான் 24

ஆகாஹஸன் 30

ஆங்கிலேயர் 15

ஆண் பங்குதாரர் நால்வர் 208

ஆபிரிகா, கிழக்கு 9

,, மேற்கு 8

ஆமிராபீபி 74, 75

ஆலம்கீர் 14, 160

இ

இசுமாயீல் அலீகான் 105

இசுலாத்தில் துறவறமில்லை 34

இசுலாமிய ஆண்டு (ஹிஜ்ரி) 3

இசுலாமிய சட்டங்கள்

—நீதிமன்றங்கள் முழுமையாய் ஏற்றதில்லை 19, 181

இசுலாமிய சட்டத்தில் நாட்டுச் சட்டம் விளைத்த மாற்றம் 18, 19, 202, 203, 223

இசுலாமியர் யார் 26, 28

—தழுவல் முசுலிம் 28

இசுலாமியர் ஷரீயத் சட்டம் 2

—(1937 ஆம்) 2, 18, 20, 21, 22, 23, 24, 25, 26, 96
—வ. மே. எல்லைப்புறம் 23
—(1949 ஆம் சென்னைச் சட்டம்) 20, 21
இத்தா 51, 52, 53, 55, 60, 65, 80, 84, 97, 98, 121
இதுனஅஷரி 5, 6, 7
இந்திய அரசியலமைப்புச் சட்டம் 2, 16, 20
இந்திய அரசு சட்டம் (1915ஆம்) 16
—(1935 ஆம்) 16
இந்திய இறங்குரிமைச் சட்டம் 161, 193
இந்திய ஒப்பந்தச் சட்டம் 18, 56
இந்திய குற்ற இயல் சட்டத் தொகுப்பு 18
இந்திய சான்றியல் சட்டம் 1, 18
இந்தியா மதச்சார்பற்ற நாடு 1
இந்து இறங்குரிமைச் சட்டம் 1
இந்துத் திருமணச் சட்டம் 1
—பன்னிருவர் 5, 6, 7
இமாம்கள் (ஹதீது தொகுத்தோர்)
—இப்னுமாஜா 12
—நஸயீ 12
—புகாரீ 12
—முஸ்லிம் 12
இராக் 9
இராமநாதபுரம் வழக்கு 14
இல்லாத் திருமணம் 43, 46, 47, 55
இறக்கவிதிக் கொள்கை (ரத்து) 238, 239, 240, 241
—ஷீயா 266
இன்சூரன்சு 145
இன்ஜீல் 53
இனச் சட்டம் (தனி இனத்தவர் சட்டம்) 1, 15
இஹ்யத் ஜொஹ்ரா 118
இஜ்மா 9, 12, 13, 14
இஸ்திஹ்ஸான் 13
இஸ்மாயிலீ 5, 6, 7
இஸ்மாயீல் 6

க (சதக்கா) 154, 181
79, 86

உ

மையாது பரம்பரையினர் 190
ல் (வசிய்யத்) 160
—அளிப்பவர் எண்ணம், நோக்கம் 160, 161
—அளிப்பவரின் தகுதி 162, 164, 165
—அழிவு 166, 167
இமாம்கள் (சுன்னீ) 2, 4, 5
—அபூயூசுப் 7, 8, 170, 173, 259, 260
—அபூஹனீபா 5, 7, 171, 172, 259
—மாலிக் 5, 8, 9
—முஹம்மது 7, 170, 173, 259, 260
—ஷாபி 5, 9, 10
—ஹன்பல் 5, 10
இமாம்கள் (ஷீயா)
—இருபத்திருவர் 6

—இலக்கணம் 160
—உச்சவரம்பு மூன்றிலொன்று 162, 163, 165, 174, 193, 196
—உடமை ஒப்படைப்பு 161, 163, 164
—எழுத்துமூலம் 161, 194
—கருத்துத் தெளிவு அவசியம் 162
—கையொப்பம் அவசியமில்லை 161
—கொடைக்கும் இதற்கும் வேற்றுமை 163
—செல்லாதது 164, 165
—தற்கொலை செய்பவர் எழுதுவது 162
—முழுச் சொத்தை எழுதுவது 24, 164, 174, 204
—வக்பு 174
—வரம்புகள் 162
—வாரிசல்லாதவர் வாரிசாவது 164
—வாரிசுகளின் இசைவு 163, 164, 165, 166
—வாரிசுகளுக்கில்லை 162, 164
—வாய்மூலம் 161
—விளக்கம் 160
—ஷியா சட்டம் 167
—ஷியா-சுன்னீ வேறுபாடு 167, 168
உயில்வழி உரிமை இறக்கம் 20
உயில்வழிக் கொடை 20
உயில்வழிக் கொடை பெற்றவர் 160, 167
—சொத்துரிமை 25
—வாரிசுகளுக்கில்லை 162, 164
—ஷியா சட்டம் 167
உயிலிணைப்பு 162
உயிலிலா உரிமை இறக்கம் 22, 23, 25
உரிமை இயல் 15
—சென்னைச் சட்டம் 17
உரிமை வயதுவந்தோர் 28
—சட்டம் 19

எ

எகிப்து 8, 9
எச்சதாரர் (வாரிசுகள் பார்க்க)
—பெண்கள் நால்வர் 251, 252
—பொதுவிதி 247
—முக்கியவிதி 247
எமன் நாடு 13

ஏ

ஏற்றவிதிக் கொள்கை (அவுல்) 237, 238
—ஷியா 266

ஐ

ஐந்தாவது மனைவி 49, 50

ஒ

ஒப்பந்த இறங்குரிமை 203
ஒப்புதல் தத்துவம் 103, 104, 105, 106, 107
ஒரே மனைவியுடன் வாழ நிபந்தனை 50
ஒழுங்குபடுத்தும் சட்டம் (பம்பாய், 1827 ஆம்) 17

க

கச்சி மேமன்கள் 25
கணவன் (வாரிசுகள் பார்க்க)
—கடமைகள் 59, 121
—மனைவியுடன் மஹர் உடன்படிக்கை 50

—மனைவியுடைய சொத்தைக் கவர்தல் 85
கப்ருஸ்தான் 191
கம்பட்டா 32
கருச் சிசுவுக்கு உயில் 164, 167
—கொடை 143, 145
கருவில் சிசு வளரும் காலம் 100, 102, 103, 106
—சுன்னீ சட்டப்படி 101, 102
—ஷீயா சட்டப்படி 101, 102
கலீபாக்கள் 2, 3, 4, 90
—அபூபக்கர் 3, 4
—அலீ 4, 6
—உதுமான் 3, 4
—உமர் 3, 4
கலைச் சொற்கள் 272—281

கா

காங்க்கா 189
காதியான் 27
காப்பாளர்
—காப்பிலுள்ளோர் சட்டம் 109, 110
—காப்பிலுள்ளோர் சார்பாய்க் கொடை பெறல் 137
—குழந்தைகளுக்கு 111, 113 (ஷி ஷீயா சட்டம்) 113
—சட்டநிலை 114, 115, 116
—சொத்துக். 109, 114
—தகுதி 38, 39, 44, 109
—தந்தையின் நிலை 112, 123, 137, 138
—தாய் 111, 112, 113, 118, 119 (,, பற்றித் தவறுன தீர்ப்புகள்) 117, 118
—நிகழ்வுநிலை. 114, 115, 117, 118, 119 [வர் 110
—நீதிமன்ற நியமனம் பெற்ற
—மற்றவர்கள் 111, 112
—ஜபர் 38, 39, 41, 45, 109
—ஹிஸானத் 109, 110
காப்பிலுள்ளவர்
—உரிமை வயது எய்துதல் 110, 119
—சொத்துப் பராதீனம் 119, 120
காஜி 34, 83, 88, 96, 190

கி

கியாஸ் 10, 13, 14
கிரேண்ட் 32
கிழக்கிந்திய கம்பெனி 15, 17
கிளையில் மூத்தோன் தலைவாரிசு 196, 202
கிறத்தவர் மதம் மாற்றம்
—பழைய கணவன் - மனைவி உறவு 95, 96

கு

குர்ஆன் 8, 11, 12, 13, 14, 61, 78, 93, 208
குலா 80, 87, 88
குலாம் கவுசுகான் 105, 106
குலாம் முஹம்மத் இப்ருஹீம் 32
குற்றஇயல் 15
—நடைமுறைச் சட்டம் 1, 60, 123, 124
குறித்தவகை மாற்றீடு சட்டம் 32

கூ

கூபா கூட்டத்தினர் 7

கொ

கொடை (ஹிபா) 129

—அடைமான மீட்புரிமை செல்லாது 142
—அடைமான மீட்புரிமை செல்லும் 134
—அழிக்க உரிமை 153, 154
—அழிக்க முடியாதது 153, 154
—அனுபவ உரிமை உடனடி ஒப்படைப்பு 130, 131, 134, 139, 141, 143, 144, 152, 155, 160, 161, 163
—அனுபவ விதிவிலக்கு 135, 136, 137, 138, 139, 140
—ஆங்கிலச் சட்ட வேறுபாடு 146, 147, 148, 149
—ஆயுள் சொத்துரிமை 146, 147, 148, 150
—இன்சூரன்சு 145
—உயிலுக்கும் இதற்கும் வேற்றுமை 163
—உரிமம் 158
—எதிர்கொடை வேண்டல் 157
—எவருக்கு அளிக்கலாம் 132, 138
—எவற்றைக் கொடுக்க முடியாது 131, 132, 133, 143, 144
—எவற்றைக் கொடுக்க முடியும் 129, 131, 132, 133, 140, 143, 152
—ஏற்பவரின் தகுதி 132
—ஒப்படை பெறுபவர் இசைவு 130, 138
—கடன்பட்டவரின் 133
—கொடுப்பவரின் தகுதி 131, 132
—செல்லாதது 131, 132, 134, 137, 141, 142, 143, 144, 145, 150, 151, 152, 157
—தவிர்தகு 133
—தெளிவு அவசியம் 150
—நிலையியல் 134, 150
—பயன் பெறு கொடை 154, 155, 156
—பயனனுபவித்துக் கொள்ள 144, 145
—பலதிறப்பட்டவை 154
—பாகம் பிரிக்கப்படாததில் (முஷாஅ) 150, 151, 152
—பூர்த்தியாக 130, 133, 134, 138, 139, 140, 149, 150
—பொருளின் தன்மை 134, 139, 146, 150, 151
—பொறுப்புரிமை அமைப்புகளுக்கு 142
—மனைவிக்குக் கணவன் அளிப்பவை 135, 136, 147
—முழுச் சொத்துரிமை 146, 147
—முழுச் சொத்தும் வழங்கலாம் 163
—வருநிகழ்வு சார்ந்தவை 145
கொள்ளுப்பாட்டன் (பாட்டன் பார்க்க)

கோ

கோஜாக்கள் 24

ச

சகோதரர் (வாரிசுகள் பார்க்க)
—உடன் பிறந்தவர் 40, 205, 211
—தந்தைவழி 40, 205
—தாய்வழி 40, 205, 208, 216
சகோதரி (வாரிசுகள் பார்க்க)
—உடன் பிறந்தவள் 47, 205, 209, 210, 211, 216
—தந்தைவழி 47, 205, 209, 210, 216
—தாய்வழி 47, 205, 209, 216

சதக்கா (ஈகை பார்க்க)
சட்ட முரண்பட்ட நெருக்கடி 51
சலீமா 72
சவுல் அர்ஹாம் 203

சா

சாதித்தகவின்மை ஒழிப்புச் சட்டம் 19, 30, 109, 203
சார்லெட் பிளேக் 29, 30
சான்றியல் சட்டம் 1, 101, 102, 103, 105

சி

சிரியா 10
சிறப்புத் திருமணச் சட்டம் 64, 161
சிறுவர் திருமணத் தடைச் சட்டம் 19, 40

சீ

சீக்கியர்கள் 17
சீதக்காதி 158

சு

சுன்னத் 28
சுன்னத்துல் கால் 12
—தக்ரீரு 12
—பிஃல் 12
சுன்னு 11, 12, 13, 14
சுன்னி முசுலிம்கள் (சுன்னத் ஜமாஅத்தவர்) 4
—இந்தியாவில் அதிகம் 33
—நான்கு பிரிவுகள் :
மாலிகி 8, 210
ஷாபி 8, 210
ஹன்பலி 10, 13
ஹனபி 5, 7, 13
—ஒரு பிரிவிலிருந்து வேறு பிரிவுக்கு மாறலாம் 27, 34
—ஷீயா பிரிவு வேறுபாடு 4, 5

செ

செவிலித்தாய் முறை 48, 55

சொ

சொத்துரிமை 23
—அதிபர் மாண்டதும் 193, 194, 197
—ஆணுக்கு இருபங்கு 212, 227, 228
—இறைவனுக்கு அர்ப்பணம் 171, 172, 173, 186
—ஒப்பந்தவழி இறங்குரிமை 204
—கிளைவிகிதம் 200, 201
—சேர்ந்தடை இறக்கம் 197
—தந்தைக்குமுன் மகன் இறந்தால் 124, 131, 198, 199, 200, 211
—தலைவிகிதம் 200
—பிறப்பால் மட்டும் கிடைக்காது 197
—பெண்ணுக்கு ஒரு பங்கு 212, 227, 228
—பெற்றும் தள்ளப்படுபவர் 201, 216, 217
—பெறும் எச்சதாரர்கள் 203, 241—246, 251,
— ,, பங்குதாரர்கள் 203, 212
— ,, புதுமையான ஜோடிகள் 231
— ,, தகுதியிழந்தவர் 201, 202
—மதம் மாறினால் 30, 31, 203

—முறையிலா மணப்பிறப்புக் குழந்தைகளுக்கு 202
—வருநிகழ்வு 198, 199
சொத்து நிர்வாகம் 192
—இறந்தவர் பட்ட கடன் 192, 196
—இறந்தவர்க்கான இறுதிச் செலவுகள் 192
சொத்து மாற்றுச் சட்டம் 129, 130
சொத்துரிமை மாற்றுச் சட்டம் 1

சோ

சோபியா 30

த

தந்தை (வாரிசுகள் பார்க்க)
தந்தை மதத்தில் குழந்தை வளரும் 29
தவ்ராத் 53
தலாக் (திருமண முறிவு) 9, 78, 79, 80, 97, 98
—அருவருப்பானது 78
—அஹ்ஸன் 83, 84
—ஆண்களே வழங்க முடியும் 83, 88
—உரிமை பிறர்க்கு மாற்றத் தக்கது 87, 88
—எழுத்து மூலம் 81, 83
—கணவன் சார்பாய்க் காப்பாளர் 81
—கணவனின் தகுதி 81
— ,, மதமாற்றம் 93
— ,, மலட்டுத்தன்மை 90
—குர்ஆன் கட்டளை 78
—சாட்சி முன்னிலையில் 81, 83
—சுன்னத் 83
—தப்வீசு 79, 86
—தெளிவாயிருத்தல் அவசியம் 81
—பாஇன் 85
—பித்அத் 83, 85
—மனைவிக்குத் தெரிவித்தல் அவசியம் 83
—மனைவியின் தந்தை மூலம் 82
—மனைவியின் முன்னர் என்பது கட்டாயமில்லை 82
—வழங்கிய புரு வியாபாரி 9, 10
—வாய்ச்சொல் மூலம் 81
—வினைவுகள் 97
—ஹஸன் 83, 84
தலாக் பெற்றவளைத் திரும்பவும் மணக்க 98, 104
தர்கா 189
தள்ளல் விதி 254
தன்னிச்சைத் திருமண முறிவு 31
—ஆங்கிலச் சட்ட வேற்றுமை 31

தா

தாமஸ் ஜான் 29
தாற்காலிகத் திருமணம் (முத்ஆ) 63, 64, ¢5, 107
—செல்லுடைமையாக 64
—விளைவுகள் 65 66,

தி

திருமணம்
—அடிப்படையிலேயே முறிவும் நிகழும் 33, 97
—அந்தஸ்து வழங்குகிறது 35
—இல்லாத் திருமணத்தடை 47, 48, 49
—உடலுறவு பூர்த்தி 43
—ஓர் ஒப்பந்தம் 35, 36, 37, 40, 50
—கன்னிகளுக்குக் காப்பாளர் 45

—சடங்கு சம்பிரதாயம் 36, 37
—சாட்சிகள் 37, 41, 61
—செல்லாதவை (ஒழுங்கற்றவை) 49, 55
—தடையாயிருப்பவை 47
—தந்தை வழிமுறை நிலைக்க 49, 100
—தவிர்தகு 42
—பயன்கள் 55, 56, 57
—பலவகைகள் 54
—புரிவுரை 40, 41
—புரிவுரை ஏற்பு 40, 41
—மணமக்கள் தகுதி 37, 39, 40
—மணமகள் இசைவு 36, 40, 45, 46
— ,, தந்தையின் முக்கியத்துவம் 39
—மணமகன் இசைவு 36, 40, 41
—மஹர் நிர்ணயம் 66
—முசுலிம் இந்துப் பெண்ணை மணத்தல் 53, 54
—முசுலிம் புத்தமதப் பெண்ணை மணத்தல் 53
—முறைகேடு 54
—வஞ்சகமாய் நடத்தினுல் மஹரில்லை 46
—ஜபர் (காப்பாளர் பார்க்க)
—ஹிதாயாவின் விளக்கம் 36
திருமண ஒப்பந்த முறிவு 79, 93
திருமண நிச்சய முறிவு 63
—இழப்பீடு கிடையாது 63
திருமணத் துணிபு 61, 62, 63, 107
திருமணத்துக்கு முன் மனைவி கருவுறல் 46, 105
—கேரளாத் தீர்ப்பு 47
—பம்பாய்த் தீர்ப்பு 47
திவானி உரிமை 15

தீ

தீர்ப்புகள்
—ஷீயா சுன்னீ அடிப்படையில் 27, 33, 34, 193, 196

தூ

தூரத்து உறவினர்கள் (வாரிசுகள் பார்க்க)

தை

தைக்கா 188, 189

ந

நக்கீரன் 11
நவாசிஸ் அலீகான் 132, 143, 146, 148, 149
—பிரிவிகவுன்சில் தீர்ப்பு 149

நி

நிர்வாக அதிகாரப் பத்திரம் 192, 193, 196
நிலவரைச் சட்டம் 1
நிறைவேற்றுளர் கடமை 193

ப

பங்குதாரர்கள் (வாரிசுகள் பார்க்க)
—அரைகுறையாய்த் தள்ளப் பெறல் 214, 223
—முழுமையாகத் தள்ளப் பெறல் 216, 217, 222
பத்வா 14
பருவம் எய்தியோர் விருப்பம் 41, 42, 43
பல் கணவருடைமை 49
பல மனைவியருடைமை 29, 49, 50
பலஸ்தீனம் 10

பள்ளிவாசல் 176, 188, 190
—இமாம் 190
—முல்லா 190

பா

பாட்டன் (வாரிசுகள் பார்க்க)
பாட்டன் சொத்தும் பேரப் பிள்ளைகளும் (பிரதிநிதித்துவம் பார்க்க) 199, 200, 211
பாட்டி (வாரிசுகள் பார்க்க)
பாத்திமா நாயகி 3, 4
பார்சந்து 68

பி

பிரதிநிதித்துவம் கிடையாது 195, 199, 200, 230, 250
—ஷியா வேறுபாடு 200
பிரதிவாதி சட்ட அடிப்படையில் நீதி 27
பிறப்பால் முசுலிம்கள் 26

பெ

பெண் பங்குதாரர்கள் அறுவர் 209
பெய்லி 36
பெற்றோராதல் 99
—ஒப்புதல் தத்துவம் 103, 104, 105, 106, 107
—தந்தை 100, 101
—தாய் 100, 101

போ

போராக்கள் 24, 25
—இசுமாயிலி 24
—தாவூதி 24

ம

மக்கா நகர் 3
மகவேற்பு இல்லை 17, 106, 108, 145 (அடிக்குறிப்பு)
—பஞ்சாப் முசுலிம்கள் கருத்து 17
—1949ஆம் ஷரீயத் சட்டம் 20
மகள் (வாரிசுகள் பார்க்க)
மகள் எவருடன் வாழலாம் 123
மகன் (வாரிசுகள் பார்க்க)
மத்திய வக்பு கவுன்சில் 184
மதீனா நகர் 3, 8
மரஜுல் மௌத் (மரணப்பிணி) 97, 168, 169, 170, 174
மலபார் மாப்பிள்ளைகள் 21, 22, 23
மறுபடி தாம்பத்ய உறவு கோரல் 57, 58, 59, 72
மனைவி புரியும் இரண்டாம் திருமணம் (Bigamy) 27, 32, 33
—இசுலாத்தைத் தழுவியவள் 29, 32
—இசுலாத்தைத் துறந்தவள் 94, 95, 96
மஹர்
—அடைமானமன்று 73
—உச்சவரம்பு கிடையாது 67
—உடலுறவுக்குப்பின் முழுப் பங்கு 55, 71
—உடலுறவுக்குமுன் அரைப் பங்கு 71
—உரிமை 68, 69, 72
—எதை வழங்கலாம் 67
—கடனுக்காக மனைவி சொத்தை விற்றல் 76
—கணவன் பட்ட கடன் 68, 71, 73, 81, 97, 156, 170
—கணவனின் கொடை 133
—குறைந்த மட்ட அளவு 68
—சிறப்பு 68
—சீதனமன்று 66

—தகுதி 68
—தனி ஒப்பந்தம் தேவையில்லை 67
—தாமதம் 68, 69, 72
—திருமணத்தில் நிர்ணயம் 36, 66
—திருமண முறிவுக்குப் பெருந் தடை 67
—திருமண முறிவைக் கட்டுப் படுத்தும் 67 [67
—நிர்ணயிக்க அயோத்தி சட்டம்
—நிர்ணயிக்கப்படாவிட்டால் 67
—பெற்றோர் ஏற்கும் பிணை, பொறுப்பு 67
—மறுபயனன்று 66
—மனைவி எப்படியும் பயன் படுத்தலாம் 70
—மனைவிக்குள்ள உரிமை 71, 72, 73, 74, 75,76
—மனைவி கைவிடும் உரிமை 70, 156
—மீதான வட்டி 72, 73
—விதவைப் பற்றுரிமை 75, 77
—விதவைப் பற்றுரிமை - அடைமானப் பற்றுரிமை வேறுபாடுகள் 77

மா

மாநிலச் சிறுவழக்கு நீதிமன்றச் சட்டம் 16
மாப்பிள்ளை இறங்குரிமைச் சட்டம் 21
—உயில் சட்டம் 22
—மருமக்கள் வழிச் சட்டம் 22, 23
மாலிகி பெண் பெற்றுள்ள தகுதி 45
மாறிவந்த மதத்தில் திருமணம் 30
—வாரிசு 31

மி

மித்தர்சென் 30

மீ

மீர் அன்வாருத்தீன் 31, 32

மு

முசுலிம் திருமண இழப்புச் சட்டம் 2, 43, 44, 78, 90, 93, 94, 95
முத்ஆ (தாற்காலிகத் திருமணம் பார்க்க)
முத்தவல்லி 172, 173, 175, 184, 185, 186, 187, 188
—பொறுப்பு 186, 187, 188
முதல் உயர்நீதி மன்றங்களின் தோற்றம் 15
முபாரத் 80, 88
முல்லா (சட்ட மேதை) 109, 121
முறைமணப் பிறப்புக் குழந்தை 99, 100, 101, 102, 104, 105, 106, 107, 108
முறையிலா மணப் பிறப்புக் குழந்தை 99, 100, 101, 102, 104, 106, 107, 113, 125, 202
—ஷியா சட்டம் 100
முன்ஷி 57
முஜாவர் 186, 190
முஹம்மத் அல் பாக்கிர் 6
முஹம்மத் நபி 2, 3, 8, 10, 11, 12, 13, 14, 181, 190
—தத்துவங்கள் 7, 8, 11

மூ

மூதாதையர் சொத்து - தேடிய சொத்து வேறுபாடில்லை 196

மே

மேமன்கள்
—அலாய் 25
—கச்சி 25
மேற்கோள் நூல் பட்டியல் 271

மொ

மொகலாயர் 14, 15

மோ

மோதி பேகம் 106

யா

யானை 8

யூ

யூதர் 53

ர

ரத்து (இறக்க விதிக் கொள்கை பார்க்க)
ரஸ்ஸல் 24

லி

லியான் 80, 89, 93

ளி

ளிஹார் 79, 86

வ

வக்பு 171
—அசைவியல் சொத்து 175, 176
—அர்ப்பண இலக்கணம் 172, 173, 175, 176, 177, 178
—அளிப்பவர் (வாக்கிப் பார்க்க)
—ஆங்கிலச்சட்ட வேறுபாடு 177
— ,, பிரிவிகவுன்சில் தவறான தீர்ப்பு 181
—இறைவனுக்கு (சொத்துரிமை பார்க்க)
—உயில் மூலம் 174
—உறவினர் நலன் (அலல் அவுலாது) 177, 178, 179, 180, 183
—எப்படி அளிப்பது 174
—'சிப்ரே' கொள்கை 178
—செல்லத்தக்கது 175
—செல்லாதது 175
—சொத்து நிலையியலாயிருத்தல் 175
—நிரந்தரமானது 175
—நோக்கம் 177
—பாகம் பிரிக்கப் படாததில் (முஷாஅ) 176
—மறுத்தழிக்க முடியாதது 174
—மறுத்தழித்தல் 174
—முசுலிமல்லாதார் அளிப்பது 177
—வாரியம் 184, 185
—வாரிய உறுப்பினர் 185
—வாழ்வோரிடையே 173, 177
—ஷியா சட்டம் 185, 186
வக்பு சட்டம்—129
—(1913 ஆம்) 172, 176, 177, 180, 181, 182, 183
—(1930 ஆம்) 183, 184
—(1954 ஆம்) 184
வயலெட் 31
வழிவழி வழக்கம் 14, 202
வாக்கிப் 172, 176
—உரிமை 172
—எண்ணம் 173, 178
—தகுதி 176

—தமக்கெனச் சொத்துரிமை ஒதுக்க இயலாது 175
வாசி 193
வாட்டன்ஸ் சட்டம் (பம்பாய், 1886 ஆடு), 202, 203, 223
வாரன் ஹேஸ்டிங்ஸ் 15
வாரிசுகள்
—அரசு 204
—இற்றைநிலை 197
—இறந்தவர் பட்ட கடன் தீர்த்தல் 194
—உறவு வழியினர் 207
—எச்சதாரர்கள் 203, 208, 209, 210, 212, 241
—எதிர்நோக்கு 197, 198, 199
—எவரைச் சொத்துக்கதிபர் வாரிசாக்கலாம் 204
—ஏற்கப்படாதவர்கள் 260
—ஏறுமுறை மூதாதையர்கள் 207, 209, 210
—ஒத்த மகனின் மகன் 207
—ஒருபடி பிந்திய மகனின் மகன் 207
—ஒருபடி முந்திய மகனின் மகன் 207
—கடன் கொடுத்த வருடன் தொடர்பு 195
—கணவன் 208, 212, 213
—கிளைவழியினர் 207, 209
—கிளையில் மூத்தோன் 196, 202
—சொத்துக்கதிபரைக் கொன்றால் 201, 202
—சொத்துரிமை பெறும் வாய்ப்பு 193, 197
—சொத்தைப் பராதீனம் செய்தல் 195, 197, 198
—தந்தை 208, 209, 211, 212, 213
—தந்தை வழியினர் 207
—தந்தையின் தாய் 212
—தள்ளப்பட்டவர் 216, 217
—தாய் 209, 212, 213
—தாய்ப் பாட்டன் 204
—தாய்ப்பாட்டி 205, 216
—தாயின் தாய் 212
—தூரத்து உறவினர் 125, 203, 208, 210, 252, 253, 254, 255, 256, 258, 259
—நேர்வழியினர் 207 [211
—பங்குதாரர்கள் 203, 208, 210,
—பங்குதாரர்கள் பன்னிருவர் 208, 209, 212, 214, 236
—பாட்டன் (தந்தையின் தந்தை) 204, 208, 209, 211, 212, 213, 216
—பாட்டி 205, 209, 213
—மகள் 209, 211, 212, 213
—மகளின் மகள் 209
—மகன் 210, 211, 212, 213
— ,, பெற்றுள்ள தனித்தகுதி 210, 212
—மகனின் மகள் 211, 213, 217
—மகனின் மகன் 211, 213
—மனைவி 209, 212
—மூவகையினர் 203, 208
—வழித்தோன்றல்கள் 207, 209, 210
—வாரிசின் வாரிசுக்குள்ள உரிமை 197, 198
வாரிசுகளின் பங்கு விகிதம் :
—கணவன் 212, 215, 217, 224, 233, 235
—தந்தை 212, 213, 214, 217, 218, 219, 220, 222, 223, 224, 225, 226, 227, 230, 231, 233, 234
—சகோதரர்கள் (உடன் பிறந்தோர்) 213, 223, 236
,, (தாய்வழி) 236

—சகோதரி (உடன் பிறந்தவள்) 222, 223, 232, 233, 235, 236
,, (தந்தைவழி) 215, 233, 234, 235, 236
,, (தாய்வழி) 235, 236
—தந்தையின் தாய் 214, 226, 227
—தந்தையின் தந்தையின் தாய் 226
—தந்தையின் தாயின் தாய் 226
—தாய் 212, 213, 214, 215, 219, 220, 221, 222, 223, 224, 225, 227, 230, 231, 233, 234, 235, 236,
—தாயின் தாய் 214, 226
—தாயின் தாயின் தாய் 214, 226, 227
—மகள் 213, 219, 221, 227, 230, 231, 233
—மகன் 213, 217, 218, 219, 221, 222, 227, 228
—மகனின் மகள் 215, 228, 229, 230, 231, 233
—மகனின் மகன் 229
—மகனின் மகனின் மகள் 229, 231
—மகனின் மகனின் மகன் 229, 231
—பாட்டன் (தந்தையின் தந்தை) 220, 221, 224, 225, 226
—பாட்டி 225
—மனைவி 215, 218, 224, 225
வாழ்க்கைப் படி 59, 60, 61, 81, 97, 121, 122
—குர்ஆன் கூற்று 61
—கூடுதல் வரம்பு 60, 124
—சொத்துரிமைபெறுவோர்க்கே 122, 124
—தந்தையின் பொறுப்பு 122, 123, 124
—பிரிவிகவுன்சில் தவறான தீர்ப்பு 61
—ஷாபி 59, 121
—ஷியா 63, 121
—ஹனபி 59, 121

வி

விக்டோரியா 29
வில்சன் 61
விருப்புறுதி மெய்ப்பிதழ் 194, 196

வே

வேதம் அருளப் பெற்ற மதம் (கிதாபி) 53, 64, 95
வேதம் அருளப்பெறு மதம் 53
வேறு சட்டங்கள்
—(1772 ஆம்) 15, 16
—(1887 ஆம்) 17

ஜ

ஜகதீவ் சிங் 30
ஜகாத் 125
ஜபர் (காப்பாளர் பார்க்க)
ஜபரி 250, 251

ஜா

ஜாபிர் உசேன் 68

ஜி

ஜிப்ரீல் 11

ஜை

ஜைதத் 6
ஜைதி 5, 6
ஜைனுல் ஆபிதீன் 6

ஷ

ஷரீயத் 25
—சட்டங்கள் (இசுலாமியர் தலைப்பில் பார்க்க)

ஷா

ஷாபி பெண் பெற்றுள்ள தகுதி 45

ஷீ

ஷீயா-சுன்னீ வேறுபாடு 4, 5
ஷீயா சொத்துரிமை இறக்கம் 260 முதல் 267 வரை
—வேறுபாடு 196, 200, 202

ஸ்

ஸ்காட்லாந்து சட்டம் 32
ஸ்கின்னர் 29
ஸ்டுவர்டு ஸ்கின்னர் 29, 30
ஸ்பெயின் மாணவர் 8

ஸி

ஸிராஜின் விதிகள் 247, 248, 249, 250

ஸு

ஸுஜ்ஜாதா நஷீன் 186, 188, 190

ஹ

ஹதீது 8, 12, 13, 14
ஹனபி இறங்குரிமைச் சட்டம் 223
ஹனபி பெண் பெற்றுள்ள தகுதி [45
ஹஸன் 6

ஹி

ஹிபா (கொடை பார்க்க)
ஹிபாபில் இவாசு 155, 156
ஹிபாபெ ஷர்த்துல் இவாசு 157
ஹிஜ்ரி 3

ஹெ

ஹெலென் 29